# தமிழீழம்

## நான் கண்டதும் என்னைக் கண்டதும்

ஓவியர் புகழேந்தி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம்

## நான் கண்டதும் என்னைக் கண்டதும்

$12

ஓவியர் புகழேந்தி

தோழமை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழம்

## நான் கண்டதும் என்னைக் கண்டதும்

ஓவியர் புகழேந்தி ©

| | | |
|---|---|---|
| முதல் பதிப்பு | : | திருவள்ளுவர் ஆண்டு 2037/ஏப்ரல் 2006 |
| வெளியீடு | : | தோழமை<br>5டி, பொன்னம்பலம் சாலை<br>கே.கே.நகர், சென்னை-78<br>பேசி: 24811189 |
| நூல் வடிவமைப்பு<br>அச்சுக்கோர்வை | : | அடவி வரைகலை, சென்னை-78.<br>பேசி: 24742886. |
| அச்சாக்கம் | : | ஜோதிஎண்டர்பிரைசஸ், சென்னை-5<br>பேசி: 28418543. |
| முகப்பு ஒளிப்படம் | : | நளன், ஈழம். |
| விலை | : | உரு. 125 / - |

**TAMILEELAM**

**Nan Kandathum Ennaik Kandathum**

Oviar **PUGAZHENTHI** ©

| | | |
|---|---|---|
| First Edition | : | Aprit 2006 / Thiruvalluvar Year 2037 |
| Published by | : | THOZHAMAI<br>5D,Ponnambalam Salai<br>K.K.Nagar, Chennai-78<br>Ph: 24811189 |
| Typeset | : | Adavi Graphics, Chennai-78<br>Ph: 24742886 |
| Printers | : | Jothi Enterprises, Chennai-05<br>Ph: 28418543 |
| Price | : | **Rs. 125/-** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது...
இன விடுதலைப்போரில்
இன்னுயிரை ஈந்த
பதினெட்டாயிரம் போராளிகளுக்கும்
இன ஒழிப்பு
வெறியாட்டத்திற்கு இரையான
எழுபதாயிரத்துக்கும் மேற்பட்ட
தமிழீழ மக்களுக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**என்றும் என் நன்றிகள்...**

மோகன்தாஸ்- *துணைவேந்தர்*, இரா.சிவச்சந்திரன்- *கலை பீடாதிபதி*, சிதம்பரநாதன்- *தலைவர் நுண்கலைத்துறை*,
பேராசிரியர் சண்முகலிங்கன், சிவாஜிலிங்கம்- *பாராளுமன்ற உறுப்பினர்*, சந்திரசேகரன்- *பாராளுமன்ற உறுப்பினர்*, ஈழவேந்தன்- *பாராளுமன்ற உறுப்பினர்*, பத்மாவதி- *பாராளுமன்ற உறுப்பினர்*, இளங்குமரன், சேரலாதன், கருணாகரன், விஜயேந்திரன், பிரபாகரன், க.வே.பாலகுமாரன், தமிழ்ச் செல்வன், சுதா, புலித்தேவன், கண்ணதாசன், கண்ணன், குகன், நளன், கிருஷ்ணா, அமலன், நிமலன், இராசநாயகம், குருகுலராஜா, இனியன், ருசாங்கன், பிரபா, தென்னா, நிலாந்தன், கேசவன், பார்த்தீபன், புலிமறவன், அரசண்ணா, இரமேஷ், தமிழன்பன், தி.தவபாலன், இ.சசிக்குமார், ஆ.சபேஸ்வரன், ரகுராம், சித்தாந்தன், நா.யோகேந்திரன், அமரதாஸ், சுதேசிகன், செல்லா, யதார்த்திகன், ச.சங்கரன், கஜானி, ஆண்டனி, சுதன், இன்னும் பெயர் மறந்தும் முகம் மறக்காத எண்ணற்ற தோழர்களுக்கும்...

பழ.நெடுமாறன், கி.வீரமணி, வைகோ, பெ.மணியரசன், தொல்.திருமாவளவன், கவிஞர் காசிஆனந்தன், வி.கே.டி.பாலன், நெய்வேலி பாலு, இன்குலாப், வே.இளங்கோ, பாரிக்கபிலன், கிட்டு, சந்திரசேகர், கோபி, கணேசமூர்த்தி, சரவணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுப்பாலம் அமைத்த ஓவியர்

தமிழ்ச் சமுதாயத்திற்கு விழிப்புணர்வு ஊட்டி எழுச்சிபெறச் செய்வதற்காக தனது ஓவியக்கலையை முழுமையாகப் பயன்படுத்தி வருபவர் ஓவியக்கலைஞர் திரு.புகழேந்தி ஆவார்.

குறிப்பாக சிங்களப் பேரினவாதிகளின் காட்டுமிராண்டித்தனமான கொடுமைகளுக்கு ஆளான ஈழத்தமிழர்கள் நிலைகுறித்தும் அவர்கள் நடத்திவரும் வீரஞ்செறிந்த விடுதலைப் போராட்டம் குறித்தும் அவர் வரைந்த உணர்வூட்டும் ஓவியங்கள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மட்டுமல்ல, இந்தியாவின் பிறபகுதிகளிலும், உலக நாடுகளிலும் காட்சிக்கு வைக்கப்பட்டு மக்களால் பெரிதும் பாராட்டப் பட்டிருக்கின்றன. தனது ஓவியங்களின் மூலம் அந்த மக்களின் துயரத்தை அவர் வெளிப்படுத்தியிருக்கிற பாங்கு அனைவரையுமே கவர்ந்தது.

ஆனாலும் இந்தியாவில் ஏதிலிகளாக அடைக்கலம் புகுந்திருக்கிற ஈழத்தமிழர்களும், வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கிற ஈழத்தமிழர்களும் நண்பர் புகழேந்தியின் ஓவியங்களைக் கண்டு கண்கலங்கி இருக்கிறார்கள். ஆனாலும் தமிழீழ மக்கள் அந்த ஓவியங்களைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அந்தக் குறையும் நீங்கி தமிழீழத்தில் தனது ஓவியங்களை மக்களின் காட்சிக்கு வைத்தும், அவர்களின் மன உணர்வுகளை நேரில் தெரிந்து கொண்டும், குருதியால் சிவந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மண்ணில் பயணம் செய்தும் அவர் கண்டறிந்த உண்மைகளை நூலாக வடித்துள்ளார்.

இந்த நூல் வெறும் பயண நூல் அல்ல. தமிழீழ மக்களின் உணர்வுகளோடு கலந்து எழுதப்பட்ட நூலாகும். இன்றைய தமிழீழத்தின் நடப்புகளை முழுமையாக அறிந்துகொள்ள இந்த நூல் உதவும். தமிழீழத்திற்குச் சென்று உண்மைகளை அறிய வேண்டும் என்று துடித்துக் கொண்டிருப்பவர்கள் இந்நூலினை படிப்பார்களானால் நிச்சயமாக மனநிறைவு அடைவார்கள்.

அங்குள்ள பத்திரிகைகளுக்கு அவர் அளித்த நேர்காணல்களும், ஓவியக்காட்சியை கண்டுகளித்த மக்கள் எழுதிய கருத்துகளும் இந்நூலில் இடம் பெற்றிருப்பது தனிச் சிறப்பாகும்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த ஓவியர் ஒருவர் தமிழீழத்தில் தனது ஓவியங்களைக் காட்சியாக நடத்தி அந்த மக்களின் மனதில் இடம்பிடித்தது, இதுவே முதன்முறை என கருதுகிறேன். தமிழ்நாட்டு மக்களுக்கும் தமிழீழ மக்களுக்கும் இடையே உறவுப்பாலம் அமைத்த ஓவியர் புகழேந்தி அவர்களுக்கு தமிழ் மக்களின் சார்பில் எனது வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழ.நெடுமாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தூரிகையின் அனுபவங்கள்

மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, அய்ரோப்பா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் விரிந்த என் தூரிகைச் சிறகுகள்

இன்று தமிழீழத்திலும் சிறகு விரித்துப் பறந்து மக்களை நானும், மக்கள் என்னையும் என் ஓவியங்களையும் சந்தித்து உள்வாங்கி, உரையாடி, உறவாடி இரண்டறக் கலந்தோம்.

இதுவரையிலான என்னுடைய கலைப் பயணத்தில் தமிழீழப் பயணம் முற்றிலும் வேறுபட்டது. மிகவும் உணர்ச்சி கரமானது.

தமிழீழத்தில் இரவுபகல் பயணித்து அம்மண்ணில் பார்த்தவைகளையும், கேட்ட வைகளையும், உணர்ந்தவைகளையும், உள்வாங்கியவைகளையும், படித்தவை களில் பாதித்தவைகளையும் பதிவு செய்திருக்கிறேன்.

அதேபோல்


என் ஓவியங்களையும், என்னையும் உள்வாங்கி அம்மக்கள் வெளிப்படுத்தியக் கருத்துக்களையும் பதிவு செய்திருக்கிறேன்.

இது என் கலைப் பயணத்தில் மேலும் ஒரு அனுபவப் பதிவு.

ஓவியர் புகழேந்தி

*5-டி, பொன்னம்பலம் சாலை*
*கே.கே.நகர். சென்னை-78*
*பேசி: 044-24811189, கைபேசி: 091-9444177112*
*மின்னஞ்சல் :* oviarpugal@yahoo.com
*இணையதளம் :* www.oviarpugazh.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழீழம்

## நான் கண்டதும் என்னைக் கண்டதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில்

நீண்ட நாள் என்னுடைய ஆசை, கனவு நிறைவேறிய நாள் அது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், இந்தியாவின் பல்வேறு இடங்களிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் என்னுடைய ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

1983இல் ஈழத்தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனமான தாக்குதலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு, லட்சக்கணக்கானத் தமிழர்கள் தமிழகம் நோக்கி அகதிகளாக வந்துகொண்டிருந்த நிலையில், நான் ஈழப் போராட்டத்தை உள்வாங்கிக்கொண்டு அப்போராட்டத்தோடு என்னையும் இணைத்துக்கொண்டு, அந்நிகழ்வுகளை எல்லாம் என் ஓவியங்களில் வெளிப்படுத்தினேன். 1988-89 காலகட்டத்தில் தமிழகத்தில் நடைபெற்ற என்னுடைய தனிநபர் காட்சியில் அவ்வோவியங்களைப் பார்த்த மக்களும், அதன்பிறகு இந்திய அளவிலும், உலக அளவிலும் காட்சிப் படுத்தப்பட்டபோது அங்கு பார்த்த மக்களும் ஈழத்தில் இவ் வோவியங்களை காட்சிப் படுத்தினீர்களா? என்று வினவினார்கள். அக்காலக் கட்டத்திலிருந்தே எனக்கும் ஈழத்திற்குச் செல்ல வேண்டும், ஓவியங்களை காட்சிப்படுத்த வேண்டும் என்ற ஆவல் ஒவ்வொரு நாளும் கூடிக்கொண்டு இருந்ததே தவிர கொஞ்சம் கூடக் குறையவில்லை. அதற்குக் காரணம், எந்த மண்ணில் போராட்டம் நடக்கிறதோ எந்த மக்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்களோ அங்கே அம்மக்கள் மத்தியில் என்னுடைய படைப்புகள் காட்சிப் படுத்தப்பட வேண்டும் என்பதும் அதனூடாக என்னுடைய உணர்வுகளை அம்மக்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதும், அம்மக்களின் உணர்வுகளை மேலும் நான் உள்வாங்கிக் கொள்ள வேண்டும் என்பதும்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய படைப்புகளை இருபது ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து கூர்ந்து கவனித்துக் கொண்டு வரும் இலங்கை இலக்கிய நண்பர்கள் சிலர் என்னுடைய ஓவியங்களை ஈழத்தில் பல்வேறு இடங்களில் காட்சிப்படுத்த வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்கள். இத்தனைக்கும் அவர்கள் என்னை நேரில் சந்தித்ததோ, உறவாடியதோ கிடையாது. ஊடகங்கள் வாயிலாக என்னையும், என் ஓவியங்களையும் நன்கு அறிந்தவர்கள்- பதினைந்து இருபது ஆண்டுகளில் சில கடிதங்கள் வாயிலாகவும், சில தொலைபேசி உரையாடல் வாயிலாகவும் பேசியிருக்கிறோம்.

அவர்கள் அழைப்பை ஏற்று அரசிடம் உரிய அனுமதிபெற்று இலங்கையில் கால்பதித்தேன். என்னுடன் என் மனைவி சாந்தி, என் குழந்தைகள் சித்திரன், இலக்கியன் ஆகியோரும் வந்திருந்தார்கள். அவர்களுக்கு இதுதான் முதல் வெளிநாட்டுப் பயணமும், விமானப் பயணமும்! அதனால் குழந்தைகள் இருவரும் விமானப் பயணத்தை முழுமையாக அனுபவித்தார்கள்.

கொழும்பு விமான நிலையத்திற்கும், கொழும்பு நகரத்திற்கும் இடைப்பட்ட தூரம் 30 கிலோ மீட்டர். கொழும்பு நகரத்தைப் பார்ப்பதற்கு சென்னைக்கும் அதற்கும் பெரிய வேறுபாடு இல்லை. கட்டிடங்கள் சாலைகள் அனைத்தும் சென்னையைப் போலவே தான். சாலைப் போக்குவரத்தும் அதே நெருக்கடி. நன்றாக வெயில் அடித்துக் கொண்டிருந்த வானம் திடீரென கருத்து, மழை பெய்யத் தொடங்கியது.

கடற்கரையோரத் தங்கும் விடுதி ஒன்றில் தங்க வைக்கப் பட்டோம். கொழும்பு சற்று பதற்றமாக இருந்த நேரம். அதற்கு ஒருவாரம் முன்புதான் தமிழ்த் தேசிய சிந்தனையாளர், உலகறிந்த பத்திரிகையாளர் தராக்கி சிவராமன் படுகொலை செய்யப்பட்டு, கொழும்பின் இதயப்பகுதி என்று வர்ணிக்கப்படுகின்ற பாராளுமன்றக் கட்டடம் அருகிலேயே அவரது உடல் வீசப் பட்டிருந்ததாகச் செய்திகள் கூறின. தங்கும் விடுதியில் எனக்காகக் காத்திருந்த நண்பர்களிடம், அப்படுகொலை குறித்தும், பொதுவாக அமைதிச் சூழல் குறித்தும் விவாதித்தேன். தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் புலமையாளராக விளங்கியவர் பிரபல ஈழத் தமிழ் ஊடகவியலாளர் டி.சிவராம் என்பதை நான் முன்பே அறிவேன். இருந்தாலும் அவரைப்பற்றியும் அவர் கொலைப் பற்றியும் இன்னும் கூடுதல் செய்திகளை விளக்கமாகக் கூறுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நண்பரிடம் கேட்டேன். அவரும் ஊடகத்துறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

"தமிழ்மக்கள் மத்தியில் சமாதானத்தின்பெயரால் சிறீலங்கா அரசு மேற்கொள்கிற நாசகாரச் செயல்களை ஊடகத்துறை அம்பலப்படுத்தி வருகின்றது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை சகல மக்களுக்கும் தெரிவித்துக் கொண்டு வருகிறது. சிறீலங்கா அரசின் பின்னணியில் நடக்கின்ற நாச காரியங்களையும், அம்பலப்படுத்தி வருகின்றது. தமிழ் மக்களை விழிப்புற வைக்கிறது. மக்களை விழிப்புப்படுத்தி வந்த மிக முக்கியமான ஊடகவியலாளர்களில் ஒருவராக சிவராம் இருந்தார்.

தமிழில் மட்டுமல்லாது, ஆங்கிலத்திலும் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளைக் கொண்டு சென்றவர். அவர் ஆங்கிலத்தில் எழுதுகின்ற காரணத்தால் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற மனிதராக விளங்கினார்.

உலகளாவிய அரசியல், இராணுவம், புலனாய்வு தொடர்பாக இயங்கும் ஊடகவியலாளர்களுடன் தொடர்புகளைக் கொண்ட வராக இருந்தார். உலகளாவிய ரீதியாக நடைபெற்ற இராணுவ ஊடக ஆய்வு மாநாடுகளில் உரை நிகழ்த்தி இருக்கிறார். அந்த அளவில் உலகளவில் இருக்கின்ற ஊடகத்துறையில் பலமிக்கத் தமிழ்க் குரலாக இவர் இருந்து வந்திருக்கிறார். அதேவேளை சமாதானத் திற்குப் பின்னர், தமிழிலும் எழுதி வந்தார். தமிழில் அவர் எழுதிய அரசியல் இராணுவ ஆய்வுகள் தமிழ்த் தேசியம் சார்ந்தவையாகும். தமிழ்த் தேசியத்தை விழிப்புறச் செய்பவையாகவும் இருந்து வந்துள்ளன. குறிப்பாக 'வீரகேசரி'யில் அவர் எழுதிய எழுத்துகள் யாவும் சமாதானத்தின் பெயரால் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் நாசகார நடவடிக்கைகளை அம்பலப்படுத்துவதாகவே அமைந் திருந்தன. இதன்மூலம் தமிழ்மக்களை அவர் சிந்திக்கத் தூண்டினார். ஊடகத்துறையில் அதிகளவில் தமிழ்மக்களை விழிப்புறச் செய்துவந்த ஊடகவியலாளராக சிவராம் இருந்தார். சிவராமின் ஊடகப் பணியானது தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் மிக முக்கியப் பங்காக இருந்தது. அது ஆங்கிலத்திலும் அப்படியே இருந்தது. தமிழிலும் இருந்தது. அவர் ஆங்கிலத்தில் 'நோர்த் ஈஸ்ட்ரன் கெரால்ட்' என்ற பத்திரிகையை இந்த சமாதானக் காலத்தில் நடத்திவந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன் மூலம் அவர், தமிழர் அல்லாதவர்களுக்கு தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாட்டை எடுத்துக் கூறியவர்.

அதைவிட '*தமிழ்நெட்*' என்கின்ற உலகப் புகழ்பெற்ற ஆங்கில இணையத்தின் ஆசிரியராகவும் இருந்தார். '*தமிழ்நெட்*' தமிழ்த்தேசிய செய்திகளைத் தாங்கி வருகின்ற ஒரு உலகளாவிய இணைய ஊடகமாக இருக்கின்றது. தமிழ்நெட்டுக்கு தமிழ் மற்றும் தமிழ் அல்லாதவர்கள் மத்தியிலும் மிகப்பெரும் வரவேற்பும், நம்பகத்தன்மையும் அதிகமாக இருந்து வருகின்றது. இந்தச் சூழலில் இத்தகைய ஊடகங்கள் ஊடாக தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் நியாயப்பாடுகளை, உண்மைகளை வெளிஉலகிற்கு கொண்டு வந்தார்.

இந்தவகையில் சிவராமினுடைய ஊடகப்பணியானது ஊடகத் துறையில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தில் மிகமுக்கிய மானதாகவும், காத்திரமானதாகவும் இருந்து வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக சமாதானக் காலத்தில் அவர் சிறீலங்கா அரசின் நாசகாரர்களை அம்பலப்படுத்துவதில் தன்னுடைய ஊடகப் பணியை வலுவாக மேற்கொண்டிருந்தார். கருணாவின் நாசகார நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளை அவர் அம்பலப்படுத்தி வந்தார். இந்நிலையில் சிவராமுக்கான அச்சுறுத்தல் சிறீலங்கா தரப்பில் இருந்து தொடர்ச்சியாக வந்திருக்கிறது. அவர் வீட்டில் அனுமதியின்றிச் சோதனை செய்தல், அவர் தாக்கப்பட்டது என்று பல்வேறு வகையிலான அச்சுறுத்தல். இத்தகைய அச்சுறுத்தலின் உச்சகட்டமாக 28.5.2005 அன்று இரவு 10.00 மணி அளவில் பம்பலப்பட்டியில் இருக்கின்ற ஓய்வகம் ஒன்றின் முன்வைத்து கடத்தப்பட்டிருக்கின்றார். பின்பு 29.5.2005 அதிகாலை 1.00 மணியளவில் சிறீலங்கா நாடாளுமன்றத்திற்கு முன்பாக இருக்கின்ற பாலத்திற்கருகில் இவரது சடலம் வீசியெறியப்பட்டு கிடந்த நிலையில் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றது.

சிறீலங்கா அரசு சிவராமை கொலை செய்ததன் மூலம் தமிழ்த் தேசிய ஊடகத்தின் குரலை நசுக்குவதற்கான வேலைகளை தொடங்கிவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஏற்கெனவே இந்த சமாதான காலத்தில் ஜி.நடேசன் என்ற தமிழ்த்தேசிய ஊடகவியலாளர் கொல்லப்பட்டிருக்கின்றார். அவருக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தபடியாக டி.சிவராம் கொல்லப்பட்டிருக்கிறார். டி.சிவராம் தமிழ் ஊடகத்துறையில் வலிமைமிக்க ஒருவராக இருக்கின்ற காரணத்தால் அவரைக் கொல்வதன் மூலம் ஒட்டு மொத்தமாக ஊடகங்களின் குரல்களை நசுக்கலாம் என சிறீலங்கா அரசு கணக்குப் போட்டிருக்கின்றது. ஆனால் ஊடகவியலாளர்கள் இத்தகைய கொலைகளின் மூலம் இன்னமும் வலுப்பெறுவார்களே தவிர நசிந்து போகமாட்டார்கள்" என்று மிகவும் உறுதியோடு கூறி முடித்தார்.

நார்வே முயற்சியில் அரசுக்கும், புலிகளுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டு, இந்த மூன்றாண்டுகால அமைதிச் சூழலில் மக்கள் ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தாலும், இதுபோன்ற படுகொலைகள் மிகவும் பதற்றத்தை ஏற்படுத்துகின்றன என்றும் நண்பர் கூறினார்.

நடுஇரவில் கொழும்பிலிருந்து கிளிநொச்சிக்குப் புறப் படுவதாக இருந்தோம். ஆனால் சிறிது தாமதமாக புறப்பட்டால் வழியில் இயற்கையை ரசித்துக் கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கும் என்று என்னுடைய விருப்பத்தைக் கூறினேன்.

விடிந்தும் விடியாததுமாக இருந்த அந்த அதிகாலைப் பொழுதில் வாகனத்தில் எங்கள் பயணத்தைத் தொடங்கினோம். எங்களுக்குத் துணையாகவும் பாதுகாப்பாகவும் நண்பர் ஒருவர் உடன் வந்தார்.

மிகவும் சின்னஞ்சிறிய அழகான ஒரு நாடு இலங்கை.

இலங்கையின் தென்பகுதியில்தான் கொழும்பு இருக்கிறது. தீவின் தெற்கு, தென்மேற்கு பகுதிகளில் சிங்களர்கள் வாழ்கிறார்கள். பௌத்தமும் அதனோடு உள்நுழைந்த பாலிமொழியாலும், அதனை ஒட்டிவந்த சிறுகுடியேற்றங்களின் தாக்கத்தினாலும் உருவானதுதான் சிங்கள இனம்.

வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் வசிக்கிறார்கள். அதுதான் தமிழர்களின் தாயக பூமி. வடக்கில் யாழ்ப்பாணமும், கிழக்கில் மட்டக்களப்பும்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குநோக்கி

**நா**ங்கள் தெற்கிலிருந்து வடக்குநோக்கி பயணிக்கின்றோம். வழியெங்கும் அழகான மரங்கள், செடிகள், கொடிகள், மலர்கள், நதிகள் என்று இயற்கைக் காட்சிகள் நெஞ்சை கொள்ளை கொண்டன. பசுமையான அக்காட்சிகள் அம்மண்ணின் வளத்தை நமக்கு பறைசாற்றி நிற்கின்றன.

பல சிங்கள ஊர்களைக் கடந்து சென்றுகொண்டிருக்கின்றோம். புத்தளம், அநுராதபுரம் என்று தமிழ்ப்பெயர்களைக் கொண்ட ஊர்கள் வருகின்றன.

நான் அய்ந்தாம் வகுப்பு பயிலும்போது பாடப்புத்தகத்தில் படித்த நினைவு வருகிறது. யாழ்ப்பாணத்திற்குச் செல்லும் வழியில் இருக்கும் ஊர்களையும் கண்ட காட்சிகளையும் மிகவும் அழகாக வர்ணித்திருப்பார்கள். அப்பாடபுத்தகத்தில் படித்த அந்த வயதிலேயே இலங்கைக்குச் செல்லவேண்டும் என்ற ஆசையை அந்த வர்ணிப்புகள் என்னுள் தோற்றுவித்தன. அநுராதபுரத்தை நாங்கள் அடைந்த பொழுது, நண்பர் சொன்னார், அநுராதபுரம் - அநுராதபுரா என்று சிங்களமாகிவிட்டதையும், தமிழர்கள் வெளியேற்றப்பட்டு சிங்களக் குடியேற்றம் திட்டமிட்டு நடத்தப் பட்டு முழுமையான சிங்கள ஊராக ஆகிவிட்டிருப்பதையும் சுட்டிக்காட்டினார்.

அதேபோல் புத்தளமும். சிங்களர் குடியேற்றப்பட்டு சிங்கள ஊராக மாற்றப்பட்டிருப்பதையும் சுட்டினார். நான் இதைப்பற்றி ஏற்கெனவே நூல்களில், கட்டுரைகளில் படித்த நினைவுகள் மீள எழும்பி சிந்தனையில் மூழ்கினேன்...

## சோதனைச் சாவடிகளில்

வவுனியா வந்தடைந்தோம். இராணுவத்தினர் அதிக அளவில் ஆயுதங்களோடு அலைந்து கொண்டிருந்தார்கள். கொழும்பிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா வரை நிறைய சோதனைச் சாவடிகள். காவல்துறையும் சோதனைச் செய்கிறது. இராணுவமும் சோதனைச் செய்கிறார்கள். அனைத்தையும் கடந்துதான் வவுனியா வந்தடைந்தோம். இங்கு பெரிய இராணுவ முகாம் இருக்கிறது. அதைக் கடந்து சென்றால் ஓமந்தை. இதுதான் இராணுவத்தின் எல்லை முடிவு. இங்கு அனைவரும் அவர்களுடைய வாகனம், பெயர் மற்றும் செல்லும் இடம் முகவரி அனைத்தையும் பதிவு செய்வதுடன் கொண்டு செல்லும் பொருட்களையும் சோதனைக்கு உட்படுத்திய பிறகுதான் அந்த எல்லையைக் கடக்க அனுமதிப்பார்கள். எங்கள் முறை வந்தது. பொருட்கள் அனைத்தையும் வாகனத்திலிருந்து கீழிறக்கி சோதனையிட்டார்கள். என் ஓவியங்களையும் பிரிக்க முற்பட்ட பொழுது அது என்னுடைய ஓவியங்கள் வேறொன்றுமில்லை என்று நான் எவ்வளவோ கூறியும் அதையும் பிரித்து தனித்தனியாக எடுத்து மிகவும் ஆர்வத்தோடு பார்க்கத் தொடங்கினார்கள். நானும் சரியென்று விட்டுவிட்டேன். சிங்கள இனம் தமிழர்களுக்கு செய்த கொடுமைகள்தான் அவ்வோவியங்கள். அவர்களும் பார்க்கட்டும் என்று நினைத்தேன். ஆண்கள் இரண்டு பேரும் , பெண் ஒருவரும் இருந்தார்கள். அவர்கள் என்னிடம் "யார் இவற்றை வரைந்தது" என்று கேட்டார்கள். "நான் தான்" என்றேன். "எங்கே செல்கிறீர்கள்" என்று அடுத்த கேள்வி. "யாழ்ப்பாணம்" என்றேன். சரி என்று செல்வதற்கு அனுமதியளித்தார்கள்.

நான் எவ்வளவோ நாடுகளுக்குச் சென்றிருக்கிறேன். எங்கும் சோதனைகள் உண்டு. ஆனால் என்னுடைய ஓவியங்கள் அமெரிக்கா, கனடா உள்ளிட்ட நாடுகளில் கூட பிரித்துச் சோதனைச் செய்யவில்லை. ஏன்? கொழும்பு விமான நிலையத்தில் கூட 'என்ன அது' என்று என் ஓவியங்களைப் பார்த்துக் கேட்டார்கள். சொன்னேன், விட்டுவிட்டார்கள். இங்குதான் முதன்முறையாக பிரித்து சோதனையிட்டிருக்கிறார்கள். அவ்வளவு நடுக்கம் அவர்களுக்கு இருக்கிறது. அவ்விடத்தைக் கடந்து சென்றால் 'No man Land' என்று சொல்லக்கூடிய இராணுவ சூனியப் பகுதி; அதாவது அய்.நா.சபையின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கண்காணிப்புக் குழுவின் கண்காணிப்பில் உள்ள பகுதி வருகிறது. இப்பகுதியில் புலிகளோ, அல்லது இராணுவமோ ஆயுதத்துடன் செல்ல அனுமதிப்பதில்லை. இப்பகுதி 200 அல்லது 300 மீட்டர் தூரம் இருக்கும். அதைக் கடந்து சென்றால் புலிகளின் கட்டுப்பாட்டில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள பகுதி 'தமிழீழம் உங்களை வரவேற்கிறது' என்ற பதாகை நம்மை வரவேற்கிறது. எவ்வாறு இராணுவப்பகுதியில் சோதனைச் சாவடி அமைத்து இராணுவமும், காவல்துறையும் சோதனையிலும் கண்காணிப்பிலும் ஈடுபடுகிறதோ அதைவிட சோதனையும் கண்காணிப்பும் புலிகளாலும், தமிழீழ காவல்துறையாலும் நடத்தப்படுகிறது. இன்னும் கூடுதலானச் செய்தி என்னவென்றால் தமிழீழத்திற்குள் கொண்டு செல்லப்படும் வரிசெலுத்தக்கூடிய பொருள்களுக்கு தமிழீழ நிதித்துறையின் கீழ் இயங்கும் சுங்க இலக்காவினரால் ஆயத்தீர்வை வசூலிக்கப்படுகிறது.

அடக்குமுறைச் சின்னமான காக்கி நிறத்திற்குப் பதிலாக, கருநீல, வெளிர் நீலச் சீருடையில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கும் தமிழீழக் காவல்துறையினர் சிங்கள அரசின் அடக்குமுறைகள் உடைக்கப்பட்டு விட்டதற்குச் சான்றாக நின்றனர்.

வாடகைக்கு அமர்த்திய வாகனங்களும், குடாநாட்டுக்குச் செல்லும் வாகனங்களும் நேரடியாகவே புளியங்குளத்திலுள்ள தமிழீழச் சோதனைச் சாவடிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றன. புளியங்குளத்திலுள்ள தமிழீழச் சோதனைச் சாவடியில் யாழ் செல்லும் பயணிகளுக்கானப் பகுதி, வன்னி செல்லும் பயணிகள் பகுதி என்ற இரண்டு பிரிவுகள் உள்ளன. குடா நாட்டுக்குச் செல்பவர்கள் யாழ் பயணிகள் பிரிவிலும், வன்னிக்குச் செல்பவர்கள் வன்னிப் பயணிகள் பிரிவிலும் தங்கள் வாகனங்களை அதற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்தவேண்டும். பிரமாண்டமான கீற்றுக் கொட்டகைகளில் தமிழீழத்தின் அந்த தற்காலிகக் குடிவரவுப் பகுதி, வரவேற்புப் பகுதி, வெளிநாட்டுப் பயணிகளுக்கானப் பகுதி, போக்குவரத்து அனுமதி பெறும் பகுதி, ஆயப்பகுதி, தீர்வை செலுத்தும் பகுதி, திரைப்பட வெளியீட்டுப் பிரிவு பகுதி, முறைப்பாடு பகுதி, பயணிகள் இளைப்பாறும் பகுதி என்று பல்வேறு பிரிவுகளாக நேர்த்தியான முறையிலே பிரிக்கப்பட்டு சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருக்கிறது.

சீருடை அணிந்த இளைஞர்கள் சிறந்த முறையில் தங்களது கடமைகளை செய்து கொண்டிருக்கின்றனர். ஒருநாட்டின் துறைமுகம் அல்லது விமான நிலைய குடிவரவுப் பகுதி எப்படி இருக்குமோ அவற்றுக்கு எந்தவிதத்திலும் குறைவில்லாமல் அந்தத் தமிழீழக் குடிவரவுப் பகுதி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் புளியங்குளம் சோதனைச் சாவடி நடைமுறைகள் என்பது தமிழீழம் ஒரு தனியரசாக இயங்குகிறது என்பதற்கு அடையாளச் சாட்சியாக விளங்குகிறது.

என்னுடைய தமிழீழப் பயணத்தின் நோக்கமே, கண்காட்சியும் பயிலரங்கும் நடத்துவதுதான். அதனால் அதற்குத் தேவையான வரைபொருட்களை இங்கிருந்தே வாங்கிச் சென்றேன்.

கொழும்பு விமான நிலையத்தில் இறங்கியவுடன், பச்சைவிளக்கு பகுதி (Green Channel) அதாவது வரிசெலுத்தக் கூடிய பொருட்கள் இல்லாதவர்கள் செல்லக்கூடிய வழியாக சென்றேன். ஆனால், சுங்க இலக்காவினர் என்னை மறித்து அட்டைப் பெட்டியை பிரிக்கச் சொன்னார்கள். பிரித்தேன். 'இப்பொருட் களுக்கு வரி (Duty) செலுத்த வேண்டும்' என்றார்கள். நான் மறுத்தேன். 'எங்கே கொண்டு செல்கின்றீர்கள்' என்று கேட்டார்கள். யாழ்ப்பாணத்திற்கு நுண்கலை மாணவர்களுக்கு பயிலரங்கம் நடத்த இருக்கிறேன். அதற்கு தேவையானப் பொருட்கள் இங்கு கிடைக்கவில்லை அதனால் தமிழகத்திலிருந்து வாங்கி வந்து அம்மாணவர்களுக்கு உதவுகிறேன். இது விற்பனைக்கல்ல. அதனால் வரி செலுத்த முடியாது என்று வாதிட்டேன். நீங்கள் வரிசெலுத்தித்தான் ஆக வேண்டும் என்று அவர்களும் வாதிட்டார்கள். நானும் விடாமல் முடியவே முடியாது என்று விடாமல் எதிர்வாதம் செய்தேன். அதில் ஒருவர் "யாழ்ப்பாணம் வான் வழி செல்கிறீர்களா அல்லது சாலை வழியாக செல்கிறீர்களா" என்று கேட்டார். நான் "சாலை வழியாக செல்கிறேன்" என்று சொன்னேன். "நீங்கள் புளியங்குளத்தில் புலிகளின் சோதனைச் சாவடியை கடந்துதான் செல்லவேண்டும் அவர்கள் உங்களிடம் வரி வசூலிக்காமல் விடமாட்டார்கள்" என்றார். நானும் "உங்களிடம் என்ன வாதத்தை வைக்கிறேனோ அதே வாதத்தை அவர்களிடமும் வைப்பேன்" என்றேன்.

மற்றொருவர் நாங்கள் சென்னைக்கு வந்தால் கொண்டுவரும் பொருட்களுக்கு வரிவிதிக்கிறார்கள் என்றார். நானும் விடாமல் நீங்கள் என்ன பொருட்களைக் கொண்டு வந்தீர்கள் என்று சொல்லுங்கள், நிச்சயமாக இந்தமாதிரி வரை பொருட்களுக்கு வரிவிதித்திருக்க மாட்டார்கள் என்றேன். எங்களுடைய வாதம் நீண்டதே தவிர அவர்களும் விடுவதாக இல்லை. நானும் விடுவதாக இல்லை. அவர்கள் ஒரு படிவத்தைத் தந்து அதை நிரப்பிக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறொரு இடத்திற்கு செல்லுமாறு அனுப்பினார்கள். நான் படிவத்தை நிரப்பாமலேயே அவ்விடத்திற்குச் சென்று அங்கிருந்த அதிகாரியிடம் நான் கொண்டு சென்ற பொருட்களை காண்பித்து விபரத்தைக் கூறினேன். அவரும் தாங்கள் குறைந்தபட்ச வரியாவது செலுத்த வேண்டும் என்றார். நான் குறைந்தபட்சம் என்றால் எவ்வளவு என்று கேட்டேன். ஆயிரம் ரூபாய் என்றார். என்னிடம் ஒரு பைசா கூட இல்லை. தவிரவும் இது வியாபார நோக்கில் கொண்டு செல்லப்படவில்லை. உங்கள் நாட்டு மாணவர்களுக்கு உதவும் வகையில் கற்பிப்பதற்காகக் கொண்டு செல்லுகிறேன் என்று மேலும் என்வாதத்தை எடுத்து வைத்தேன். வரிசெலுத்தாமல் அனுப்புவதற்கான அதிகாரம் எனக்கில்லை என்றார். அப்படியானால் உங்கள் உயர்அதிகாரியை அழைத்து வாருங்கள் அவரிடம் நான் பேசுகிறேன் என்றேன்.

அவரையும் அழைத்து வந்தார் அவரும் வந்து, என் கோரிக்கையை மறுத்தார். உங்களுக்கும் மேல் அதிகாரியை அழைத்து வாருங்கள் என்றேன். அவரும் வந்தார். அவரிடம் விபரத்தை அந்த அதிகாரிகளே தெரிவித்தார்கள். பொருட்களை பார்த்துவிட்டு என்னிடம் கைகுலுக்கி “மன்னிக்கவும் அவர்கள் தெரியாமல் செய்துவிட்டார்கள் வரிசெலுத்தத் தேவையில்லை நீங்கள் செல்லலாம்” என்று சொன்னார். பிறகு அவர்களிடம் திரும்பி, இவர் வெளியில் செல்லுவதற்கு உதவுங்கள் என்று கூறி என்னை அனுப்பிவைத்தார். நான் நன்றி சொல்லி விடைபெற்றேன்.

புளியங்குளத்தில் நிற்கும் போது இது என் நினைவுக்கு வருகிறது. சோதனைச் சாவடியைக் கடந்து சென்ற சில அடித்தூரத்திலேயே மீண்டும் ஒரு பெரிய பதாகை ‘தமிழீழம் உங்களை அன்புடன் வரவேற்கிறது’. என் கண்களில் கண்ணீர் என்னையறியாமலே நிரம்புகிறது. என் உடல் சிலிர்க்கிறது. ஏதேதோ மாற்றங்கள் என் உடலில் ஏற்படுகிறது. வார்த்தைகளில் சொல்ல முடியாத உணர்வு உண்டாகிறது. தற்போது தமிழீழ மண்ணில் நிற்கிறேன். சாலையின் இருபுறமும் அடர்ந்த காடுகள். வன்னிக் காடுகள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். தற்போதுதான் பார்க்கிறேன். உணர்கிறேன். புளியங்குளத்திலிருந்து மாங்குளத்தைக் கடந்து எங்கள் வாகனம் செல்கிறது. மாங்குளத்தில் சாலையின் இருபுறமும் இடிந்த கட்டிடங்கள். சிங்களஇராணுவத்தால் குண்டுபோட்டு அழிக்கப்பட்ட குடியிருப்புகள். எஞ்சியிருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவர்களில் குண்டடிப்பட்ட தழும்புகள் போரின் உக்கிரத்திற்கு சாட்சிப் பகன்று நிற்கின்றன. மக்களின் வாழ்விடங்கள் முற்றிலும் அழிக்கப்பட்டு புதர் மண்டிக் கிடக்கின்றன. அவற்றை எல்லாம் பார்க்கும்போது என் நெஞ்சு பேசமுடியாத அளவிற்கு கனத்து விம்முகிறது.

நண்பர் சொன்னார் இதையே தாங்க முடியவில்லை என்றால் இன்னும் எவ்வளவோ பார்க்கப் போகிறீர்கள் சமாதானக் காலத்தில் சிறிதளவு மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. போரின் முழுமையான முகத்தை நீங்கள் காணவேண்டுமானால் சமாதானம் ஏற்பட்ட உடனே நீங்கள் வந்திருக்க வேண்டும் என்றார். எனக்கும் அது சரி என்று பட்டது. இருந்தபோதிலும், தற்போது காணுகின்ற காட்சிகளை வைத்தே போர்க்காலங்களில் எப்படி இருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்கமுடிந்தது.

சாலையின் இருபுறமும் 'கண்ணிவெடிகள் கவனம்' என்ற எச்சரிக்கைப் பதாகை அபாய அறிவிப்புடன் நம்மை எச்சரிக்கைச் செய்கிறது. போர்க்காலங்களில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகள் இந்த அமைதிச் சூழலில் அகற்றும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கண்ணிவெடிகள் அகற்றப்பட்டப் பகுதியில் இது கண்ணிவெடி அகற்றப்பட்ட பகுதி என்று அறிவிப்புப் பலகை அறிவிக்கிறது. இந்தப் பணியை புலிகளுடன் இணைந்து யூ.என்.எச்.ஆர். (U.N.H.R.) செய்து வருவதாக அறிந்தேன். இந்த அறிவிப்பு பலகையிலும் யூ.என்.எச்.ஆர். என்றுதான் பதிவு இருக்கிறது.

ஏ9 (A9) நெடுஞ்சாலையில்தான் நாங்கள் சென்று கொண்டிருந்தோம். 'யாழ்பாணத்தையும்', கொழும்பையும் இணைக்கும் ஒரே நெடுஞ்சாலை இதுதான். ஆண்டுக்கணக்கில் மூடப்பட்டிருந்த இந்த நெடுஞ்சாலை போர் நிறுத்தத்திற்குப் பிறகு போக்குவரத்திற்கு திறந்துவிடப்பட்டிருக்கிறது. திறந்துவிடப்பட்ட புதிதில் குண்டும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் பராமரிப்பின்றி இருந்திருக்கிறது. ஒரு கிலோமீட்டரை கடப்பதற்கே பல மணிநேரம் எடுத்து இருக்கிறது. தற்போது ஓரளவு செப்பனிடப் பட்டு போக்குவரத்து சுமுகமாக இருக்கிறது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எங்கு திரும்பினாலும் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர்தான் சுற்றிவந்து கொண்டிருப் பார்கள். ஆனால் புலிகள் பகுதியில் பெயரளவுக்குக் கூட ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வீரரையும் காணவில்லை. தமிழீழக் காவல் துறையினர் தான் சில இடங்களில் சுற்றிவந்து பாதுகாப்புப் பணியில் ஈடுபடுகிறார்கள். மதியம் மூன்று மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்தோம். இதுதான் தமிழீழத்தின் தற்போதைய தலை நகரமாக இருக்கிறது. தமிழீழக் காவல்துறையினர் சாலையில் போக்குவரத்து ஒழுங்குகளை சரிசெய்து கொண்டிருக்கிறார்கள். தமிழீழப் பகுதியில் அதாவது புளியங்குளத்திலிருந்து கிளிநொச்சி நூற்றய்ம்பது கிலோ மீட்டர். இடைப்பட்ட பகுதியில், குடியிருப்பு இல்லாத பகுதியில் கூட வேகக் கட்டுப்பாட்டை காவல்துறை விதித்திருக்கிறது. எவ்வளவு வேகமாக செல்பவர்கள் கூட வேகக் கட்டுப்பாடு விதிக்கப்பட்ட இடங்களில் எவ்வளவு கிலோமீட்டர் வேகத்தில் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டு இருக் கின்றார்களோ அந்த குறிப்பிட்ட வேகத்தில்தான் வாகனங்கள் செல்கின்றன. அது புலிகள் வாகனமாக இருந்தாலும் கூட. அந்த அளவிற்கு விதிகளை மதிக்கிறார்கள். விதிகளை மீறுகின்றவர் களுக்கு கடுமையான அபராதம் விதிக்கிறார்கள். இடத்திற்கு தகுந்தாற்போல் வேகத்தின் அளவு 60 கிலோமீட்டர், 40 கிலோ மீட்டர், 20 கிலோமீட்டர் என்று எழுதப்பட்ட பலகை சாலைகளில் ஆங்காங்கே நட்டுவைக்கப்பட்டுள்ளது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சியில்


கிளிநொச்சியில் நுழைந்ததுமே தமிழீழ நிதித்துறை, நீதித்துறை, காவல்துறை, அரசியல்துறை, வனத்துறை என்று பல்வேறு துறைகளின் தலைமை அலுவலகங்கள் முதன்மைச் சாலையிலேயே உள்ளன.

நண்பர்களால் கிளிநொச்சியில் தங்கும் விடுதியில் தங்க வைக்கப்பட்டோம்.

செல்லும் வழியில் கண்டகாட்சிகள், ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர், சோதனைகள், இடிந்த கட்டிடங்கள் என்று அனைத்தும் என் குழந்தைகளுக்கு முற்றிலும் புதிய அனுபவமாக இருந்தது. ஏன் ஆயுதம் வைத்திருக்கிறார்கள், யாரை சுடுவதற்கு ஆயுதம் வைத்திருக்கிறார்கள். ஏன் பரிசோதனை செய்கிறார்கள், ஏன் வீடுகள் எல்லாம் இடிந்து கிடக்கின்றன என்பது போன்ற பல்வேறு கேள்விகளை, இன்னும் பதில் கூற கூடமுடியாத கேள்விகளை என் பிள்ளைகள் இருவரும் கேட்டுக் கொண்டே வந்தார்கள். எனக்கு எவ்வளவு அவர்களுக்கு புரிய வைக்கமுடியுமோ அவ்வளவு புரிய வைக்க முயற்சித்தேன். நண்பரும் அவர்களுடைய கேள்விகளுக்கு பதில் கூறிக்கொண்டே வந்தார்.

கிளிநொச்சி புதிய புதியக் கட்டடங்களுடன் எழுந்து நிற்கிறது. ஏ9 சாலையில் முருகண்டியிலிருந்து கிளிநொச்சி செல்லும் போது சாலையின் வலதுபுறம் கிளிநொச்சி மத்தியக் கல்லூரி கட்டடம் கூரை இல்லாமல் சுவர்களிலும் குண்டுகள் துளைத்து சிதைக்கப்பட்டு மிகவும் கோரமாகப் போர் அழிவுகளுக்கு சாட்சியம் கூறி நிற்கிறது. சாலையில் செல்கின்ற எல்லோருடைய கவனமும் இக்கட்டடத்தின் பக்கம் திரும்புகிறது. என்னுடைய புயலின் நிறங்கள் ஓவியக் கண்காட்சியை நடத்துவதற்கான ஏற்பாட்டில் எனது கலை இலக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி மத்தியக் கல்லூரி

நண்பர்கள், கருணாகரன், சேரலாதன் இருவரும் இறங்கினார்கள். கிளிநொச்சி மற்றும் முல்லைத் தீவு மாவட்டங்களில் அழகியல் கலாமன்றமும், வலயக் கல்வித் திணைக்களமும் இணைந்து நடத்துவதற்கான தேதி தேர்வுசெய்யப்பட்டு, கால அட்டவணைகளும் தயாரிக்கப்பட்டன. அதோடு, பள்ளி மாணவர்களுக்கும், பள்ளி ஓவிய ஆசிரியர்களுக்கும் தனித்தனியாக பயிலரங்கு நடத்துவதற்கும் முடிவு செய்து அதற்கான வேலைகளில் அழகியல் கலாமன்ற பொறுப்பாளர் திரு.விஜயேந்திரன் இறங்கினார்.

அழகியல் கலாமன்றம் என்பது இலங்கை அரசிடம் பதிவு பெற்ற கலை செயற்பாட்டுக்கான ஒரு நிறுவனம். அந்நிறுவனம், இசை, நாடகம், நடனம் போன்ற கலை வடிவங்களை பள்ளி மாணவர்களுக்கு பயிற்றுவிக்கும் வேலையை செவ்வனே செய்து வருகிறது. எதிர்காலக் கனவுகளோடு காத்திருக்கும் மாணவ, மாணவிகளுக்கு அழகியல் கலாமன்றம் ஒரு வடிகாலாக இருப்பதோடு மட்டுமல்லாமல், பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் கலைத்தொடர்பான பயிலரங்குகளை நடத்தி அவர்களுடைய திறனை மேம்படுத்துவதற்கும் உதவுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்னுடைய கண்காட்சி ஈழத்தில் நடைபெறவேண்டும் என்று மிகவும் விரும்பி, அதற்கு மிகவும் காரணமாக இருந்த எனது இனிய நண்பர் கருணாகரன், ஒரு எழுத்தாளர், கவிஞர், பத்திரிகை ஆசிரியர், சமூகச் செயற்பாட்டாளர் என்று பன்முகத்தைக் கொண்டவர். கலை இலக்கியம் குறித்தும், சமூகம் குறித்தும் மிகவும் ஆழமான பார்வை உள்ளவர். என்னை அவரும், அவரை நானும் இதழ்களின் வழியாக எங்கள் படைப்புகளின் ஊடாக அறிந்திருக்கிறோம். இருவருக்கு மான ஒத்த சிந்தனைகள் நிறையவே இருக்கிறது. என்னை முதன் முதலில் சந்தித்த உடனேயே உங்களுக்கு ஈழத்தில் மிகப்பெரிய மதிப்பு இருக்கிறது என்றதோடு மட்டுமல்லாமல் என் மனைவி சாந்தியை சந்தித்தபோதும் 'புகழுக்கு இம் மண்ணில் எவ்வளவு மதிப்பு இருக்கிறது என்பதை நீங்கள் கண்கூடாகப் பார்ப்பீர்கள்' என்றார். மிகவும் வெளிப்படையான எளிமையான அதே நேரத்தில் அழுத்தமான ஆழமான ஒரு நண்பர்.

ஓவியக் கண்காட்சி எப்படி நடத்துவது, அதற்குத் தேவையான பொருட்கள் என்ன என்பது பற்றி நண்பர்கள் விஜயன், கருணாகரன், சேரலாதன் போன்றோர்கள் என்னுடன் கலந்து திட்டமிட்டார்கள். ஓவியக்கண்காட்சியை ஒரிரு இடங்களோடு நிறுத்திவிடாமல் தமிழீழத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்கள். அதனால் ஓவியங்களைக் காட்சிப் படுத்துவதற்கான 'காட்சிப்பலகை' (Display Board) ஒன்றை பலகைத் தனியாகவும், தாங்கிகள் தனியாகவும் பிரித்து எடுத்து பல்வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதற்கு வசதியாக வடிவமைத்து பதினைந்து காட்சிப் பலகைகள் செய்வது எனவும் முடிவு செய்தோம். அவைகளை செய்து முடிப்பதற்கு ஒருவார காலம் ஆகும் அந்த இடைப்பட்ட காலத்தில் நான் பல்வேறு இடங்களையும் நபர்களையும் பார்க்கவும் சந்திக்கவும் வேண்டும் என்று நண்பர்கள் விரும்பினார்கள். அதில் நானும் ஆர்வம் கொண்டிருந்தேன். அதில் சில இடங்களை என்மனைவி சாந்தியும் குழந்தைகள் சித்திரனும் இலக்கியனும் பார்க்கவேண்டும் என்று விரும்பினேன்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல போரினால் வெந்து நொந்து போயிருந்த அம்மக்கள் மீது இயற்கையும் இரக்கம் இல்லாமல் 'ஆழிப்பேரலை' (சுனாமி) என்ற பெயரில் தாக்கியது. போரினால் எழுபதாயிரம் மக்களை இழந்த அம்மண், ஆழிப்பேரலையிலும் ஆயிரக்கணக்கான மக்களை இழந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பும், முல்லைத்தீவும் அதிகமான இழப்புகளைச் சந்தித்தது. ஆழிப்பேரலை தாக்கிய சிலநாட்களில் தமிழக கடற்கரையோரப் பகுதிகளை இருவாரங்கள் பயணம் மேற்கொண்டு பார்வையிட்டேன். ஈழத்தோடு ஒப்பிடுகையில் தமிழகத்தில் உயிர் இழப்பும், பொருள் இழப்பும் குறைவுதான் என்று ஊடகங்கள் தெரிவித்தன. அவ்வாறு இருக்கும்போதே தமிழகப் பகுதிகளை பார்வையிடும் போது என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. கனத்த இதயத்தோடுதான் அவ்விடங்களை பார்வையிட்டு வந்தேன். அவ்விடங்களை பார்வையிடும் அந்நேரத்திலேயே ஈழத்தில் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகள் பற்றியும் கவலை கொண்டேன். அதனால் உடனடியாக ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிடவேண்டும் என்று நண்பர்களிடம் தெரிவித்தேன். முதலில் வெத்தலைக்கேணி என்ற இடத்திற்குச் சென்றோம். ஆயிரக்கணக்கான மக்களை பலிகொண்ட இடம். அனைத்து வீடுகளையும் உடைமைகளையும் இழந்த மக்களுக்கு தமிழர் மறு(புனர்)வாழ்வுக் கழகத்தால் (TRO) தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டு உதவிகளும் வழங்கப்பட்டு அந்த மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.



ஆழிப்பேரலை தாக்கிய வெத்தலைக்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் மறுவாழ்வுக்கழகம் என்றதும் என் நினைவு சற்று பின்நோக்கிச் சென்றது...

1983ஆம் ஆண்டு இலங்கையின் பெரும்பகுதி துன்ப துயரங்களைத் தாங்கியதாகவும் வரலாற்றில் பதியப்பட வேண்டியவையாகவும் இருந்தது.

இலங்கையின் வரலாற்றில் '**ஆடிக்கலவரம்**' என்றும் இலங்கையின் '**இருண்டநாட்கள்**' என்றும் குறிப்பிடப்படும் தமிழர் களுக்கு எதிரான இனக்கலவரம் இலங்கையின் பல பகுதிகளிலும் வாழ்ந்த தமிழ்மக்களை இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களை நோக்கி இடம்பெயர வைத்தது.

தமிழ் மக்கள் வடக்கு, கிழக்கு நோக்கி இடம் பெயர்ந் திருந்தாலும், இப்பகுதியில் நடைபெற்ற யுத்தம் இப்பகுதிகளி லிருந்து பெருமளவு மக்களை தமிழகம் நோக்கி இடம்பெயர வைத்தது.

அகதிகளான அம்மக்கள் தமிழகத்தின் பலபகுதிகளிலும் அமைக்கப்பட்ட அகதி முகாம்களில் தஞ்சமடையும் சூழ்நிலை உருவாகியது. உயிரிழந்து, உடமையிழந்து, உறவுகளைப் பிரிந்து ஏதிலிகளான இம்மக்களின் உயிர் வாழ்வு நிலை பாதிக்கப்பட்டது. இந்த வேளையில் இம்மக்களின் துயர்துடைப்புப் பணியில் ஆர்வம் கொண்ட பெரியோர்களினதும், நலன் விரும்பிகளினதும் ஆலோசனைகளுடனும் ஒத்துழைப்புகளுடனும் அம் மக்களால் 1985ஆம் ஆண்டு '**தமிழர் மறுவாழ்வுக் கழகம்**' தமிழகத்தில் தொடங்கப்பட்டது.

ஆரம்பத்தில் தனது சேவையை தமிழர் மறுவாழ்வுக் கழகம் தமிழகத்தில் ஆரம்பித்தாலும், பின்னர் இலங்கையின் வடக்கு -கிழக்கு பகுதியில் தனது சேவையை வழங்கி வந்தது.

நிவாரணம், மறுவாழ்வு, அபிவிருத்தி என்பவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சமூக நலனில் முன்னேற்றத் தையும், மனிதவள மேம்பாட்டையும் சுயசார்பு நிலையை ஏற்படுத்துதலையும் குறிக்கோளாக வைத்து சமூக பொருளாதார அபிவிருத்தியைக் கொண்ட சமுதாயத்தை ஏற்படுத்துதலை இலக்காக வைத்து கிராமிய மட்டத்தில் செயற்படும் 7 பேரைக் கொண்ட சமூக பொருளாதார அபிவிருத்திக் குழுக்களை அமைத்து அவர்களை கல்வி, சுகாதாரமும் உணவும் (போசாக்கும்),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடமைப்பு, விவசாயம், தொழில், புனர்வாழ்வு, பொதுவிடயங்கள் என செயற்படும் வேலைத்திட்டங்களில் ஈடுபடுத்தி தனது 20 ஆண்டுகளைக் கடந்துவிட்ட பணியில் வெற்றியடைந்து மகிழ்வுடனும், நிறைவுடனும் தமிழர் மறுவாழ்வுக் கழகம் நிமிர்ந்து நிற்கின்றது.

கடல் அலைகள் மிக அமைதியாக எழுந்து தரையை தழுவிச் சென்று கொண்டிருந்தன. என் மன உணர்வுகள் மிகவும் வேதனையால் தவித்துக் கொண்டிருந்தன. அமைதியான அந்த கடல் அலைகளின் அழகை ரசிப்பதற்கு என்னால் இயலவில்லை. இந்தக் கடலா அவ்வளவுச் சீற்றத்தை வெளிப்படுத்தி ஆயிரக்கணக்கானவர்களைப் பலிகொண்டது. வீடுகள் இருந்த சுவடே இல்லாமல் முழுவதும் கட்டாந்தரையாக மாறும்படி செய்தது.

அடுத்து முல்லைத்தீவு, அத்தீவு பற்றி மிகவும் அதிகமாகக் கேள்விப்பட்டிருக்கின்றேன். மிகவும் அழகான கடற்கரையை உடைய பகுதி. அங்குதான் அடுத்து சென்றோம். ஆழிப்பேரலை தாக்கி நான்கு மாதங்கள் கடந்த பிறகும் அந்த இடிபாடுகளும், அழிவுகளும் நிகழ்ந்த அந்த அவலத்திற்கு சாட்சியம் கூறி நிற்கின்றன. பார்ப்பதற்கே நெஞ்சு பதைபதைத்தது. ஆயிரக் கணக்கான மக்களை பலிகொண்ட இடத்தில் நிற்கிறோம் என்பதே



முல்லைத் தீவு கடற்கரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை நடுங்கச் செய்தது. கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இடிபாடுகள்தான் காட்சிகளாகத் தெரிந்தன.

என் உடன் வந்த நண்பர்கள், 'தென் தமிழீழத்தின் அம்பாறை மாவட்டம் இந்தப் பேரழிவால் அதிகளவுக்குப் பாதிக்கப்பட்டது. அதற்கு அடுத்தப்படியாக மட்டக்களப்பு மாவட்டமும், வட தமிழகத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் யாழ் மாவட்டத்தின் வடமராட்சிக் கிழக்குப் பகுதிகளும் அதிகளவுக்கு பாதிக்கப்பட்டன நூற்றுக்கும் மேற்பட்ட கரையோர கிராமங்கள் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டன. பல கிராமங்களில் அடையாளம் காட்டவோ அல்லது உடலங்களைப் பொறுப்பெடுக்கவோ யாருமே இல்லாத அளவுக்கு மக்கள் குடும்பம் குடும்பமாக அழிந்துபோன கொடுமை நிகழ்ந்துள்ளது' என்றார்கள்.

சனவரி எட்டாம் தேதி (8.1.2005) விடுதலைப் புலிகளின் அபிவிருத்திக்கும் திட்டமிடலுக்குமான செயலகத்தால் வெளியிடப் பட்ட அதிகாரப்பூர்வமான கணக்கின்படி ஈழத்தில் 20ஆயிரத்து 279பேர் பலியாகி உள்ளனர். 6725பேர் காணாமல் போயுள்ளனர். இந்தக் கணக்கீட்டை கேட்கும் போதே என் நெஞ்சு விம்மிப் புடைத்தது.

என் குழந்தைகள் அப்பருவத்திற்குரிய துள்ளலோடு கடற் கரையில் நீரில் விளையாடிக் கொண்டிருந்தார்கள். என்மனைவி சாந்தி அவர்களுக்கு பாதுகாப்பாக நின்று கொண்டிருந்தார்.

நான் இந்தத் துயரக் காட்சிகளை பார்த்ததிலிருந்தும், துன்பக் கதைகளை கேட்டதிலிருந்தும் ஒருவித சோகம் என்னை ஆட்கொண்டதனால், கடலலைகளின் அழகை ரசிக்க முடியாத மனநிலையில் இருந்தேன். அந்த மனநிலையோடு எனது வாகனத் திற்கு அருகில் நின்று இடிபாடுகளை பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு பெரியவர் எங்களை நோக்கி வந்தார். நண்பர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்து, தமிழகத்திலிருந்து வந்திருப்பதையும் சொன்னார். அப்பெரியவரும் இந்த ஆழிப்பேரலையால் மிகவும் பாதிக்கப்பட்டவர்.

அவர் 'எங்கள் நினைவுக்கு எட்டாத வரலாற்றின் தொன்மைக் காலத்தில் குமரிக்கண்டம் என்ற தமிழர் நிலத்தை அழித்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கடல்கோள்' இன்று 'சுனாமி' என்ற பெயரில் எங்கள் தாயகத்தில் கரையோரத்தை காவு கொண்டிருக்கிறது' என்று வேதனையோடு சொன்னார்.

சங்க இலக்கியங்களில் கடல்கோள் என்று குறிப்பிடப்படும் இந்த பேரனர்த்தம் நிகழ்ந்து குமரிக்கண்டமும், குமரி மலையும் கடலில் மூழ்கியதாக உள்ளக் குறிப்புகள் வெறும் இலக்கியச் சான்றுகள் என்றே இதுவரை உணரப்பட்டு வந்தன. தமிழ்கூறு நல்லுலகம் என்பது 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடை' என்று தொல்காப்பியத்தில் காணப்படும் குறிப்புகளும், 'பஃறுளி ஆற்றுடன் பன்மலையடுக்கத்துக் குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள' என்று சிலப்பதிகாரத்தில் காணப்படும் குறிப்புகளும் கடல்கொண்ட காவேரிப் பூம்பட்டினம் என்ற கூற்றுகளும் தமிழர் நிலத்தை விழுங்கிய ஆழிப் பேரனர்த்தத்துக்கு சான்றாக உள்ளன.

ஆனால் கடல் பொங்கி பல்லாயிரக் கணக்கான மக்களை காவு கொண்ட நிகழ்வு எமது நினைவுக்கு அல்லது எமது பரம்பரையின் நினைவுக்கு எட்டக்கூடியதாகவோ, நிகழ்ந்ததாகவே வரலாறு இல்லை. இவற்றை அசைபோட்டபடியே வாகனத்தில் திரும்பிக் கொண்டிருந்த வேளையில் நண்பர் வாகனத்தை நிறுத்தி, வலது புறத்தை சுட்டிக் காட்டி இதோ பாருங்கள் ஆழிப் பேரலையில் பலியானவர்களை புதைக்கப்பட்டிருக்கும் இடம் என்றார். எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது.

ஒவ்வொருவரையும் தனித்தனியாகப் புதைத்து அதன் மீது ஒரு குச்சியை நட்டு, அதில் அவர்கள் பெயர், ஊர் போன்றவற்றை எழுதி வைத்திருக்கிறார்கள். தமிழகத்தில் நாமும் சுனாமியை எதிர் கொண்டோம். நாமும் ஆயிரக்கணக்கான மக்களை இழந்தோம். நாம் பலியான அந்த உடல்களை கையாண்ட விதத்தை எண்ணி வேதனையடைந்தேன். 'பொக்லைன்' வைத்து பள்ளம் தோண்டி, உடல்களை 'டிப்பரில்' அள்ளிக் கொண்டு வந்து 'கொட்டி' பொக்லைன் உதவியால் மண்ணை அள்ளிப்போட்டு மூடியதை தொலைக்காட்சிகளில் பார்த்தபோதே, இவ்வளவுதானா இப் பிணத்திற்கு மரியாதை என்று வேதனைப்பட்டேன். பிறகு அவ்விடங்களை பார்வையிட்டபோது பிணங்களை கொட்டி மூடப்பட்ட இடத்தின்மீது நின்று கண்ணீர் வடித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது ஈழத்திலும் பார்க்கிறேன். எவ்வளவு அழகாக எப்போது வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் எந்த உடலையும் அடையாளம் காணும் விதத்தில் அடக்கம் செய்திருக் கிறார்கள் என்பதை பார்க்கும்போது எனக்கு வியப்பு ஏற்பட்டது. வியப்பு எனக்கு மட்டுமல்ல. பிரான்சிலிருந்து வெளிவரும் 'மெத்திரோ' எனும் பத்திரிகை, "இலங்கையில் தனிமையாக நின்று போராடிவரும் விடுதலைப்புலிகள், ஆழிப்பேரலை நிகழ்த்திய அனர்த்தத்தின் பின், மக்களைப் பாதுகாக்கும் பராமரிக்கும் வல்லமையை வெளிப்படுத்தினார்கள் - சுயாதீனத்தை விரும்பும் அவர்களின் தேசத்தில் எடுத்துக் காட்டினார்கள்.

"சுனாமி அடித்து ஓய்ந்த சில கணங்களின் பின்னால் தமிழீழ விடுதலைப் புலிகள், உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மக்களைக் காப்பாற்றினார்கள். கடலில் மிதந்த பிணங்களை மீட்டெடுக்கும் பணியிலும் மிகச் சிறப்பாக இயங்கினார்கள்.


"அவர்கள் அமைதி முகாம்களை அமைத்து பாதிக்கப்பட்ட மக்களை அங்கு தங்கவைத்தனர். அதற்கப்பால் பாதுகாப்பு அரண்களை அமைத்து திகில் அசைவுகளைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளை செய்தார்கள். அதாவது கொள்ளைகள் நடைபெறாமல் தடுப்பதற்கான செயல்களில் இறங்கி இருந்தார்கள். வாகனங்களை சட்டப்படிக் கேட்டு, காயப்பட்டவர்களை மருத்துவ நிலையங்களுக்கு எடுத்துச் சென்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இரத்தம் வழங்குவதிலும் அவர்கள் முன்நின்றார்கள்.

"ஒளி, ஒலிப் பதிவுக் கருவிகளுடனும், கணினிகளுடனும் விடுதலைப் போராளிக் குழுக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இறந்தவர்களின் முகங்களை புகைப்படம் எடுத்தார்கள். அடையாளம் காணுவதற்காக அவற்றை ஆவணப்படுத்தினார்கள். அதன் பின்னர் இறந்தவர்களின் உடல்களை எரிக்கும், புதைக்கும் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டனர். அவர்களின் இராணுவம் மிக நன்றாக வேலை செய்யும் திறன் மிக்கதாக இருந்தது. புலிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயமான முறையில் நிவாரண உதவிகள் கிடைக்கவேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார்கள். பேரழிவின் முன்னால் சிறீலங்காவின் அரசோ செயலற்றதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1983இல் இருந்து நாட்டின் வடக்கிலும், கிழக்கிலுமாக விடுதலைப் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் சுதந்திரத்திற்காக போராடி வருகிறது. அங்கே சிறுபான்மையினராக தமிழர்கள் இருக்கிறார்கள். மற்றும் தீவில் சிங்களவர்கள் பெரும்பான்மை யினராக இருக்கின்றனர். புலிகள் இரத்தம் சிந்திய தற்கொடையின் மூலமே நன்கு அறியப்பட்டவர்களாக இருக்கிறார்கள். 2002ஆம் ஆண்டிலிருந்து போர் நிறுத்தச் செயற் பாடுகள் இடம்பெற்று வருகின்றன. ஆழிப்பேரலை இரண்டு முகாம்களுக்கிடையிலும் ஒரு சமாதானத்தை ஏற்படுத்தும் வாய்ப்புக்கு ஆதரவளிக்கலாம். ஒன்றாக வேலை செய்வதற்கான உடன்பாடுகளையும் எட்டலாம், சமாதானப் பேச்சுகளும் உருவாகி இலங்கையில் அவர்களிடையே ஒரு மாற்றம் நிகழலாம்" என்று அப் பத்திரிகை சனவரி 5, 2005 இதழில் எழுதி யிருக்கிறது. இதைவிடச் சான்று வேறு எதுவும் இருக்கமுடியாது. இதையேதான் மக்களும் என்னிடம் தெரிவித்தார்கள்.

■



இரணமடு குளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுதளிர்ப்பு

ஈழம் என்பது போர் மற்றும் அரசியல் பக்கங்களுடன் நின்றுவிடவில்லை. சமூகம், பொருளாதாரம், நிர்வாகக் கட்டமைப்புகள், மனிதாபிமானப் பணிகள் என்று பல்துறை சார்ந்து வியாபித்து நிற்கிறது. அவை ஒவ்வொன்றாகப் பார்வையிட்டேன்.

## செஞ்சோலை சிறுவர் இல்லம்

போர் சூழ்நிலையால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண் பிள்ளைகளின் பராமரிப்புக்காக 1991 ஐப்பசி 23ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டது. இந்த செஞ்சோலையில் 242 பிள்ளைகள் இருக்கிறார்கள்.

## காந்தரூபன் அறிவுச் சோலை

இலங்கை அரசு திணித்த கொடியப் போரினால் பெற்றோரை இழந்த ஆண்பிள்ளைகளின் பராமரிப்புக்காக 1993 கார்த்திகை 13ஆம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. காந்தரூபன் அறிவுச்சோலையில் 227 பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

"நான் ஒரு அனாதை, அப்பா அம்மா இல்லாத பிள்ளை. நான் பட்ட கஷ்டத்தை என் போன்றப் பிள்ளைகள் படக்கூடாது. இந்தப் பிள்ளைகளை எடுத்து அரவணைத்து வளர்த்து இந்த சமூகத்திலே அவர்களும் மற்றவர்களுக்கு சரிநிகர் சமானமாக தலைநிமிர்ந்து நடக்கச் செய்வதற்கு வழி செய்வீர்களா அண்ணா?.." தாயக விடுதலைப் போருக்கு கரும்புலியாக சென்று கடலிலே காவியமான மேஜர் காந்தரூபன் எங்கள் தேசியத் தலைவருக்கு கூறிய இறுதி ஆசை இது. இந்த ஆசையின் தன்மையை அதில் தொனிந்த ஆதங்கத்தின் ஆழத்தை புரிந்து கொண்ட, உணர்ந்து கொண்ட எமது தேசியத் தலைவரின் சிந்தனையில் உதித்ததுதான் காந்தரூபன் அறிவுச் சோலை, செஞ்சோலை சிறுவர் இல்லங்கள்" என்றார் அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பாளர். இந்த இல்லங்களுக்கு பிள்ளைகள் உள்வாங்கும் போது அந்தப் பிள்ளைகளின் அநாதரவான நிலைதான் முதலில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. அநாதாரவான நிலை என்று சொல்கிறபோது இலங்கை அரசு அந்த மண்மீது திணித்த கொடியப் போரினால் தாய், தந்தை இரண்டுபேரையும் இழந்து ஆதரிக்க யாருமற்ற நிலையில் உள்ளச் சிறுவர்கள் முதலாவது வகை.

அடுத்து போரினால் தாய் அல்லது தந்தை இருவரில் ஒருவரை இழந்து பல்வேறு காரணங்களால் கைவிடப்பட்டு அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்றே தெரியாமல் இருக்கின்ற குழந்தைகள் இரண்டாவது வகை. இந்த இல்லங்களில் பிறந்து ஓரிரு மாதங்களே ஆன குழந்தைகளிலிருந்து பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் வரை இருக்கின்றார்கள்.

## வெற்றிமனை

போரின் அழுத்தங்களாலும், தங்கள் கண்முன்னாலேயே உறவுகளைப் பறிகொடுத்த அதிர்ச்சியாலும் மனநிலை பாதிக்கப் பட்ட பெண்களை பாதுகாத்து உரிய சிகிச்சை வழங்கிப் பராமரித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்கான இல்லம்.

## பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம்

சமூகத்தின் பல்வேறு கொடுமைகளால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு பாதுகாப்பும் தன்னம்பிக்கையும் கொடுத்து மறுவாழ்வளிக்கும் அமைப்பு.

## அன்புச் சோலை - மூதாளர் பேணலகம்

போரில் தமது பிள்ளைகளை இழந்து ஆதரவற்ற நிலைக்குத் தள்ளப்பட்ட முதியோரையும், சொந்த பந்தங்கள் இருந்தும் அவர்களினால் கைவிடப்பட்ட முதியோரையும் "அவர்கள்" யாருமற்றவர்களல்ல, பல்லாயிரக்கணக்கான போராளிகளையும் இலட்சக்கணக்கான தமிழீழ மக்களையும், பிள்ளைகளாகவும் சொந்தபந்தங்களாகவும் கொண்டவர்கள் என்ற நம்பிக்கையைக் கொடுத்து முதுமையில் அவர்கள் நிம்மதியாகவும் மகிழ்ச்சியுடனும் வாழ்வதற்கான இல்லம்- இந்த அன்புச்சோலை.

## தியாகி திலீபன் மருத்துவச் சேவை

சிங்கள அதிகாரவர்க்கம் தமிழ்மக்களைப் போராலும், பட்டினியாலும் கொல்ல நினைத்தது ஒருபக்கம் என்றால், மருந்துத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடையை விதித்தும், மருத்துவ மனைகளை அழித்தும், நோயாலும் காயங்களுக்கு உரிய சிகிச்சை இன்மையாலும் எமது மக்களை கொல்ல வைத்தது இன்னொரு பக்கமாக இருந்தது. இதை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு போராளி மருத்துவர்களைக் கொண்டு, கிடைக்கும் அடிப்படை உயிர்காக்கும் மருந்துகளை வைத்துக் கொண்டு மக்களைக் காப்பதற்காக உருவாக்கிய அமைப்பு. இன்று இந்த தியாகி திலீபன் மருத்துவச் சேவை தமிழர் தாயகமெங்கும் வியாபித்து, கிராமிய மக்களின் வாழ்வோடு ஒன்றிவிட்ட ஒரு அமைப்பாக இருக்கிறது.

## தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

தமிழீழத்தின் பொருளாதார கட்டமைப்பை வலுப்படுத்து வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பு.தமிழீழம் ஒரு செழிப்பான பூமி. வளங்கள் பல நிறைந்த தேசம். தன்னிறைவான பொருளா தாரத்தைக் கட்டி எழுப்பி அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய நீர் வளத்தையும் நில வளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக வழங்கப்பட்ட இந்த வளங்களை இனங்கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வர, மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்கவும், வேளாண்மையும், கைத்தொழிலுமே பொருண்மிய கட்டுமானத்திற்கு அடித்தளமானது. இந்த இரண்டு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முக்கிய கவனம் செலுத்தி வருகிறது. ஆக்கபூர்வமான பல திட்டங்களையும் செயற்படுத்தி வருகின்றது.

## கலைப் பண்பாட்டுக் கழகம்

இவ்வமைப்புப் பற்றி நண்பர், "எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது கலையும், பண்பாடும் எமது தேசத்தின் ஆன்மா. இந்த நோக்கத்திற்கு செயல்வடிவம் கொடுக்கிறது கலைப்பண்பாட்டுக் கழகம்" என்று கூறிவிட்டு 1992 ஆடி 15இல் கலைப் பண்பாட்டுக் கழத்தினரால் நடத்தப்பட்ட முத்தமிழ்விழாவிற்கு எமது தமிழீழத் தேசியத் தலைவர் அனுப்பிய செய்தியில், "எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தை கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதில் எமது கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது" என்று குறிப்பிட்டிருந்தார் என்று கூறினார்.

## புலிகளின் குரல்- வானொலிச் சேவை

தமிழ் இனத்தின் குரல்வளையை நசித்து தமிழ் மக்களை சிறீலங்கா அரசு கொன்று குவித்த போது உள்ளூரிலும் உலக நாடுகளிலும் இருந்த ஊடகங்கள் எல்லாம் கண்களை மூடிக் கொண்டிருந்த நேரத்தில் தமிழர்களுடைய உரிமைக்குரலை உலக அரங்குக்கு உரத்துச் சொல்வதற்காக இவ்வானொலி உருவாக்கப் பட்டது. அப்பணியைச் செவ்வனே செய்து வருகிறது. தமிழீழச் சட்டக்கல்லூரி, தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை, நிறைமதி இல்லம், மயூரி இல்லம், செந்தளிர் சிறுவர் இல்லம் என்று அனைத்தையும் பார்வையிட்டு கொண்டிருக்கும் போதே அந்தத் தலைவனின் தொலைநோக்கு பார்வையும் திட்டமிடலும் என்னை வியப்பில் ஆழ்த்தியதோடு மட்டுமல்லாமல், ஒரு மாதிரி நாடு உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் உணர்ந்ததை நண்பரிடம் தெரிவித்தேன்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பாளர் திரு.கே.பி.ரெஜி அவர்களைச் சந்தித்து உரையாடினேன். அவை தொடங்கப் பட்டதிலிருந்து அதனுடைய செயற்பாடுகளை விரிவாக எடுத்துக் கூறினார். அவைஃ தமிழீழம் என்ற இலட்சியத்தினை அடைவதற்காக எமது தேசியத் தலைவர் ஆயுதப் போராட்டத்தினை முன்னெடுத்து அதற்கான திட்டமிடல்களை மேற்கொள்ளும் வேளையில் தனித்து ஆயுத ரீதியான போராட்டத்தில் மட்டும் நின்றுவிடாது, போரும் பொருளாதாரமும், போரும் புனர்வாழ்வுப் பணிகளும், போரும் சமூக அபிவிருத்தியும் என்ற வகையில் அனைத்தையும் சேர்த்துத் திட்டமிட்டுச் செயற்படுத்தியமையை தலைவரின் போராட்ட வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ள முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் என்னும் அமைப்பும் மேற்குறிப்பிட்டவற்றிற்குள் உள்ளடங்குகின்றதோர் செயற்பாடாக ஆரம்பிக்கப்பட்டது.

ஓர் இனத்தினைத் திட்டமிட்டு ஆயுத பலத்தினாலும் பொருளாதார நெருக்கடியாலும் அடக்குமுறைக்கு உள்ளாக்கி அவர்களைத் தன்னிடம் சரணடையச் செய்து, அவ்வினத்தின் இலட்சிய மூச்சினை அடக்குகின்ற செயற்பாட்டில் முழுமையாக இறங்கிச் செயற்படும் அரசிடமிருந்து அடக்கப்படுகின்ற மக்களுக்கு நிவாரணத்தினையும், புனர்வாழ்வினையும், அல்லது இரக்கத் தினையும் பரிவினையும் எதிர்பார்க்க முடியாது என்பது வரலாறு. இது எமது இனத்திற்கும் பொருத்தமானது.

இதனைக் கருத்தில் கொண்டே எமது தலைவர் அவர்கள் நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்தி ஆகியவற்றினை நோக்க மாகக் கொண்டு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினை வளர்த்தெடுத்து இன்று மக்கள் கையில் கொடுத்துள்ளார்.

இன்று தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேசத்தில் 20 நாடுகளிலும், உள்ளூரில் 8 உப அலுவலகங்களையும், ஒரு நடுவப் பணியகத்தினையும் கொண்டு விளங்குவதுடன் 73 பங்காளி நிறுவனங்களை இணைத்து தனது செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பிறப்பிலிருந்து ஒவ்வொரு அகவையிலும் ஓய்வின்றி மக்களிற்கான நிவாரண, புனர்வாழ்வு, அபிவிருத்தியில் ஈடுபட்டு வருகின்றது. புனர்வாழ்வுக் கழகம் தனது வலிமைக்கு மீறிய அனர்த்தங்களையும் எதிர்கொண்டு தமிழ் மக்கள் எத்தகைய துன்ப துயரங்களிலுமிருந்தும் வெளியே வந்து புதிய வாழ்வினை உடனடியாகத் தொடங்கும் அளவிற்கு பல வேலைத் திட்டங்களைச் செய்து வருகின்றது.

கடந்த 10 ஆண்டுகளில் மட்டும் வடக்கு கிழக்கில் சிங்கள-அரச படைகள் 50ற்கும் மேற்பட்ட இராணுவ நடவடிக்கைகளை தமிழ் மக்களிற்கு எதிராகச் செய்து முடித்திருக்கிறது. இதன்போது 12 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தமது சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளனர். 1000ற்கு மேற்பட்ட பெரிய கிராமங்கள் அழித்தொழிக்கப்பட்டன. நூற்றுக்கு மேற்பட்ட சிறு கிராமங்கள் அழித்தொழிக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுள் மூன்று இலட்சத்திற்கு மேலான தமிழ் மக்களின் இருப்பிடங்கள் நூற்றுக்கணக்கான பாடசாலைகள், வழிபாட்டுத் தலங்கள் அடங்குகின்றன. மேலும் விவசாய நிலங்கள், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், கடல்வளங்கள், கைத்தொழில்கள், காட்டு வளங்கள் என்பனவும் இக்கோரப் புயலில் சிக்குண்டு போனவை ஆகும்.

இக்கழகம் இத்தகைய பேரழிவில் இருந்த மக்களை ஓரளவு வாழ்நிலைக்கு மீட்டு, அவர்களைப் பாதுகாப்பான இடங்களில் குடியமரச் செய்து, நிவாரண உதவியினையும் செய்தது; தற்போதும் செய்து வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 15000க்கு மேற்பட்ட இடப்பெயர் முகாம்களையும் பராமரித்து வந்திருக்கிறது. இவை தற்போதும் தொடர்கின்றன.

இத்தகைய பெரும் பணிகளுடன் மட்டும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நின்றுவிடாது. மக்களின் பொருளாதார மேம்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் 200 மில்லியன் ரூபா நிதியினை சுயசார்புத் தொழில் முயற்சிக்கு வழங்கியுள்ளது. மேலும் பல சமூக கட்டமைப்புகள், உட்கட்டுமானங்கள், பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் எனப் புத்தாயிரம் ஆண்டிலும் தொடர்கின்றன.

## அளப்பரிய சேவையில் சர்வதேச தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 1985ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டதிலிருந்தே தனது வெளிநாட்டுச் செயற்பாடுகளில் துரிதமாக இறங்கியது எனலாம். அதற்கு அடிப்படைக் காரணங்கள் பல உள்ளன. அதாவது தாயகத்தில் சிங்கள அரசினால் துன்பப்படும் மக்களுக்கான நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைக்கு அடக்கு முறை அரசிடமிருந்தோ அல்லது அதனது சட்ட வரையறைக்குள் இருக்கும் அரசு, அரசுசார் அமைப்புகளிடமிருந்தோ உதவிகளைப் பெறுவது அல்லது மக்களுக்கு அவர்களிடமிருந்து பெற்றுக் கொடுப்பது என்பது இயலாததொன்றாயிருக்கும். அதனை நாம் நடைமுறையில் காண்கின்றோம்.

இந்நிலையினை அன்றே உணர்ந்த தமிழர் புனர்வாழ்வுக் கழக ஆளுமைக்குழு அதனது செயற்பாட்டினை தமிழர்கள் புலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்ந்து வாழும் கடல் கடந்த நாடுகளில் கிளைகளை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றது.

1985இல் இந்தியாவில் ஆரம்பித்த இந்தச் சர்வதேச விஸ்தரிப்பு நடவடிக்கை இன்றுவரை இருபது நாடுகளில் கிளைகளைப் பரப்பி செயற்பட்டு வருகின்றன.

அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, ஜேர்மனி, பிரான்ஸ், சுவிற்சர்லாந்து, இத்தாலி, சுவீடன், நோர்வே, கொலண்ட், பொட்சுவானா, தென்னாப்பிரிக்கா, பப்புவா நியூக்கினி, மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, டென்மார்க், மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கிளைகள் இயங்குகின்றன. அவுஸ்திரேலியா ஒருங்கிணைப்புக் கிளையாகச் செயற்படுகின்றது.

தாயகத்தில் இன்னற்படும் மக்களின் துயர்துடைப்புச் செயற்பாடுகளிற்காக இவ்வமைப்புகள் 1990-2000 வரை 450 மில்லியன் ரூபா நிதியினை புலம்பெயர்ந்து வாழும் மக்களிடமும், சில மனிதாபிமான அமைப்புகளிடமும் பெற்றுத் தந்துள்ளன.

இத்தகைய அரும் பணியினால் சிங்கள அரசின் திட்டமிட்ட யுத்த நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்த பல இலட்சம் மக்களிற்கு (வடக்கு கிழக்கில்) நிவாரண, புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொண்டு பாதுகாக்க முடிந்தது.

மேலும் இடம்பெயர்ந்து வந்ததில் இருந்து அவர்கட்கான இருப்பிட வசதி, நிவாரணம், தொழிற்துறை வசதிகளை ஏற்படுத்தியும், அவர்களது வாழ்வை புதுப்பித்தமை போன்ற செயற்பாடுகளுக்கு இவ்வெளிநாட்டுக் கிளைகள் செய்த உதவியே பயனளித்தது எனலாம்.

இந்த ஆண்டும் 150 மில்லியன் ரூபா நிதியின் கீழ் வன்னியில் வேலைத் திட்டங்கள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

## இடிவிழுந்தபோது தோள் கொடுத்த கழகம்

தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் மிகப்பெரிய துயர்களாக விளங்குவன 1983 யூலை கலவரம், 1990 தென்தமிழீழ இடப்பெயர்வு, 1995 யாழ் இடப்பெயர்வு (Jaffna Migration), இதில் தென் தமிழீழ இடப்பெயர்வுகளையும், அடுத்ததாக உலகத்தினையும் ஒருமுறை உசுப்பிவிட்ட யாழ்ப்பாண இடப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர்வுகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் எதுவித உதவியும் இன்றி தனித்துத் தோள் கொடுத்தது. எனது மக்களை பிறரிடம் சரணடையாது, கையேந்தாது அவர்களின் தன்மானத்தைப் பேணி சகல வழிகளிலும் செயற்பட்டது என்பதனை யாரும் மறுப்பதற்கு இல்லை.

உலகமும், சிங்கள அரசும், தமிழ் மக்களை உணவிற்காகவும், இருப்பிடத்திற்காகவும் சரணடைவார்கள் என எண்ணிக் கொண்டிருக்கையில் இக்கழகம் சுமார் ஆறு இலட்சம் மக்களிற்கு உணவு, இருப்பிடவசதி, குடிநீர் வசதி அனைத்தையும் வழங்கி, அவர்கள் புதிய வாழ்வு தொடரும் வரை பராமரித்து வந்தது.

இதன் மூலம் வன்னியில் இவர்களிற்கென அமைக்கப்பட்ட குடியிருப்புகளைப் பங்காளி நிறுவனங்களூடாகப் பராமரித்து வருகிறது.

இவ்வாறாக தமிழ் மக்களின் துன்ப துயரங்களில் இரண்டறக் கலந்து அவர்களுக்குத் தேவையானபோது தேவையான உதவிகளை வழங்கி ஓர் உயிர் காக்கும் நண்பனாகவும், உதவும் கரங்களாகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இயங்குகின்றது.

தாயகத்தில் மக்களிற்கு எத்தகைய இடர்வரினும் அதனைத் துணிச்சலுடன் எதிர்கொள்ள ஆளணி, அனுபவம் மற்றும் பௌதீக வளம், ஏனைய அமைப்புக்களுடனான தொடர்பு ஆகியவை கழகத்திடம் இருக்கின்றன.

## துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டம்

யாழ்ப்பாண மாவட்டம், தென் தமிழீழம் ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் ஒருபுறமும், வன்னியில் ஏற்கனவே அடிப்படை வசதிகள் இன்றி வசித்து வரும் மக்கள் இன்னொரு புறமாக, வன்னிப் பெருநிலப்பரப்பு ஓர் இருள் சூழ்ந்த பிரதேசமாக மக்கள் வாழ்வதற்கு நம்பிக்கையற்ற பிரதேசமாக இருப்பதினை உணர்ந்து, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் துரித புனர்வாழ்வு அபிவிருத்திச் சேவைத் திட்டத்தினை 1996இல் அறிமுகம் செய்தது.

இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிக்கு இது பின்னர் விஸ்தரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. 100 மில்லியன் ரூபா திட்டத்தில் கல்வி, போசாக்கு, சிறுவர்நலன், சுகாதாரம், தொழிற்பயிற்சி, இருப்பிடவசதி, குடிநீர், வருமான அதிகரிப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் போன்றவற்றை இத்திட்டத்தினுள் அடக்கிச் செயற் படுத்தியது கழகம்.

150ற்கு மேற்பட்ட வகையில் திட்டங்களை அரசு, அரசுசாரா துறைசார் நிபுணர்களின் ஆலோசனையின் கீழ் துரித புனர்வாழ்வு வேலைத்திட்டம் என்று அமைத்தது. இத்திட்டத்தினைச் செயற் படுத்துவதற்கான உள்ளூர் நிறுவனங்கள் 80ற்கு மேற்பட்டவை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பங்காளி நிறுவனங்களாக இணைத்துக்கொள்ளப்பட்டன.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஒரு இலட்சத்திற்கு அதிகமான குடும்பங்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றன என்பது குறிப்பிடத் தக்கது.

மேலும் இத்திட்டத்தினுள் வலுவிழந்தோர், முதியோர், பெண்கள் ஆகிய சமூகத்தில் கவனிக்கப்பட வேண்டிய பிரிவினரும் உள்ளடக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## சிறுவர் நலன் பாதுகாப்புத் திட்டங்கள்

வடக்கு, கிழக்கு பகுதிகளில் யுத்தத்தினால் சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாக இருந்து வருவது அனைத்து மனிதாபிமான அமைப்புக்களின் கண்களிலும் பட்ட விடயம்.

எனினும், இவ்விடயத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகம் வெறும் கருத்து ரீதியாகவும் எழுத்து வடிவிலும் இருக்காது நேரடியாகச் செயற்பாட்டு வடிவில் இறங்கி வருகிறது. 1990ஆம் ஆண்டிலிருந்து சிறுவர் போசாக்குப் பராமரிப்புப் பூங்கா, போசாக்கு புனர்வாழ்வு நிலையம், சிறுவர் பாதுகாப்பு இல்லங்கள், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை நிறுவிச் செயற்படுத்தி வருகிறது. கடந்த 10 ஆண்டுகளில் 10 இலட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் நேரடியாகப் பயன்பெற்றுள்ளார்கள்.

தற்போதைய யுத்தத்தினால் தமது பெற்றோரினை, பாதுகாப்புகளை இழந்த 1074 சிறுவர்களை சிறுவர் பாதுகாப்பு இல்லத்தில் வைத்துப் பராமரித்து வருகிறது கழகம். மேலும் கடந்த இரு ஆண்டுகளிலும் வன்னிப் பகுதியில் சிறுவர் போசாக்குத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய், சேய் நலம்

திட்டத்தினையும் என்றுமில்லாதவாறு கூரிய வினைத்திறனுடன் செயற்படுத்தி வருகின்றது.

இதில் 'பள்ளிச் சிறுவர் பட்டினிச் சாவு தவிர்ப்புத்திட்டம்' முதன்மையானது. வெரித்தாஸ் தமிழ்ப்பணி சேவையின் நிதியுதவி யுடன் இது செயற்படுகிறது.

இத்திட்டத்தினால் பட்டினியால் வாடிய 10,000க்கு மேற்பட்ட சிறுவர்கள் உயிரிழப்பிலிருந்தும் வலுவிழந்தோராக்கப் படுவதி லிருந்தும் காப்பாற்றப்பட்டமையினை ஒரு சாதனையாகவே கருதுகிறோம்.

மேலும் போசாக்குக் குறைபாட்டினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், பாலூட்டும் தாய்மார், கர்ப்பிணிகள் ஆகியோர் பராமரிக்கப்படும் தாய்சேய் போசாக்கு புனர்வாழ்வுப் பூங்கா மூன்று புதிதாக அமைக்கப்பட்டது இத்திட்டத்திற்கு மேலும் வலு வூட்டுவதாக அமைகிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது பணிகளை மேலும் விரிவடையச் செய்து சில விசேட வேலைத் திட்டங்களையும் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் சிங்கள இராணுவத் திடமிருந்து பெருமளவு நிலப்பகுதிகள் மீட்கப்பட்டமையே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வகையில் மீட்கப்பட்ட இடங்களில் மக்களைக் குடியேற்றுவதற்கான மீள்குடியேற்ற நடவடிக்கைகள், மீட்கப்பட்ட பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகள், அது பற்றி விழிப்புணர்வு, சிங்கள அரசின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கைவிடப்பட்ட பாரிய நீர்ப்பாசனக் குளங்களை புனரமைத்தல், ஏற்கெனவே சிங்கள அரசின் நிதி ஒதுக்கீட்டில் திட்டமிடப்பட்ட வெட்டினால் கைவிடப்பட்ட பாரிய நீர்ப்பாசனக் குளங்களைப் புனரமைத்தல் ஆகிய புதிய பணிகளுடன் சிறுவர், வலுவிழந்தோர் ஆகியோர்களுக்கான திட்டங்களில் மேலும் பல அபிவிருத்தியினைத் திட்டமிட்டு செயற்படுத்தி வருகிறோம்.

அத்துடன் யுத்தம் நடைபெறும் இடங்களில் சிக்கியுள்ள மக்களை அங்கு சென்று மீட்டு வந்து அவர்களுக்கு நிவாரணம், புனர்வாழ்வு வசதிகளையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்திச் செயற்படுத்தி வருகின்றது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்காட்சியும் கண்ணீரும்

**நா**ன் அங்கு வந்திருக்கும் செய்தியும், கண்காட்சி நடைபெற இருக்கும் செய்தியும் நண்பர்கள் வழியாக பலருக்கும் தெரிந்து, ஒரு பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதற்குக் காரணமும் இருந்தது. மக்களின் பார்வைக்காக ஓவியங்களை காட்சிப் படுத்துவது என்பது இவ்வளவு பரந்த அளவில் இதுதான் முதல் முறை. அதுமட்டுமல்லாமல் நம் ஓவியங்களைப் பற்றியும் என்னைப் பற்றியும் ஏற்கெனவே இருந்த புரிதல்களும் ஒரு காரணம்.

ஒரு சில விபரம் புரிந்த கலை இலக்கிய அரசியல் செயற் பாட்டாளர்கள், 'உங்களின் ஓவியம் நவீன பாணியைச் சார்ந்தது. எவ்வாறு மக்களால் உள்வாங்கப்படும் என்று ஒரு சந்தேகம் இருக்கிறது' என்று என்னிடமே சொன்னார்கள்.

நான் சொன்னேன் "என் ஓவியங்கள் தமிழகத்திலும் உலகின் பல்வேறு இடங்களிலும் முழுமையாக உள்வாங்கப் பட்டிருக் கின்றன. நிச்சயம் இந்த மண்ணில் இன்னும் கூடுதலாக உள்வாங்கப் படும்" என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. தமிழகத்தில் பல்வேறு இடங்களில், எண்பதுகளின் இறுதியிலும், தொண்ணூறுகளின் தொடக்கத்திலும், இதே ஈழப்போராட்ட ஓவியங்களையும், **'எரியும் வண்ணங்களில்'** உள்ள வேறுசில சமூக சிந்தனையுள்ள ஓவியங்களையும் காட்சிக்கு வைக்கப்பட்ட போது எவ்வாறு மக்கள் மத்தியில் வரவேற்பு இருந்தது என்பதும், அதேபோல் **'உறங்கா நிறங்கள்'** தமிழகம் மட்டுமல்லாமல், மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா, கனடா மற்றும் அய்ரோப்பிய நாடுகளில் நடைபெற்ற போது எவ்வாறு அவைகளை உள்வாங்கினார்கள் என்பதும், அதோடு மட்டுமல்லாமல், **'எரியும் வண்ணங்கள்'**, **'உறங்கா நிறங்கள்'** இரண்டிலும் உள்ள ஈழப்போராட்ட ஓவியங்களை தனியாகத் தொகுத்து **'புயலின் நிறங்கள்'** என்று ஆஸ்திரேலியாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தியபோது அதற்கு அந்நாட்டில் வாழ்கின்ற தமிழ்மக்கள் மத்தியில் எவ்வளவு வரவேற்பு இருந்தது என்பதை அனுபவத்தால் உணர்ந்தவன் என்ற அடிப்படையிலேயே ஈழ மண்ணில் இன்னும் கூடுதலாக உள்வாங்கப்படும் என்று நம்பினேன். அதையே சொன்னேன்.

கிட்டத்தட்ட 40 நாட்கள், தமிழீழத்தில் 15 இடங்களில் காட்சிப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்கின்ற நிலையில் கலை இலக்கிய நண்பர்கள் மத்தியில் எதிர்பார்ப்பையும், விவாதத்தையும் ஏற்படுத்தியிருந்த அவ்வேளையில், அனைத்துப் பத்திரிகைகளிலும், பல்வேறு இடங்களில் க்ண்காட்சி நடைபெற இருப்பது குறித்து செய்திகள் வெளிவந்தன. மக்கள் மத்தியிலும் எதிர்பார்ப்பு கூடியது.

மே 18, 2005 என் வாழ்நாளில் மறக்கமுடியாத மற்றொரு நாள். அன்றுதான் '**புயலின் நிறங்கள்**' ஓவியக் காட்சி அம்மண்ணில் தொடங்கிய நாள். சரியாக காலை 10.00மணிக்கு ஓவியக்காட்சி தொடங்கியது. ஓவியக்காட்சியை கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். தொடக்க நிகழ்வுக்கு ஏராளமான பொதுமக்கள், பள்ளி மாணவ-மாணவியர்கள், போராளிகள், விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் என்று பலதரப்பினரும் கலந்து கொண்டனர். மிகவும் எழுச்சியாக ஓவியக் காட்சித் தொடங்கியது. காட்சி தொடங்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிது நேரத்திற்குள்ளாகவே காட்சி வெற்றிபெற்றுவிட்டது என்று எனக்கு தெரிந்துவிட்டது. ஓவியங்கள், மக்களோடும் மக்கள் ஓவியங்களோடும் உரையாடல் தொடங்கிவிட்டதை அவதானித்தேன். எவ்வாறு மக்கள் ஓவியங்களை உள்வாங்குகிறார்கள் என்பதை கவனித்தேன். ஓவியங்களை எவ்வாறு பார்ப்பது, எவ்வளவு தூர இடைவெளியில் நின்று பார்ப்பது என்பது குறித்து ஒரு தெளிவை ஏற்படுத்தி, வழிநடத்தவும் வேண்டியிருந்தது. ஏனென்றால், அம்மக்கள் இதற்கு முன்பு இது போன்ற ஓவியக்காட்சிகளை பார்த்துப் பழகியவர்கள் இல்லை.

பலர் திரும்பத் திரும்ப ஓவியங்களைப் பார்த்தார்கள். தங்களுக்குள்ளேயே அழுது கொண்டிருந்தார்கள். என்கையைப் பிடித்துக் கொண்டும் அழுதார்கள். எப்படி உங்களால் எங்களையும் எங்கள் போராட்டத்தையும் எங்கள் துயரங்களையும் எங்கள் மண்ணையும் தமிழகத்தில் இருந்து கொண்டு உள்வாங்க முடிந்தது என்று வினவினார்கள்.


கடந்த இருபத்தைந்து ஆண்டுக்காலம் அம்மக்கள் அனுபவித்த இன்னல்கள் வார்த்தைகளால் சொல்லமுடியாதவை. ஒவ்வொரு ஓவியமும், மக்கள் ஒவ்வொருவரின் மனதின் ஆழத்தில் புதைத்து வைத்திருந்த உணர்வுகளைக் கீறி, விம்மல்களாகவும், அழுகைகளாகவும், வெளிப்பட வைத்தது. ஏதோ ஒரு ஓவியத்தோடு ஒருவர் தொடர்புடையவராகவும் அவ்வோவியம் சொல்லும் துன்பத்தை அனுபவித்தவராகவும் இருந்தார்கள்.

40-50 வயதைக் கடந்தவர்கள் “நாங்கள் அனுபவித்த துன்பங்களை, துயரங்களை இவ்வோவியங்கள் மீண்டும் நினைவுப் படுத்துகின்றன என்றார்கள். 15 வயதிற்கு மேற்பட்ட இளம் வயதினர், சிலவற்றை நாங்கள் அனுபவித்திருக்கிறோம் சிலவற்றை கதையாக கேட்டிருக்கிறோம் அவற்றை ஓவியங்களில் பார்க்கிறோம்” என்றார்கள்.

இப்படி பல்வேறு தரப்பினரும் உள்வாங்கிக் கொண்டார்கள்.

ஓவியங்களைப் பார்த்து அரங்கை விட்டு வெளியே செல்லும் போது மக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்வதற்காக பதிவேடு வைத்திருந்தோம். எங்கு நடந்தாலும் இப்படிப் பதிவேடு வைப்பது வழக்கம். தமிழகத்திலும் வைத்திருக்கிறேன். தமிழகத்தில் ஓவியங்களை பார்த்த மக்களிடம் வலியுறுத்தி எழுதச் சொன்ன பிறகும் எழுதாமல் சென்றவர்கள்தான் அதிகம். அந்த அளவு கூச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அல்லது தாழ்வு மனப்பான்மை. ஆனால் ஈழத்தில் வரிசையாய் நின்று காத்திருந்து தங்களது கருத்துக்களைக் கொட்டித் தீர்த்தார்கள்.

முதல்நாள் 5000க்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிட்டு முடித்த நிலையில் இரவு எட்டுமணிக்கு புலிகளின் குரல் வானொலியில், தொடக்க நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய க.வே.பாலகுமாரன் அவர்களின் உரை ஒலிபரப்பாகியது. அதற்கு முன்னதாக செய்தியில் காட்சி பற்றியும், அது மக்கள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்ற தாக்கத்தைப் பற்றியும் சொன்னார்கள். இவை இரண்டும் இனிவரும் நாட்களில் நடைபெறும் இடங்களில் பெரிய விளைவை தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எண்ணினேன்.

அடுத்த நாள் அனைத்து செய்தித் தாள்களிலும் க.வே.பாலகுமாரன் அவர்களின் உரையை வெளியிட்டிருந்தார்கள்.

## ஓவியர் புகழேந்தியை அவரது ஓவியங்கள் ஊடாக எமது மண்ணில் உள்வாங்கிக் கொள்கிறோம்

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே மீள் சந்திப்பு நாளாக, ஒரு மீள் எழுச்சி நாளாக, அன்பினைப் பகிர்ந்து கொள்ளக் கூடிய நாளாக இந்நாள் அமைகிறது.

தமிழ்நாட்டிலே நாம் தங்கியிருந்த நாட்களில் தமிழ் நாடே எமது முன்னணிக் களமாக இருந்த நாட்களில்- தமிழ் இனமான உணர்வில் ஒன்றுபட்டு, விடுதலைப் போராட்டத்தின் வீச்சின் பால் ஒன்றுபட்டு, சர்வதேச மனித நேய அடிப்படையில் ஒன்றுபட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று உருவான தோற்றப்பாட்டின் வெளிப்பாடாக இன்று இச்சந்திப்பு நடக்கிறது.

புகழேந்தி எமது மண்ணில் இருந்திருந்தால் போராளியாக இருந்திருப்பார். தமிழ் நாட்டிலே ஓவியப் போராளியாக உள்ளார். எங்கள் மனங்களிலே கனன்றுகொண்டிருக்கும் விடுதலைத் தீ புகழேந்தியின் மனத்திலும் பற்றி எரிந்து கொண்டிருக்கின்றது. தமிழ் நாட்டவரும் தமிழீழ நாட்டவரும் ஒருவருக்கொருவர் இணைப் போடு, பற்றோடு, நன்றியறிதலோடு கொள்ளக்கூடிய ஒரு சம்பவத்தின் வெளிப்பாடாக இந்நாள் அமைவதாக எண்ணி மகிழ்வடைகிறோம்.

நண்பர் புகழேந்தியை எமது மண்ணிலே உள்வாங்கிக் கொள்கிறோம். அவருடைய ஓவியங்கள் ஊடாக அவரை உள்வாங்கு கிறோம்.

கியூபா விடுதலை பெற்றதன் பின்னர் கியூபாவின் முதல் குடிமகனாக சேகுவராவை வைத்துக் கொண்டார்கள். அதேபோல் தமிழீழத்திலே ஒரு நாளைக்கு புகழேந்தியை வைத்துக்கொள்ளக் கூடிய நம்பிக்கை எனக்கிருக்கிறது. அந்த நம்பிக்கையின் எழுச்சியாக இந்நாளைக் கருதுகிறோம்.

தனது ஓவியங்களை உலகமெலாம் கொண்டு சென்று காட்சிப்படுத்தியவர், எமது மண்ணிலேயும் தனது ஓவியங்களை காட்சிப்படுத்தியுள்ளார். போராட்டம் நடக்கும் மண்ணிலே எழுச்சி உருவாக்கும் வகையில் அவருடைய ஓவியங்களைக் காட்சிப் படுத்தியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழேந்தியின் ஓவியங்கள் கடுமையானவை அல்ல. சாதாரண மக்களும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் வரையப் பட்டுள்ளன. அதேவேளை- அவரது ஓவியங்கள் எளிமையானவை யல்ல. பொருட்கள் பல பொதிந்தவை அவை. நிகழ்காலத்தையும் எதிர்காலத்தையும் பிரதிபலிக்கக்கூடியதாக அவரது ஓவியங்கள் அமைந்துள்ளன”

இரண்டாம் நாள் கூட்டம் அதிகமாகவே வந்தது. இரண்டாம் நாளோடு காட்சி முடிவடைவதாக இருந்தது. அனைவருடைய வேண்டுகோளுக்கிணங்க மூன்றாம் நாளும் நீட்டிக்கப்பட்டது.

இந்த மூன்று நாட்களிலும் பல்வேறு இதழ்களிலிருந்து வந்த பத்திரிகையாளர்கள் என்னிடம் மிக நீண்ட நேர்காணல்களை கண்டார்கள். அதேபோல் வானொலி, தொலைக்காட்சிகள் போன்றவற்றிலும் என்னுடைய நேர்காணல்களை ஒலி(ளி) பரப்பினார்கள்.

இந்த மூன்று நாட்களிலும் ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்திருக்கிறேன். பெரும்பாலானவர்களோடு கலந்துரையாடி இருக்கின்றேன். மக்கள் மிகவும் வெளிப்படையாக இருக்கிறார்கள். “நாங்கள் எங்கே அநாதையாகி விட்டோமோ என்று எண்ணி யிருந்தோம், தமிழக மக்கள் எங்களுக்கு ஆதரவாக குரல் கொடுக்கவில்லையே என்ற ஏக்கம் எங்களுக்கு இருந்தது. உங்கள் வருகையும் உங்கள் ஓவியமும் அதைப் பொய்யாக்கி விட்டன. எங்களுக்காக குரல் கொடுக்க தமிழகத்தில் ஆட்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையையும் விதைத்திருக்கிறது. எங்கள் மண் உங்களுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறது” என்று சொன்னார்கள். இது உதட்டிலிருந்து வந்த வார்த்தையல்ல. மனதின் அடி ஆழத்திலிருந்து வந்த உணர்வின் வெளிப்பாடுகள்.

தாய்த் தமிழகத்தின் அரவணைப்பை ஈழத் தமிழ் மக்கள் எந்த அளவு எதிர்பார்க்கிறார்கள் என்ற அவர்களின் உணர்ச்சியின் ஆழத்தைப் புரிந்து கொண்டேன்.

கிளிநொச்சியில் மக்கள் பதிவு செய்த கருத்துகள்:

■ ஓவியங்கள் உணர்வுகளுடன் ஒன்றித்துவிடுகின்றன. தலைவனின் ஓவியம் நேரில் உயிர்த்துடிப்புள்ள தலைவனைப் பார்ப்பது போன்ற உன்னதமான உணர்வையும் நேரிலே பார்த்திராத திலீபனை ஓவியர் வரைந்தது அற்புதத்திலும் அற்புதம்.

*- கப்புதுஅம்பி, திருவையாறு, கிளிநொச்சி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கடந்த கால வாழ்க்கையில் நாம் அனுபவித்ததை நேரில் காணாமலேயே உணர்ந்து ஓவியமாக வடித்த ஓவியரே ஓவியம் பாராட்டத்தக்க வகையில் அமைந்தது. முதலில் பார்க்கும் போது உடனே புரிந்து கொள்ள முடியாத கருத்துகள். மீண்டும் பார்க்கத் தூண்டியது. மீண்டும் பார்த்தபோது எம் கடந்த கால வாழ்க்கையை ஞாபகப்படுத்தியது.

*-கிளிநொச்சி, மத்திய கல்லூரி*

■ எமது மண்ணில் வாழ்ந்த, வாழ்கின்ற மக்கள் அனுபவித்த துன்ப துயரங்களும் இன்னல்களும் சொல்லிலடங்காதவை. எனவே ஓவியத்தில் வடித்தெடுப்பது என்பது நான் நினைப்பது போன்று சாதாரண விடயமல்ல. அதற்கும் மேலாக ஓவியர் புகழேந்தி இந்திய நாட்டிலிருந்து எமது நாட்டையும் மக்களையும் எவ்வளவு ஆழமாக நேசித்துள்ளார் என்பது தெரிய வருகின்றது.

*-செல்வி எழில்*

■ எனது வாழ்வில் என்றும் காணாத உணர்வைத் தட்டியெழுப்புகின்ற அற்புத ஓவியங்களாக இருந்தன. இவை அப்பட்டமாக தமிழர்கள் அடைந்த கொடுமைகளை எடுத்துக் காட்டுகின்றன.

*-கா.பிரியதர்சினி, கிளிநொச்சி*

■ தமிழீழத்தின் தலைமகன் தொட்டு கடைசிக் குடிமகன் வரையும், துன்பங்களின் தொடக்கம் முதல் இன்பங்களின் முடிவு வரைக்கும் எதார்த்த பூர்வமான ஓவியங்களைச் சமைத்திருக்கிறார்.

*-சிவசக்திக்குமார், கிளிநொச்சி*

■ உங்கள் ஓவியப் படைப்புகள் அத்தனையும் நான் சத்தமின்றிப் பார்த்து அழுதேன். ஒவ்வொன்றும் உண்மையானவை.

*-தா.பிரபு, கிளிநொச்சி*

■ பதுங்கு குழி, யாழ் வெளியேற்றம், திலீபன், வெளிச்சம், ஆகிய ஓவியங்கள் உணர்வினை தத்ரூபமாக வெளிக்காட்டுகின்றன.

*-பு.தட்சிணாமூர்த்தி, கிளிநொச்சி*

■ பெண்ணின் சிதைவுகள் எங்கள் இடத்தில் கண்டவை (திருமலை) . திலீபன் அண்ணாவின் ஓவியம் அற்புதம். அதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதனை வெளிப்பாடு உணரமுடிகிறது. யாழ் வெளியேற்றம் மீண்டும் மீண்டும் எம்மைச் சிந்திக்க வைக்கிறது.

*-தே.ரமணன், கிளிநொச்சி*

■ உண்மையில் எமதும் எங்களது தேசத்து மக்களினது சகல அம்சங்களையும் தமிழ் நாட்டில் இருந்து ஓவியமாக வரைந்த எமது மதிப்பிற்குரிய புகழேந்தி படைப்புகள் யாவும் மிகவும் அற்புதமானதும் அலசி ஆராய வேண்டியதாகவும் எமது விடுதலையை வென்றெடுக்க அவரது தூரிகையும் அழுத்தத்தைக் கொடுத்துள்ளது.

*-வே.பிரதீபன், வித்தியாபுரம், ஒட்டு சுட்டான், முல்லைத் தீவு*

■ ஈழத்தின் இதயத்தினை ஓவியத்தினால் வெளிப் படுத்தியுள்ளார். ஈழமக்களின் வேதனை வரிகளை தன் ஓவியத்தினால் உயிர்ப்பித்துள்ளார்.

*-தமிழினி, செஞ்சோலை*

■ ஓவியம் பேசும் என்பார்கள். இங்கே ஓவியம் பேசுவதுடன் நிற்கவில்லை. ஏதோ ஒரு தூண்டலின் கருவியாகிறது.

*-நா.யோகேந்திரநாதன், புலிகளின் குரல்*

■ ஓவியத்தைப் பார்த்து ரசிப்பதோடு சரி, என்றிருந்த எம் மனதுக்குள் உங்கள் ஓவியம் தந்த உணர்வு எதையோ தூண்டியது போன்ற, இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும் என்ற தூண்டலையும் துணிவையும் பிறப்பிப்பதாயமைகின்றது.

*-யே.வித்தகி, நவம் அறிவுக் கூடம்*

■ எமது மண்ணிலே குருதி கொப்பளிக்கிறது. மனச்சாட்சி மரணிக்க உலகம் எம்மைப் புரிந்து கொள்ள மறுக்கிறது. அரவணைக்க வேண்டிய அன்னை பாரதம் எம்மை அகிம்சை வழிவந்து கொலை புரிந்து குவித்தது. கவலையில்லை. உங்களைப் போல் மனிதமுள்ள மனிதர்களின் இதயத்தில் ஈழத்தமிழரின் நினைவுகள் இருப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம். எதைக் கொடுத்தும் எமது உரிமை மீட்போம். இறுதிவரை எங்களுடன் இணைந்திருங்கள்.

*-சி.சக்திரதன், கிளிநொச்சி*

■ உயிருள்ள ஓவியங்கள் காலத்தால் அழியாதவை. காலத்தின் சுவடுகள் கருத்தோவியமாக வடிப்பது கடினமானது. எனினும் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழேந்தி அவற்றை தத்ரூபமாக வடித்துள்ளார். சில ஓவியங்கள் நெஞ்சை அள்ளுகின்றன. முக்கியமாக, பெண்களின் மார்புகளை வெட்டி அழகுபார்க்கும் கோரத்தனம், சித்திரவதை, மனிதனின் கண்களை மனிதனே தோண்டுகின்றான். மறக்கமுடியாதவை.

*-க.மத்தியாஸ்,வடக்கு மனித உரிமைகள் செயலகம், கிளிநொச்சி*

■ ஈழத்தின் வண்ணத்தில் கலந்த இந்த ஓவியங்கள் ஆயிரம் கதைகளை, ஆயிரமாயிரம் காலப்பதிவுகளை என்னுடன் மீட்டமைத்து என்னை உறையவைத்தன. எனினும் ஒவ்வொரு ஓவியத்துள்ளும் பலநூறு அர்த்தங்கள் தொனிக்கிறது. ஒவ்வொரு ஓவியங்களின் சுற்றுக்கட்டு வெட்டு முகங்கள் அபாரம்.

*-தமிழ்க்கவி*

■ காலமறிந்து கருவை விதைத்துள்ளீர்கள். முதற்கண் இந்தமண் தலைசாய்க்கும்- அதில் தானும் ஒருத்தியாய்.ஒவ்வொரு ஓவியமும் நடந்து முடிந்த ஒவ்வொரு வரலாற்றுப் பதிவையும் மீட்டிப் பார்க்க வைத்துள்ளது. தமிழனின் வீரம், தியாகம், மானம், இலட்சியம், அசையாத நம்பிக்கை, விடுதலையின் வேட்கை என்பவை அத்தனையும் அற்புதமாய்ப் பொதிந்துள்ளது.

*-வன்னி மகள்*

■ எங்கள் தமிழீழ மண்ணின் ஒவ்வொரு அடி மண்ணிலும் உயிர் இருக்கிறது. அந்த உயிரின் அசைவு போராளிகளாகிய எங்களை தாங்கும் பேசும் எங்களோடு இரண்டறக் கலக்கும் அந்த அசைவை உறவை உங்களின் ஓவியங்களில் புரிந்து கொள்கிறோம். போராளியின் இறுதி நேரங்கள் பற்றிய உங்களின் ஓவியம் தியாகி திலீபன் அண்ணனின் இறுதிக் காலங்கள். உயிரான எம் தலைவனின் உயிரோட்டமான கம்பீரம் எம்மை அசைய விடாமல் அதனுள் ஈர்க்கிறது. கடல் எம்மைப் பிரித்தாலும் உணர்வால் ஒன்றான உறவே நீங்களும் ஒரு போராளிதான்.

*-தமிழினி*

■ ஓவியமானது இரசிப்பவனுக்கு பல உணர்வுகளை வெளிக்காட்டக் கூடியது. அந்த வகையில் இவ்ஓவியரது படைப்புகள் எமது இன்ப துன்பம், விடுதலை, அடக்குமுறை என்பவற்றை மிகவும் கருத்தாழம் மிக்கவகையில் வரைந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்கது. இவருடைய ஓவிய ரீதியான பார்வை எமது போராட்டத்தின் நியாயப்பாட்டை உலகுக்கு எடுத்துக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டும் விதமாக வரைந்துள்ளமை ஓவியர் புகழேந்தி அண்ணாவின் எமது போராட்டத்தின் மீது வைத்துள்ள விசுவாசத்தை எந்த ஈழத்தமிழனும் மறக்கமுடியாது.

*-சு.பிரபாகரன், கொடிகாமம்*

■ தேச விடுதலையின் பாதையில்- உங்களின் கைவண்ணம் ஒரு மைல்கல். ஒவ்வொரு ஓவியமும் மௌனமாய் நம்முடன் பேசுகின்றன. நீங்கள் ஆயுதம் தரிக்காத- ஒரு போராளி.

*-வ.முரளிதரன்*

■ உங்கள் ஒவ்வொரு ஓவியமும் எங்கள் கடந்துபோன நினைவுகளை மீட்டு எமக்கு ஒரு கிளர்ச்சியை கிளறிவிட்டு விட்டீர்கள். சில ஓவியங்களைப் பார்க்கும்போது மனதில் குமுறல் உண்டாகிவிட்டது. தெரியாத உணர்வுகளைக் கூட தொடும் அளவுக்கு இருந்தது.

*-எஸ்.மஞ்சரி*

■ உங்கள் ஆக்கங்கள் வர்ணச் சேர்க்கையில் விளைந்த ஓவியங்கள் அல்ல! உங்கள் தூரிகைகள் பட்டு காகிதங்கள் உயிர் பெற்று நிற்கின்றன. அவை பேசுகின்றன. ஓலமிடுகின்றன. நீதி கேட்கின்றன. ஆர்ப்பரிக்கின்றன. தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு உங்கள் ஓவியத் தூரிகைகள் ஓவிய பீரங்கிகளே!

*- இளந்திரையன், யாழ் பல்கலைக்கழகம்*

■ ஓவியத்தைப் பார்க்க வந்தேன், அதைக் காணவில்லை. இனம் புரியாத உணர்வுகளைச் சுமந்து செல்கிறேன்

*-புதுவை அன்பன், தமிழீழம்*

■ புகழேந்தி வடித்த ஒவ்வொரு ஓவியமும் எம் தமிழ் இனத்தின் பழமையைச் சாகவிடாது

*-பா. புவனப்பிரியா, வி.கௌரி*

■ தமிழர்களின் இதயம் பிழிந்த சோகச் சாற்றின் துளிகளே... இவரின் ஓவியங்களில் மையாய்க் கசிவதைக் காணமுடிகிறது. முட்டை பிளந்ததும், திலீபன் மிளிர்வதும் விதையொன்றுக்குச் சிறகு முளைப்பதும்... இதயத்தைத் தொட்டவை.

*-பே.பாகீரதி*

■ பதுங்கு குழி பற்றிய ஓவியங்கள் பல வினாக்களை எழுப்பின. அதே நினைவு- அந்தப் பீதி நிறைந்த கண்கள், எமது மண்ணில் கால் பதிக்கு முன்னரே எப்படி மனக் கண்ணால் காணமுடிகிறது? பிரமிப்புதான்!

*-காக்கா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ நாம் பட்ட துன்பங்களையெல்லாம் இரத்தமும் சதையுமான வெளிப்பாட்டுடன் காட்டுவது இவ்ஓவியங்கள். நின்று நிலைத்துப் பார்க்கும் போது சித்திரவதை ஓவியங்களில் முனகலும், துர்நாற்றமும் வீசுவது போலுள்ளது மனசுக்கு. ஓர் இந்திய ஓவியன் புகழேந்தி எங்கள் துயரங்களை மனதில் ஏந்தி நிற்கிறார்.

*-அ.விஜயன், மல்லாவி, யோகபுரம்*

■ மீண்டும் ஒருமுறை எங்களுக்கு நேர்ந்த அவலங்களை அனுபவித்தேன். இத்தனை குரூர அனுபவ உணர்வுகளை எப்படித் தாங்கிக் கொண்டோம், என்று யோசித்த பொழுது விடியலின் ஒளி நம்பிக்கையாய் தெரிந்ததால்தான் என்ற உண்மையை இவ் ஓவியங்கள் பதிலாய்த் தந்தன. அபாரம். நிஜங்கள்.

*-அருட்திரு ம.சே. கருணா ரத்தினம்,*

*தலைவர், மனித உரிமைகள் வடகிழக்குச் செயலகம்*

■ எங்களையும் எங்கள் மண்ணையும் நாங்கள் உணர வைத்திருக்கிறீர்கள். எங்கள் வருங்கால சந்ததி எதை எதை எல்லாம் மறக்கக் கூடாதோ அதையெல்லாம் சுட்டிக்காட்டியுள்ளீர்கள்.

*-ஆதிலட்சுமிசிவகுமார்*

■ மதிப்பிற்குரிய வரலாற்றுக் கலைஞனே உங்கள் ஓவியங்கள் அனைத்தும் எம்மனதைக் கவர்ந்துள்ளது. கடந்த காலங்களில்நடந்த உண்மைச் சம்பவங்களை என்றுமே மக்கள் மறக்காதிருப்பதற்காக உங்களைப் போன்ற சிறந்த கலைஞர்களின் கலைப்படைப்புகள் நிச்சயம் வெளிக்கொணரப்படவேண்டியவைஆகும். இவ்வாறான கண்காட்சிகளை மீண்டும் மீண்டும் வைத்து மக்களை என்றுமே உண்மை மறவா உணர்வுகளுடன் வாழச் செய்யுங்கள். ஒரு கலைஞனுக்குரிய கற்பனை அனுபவம் திறன் உத்திநுட்பம் போன்றவற்றை உங்கள் கலைப்படைப்பில் அதிகமாக காணக்கூடியதாக உள்ளது.

*-வி.விஜிதா, யாழ் பல்கலைக்கழகம்*

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அமைதிப்படையும் அழியா வடுக்களும்

வழக்கமாக இரவு ஏழு மணிக்கெல்லாம் ஊரடங்கிப்போய் விடுகிறது. அதிகபட்சம் எட்டுமணி. அதன்பிறகு சாலையில் ஒருவரைக் காண்பது அறிது. இரவு நேரங்களில் கூட பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிற சென்னை போன்ற நகரங்களில் இருந்துவிட்டு, அங்கு செல்கின்றவர்களுக்கு சற்று கடினமாகத்தான் இருக்கிறது. அவர்களிடம் கேட்டேன். அவர்கள் சொன்னார்கள். எங்களுக்குப் பழகிவிட்டது. இன்று நேற்றல்ல இருபத்தைந்து ஆண்டுகளாக இதுதான் வாழ்க்கை. மின்சாரம் என்பதையே இந்த இரண்டு ஆண்டுகளாகத்தான் பார்க்கிறோம். அதுவும் நெடுஞ் சாலைக்கு அருகில் ஓரிரு கி.மீ. தொலைவில் உள்ள இடங்களுக்கு மட்டும்தான் மின்சாரம் விநியோகம். இன்னும் தூரத்தில் உள்ள கிராமங்களுக்கு அதுவும் இல்லை. இருட்டில்தான் வாழ்க்கை மண்ணெண்ணெய் விளக்குகள், அல்லது பெட்டரமாக்ஸ் விளக்கு பயன்படுத்துகிறார்கள். போர்க்காலங்களில் இதைவிட மோசமாக வாழ்ந்திருக்கிறார்கள். பொருளாதாரக் கட்டுப்பாடு, பொருட்கள் கிடைப்பதில் தட்டுப்பாடு, பொருட்கள் கிடைத்தாலும் வாங்க முடியாதபடி அளவிற்கு விலை. இவை எல்லாம் அம் மக்களை புதுவகையான கண்டுபிடிப்புகளுக்கு நிர்ப்பந்தித்து இருக்கிறது. கண்ணாடிப் புட்டியைப் பயன்படுத்தி சிம்னி விளக்கு போல் செய்து, மண்ணெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் ஊற்றி விளக்கு திரிக்குப் பதிலாக சில சமயங்களில் காகிதத்தையும் பயன்படுத்தி எண்ணெய் சிக்கனத்திற்கு உப்பையும் பயன்படுத்தியிருக்கிறார்கள். இதற்கு சிக்கன விளக்கு என்று பெயரிட்டிருக்கிறார்கள். நீண்டகால வாழ்க்கையாக இது இருந்திருக்கிறது. அதேபோல் துணி துவைக்கும் சோப்பு இல்லாமல், பனம்பழத்தை பயன்படுத்தி துணிகளைத் துவைத்து இருக்கிறார்கள். பனம்பழ வாடையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடுகள், காயப்போட்ட துணிகளை தின்ற நிகழ்வுகளும் நடந்துள்ளன. கேட்கும்போது எனக்கு ஆச்சரியமாகவும் இருந்தது, வேதனையாகவும் இருந்தது. மிதிவண்டியும் அம்மக்களுடைய வாழ்க்கையோடு இரண்டறக் கலந்துள்ளது.

நான் சந்தித்த பலரும் சிங்களப் படையாலோ அல்லது இந்திய அமைதிப்படையாலோ பாதிக்கப்பட்டவர்களாக அல்லது இரண்டினாலும் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். "சிங்களப் படை எங்களைக் கொன்றதை, துன்புறுத்தியதை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது. அவன் எங்களுக்கு எதிரி, ஆனால் இந்தியா எங்களை பாதுகாக்கும் என்று நினைத்தோம் அவர்களால் பாதிக்கப்பட்டதுதான் அதிகம். இந்தியப் படை இம்மண்ணில் இருந்த 3ஆண்டு காலத்தில் எங்களுக்கு ஏற்பட்ட இழப்பு என்பது இவ்வளவு காலம் சிங்களப் படைகளால் ஏற்பட்ட இழப்பை விட அதிகம். எங்களுக்கு வருத்தமே, நாங்கள் நம்பியவர்களே எங்களை



சிக்கன விளக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்க முனைந்ததுதான். ஆனால் இன்றும் இந்தியாவை நம்புகிறோம். காரணம் அங்குதான் 6கோடித் தமிழர்கள் வாழ்கிறார்கள்" என்று தங்களுடைய உள்ளக்குமுறலை வெளிப் படுத்தினார்கள்.

## தன்னம்பிக்கையும் துணிவும்

"1987 அக்டோபர் 10ஆம் நாள் ஈழத்தமிழரின் போராட்ட வரலாற்றில் அந்த நாள் மறக்கப்படவே முடியாதது. கிள்ளுக் கீரைகள் என நினைத்து தமிழீழ விடுதலைப்புலிகளை கிள்ளி எறிய இந்திய அரசு முடிவெடுத்த நாள். அந்த நாட்களில் யாழ் பல்கலைக் கழகத்திற்கு மேற்குப் புறமாக உள்ள பிரம்படி என்னும் சிற்றூரில் தலைவர் பிரபாகரனின் பாசறை இருந்தது. அன்று காலையே அந்த முகாமிற்குச் சென்ற தலைவர் அவர்கள் தளபதிகளை அழைத்து, போருக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்று அறிவுறுத்தல் களையும் ஆலோசனைகளையும் வழங்கிக் கொண்டிருந்தார்.

இதே வேளை யாழ்க்கோட்டையில் நிலை கொண்டிருந்த இந்தியப் படையினரை வெளியேற விடாது புலிகள் எதிர்த்தாக்குதல் தொடுத்தனர். யாழ்க்கோட்டைப் பகுதியில் சண்டை தொடங்கியது.

அப்போது, பலாலி இந்தியப்படைத் தலைமையகத்திலிருந்து மேஜர் பெரியசாமி என்ற இராணுவ அதிகாரி, புலிகளின் தலைமைப்பீடத்துடன் 'வோக்கி' மூலம் தொடர்புகொள்ள முயன்றார். (இந்த அதிகாரிதான் இந்தியப் படையுடனான சமாதானக் காலத்தில் புலிகளுக்கும், இந்திய உயர் இராணுவ அதிகாரிகளுக்கு மிடையே தொடர்பு அதிகாரியாக பணியாற்றி இருந்தார்.)

மேஜர் பெரியசாமியின் அழைப்புச் சத்தத்தைக் கேட்ட தலைவர் அவர்கள், தானே 'வோக்கி'யை எடுத்து பெரியசாமியுடன் தொடர்புகொண்டார்.

"பெரியசாமி.. பெரியசாமி.. இங்கே நான் பிரபாகரன் பேசுகின்றேன்" என்று பதில் கொடுத்தார்.

எதிர் முனையில் இருந்து கிடைத்த இந்த எதிர்பாராத அழைப்பால் திடுக்குற்ற மேஜர் பெரியசாமி "யார் பிரபாகரனா? வணக்கம் சார்!" என்று தனது ஆச்சரியத்தையும் மகிழ்ச்சியையும் வெளிப்படுத்திவிட்டு ஏதோ கதைக்க முயன்றவரை குறுக்கிட்ட தலைவர் அவர்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் (இந்தியப்படை) தேவையற்ற முறையில் போரை ஆரம்பித்துள்ளீர்கள். நாங்களும் போருக்குத் தயார் என உங்களது தளபதிகளிடம் சொல்லுங்கள். இனி போர்க்களத்தில் சந்திப்போம்" என்று கூறிவிட்டு வோக்கியின் இயக்கத்தை நிறுத்திவிட்டார்.

மாரிமழையும் தீவிரமடைந்தது, போரும் தீவிரமடைந்தது. போரில் இந்தியப் படைகளை வெல்லமுடியாது என்ற கருத்தை எமது மக்களில் பலர் மிகவும் உறுதியாக வைத்திருந்தார்கள். அதுபோலவே தமிழ் மக்களை இந்தியப்படை கொலை செய்ய மாட்டாது என்றக் கருத்தையும் எமது மக்கள் நம்பிக்கையுடன் வைத்திருந்தார்கள். இதனால், எறிகணை வீச்சில்லாத வான் வழித் தாக்குதல்கள் இல்லாத ஒரு சண்டையைப்பற்றி மக்களிற் பலர் கற்பனை செய்து கொண்டிருந்தனர்.

ஆனால் போர் தொடங்கிய அன்றே பிரம்படியில் இந்தியப் படைகள் புரிந்த கொடூரமான படுகொலைகள், மக்களை அதிர்ச்சிக்கும் அச்சத்திற்கும் உள்ளாக்கின. அதைத் தொடர்ந்து யாழ்க்கோட்டை மற்றும் பலாலிப் படைத் தளங்களில் இருந்து ஏவப்பட்ட ஆட்டிலரி எரிகணைகள் அகதி முகாம்களிலும், கோயில் களிலும், வீடுகளிலும், பாடசாலைகளிலும் விழுந்து மக்களைப் பலிகொள்ளத் தொடங்கின.

இந்தியாவின் அகிம்சை முகமூடியை அதன் ஆட்டிலறிகளும், எஸ்.எல்.ஆர். துப்பாக்கிகளும் கிழித்துக் கொண்டிருந்தன.

இந்த இடத்தில் வேதனை நிறைந்த ஒரு சுவாரசிய சம்பவத்தைக் குறிப்பிட வேண்டியத் தேவை உள்ளது. இந்திய -புலிகள் போர் கடுமையடைந்து கொண்டிருந்தபோது, இந்தியா விற்கும் இங்கிலாந்திற்கும் இடையே கிரிக்கெட் போட்டி ஒன்று நடந்து கொண்டிருந்தது. அந்தப் போட்டியில் இந்தியா தோற்று விட்டது. இந்த தோல்விச் செய்தியை வானொலி வர்ணனையாளர் அறிவித்ததும், அதை பலாலியில் இருந்தபடி செவிமடுத்துக் கொண்டிருந்த பிரிகேடியர் பெர்ணாண்டஸ் என்ற இந்தியப்படை அதிகாரி, தனது ஆட்டிலறிப் படைக்கு தொலைத் தொடர்புகருவி ஊடாக,

"இந்தியாவின் கிரிக்கெட் தோல்வியை புலிகள் கொண்டாடப் போகின்றார்கள். எனவே உடனடியாக ஆட்டிலறித் தாக்குதல்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளவும்” என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவைத் தொடர்ந்து கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி, நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பகுதிகளை நோக்கி சில நிமிட நேரங்கள் பலத்த ஆட்டிலறித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தியக் கிரிக்கெட் குழு ஒரு போட்டியில் தோற்றதால் ஒரு இராணுவ உயர்அதிகாரிக்கு ஏற்பட்ட பைத்தியக்காரத்தனமான கற்பனை காரணமாகப் பிறந்த கட்டளையால் எமது மக்களில் எத்தனைபேர் பலியானார்கள்!

இந்திய- புலிகள் போர் தொடங்கி ஒன்று, இரண்டு மாதங்களில் குடா நாடு இந்தியப் படைகள் வசமாகிவிட்டது. அதேவேளை புலிகளின் படையாளிகள் சிதைந்தும் சேதப்பட்டு சிதறுண்டும் காணப்பட்ட ஒரு இக்கட்டான காலப்பகுதி அது. சுருக்கமாகச் சொன்னால், இராணுவ ரீதியாகப் புலிகள் இயக்கம் பலவீனப்பட்டு போய்நின்ற நெருக்கடியான வேளை அது. அதேவேளை தலைவரின் பாசறை அமைந்திருந்த மணலாற்றுக் காட்டுக்குள் ஒரு பாரியப் படையெடுப்புச் செய்ய இந்தியப்படைகள் ஆயத்தம் செய்து கொண்டிருந்தன. உணவு, மருத்துவம், படையணிகளுக் கிடையே யான தொடர்புகொள்ளல் என்பவை பெரிதும் பாதிக்கப்பட்டு போராளிகள் ஒரு விரக்தி சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்த காலகட்டம் அது. இதனால் புலிகள் இயக்கமே முற்றும் முழுதாக அழிக்கப்பட்டு விடுமோ என்ற ஒரு அபாயம் நிலவிய வேளை அது. அந்த அளவிற்கு இந்தியப்படைகள் ஒரு பாரிய இராணுவ உளவியல் நெருக்கடியை எமது இயக்கத்திற்கும், எமது மக்களுக்கும் கொடுத்துக்கொண்டிருந்தன. இந்த நிலையில் இந்த பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயக்கத்தை பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் சமாதானப் பேச்சுக்குப் போவதே புத்திசாதுர்யமான வழி என எமது மூத்த உறுப்பினர்கள் சிலர் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தலைவருக்குச் செய்தி அனுப்பினார்கள்.

இந்தச் செய்திக்கு தலைவர் எந்தப் பதிலையும் அனுப்ப வில்லை. சமாதானப் பேச்சிற்கு எப்போது நாம் செல்லவேண்டும் என்பதில் தலைவர் ஒரு கொள்கையை வைத்திருக்கின்றார். அதாவது இராணுவ ரீதியில் பலமான நிலையில் இருந்தபடிதான் நாம் சமாதானப் பேச்சிற்கு செல்லவேண்டும். அப்போதுதான் எமது உரிமைகளை நாம் வலியுறுத்திப் பெறமுடியும். பலவீனமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் இருந்தபடி சமாதானபோக்கிற்கு சென்றால்- அதுவும் வலியச் சென்றால் சமாதான உடன்பாடு என்ற போர்வையில் எமது இனத்தின் அடிமைச் சாசனத்தையே எதிரி எம்மிடமிருந்து பெற முனைவான் என்பதில் தலைவர் கவனமாக இருக்கின்றார்.

சமாதானப் பேச்சிற்குச் செல்வதே சிறந்தது என்று எமது மூத்த உறுப்பினர்கள் கோரிய அந்தக் காலத்தில், புலிகள் இயக்கம் உண்மையில் பலவீனமாகவே இருந்தது. எனவேதான் இந்தச் சமாதான ஆலோசனைக்குத் தலைவர் பதில் அனுப்பாது விட்டார். ஆனால் மீண்டும் மீண்டும் பதில்வேண்டி அந்தச் செய்தி வந்தபோது, தொலைத்தொடர்புச் சாதனம் ஊடாகத் தலைவர்,

"அமெரிக்கப் படையுடன் போரிடத் தொடங்கும்போது தாம் 30 வருடங்களிற்கு மேல் போர் புரிய வேண்டிவரும் என வியட்நாம் தலைமை நினைத்திருக்கமாட்டாது. ஆனால் அவர்களிடமிருந்த தன்னம்பிக்கையும், துணிவும்தான் அவர்களை உறுதியுடன் வைத்திருந்தது. வெற்றியையும் பெற்றுக்கொடுத்தது.

அந்த தன்னம்பிக்கையும், துணிவும் என்னிடம் இருக்கிறது" என்று பதிலளித்தார்.

இந்த செய்தியின் உட்பொருளை அந்த மூத்த உறுப்பினர்களும் புரிந்து கொண்டு தொடர்ந்து போர்ச் செயற்பாடுகளிலேயே ஈடுபட்டார்கள்.

அவலத்தையும், அபாயத்தையும் கண்டுவிட்டு மனம் இடிந்துபோவது மனித சுபாவம். இந்த மனித குணத்தை ஆக்கிரமிப்பாளர்கள் தமது நோக்கங்களை நிறைவேற்றப் பயன்படுத்துவதை உலக வரலாற்றில் அன்றிலிருந்து இன்றுவரை காணலாம்.

போராடும் மக்கள் மீது அவலங்களை விதைத்து, தேசத்தின் உறுதிப்பாட்டை உடைத்துப் போரை வென்று மக்களை அடிமை கொள்வது ஒரு ஆக்கிரமிப்புச் சித்தாந்தம், அமெரிக்கச் சிவப் பிந்தியர்கள் மீதும், ஆப்பிரிக்க கருப்பினத்தவர்கள் மீதும் வெள்ளை இன அரசுகள் அதை வெற்றிகரமாக செய்துள்ளன. இரண்டாம் உலகப் போரின் போது பிரித்தானியாவை வெல்வதற்காக செர்மானிய விமானப்படை இந்த அவலத்தை பிரித்தானிய நகரங்கள் மீது விதைத்தது. பின்னர் அதே நோக்கத்திற்காக பிரித்தானிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமானப்படை ஜெர்மானிய நகரங்கள் மீது அந்த அவலத்தை வட்டியுடன் சேர்த்து விதைத்தது.

'ஒப்பரேசன் முன்னோக்கிப் பாய்தலில்' இந்த உபாயத்தைத்தான் சிங்களப் படைகள் கையாண்டன. தென் தமிழீழ மக்களது போராட்ட உறுதியை உடைப்பதற்கு நீண்ட நாட்களாகவே இந்த வகை பயங்கரவாதத்தையே சிங்களப் படைகள் அங்கே செய்து வந்தன. ஆனால் புலிகள் இயக்கத்திடம் இந்த ஆக்கிரமிப்புச் சித்தாந்தம் எடுபடவில்லை.

அவலத்தை - அபாயத்தைக் கண்டு பதறி அவநம்பிக்கை அடைவதை விட அதற்கு எதிராக ஆவேசங்கொண்டு, அவற்றை எமது மக்கள் மீது ஏவிவிட்டோரே அனுபவிக்கும்படி செய்வதுதான் ஈழத்தமிழினத்திற்கு தலைவர் பிரபாகரன் கொடுத்துள்ள புதிய சித்தாந்தமாகும்" என்று அந்தப் பல்கலைக்கழக விரிவுரையாளர் நீண்டநேரம் தனது வேதனைகளைக் கொட்டினார்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியப் பயிலரங்கு

கிளிநொச்சியில் ஓவியக்காட்சி முடிந்தநிலையில் பள்ளி மாணவர்களுக்கும் பள்ளிக் கலை ஆசிரியர்களுக்கும் தனித்தனியே ஓவியப் பயிலரங்கு நடைப்பெற்றது. பொதுவாகவே கல்வியைப் பொறுத்த அளவில் தமிழர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். சிங்களவர் களுக்கு வழங்கப்படுகின்ற எந்த வசதிகளும் தமிழ்ப் பகுதிகளுக்கு வழங்கப்படுவதில்லை. சரியான கட்டட வசதியோ, போதிய ஆசிரியர்களோ இல்லாத நிலையில்தான் அங்கு கல்வி நிலையங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்த பாடத்தையும் எடுப்பதற்கு அந்தத் துறைசார்ந்த ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல், ஏதோ ஒரு ஆசிரியர் பாடங்களை நடத்தும் நிலைதான் இன்று இருந்து வருகிறது. இதனால் மாணவர்களுடைய நலனும், எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது. சிங்களவர்களோடு போட்டியிட்டு, மேல் படிப்புக்கு செல்ல முடியாத நிலையும் இருக்கிறது. அதேபோல் கலைத்துறை ஓவியத்துறைக்கும் அதற்கான ஆசிரியர்கள் இல்லாததால் ஏதோ ஒரு ஆசிரியர் அவருக்குத் தெரிந்ததைச் சொல்லித் தருகின்றார்.

அந்நாட்டில் கலைத்துறையை Advance Level-ல் பாடத் திட்டத்தில் சேர்த்து மதிப்பெண்ணும் வழங்குகிறார்கள். கலைத் துறை என்றால் ஓவியம், நடனம், இசை ஆகிய மூன்றும் வருகிறது. இந்த மூன்றில் ஏதோ ஒன்றை தங்களுடைய விருப்பப்பாடமாக ஒரு மாணவர் தேர்வு செய்து கொள்ளலாம். அப்படி தேர்வு செய்து- அதில் பெறுகின்ற மதிப்பெண் மேற்படிப்புக்கு செல்வதற்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். சிங்கள மாணவர்கள் தங்களுடைய விருப்பப் பாடமாக ஓவியத்தை எடுக்கிறார்கள். அதற்கான ஆசிரியர்களும் அங்கு இருக்கிறார்கள். மதிப்பெண்ணும் அதிகம் பெறுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர்கள் ஓவியப் பயிலரங்கு

மேல்படிப்புக்குச் செல்வதற்கும் அது மிகவும் வசதியாக இருக்கிறது. ஆனால் தமிழ் பகுதியில் ஓவியத்திற்கான ஆசிரியர்கள் இல்லாத நிலையில் விருப்பப்பாடமாக ஓவியத்தை எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்து, இசையையோ நடனத்தையோ எடுக்கிறார்கள். இதனால் மாணவர்களின் தேர்ச்சிப் பாதிக்கப்பட்டு, போதிய மதிப்பெண் இல்லாததால் அவர்கள் எதிர்காலமும் பாதிக்கப்படுகிறது என்பதை கிளிநொச்சி வலயக் கல்வித் திணைக்கள அதிகாரி திரு.குருகுலராஜா அவர்களோடு உரையாடிய திலிருந்து தெரியவந்தது.

எனவேதான் மாணவர்களுக்குத் தனியாகவும், ஆசிரியர் களுக்குத் தனியாகவும் பயிலரங்குகள் நடத்தி, அவர்களுடைய திறனை வளர்த்துக் கொள்ள ஒரு வாய்ப்பை ஏற்படுத்தித் தந்தோம்.

ஆசிரியர்களுக்கு ஓவியம் குறித்த எவ்வித அடிப்படை அறிவும் இல்லை என்பதை பயிலரங்கு தொடங்கிய சிறிது நேரத்திலேயே தெரிந்து கொண்டேன். அவர்களுக்கும் எவ்வித வழிகாட்டிகளும் இல்லாத நிலையில், தேர்ச்சிப்பெற்று ஆசிரியப் பொறுப்பை ஏற்று இருக்கிறார்கள் என்பதையும் தெரிந்து கொண்டேன். அதனுடைய வெளிப்பாடு மாணவர்களிடமும் தெரிந்தது. ஆனால் ஆசிரியர் களும், மாணவர்களும் மிகவும் ஆர்வத்தோடு கலந்து கொண்டு தங்களை வளர்த்துக் கொள்வதில் முனைப்புக் காட்டினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிரியர்கள் ஓவியப் பயிலரங்கு

குறுகிய கால பயிற்சிதான் என்றாலும் தொடர்ந்து அப்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் அவர்களை வளர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை எனக்கு தந்தது. அதையே அவர்களிடமும் சொன்னேன்.

## எலும்புக்கூடுகள்

ஒவ்வொரு நாளும் என் அலுவல்கள் அது கண்காட்சியாக இருந்தாலும் பயிலரங்குகளாக இருந்தாலும் முடிந்தவுடன் இரவு நேரங்களில் நானும் நண்பர் கருணாகரனும் பேசிக் கொண்டிருப் போம். அவ்வாறு ஒருநாள் அவரிடம் பேசிக்கொண்டிருக்கும் போது கிளிநொச்சியில் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் பற்றி விவரங்களைக் கூறுகள் என்று கேட்டேன்.

"அது ஒரு பயங்கரம் புகழ். அப்பப்பா.." என்று வேதனையுடன் சொல்லத் தொடங்கினார். "1996 ஜூலையிலிருந்து 1998 செப்டம்பர் வரையான 26 மாதங்களில் இலட்சக்கணக்கான கண்ணி வெடி களையும், மிதிவெடிகளையும் சிங்கள இராணுவம் விதைத் திருந்தது. இக்காலப்பகுதியில் சிங்களப் படையினரால் பிடிக்கப்பட்டவர்கள் 234 பேர். 184 பேர் காணாமல் போயிருக் கிறார்கள். இவர்களில் 60க்கும் மேற்பட்டோர் எலும்புக் கூடுகளாக மீட்கப்பட்டனர்.

நீங்கள் கிளிநொச்சி காவல்துறை பணிமனையில் குவிக்கப் பட்டிருந்த எலும்புக் கூடுகளை பார்த்திருந்தால் அதிர்ந்துப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போயிருப்பீர்கள். எவ்வளவு மனிதர்கள் வெறும் எலும்புக் கூடுகளாக்கப்பட்டிருக்கிறார்கள் தெரியுமா?

என்ன? இவ்வளவு மனிதர்களா இப்படியானார்கள் என்று திகைக்கிறீர்களா?

யாரிவர்கள்? எங்களுடைய மனிதர்களுக்கு என்ன நடந்தது? ஏனிப்படி நடந்தது? இந்த எலும்புக் கூடுகள் எல்லாம் எங்கிருந்து எடுக்கப்பட்டன? என்று கேட்கிறீர்களா?

இவர்கள் கொல்லப்பட்டவர்கள். இரக்கமின்றி, மிருகத் தனமாக வதைக்கப்பட்டப் பின், மலக் கிடங்குகளிலும், கிணறு களிலும் உயிருடன் போடப்பட்டு இறந்தவர்கள். அனாதைகளாகச் சுடப்பட்டு பற்றைகளில் எரியப்பட்டவர்கள். பூட்டப்பட்ட அறைகளில் கட்டப்பட்ட கைகளுடனும் கால்களுடனும் சாகடிக்கப் பட்டவர்கள். இதற்கெல்லாம் ஒரே காரணம், இவர்கள் தமிழர் என்பதுதான். இப்படித்தான் எப்போதும் நடந்து வந்தது. அப்போதும் கிளிநொச்சியில் நடந்தது.

முன்பு கிளிநொச்சியை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்திருந்த போது பல சந்தர்ப்பங்களில் பலர் காணாமற் போயிருந்தார்கள்.

இராணுவம் நகரை ஆக்கிரமித்த வேளையில் எல்லோருமே வெளியேறினார்கள். ஆனாலும் துரத்தப்பட்டவர்கள் என்ன செய்வார்கள்? எங்கே செல்வார்கள்?

அலைதல் பெருந்துயரம், மாபெரும் துயரம். அகதி வாழ்வின் அலைவு மிகக் கொடியது. ஊரைவிட்டுத் துரத்தப்பட்டவர்கள், இராணுவ வலையத்திற்கு அப்பாலான சிறு கிராமங்களில் அழுத்தும் பெரும் சுமையோடு வாழமுடியாமல் தவித்தனர். அகதி மக்கள் வேறு வழியேதுமின்றி தாங்கள் குடியிருந்த தங்கள் வீடுகளைப் பார்த்துவரச் சென்றிருந்தார்கள். பசியால் துவண்டிருக்கும் தங்கள் பிள்ளைகளின் துக்கத்தைப் பார்க்கத் திராணியற்று, தங்களின் வளைவுகளிலிருந்த, தாங்கள் வளர்த்த மரங்களிலிருந்து எதையாவது எடுத்து வரலாம் என்று போயிருந்தார்கள். ஒரு குடிசையைத் தானும் போடமுடியாத போது தாங்களிருந்த வீட்டிலிருந்து நாலு தடியைக் கொண்டு வந்து எதையாவது செய்து விடலாம் என்ற நம்பிக்கை யோடு, அவர்களுக்குத் தெரியும், தாங்கள் போகுமிடம் மரணத்தின் பொறிகள் நிறைந்த மையமென்றும் அது பேயுலாவும் பிரதேச மென்றும் அவர்கள் அறிவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் இந்த மனிதர்களுக்கு வேறு வழிகள் ஏதுமிருக்கவில்லை.

போனார்கள்.

போனவர்களில் பலர் மீளவில்லை.

கிளிநொச்சியை அழித்துவிட்டு

ஊர்மக்களைத் துரத்திவிட்டு

நகரத்தையே ஆக்கிரமித்திருந்த சிங்கள இராணுவம் இவர்களைப் பிடித்தது.

இராணுவ வலையத்திற்கு அப்பால், உயிரைக் கையில் பிடித்தபடி தீராத பீதியுடன் பசித்த வயிற்றுடன் வீட்டில் எதிர்பார்த்த படியிருக்கும் குழந்தைகளின் முகத்தை நெஞ்சிலே சுமந்தபடி வீட்டின் வறுமையை நினைத்தபடிப் போனவர்கள்...

மிரண்ட விழிகளுடன் நாலாதிசையும் பார்த்தபடி, தங்கள் வீட்டில் கால்வைக்கவே பயப்படும் விதியை நொந்தபடி, எல்லா தெய்வங்களையும் நேர்ந்தபடி சென்றவர்கள்...

கடவுளே!

என்ன கொடுமை?

ஏழைமனிதரை, சொந்த நிலத்தின் உரித்தாளரை, பசித்த வயிற்றுடன் வந்தவரை ஏன் இந்த பாதகம் சூழ்ந்திருக்கியது?

இதுதான் இனவாதத்தின் பரிசு! எப்போதும் சிங்களப் பேரினவாதம் இப்படித்தான் தமிழருக்கு தீர்ப்பளிக்கிறது.

கிளிநொச்சியில், அரணுக்கு வெளியே ரோந்தில் ஈடுபட்ட சிங்களப் படைகள், இம்மக்களைப் பிடித்துச் சென்று வதைத்தனர். படுகொலை செய்தனர். தம் முகாம்களில் அடைத்தனர். 1996முதல் 1998 வரை படையினரின் பிடியுள் சிக்கியவர்கள் 234 பேர். இவர்களில் எட்டுபேர் அந்த இடத்திலேயே படுகொலை செய்யப்பட்டார்கள். கிருட்ணாபுர பகுதியில் ஆண்டியப்பன், மயிலாண்டி, தன் அயலாருடனும் சிறு மகளுடனும் தனது வளைவுக்குச் சென்றபோது படையினரால் பிடிக்கப்பட்டார். அயலாரும் பிடிக்கப்பட்டனர். சகலரும் படையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அவர்களை துப்பாக்கியால் சுட்டனர், சிங்களச் சிங்கங்கள். சுட்டுவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டனர். மயிலாண்டி அந்த இடத்திலேயே மாண்டார். ஏனையோர் உயிர் தப்பினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராபுரத்தில் இருவரைப் பிடித்து துப்பாக்கியால் சுட்டு மலக்குழி ஒன்றினுள் போட்டனர். இதில் கனகலிங்கம் திருச்செல்வம் மலக்குழியிலேயே மாண்டார். இவருடன் போடப்பட்ட மற்றவர் மயக்க நிலையிலிருந்து மீண்டு மலக்குழி மூடியைத் திறந்து தப்பிவந்தார். இது உண்மை. மிகையல்ல. இவரை அக்கராயன் மருத்துவமனையில் சந்தித்தேன்.

புதுமுறிப்புக் குளத்திற்கும் மாவீரர் துயிலுமில்லத்திற்கும் இடையே சிறாருக்கு அடைக்கலம் தரும் தென்னிந்தியத் திருச்சபையின் பகல் பராமரிப்பு நிலையம் இருந்தது. அப்போது அது இயங்காதபோதும் அதனைப் பார்க்கவென திருச்சபை போதகர் இன்னாசி அருள்பாலன் தனது உதவியாளர்கள் மிரிண்டா யோசப், யோசப் சுரேந்திரன் ஆகியோருடன் சென்றார். சென்றவர்கள் மீளவில்லை. அவர்களின் உடல்கள் படையினரால் குதறிக் கொல்லப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டன.

இவர்கள் தவிர, தம் உயிர்வாழ்வுக்காக தம் கிராமங்களுக்குச் சென்ற 184 பேர் படையினரால் பிடிக்கப்பட்டு காணாமல் போயுள்ளனர். அன்றாட சீவியத்துக்காக சென்ற அந்த ஏழைகளில் இருவர் பெண்கள். இறுதிவரை இவர்கள் காணாமல்



கிளிநொச்சியில் மலசலக் குழியொன்றில் எலும்புக்கூடுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனவர்களாகவே இருக்க, 1998இல் கிளிநொச்சி நகர் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டதன் பின்னர் பரந்தனும், ஆனையிறவும் மீட்கப்பட காணாமல் போனோர் எலும்புக் கூடுகளாக **கைகள் கட்டப்பட்ட நிலையிலும்** எலும்புகள் சிதையுண்டும், மலக் குழியிலிருந்தும், கிணறுகளிலிருந்தும் ஆற்றுப் படுகைகளிலும், கட்டிட இடுபாடுகளிலிருந்தும் மீட்கப்பட்டனர். சந்திரிகாவின் ஆட்சி தந்த பரிசின் ஆதாரமாக காணாமல் போன மக்கள் எலும்புக் கூடுகளாக மீட்கப்படும் அவலம் நிகழ்ந்தேறியது.

காணாமல் போனவர்களின் எலும்புக் கூடுகளாக மீட்கப் படுகையில் அவற்றின் உறவினர்கள் மனநிலை எப்படியிருக்கும்? "**இதுதான் மகளே உன்னுடைய அப்பா**" என்று கதறியபடி ஒரு இளந்தாய் தன் மெலிந்த அந்தச் சிறிய பிள்ளைக்கு ஒரு எலும்புக் கூட்டை காட்டியபடி கதறிக் கொண்டிருந்தாள்.

அந்தத் தந்தை அவர்களுடைய வீட்டில் தேங்காய் பிடுங்கிவர சென்றிருந்தான். இப்படி எலும்புக்கூடாக மிஞ்சியிருந்தான். அவன் இறுதியாக அணிந்து சென்ற ஆடையின் எஞ்சிய துண்டுகளிலிருந்து அவன் அடையாளங் காணப்பட்டான். இப்படி இன்னும் எத்தனையோ கதைகள். அடையாளம் கண்டும் காணாமலும் துயரத்தைப் பெருக்கியபடி கோபத்தை எங்கள் நெஞ்சில் மூட்டிய படி எத்தனை எத்தனையோ மனித எச்சங்கள்... மனிதக் கூடுகள், புகழ்" என்று வேதனையோடும் கண்ணீரோடும் சொல்லிமுடித்தார். கேட்டுக் கொண்டிருந்த எனக்கும் நெஞ்சு அடைத்து கண்களில் நீர் நிறைந்தது.

"இது மட்டுமல்ல புகழ். எங்களின் மனிதர்கள் எப்படி யெல்லாம் அழிக்கப்பட்டார்கள் தெரியுமா?" என்று தொடர்ந்தார்.

"கொக்கட்டிச் சோலையில் எரிக்கப்பட்டு, குமுதினிப்படகில் வெட்டிச் சரிக்கப்பட்டு, வல்வெட்டித்துறையில் குண்டுவைத்து சிதறடிக்கப்பட்டு, ஒதியமலையில் சுட்டெரிக்கப்பட்டு, கிளாலி யிலும், பூவரங்குளத்திலும் வழி மறித்துச் சுடப்பட்டு, நவாலியிலும் நாகர்கோவிலிலும் குண்டுவீசிச் சிதறடிக்கப்பட்டு, செம்மணியில் நூற்றுக்கணக்கில் உயிருடன் புதைக்கப்பட்டு, சுதந்திரபுரத்திலும் மந்துவிலிலும் மக்களின் வீடுகளின் மீது தாக்குதல் தொடுக்கப் பட்டு... இப்படி இப்படி எத்தனை கொலைகள்...

கொலைகளிலும் எத்தனை வகைகள்? எத்தனை முறைகள்? எத்தனை தரங்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவாண்டா, கம்போடியா, போஸ்னியா, சேர்பியா போன்ற நாடுகளில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளைக் கண்டு உலகம் அதிர்ந்தது. கண்ணீர்விட்டது. அறிக்கைகளையும், கண்டனங் களையும் விட்டு மனிதாபிமானத்தை நிலைநாட்டிக் கொண்டது.

ஆனால் எங்கள் மண்ணில் இத்தனை அனர்த்தங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இத்தனைக் கொடுமைகள் நிகழ்த்தப் பட்டுள்ளன. புதைகுழியென்றும், கொலையென்றும், காணாமல் போதல் என்றும், எலும்புக் கூடுகள் என்றும் தொடரும் இந்த வன்வழிமுறைக்கு என்ன பதில்?

உலகம் என்ன சொல்லப்போகிறது? மனிதாபிமானிகள் ஏது செய்ய உள்ளார்கள்? வெறுமனே புல்லும் பூண்டும் முளைத்து எல்லாவற்றையும் மூடிவிடுமா?

உலகம் இதற்கு எந்தப் பதிலும் தரப்போவதில்லை. பதிலற்ற கேள்விகளால் இன்று அது கட்டுண்டு வருகிறது.

எனவே, எவரும் பதிலளிக்கப் போவதில்லை என்று வேதனையோடு கூறிமுடித்தார்.

எனக்கு கோபமும், ஆத்திரமும் வந்தது. உலகத்தில் தமிழனுக்கு மட்டும் எது நடந்தாலும் குரல் கொடுக்க யாருமற்ற நாதியற்றவர்களாக இருக்கின்றோமோ என்று நினைத்து வேதனை யாகவும் இருந்தது.

வேறொரு நண்பரிடம் பேசிக் கொண்டிருந்த போது இந்த எலும்புக்கூடுகள் பற்றிய தன்னுடைய அனுபவத்தை என்னுடன் பகிர்ந்து கொண்டார்.

"எலும்புக்கூடுகள் பற்றியத் தகவல் கிடைத்தவுடன் காவல் துறையினருடன் அந்த இடத்திற்கு விரைவோம். மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் சகலவற்றின் போதும் உடனிருந்திருக்கிறேன். மலக்குழிகள், கிணறுகள், ஆற்றுப்படுகைகளில் என்றெல்லாம் மனிதர்கள் கொல்லப்பட்டு போடப்பட்டுள்ளார்கள். இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டதால், அவற்றில் பலவற்றை அடையாளங்காணக் கூடியதாக இருந்தது. எலும்புக் கூடுகளில் மிஞ்சியிருந்த உடைகள், உள்ளாடைகள், கழுத்தில் கட்டப்பட்டிருந்த குருசு, வெள்ளிமோதிரம், அவர்கள் வைத்திருந்த வெற்றிலைப்பை, அதற்குள் சுண்ணாம்பு வைத்திருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாலேம் குப்பி போன்றவற்றை ஆதாரமாக வைத்து உறவினர்கள் அடையாளம் கண்டார்கள்.

இங்கே மறக்கமுடியாத ஒரு அனுபவத்தைக் கூறவேண்டும். தகவல் கிடைத்தவுடன் ஒரு இடத்திற்குப் போனபோது மூன்று எலும்புக்கூடுகள் ஒரு வேலியில் தொங்கியபடி கிடக்கக் கண்டோம். இராணுவத்தின் முன்னரண் பகுதியில் மறைந்திருந்த இராணுவம், அயற் கிராமங்களிலுள்ள தங்களுடைய வீடுகளில் எதையாவது மீட்டுச் செல்லலாம் என்று வந்தவர்களைக் கண்டுச் சுட்டபோது அவர்கள் தப்புவதற்காக ஓடி வேலியைத் தாண்டுகையில் மரணமடைந்திருக்கிறார்கள். மூன்று எலும்புக் கூடுகளும் இருந்த நிலை அவற்றின் அந்த கணநேரத்தின் பரிதவிப்பை அந்தரிப்பை உணர்த்திய காட்சி என்றும் மறக்கமுடியாதது" என்று தெரிவித்தார். இதுபோல் பலர் தங்களுடைய அனுபவங்களை என்னுடன் பகிர்ந்து கொண்டனர்.

கிளிநொச்சியில் ஓவியக்காட்சி நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது எடுக்கப்பட்ட நேர்காணல்கள் ஈழநாதம், ஈழநாதம் (மட்டக்களப்பு), தினக்குரல், உதயன், போன்ற நாளிதழ்களில் தொடர்ந்து வெளிவரத் தொடங்கின. இவற்றில் தினக்குரல் கொழும்பு உட்பட அனைத்து இடங்களுக்கு செல்லும் நாளிதழ். அவ்விதழின் ஞாயிற்றுக் கிழமை பதிப்பில், வண்ணத்தில் முழுப்பக்கம் '**நான் நியாயத்தின் பக்கத்தில் நிற்கிறேன்**' என்ற தலைப்பில் என்னுடைய நேர்காணல் வெளிவந்தது. (*காண்க: இணைப்பு-1*)

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் கிழிக்கப்பட்ட கதை

இந்த நேர்காணல் என்னை இன்னும் முழுமையாக அந்த மக்கள் புரிந்து கொள்வதற்கு உதவியது. இந்நேர்காணல் வெளிவந்த அடுத்த நாள் பளையில் ஓவியக்காட்சி நடைபெற்றது. பள்ளி மாணவர்களும் பொதுமக்களும் பார்வையிட்டு தங்களது கருத்துக் களைப் பதிவு செய்தார்கள். பளையில் ஓவியங்கள் ஏற்படுத்திய தாக்கத்தினால் பலரும் அவரவர்களுடைய அனுபவங்களை என்னோடு பகிர்ந்து கொண்டார்கள். நான் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன் என்பதால் பலரும் இந்திய அமைதிப்படையால் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை, அனுபவித்தக் கொடுமை களையே அதிகம் விவரித்தார்கள். எனக்கான மதிய உணவு ஒரு அரசு அதிகாரியின் இல்லத்தில் ஏற்பாடாகி இருந்தது. உதவி அரசாங்க அதிபர், மற்றும் சில ஆசிரியர்களும் என்னுடன் உணவருந்திய பிறகு, ஒரு மாமரத்தின் கீழ் அமர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருந்தோம். அந்த வீடே பல்வேறு மரங்கள் சூழ்ந்த சோலைபோல்தான் காட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்தது. அந்த நேரத்தில் அந்த அதிகாரி ஒரு மாத இதழைக் கொண்டு வந்து தந்து இதைப் படியுங்கள் என்று ஒரு பகுதியைச் சுட்டிக் காட்டினார். படிக்கத் தொடங்குகிறேன்...

"1987 அக்டோபர் 10, அமைதிகாக்கும்படை என இலங்கையின் வடகீழ் மாகாணத்துக்கு வந்திருந்த இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட அமைதிக்கு மாறான நடவடிக்கையின் ஒரு கட்டமாக, யாழ்ப்பாணத்தில் வெளிவந்து கொண்டிருந்த ஈழமுரசு, முரசொலி நாளிதழ்களின் அச்சியந்திரங்களை இரவு நேரத்தில் குண்டு வெடிக்கவைத்துத் தகர்த்து விட்டுச் சென்றனர்.

அடுத்த நாள் காலை, வழமைபோல் கடமைக்கு அலுவலகம் சென்று, நடந்ததை அறிந்து அதிர்ச்சியுற்று, உடைந்து கருகிக்கிடந்த இயந்திர பாகங்களைப் பார்த்து பிறகு இருண்ட மனதுடன் வீடு திரும்பினேன். இனி வேலை இல்லை. வருவாய் இல்லை. எங்கே வேலை கேட்பது, யாரைக் கேட்பது? இன்னும் என்ன செய்வான்களோ...

கேள்விகளுடன் பேருந்து நிலையம் நாடி நடந்தேன். அடுத்த சில நாளில் இந்த இராணுவத்தின் பிரிவு ஒன்று தென்மராச்சிக்கு வந்து நிலை கொண்டது. சாவகச்சேரி நகரிலும் புற ஊர்களிலும் முகாம்கள் அமைத்துத் தங்கினர். விடுதலைப் போராளிகளை, பயங்கரவாதிகள் எனப் பெயரிட்டு தேடுதல் நடத்தினர். இரவு பகலாய் தெருக்களில் பற்றைகள் இடையில், பயிரிட்ட தோட்டங்களில், நெல்வயல்களில் அணியணியாய் நடமாடினர். இரவில் மக்கள் நித்திரையான பின்பும், படலையை உதைத்துத் திறந்து வீடுகளில் புகுந்து சத்தமிட்டு வீட்டாரை வெளியில் அழைத்து, முற்றத்தில் நிற்கப்பணித்து, அறைகளைச் சோதனையிட்டனர். சந்தேகத்துக்குரியவர்களைத் தங்கள் வாகனங்களில் ஏற்றிப்போய் தடுத்து வைத்து சித்திரவதை செய்து விசாரித்தனர்.

பயங்கரவாதிகள் தங்களின் முகாம்களைத் தாக்க இரவில் வருவார்கள் எனப் பயந்த இராணுவத்தினர் இடையிடையே எறிகணைகளை ஏவிக் கொண்டிருந்தனர். இவற்றைத் தவிர்க்க எண்ணி மக்கள் பலரும் இரவுச் சாப்பாட்டின் பின் வீடுகளைப் பூட்டிக் கொண்டு போய் கோயில் மண்டபங்களில் படுத்து உறங்கினர்.

அதிகாலை மருதடிப் பிள்ளையார் கோயிலிலிருந்து நானும் மனைவியும் மகனும் பெருந்தெருவை நோக்கி வந்து கொண்டிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் எதிரே வந்த எங்கள் வீட்டு அயலவர் இருவர் எங்களைப் பார்த்து 'உங்கள் வீட்டில் ஆமி' என்றனர். "அடுத்த வீட்டார் எல்லாரையும் கூப்பிட்டுத் தெருவில் இருக்க வைத்து உங்களை கூட்டிவந்தால் தான் எங்களை விடமுடியும் என்றான்கள். நீங்கள் வராவிட்டால் நாங்கள் நாள் முழுதும் தெருவில் வெய்யிலில் இருக்கவேண்டி வரும்" என்றார் ஒருவர் சற்று கண்டிப்பாக.

வேறுவழியில்லை போனால் நாங்கள் கைதுசெய்யப்படுவது நிச்சயம். ஓடி ஒளிந்தால் ஊரவரின் பகைக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக வேண்டும். அந்த ஊரிலிருந்து முதலில் ஒரு போராளியை களத்துக்கு அனுப்பிய வீடு எங்கள் வீடு.

சரி வருகிறோம் என்று அவர்களுடன் வீடு நோக்கி நடந்தோம். அழையா விருந்தாளியாக எங்கள் வீட்டில் குவிந்திருந்த சிப்பாய் களைப் பார்க்க எனக்கு உள்ளுக்குச் சிரிப்பு. என்ன துணிவு! மனித உரிமை மீறல்! அனுமதியின்றி எங்கள் வீட்டில் அந்நியர்!

"வாங்க... வாங்க..." என்றான் ஒருவன்.

"விநாயகமூர்த்தி..."

"எத்தனை பிள்ளைகள் உனக்கு?..."

"நான்குபேர்..."

"இவன் பெயரென்ன?..."

"பார்த்திபன்..."

"மற்றவன்கள் எங்கே...?"

"ஒருவன் வெளிநாட்டில்... மற்றவன் கோயில்ல படுக்கப் போனவன்... இப்ப வருவான்...."

"அவன் பெயர் என்ன?..."

"பிரபானந்தன்..."

"அடுத்தவன்... என்ன பெயர் ?..."

"பிரபஞ்சன்..." "அவன் வீட்டிலிருந்து போய் நான்கு வருடமாச்சு... எங்கே என்று தெரியாது..."

"பொய் சொல்லுகிறாய்..."

"இல்லை.. உண்மையைத்தான் சொல்கிறேன்..."

அவன் தன் தொலைத் தொடர்பு கருவியில் பேசினான்.

பிறகு, "போங்க... பல் துலக்கி குளிச்சிட்டு வாங்க" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்தீட்டி, முகம், கால் கழுவி முன் அறைக்குப் போக துவாய் எடுத்து முகம் துடைத்தபோது அதே துவாயினால் என் கண்களையும் அங்கே கட்டிலில் கிடந்த பெட்சீற் எடுத்துக் கிழித்து மனைவி, மகன் கண்களையும் மூடிக் கட்டினான் ஒருவன். கையில் பிடித்து இழுத்துப்போய் தெருவில் நின்றிருந்த ஜீப்பில் ஏறப் பணித்தான். பின்னால் நின்ற ட்றக்கில் சில சிப்பாய்கள். துப்பாக்கிகளை தயார் நிலையில் பிடித்துக் கொண்டு ஏறினார்கள்.

அரைமைல் வரை ஓடிய வாகனங்கள், நான் படித்த கலைமகள் பாடசாலை முன்னால் நின்றன. அதுவும் அவர்களுடைய கிளை முகாம். எங்களை இறக்கி உள்ளே கூட்டிப்போய் கதிரையில் அமரவைத்தார்கள். கண்கட்டுக்களை அகற்றிவிட்டு இடதுகையில் வெள்ளைக் கயிறு கட்டி மறுமுனையை கதிரைக் காலில் கட்டினான் ஒருவன். சீக்கிய சிப்பாயை காவலுக்கு வைத்தான்.

தேனீரும் சப்பாத்தியும் வந்தது.

“சாப்பிடுங்க...” என்றான் ஒரு சிப்பாய். அவன் அன்பாகத் தமிழில் பேசினான். என் மகனைப் பார்த்து “தம்பி சாப்பிடுங்க பயப்படாதீங்க... விசாரிச்சிட்டு விட்டிருவாரு பெரியவரு..” என்றான். அந்த ஆறுதல் வார்த்தை கேட்டு முகம் மலர்ந்து ஒரு சப்பாத்தியை எடுத்துக் கடித்தான், பார்த்திபன். அதன் பின் அந்த தமிழ் இராணுவ வீரன் எங்கள் பக்கம் வரவில்லை!

பாடசாலை அதிபரின் அறையில் இருந்த இராணுவ அதிகாரி யிடம் என்னைக் கூட்டிப் போனான் ஒருவன். அவன் மேசையில் இருந்த கடிதாசியைப் பார்த்து விட்டு, “உன் மகன் பிரபஞ்சன் எங்கே” என்றான்.

“அவன் வீட்டுக்கு வருவதில்லை...எங்கே என்று தெரியாது”

“வீட்டுக்கு வருவதில்லையா? எங்கே இருப்பான் என்று சொல்ல முடியுமா?...”

“தெரியாது சார்...”

வாசலில் நின்ற சிப்பாயைக் கூப்பிட்டான். இந்தியில் ஏதோ சொன்னான். சிப்பாய் என்னைக் கூட்டிப் போனான். மூன்று பேரினதும் கண்களைக் கட்டினான். ஜீப்பில் ஏற்றப்பட்டோம். ஜீப்பும் ட்றக்கும் கண்டி வீதியில் திரும்பி ஓடிக்கொண்டிருந்தன. எங்கள் அருகில் ஒரு சிப்பாய் முன் இருக்கையில் இருவர் துப்பாக்கிகளுடன் இருந்தனர். கண்கள் கட்டியிருந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்நோக்கிப் பார்க்க முடிந்தது. வாகனங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரி வாசலில் நின்றன. எங்களை இறக்கி குருடர்களுக்கு வழி காட்டுவது போல் என் கையைப் பிடித்து கல்லூரி வாசலைக் கடந்து மண்டபத்தின் பின்புறமாக சுற்றி இழுத்துப்போய் புறப்பட்ட இடத்துக்கே வந்து கல்லூரி அதிபரின் அலுவலகத்தின் பின்னால் பிரார்த்தனை மண்டபத்தில் விட்டு எங்கள் கண் கட்டுக்களை அவிழ்த்து விட்டான் சிப்பாய். திரும்பி யன்னலூடாகத் தெருவைப் பார்த்தேன் சிரிப்பு வந்தது.

மண்டபத்தில் ஒரு மூலையில் மூவரும் தரையில் அமர வைக்கப்பட்டோம். கையில் இருந்த நூல்கள் அகற்றப்பட்டன. ஒரு சிப்பாய் வந்து காவலுக்கு நின்றான்.

தாகத்துக்கு தண்ணீர் கேட்டேன். அவனிடம் அவனுக்கு விளங்கவில்லை. தூர நின்ற மற்றொருவனை அழைத்தான். என்னிடம் அனுப்பினான். "என்ன தேவை?" என்று கேட்டான். "தண்ணீர்" என்றேன்.

மண்பானையில் நீரும் பிளாஸ்ரிக் குவளையும் கொண்டு வந்து வைத்தான். பன்னிரண்டரை மணிக்குப் பகல் உணவு வந்தது. வெள்ளை அரிசிச் சோறு, பருப்பு, முழுக்கடலை எண்ணெயில் மிதக்கும் குழம்பும். பசி தணிக்க சிறிதே எடுத்துச் சாப்பிட்டோம்.

ஒரு பகலும் இரவும் கழிந்தன.

காலைக்கடன் கழிக்க கழிவறை செல்லும் வழி கேட்டேன். சைகை மொழியில் காவல் சிப்பாய் மற்றொரு சிப்பாயை அழைத்து என்னிடம் அனுப்பினான். அவன் தமிழன், அவன் என்னை அழைத்துப் போனான். என் பின்னால் மனைவியும் வந்தாள். கழிவறை நிரம்பி கதவுக்கு வெளியே குவிந்திருந்தது. திறந்த வெளிக் கழிப்பகமாக சாரத்தை மடித்துக் கட்டிக்கொண்டு மூக்கைப் பொத்தியபடி அமர்ந்தேன். எதிரே இருந்த கழிவறைக்கு மனைவி போனாள். அதுவும் நிரம்பி வழிந்திருந்தது. சிப்பாய் துப்பாக்கியை தயாராய் பிடித்தபடி எங்களைப் பாராது திரும்பி நின்றான். நாங்கள் எழுந்துநின்ற போது அவன் தண்ணீர்த் தொட்டியைக் காட்டினான்.

மண்டபத்துக்குத் திரும்பினோம். நாங்கள் போனபின் பார்த்திபன் கழிப்பறைக்குப் போக வேண்டும் என்றான். அவன் கையைப் பிடித்துக் கூட்டிப்போய் மிகக் கவனமாக திரும்பக் கூட்டிவந்தான் அந்த தமிழ்ச் சிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு மணியானதும் தேனீரும், சப்பாத்தியும் குழம்பும் வந்தன. பானையிலிருந்த தண்ணீரில் பல் துலக்கி கழுவினோம். மனைவி தேனீர் மட்டும் குடித்தாள். நானும் பார்த்திபனும் சப்பாத்தியைச் சாப்பிட்டோம்.

பகல் உணவாக சோறும், சாம்பாரும் கீரையும் வந்தன. அதனையும் பசிபோக்க சிறிது உண்டோம். பாத்திரங்கள் எடுக்க வந்த சிப்பாய் மலையாளி போல் தெரிந்தது. ஏன் "சாப்பிடவில்லையா?" என்று கேட்டான். "போதும்" என்றேன். மீதியை எடுத்துக் கொண்டு போனான்.

மூன்று மணியானபோது ஒரு சிறு மேசையும் கதிரையும் எங்கள் முன்னால் வைக்கப்பட்டன. ஒரு மேஜர் வந்து அமர்ந்தான். எங்கள் பெயர், பிள்ளைகளின் பெயர், வயது விபரம் கேட்டு எழுதினான். பிரபஞ்சன் எங்கே? என்றான். தெரியாது வீட்டுக்கு வருவதில்லை என்றேன். பார்த்திபனுக்கு ஒரு வரைபடம் தென்மராட்சி நிழல் படம் காட்டி "இங்கே போயிருக்கிறாயா? இந்த இடம் தெரியுமா? இங்கே இவனைத் தெரியுமா?" எனப் பல கேள்விகள் கேட்டான். தெரியாது என்றும் தெரியும் என்றும் சொல்லிக் கொண்டிருந்தான் பார்த்திபன். "இங்கே கமலன் வீடு தெரியுமா" என்று மேஜர் கேட்டான். "ஓ தெரியும்" என்றான் பார்த்தீபன். "கூட்டிப்போனால் காட்டுவாயா?" எனக் கேட்டான். "இவன் ஏன் தெரியும் என்கிறான்" எனக்கு வியர்த்தது.

"அவனைத்தான் போன கிழமை இராணுவம் சுட்டது... பேப்பர்ல பார்த்தேன்..." என்றான் பார்த்திபன்.

அவன் சாதூர்யத்தைப் பார்த்து வியந்தேன்.

"அப்படியா?... சரி இரு, நான்கு மணிக்கு நீ எங்களோட வரணும் சில இடங்களைப் பார்க்க சரியா..." போன மேஜர் மீண்டும் வரவில்லை.

கமலன் சுடப்பட்டதும் ... பதுங்கு குழிக்குள் வைத்து ஒரு போராளியின் பெற்றோர் சுடப்பட்டதும் அவன் படத்தில் காட்டிய கனகன்புளியடியில்தான் நடந்தது. அதை நினைத்து என் உடல் நடுங்கியது. எங்களை இவன்கள் போகவிடுவான்களா? அல்லது புலியின் பெற்றோர் என்று குற்றம் சுமத்தி.. அந்த இரவு நித்திரையின்றிக் கழிந்தது.

மூன்றாம்நாள் விடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் போலவே கழிப்பறைக்கு காவலுடன் போய் திரும்பினோம். பல் துலக்கிக் கொண்டோம். காலை உணவு வந்தது சாப்பிட்டோம். மற்றொரு மேஜர் நெற்றியில் விபூதியும் சந்தனமும் குங்குமப் பொட்டோடு, மண்டபத்துக்குள் வந்தான். அவன் மெய்க்காவலன் போலும் ஒரு சிப்பாய் துப்பாக்கியை தயாராகப் பிடித்துக் கொண்டு பின்னால் வந்தான்.

மேஜர் எங்களைப் பார்த்து "Who are you people?" என்று கேட்டான்.

"Sir we are brought here three days back... inquiry is over but..." நான் முடிக்கு முன்னர் "We will release you don't worry..." என்றான் அவன். போய்விட்டான்.

சிறிது நம்பிக்கை பிறந்தது.

சில நிமிடங்கள் செல்ல, மண்டபத்தின் நடுவில் வரிசையாய்க் கதிரைகள் போடப்பட்டன. அவற்றில் வெள்ளைத் துணிகள் வைக்கப்பட்டன. தாடி வளர்ந்த நிலையில் பத்துக்கு மேற்பட்ட சிப்பாய்கள் வந்தனர். அங்கே நின்ற சிப்பாய்களைக் கட்டித் தழுவினர். பின்னர் கதிரையில் அமர்ந்தனர். முடிவெட்டும் கருவி களுடன் இரு சிப்பாய்கள் வந்தனர். கதிரையில் இருந்தவர்களின் சிகை, தாடியை மழித்து அலங்கரித்தனர். ஒன்றும் புரியாமல் நான் பார்த்திருக்க பார்த்திபன் மெல்லச் சொன்னான். "அப்பா இவன்கள்தான் எங்கட ஆட்களிடம் பிடிபட்ட இருபதுபேர்..." உயிருடன் விடுவிக்க பேச்சுவார்த்தை நடக்கிறது என்று பேப்பரில் செய்தி இருந்தது நினைவில் வந்தது.

பொட்டு வைத்த மேஜர் அவற்றை கண்காணிக்கப் போலும் மண்டபத்துக்குள் வந்தான். அங்கு நடப்பவற்றைப் பார்த்துவிட்டு திரும்பிய நேரம் நான் எழுந்து போய் "Sir yesterday you said that you'il release me and..." என்றேன்.

"Yes. I'ill call you..." அவன் விரைந்து திரும்பி தன்னுடன் வந்த சிப்பாயிடம் ஏதோ சொன்னான்.

ஒரு சிப்பாய் வந்து "உங்களை சார் வரச்சொல்லுறது" என்றான். காவலுக்கு நின்ற சிப்பாயிடம் இந்தியில் சொல்லிவிட்டு எங்களைக் கூட்டிக்கொண்டு முன்பக்கம் போனான். அங்கே எங்களை இரண்டாம் நாள் விசாரிக்க வந்த மேஜர் முன்னால் விட்டனர். எங்களைக் காட்டி இந்தியில் கதைத்தான். "உட்காருங்க" என்றான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேஜர். அவன் எதிரே போடப்பட்டிருந்த வாங்குகளில் பல பெற்றோர் இருந்தனர்.

அவன் எங்களுக்கு பயங்கரவாதம் பற்றிச் சொன்னான். உங்கள் பிள்ளை பாடசாலைக்குப் போவதில்லையா என்று தமிழில் கேட்டான்.

"படிக்கிறார்..." என்றேன்.

"பயங்கரவாத வேலைகளில் ஈடுபட பிள்ளைகளை நீங்கள் அனுமதிக்கக் கூடாது... உங்கள் மகன் ஒருத்தன் பயங்கரவாதி... அவன் உங்கள் வீட்டுக்கு வந்து போவதாக எங்களுக்கு தகவல் கிடைக்கிறது... நீங்கள் மறுக்கிறீர்கள்... அது தண்டனைக்குரிய குற்றம்... உங்களை இப்போ விடுதலை செய்கிறோம். ஆனால் தொடர்ந்து கண்காணிப்போம்... நீங்கள் போகலாம். இங்கே கையொப்பம் போடுங்க..."

"எங்கள் வீட்டில் படையினர் இருக்கிறார்கள்... எப்படிப் போய் இருக்கிறது? சார்..."

"மெசேஜ் கொடுத்திருக்கு... அவன்க வெளியே போயிருப் பாங்க... நீங்க போகலாம்..."

பேருந்தில் போவதற்கு கையில் காசில்லை. நடந்தே போய்விடலாம், மூன்று மைல் தொலைவில் இருக்கும் வீட்டுக்கு. விடுதலையானதே பெரிய காரியம் நடை ஒன்றும் கடினமல்ல, கல்வயல் வழியே சென்றால் கிட்ட.

நடந்தோம்.

இந்திய இராணுவம் எங்களை கைது செய்து கொண்டுபோன செய்தி ஊரெல்லாம் பரவியிருந்தது.

இப்போ சுதந்திரமாய் தெருவில் நடந்து போவதைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டனர்.

"விட்டிட்டான்களா?" என்று கேட்ட ஒருவரின் முகத்தில் ஏமாற்றம் தெரிந்தது. "இவன்களைச் சுட்டிருக்க வேண்டும்" என அவர் மனம் நினைத்திருக்கும்.

கல்வயலில் எங்கள் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். அந்த வீட்டுப் படலையைத் திறந்தோம். ஆச்சரியம் மேலிட எங்களை வரவேற்றார்கள் அன்புடன் உபசரித்தார்கள். படைமுகாம் அனுபவங்களை மனைவி சொல்லிக் கண்கலங்கினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்டவர்கள் வருத்தம் தெரிவித்தனர். மதிய உணவு சாப்பிட்டு ஓய்வெடுத்து நான்கு மணியளவில் வீடு நோக்கி நடந்தோம். நாங்கள் விடுதலையான செய்தி எங்களை முந்திக்கொண்டு ஊருக்குள் போயிருந்தது.

கேள்விப்பட்ட எங்கள் மூத்த மகன் பிரபானந்தனும் அவன் நண்பர்களும் எங்களை எதிர்கொண்டனர். தாய் மகனைக் கட்டித் தழுவி கண்ணீர் சொரிந்தாள்.

வீட்டை அடைந்தோம் வேலிக் கிடுகுகள் அகற்றப் பட்டிருந்தன. வீட்டுக் கதவுகள் திறந்தே கிடந்தன. முற்றத்தில் நின்ற பூச்செடிகளும் நெடிதுயர்ந்து வளர்ந்து நின்ற அசோக மரங்களும் வெட்டிச் சரிக்கப்பட்டிருந்தன. தளபாடங்களும் பாவனைப் பொருட்களும் அங்கும் இங்கும் தெருக்கரையிலும் கிடந்தன.

நாங்கள் வந்துவிட்டதைப் பார்த்து அயலவர் ஓடிவந்தனர். "இப்பதானே போறான்கள்" என்றார் ஒருவர்.

'உங்கட இட்டிலிச் சட்டியில உங்கட கோழியைப் புடிச்சு வெட்டி கறி வைச்சான்கள்... இருந்தாற்போல் அதையும் தூக்கிக் கொண்டு ஓடுறான்கள்" என்றான் அக்காள் மகன். "உங்கட பாண்வெட்டுற மேசைக் கத்தியாலதான் கோழி வெட்டினாங்கள்" என்றாள் அக்கா.

"நீங்கள் தோசைக்கு மா கரைச்சு வைத்திட்டுப் போனீங்கள்... அவன்கள் சுட்டுத் தின்றான்கள்... எங்களுக்கும் தந்தான்கள்" என்றான் எதிர்வீட்டுச் சிறுவன்.

"திடீரென்று வெளிக்கிட்டுப் போறான்கள்... ஏன் என்று யோசித்தம்... நீங்கள் வர்றது தெரியுமோ?" என்று கேட்டாள் மருமகள். "ஓ, எயர்போனில் அறிவிச்சான்கள்" என்றேன்.

"உங்களைக் கூட்டிக் கொண்டு போனது இங்க சிலருக்கு சந்தோசம்... இயக்கத்துக்கு மகனை விட்டினம்... இப்ப கண்ணைக் கட்டிக்கொண்டு ஜீப்பில போகினம்.. விடமாட்டான்கள்... சுட்டுப்போடுவான்கள்" என்று சொன்னவரின் பெயரைச் சொல்லாமல் கண்கலங்கினாள் அண்ணன் மகள். "வீட்டைக் கொளுத்தவேணும்.. இவன்களை இந்த ஊரிலை இருக்கவிட்டால் எங்களுக்கும் கரைச்சல்" என்று தெருவில் நின்று சொன்னாராம் ஒரு அண்ணன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரகசியமாய்... இரவிரவாய் வந்து போனாங்கள்... அவை சாப்பாடு குடுத்தினம்... இப்ப எங்களை றோட்டில இருக்க வைச்சிட்டினம்... என்றாராம் ஒரு பெரியவர்.

முன் அறையில் அலமாரியில் அடுக்கியிருந்த புத்தகங்கள் கீழே பரவிக் கடந்தன. சில அட்டைகளில் இந்தி வார்த்தைகள் எழுதப் பட்டிருந்தன. தோல் கைப்பை திறந்து கிடந்தது. அதனுள் இருந்த முக்கிய பத்திரங்களும் ரூபா 5000ற்கான காசோலையும் கொட்டுண்டு தரையில் கிடந்தன. கதவுத் தாழ்ப்பாள்கள் வளைந்தும் உடைந்தும் கிடந்தன. எங்கும் குப்பை, எதிலும் ஒரு புதுவாடை, கிணற்றைச் சுற்றித் தண்ணீர், அழுக்கு வெள்ளமாய் தேங்கி நின்றது. கிணற்றி லிருந்து வித்தியாசமான வாடை வீசியது. அக்காவின் மகள் சொன்னாள் "அவன்கள் கிணற்றுக்குள்ள இறங்கி குளிச்சான்கள்.

வீடு கூட்டிக் கழுவி, முற்றம், சூழல் துப்பரவாக்கி சாணம் தெளித்து, கிணற்று நீர் இறைத்து, சாம்பிராணி தூபமிட்டு வழமைக்கு வர மூன்று நாளாயிற்று. அதுவரை அக்காள் வீட்டிலிருந்து உணவு வந்தது.

மூன்றாம் நாள் இரவு எங்கள் குசினியில் சமையில் செய்தோம். இரவில் பூட்டு இல்லாத கதவுகளை வெறுமனே சாத்திவிட்டுத் தூங்கினோம். அதுவரை எங்களுடன் இரவில் தூங்கிய பாத்திபனும் வெளியில் நண்பர் வீட்டில் இரவைக் கழித்துவிட்டு காலையில் வருவான். கதை இத்தோடு முடிந்து விடவில்லையே.

ஐந்தாம் நாள் காலை ஐந்து மணியளவில் இராணுவ வண்டிகள் வந்து தெருவில் நின்றன. எங்கள் நாயுடன் ஊர்நாய்களும் குரைத்தன. நித்திரை குழம்பி எழுந்து கதவு இடுக்கால் வெளியே பார்த்தேன். படையினர் மளமளவென்று குதித்து, படலையை உதைத்து விழுத்திவிட்டு உள்ளே வந்தனர். "வெளியே வா" என்றான் ஒருவன். ஓடி ஓடி அறைகளைத் திறந்து பார்த்தனர். வீட்டைச் சுற்றிப் பார்த்தனர். எங்கே மகன் என்று கேட்டான் ஒரு குஞ்சம் தொங்கும் தொப்பி அணிந்தவன்.

"எங்களை விசாரித்து முடிஞ்சுது" என்றேன்.

"கேட்டதுக்கு பதில் சொல்" என்று முறைத்தான் அவன்.

"இங்கே வருவதில்லை" என்றேன். தூரநின்ற ஒருவன் ஏதோ இந்தியில் சத்தமிட்டான். எல்லாரும் வெளியிலே ஓடினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களில் ஏறிக்கொண்டார்கள். மீண்டும் இராணுவம் எங்கள் வீட்டுக்கு வந்தது ஏன்? ஊரவர் கூடிப் பேசிக்கொண்டார்கள்.

பிரபஞ்சனைத் தேடி...

இது வேற குறூப்...

இரவிலை வந்து போறார்போல...

அதுதான் விடியமுன் வர்ராங்கள்...

பிடிச்சிடலாம் என்று...

இப்படிப் பலரும் பேசிக் கொள்வர்.

கிழமைக்கு ஒரு தடவையாவது வந்து போனார்கள். வந்தவுடன் எங்களை "வெளியே போ" என்பதும் அவர்கள் உள்ளே வந்து அறைகளைப் பார்ப்பதும் வழமையாயிற்று. ஒருநாள், எனது மேசையில் இருந்த போட்டோ ஒன்றை எடுத்து "இவனா பிரபஞ்சன்" என்று கேட்டான் ஒரு சிப்பாய். "இல்லை இவன் வெளிநாட்டில் இருக்கிறவன்" என்றேன். அவனோ அந்தப் படத்தை எடுத்துக் கொண்டு தெருவுக்குப் போனான். போவோர் வருவோரிடம் "இவன்தானா பிரபஞ்சன்" என்று கேட்டுக் கொண்டு நின்றான். "இல்லை" என்று பதில் கிடைத்தாலும் படத்தைத் தன் பொக்கற்றில் வைத்துக் கொண்டான்.

மற்றொரு நாள் காலை ஏழு மணிக்கு வந்தார்கள். அந்நேரம் மனைவி குசினியில் இடியாப்பம் அவித்துக் கொண்டிருந்தாள். அவள் முன்னால் வந்து நின்ற ஒரு அதிகாரி "இடியாப்பம் புலிக்கா?" என்று கேட்டான். அவள் "இல்லை" என்றாள் தலை குனிந்தபடி. அவன் போன பிறகு சப்பாத்துக் காலோட எனக்கு முன்னால் வந்து நிக்கிறானே என்ன கொடுமை என்று முணுமுணுத்தபடி தண்ணீர் ஊற்றித் தரையைக் கழுவினாள். அவர்கள் வாகனங்களில் ஏறப்போனவேளை, இரவுப் பொழுதை வெளியில் கழித்துவிட்டு வந்த பார்த்திபனைக் கண்டார்கள். "இவன்யார்?" என்று என்னிடம் கேட்டான் அந்த அதிகாரி. "என்னுடைய மகன் அவனை விசாரித்து விடுதலை செய்துவிட்டார்கள்" என்றேன்.

"ஓ... நோ... உன்னை விசாரிக்க வேணும்" என்று அவன் கையைப் பிடித்தான், அவனை "ஏறு ட்றக்கில்" என்றான்.

"நானும் வருகிறேன்" என்றேன்.

"நீ போ.." என்று கையை ஓங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்றக்கில் கடைசியாய் ஏறிய ஒரு தமிழ்ச் சிப்பாய் "நீ கொஞ்சம் பொறுத்து வா" என்றான்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு சாவகச்சேரி இந்துக்கல்லூரிக்கு ஓடினேன். அன்று எங்களை விசாரித்த மேஜர் முன் அறையில் இருந்தான். "சார் எங்களை விசாரித்து வீடு போக அனுமதித்தீங்க.. இப்ப திரும்பவும் என் மகனைப் பிடித்து வந்திட்டார்கள்...?" என்றேன்.

"இன்னும் விசாரிக்க இருக்கு... நீ நாளைக்கு வந்து அவனைக் கூட்டிப்போ.. ஒரு கவண்மேன்ற் ஆபிசரோடு வந்து கையொப்ப மிட்டு கூட்டிப்போ..." என்றான்.

அடுத்த நாள் காலை பத்துமணிக்கு எங்கள் கிராம உத்தியோகத் தருடன் சென்று கல்லூரிவாசலில் நின்ற சிப்பாய்களிடம் உள்ளே போக அனுமதி கேட்டபோது, மறுத்து தமிழ் சாயலில் ஏதோ மொழியில் பேசினார். முதலில் தமிழில் சொன்னதோ பிறகு ஆங்கிலத்தில் சொன்னதோ இவர்களுக்கு விளங்கவில்லை. திரும்பவும் "மேஜர் கர்வால்" என்றும் "இவர் கவண்மேன்ற் ஆபிசர்" என்றும் சைகை மொழியில் வரச் சொன்னார் என்றும் சொன்ன பிறகு... "ஆ.. சர்க்கார் ஆபீசர்.. ஓ போ... போ..." என்றான் ஒருவன். பின்னர்தான் அறிய முடிந்தது அவர்கள் கன்னடர் என்று.

"குட் மேனிங் சார்..."

"யேஸ்..."

"ஒரு கவண்மென்ற் ஆபிசருடன் வந்திருக்கிறேன்... என்னுடைய மகனை விடுவதாக நேற்று சொன்னீங்க..."

"உட்காருங்க..." என்றான். அருகில் நின்ற ஜவானுடன் ஏதோ இந்தியில் பேசினான். "பெயரென்ன...?" என்னிடம் கேட்டான். பார்த்திபன் என்றேன்.

ஜவான் உள்ளே போய் என்மகனை கூட்டிவந்தான். அவன் கையில் வெள்ளைக் கயிறு கட்டப்பட்டிருந்தது. மறுமுனையில் ஜவான் வைத்திருந்தான். மேஜர் சொன்ன பிறகு ஜவான் கயிற்றை அவிழ்த்துவிட்டான்.

மேஜர், "பயங்கரவாத செயல்களில் உங்கள் பிள்ளைகள் ஈடுபட அனுமதிக்கக் கூடாது" என்று தொடங்கி சில அறிவுரைகள் சொன்னான். எங்கள் பெயர், முகவரி கேட்டு எழுதிக் கொண்டான். "கையொப்பம் போடுங்க" என்றான். பேச்சினிடையே "நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாரையும் துன்புறுத்துவதில்லை... கேளுங்க... யாராவது அவனை அடித்தார்களா? என்று..." என்னைப் பார்த்தான். "யாரும் அடித்தார்களா உனக்கு?" என்று பார்த்திபனைக் கேட்டேன். அவன் "இல்லை" என்றான்.

"சார்... இவனைத் திரும்பவும் யாரும் கைது செய்ய வந்தால்.. ஒரு சேட்டிபிகேற் தரமுடியுமா காட்டுவதற்கு?" என்று கேட்டேன். "Yes I'ill give you..." என்றவன் ஒரு கடதாசி எடுத்து எழுதினான். என்னிடம் தந்தான். பார்த்தேன்.

"Vinayagamoorthy Parthipan of madduvil south, Chavakachcheri was taken into custody and released after interrogation.

- Maj. G.R. Garwal

என்றிருந்தது.

"நன்றி" சொல்லிவிட்டு தெருவுக்கு வந்தோம். கொஞ்சதூரம் போனதும் என் கையைப் பற்றி அழுதபடி பார்த்திபன் சொன்னான், "அப்பா என்னைக் கூட்டிவந்தானே கயிற்றோட... அவன் எனக்கு அடிச்சவன். அப்பா, யாரிடமும் சொன்னால் கொன்று போடுவேன் என்றான் அப்பா..."

"We don't harm anyone... என்றானே மேஜர் அங்கே உள்ளே நடக்கிற சித்திரவதை ஒன்றும் இவனுக்கு தெரியாதோ..." இதயம் கனத்தது.

வீட்டை அடைந்ததும் அயலவரும் பார்த்திபனின் நண்பர் களும் வந்து கூடினர். நடந்தவை எல்லாம் சொல்லி சேட்பிக் கேற்றையும் காட்டினோம். இனி எந்தப்படை வந்தாலும் இதைக் காட்டு என்று சொல்லி சேட்டிக்கற்றை மேசையில் வைத்தேன்.

சொல்லிவைத்தாற்போல் அடுத்தநாளும் ஒரு பிரிவு. இருபது பேர்வரை வந்தனர்.

எங்களுக்குப் பழகிப்போன நடவடிக்கை ஆயிற்று. மேசையில் தயாராய் வைத்திருந்த சேட்டிபிக்கேற்றை எடுத்து அவர்களில் அதிகாரிபோல் தெரிந்த ஒருவனிடம் காட்டினேன். மேசை விளிம்பில் அமர்ந்தபடி அதைப் படித்தவன் இந்தியில் ஏதோ பேசினான். ஜவான்களுக்கு கட்டளையிடுவது போல் தெரிந்தது. மறுகணம் எல்லாரும் வெளியேறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு போராளியைத் தேடி இந்திய அமைதி காக்கும்படை இரவு பகலாய் எங்கள் வீட்டுக்கு வந்து போவது தொடர்கதையாயிற்று. எங்கள் உறவினர்களுக்கும் அயலவர்களுக்கும் ஒவ்வாத சம்பவ மாயிருந்தது. எங்கள் மீது அவர்களுக்கு பரிவு இருக்கவில்லை. மாறாக சினமும் பகையும் பிறந்தன. படைகள் வந்திறங்கியதும் எங்கள் நாயுடன் ஊர் நாய்களும் சேர்ந்து குரல் எழுப்பும். அவர்கள் தூக்கம் கலையும். "இத்தொல்லை எப்போதுதான் முடியும்" என்று அவர்கள் பேசிக்கொள்வார்கள். வீட்டை விட்டு இவர்களை விரட்டுவது எப்படி என்று சிலர் ஆலோசிப்பதும் எங்கள் காதிற்கு எட்டியது.

இன்றிருக்கும் வீடு வீடாக இல்லை. சப்பாத்துக் கால்களால் உதைத்து உடைக்கப்பட்ட கதவுகள். யன்னல்களை திருத்துவதற்கும் பணமில்லை. அப்படி மாற்றியமைத்தாலும் அவர்கள் மீண்டும் வந்து உதைத்து உடைக்க மாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. குறுக்காக வெட்டப்பட்ட முற்றத்து மரங்கள் செடிகள் பட்டுக் கொண்டிருந்தன. பந்தலாக நின்ற ஒன்பது வண்ணங்களில் பூ மலரும் போகன் வில்லாக்கள், செவ்வரத்தை, நந்தியாவட்டை, செவ்விளனீர் தென்னை, எலுமிச்சை, வாழை, அசோகா எவையுமே மீண்டும் துளிப்பதாக தெரியவில்லை. வீட்டுத் தளபாடங்கள் பாவனைப் பொருட்கள், பெரும்பகுதியும் உடைந்து காணாமல் போயின.

இவை யாவும் மனதில் கொண்டு அரியாலையில் இருக்கும் சகோதரி வீட்டுக்கு மாறுவதற்கு முடிவுசெய்தோம். கைகளில் சில பொருட்களை எடுத்துக் கொண்டு, மீதியைப் பார்த்துக் கொள்ளும்படி அடுத்த வீட்டு சகோதரியிடம் சொல்லிக் கொண்டு வெளியேறினோம்.

ஆளில்லா வீட்டையும் இராணுவம் விட்டுவைக்கவில்லை. அயலவருக்கும் ஆடு மாடுகளுக்கும் வீடு தன்னாலியன்ற பங்களிப்பை உதவியது.

படையினர் வந்து திறந்து கிடக்கும் வீட்டில் புகுந்து சோதனை நடத்திவிட்டுப் போக அயலவர் கதவு யன்னல் பலகைகளை கழற்றி எடுத்தும் தென்னையில் ஏறி இளநீர் பறித்துக் குடித்தும் விழுந்த தேங்காய்களைப் பொறுக்கியும் பயனடைந்தனர். வீட்டுப் பாவனைப் பொருட்களும் தளபாடங்களும் ஒவ்வொன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்தன. கிணற்றுக் கட்டில் ஆணி வைத்துப் பொருத்தப் பட்டிருந்த நீர் இறைக்கும் இயந்திரத்தை படையினர் தகர்த்தெடுத்து சாக்குப் பையில் வைத்து தூக்கிப் போனதைப் பார்த்தவர்களில் ஒருவர் மட்டும் என்னிடம் சொன்னார். யாரோ கொடுத்த பொய்த்தகவல்களால், வீட்டின் பின்னால் இருந்த சிறு கொட்டிலில் பல இடங்களில் மண்வெட்டியால் தோண்டிப் பார்த்த படையினர் எதுவும் கிடைக்காது ஏமாந்தனர். அந்த இடத்தில் புதைத்து வைக்கப்பட்ட சில போராளிகளின் போட்டோப் படங்கள் அடங்கிய பை மட்டும் தப்பிப் பிழைத்தது.

இடம் பெயர்ந்து போய் சகோதரி வீட்டில் இருந்த நிலையிலும் விட்டுவைத்தார்களா! சகோதரிகளின் பிள்ளைகளை, மருமக்கள் கொண்ட கூட்டுக் குடும்பம் அது. அவர்களுக்கு ஒரு கடிதம் வந்தது. “இவர்களை (என்பெயர் குறித்து) மாற்று இயக்கத்தவர் தேடுகிறார்கள் வைத்திருந்தால் உங்களுக்கும் ஆபத்து வெளியேற்றி விடுங்கள்” என்று எழுதப்பட்டிருந்தது. சகோதரிக்குத் தொல்லை கொடுக்க நான் விரும்பவில்லை. நாச்சிமார் கோவிலடிக்கு இடம் மாறினோம். அங்கே இருந்த நாளில் நான் கடத்தப்பட்டு பதினைந்து நாள்கள் தடுத்துவைக்கப்பட்டு அடியும் உதையும் வாங்கியது மற்றொரு அத்தியாயம்.

படித்து முடித்தேன்.

“மிகவும் பயங்கரமாக இருக்கிறது” என்றேன். “இதுபோல் ஒவ்வொருவரிடமும் பல கதைகள் இருக்கிறது” என்று அந்த அதிகாரி சொன்னார்.

ஒவ்வொரு நாளும் ஓவியக்காட்சி முடிந்தவுடன் பதிவேட்டில் மக்கள் எழுதிய கருத்துக்களை அன்றைய இரவே உறங்குவதற்கு முன் படித்துவிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தேன்.

■ சென்ற ஐம்பதாண்டுகாலமாக தமிழ் மண்ணும் தமிழ் மக்களும் தமது சொந்த மண்ணில் வைத்து சிறீலங்கா அராஜக இராணுவத்தினரால் இந்த மண் சிதைக்கப்பட்டும் இம்மக்கள் துன்புறுத்தப்பட்டதுமான உண்மை நிலையை தனது ஓவியக் கலைஞானத்தின் மூலம் வெளிப்படுத்தி வருங்காலச் சந்ததியினரை விழிப்படையச் செய்துள்ளீர்கள்.

*-நா.கார்த்திகேசு, பளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ யாழ் வெளியேற்றம் எனும் ஓவியத்தின் கருத்தில் "முளைக்க ஒரு பிடி மண்தேடி" என்ற கவி வரி.. ஈழத்தின் எல்லையை தாண்டி தென்றலோடு தமிழ்நாட்டில் வேரூன்றி விட்டது. அதில் நானும் ஒரு சிறு செடி.

*-AN. ஆனெட் பிரகேஸ்வரி*

■ தமிழ் மக்களின் கடந்தகால நினைவுகள் அனைத்தையும் வழிகாட்டிய ஓவியங்கள். அனைத்தும் எம்மனதில் விழிப் புணர்வையும் உண்மைச் சம்பவங்களையும் வெளிக்காட்டி நிற்கின்றன.

*-எஸ்.ஜீவா*

■ அடக்கு முறைக்குள் அமிழ்ந்து கொண்டிருந்த எம் தேசத்தை தூக்கி நிறுத்தி எம் நாட்டு மக்களின் இன்னல் புரிந்து, இதயம் புரிந்து அவர்களின் இன்னல்களுக்கும் இழப்புகளுக்கும் உயிர் கொடுத்த புதிய ஓவியரை ஓவியத்தின் வழிக் கண்டேன். புரியாத புதிர் என்று பல பேர் நினைக்கின்ற விடுதலையை புரிய வைத்த நம் தேசத்து நிலமைகளை வெளிப் படையாக வெளிச்சம் போட்டு காட்டிய ஓவியங்களை கண்டேன்.

சிறகு விரித்து/விதை ஒன்று அலையும்/ முளைக்க ஒரு பிடி மண்தேடி- இந்த குறுக் கவியில் நம் தேசிய போராட்டமே அடங்கியுள்ளது. என்றும் இதயம் மறக்காத நம் போராட்டம் என்றால் உங்களையும் தான்.

*-ந. கவிதா,இயக்கச்சி*

■ சிலரால் மறக்கப்பட்ட பலரால் மறக்கவே முடியாத மூடிமறைக்கப்பட்ட கோரங்கள் பலவற்றை மீண்டும் நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்தியிருக்கும் ஓவியங்கள்.

*-அ.கணேசன்*

■ தமிழர் படுகின்ற அவல வாழ்வின் அகராதி இது.

*-க.தர்சிணி*

■ மண் விடுதலை கவிதை வடிவும் கலைவடிவும் இணைந்த ஓர் உன்னத பயணம். ஓவியர் புகழேந்தி தனது கலைப் பார்வையால் ஈழத்து தமிழர்களின் துன்பஉணர்வுகளை எதார்த்தமாக வடித்திருக் கின்றார். எமது விடுதலைப் போராட்ட உணர்வு வரலாற்றுடன் கலைஞரையும் ஈழமக்கள் சார்பாக உள்வாங்குகின்றோம்.

*-மா.குமாரவேலு, பளை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இந்த மண்ணின் வாழ்வியல் சிதறல்கள் சித்திரமாகப் படைக்கப்பட்டுள்ளது.

*- அதிபர், சோழன்பற்று கணேசவித்யாலயம், பளை*

■ காடையர்களினதும் சிங்கள இனவாதத்தினதும் கொடுமைகளையும் அவர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளையும் வரைந்து இறுதியில் எவ்வாறு எம்மினம் தழைத்தோங்குகிறது என்பதை படைப்புகள் வெளிப்படுத்துகிறது.

-X X X

பளை, சண்டையில் முற்றிலுமாக அழிக்கப்பட்ட நகரம். சண்டை நிறுத்தக் காலத்தில்தான் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டிருக்கிறது. இடிந்து கிடக்கும் கட்டிடச் சுவர்களில் இன்னும் தோட்டாக்கள் குண்டுகள் பட்டக் காயம், போரின் கொடுமையை சொல்லிக் கொண்டிருக்கின்றன. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு மரண ஓலங்கள்

மட்டக்களப்பைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், என்னைச் சந்தித்து நேர்காணல் பதிவுசெய்து விட்டு, நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். அப்பொழுது, நீங்கள் கிழக்கு மாகாணத்தில், குறிப்பாக மட்டக்களப்பு பகுதியில் நடைபெற்ற, சிறீலங்கா இராணுவத்தால் திட்டமிட்டு செய்யப்பட்டப் படுகொலைகளை ஓவியங்களாகப் படைக்கவேண்டும். அவை மிகவும் கொடூரமானப் படுகொலைகள். தமிழீழ விடுதலைப்போரில் காலத்துக்கு காலம் தமிழின அழிப்பில் சிங்கள இனவாத அரசுகளும், அரசு இராணுவமும் ஈடுபட்டன. ஈடுபட்டு வருகின்றன. தமிழீழ தேசமெங்கும் தமிழினப் படுகொலைகளை இராணுவத்தினர் அரங்கேற்றிய போதும், கிராமங் கிராமமாக வகை தொகையின்றி கொல்லப்பட்டது தென் தமிழீழத்திலேதான்.

வட தமிழீழத்தைப்போலல்லாது தென் தமிழீழம் சிங்களக் குடியேற்றத்தாலும், இராணுவக் கொலைப்பசியிலும், இராணுவத் துடன் கூடி நின்ற சிங்கள, முஸ்லிம் காடையர்களாலும் பிய்த்துக் குதறப்பட்டது. தமிழ் நிலங்கள் மட்டுமின்றி இருபதினாயிரத்துக்கு மேற்பட்ட தமிழர் உயிர்களையும் கணக்கிட முடியாத உடமை களையும் பேரினவாத இராணுவம் விழுங்கிக் கொண்டது. மட்டு, அம்பாறை மண்ணில் வாழும் பதினேழாயிரத்து ஐந்நூறு (17500) விதவைத் தாய்மார்களே இதற்குச் சான்று.

கோரக் கொலைகளை சிங்கள இராணுவத்தினர் வட தமிழீழத்தில் நடத்திய போதெல்லாம் அவை முழுமையாக வெகுசனத் தொடர்பு சாதனங்களால் வெளியுலகுக்கு கொண்டு வரப்பட்டன. வரலாறாக பதியப்பட்டன. ஆனால் தென் தமிழீழத்தில் நடந்த கொடூரமான கொலைகள் வெளியுலகத்துக்குத் தெரியாமலேயே மறைக்கப்பட்டன. யாழ்ப்பாணம் செம்மணிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதைகுழிபோல, கோட்டைப் பிரதேச புதைகுழிபோல, கிளிநொச்சி புதைகுழிபோல் நூற்றுக்கணக்கான மனிதப் புதைகுழிகள் மட்டு-அம்பாறை மண்ணில் மறைக்கப்பட்டுக் கிடக்கின்றன. கொக்கட்டிச் சோலை, மகிழடித்தீவு, தோணித்தண்டான்ட மடு, புல்லுமலை, சித்தாண்டி, வந்தாறு மூலை, புனானை, பெண்டுகல் சேனை, உடும்பன்குளம், சத்துருக்கொண்டான், அட்டப்பள்ளம், வீரமுனை என்று படுகொலைகள் நீள்கின்றன. இவைகளையும் நீங்கள் ஓவியங்களாகச் செய்து, வெளியுலகுக்கு கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள்.

நான் அதிர்ந்து போனேன். கடந்த 23 ஆண்டுகளாக இந்த போராட்டத்தோடு நின்று, இந்த வரலாறுகளை அறிந்த நானே இந்த படுகொலைகள், ஒன்றிரண்டைத் தவிர மற்றவற்றை அறியவில்லை. வெளியிலும் தெரியவில்லையே. "அதுபற்றியத் தகவல்களைத் தாருங்கள் நான் முயற்சி செய்கிறேன்" என்று சொன்னேன். "அப்படுகொலைகள் குறித்த முழுமையான ஆவணம் என்று சொல்ல முடியாவிட்டாலும் சில படுகொலைகள் குறித்து 'மௌனப் புதைக் குழிக்குள்' என்று மணலாறு விஜயன் எழுதியிருக்கிறார். அவற்றைத் தருகிறோம். படித்துப்பாருங்கள் அது உங்களுக்கு உதவும்" என்றார்கள்.

அவர்களுடன் உரையாடியது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. பல நிகழ்வுகளையும் உண்மைகளையும் அறிந்து கொள்ள முடிந்தது. இன்னும் நீண்ட நேரம் உரையாட வேண்டும் இன்னும் பல தகவல்களை பெறவேண்டும் என்ற ஆசை எனக்கிருந்தாலும், நேரம் என்னை அனுமதிக்கவில்லை. கனத்த இதயத்தோடு அவர்களுக்கு விடைகொடுத்தேன். அவர்களுக்கு விடை கொடுத்தேனே ஒழிய அவர்களின் உரையாடல் என் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தி, என் மனம் திரும்பத் திரும்ப அந்த உரையாடலைச் சுற்றியே அசைப் போட்டுக் கொண்டிருந்தது. அதனால் 'மௌனப் புதைக் குழிக்குள்' நூலை படிக்கத் தொடங்கினேன்.

## கொக்கட்டிச்சோலைப் படுகொலை

தமிழீழத்தில் மீன்பாடும் தேநாடு என வர்ணிக்கப்படும் மட்டுநகர் மண் தேநாடு மட்டுமல்ல, நெல்விளையும் பொற்பூமியும் கூட. அழகொளிரும் கிராமங்களைக் காணவிரும்பும் மனிதர்கள் எங்கும் அலையத் தேவையில்லை. நேராக மட்டுநகர் மண்ணில் காலடி வைத்தால்போதும். திரும்பும் திசையெல்லாம் பொன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையும் நெல்வயல்கள். நடுவே ஒரு பெரும்மேடு. அந்த மேட்டின் பத்துப் பன்னிரண்டு தென்னை அவற்றின் நடுவே அழகோடு ஒரு வீடு. நாற்புறமும் நீரால் சூழப்பட்டு தீவு என்ற பெயர் பெற்ற கிராமங்கள் போல நாற்புறமும் வயலால் சூழப்பட்டதீவு மகிழடித்தீவு, அரசடித்தீவு, போரத்தீவு என வருகின்ற கிராமங்கள் வயல்வெளிகளைச் சார்ந்து பெருக்கெடுத்து வரும் அருவிகளின் அருகே பெண்டுகல் சேனை, இலுப்படிச் சேனை, மாவடிச் சேனை என வரும் கிராமங்கள். இவையெல்லாம் மட்டுநகர் மண் வளங்குன்றா மண் என்பதை பார்ப்பவர்களுக்கு எளிதில் புலப்படுத்தி விடும்.

சிறுகக் கட்டிப் பெருக வாழும் வீடுகளில் பொற்குவியல் போல் செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருக்கும் பண்பாடு மாறாத மனித உள்ளங்கள் தமிழீழ சுதந்திரப்போருக்காய்ப் பிள்ளைகளை அனுப்பி வைத்த வெற்றிக்காய்க் காத்திருக்கும் வீரமிகு தாய்க்குலம். இவையெல்லாம் தமிழனின் இருப்பு இன்னும் அழிந்து விடவில்லை·என்பதை எடுத்துக்காட்டும்.

மண்ணை நம்பி வாழ்ந்திருக்கும் இந்த மக்கள் தங்கள் மண்ணை சிங்கள ஆக்கிரமிப்பில் பறிகொடுத்துவிட விருப்பமில்லை. மண்ணை மாத்திரமல்லாது தங்கள் வாழ்வின் அடித்தளமாய் விளங்கும் பண்பாட்டையும் இழந்துவிடத் தயாரில்லை. ஆனால் இவ்விரண்டையும் அழித்து ஆக்கிரமித்துவிட சிங்களப் பேரின வாதம் கங்கணம் கட்டிநின்றது. வகைதொகையின்றிக் கொடூரமாக இவர்களைக் கொலை செய்வதன்மூலம் அச்ச உணர்வினை ஏற்படுத்தி இம்மண்ணையும் பறித்து, பண்பாட்டையும் பறித்துவிட முடிவு செய்தது. சிங்கள பேரினவாதத்தின் இந்த முடிவின் விளைவுதான் கொக்கட்டிச்சோலைப் படுகொலை, சத்துருக் கொண்டான் படுகொலை, வந்தாறுமூலைப் படுகொலை, புல்லு மலைப் படுகொலை, உடும்பன்குளப் படுகொலை, தோணி தாண்டான்மடுப் படுகொலை என நீண்டுச்செல்லும் தமிழ்ப் படுகொலைகள்.

சர்வதேச உலகமும், சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், கண்மூடி காணாதது போலிருந்துவிட்டன. இப் படுகொலைகளை மரணத்துக் கஞ்சி படித்த மேதைகள் என்று தமக்குப் பட்டம் வாங்கிக் கொண்ட எங்கள் மக்களும் எழுதிவைக்கத் தவறிவிட்டார்கள். ஒரு பெரும் இன அழிப்பின் துயரத்திலிருந்து மீண்டுவிட எழுந்ததுதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் விடுதலைப்போர். ஆண்டுகள் பல மறைந்தாலும் படுகொலையிலிருந்து தப்பித்துக் கொண்ட ஒருசில மக்களின் மனங்களிலிருந்து அந்தக் கொடூர நினைவுகளை அகற்றிவிட முடியாது. அவர்களின் மனச்சிறைக்குள் அடங்கிக் கிடக்கும் அந்தக் கொடூர நினைவுகளை எங்கள் இனத்திற்கு அறியக்கொடுப்பது வரலாற்றுக் கடமையாகும்.

22.03.2001 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி நடுவானில் சூரியன் விழுந்து கொண்டிருந்தாலும் பங்குனிப் புழுக்கம் குறைந்து விடவில்லை. கொக்கட்டிச் சோலையிலிருந்து மகிழடித்தீவுக்கு வந்திருந்தேன். மகிழடித்தீவு சந்தி கொடூர படுகொலைகளால் மகிழ்வை இழந்து போய்க் கிடந்தது. சந்தியின் அருகே கிறிஸ்தவ தேவாலயமொன்று. சிலுவை சுமந்த யேசுவின் முன்னாலேயே இப்பெரும் படுகொலைகள் அரங்கேறிவிட்டன. தேவாலயத் தினருகே வசதிகள் பல கொண்ட வைத்தியசாலையொன்று இருந்தது. ஆனால் இரும்புப் பூட்டுக்கள் நாலைந்தினால் கம்பிக் கதவுகள் இழுத்துப் பூட்டப்பட்டிருந்தன. டாக்டர்கள் யாரும் இங்கு வந்திருந்து வைத்தியம் செய்யத் தயாரில்லை. படுகொலைகள் நடந்து ஒரு தசாப்தம் கடந்திருந்தாலும் அந்தக் கொடூர நினைவுகள் உயிரை இன்னும் விரட்டிக் கொண்டிருப்பதை அந்த வைத்தியசாலை காட்டியது. சந்தியில் நின்று பார்த்தால் பெரும் வயல் வெளிகளையும், வயல்வெளியைக் கடந்து மட்டுநகரின் எழுவான் கரையினையும்,படுவான் கரையினையும் பிரிக்கும் வாவியையும் துல்லியமாக காணலாம். எழுவான் கரையிலிருக்கும் மண்முனை இராணுவமுகாம் மகிழடித் தீவிலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்திலேயே இருந்தது. மகிழடித்தீவை நோக்கி அவர்கள் வைத்திருக்கும் பீரங்கிக் குழல்கள் இன்னும் கொலைப் பசியோடுதான் இருக்கின்றன.

மகிழடித்தீவு சந்தியிலிருந்து சிலநூறு மீற்றர் தூரத்தில் அமெரிக்காவின் நிதியுதவித் திட்டத்தோடு உருவான இறால் பண்ணைத் திட்டத்தின் எச்ச சொச்சங்கள் சில தெரிந்தன. 1987ஆம் ஆண்டு தைத்திங்கள், 28ஆம் நாள் இறால்பண்ணை தமிழ் மக்களின் இரத்தப் பண்ணையாக மாறியநாள். தை பிறந்தால் வழிபிறக்கு மென்றிருந்த நாளில் கொடும் கொலைகள் நடந்துபோனது. வாய்பேசமுடியாத கண்ணீரால் மட்டும் கதைபேசி நிற்கும் பல விதவைகளை உருவாக்கிவிட்ட நாள். இன்றும் இன்னும் வாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டு அழுதால் கொல்லப்பட்டுவிடுவோம் என்று அஞ்சி நடுங்கும் நிலையை உருவாக்கிய நாள்.

உலகப் பொலிஸ்காரன் எனச் சொல்லப்படும் அமெரிக்காவின் நிதியுதவியோடும் கண்காணிப்போடும் இயங்கிய இறால் பண்ணையின் 135 தமிழ்மக்களின் குருதிச்சேறுபடிந்த துயரம் ஏன் வெளியுலகுக்குத் தெரியவில்லை? ஏன் தெரிவிக்கப்படவில்லை? இந்த கேள்வி மனதில் எழுந்து நிற்க செல்லத்துரை- ரவிநாதன் ஆசிரியர் வீட்டு முற்றத்தில் அமர்ந்தேன்.

இறால் பண்ணைப் படுகொலையில் தப்பிவிட்ட ஒரு சிலரில் இவரும் ஒருவர். அன்று இறால் பண்ணையின் இரவு நேரக் காவலாளியாக கடமைபுரிந்தவர். கொலை நடந்த அன்று பகல் நேரக் காவலாளியாக மாற்றம் பெற்றிருந்தார். கொலைத் தாண்டவத்தின் ஒரு பகுதிக்குள் சிக்கித் தடுமாறி தப்பித்துக் கொண்ட இவரிடம் அந்த நாள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டேன்.

“நான் அதிகாலையிலேயே வேலைக்குப் போக வெளிக்கிட்டேன். வெளிக்கிடேக்க ஒருநாளும் இல்லாதமாதிரி ரெண்டு மூண்டு கெலி சுத்திச்சுத்தி அடிச்சுக்கொண்டிருந்தான். ஏதோ நடக்கப்போகுதெண்டு தெரிஞ்சுட்டுது. இறால்பண்ணையை நோக்கி ஓடினேன். ஆம்பிளைங்க கனபேர் பண்ணையை நோக்கி ஓடிவந்தாங்க. வெள்ளக்காரன்ர பண்ணதான் எதுவும் செய்ய மாட்டானெண்டு எல்லோருக்கும் நம்பிக்கை. முதலும் ரெண்டு தடவை இப்பிடி சுத்தி வளைச்சு பிடிச்சு விசாரிச்சிட்டு விட்டிருந்தான். அதால அந்த நம்பிக்கையில ஓடினம். சந்தியில பவல்வாகனம் வந்து நிண்டுது. அதில இருந்து ஆமி குதிச்சுக் குதிச்சு ஓடிப்போய் வீதி ஓரத்தில் பதுங்கினாங்க.

முதல் முதல் எஸ்.டி.எஃப் எப்பிடி இருப்பாங்க எண்டதை அண்டைக்குத்தான் பாத்தம். வீதி ஓரத்தில் பதுங்கி இருந்தவங்க எல்லோருமே இறால் பண்ணையை நோக்கித்தான் துப்பாக்கிய நீட்டியிருந்தாங்கள். ஒருத்தன் எழும்பி நம்மள நோக்கி துவக்க நீட்டினபடி வந்தான். இதப் பார்த்தவுடனேயே எங்களோடு நிண்ட ரெண்டு மூண்டுபேர் குனிஞ்சுகொண்டு தண்ணீக்கால மெது மெதுவாக ஓடினாங்க. “அம்பிகைபாதம், ஓடோதேங்கோ. ஓடினா எல்லோரையும் சுடுவான். திரும்பிவாங்கோ” என மெதுவாய் கூப்பிட்டம். திரும்பி வந்தாங்க. வரேக்க முகமெல்லாம் ஒரு மாதிரியா மாறிட்டுது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலைக்குடா, முனைக்காடு, மகிழடித்தீவு, அம்பிளாத்துறை என எல்லா இடங்களிலுமிருந்து வந்தவங்களும் இதுக்க பட்டிட்டாங்க. வயல்வேலையில நிண்டிட்டு வீட்டுக்குப் போய்க் கொண்டிருந்த நாராயணபிள்ளை திரும்பி பண்ணைக்குள்ள ஓடிவந்தார். முதல்வெடி அவருக்குத்தான் விழுந்தது. அவர் நல்ல வாட்டசாட்டமான மனுசன். முறுக்குமீசையும், எழும்பின தோற்றமும் நல்ல பலசாலி, மூண்டு ஆமி நாங்க நிக்கிற இடத்துக்கு வந்திட்டான்.

எல்லோரையும் ஒரு இடத்துக்கு வருமாறு கத்திக் கூப்பிட்டான். எல்லாரும் நடுங்கிக்கொண்டு நிற்க ஒரு சுடு சுட்டான். உடன கும்மியா நிண்டவங்க எல்லாம் சிதறினாங்க. நான் என்ன செய்தணெண்டா, இறால் பண்ணைக்குள்ள கிடந்த சின்னச் சின்ன கொட்டில்களோட மெதுமெதுவாக மறஞ்சு ஓடினேன். தெய்வநாயகமெண்ட இளைஞனும் எங்களுக்கு முன்னால் ஓடினவர். திடீரெண்டு ஒரு வெடிச்சத்தம். அவருக்கு என்ன நடந்ததெண்டு தெரியாது நான் உடன தண்ணிபாயிற வாய்க்காலுக்க படுத்திட்டன். எனக்கு முன்னால நேசதுரை எண்ட இளைஞனும் வாய்க்கால் பக்கம் பதுங்கிட்டாங்க, அவன் என்ன செய்தானென்டா, ஓடின பக்கமா பவல் வாகனத்த திருப்பிவிட்டிட்டு அடிக்கத் தொடங்கிட்டான். இஞ்சால குருவிக் காவலுக்கு வந்த சின்னப் பொடியங்களையெல்லாம் சுட்டுச்சுட்டு போடுறான். பாவம், கஸ்ரத்தில் காலேலையே இறாலை காக்காய் தூக்காமல் பாதுகாக்கிறதுக்கு வந்து நிப்பாங்க. காக்காய் காவலுக்கு வந்தா ஏதாவது கிடைக்குமெண்டு வேளைக்கே வந்திடுவாங்க அவங்கள எல்லாம் சுட்டுச்சுட்டுப் போட்டாங்க.

நான் போட்டிருந்த உடுப்பெல்லாத்தையும் களட்டிட்டு தலையைத் தூக்கிப் பார்க்கிறதும், ஓடுறதும், படுக்கிறதுமாய் கண்ணாக்காட்டை நோக்கி ஓடினன். கண்ணா ஓரமாய் ஓடிட்டிருக்கும்போதே சூட்டுச் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் பண்ணைப்பக்கம் சத்தத்தை காணல்ல. திரும்பிப் போய்ப்பாப்பமெண்டு யோசிச்சன். திரும்ப வரேக்க தம்பி, உங்கால போகாத, பண்ணேல நிண்ட எல்லாரையும் சுட்டிட்டாங்க என சொல்லித் தடுத்தார் ஒரு முதியவர். நான் ஓடினதுக்கு காரணம் ஏற்கெனவே நான் ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்குப் போகும்போது கரடியானத்து காம்பில மறிச்சு என்ர இறால் பண்ணை அடையாள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டையை பறிச்சீட்டாங்கள் நேர்முகப் பார்ட்சை முடிஞ்சு திரும்ப வரேக்க கரடினயானத்தால வாற பயத்தில புல்லுமலையில பஸ்சால இறங்கி நடந்து வந்தனான். அடையாள அட்டை இல்லாத பயத்திலதான் ஓடினன். கிடந்திருந்தா, நானும் பட்டிருப்பன்.

இறால் பண்ணைப் படுகொலையில் மகனையும் மருமகன் இருவரையும் பறிகொடுத்து விதவையாய் ஏழைக் குடிசைக்குள் வாழும் திருமதி தம்பிப்போடி- ஞானம்மாவை அவரது வீட்டிய சந்திச்சுக் கேளுங்கோ" என ரவிநாதன் ஆசிரியர் அன்றைய நாளின் ஒரு பகுதியை நினைவுக்கு கொண்டு வந்தார்.

இந்தக் கொலை முழுவதையும் முடியுவரையும் நிண்டு பார்த்துத் தப்பினது றைவர் செல்லத்தம்பியண்ணன் மட்டுந்தான். அவங்களிட்ட கேட்டாத்தான் இந்தக் கொலை பற்றி முழுமையாய் அறியலாம் என ரவிநாதன் ஆசிரியர் சொல்லிக் கொண்டிருக்கும் போது, "நம்மட அண்ணன் ஒராளும் இதில பட்டுத் தப்பினவங்க. இதைப்பாத்த அதிர்ச்சியில நாலஞ்சு நாளாய் மூளை குழம்பி இருந்தவங்க. அவங்களிட்ட கேட்டாலும் சொல்லுவாங்க" என கணபதிப்பிள்ளை மோட்சமலர் என்ற முன்பள்ளி ஆசிரியர் கூறினார். இவ்வாசிரியர் இறால் பண்ணைப் படுகொலையிலும் மகிழடித்தீவு, அரசடியில் நடந்த படுகொலையிலும் தப்பியவர்களில் ஒருவர். 1991ஆம் ஆண்டு மகிழடித்தீவு படுகொலையில் சூட்டுக் காயங்களோடு உயிர் தப்பியவர்.

இறால் பண்ணைப் படுகொலையில் மகனையும் மரு மகனையும் பறிகொடுத்து விதவையாய் ஏழைக்குடிசைக்குள் வாழும் திருமதி தம்பிப்போடி ஞானம்மாவை அவரது வீட்டில் சந்தித்து உரையாடினேன். "மகன் காலேல குளிச்சிட்டு பள்ளிக்குப்போக வெளிக்கிட்டான். துறைக்கு அங்கால கட்டலடி சிவானந்தாக் கல்லூரியிலதான் ஏ/எல் படிக்கிறவன். அவனோடு படிக்கிற இன்னோரு பொடியன் வந்தான். அவனோடு சைக்கிள்ள தொத்திட்டு மகனும் போய்த்தான். போய்த்து இடையில திரும்பிவந்து சொன்னான், "துறைக்கு அங்கால கொமாண்டோஸ் நிக்கிறான், திரும்பிப் போங்கோ எண்டு அனுப்பீட்டாங்கம்மா" என சொல்லீட்டிருந்தான். அப்ப, மகள் வந்து சொன்னாள் "அம்மா எல்லாரும் இறால் பண்ணைப்பக்கம் போறாங்க, தம்பியையும் அவங்களோட அனுப்புவம்" எனச்சொல்ல "மாமா நிக்கிறார், அப்பா நிக்கிறாரு, அந்தா சீனியப்பா நிக்கிறாரு எல்லாரும் நிக்க நான் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போகல்ல" என மகன் மறுத்திட்டான். என்னண்டாலும் செய்யுங்கோ எண்டு சொல்லிட்டு நிக்க சந்தியில இருந்த நாலு கொமாண்டோஸ் இஞ்சநோக்கி வாறாங்க, வந்தவங்க வளவுக்கு உள்பட்டு குசினிக்க புகந்து கதவோட மறஞ்சு நிண்ட தங்கச்சிட புருசனப் புடிச்சிட்டு வெளியிட கொண்டு வந்தாங்க. பிள்ளையை தூக்கிவச்சிருந்த மகளின்ர புருசனை அடே குழந்தையை கீழபோட்டிட்டுவா என அதட்டி அவரையும் மகனையும் கூட்டிட்டு ஒழுங்கையால போனங்க. பின்னால அழுதிட்டு ஓடினன். ஒழுங்கையால வந்த மூண்டு கொமாண்டோஸ் மற்ற மகனோட புருசனையும் பிடிச்சிட்டு வந்தான். ரெண்டு மருமகனையும், மகனையும் தம்பியையும் சேத்து நாலுபேரையும் கொண்டு போனான். பின்னால அழுது கொண்டு ஓடின எங்கள சுட்டுப் போடுவம் திரும்பி ஓடுங்க என வெருட்டி துப்பாக்கியை நீட்டினான். சந்திக்கு கொண்டு போகும்வரை பின்னாலேயே ஓடினம். சந்திக்கு போனதும் தங்கச்சிட புருசன ரைக்ரலிய ஏத்தினாங்க (மயில்வாகனம்) ஏத்தின உடனேயே தலேல்ல வெடி விழுந்தது. பின்னாடி அடுத்த தங்கச்சியோட புருசன (கனகசூரியம்) பண்ணப் பக்கம் கூட்டிட்டு போய் அங்க இருந்த ரயர்களை உருட்டீட்டு வாறதப்பார்த்தம் மகனை சந்தியில வேதகோயிலுக்கு முன்னா இருத்தி வச்சிருந்தாங்க. ரயரை உருட்டீட்டு வந்ததுதான் தெரியும். மறுகா என்ன நடக்குதெண்டு தெரியல்லே வெடிச்சத்தம் கேக்குது. நான் ஓடிட்டுபோய் கோயிலுக்குப் பக்கத்து வேலியால எட்டிப்பார்த்து கத்தி அழுதன். என்னோட நிறையப் பேரின்ர தாய்மாரெல்லாம் நிண்டு கத்தினாங்கள். மழைதூறீட்டிருந்தது. இறால்குளத்துக்குக்க சுட்ட பொடியெல்லாத்தையும் வச்சிருந்த ஆக்கள கூட்டிட்டுப்போய் தூக்கிவந்து மெசின் பெட்டிக்க அடுக்கிறாங்கள். கொஞ்ச கொமாண்டோஸ் அடுக்கின பொடிக்குமேல மிரிச்சி உழக்கி நடக்கிறாங்க. மறுகாப்பத்தா நம்மடமகன மெசின் பெட்டியில ஏத்திறாங்க. முதுகுபக்கமா தெரியுது. முதுகுப் பக்கம் திரும்பச் சொல்லீட்டு வச்சான் வெடியொண்டு. நான் வீரிட்டு கத்தீட்டு ஓடினன். "என்ர மகன சுட்டிட்டாங்க பனமரம் போல என்ரபிள்ளை விழுந்ததைப்பார்த்தன். என ஒப்பாரி வச்சு அழுதாள்." (மகன் தில்லைநாதன்) என்ர மகன், இரண்டு மருமகன் தம்பி நாலு பேரையுமே சுட்டிட்டாங்க" என சொல்லிவிட்டு சேலைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள். விதவைகளாய் நிற்கும் இவரது மகள் இரண்டு பேரின் அருகேயும் அவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளும் கண்கலங்கி நின்றனர். ஞானம்மாவின் கணவரும் இறந்துவிட்டதால் மூன்று விதவைகள் நொந்து வெந்து வெம்பி அழுதபடி வாழும் மாறாத வடுவினை அந்தப் படுகொலை உருவாக்கிவிட்டது.

"இறால் பண்ணை படுகொலையின் முழுமையும் கண்டு தப்பிய ஒரேயொரு உயிர், றைவர் செல்லத்தம்பியண்ணதான்" என மகிழடித்தீவில் யாரைக்கேட்டாலும் வியப்போடு கூறினார்கள். அவரிடம் இந்த உண்மைகளை அறிந்திட விரும்பி அவர்முன்னே ஆவலோடு அமர்ந்தேன். உழைத்துழைத்து வலுவேறிப்போன உடற்கட்டு முதுமையிலும் ஒரு கம்பீரம் இவரிடம் தெரிந்தது.

"நான் வழக்கமாய் இரவிலேயும், பகல்லேயும் வேலை செய்யிறனான் தம்பி. சம்பவம் நடந்த அண்டைக்கு காலேல்ல 5 மணிக்கெல்லாம் கப்பல் (கெலிகாப்டர்) சுத்திச் சுத்திப் பறக்கிறதும் போறதும் வாறதுமாயிருந்தது. நான் என்ன செய்தெனெண்டால், இறால்பண்ணை ஓபீசுக்கு வந்தன். அப்ப ஒரே வெடிச்சத்தம் கேக்குது. கப்பல் அங்க போறதும் இஞ்ச வறதுமாய் நிக்குது. நான் பண்ண வாகனத்தை எடுத்துக் கொண்டுபோய் நிக்கிற இடங்களில் நிப்பாட்டினன். நிப்பாட்டிப்போட்டு ஓபீசுக்கு வந்திட்டன். பேமனன்ரா வேலைசெய்யிறாக்களும் கசுவாலா வேலை செய்யிறாக்களும் சேர்ந்து ஒண்டாய் நிண்டம். வெள்ளக்காரன்ர பண்ணேல வேலை செய்யிற எங்கள ஒண்டும் செய்யமாட்டா னெண்ட நம்பிக்கையிலதான் நிண்டனாங்க. அப்பிடி நிற்க, சந்திப்பக்கத்தால வந்த கவச வாகனத்தை எங்கடபக்கம் திருப்பி விட்டு கடகடண்டு அடிக்கத் துவங்கீட்டான். நாங்களெல்லாம் நிலத்தில விழுந்து படுத்திட்டம். நாங்கள் அண்டைக்குத்தான் கொமாண்டோசைக் கண்டோம். பெரியபெரிய புள்ளிப் புள்ளி உடுப்போட மூண்டுபேர் நாங்க நிக்கிற இத்துக்கு வாறாங்க. ஒரு 50யார் தூரத்துக்கு வந்ததும், அடே எல்லாம் வெளியிலவா எண்டு சொல்லி படபடெண்டு மேலே சுட்டான். கொச்சத்தமிழ்ல அவன் கூப்பிட்டது எங்களுக்கு விளங்கினதால வெளியில நிரையாய் வந்து நிண்டம். கிடுகிடெண்டு எல்லாரும் நடுங்கத் தொடங்கீட்டம். நடுங்கின நடுக்கத்தில எல்லாற்ற கால்களும் சேத்தில மெது மெதுவாய் புதஞ்சுகொண்டிருந்தது.

அவன் வந்தவரத்தில கம்பியப்பிடித்து இழுத்தான். பதினொருபட்டு கம்பி அடிச்சிருந்தது. ஆனால் கட்டை இறந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போச்சுது அவன் இழுத்த வேகத்தில கட்டபெயர்ந்திட்டு வந்து அவன்ர தலையில அடிச்சிட்டுது. நெத்தியில சின்ன காயம் வந்து ரத்தம் ஓடிச்சுது அவனுக்கு அதுவும் நல்ல எறிச்சுது. அடே அடு அடு எண்டு ஏதோ கேட்டான். நமக்கு ஒண்டும் விளங்கல்ல. கருணா சொன்னான் குறடு இருக்குதா எண்டு கேட்கிறான் எனக்கூறிவிட்டு குறட்டை எடுத்துக் கொண்டு வந்து குடுத்தான். ரெண்டுவரி கம்பியை வெட்டிப்போட்டு அடோ எல்லாம் ரைக்ரில ஏறு ஏறு என சொல்லிக்கொண்டே படபடெண்டு சுட்டான். எல்லாரும் உடன பாஞ்சு ஏறிட்டம் ஆர் றைவர் ஏறு எடு ரைக்ரரை எண்டதும் நான் பாஞ்சு ஏறி ரைக்ரரை எடுத்தன். அப்ப பாத்தன் எங்கட கொக்கட்டிச்சோலை கந்தையா டோக்டரையும் அவரின் மகனையும் கண் தெரியக் கூடியதாய் முகத்தை மூடிக் கூடிக்கொண்டு கூட்டிட்டு வந்திருந்தாங்கள். அவர் பிசாமா சாறத்தால இழுத்து கொடுக்கு கட்டியிருந்தார். ரைக்ரரொட பண்ணைல இருந்த நம் இருபத்தேழு பேரையும் சந்திக்கு கொண்டு வந்தாங்கள். டொக்ரரின்ர மேலெல்லாம் ரத்தம் வழியுது. அவர் விம்மி விம்மி அழுதார். எல்லோரையும் ரைக்ரரால இறங்கி கவச வாகனத்தின்ர ரயருக்கு நேரே வரிசையாய் இருக்கச் சொல்லிட்டு, எல்லோரும் கண்ணை இறுக்கி மூடுங்கோ என்று சொன்னான். எல்லாரும் கண்ண இறுக்கி மூடின உடனே கவச வாகனம் இரஞ்சுது எல்லாருக்கும் மேலால ஏத்தப்போறானெண்டு தெரியுது. அப்ப அடே ஆரது றைவர் எண்டு கூப்பிட்டான். ரயருக்கு அருகிருந்த நான் எழும்பினன். எல்லாற்ற சேட்டிலேயும் வெள்ளைக்காரன்ட ஐரென்ரிக்காட் குத்தியிருந்தது. அதையெல்லாம் அவன் பாக்கேல்ல. நம்ம கொக்கட்டிச்சோலை வைரமுத்தரும் இன்னொருவரும் கையெடுத்து கும்பிட்டாங்க. அவன் தூசணத்தால் பேசிப்போட்டு காலால அடிச்சான். பிறகு, இரண்டு மூண்டு பேரைக் கூட்டிக்கொண்டு போய் எங்கட பண்ணேல கிடந்த ஒம்பதிஞ்சி பம்மொண்டத் தூக்கச் சொன்னான். சாதாரணமா எட்டுப்பேர் சேர்த்துதான் அதை தூக்கிறனாங்கள். ஆனால் அண்டைக்கு விழுந்த அடியில வயதுபோன ஒரு ஐயா தனியவே தூக்கினாரு.

அதைவிட அங்க கிடந்த தங்களுக்கு தேவையான சாமானெல் லாத்தையும் தூக்கி ஏத்தச் சொன்னான். மாறிமாறி அடியும் உதையும் விழுந்தது. சுடப் போறானெண்ட பயத்தில் அடி உதை நோவொண்டும் தெரியேல்ல. எல்லாத்தையும் ஏத்திக் கொண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பவும் சந்திக்கு கொண்டு வந்தான். ஒரு கொமாண்டோஸ் வந்து என்ர தலைமயிரைச் சுத்திப்பிடிச்சு இழுத்தான். அப்ப எனக்கு நல்ல தலைமயிர் இருந்தது. அவன் செய்த சித்திரவதைக்குப் பிறகுதான் வேதினையில மயிரெல்லாம் கொட்டுப்பட்டு. தலைமயிரைப் பிடிச்சு இழுத்து விழுத்திப்போட்டு சந்தி மதில் கரையோட இழுத்திட்டுப்போய் இருத்தினான். பிறகு வேறொருவன் ஏறி ரைக்ரரையும் கொண்டு முதலைக் குடாப்பக்கம் போறான். நம்மட பண்ணேல வேலைசெய்யிற இருபத்தியேழு பேரையும் ஏத்தீட்டுப் போனான். ஒரு பத்து நிமிசத்தில் படபடண்டு வெடிகேட்குது இஞ்ச சந்தியில நிண்டவங்கள் சுத்தியிருந்த வீடுகளுக்கு புகுந்து அங்க இருந்தவங்களெல்லாரையும் பிடிச்சுக்கொண்டு வந்து சந்தியில இருத்தினான். கொஞ்சநேரத்தில் ரைக்ரர் திரும்பி வந்து மண் முனையைப்பாக்க நிண்டுது. மழை பெய்திட்டிருக்கிறது. அமிர்நாத் தெண்டு ஒரு பொடியன் பண்ணேல வேலைசெய்யிறவன். அவனை கூட்டிட்டுப் போனான். படாரென்று ஒரு வெடி அவன்ர தலேல விழுந்தது. ரத்தம் சீறிப் பாயிற சத்தம் பெரிசாய் கேட்டது. அரைக்கண்ணால பார்த்தன். தலையில பாயிற ரத்தம் நிலத்தில குழிபறிக்குது.

திடீரென்று பார்க்க ரைக்ரரை யெடுத்துக் கொண்டுபோய் அன்ரி மலேரியாவுல வேலைசெய்யிற நம்மட சின்னப்பாதா மயிலுப் போடியார். அவர் மாடுமேய்க்கப்போன மகனைத் தேடி வந்திருக் கார். வேட்டியோட வந்த அவர கவேட் வாகனத்தால் பளீரெண்டு ஒரு அடிஅடிச்சான். விழுந்திட்டார். அவரை ஏத்திறதுக்கு ரைக்ரரை கொண்டுபோனான். ரைக்ரரை கொண்டுபோய் திரும்பபேக்க நொக்கடிச்சு நிண்டிட்டு. உடன றைவரை கொண்டுவா என ஒரு கொமாண்டோச அனுப்பியிருந்தாங்கள் ஏற்கனவே இருபத்தேழு பேரையும் சுட்டுப்போட்டு பெட்டீக்க அடுக்கி வச்சிருந்தான். நடக்கேக் கால்ல ஏதோ பிசுபிசுண்டு ஒட்டுது, மெதுவாய் குனிஞ்சு பாத்தான் றோட்டு நீட்டுக்கு ரத்தம் படிஞ்சு போய்கிடக்குது. போய் மயிலுப்போடியரையும் தூக்கிப்போட்டிட்டு ஸ்ராட் எடுத்துக் கொடுத்தன். ஸ்ராட் வந்தவுடன் சொன்னான். இறங்கிப் பின்னாலபோய் சவத்துக்கு மேல ஏறு எண்டு. நான் வீமில நிக்கிறனெண்டு ஏறிநிக்க, விட்டான் அடியொண்டு. தாங்கேலாமல் மற்றப் பக்கம் ஓடினன். மற்றப்பக்கமும் வந்து அடிச்சான். தாங்க முடியாமல் சவத்துக்குமேல ஏறிநிண்டன். நாராயணபிள்ளை, கருணேஸ்சேர், குணேஸ், சௌந்தர்ராஜன், கந்தசாமி எல்லாரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதழுது சவத்துக்குமேல ஏறி இருந்தம். மதியம் 12 மணியைத் தாண்டீட்டுது. சந்தி மறைப்பில மெசினக் கொண்டு வந்து நிப்பாட்டீட்டான். தண்ணி விடாய்க்குதெண்டு கேட்டான். பக்கத்தில சோமர் எண்டவர் கடை வச்சிருந்தவர், அவரிட்ட ஒரு உப்புவிஸ்கற் பெட்டி வாங்கினான். ஏய், தண்ணி கொண்டு வா என அவரை மிரட்டி தண்ணி எடுப்பிச்சான். ஒரு உப்பு விஸ்கரும் ஒரு முரடு தண்ணியும் எல்லாருக்கும் தந்தான்.

ஒருமணி இருக்கும் "பேய் எல்லாம் கண்ண முளி" என சொல்லேக்கயே ஓராளுக்கு ஒரு அடிவிழும். நீ வா நீ வா என விரலால காட்டி நாலுபேர கூட்டிட்டுப்போய் மெசின் பெட்டியில கிடந்த சவத்துக்குமேல ஏத்துவான். பளீர் பளீரெண்டு நாலுவெடி கேக்கும் மறுகா வருவான். "கண்ணமுளி" எண்டு சொல்லி அடிவிழும். "நீ வா நீ வா என் நாலுபேரை அல்லது அஞ்சுபேரை கூட்டீட்டுப்போவான். பளீர்ப் பளீரெண்டு நாலுஞ்சு வெடிக்கேக்கும். அடுத்தரம் வந்து பேய் கண்முளி... இப்படியாய் எடுத்தெடுத்துக் கொண்டுபோய் சுட்டுக் கொண்டேயிருந்தான். ஐயா நாங்கள் வறுமைப் பட்டவங்களய்யா, இரண்டு மூண்டு பிள்ளையளய்யா என பலர் கும்பிட்டார்கள். காலால் கும்பிட்டகைக்கு அடிச்சாங்கள் அடோ எங்களுக்கும் அப்படித்தாண்டா என சொல்லிவிட்டு மறுபடியும் நீ வா நீவா என நாலு நாலாய் கொண்டுபோய் சுட்டுக் கொண்டேயிருந்தாங்கள். பெட்டீக்க சவம் நிரம்பிட்டுது. பக்கத்தில மாக்கற் கட்டடமிருந்தது. அதுக்கு கொஞ்சத்தை இழுத்துப்போட்டிட்டு திரும்பவும் சவத்துக்கு மேல ஏத்தி ஏத்தி சுட்டாங்கள். பொழுதும் பட்டுக் கொண்டு வந்துவிட்டது. வாகனமொண்டு இரையிற சத்தமெண்டு கேட்டுது கொஞ்சநேரத்தில் அதில வாகனமொண்டு நின்றது. அடோ எல்லாம் கண்ணமுளி எண்டு சொன்னாங்கள. அப்ப பாத்தா கனகசூரியம் என்டவனையும் மகேஸ்வரன் எண்டவரையும் கொண்டுபோய் அவங்கட முடரை கொறட்டால நசிக்கிறாங்கள். துடிக்கதுடிக்க குறட்டால நசிச்சே அவங்களக் கொண்டாங்கள். கொடித்துவக்கு கொடித்துவக்கு எண்டு அவங்கட பெரியவன கூப்பிட்டாங்கள். வாகனத்தில வந்திறங்கின பெரியவன சென்விரட்ண என சொன்னாங்கள்.

சவத்த எல்லாம் பெட்டியில ஏத்தி அடுக்கினாங்கள். அடுக்கி தேடாகயிற்றால இறுக்கி இறுக்கி கட்டனாங்கள். மேல மேல உயரமாய் அடுக்கி நூற்றி முப்பத்தேழுபேரையும் ஏத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டினாங்கள். நான் மெதுவாய் பின்பக்கத்தால நழுவி ஓடினேன். அடோ றைவர் மெதுவாக இருண்டதால என்ன அவங்களால காணமுடியல்லே. சவத்தெல்லாம் எங்க கொண்டு போனாங்களோ தெரியாது. அப்படியேபோய் கல்ச்சேனையில் புதிதாய் ஒரு காம்ப்போட்டிட்டு இருந்தாங்கள். சவத்தையெல்லாம் எங்க தாட்டாங்கள், எங்க எரிச்சாங்களெண்ட தெல்லாம் இண்டைக்கு வரைக்கும் யாருக்குமே தெரியாது. முதல்முதல் கொமாண் டோசின்ர சித்திரவதையை அண்டைக்குத்தான் கண்டம். அவங்களைப் போல கொலைகாரப் பாவியள் எங்கேயுமில்ல மகன்" எனச் செல்லத்தம்பியண்ணன் சொல்லும்போது உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. பதின்நான்கு ஆண்டுகள் மறைந்து போனாலும் அவரது வியர்வையும் நடுக்கமும் அந்த கொடூர கொலையிலிருந்து அவரது உள்ளம் விடுபடவில்லை என்பதைக் காட்டியது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவில்

கிளிநொச்சியிலிருந்து பளைக்கு செல்லும் வழியில் ஆனையிறவு இருக்கிறது. யாழ்ப்பாணக் குடா நாட்டின் நுழை வாயிலாக இருந்த மூன்று நூற்றாண்டுகால வரலாற்றைக் கொண்ட ஆனையிறவுப் படைத்தளம் என்பது தமிழ் மக்களுக்கு அடிமைத் தனத்தின் - ஆக்கிரமிப்பின் சின்னமாகவும் சிங்கள தேசத்துக்கு அவர்களது அதிகாரத்தின் - மேலாண்மையின் சின்னமாகவும் விளங்கியது. எனவே தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்தத் தளத்தை தகர்த்தெறிவது வரலாற்றுக் கடமையாகவும், சிங்களத் தேசத்தைப் பொறுத்தவரை அதை தற்காத்து தக்கவைத்துக் கொள்வது வரலாற்றுத் தேவையாகவும் இருந்தது.

"ஆனையிறவுக்கான சமர் என்பது தமிழினத்தின் வெற்றியையும், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் தோல்வியையும் தீர்மானிக்கப் போகின்ற ஒரு சமராகவும் இருந்தது. சந்திரிகா அரசு இந்த ஆனையிறவுத் தளத்தை தக்கவைப்பதற்காக உலக வல்லரசு களிடம் ஆயுதங்களை வாங்கிக் குவித்தது. உலகப் பெரும் வல்லரசு நாடான அமெரிக்கா, இந்தத் தளத்தில் இருந்த படையினருக்கு சிறப்புப் பயிற்சியும் படைத்துறை நிபுணத்துவ உதவியும் வழங்கியது. இந்தியாவும் தன் பங்குக்கு படைத்துறை நிபுணத்துவ உதவியையும் ஆயுத உதவியையும் வழங்கியது.

ஆயுத பலமும் ஆட்பலம் வல்லரசுகளின் பின்புலப் பலமும் இருக்கின்றபோது, ஆனையிறவுப் படைத்தளத்தை விடுதலைப் புலிகளால் நெருங்கவே முடியாது என்று சந்திரிகா அரசு நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த நேரத்தில் எமது தேசியத் தலைவர் நன்கு திட்டமிட்டு இரண்டாம் உலக யுத்த காலத்தில் பிரான்சை ஆக்கிரமித்திருந்த ஹிட்லரின் ஜெர்மன் படைகளை முறியடிப்ப தற்காக, அமெரிக்கத் தலைமையிலான நேச நாட்டுப் படைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சின் நோர்மண்டிக் கடற்கரையில் தரையிறங்கிய நிகழ்வுக்கு நிகராக கடற்புலிகளின் படகுகள் எமது போராளிகளைக் கொண்டு போய் தரையிறங்கிய போது, சிறீலங்கா கடற்படை, வான்படை, தரைப்படைகள் இணைந்து தாக்குதல் நடத்தியும் அந்த வரலாற்றுப் பெருநிகழ்வை தடுத்து நிறுத்த முடியவில்லை.

ஆனையிறவுத் தளத்தை வீழ்த்துவதற்கான சமர் குடாரப்பு, தாளையடி, வெற்றிலைக்கேணி, ஆழியவளை, இத்தாவில், மாசார், சோரன்பற்று, கிளாலி, பளை, இயக்கச்சி என்று பரந்து விரிந்த சமராக உக்கிரமான சமராக நேரடிச் சமராக வெடித்தபோது உலகின் கவனமெல்லாம் இந்த களமுனையை நோக்கித்தான் குவிந்திருந்தது.

சிங்களப்படைகள் கிளாலி, பளை, ஆனையிறவு என்று பல முனைகளில் விடுதலைப் புலிகளின் படையணிகளுக்கு எதிராக அவர்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்துவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டும் அவையெல்லாம் தோல்வியில் முடிந்தன. 2000மாம் ஆண்டு சித்திரை மாதம் 22ஆம் நாள் (22.04.2000) தமிழர் படைகள் ஆனையிறவுத் தளத்துக்குள் பிரவேசிக்க, சிங்களப் படைகள் தோற்றுப் பின்வாங்கி ஓட, தமிழர்களின் வெற்றி, தமிழீழப் போராட்டத்தின் வெற்றி எமது தேசியத் தலைவரின் வெற்றி உலகளாவிய ரீதியில் பிரகடனப் படுத்தப்பட்டது" என்று கூறினார் என்னுடன் வந்த நண்பர்.



தகர்க்கப்பட்ட ஆனையிறவு படைத்தளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 சதுர கிலோ மீட்டர் பரந்திருந்த, 15000 இராணுவத்தினரைக் கொண்டிருந்த இப்படைத் தள மீட்பில் உயிர் இழப்பு எத்தனை என்று அந்த நண்பரைக் கேட்டேன். "1000க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவப்படையினர் கொல்லப்பட, இப்பெருந்தளத் தாக்குதலில் வெற்றிக்கு வித்தாக 35 போராளிகள் வீரச் சாவடைந்தனர்" என்றார். மேலும் அவர் 2000மாம் ஆண்டு சித்திரைமாதம் 30ஆம் நாள் பளை நகரமும் கைப்பற்றப்பட யாழ்ப்பாணம் குடாநாட்டில் சிக்கிப் போயுள்ள தங்களின் நிலை என்னவென்று சிங்களப் படைகள் கலங்கின. ஆக்கிரமிப்பின் சின்னம் தகர்ந்தது, அச்சுறுத்தல் மறைந்தது, அடிமைத்தனம் ஒழிந்தது என்று தமிழர்கள் ஆனந்தக் கூத்தாடினர்.

விடுதலைப்புலிகளின் படையணிகள் படிப்படியாக முன்னேறி யாழ்நகர எல்லையை அடைந்தபோது சிங்களம் திகைத்தது. சந்திரிகாவின் நிம்மதி பறிபோனது. "எங்கள் பிள்ளைகளைக் காப்பாற்று என்று சிங்களப் படையினரின் பெற்றோர் போர்க்கொடித் தூக்கினர்" என்றும் கூறினார். நான் அவரிடம் "ஆனையிறவு வெற்றியை இங்குள்ள தமிழர்கள் மட்டும் கொண்டாடவில்லை. தமிழகத்திலும் கொண்டாடினார்கள். அனைத்து இதழ்களும் தலைப்புச் செய்தியாக வெளியிட்டன. தேநீர்க்கடைகள், சாலைகள் என்று எங்கெல்லாம் மக்கள் கூடுகின்றார்களோ அங்கெல்லாம், மகிழ்ச்சியோடு அந்த வெற்றிச் செய்தியை பரிமாற்றம் செய்து கொண்டார்கள்" என்று தெரிவித்தேன்.

இவற்றை எல்லாம் ஆனையிறவுத் தளத்தில் தாக்கியழிக்கப் பட்ட டாங்கிகள் மற்றும் கோட்டையை, பரந்த வெளியை சுற்றிப் பார்த்துப் பேசிக் கொண்டிருந்தோம்.

இந்த ஆனையிறவு வீழ்ச்சிக்கு காத்திரமான அடித்தளம் அமைத்துக் கொடுத்த குடாரப்பு தரையிறக்கத்தை, நேச நாடுகள் மேற்கொண்ட நோர்மாண்டி தரையிறக்கத்தை ஒப்பிட்டு உலக அளவில் பல ஆய்வுக்கட்டுரைகள் வெளிவந்தன. பலர் உரைகளிலும் வெளிப்படுத்தினர். அது எந்த அளவு நியாயமானது என்பதை ஆய்வு செய்து எழுதப்பட்ட ஒரு கட்டுரையை ஏற்கெனவே படித்திருந்தேன்.

1944ஆம் ஆண்டு யூன் மாதம் நேசநாடுகளின் அணியில் அமெரிக்கா, பிரித்தானியா, ரஷ்யா, அவுஸ்திரேலியா, யூகோஸ் லேவியா, இந்தியா, பிரான்ஸ், எகிப்து, சீனா, கனடா உள்ளிட்ட 52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளின் வளங்கள் குவிந்திருந்தன. எதிரணியிலோ ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி உட்பட ஒன்பது நாடுகள். நேச நாட்டு விமானங்களின் குண்டு வீச்சில் ஜேர்மனியின் போர்த்தளபாட தொழிற்சாலைகள், வளங்கள், அமைப்புகள் சிதறடிக்கப்பட்டு கட்டளையிடல் கட்டுப்படுத்தல் அமைப்புகள் சீர்குலைந்து போய் உளவுரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்த நேரம். ஜேர்மனியின் விமானப்படை மோசமான இழப்புகளுக்குட்பட்டு, நேச நாடுகளின் விமானப்படைகள் தீர்க்கமான மேலாதிக்கத்தைப் பெற்று விட்டிருந்தன. ஜப்பானும் இத்தாலியும் கிட்டத்தட்ட முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டிருந்த நேரம் அது.

இப்போது நோர்மன்டிக்கு வருவோம். நோர்மன்டி என்பது பிரான்சின் வடபுறத்தில் அமைந்திருக்கும் கடற்கரைப் பகுதியாகும். இங்கே 1944-06-06ஆம் தினமன்று மொஸ்கிற்றோ (Mosquito) குண்டு வீச்சு விமானங்கள் குண்டுவீசி காப்புக் கொடுக்க, நோரங்மன்டிக் கரையோரங்களுக்கு அப்பால் பாரசூட் துருப்பினர் தரையிறங்கு கின்றனர். தங்களைத் தொடர்ந்து வரப்போகின்ற துருப்பிக்காவிக் கிளைடர் விமானங்களுக்கும் போக்குவரத்து விமானங் களுக்குமென தரையிறங்கும் களங்களை ஆயத்தம் செய்கின்றனர். வான்வழி நெருங்கித் தாக்கும் துருப்புகள் கரையோரப் பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாக்கி ஜேர்மனிய சேமப் படைகளின் முறியடிப்புத் தாக்குதலுக்கு தாக்குப் பிடிப்பதற்கான நிலைகளை அமைக்கின்றனர். இதற்கிடையே பிரதான தரை இறங்கல் படை நகர்கின்றது. முன்னணியில் வரும் கண்ணிவாரிக் கப்பல்கள் ஆங்கிலக் கால்வாயில் கண்ணிவெடிகளை அகற்றிக் கொடுக்கின்றன. அலையலையாக விமானங்கள் பொழிந்த குண்டு மாரிக்கு மேலதிகமாக ஆறு சமர்க்கப்பல்கள் ஜேர்மனியர்களின் கரையோர நிலைகளை குண்டு வீசித் தாக்குகின்றன. இந்தக் காப்புத் திரையின் பின்னால் 800 போர்க்கப்பல்களின் பாதுகாப்போடு வீரர்கள் உபகரணங்கள் மற்றும் ஆரம்ப நெருங்கித் தாக்குதலுக்கான வழங்கல்களோடு 4000 தரையிறங்கும் கலங்களில் வந்த நேச நாட்டுப் படையினர் 80 மைல்கள் நீளமான கடற்கரையை உள்ளடக்கிய ஐந்து இடங்களில் தரையிறங்குகின்றனர். ஐந்து நாட்கள் நடந்த சண்டையின் பின்பு, அதாவது 11.06.1944 அளவில் 80 மைல்கள் நீளமும் 20 மைல்கள் அகலமுமான நிலப்பரப்பிலே நேச நாடுகளின் 16 டிவிசன்கள் நிலைகொள்கின்றன. ஏறக்குறைய 18.06.1944 அளவிலே அமெரிக்க டிவிசன்கள் 13, பிரித்தானிய டிவிசன்கள் 11,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனேடிய டிவிசன் 1 ஆகியவை அடங்கிய 24 டிவிசன்களைச் சேர்ந்த 1,000,000 துருப்புகள் கனரக சுடுபடைக்கலன்கள், பிரமாண்டமான எண்ணிக்கையிலான டாங்கிகள், ஆட்லறிகள், வான் கலங்கள் சகிதமாக அங்கே நிலைகொண்டிருந்தன. இதேயளவு ஜேர்மன் துருப்புகளும் நேச நாட்டுத் துருப்புக்களுக்கெதிரான போரிட்டதாகச் சொல்லப்பட்டாலும் அவர்களுடைய போரிடும் வலுவும் உளவுரனும் பெரிதும் சீர்குலைந்து இருந்தன.

இந்தத் தரையிறக்கம் ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது ஒரு பில்லியன் டொலர்கள் கேள்வியாகும்.

1. பிரான்சின் கரையோரங்களிலிருந்த ஏவுதளங்களில் இருந்து ஏவப்பட்ட ஏ1 மற்றும் ஏ2 றொக்கட்டுகள் இங்கிலாந்திற்கும் அங்கு குவிக்கப்பட்டிருந்த நேச நாட்டுப் படைகளுக்கும் ஏற்படுத்திய அச்சுறுத்தல் இவற்றுக்கெதிரான பயன் விளைவுள்ள முறியடிப்புகள் எதுவுமில்லாமல் நேச நாட்டுப்படைகள் திணறின. றொக்கெட் தொழில்நுட்பத்தைக் கைப்பற்றுவதிலும் ஜேர்மனி -தான் கைப்பற்றிய இடங்களிலிருந்து கொண்டு வந்து குவித்திருந்த செல்வம், விஞ்ஞானிகள் முதலியோரைக் கைப்பற்றிக் கொள்வதிலும் அமெரிக்க, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகளுக்கிடையே நிலவிய போட்டி.

2. கிழக்கு போரரங்கில் முன்னேறி வந்த ரஷ்யப்படைகள் ஜேர்மனியை முதலில் கைப்பற்றும் ஏதுநிலை தோன்றியிருந்தது. ரஷ்யா ஜேர்மனியைக் கைப்பற்றினால் ஐரோப்பா முழுவதும் கொம்யூனிச மயமாகிவிடும் என்ற அச்சம் முதலாளித்துவ நேச நாடுகளிடையே எழுந்திருந்தது. ரஷ்யப்படைகளுக்கு முன் தாம் பெர்லினுக்குள் சென்றுவிட வேண்டுமென்ற நோக்கம் உருவாயிருந்தது. நோர்மன்டித் தரையிறக்கம் மேற்கொள்ளப் பட்டதற்கான காரணங்களில் இவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

இனி குடாரப்புக்கு வருவோம்.

குடாநாட்டில் நிலைகொண்டிருந்ததாகக் கருதப்படும் ஏறத்தாழ 30,000 படையினரின் ஆள் வலு, கிபிர், எம்.ஐ.24 வான்கலங்களின் தாக்குதல் வலு, கண்ணுக்கெட்டாத உயரத்தில் வேவு விமானம், அதற்கும் மேலே முதுகில் குத்துவோரின் செய்மதிகள், ஏராளமான டாங்கிகள், குறுந்தூர, நெடுந்தூர எறிகணைச் செலுத்திகள், ஆட்லறிகள், கண்காணிப்பு ராடர்கள், கடலில் மிதக்கும் கோட்டையாய் கட்டளைக்கப்பல், 16ற்கும் மேற்பட்ட டோறாக்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே புலிகள் கைப்பற்றியிருந்த கட்டைக் காட்டை மீளக் கைப்பற்றவென மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டி ஆராச்சியின் தலைமையில் ஒருவருக்கு ரூ.75000 செலவிலே பயிற்சி அளிக்கப்பட்டு போராயதத்தோடு காத்திருந்த 53ஆவது டிவிசனின் துருப்புகள் முதலியவை அடங்கலான எதிரிப் படையை எதிர்கொண்டு 26.03.2000 அன்று இரவிலே வான்பலம் என்பது மருந்துக்கும் இல்லாத எமது அணி நகரத் தொடங்கியதுமே தாழையடிக்கு நேரே மோதல் ஏற்பட்டுவிட்டது. இருந்தும் அந்த நெருக்கடியிலும் திகைப்பூட்டுதல் அம்சம் நிறைவேறிவிட்டது. உயரே கட்டளைக் கப்பல் 16 டோறாக்கள் முதலியவை கரையை நோக்கிச் சூடுகளை வழங்க, கரை நெடுக நிறுத்தப்பட்டு கடலுக்குள் 7 கிலோ மீற்றர் தூரத்திற்கு டாங்கிகள் சூடுகளை வழங்க, அந்தச் சூடுகளின் நடுவால் கிட்டத்தட்ட 10 கிலோ மீற்றர் தூரம் எதிரியின் பலத்தோடு ஒப்பிடும்பொழுது மிகக்குறைவான வகைதொகை யிலான கடற்புலிகளின் சண்டைப் படகுகளும், கடற்புலிகளின் மன ஓர்மமும் தந்த காப்பை மட்டும் நம்பித் தரையிறங்க விருந்த அணி நகர்கிறது. தரையிறங்கத் திட்டமிட்டிருந்த குடாரப்புவில் தரையிறங்கிய அன்றே கடல்நீரேரி, சதுப்புகள் கொண்ட கரடுமுரடான தரையமைப்பின் ஊடாக, காப்புகளற்ற பகுதிகளூடாக நகர்ந்து ஏ9 கண்டி வீதியை எதிரி அறியாமலே ஊடறுத்து நிலைகளை அமைத்துக்கொள்கிறது எமது அணி. வத்திராயன், தாழையடி, மருதங்கேணி முகாம்கள் கைப்பற்றப்பட்டு உடுத்துறை வழியான விநியோகப்பாதை 29.03.2000 அன்று திறக்கப்படும்வரை அபாயகரமான கடல்வழி விநியோகத்தை மட்டும் நம்பி, தரையிறங்கிய படை நிலைகொண்டிருந்தது. சூழவர எதிரிகள், ஒடுக்கமான விநியோகப்பாதையோடு தாக்குப் பிடித்த அணியிலே விரல்விட்டு எண்ணக்கூடிய கொம்பனிகளே இருந்தன. பின்பு இந்த அணியை அழித்துவிட எதிரி எடுத்த 8 முயற்சிகளையும் மயிர்க்கூச்செறியும் விதத்தில் நெருக்கமான முறியடிப்புச் சமர் புரிந்து முறியடித்ததிலே 53ஆவது படையணியின் தளபதி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டிஆராச்சி பதவியை விட்டுத் தூக்கி எறியப்பட்டார். இந்த வகையிலே முழுமையான வான் மேலாண்மை முழுமையான சூட்டுக்காப்புகள், குண்டு வீச்சுத் திரைகளுடன் ஆங்கிலக் கால் வாயிலிருந்து எதிரியை நேரே பின்னால் தள்ளிய நேச நாட்டுப் படைகளையும் வான் பலமே இல்லாமல் சூட்டுக்காப்புகளை குறைந்த அளவில் கொண்டு நீரின் கீழாலிருந்து தவிர ஏனைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்துப் பக்கங்களிலும் இருந்து பொழியப்பட்டுக் கொண்டிருந்த எதிரிச் சூடுகளுக்கு நடுவில் தரையிறங்கிய விடுதலைப் புலிகளையும் ஒப்பிடமுடியுமா?

சமஆள் வலு, படைக்கள வலுவுள்ள எதிரிக்கு எதிராக 1,00,000 நேச நாட்டுப் படைமேற்கொண்ட தரையிறக்கத்தையும் கிட்டத்தட்ட 20:01 என்ற விகிதத்தில் ஆள்வலு, படைக்கல வலுவுடன் தரையிறங்கிய புலிகளையும் ஒப்பிடமுடியுமா?

5 நாட்கள் போராடி 80 மைல்கள் முகப்புத்தள பகுதியில் 20 மைல்கள் நகர்ந்த நேச அணியினரையும் ஒரே இரவில் 5 கிலோ மீற்றர் நகர்ந்த ஏ9ஐ ஊடறுத்து நிலைகளையும் அமைத்துக் கொண்டுவிட்ட புலிகளையும் ஒப்பிடமுடியுமா? நிச்சயமாக ஒப்பிடமுடியாது. அப்படியானால், பிரம்மாண்டமான நோர்மன்டித் தரையிறக் கத்துடன் ஒப்பிட்டு வியப்படைவதற்கான, எமது குடாரப்புத் தரையிறக்கத்தில் உள்ள சிறப்பம்சங்கள் எவை?

- எமது மண்ணை மீட்பது தவிர வேறு நோக்கம் இல்லை.
- நோர்மன்டியைவிடச் சிறப்பான தலைமையும், அற்புதமான நெறிப்படுத்தலும்
- அர்ப்பணிப்புடன் நேரில் களமிறங்கிப் போராடிய தளபதிகளின் வழிநடத்தல்.
- போராளிகள்,எல்லைப்படையினர், சிறப்பு எல்லைப் படையினரின் அர்ப்பணிப்பு, வீரம், ஈகம்.
- கிடைக்கும் வளங்களை உச்சப் பயன்பாட்டிற்கு உட்படுத்திய துல்லியமான திட்டமிடல்.
- பீரங்கிப் படையணியினர், விசேட கனரக ஆயுதப் பிரிவினர், முதலியோரின் இலக்குத் தவறாத தாக்குதல்கள்.
- படகுகளையும் 14 வீரர்களையும் மட்டும் இழந்து தரையிறக்கத்தைச் சாத்தியமாக்கிய கடற்புலிகளின் திறன்.

இந்தவகையிலே பார்க்கப்போனால் குடாரப்புத் தரையிறக் கத்துடன் ஒப்பிடுவதாயின் புதிதாக ஒரு தரையிறக்கம் நிகழ வேண்டும் என்றே கூறவேண்டும்.


■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூநகரியில் ஓவியக்காட்சி

பூநகரி- இதுவும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடம். பூநகரி மகா வித்யாலாயத்தில்தான் என்னுடைய ஓவியக் காட்சி ஏற்பாடாகி இருந்தது. போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளுள் பூநகரியும் ஒன்று. ஓவியக் காட்சி தொடங்கியதிலிருந்தே பள்ளி மாணவ-மாணவிகளும், பொதுமக்களுமாக நிறையக் கூட்டம் வந்து கொண்டிருந்தது. மாணவ-மாணவிகளோடு தற்போது உள்ள நிலவரம் குறித்தும், அவர்களுடைய எதிர்காலம் குறித்தும் நிறைய விவாதித்தேன். ஓவியங்களை அவர்களும் முழுமையாக உள் வாங்கிக் கொண்டார்கள் என்பது என்னுடன் உரையாடியதிலிருந்தும் பதிவேட்டில் அவர்கள் எழுதியக் கருத்துக்களிலிருந்தும் உணரமுடிந்தது.

ஆசிரியர்களும் ஆசிரியைகளும் என்னுடன் தற்போதைய கல்விச் சூழல் குறித்தும், நிலவும் நிலவரம் குறித்தும் தங்களுடையக் கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள். தமிழ்ப் பகுதிகளில் போதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் வஞ்சிக்கப்படுவதால் மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய கல்வி மிகவும் பாதிக்கப்படுகிறது என்று அப்பள்ளியின் முதல்வர் கவலைப்பட்டார்.

அன்று மாலை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு.இராசநாயகம் அவர்கள் இங்குதான் ஓவியக் காட்சியை முதன் முதலில் பார்வையிட்டார்கள். கிளிநொச்சியில் தொடங்கியபோதே அவர்தான் ஓவியக்காட்சியை தொடங்கி வைப்பதாக இருந்தது. அவசரபணி நிமித்தம் கொழும்புக்கு அவர் அழைக்கப்பட்டதால் கலந்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு இங்கு பார்வையிட்டார். மிகவும் அற்புதமான மனிதர். அவருடனும் நிறைய விவாதித்தேன்.

கூட்டம் சற்றுக் குறைவாக இருந்த நேரம், பூநகரியில் இராணுவ முகாம் இருந்த இடத்தை சென்று பார்க்கவேண்டும் என்று என்னுடைய விருப்பத்தை நண்பர்களிடம் தெரிவித்தேன். புலிகள் மிகப்பெரிய தாக்குதல் நடத்தி அம்முகாமை தகர்த்தார்கள். ஏற்கெனவே அதுபற்றி படித்திருக்கிறேன். அதனால் எனக்கு ஆர்வம் அதிகமாக இருந்தது. சென்றேன். பார்வையிட்டேன்.

ஒவ்வொரு நாளும் ஓவியக்காட்சி முடிந்தவுடன் கிளி நொச்சிக்கு திரும்பிவிடுவது வழக்கம். இரவு எவ்வளவு நேரம்



அரச அதிபர் திரு.இராசநாயகம் அவர்களுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனாலும் சரி. அன்று இரவு 12 மணிக்குமேல் ஆகிவிட்டது. குளித்து விட்டு பூநகரியில் பதிவு செய்யப்பட்டக் கருத்துக்களை படிக்கத் தொடங்கினேன்.

■ உணர்ச்சிமிக்க தத்ரூபமான ஓவியங்கள். ஒவ்வொரு ஓவியமும் ஒவ்வொரு தமிழனதும் துடிப்புகளை, வேதனைகளை பறைசாற்றுவதோடு, வேதனையின் வடிவம் எப்படியானது என்பதை வர்ணமே புடம்போட்டு காட்டி நிற்கிறது.

*- கே.எஸ்.சுபாஷ்*

■ நான் இம்மண்ணிலே பிறந்திறாத காலத்தில் எம்தமிழ் உறவுகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவர்கள் பட்ட துயரங்களையும் எம்உள்ளத்தில் என்றும் அழியாத நினைவுகளாக ஓவியங்கள் துணைநிற்கின்றன. இதுவரைகாலமும் எம் மனத் திரையில் மட்டுமே கண்டிருந்த பல இன்னல்களை எம்கண் முன்னால் காண்பிக்கும் ஓவியங்கள்.

*- ப.பாமினி*

■ எமது தமிழீழ நாட்டின் அவலங்களை அன்னியனின் மிலேச்சத்தனமான கொடுமைகளை தங்களின் ஓவியங்கள் மூலம் உலக அரங்கிலே தத்ரூபமாக வெளிக்கொணர்ந்து எமது நாட்டின் விடுதலையை உலக அரங்கிலே ஒளிவீசச் செய்திருக்கிறீர்கள்.

*- மாசிலாமணி*

■ எமது நாட்டின் வரலாறுகள் பேசப்படுவதும் கேட்கப்படுவதும் மறக்கப்படுவதுமாகவே உள்ளன. ஆனால் மறக்கப்படாத ஒவ்வொரு மக்களின் மனங்களிலும் ஆழமான புரட்சியை உங்கள் ஓவியங்கள் ஏற்படுத்தியுள்ளன. ஒவ்வொரு படுகொலைகள் சித்திரவதைகள் எமது உறவுகள் பட்ட துன்பங்களை உலக அரங்கிற்கு வெளிப்படுத்தி எமது விடுதலை யைப் பெற்றுத் தரும் உறுதி எமக்கு மட்டுமல்ல எமது அடுத்த சந்ததிக்கும் இவ்வோவியங்கள் அவசியமானது.

*- நா.ஜெகதீஸ்வரன்*

■ நாம் பார்த்தது ஓவியங்கள் அல்ல; அவை எம் நிஜங்கள். நீங்கள் வரைந்தது படங்கள் அல்ல; வரலாறுகள்.

*- கதிர்மகள்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மரணித்த மனம் கொண்டோரினால் சிதிலமாக்கப்படும் எம் பிறப்பின் அவலங்களை சிந்தையில் நிறுத்தி சித்திரித்த இவை வெறும் ஓவியங்கள் அல்ல; காவியங்கள்.

*- செ. சிவபாலன்*

■ எமது மண்ணில் நிகழ்ந்த கொடூரங்களை வடித்துள்ள அழகு மனதைப் பாதிக்கிறது. மனிதத்தின் உன்னதக் கோலங்களை மனித விழுமியம் வழுவாது வடித்துள்ள தங்களது கைவண்ணம் பெருமைக்குரியது.

*- த.இராஜநாயகம், அரசாங்க அதிபர், கிளிநொச்சி*

■ உள்ளத்தில் உறங்கிக் கிடந்த நினைவுகள் உங்கள் ஓவியத்தின் உயிர்த் துடிப்பு மூலம் எம்மவரின் உள்ளங்களில் வெளிக் கொணரப்பட்டதைக் காண முடிந்தது. எங்களைக் கடல் பிரித்தாலும் எங்கள் துன்பங்களை, வடுக்களை, வேதனைகளை சோக வரலாறுகளை ஓவியமாக வடித்து எம்மக்கள் முன்னே படைத்து விடுதலை உணர்வை மேலோங்க வைக்கும்.

*-பொன். தில்லைநாதன், முதல்வர், பூனகரி மகா வித்யாலயம்*

■ தமிழீழ விடுதலைப்போராட்டக் களங்களிலே சிங்கள இனவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட துன்புறுத்தல்கள், துயரங்களை வரலாற்றுப் பதிவாக்கித் தந்த ஓவியர் புகழேந்தி, அவரும் எமது விடுதலையின் பதிவு.

*-R.R.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இது காகித ஓவியம் அல்ல தமிழரின் நெருப்புக் கண்ணீர். இவற்றின் நெருப்பாற்றலில், நாளை ஓர் எரிமலை வெடிக்கும்; சுதந்திரம் பிறக்கும்.

-உ.அனுராஜ்

பூநகரியில் ஓவியக்காட்சி முடிந்த அடுத்த நாள் 'உதயன்' நாளிதழில் **நாம் எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விட நாம் எதைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்** என்றத் தலைப்பில் என்னுடைய நேர்காணல் வெளிவந்தது. அந்த நேர்காணலை எடுத்த சித்தாந்தன் மற்றும் சுதேசிகன் இருவருமே படைப்பாளர்கள். சித்தாந்தன் மிகச் சிறந்த கவிஞர் என்று அறிந்தேன். அதனால் இந்த நேர்காணல் மிகவும் உணர்ச்சிபூர்வமாக இருந்தது.

பல்வேறு கேள்விகளைக் கேட்டுக் கொண்டு வந்தவர். "கடந்த 25 ஆண்டுகால போராட்டத்தில் இந்த மண்ணிலிருப்பவர்களே இந்தப் போராட்டத்தோடு தாக்குப்பிடிக்க முடியாமல் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருக்கிறார்கள் அல்லது காட்டிக் கொடுக்கும் துரோகியாகி இருக்கிறார்கள். நீங்கள் எப்படித் தொடர்ந்து 23 ஆண்டுகளாக இந்தப் போராட்டத்தோடு நிற்கிறீர்கள்?" என்று கேட்டார். இந்தக் கேள்வி என்னை மிகவும் உணர்ச்சிவசப்பட வைத்துவிட்டது. பல்வேறு நினைவுகள், நிகழ்வுகள் என் மனத்திரையில் ஓடியது. என்னையறியாமல் வந்த அழுகையை அடக்க பத்து நிமிடங்கள் மவுனமாக இருந்தேன். முடியவில்லை. வெடித்து அழுதுவிட்டேன். அவர்களும் அழுதார்கள் பிறகு நேர்காணல் தொடர்ந்தது. (காண்க: இணைப்பு-2)

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலகக் கருவியாக புத்தர் சிலை

நான் அம்மண்ணில் நின்றபோது அதாவது மே15ஆம் நாள் இரவோடிரவாக சட்டவிரோதமாக திருக்கோணமலை பேருந்து நிலையத்திற்கு அருகில் மணிக்கூட்டுக் கோபுரச் சந்திக்கு முன்னால் ஒரு புத்தர் சிலையை அமைத்து பெரும் பதற்றத்திற்கு சிங்களவர்கள் வித்திட்டார்கள். ஏற்கனவே போர் நிறுத்த ஒப்பந்தம் ஆட்டம் கண்டுகொண்டிருந்த நிலையில் இந்த புத்தர் சிலை மேலும் பதற்றத்தை உண்டாக்கியிருந்தது.

இது குறித்து நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் "திருக்கோணமலையை சிங்களமயமாக்குவதில் சிறீலங்கா அரசு அக்கறையுடன் இருந்தே வருகிறது. துறைமுகம், இல்மனைட், மகாவலியின் டெல்டா உட்பட்ட வளங்களே இதற்குக் காரணம். இதற்காக 1950களிலிருந்தே தொடர்ச்சியாக சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. இப்பொழுது திருக்கோணமலையில் சிங்கள மக்களுக்கு என்று தனி உதவி அரச அதிபர் பிரிவுகளே கூட இருக்கின்றன. திருக்கோணமலையில் 1881இல் சிங்களவர்களின் எண்ணிக்கை 935 ஆகவும், தமிழர்களின் எண்ணிக்கை 14,394 ஆகவும் இருந்தது. 2001இல் சிங்களவர் எண்ணிக்கை 87,720ஆக உயர்ந்து விட்டது. தமிழர்களின் எண்ணிக்கை 1,09,358 ஆக மட்டுமே உள்ளது. 1881இல் 4.12 வீதமாக இருந்த சிங்களவர் இப்பொழுது 26.50 வீதமாக உயர்ந்துவிட்டனர். 1881இல்64.85 வீதமாக இருந்த தமிழர் வீதம் இப்பொழுது 33.04 வீதமாக வீழ்ந்து விட்டது. முஸ்லீம்கள் 40.19 வீதமாக உள்ளனர். இதைவிடவும் திருக்கோணமலையில் அரச அதிபராக சிங்களவர் ஒருவர் மட்டும் இருப்பது எழுதப்படாத சட்டமாகிவிட்டது. இது சிங்களக் குடியேற்றத்தை வலுப்படுத்து வதாகும். இந்த நிலையில் புத்தர் சிலைகளை முதலில் நிறுவி அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த இடமாகக்காட்டி சிங்களக் குடியேற்றத்தை நிறுவுதல் அவர்களின் தொடர் உபாயமாக இருந்து வருகின்றது.

இப்போது புதிதாக நகரப் பேருந்து நிலையத்தில் இரவோடு இரவாக 12அடி உயர புத்தர் சிலை நிறுவப்பட்டது. இதன் பின்னர் தமிழருக்கும் சிங்களவருக்கும் இடையே பெரும் முறுகலை அது தோற்றுவித்தது. தமிழர்கள் புத்தர் சிலையை அகற்ற வேண்டும் என்று வேலை நிறுத்தம் செய்ய இரு இனத்தவர்களுக்குமிடையே வன்முறை வெடித்திருக்கிறது. கைக் குண்டுகள் வீசப்படுமளவிற்கு நிலைமைகள் பாரதூரமாகியிருக்கின்றன. கைக்குண்டு வெடிப்பில் ஒருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இதன்பின் தமிழருக்கும் சிங்கள வருக்கும் இடையே மோதல்கள் வெடித்துக் கொண்டிருக்கின்றன. இதில் இராணுவமும் கால்துறையும் சிங்களவருக்கு ஆதரவாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர்" என்றார்.

இந்த விவகாரத்தை திருமலை தமிழர் பேரவை நீதிமன்றத்துக்கு சென்றது. நீண்ட விசாரணையின் பின் புத்தர் சிலையை அகற்ற நீதிபதி உத்தரவிட்டார். ஆனாலும் பெருமளவிலான சிங்கள் மக்கள் இவ்விடத்தில் ஒன்றுகூடி சிலையினை அகற்றவிடமாட்டோம் எனத் தெரிவித்துள்ளனர்.

தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் திரு.வ.விக்னேஸ்வரன் சார்பில் ஆஜரான பிரபல வழக்கறிஞர் திரு.ஆர்.ஜெகசோதி "திருக்கோணமலை மாவட்டத்தில் புத்தர் சிலைகள் அமைக்கப் படுவதற்கு நாம் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனவும், அகிம்சையை போதிக்கும் புத்தர் பகவானை பயன்படுத்தி எமது பிரதேசத்தில் ஆக்கிரமிப்புச் சின்னமாக மாற்றுவதற்கே எதிர்ப்புத் தெரிவிக் கின்றோம்" எனத் தெரிவித்தார்.

சண்டே டைம்ஸ் எனும் பத்திரிகை 18.5.2005இல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை இனநல்லுறவிற்கான தீர்ப்பு என வியந்து பாராட்டி எழுதியது.

மீண்டும் போரைத் தொடங்குவதற்கான மையப்புள்ளியாக இந்தப் புத்தர் சிலை விவகாரம் அமைந்துவிடுமோ என்ற அய்யம் எனக்கு இருந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணிவெடி
# மண்ணுக்குள் மரணப்பொறி

உலகிலேயே அதிக அளவில் கண்ணிவெடி பயன் படுத்துகின்ற நாடுகளில் சிறீலங்கா நான்காவது இடத்தில் உள்ளதாக உலகநாடுகளுக்கான கண்ணிவெடி தொடர்பான கணக்கெடுப்பில் இருந்து தெரிய வந்துள்ளது. 2000மாவது ஆண்டுவரை 6000 மில்லியன் மிதிவெடிகள் சிறீலங்கா அரசால் பயன்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் 98 விழுக்காடு தமிழர்களின் பாரம்பரியத் தாயகமான இலங்கைத் தீவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதி யிலேயே புதைக்கப்பட்டுள்ளன என்ற விபரமும், நான் ஓமந்தை யிலிருந்து கிளிநொச்சி வரும்போது சாலையின் இருபுறமும் கண்ட '**கண்ணிவெடிகள் கவனம்**' 'எச்சரிக்கை' என்ற அறிவிப்பும், கண்ணிவெடி அகற்றும் பணி குறித்து மேலதிக செய்திகளை அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினேன். நண்பர்களிடம் என் விருப்பத்தைத் தெரிவித்தேன்.

நண்பர் என்னை கண்ணிவெடி அகற்றும் பிரிவின் அலுவல கத்திற்கு அழைத்துச் சென்றார். அதன் பொறுப்பாளரைச் சந்தித்தோம். அவர் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் செயற்பாடுகள், கண்ணிவெடிகளின் தன்மைகள் பற்றி விளக்கினார்.

"2000மாவது ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் தேதியன்று தமிழர் மறுவாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் தொடங்கப்பட்டு தொடர்ந்து செவ்வனே செயலாற்றி வருகிறது.

எவ்வித இராணுவ நோக்கமுமின்றி மக்களை வெடிபொருள் அபாயத்தினின்று நீக்கி, அவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிசமைப்பது என்ற ஒன்றையே தமது தாரக மந்திரமாகக் கொண்டு செயற்பட்டு வருகிறது.

உலக நாடுகளின் பிரத்யேக இராணுவத் தயாரிப்புகளின் முதல் கொள்வனவாளனான சிறீலங்காவினால் பலதரப்பட்ட மிதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெடிகளும் கொள்முதல் செய்யப்பட்டு வன்னி மண்ணின் எல்லையெங்கும், குறித்த வரையறைகளை மீறி, இனங்காண முடியாத மர்ம ஒழுங்கமைப்பில் பல இலட்சம் மிதி வெடிகளும், கண்ணிவெடிகளும், வகைதொகையின்றி விதைக்கப்பட்டுள்ளன. இன்று ஒப்பீட்டளவில் தென்னாசியாவின் மிதிவெடிக் களஞ்சியம் வன்னி மண்ணென்றால் அதில் மிகையேதுமில்லை என்றுக் கூறுமளவிற்கு இங்கு மிதிவெடிகள் காணப்படுகின்றன. என்ன நோக்கத்திற்காக விதைத்தார்களோ அதன் பயனின்றி, இதுநாள் வரை அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழப்புகளுக்கும், அங்க இழப்புகளுக்கும் காரணமாகி அதன் பணியை செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளது. விதைக்கப்பட்ட மிதிவெடிகளால் பாதிப்படைவதற்கு தமிழன் என்ற தகுதிமட்டும் போதும் என்ற சிறீலங்கா இனவாத அரசின் கபடநோக்கம் இதிலிருந்து புலப்படுகிறதல்லவா" என்று அப்பொறுப்பாளர் தெரிவித்தார்.

தமிழீழப் பிரதேசங்களான மணலாறு, தொடக்கம் நெடுங் கேணி, ஒட்டுச் சுட்டான், கரிப்பட்டமுறிப்பு, ஒலுமடு, மாங்குளம், கனகராயன் குளம், இரணை இலுப்பைக்குளம், முள்ளிக்குளம், கிரிச்சுட்டான், பெரியமடு, பள்ளமடு ஆகிய மக்களின் வாழ் விடங்களை ஊடறுத்து ஒருதொகுதியாகவும், ஆனையிறவுச் சூழவும் சுட்டத்தீவு, பரந்தன், திருவையாறு, பன்னங்கண்டி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரியான், தட்டுவன்கொட்டி ஆகிய மக்கள் வாழ்விடங்களை ஊடறுத்து இன்னோர் தொகுதியாகவும் இம்மிதிவெடிகள் காணப்படுகின்றன. இதுநாள் வரை வன்னி மக்கள் தமது நாளாந்தப் பணி எதனைச் செய்வதாக இருந்தாலும் அதனை நிறைவேற்றி விட்டு தாம் உயிருடன் திரும்புவோமா என்ற அச்ச உணர்வுடன்தான் வாழ்வினை ஓட்டிவந்திருக்கிறார்கள். எங்கு திரும்பினாலும் மிதிவெடி அச்சுறுத்தல் இருந்திருக்கிறது.

மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவு தனது பணியைத் தொடங்கியது. வன்னி மண்ணில் உள்ள அனைத்து மிதிவெடி களையும் உடன் அகற்றுதல் சாத்தியமற்று இருந்ததால் மக்கள் வாழ்விடங்களை சூழவுள்ள மிதிவெடிகளை உடன் அகற்ற முடிவு செய்திருக்கிறது. அதன்படி இரண்டாவது தொகுதியாகக் கூறப்பட்ட கிளிநகரைச் சூழ்ந்த, மிகுதியாக மக்கள் வாழ்விடமாக இருந்த பகுதிகள் மிதிவெடியகற்றும் பணிக்கு முன்னுரிமை படுத்தப் பட்டிருக்கிறது.

"இதுவரை ஒருலட்சத்திற்கும் மேற்பட்ட மிதிவெடிகளும் பல்லாயிரக்கணக்கான அபாயகரமான வெடிபொருள்களும் மீட்கப்பட்டு அழித்தொழிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 3,76,00,000 சதுர மீட்டர் மிதிவெடி வயல்களாக இருந்த நிலப்பரப்பு மக்கள் வாழ்விடமாக தகுதி உயர்த்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் இப் பகுதிகளில் மேலும் உறுதிப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2000ஆம் ஆண்டின் ஆரம்ப பகுதிக்கு முன்னர் ஏற்பட்ட மிதிவெடி விபத்துகள், உயிரிழப்புகள், அங்கவீனர்களின் தொகையுடன் ஒப்பிடும்போது தற்போது பாதிப்புற்றோர் தொகை இல்லை என்று கூறுமளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது" என்றும் கூறினார்.

ஒவ்வொரு வன்னிவாழ் தமிழ்மகனும் தனது சொந்தக் கால்களுடன் இன்று நடமாடுவதைக் கண்டு மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் ஒவ்வொரு அங்கத்தவர்களும் புளகாங்கிதம் அடைகின்றார்கள். இருப்பினும் இவ் அங்கத்தவர் ஒவ்வொருவரும் மக்களுக்காக நாள்தோறும் சேற்றிலும், தண்ணீரிலும், முட்புதர்களிலும், பற்றைகளிலும், கல்போன்ற கரடான நிலத்திலும், சுடுமணலிலும், வெய்யில் மழை எனப் பாராது கயிற்றின் மேல் நடப்பது போன்றும் கரணம் தப்பினால் நிச்சயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணம் என்பது நன்றாகத் தெரிந்திருந்தும் வார்த்தைகளில் விவரிக்க முடியாத மனிதாபிமானப் பணியை ஆற்றி வருகின்றார்கள்.

இம்மனிதாபிமானப் பணியில் தன்னலம் கருதாது செயற்பட்ட லிங்கம் என்ற தொண்டன் தனது உயிரையே அர்ப்பணித்திருக்கிறார். மற்றொருவர் தனது காலினை இழந்திருக்கிறார்.

"மனிதநேயக் கண்ணிவெடியகற்றும் பிரிவின் ஒவ்வொரு அங்கத்தவரினது குடும்பச் சுமையும் ஏழ்மையும் சொல்லி லடங்காது. இந்நிலையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தம்மாலியன்ற அளவில், தமது நிர்வாக செலவை மட்டுப்படுத்தி இப்பணியிலீடுபடும் 150க்கும் மேற்பட்ட தொண்டர்களுக்குமான மாதாந்த கொடுப்பனவுகளை வழங்கிவருகிறது. உலகில் ஏனைய உள்நாட்டு யுத்தங்கள் நடைபெறும் இடங்களில் சர்வதேச நிறுவனங்களின் மிதிவெடியகற்றும் தொண்டர்களுக்கு பணியின் போது நவீன தொழில் நட்ப மிதிவெடி கண்டறி சாதனங்கள், (Metal Detectors) பாதுகாப்பு அங்கிகள், முகமூடிகள், காலணிகள் என்பனவும் அதியுயர் மாதந்தக் கொடுப்பணவும் இதரக் காப்புறுதி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன" என்று மேலும் கூறினார். இவ்வசதிகளை நினைத்துப்பார்க்க முடியாத நிலையில் தற்போது வன்னி மண்ணில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மக்களுக்காற்றும் பணி எந்த வகையிலும் குறைந்ததோ சளைத்ததோ அல்ல. இம்மாபெரும் மனிதநேயப்பணி சர்வதேச நிறுவனங்களால் அங்கீகரிக்கப்படாமல் இருப்பினும் மக்கள் மனங்களால் மறக்கப்பட முடியாததாக உள்ளது.

அவர்களின் மனிதாபிமானப்பணியை பலமுறைப் பார்த்து மெச்சி, வியந்ததுடன் தமிழீழத்தில் மிதிவெடியகற்றும் தொண்டர் களை அவர்களால் அகற்றப்பட்ட 65000 மிதிவெடிகளுடன் சேர்த்து புகைப்படம் எடுத்துச் சென்ற சர்வதேச நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் வெறும் வார்த்தைகளுடன் நின்றுவிட்டதை நினைத்து வேதனை யடைகிறார்கள்.

"வன்னிமண் அங்கீகரிக்கப்படாத அரசின் கீழ் இயங்குவதாகக் காரணம் காட்டி உதவ மறுக்கும் சர்வதேச நிறுவனங்களால் இம்மனிதநேயப் பணியை அங்கீகரிக்க முடியவில்லை. யாழ் மண்ணில் அதிநவீன மிதிவெடியகற்றும் கருவிகளுடன் சகல வசதிகளுடனும் செய்து முடிக்கப்பட்ட பணியையும், மரபு வழி 'முள்' உபகரணங்களுடன் எவ்வித நிர்வாக செலவுமின்றி இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும் பணியையும் ஒப்பிட்டாவது முடிவெடுப்பார்களா?" என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மனிதாபிமானப் பணி எங்கு நடைபெறுவது என்பது முக்கியமல்ல எப்படி நடக்கிறது என்பதே முக்கியம். இதனை சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் புரிந்துகொண்டு செயற்பட்டால் மனிதநேயம் என்பதற்கான சரியான வரைவிலக்கணம் பாதுகாக்கப்படும்.

களமுனையில் படுதோல்வியைச் சந்திக்கும் சிறீலங்கா அரச படைகள் தங்கள் பலவீனத்தை ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் அப்பாவித் தமிழ் மக்களை குறிவைத்து வேண்டுமென்றே வெடிக்கக் கூடிய நிலையில் விட்டுச் செல்லும் இந்த அபாயத் திலிருந்து தமிழ்மண் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டிருக்கிறது என்றால், அதற்கு இத்தொண்டர்களின் அர்ப்பணிப்பே காரணம்.

பரந்தன் பகுதியில் கண்ணிவெடி அகற்றும் இடங்களை பார்வையிட்டேன். அத்தொண்டர்கள் மத்தியில் என்னை உரையாற்ற அப்பொறுப்பாளர் கேட்டுக் கொண்டார்.

"புண்பட்டுப் போயிருக்கும் மண்ணை பண்படுத்தும் பணியில் உங்கள் உயிரையும் பனையம்வைத்து ஈடுபட்டிருக்கும் உங்களுக்கு என் சார்பாகவும் தமிழக மக்கள் சார்பாகவும் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்" என்று பேசினேன்.

இன்று உலகில் ஒருபுறம் கொடிய ஆட்கொல்லி நோய் களாலும், மறுபுறம் யுத்தங்களின் போது விதைக்கப்பட்ட மிதிவெடிகளாலும், மக்கள் பாதிப்புற்று அழிவதும் அங்கங்களை இழப்பதும் தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிட்டது. செவ்வாய் வரை சென்று ஆராயுமளவிற்கு வளர்ந்துவிட்ட விஞ்ஞான தொழில்நுட்ப யுகத்திலும் இந்த ஆட்கொல்லி நோய்களை வெல்ல முடியாமல் இருப்பது விந்தைதான். ஆனால் 'வெடிபொருள்' அபாயத் தினின்றும் மக்களைக் காப்போம் என்ற சர்வதேச அமைதிபேணும் நிறுவனங்களின் ஒருமித்த வாக்கியம் வன்னியில் வெறும் வாக்கியமாகத் தொக்கி நிற்பது அதனைவிட விந்தைதான்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழேந்தி
# இந்தியாவிலிருந்து ஒரு கலைத் தூதர்

ஓவிய ஆசிரியர்களுக்கான பயிலரங்கு இரு பிரிவுகளாக இரண்டு, இரண்டு நாட்கள் நடைபெற்றது. ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தது 25 ஆசிரிய, ஆசிரியைகள் இருந்தார்கள். முதல் பிரிவில் கிளிநொச்சி வலய ஓவிய ஆசிரியர்களும் இரண்டாவது பிரிவில் முல்லைத்தீவு வலய ஓவிய ஆசிரியர்களும் இருந்தார்கள். இந்தப் பயிலரங்கு அந்த ஆசிரியர்களுக்கு அவர்களை மேம்படுத்திக் கொள்வதற்கு உதவியது. ஓவிய அடிப்படைகளிலிருந்து தொடங்கி ஒரு பொருளை பார்த்து வரைவது வரை, கருப்பு வெள்ளையிலும், நிறங்களிலும் கற்பிக்க முடிந்தது. அவர்கள் கற்றுக்கொள்வதில் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். இதுபோன்ற பயிற்சி எங்களுக்கு ஏற்கனவே கிடைத்திருந்தால் எங்கள் மாணவர்களுக்கு நாங்கள் கற்பிப்பதற்கு மிகவும் உதவியிருக்கும் என்று சொன்னார்கள். ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற பயிலரங்குகளை நீங்கள் நடத்த வேண்டும் என்ற வேண்டுகோளையும் வைத்தார்கள்.

27.05.2005 வெள்ளியன்று, ஈழநாதம்- வெள்ளி நாதத்தில் நிலாந்தன், புகழேந்தி- இந்தியாவிலிருந்து ஒரு கலைத்தூதர் என்றத் தலைப்பில் எழுதியக் கட்டுரை வெளிவந்தது.

நிலாந்தன்- ஒரு எழுத்தாளர், கவிஞர், ஓவியர், அரசியல் விமர்சகர் என்று பன்முக தன்மையுடைய ஒருவர். ஈழத்திற்கு செல்வதற்கு முன்பே அவருடைய எழுத்துக்களை படித்திருக் கிறேன். ஆனால் ஓவியங்களை நான் பார்த்ததில்லை. இதோ அவர் எழுதிய கட்டுரை:

எஸ்.வி.ஆர். என்று தமிழ் நாட்டிலும் இலங்கைத் தீவிலும் பரவலாக அறியப்பட்ட எஸ்.வி.ராஜதுரை தமிழ் நாட்டிலுள்ள புத்திஜீவிகளில் வித்தியாசமாகத் துலங்கும் ஒருவர். முன்பு தமிழ் நாட்டில் ஈழப்போராட்டத்தை மிகத் தீவிரமாக ஆதரித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களில் ஒருவர். தொடர்ச்சியாக உயிர்த்துடிப்போடு செயற்பட்டும் எழுதியும் வருகின்ற ஒரு தீவிர இடதுசாரி; தலித்தியவாதி. தமிழ்நாட்டிலுள்ள நிறுவனம் சார் பாரம்பரிய புத்திஜீவிகள் சாதித்தவற்றை விடவும் அதிகம் சாதித்தவர்.

கடந்த மாவீரர் நாள் அன்று ராஜதுரை யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிக்கு வந்திருந்தார்."இந்நாளில் இங்கே நான் எதைக் கட்டாயம் பார்க்க வேண்டும்" என்று கேட்டார். "துயிலும் இல்லத்திற்கு போவோம்" என்றேன். எமது வாகனம் துயிலுமில்லத்தை நோக்கிப் புறப்பட்ட போதே மாவீரர்நாள் உரையும் ஆரம்பமாகிவிட்டது. ஆளரவமற்ற தெருக்களின் வழியே மழைக்காகக் காத்திருந்த அந்தப் பின்மாலைப் பொழுதில் படுவேகமாக ஓடிய வாகனத்தில் இருந்தபடி மாவீரர் நாள் உரையை அவர் கேட்டார்.

மாவீரர் நாள் உரை முடியுமுன்பே நாம் துயிலுமில்லத்தை அடைந்துவிட்டோம். அங்குத் திரண்டிருந்த சனத்திரளுள் நுழைந்து நாங்கள் நடுகற்களை நெருங்கிச் செல்லவும் மணியோசை எழவும் சரியாக இருந்தது.

குளிர்ந்த காற்றில் தேங்கி நின்ற மணியோசையும் சோகப் பாடலும் தீச்சுடர் கருகும் வாசமும் நடுகற்களின் முன்னே தமது விழிகளில் தீச்சுடர் மினுங்க அழுதபடியிருந்த உறவினர்களுமாக அந்தச் சூழல் எஸ்.வி.ஆர். அவர்களுக்கு முற்றிலும் புதியதாக இருந்தது. எல்லாவற்றையும் அவர் பிரமிப்போடு பார்த்தார். மாவீரர் நாள் உரை மிகவும் சமநிலையாக இருக்கிறது. ஒரு வெளிநாட்டுப் பார்வையாளருக்கு அது விசயங்களைத் தொகுத்தும் சுருக்கியும் தருகிறது என்று அதை அவர் மிகவும் புகழ்ந்தார். அவருக்குள் இருந்த எளிதில் விட்டுக் கொடுக்காத எதற்கும் சரணடையாத இறுக்கமான ஒரு புத்தஜீவி மெல்லக்கரைந்து மிகவும் உணர்ச்சிவசப்பட்ட தமிழன் அவரிடத்தில் தோன்றினான்.

அந்த இடத்தில் அந்த நேரத்தில் அவர் ஒரு புத்தஜீவியாய் அல்ல மிகவும் உணர்ச்சிவசப்பட்ட ஒரு தமிழனாகவே தோன்றினார்.

ஆனால் எஸ்.வி.ஆர். முதலாவதாக ஒரு புத்திஜீவியும் செயற்பாட்டுக்காரரும். இரண்டாவதாகவே அவர் ஒரு கலைஞர் விமர்சகர்.

ஆனால் அண்மை நாட்களில் வன்னியில் வந்துநிற்கும் ஓவியர் புகழேந்தி ஒரு புத்திஜீவியல்ல. அவர் முதலாவதாக ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைப்பாளி. மிகவும் உணர்ச்சிவசப்படுகின்ற ஓர் ஓவியர். ஒரு உள்ளூர்ப் பத்திரிகைக்கு அவர் பேட்டி வழங்கிக்கொண்டிருந்த போது தொடர்ச்சியாக இவ்வளவு காலமும் எப்படி ஈழப்போரோடு நிற்கமுடிகிறது என்று கேட்கப்பட்டபோது அவர் அழுதேவிட்டார் என்று சொல்லப்படுகிறது.

அவரும் அவரையொத்த தமிழகத்து ஈழத்துப் படைப்பாளிகள் பலரும் கலையை ஒரு கருவியாகவே பார்க்கிறார்கள். அதாவது தமது அரசியல் கருத்துக்களை இலட்சியங்களை சனங்களிடம் எடுத்துச் செல்லும் ஒரு வாகனமாகவே அவர்கள் கலையைப் பயன்படுத்து கிறார்கள். இன்று இப்பத்தி புகழேந்தியின் ஓவியங்களின் கலைத்தரத்தை மதிப்பீடு செய்யப்போவதில்லை. பதிலாக அவருடைய ஓவியங்களின் பின்னால் இருக்கும் அரசியலைப்பற்றிக் கதைப்பதே இன்று இப்பத்தியின் நோக்கம்.

புகழேந்தியின் ஓவியங்கள் பெற்ற முக்கியத்துவத்துக்கும், கவனிப்புக்கும் அவற்றின் அரசியல் உள்ளடக்கம் ஒரு முக்கிய காரணம் என்பதனாலும், அவருடைய ஓவியங்களின் அரசியலை கதைப்பது அதிகம் பொருத்தமானதாய் இருக்கும். கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாகப் படிப்படியாகச் சிதைந்துவரும் தமிழக -தமிழீழ உறவின் பின்னணியில் அவருடைய இந்த ஓவிய அரசியலைப் பற்றிக் கதைப்பது மேலும் முக்கியத்துவ முடைய தாகிறது.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் உருவாகிய காலத்திலிருந்து சிதையத் தொடங்கிய தமிழக-தமிழீழ உறவு கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக நிலவிவரும் யுத்தநிறுத்தச் சூழலிலும் பெருமளவுக்குச் சீர்செய்யப்படவில்லை.

கடந்த சுமார் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக மேற்கு நாடுகளை நோக்கி குறிப்பாக ஐரோப்பாவை நோக்கி ஈழத்தமிழர்கள் சாய்ந்துவரும் வேகத்துடன் ஒப்பிடுகையில் தமிழக- தமிழீழ உறவில் ஏற்பட்டிருக்கக் கூடிய புதிய மாற்றங்கள் எதுவும் ஒப்பீட்டளவில் மிகக்குறைவே.

தமிழ்நாட்டில் உள்ள பெரும் கட்சிகளும் பழமைபேண் இடதுசாரிக் கட்சிகளும் ஈழத்தமிழர்களை எப்பொழுதோ கைவிட்டு விட்டன. அல்லது சிலசமயம் காட்டிக் கொடுத்துமிருக்கின்றன. தற்சமயம், ஈழத்தமிழர்களிடத்தில் அக்கறையோடும் ஆர்வத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோடும் காணப்படுவது அரசியல் அதிகாரம் குறைந்த சிறிய கட்சிகளும், சிற்றியக்கங்களும், தலித்திய இயக்கங்களும்தான்.

இத்தகையதொரு பின்னணியில் தமிழ்நாடு இனியும் ஈழப் போரின் பின்தளமாக இல்லை என்று டில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் திருப்திபடக்கூடும், சந்தோசப்படக்கூடும். ஆனால் கடந்த இரு தசாப்தகாலமாக ஈழத் தமிழர்கள் இந்தப் பிராந்தியத்தைக் கடந்து ஒரு அந்நியப் பிராந்தியத்தில் பதிவைக்கப்பட்டு வருவதும் அங்கெல்லாம் அவர்கள் ஏற்கெனவே ஒரு நிதிப் பின்தளமாக உருவாகிவிட்டிருப்பதையும் மேற்படி டில்லியிலிருக்கும் கொள்கை வகுப்பாளர்கள் ஏனோ கண்டுகொள்ளவேயில்லை.

இதுவொரு அசாதாரண மாற்றம். நிச்சயமாக டில்லி யிலிருப் பவர்கள் இப்படியொரு மாற்றத்தை நினைத்துப் பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் அது நடந்துவிட்டது. ஈழத்தமிழர்கள் ஓர் அந்நியப் பிராந்தியத்தில் பதிவைக்கப்பட்டு விட்டார்கள். ஐரோப்பா அவர்களைத் தத்தெடுக்கத் துடிக்கிறது. உழைப்பார்வமும் படிப்பில் வெறியும் சேமிப்பில் வெறியுமுடைய விவேகமும் வீச்சுழியும் மிக்க ஒரு தனித்தினுசான புலம்பெயர் சனத்திரளைத் தன்வயப்படுத் துவதன் மூலம் இந்தப் பிராந்தியத்தில் எதிர்காலத்தில் தமக்குப் பிரகாசமான வாய்ப்புகள் உருவாகிவருவதாக அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகள் நம்புகின்றன. அந்த இலக்கை நோக்கி அடிகளை எடுத்துவைக்கத் தொடங்கியும்விட்டன.

அமெரிக்காவிலுள்ள செல்வாக்கு மிக்க ஐரிஸ் சமூகத்தைப் போலவோ அல்லது யூத சமூகத்தைப்போலவோ ஈழத் தமிழர்களும் ஒரு நாள் ஐரோப்பாவில் அரசியல் அபிப்பிராயங்களை உருவாக்கவல்ல அல்லது,அரசியல் அழுத்தங்களைப் பிரயோகிக்க வல்ல ஒரு சனத்திரளாக உருவாகக்கூடிய வாய்ப்புகள் கடந்த மூன்று ஆண்டுகளில் மேலும் அதிகரித்து வருகின்றன.

இத்தகைய ஒரு பின்புலத்தில் தன்னிடமிருந்து தூரமாகிச் செல்லும்; தனது பிராந்தியத்தைச் சேர்ந்த, தனது உபகண்டப் பெருங்கலாச்சாரத்தின் 'ஒரு கூறாகக்' காணப்படுகின்ற; சிறிய ஆனால் புரிந்து கொள்ளக் கடினமான, வீரமிக்க ஒரு சனத்திரளைத் தொடர்ந்தும் வன்மத்தோடும் 'பெரிய இந்தியா' என்ற ஆணவத் தோடும் டில்லியிலுள்ள கொள்கைவகுப்பாளர்கள் அணுகமுயலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அரசியல் சூழலில் புகழேந்தி தனது ஓவியங்களையும் காவிக் கொண்டு ஒரு கலைப்பயணத்தை மேற்கொண்டு வன்னிக்கு வந்திருக்கிறார்.

அவர் இதற்கு முன்பும் பல கலைப் பயணங்களைச் செய்திருக்கிறார். ஆனால் இது மிகவும் வித்தியாசமானதும், உணர்ச்சிகரமானதும் அவரைச் சிலசமயங்களில் அழவைப்பதாகவும் இருக்கிறது. நல்லூரில் திலீபன் உண்ணா நோன்பிருந்த இடத்திலும் ஏனைய சில பெருமெடுப்பிலான படுகொலைகள் நிகழ்ந்த இடங்களிலும் பெரிய அளவிலான ஓவியங்களை வரைய விரும்புவதாகவும் அவர் கூறுகிறார்.

இந்தியாவிலிருந்து இராஜதந்திரிகளும் ஏனைய பிரதானிகளும் வன்னிக்கு வருதல் என்பதை ஒரு துடக்காகக்கருதும் ஒரு அரசியல் சூழலில் இந்தியாவிலிருந்து முதன்முதலாகப் பகிரங்கமாகவும் துணிச்சலாகவும் வந்திருக்கும் ஒரு கலைத்தூதுவர் அவர்.

ஏற்கெனவே இலங்கைத்தீவிலிருந்து சுவாமி விபுலானந்தர், கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி, தனிநாயகம் அடிகள், நாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை போன்ற சில கலைத்தூதுவர்கள் காலத்துக்குக் காலம் இந்தியாவுக்குப் போயிருக்கிறார்கள். இம்முறை புகழேந்தி இந்தியாவிலிருந்து வந்திருக்கிறார்.

பொடாச் சட்டத்திற்கு எதிராக திரு.வை.கோபாலசாமி முன்னெடுத்த வீரம் மிகுந்த ஒரு சாத்வீகப் போராட்டத்தின் வெற்றிகளில் ஒன்றாகவும் இதை வியாக்கியானம் செய்யமுடியும்.

ஓர் ஆயுதமேந்திய இயக்கத்தை ஆதரித்ததாகக் கூறப்பட்டு பொடாவின் கீழ் வை.கோ. சிறைவைக்கப்பட்டார். ஆனால் அந்தச் சிறைவாழ்வை அதன் வலிகளோடு அமைதியாக ஏற்றுக்கொண்டு அதில் தன்னை வருத்தி அதையே ஒரு சாத்வீகப் போராட்டமாக முன்னெடுத்த வைகோ முடிவில் அதில் வெற்றியும் பெற்றார். அந்த வெற்றிகளின் விளைவாகத் தமிழ்நாட்டில் துளிர்த்துவரும் புதிய நம்பிக்கைகளின் தூதுவராக முதலில் அடியெடுத்து வைத்திருப்பவர் புகழேந்தி எனலாம்.

அவர் இதற்கு முன்பும் (சில மாதங்களுக்கு முன்பு) இலங்கைக்கு வந்து போனவர்தான். கவிஞர் அறிவுமதி, தங்கர்பச்சான், பேராசிரியர் அரசு, எஸ்.வி.ராஜதுரை, பாலு மகேந்திரா, சக்சபோன் கலைஞர் சியாம் சரண் போன்றோர் அதிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரபரப்பின்றி வந்துபோன ஒரு பின்னணியில் பகிரங்கமாக ஒரு கலைத்தூதுவராக முதலில் வரத்துணிந்தவர் புகழேந்தி எனலாம்.

தமிழக-தமிழீழ உறவில் இன்னமும் அறுந்துவிடாதிருக்கும் நுண்ணிய மெல்லிழைகளில் அவரும் ஒருவர். அவர் கொண்டு வந்திருக்கும் கலைத்தூதைப் பின்பற்றி மேலும் மேலும் இந்தியர்கள் இங்கே வரவேண்டும்.

புதுடில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்கள் புலிகளை மட்டும் ஒரு தடை செய்யப்பட்ட இயக்கமாகக் கருதவில்லை. மாறாக, புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வசிக்கும் தமிழர்களையும் கூட, தடைசெய்யப்பட்ட மக்களாகவே பார்ப்பது தெரிகிறது.

ஆனால் அது விசயத்தில் ஈழத்தமிழர்கள் வித்தியாசமாகவும் நிதானமாகவும் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. அதாவது புதுடில்லியிலுள்ள கொள்கை வகுப்பாளர்களையும், இந்தியப் பெருமக்களையும் ஒரே தராசில் போட்டு நிறுத்தக்கூடாது. ஈழப் போரின் நிர்ணயகரமான தருணங்களில், ஐரோப்பாவில் இருக்கும் தமிழர்களைப்போலவே, தமிழ்நாட்டுத் தமிழர்களும் ஒரு தீர்மானிக்கும் பெரும் சக்தியாக அமையமுடியும் என்பதை மறந்துவிடாதிருக்கவேண்டும்.

• • •

ஆசிரியர்களுக்கான பயிலரங்கு முடிந்தநிலையில் ஒரு ஞாயிற்றுக் கிழமை ஒரு பயிற்சிக்கல்லூரியில் அம்மாணவர் களுக்கென்று சிறப்பாக ஒரு நாள் காட்சி வைக்கப்பட்டது. குறைந்தது 2000 ஆயிரம் பேர் பார்வையிட்டார்கள். அவர்களோடு ஒரு கலந்துரையாடலும் நடைபெற்றது. மிகவும் ஆர்வமாக பல்வேறு வினாக்களைக் கேட்டார்கள். என்னுடைய ஓவியங்களை அவர்களால் மிக எளிதாக உள்வாங்க முடிந்திருக்கிறது என்பதை அவர்கள் வெளிப்படுத்தியக் கருத்துக்கள் வாயிலாக அறிந்தேன். ஈழமக்களின் போராட்டம் குறித்து தமிழக மக்களின் நிலை, தமிழக அரசியல்கட்சிகளின் நிலை, கலை, இலக்கியம் குறித்து பல்வேறு நிலைகளில் என்னுடனான அவர்களுடையக் கருத்துப் பகிர்வு இருந்தது. அதில் முக்கியமான செய்தி என்னவென்றால் அவர்களில் பலரும் எழுப்பிய வினா, இந்தியாவில் இருந்து கொண்டு எங்கள் மண்ணில் நடைபெற்ற நடைபெறுகின்ற அனைத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்வாங்கிக் கொண்டு, கடந்த இருபது ஆண்டுகளுக்கும் மேலாக உங்கள் ஓவியங்களில் படைத்திருக்கின்றீர்கள் என்பதை இன்று அல்ல, பலஆண்டுகளாகவே இதழ்கள் வாயில்களாகவும், தொலைக் காட்சி ஊடாகவும் அறிந்து இருக்கின்றோம். இன்று உங்கள் ஓவியங்களை நேராக கண்டிருக்கிறோம். எங்களுக்கு வியப்பாகவும் இருக்கிறது. அதே நேரத்தில் எங்கள் மக்கள் பட்ட இன்னல்களை, எங்கள் போராட்டத்தை, கவிதைகள், சிறுகதைகள் போன்றவற்றில் எங்கள் எழுத்தாளர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால் ஓவியங்களில் எதையும் பார்க்க இயலவில்லை. இங்கே இருக்கின்ற ஓவியர்கள் என்ன செய்துக் கொண்டிருக்கிறார்கள்? என்ற வினாவினையும் எழுப்பினார்கள். இங்கிருக்கின்ற ஓவியர்களை எனக்குத் தெரியாது, ஓவியத்துறையும் எவ்வாறு இருக்கிறது என்பதைப்பற்றி தெரியாத நிலையில் நான் கருத்துச் சொல்வது நியாயமாக இருக்காது என்று கூறித் தவிர்த்துவிட்டேன். இவர்கள் எழுப்பிய அதே வினாவை ஓவியக்காட்சி நடைபெற்ற அனைத்து இடங்களிலும் பலரும் எழுப்பினார்கள்.

அதேபோல், இதழ்களுக்கான நேர்காணல் கண்டவர்களும் 'ஈழத்து ஓவியம், ஓவியர்கள்' குறித்துக் கேட்டார்கள். மாற்கு ஓவியரைத்தவிர வேறு எவரைப்பற்றியும் எனக்குத் தெரியாது. அவரைப் பற்றிக்கூட அதிகமாகத் தெரியாது, ஓரிரு இதழ்களில் படித்திருக்கிறேன். அவ்வளவுதான். அவர் ஓவியங்களைப் பற்றி எதுவும் தெரியாது. நான் பார்த்ததில்லை என்றுதான் தெரிவித்தேன்.

இந்நிலையில் தமிழீழ நுண்கலைத் துறையின் பொறுப்பாளர் திரு.கண்ணதாசன் அவர்கள், என்னுடனான ஓவியர்கள் சந்திப்பு ஒன்றிற்கு ஏற்பாடு செய்தார். யாழ்ப்பாணத்திலிருந்து அ.இராசையா, இரமணி, எழுத்தாளர் ந.சத்தியபாலன் முல்லைத் தீவிலிருந்து இராசன் ஆகியோரும் வந்திருந்தனர். நீண்ட நேரம் அந்த சந்திப்பு நடைபெற்றது. திரு.அ.இராசையா அவர்கள், அவர்களுடைய சில ஓவியங்களையும் எடுத்து வந்திருந்தார். கித்தானில் செய்யப்பட்ட எண்ணெய் வண்ண ஓவியம். அவருக்கு வயது 55லிருந்து 60 வரை இருக்கலாம் என்பது என்னுடைய மதிப்பீடு. அவருடைய ஓவியம் ஈழத்து இயற்கையை இம்பிரசனிச பாணியில் செய்யப் பட்டவையாகவும் மிகவும் நன்றாகவும் இருந்தது. அவருடைய ஓவியத்தில், திறன் நன்றாக வெளிப்பட்டிருந்தது. என்னுடையக் கருத்தை அவரிடமும் தெரிவித்தேன். திரு.ரமணி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(இடமிருந்து)ஓவியர்கள் ரமணி, ஆ.ராசையா, ராசன், எழுத்தாளர் சத்தியபாலன்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இராமனாதன் அகாடமி என்று சொல்லக்கூடிய Art and Design என்ற துறையில் இளங்கலைப் பிரிவில் பகுதி நேர விரிவுரையாளராக இருக்கிறார். கோட்டோ வியங்களில் அதிகம் கவனம் செலுத்துவதாகவும், ஒரு சில சிற்பங்கள் செய்திருப்பதாகவும் தெரிவித்தார். அவருடன் அவர் ஓவியங்களைப் பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லாவிட்டாலும், அவரைச் சந்தித்த ஓரிரு நாட்களுக்கு பிறகு ஒரு நாளிதழில் ஒரு கதைக்கு அவர் செய்த ஒரு ஓவியத்தைப் பார்த்து நெகிழ்ந்தேன். மிகவும் நன்றாக இருந்தது. பிறகு யாழப்பாணத்தில் அவரைச் சந்தித்தபோது அதைத் தெரிவித்தேன். திரு.இராசன் அவர்கள் அதிகமாக சிற்பங்கள் செய்வதில் கவனம் செலுத்துவதாக அறிந்தேன்.

நான் தங்கியிருந்த அதே விருந்தினர் தங்கும் விடுதியில் அவர்களும் தங்கவைக்கப்பட்டதால், அந்த இரவுப் பொழுதில் மாமரம் சூழ்ந்த திறந்த வெளியில் அமர்ந்து கோடைக்காற்று எங்கள் கலந்துரையாடலுக்கு இதம் சேர்க்க எங்கள் கருத்துக்களை பகிர்ந்து கொண்டிருந்தோம்.

என்னுடைய நூல்கள் அனைத்தையுமே ஒவ்வொருவரும் மிகவும் ஆர்வமாகப் பார்த்தார்கள்.

ஒரு ஓவியனுக்கு இவ்வளவு நூல்களா? என்று வியந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.இராசையா அவர்கள், "உங்களுக்கு நல்ல அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. இங்கே எங்களுக்கு அங்கீகாரமும் இல்லை, சந்தையும் இல்லை. ஓவியர்களுக்குள் ஒரு ஒற்றுமையுணர்வும் இல்லை. நான் மிகவும் சோர்வடைந்து விட்டேன்" என்று ஆதங்கப் பட்டார்.

"உங்களுக்கு நல்ல திறன் இருக்கிறது. அற்புதமாக வெளிப் படுத்துகிறீர்கள். போராட்ட மண்ணில் நிற்கின்ற நீங்கள் உங்கள் ஓவியங்களில் அந்தப் போராட்டத்தை வெளிப்படுத்தி யிருந்தால் மக்கள் உங்களை அங்கீகரித்திருப்பார்கள். நாம் மக்களைப் பற்றி சிந்திக்கும் போதுதான் மக்கள் நம்மைப்பற்றிக் கவலைப் படுவார்கள். அது இல்லாதபோது நாம் யாரோ, அவர்கள் யாரோ என்றுதான் நினைப்பார்கள். அப்படி நீங்கள் செய்திருந்தால் இந்த சோர்வு உங்களுக்கு வந்திருக்காது. மாறாக, உற்சாகத்தோடு இருந்திருப்பீர்கள்" என்று சொன்னேன்.

"நீங்கள் சொல்வது எவ்வளவு சரி என்பதை உங்களுக்கு கிடைத்துக் கொண்டிருக்கும் அங்கீகாரமே சொல்கிறது" என்று அருகிலிருந்த சத்தியபாலன் சொன்னார்.

"எங்கள் போராட்டம் பற்றிய உங்கள் ஓவியக்காட்சியை நான் பார்க்கும் வாய்ப்பு இன்னும் கிடைக்கவில்லை. ஆனால் ஊடகங்கள் எழுதுகின்றன. மக்களும் அதுபற்றிக் கதைத்துக் கொண்டிருக் கிறார்கள்" என்று அ.இராசையா சொன்னார்.

ஓவியர் ரமணிக்கு என்னுடைய அதிரும் கோடுகள் மிகவும் பிடித்திருப்பதாக சொன்னார். "கோடுகளில் வலிமையும், வீச்சும் கருப்பு வெள்ளையில் தெளிவும் இருக்கிறது" என்றார். ஓவியம், கலை, இலக்கியம், அரசியல் என்று பல்வேறு தளங்களில் விரிவாக விவாதித்தோம்.

இதுவரை நான் பார்த்த, சந்தித்த மக்கள், இங்கிருக்கும் உங்களைப்போன்ற ஈழத்து ஓவியர்களிடம் நிறைய எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள் என்பதைச் சொல்லவும் நான் மறக்கவில்லை.

"என்னைப் பொறுத்தவரை இச்சந்திப்பு என்பது மிகவும் மகிழ்ச்சியான தொடர்ந்தும் பகிர்தலுக்கான தொடக்கமாக கருதுகின்றேன்" என்றேன்.

"நிச்சயமாக எங்களுக்கும் மகிழ்ச்சி உற்சாகமாக இருக்கிறோம். இச்சந்திப்பு ஒரு தெளிவையும் ஏற்படுத்தியிருக்கிறது" என்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.இராசையா, யாழ்ப்பாணம் வரும்போது அவர் இல்லத்தில் ஒருவேளை உணவருந்த வரவேண்டும் என்று அழைப்பையும் அப்பொழுதே விடுத்தார். யாழ்ப்பாணத்தில் இன்னும் விரிவாக பேசுவோம் என்று நான் விடைபெறும் போது நேரம் நள்ளிரவை கடந்துவிட்டிருந்தது.

ஓவியக் காட்சி நடைபெறுகின்ற நாட்களில் ஒவ்வொரு நாளும் இரவில் அது எவ்வளவு நேரமானாலும் பதிவேட்டில் மக்கள் எழுதியக் கருத்துக்களை படித்துவிட்டுத்தான் உறங்குவது வழக்கம். ஓவியக்காட்சி இல்லாத நாட்களில் (என்னைச் சந்திக்கின்ற கவிஞர்கள், எழுத்தாளர்கள் அவர்களுடைய நூல்களை கொடுத்து படித்துவிட்டுக் கருத்துச் சொல்லுங்கள் என்று கூறுவார்கள்.) கவிதை நூல்களையோ, சிறுகதைகளையோ, அல்லது 'இந்த நூலை' நீங்கள் அவசியம் படிக்கவேண்டும் என்று நண்பர்கள் தருகின்ற வேறு நூல்களையோ சிறிதளவாவது படித்துவிட்டுத்தான் உறங்குவது வழக்கம். அன்று மௌனப் புதைக்குழிக்குள் நூலில் மகிழடித்தீவுப் படுகொலை பற்றி படிக்கத் தொடங்கினேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிழடித்தீவு அழுகுரல்

1991 ஆனித் திங்கள் 12ஆம் நாள் மகிழடித்தீவுக் கிராமம் நினைவழியாத இரண்டாவது துயரத்தைச் சந்தித்தது. நான்கு ஆண்டுகளுக்குப் பின்னர் அடுத்த பெரும் படுகொலை நடந்து முடிந்தது. 132 பேரை கொன்றழித்து, 400 வீடுகளை எரித்து நாசமாக்கி சொத்துக்களைச் சூறையாடிச் சென்ற இராணுவத்தினரை யாரும் தட்டிக் கேட்கவில்லை. விரும்பிய பெண்ணை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தலாம். விரும்பிய வீடுகளை கொளுத்தி எக்காளமிடலாம், என்ற சுதந்திரத்தை சிங்கள இராணுவத்துக்கு சிங்கள அரசு வழங்கியிருந்தது. சிங்கள இராணுவத்தினரது இன அழிப்பு சுதந்திரத்தின் இரண்டாவது அரங்கேற்றம் மகிழடித்தீவில் நடந்து முடிந்துபோனதை அறிய விரும்பினேன். கொலைகார கும்பலுக்குள் அகப்பட்டுத் தப்பிக்கொண்ட கணபதிப்பிள்ளை மோட்சமலர், முத்துலிங்கம் விமலாதேவி, வல்லிபுரம் காரிகாதேவி, கறுவல்தம்பி ஆயில்ப்போடி ஆகியோர் இக்கொடூரக் கொலை பற்றி மாறி மாறி சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

"எல்லா இடமும் வெடிசுட்டுக் கேட்குது. அப்ப நான் என்னுடைய மகனுக்குச் சொன்னன், வெடிசுட்டுக் கொண்டு வாறான், வாருங்கோ சனங்கள் எல்லோரும் போறபக்கம் போய் சேர்ந்திருப்பமெண்டு. சொல்லிக்கொண்டு வெளிக்கிட்டேக்க பாத்தா குளக்கட்டால சுட்டுச் சுட்டு வந்திட்டான். பிடிச்சுக் கொண்டுவாற ஆம்பினையள் பொம்பிளையள் எல்லாருக்கும் அடியெண்டால் கண்ணால பாக்கேலாது. அடிச்சுக்கொண்டு வாறபொழுதே வீடுகளைக் கொளுத்திப்போட்டு உயிரோடு அதுக்க ரெண்டொருபேராய் தள்ளிவிட்டான். கையெடுத்துக் கும்பிட்டும் அவனுக்கு இரக்கமே வரல்ல. படுபாவி வீட்டுக்க தள்ளிட உடன அதுக்க நிறைய நெல்லுமூட்டைகள் அடுக்கியிருந்தது. அதில ஏறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்பி குலசேகரம் சுவருக்கு மேலா பின்பக்கமாய் குதிச்சான். இனி நான் என்ன செய்யிறது, எரிஞ்சு சாகிறதைவிட கால்முறிஞ்சாலும் பரவாயில்லையெண்டு ஏறி குதிச்சான். குதிச்சவுடன் ரெண்டு பேருமா அடுத்தவீட்டுப் பக்கமாய் ஓடி பின்பக்கம் கிடந்த தகரங்களால மூடிக்கொண்டு பேசாமல் கிடந்ததும் தம்பி சொன்னான் "இனி எங்கேயும் ஓடேலாது. சாகிறதெண்டால் இதுக்குள்ளேயே கிடந்து சாகுவம். வெளியில சுடுறசத்தமும் அழுற சத்தமும் கேட்க, கண்ண இறுக்கி மூடிக்கொண்டே கிடந்தம்" என கறுவல்த்தம்பி ஆயில்ப்போடி என்ற முதியவர் சொல்லும்போது நாக்குத் தடு மாறியது. எண்பத்தியொரு வயது நிரம்பிய அந்த முதியவரைக்கூட எரியும் நெருப்பில் தள்ளிவிட்ட கொடுமை மறக்கமுடியாதது.

வெடிச்சத்தம் சுத்திக் கேட்டுக் கொண்டிருந்தது. நம்மட அக்காவுக்கு குழந்தை பிறந்து பன்னிரெண்டாம் நாள். மற்றவர் களுக்கும் சின்னக் குழந்தை. அக்கா சொன்னா, "தங்கச்சி நாங்களெல்லாரும் கதவைப் பூட்டிட்டு உள்ள இருப்பம். இல்லக்கா குழந்தையையும் தூக்கிட்டு மில்லுக்கு போவம். எல்லாரும் அங்கேதான் போறாங்கள். எண்டு சொல்லிட்டு பிள்ளையையும் தூக்கீட்டு போனம். மில்லுக்கு முன்துண்டு, நடுத்துண்டு, உள்துண்டு எல்லாம் நிறைபேர் இருந்தாங்கள். குழந்தைப் பிள்ளையள் எல்லாம் அழுதாப்போல பிள்ளையளின்ர அழுகையை நிப்பாட்ட எல்லாரும் பால்கொடுத்திட்டிருந்தாங்க. வெடிச்சத்தம் பக்கத்தில் கேட்குது. உடன எல்லாரும் அரோகரா அரோகரா என கடவுள கும்பிடத் தொடங்கினாங்க. உள்ளுக்கு வந்தவன் படபடவெண்டு சுடத்து வங்கினான். வகித்தால தலையால கழுத்தாலயெல்லாம் வெடிப் பறியுது. நானும் வெடிப்பட்ட மாதிரி குப்பறவிழுந்து கிடந்த ரெத்தமெல்லாம் அள்ளி மெல்ல பூசிக்கொண்டு அசையாமல் கிடந்தன். மில்லுக்க இருந்த எல்லாரையும் சுட்டிட்டான். என்னோட அக்காவும் சேர்ந்து அஞ்சுபேர் மட்டும் தப்பினாங்க. எல்லாரும் செத்தாப்போல் ரத்தத்தை அப்பீட்டு கிடந்ததால தப்பீட்டம். சூட்டுச் சத்தம் நிண்டு கொஞ்சநேரத்தில பிள்ளை... பிள்ள.... என அம்மா கூப்பிடுற சத்தம் கேட்குது. எழும்பிப் பார்த்திட்டு அக்காட குழந்தையையும் தூக்கிட்டு பக்கத்து வீட்டு குந்தில வந்திருந்தன் அங்க பார்த்தா கையில்லாமலும் கண்தோண்டினாப்போலும் தலை வெட்டினால் போலும் கிடந்தாங்க. பிள்ளைக்கு பால்கொடுத்தாப் போல அப்படியே சவமாய் கிடந்தாங்க. கைக்குழந்தை ஒன்று சிதறி சுவரில் ஒட்டினாப்போல கிடந்தது. மில் வச்சிருந்த குமாரநாயகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரோட பொஞ்சாதி புவனேஸ்வரி அவங்கட நாலுபிள்ளையள் எல்லாரையுமே சுட்டிட்டாங்க என முத்துலிங்கம் விமலாதேவி என்ற இளம்பெண் அக்கொலையின் கொடூரம்பற்றி சொல்லிக் கொண்டிருந்தார்.

முதலொரு 'பாட்டி' வந்து சுட்டிட்டு போக மறுகா அடுத்த 'பாட்டி' வந்து சுட்டிட்டாங்கள். அவங்கள் சுட்டிட்டுப்போக மூண்டாவது 'பாட்டி'யொண்டு திரும்பவந்து சுட்டாங்கள். மூண்டாவதா வந்த 'பாட்டி' மில்லுக்க கிடந்த எல்லாச் சவத்தையும் ஒண்டா இழுத்துப்போட்டிட்டு ஓலையள், ரயர்கள் எல்லாம் மேலே போட்டு கருக்கினாங்கள். அக்கம் பக்கம் பிடிச்சிட்டு வந்த ஆம்பிளைங்க எல்லாரையும் கிடங்குக்குள்ள சுட்டுச்சுட்டு போட்டான். கிடங்க ஒரு தரம் சுத்திவரச் சொல்வாங்கள் சுத்தி வந்த உடன ஒரு சூடு சுட்டு கிடங்கில போட்டவுடன் அடுத்தாளச் சுத்தச் சொல்வாங்கள். சுத்திவந்த உடன சூடுவிழும். இப்பிடியா முப்பத்தியேழுபேர குழிக்குள்ள சுட்டுச் சுட்டுப்போட்டான். அரோகரா அரோகரா எண்டு கண்ணீர்விட்டு கதறி அழுது எல்லாரும் கிடங்க சுத்தி வருங்கள். அந்த கொடியகாட்சியப் பார்த்திட்டு இருக்கவே உயிர்போனப்போல இருந்தது. வெட்டினதும் சுட்டதும் ஒரு 'பாட்டி'.

"இன்னொரு 'பாட்டி' வடிவான பிள்ளையளாப் பாத்துபிடிச்சு மாறிமாறிக் கெடுத்திட்டாங்க. அதை எப்படிச் சொல்லுறதெண்டே தெரியல்ல" வல்லிபுரம் காரிகாதேவியென்ற பெண் சொல்ல வந்ததை நிறுத்திக் கொண்டாள். அவளது கண்கள் குளமாகி யிருந்தது. வாய் திறந்து சொல்ல முடியாத துயரக்கதைகள் அவளது நெஞ்சை முட்டிக்கொண்டது. நெஞ்சை மெதுவாக அமத்திப் பிடித்துக் கொண்டு மறுகையால் கண்களை துடைத்துக் கொண்டாள். அவளது நிலையை உணர்ந்த கணபதிப்பிள்ளை மோட்சமலர் (முன்பள்ளி ஆசிரியர்) அந்தக் கொடுமையை மளமளவென சொல்லத் தொடங்கினார்.

"நான் மாவடி முன்மாதிரி பிள்ளையளுக்கு (முன்பள்ளி) பாடம் சொல்லிக் கொடுத்திட்டு சைக்கிளில் வீட்ட வந்து கொண்டிருந் தனான். வரேக்க பாத்தன் கண்ணிவெடியில ரைக்ரர் மேல போய் கீழ வந்து விழுந்தது. நேர்றோட்டில அப்படியே வடிவா தெரிஞ்சுது. பார்த்தவுடன் சைக்கிளோட விழுந்திட்டன். விழுந்தெழும்பிப் பாத்தன் ஆமி சுட்டிட்டு வாறான். எழும்பி ஓடினன். என்னைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்சு வாறன். குளத்துக்கால ஓடினன். பின்புறமா பெரியம்மா வீட்ட போயிடலாமெண்டு ஓடினன். றோட்டு சைற்றெல்லாம் ஆமி படுத்துக்கிடந்து சுடுறான். சிவப்பு சட்டையோட ஓடினதால என்ன வடிவா கண்டிட்டான். அதால பின்னாலேயே வந்து எனக்கு சுட்டிட்டான். எனக்கு ரெண்டு வெடி. ஒண்டு முழங்கால்சில்ல உடச்சிட்டு. மற்றவெடியும் அடுத்த கால் எலும்ப உடச்சிட்டுது. அப்படியே குப்புறவிழுந்துகிடந்தன். நான் செத்திட்டதா ஆமியும் நினைச்சான். சுத்தியிருந்த சனங்களும் நினைச்சாங்க. இரவு வரையும் ஒருத்தரும் தூக்கவரல்ல. நான் தண்ணி.. தண்ணி என அனுங்கின சத்தம் என்ன தேடிவந்த பெரியப்பாவுக்கு கேட்டிட்டுது. அவங்கதான் வண்டில்ல என்ன ஏத்திட்டுப் போனாங்க. பொழுது படும் வரையும் ஒருத்தரும் வரேல்ல. எல்லாரும் பயத்தில அங்கங்கு ஓடிட்டாங்கள். ஓடேக்க பட்டவங்கள பிடிச்சு சுட்டான். உயிரோட வீட்டுகளுக்க புகுத்தீட்டு நெருப்பு வச்சான். நானூறு வீடுகள் கொளுத்துபட்டுது. எல்லா வீட்டிலேயும் நிறைய நெல்லு மூட்டைகள் கிடந்தது. நெல்லு மூட்டைகள் மட்டுமல்ல ஆக்களும் சேர்ந்து எரிஞ்சிட்டாங்க. கனகுமார் பிள்ளைகளும் பள்ளி ரீச்சர்மாரும் புண்ணியமூர்த்தி வீட்ட (கிராமசேவகர்) ஓடிப்போய் ஒண்டாய் இருந்தாங்கள். அங்கேயையும் வந்து சேந்திட்டான். வந்தவன் அங்க நிண்ட பிள்ளையள அடிச்சுமிரிச்சு சட்டை யெல்லாம் கிழிச்சு செய்யக் கூடாத வேலையெல்லாம் செய்தான். புண்ணிமூர்த்தி சேரிண்ட ஒருமகளை (விஜிதா ரேணுகா) சட்டை யெல்லாம் பிச்சு கெடுத்திட்டான். பிள்ள தனிய அம்பிட்டு. கொடுமைதாங்காமல் பிள்ள மகிழடித்தீவ விட்டே ஓடிடுது. ரீச்சர்மார் பலர் இழுபறிபட்டு சட்டை சாறியெல்லாம் பிச்சிட்டான். ரேணுகா ரீச்சர் பாவம். எங்கேயோ தனியமாட்டீட்டுது. அவங்கள படாதபாடு படுத்திப்போட்டாங்கள். இண்டைக்கும் அந்தப் பிள்ளையள் வாழா வெட்டியாக இருக்கிறார்கள்.

அவங்களஂகேட்டா எதுவும் சொல்லமாட்டாங்கள். மயங்கி விழுந்திடுவாங்கள். இவங்களமாதிரித்தான் பேரின்பநாயகி எண்டொருபிள்ளை. நல்ல வடிவான பிள்ளை. அந்தப் பிள்ளை போல அழகான பிள்ளையை இஞ்ச காணேலாது. அந்தப் பிள்ளையைப் பிடிச்சு மாறிமாறி கெடுத்தாங்கள். பெத்தாயின்ர கண்ணுக்கு முன்னால வச்சு படுபாவியள் செய்த கொடுமையை கடவுள்தான் என்னண்டு பொறுத்ததோ தெரியாது. தாய் சங்கிலியக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழட்டி கொடுத்து "என்ர பிள்ளைய ஒண்டும் செய்யாதிங்கோ விட்டிடுங்கோ" என கும்பிட்டுக் கேட்டா. கையில கிடந்த காப்பைக் கழட்டிக் கொடுத்து தாலி, மோதிரம் எல்லாமே கழட்டிக் கொடுத்து என்ர பிள்ளையை ஒன்றும் செய்யாதிங்கோ என அழுது கெஞ்சி மண்டாடிக் கேட்டும் அவங்கள் விடல்ல. மறைப்பில கடிகாயம் இல்லாத இடமே இல்ல. ரத்தத் துவாலையோட பிள்ள மயங்கினாப் போலதான் விட்டிட்டுப் போனாங்கள் பாவியள். அந்தப் பிள்ள இப்பவும் இருக்கு. ஆனால் கலியாணம் கட்டி குழந்தைகள் பெத்து புருசனோட சந்தோசமாய் இருக்கிறாள். ஆனா மகிழடித்தீவ விட்டு அண்டைக்கு ஓடிப்போனதுதான். இண்டைக்கும் இந்தப் பக்கம் வரல்ல. ஆமி வாறானெண்டு சும்மா சொன்னாப்போதும் அறிவு மயங்கி விழுந்திடும். இந்தப் பக்கத்தால ஒரு பாட்டி இப்படிச் செய்ய இன்னொரு 'பாட்டி' முதலைக்குடாப்பக்கம் போய் பள்ளிக் கூடத்துக்குள்ள சேந்திருந்த ஆக்களில் ஒருமட்டான ஆம்பிளப் பிள்ளயளப் பிடிச்சுவந்து மில்லுக்கவச்சு சுட்டான். பொஞ்சாதிக்கு முன்னால புருசனையும், தாய்க்கு முன்னால பிள்ளைகளையும் எரியிற வீட்டுக்குள்ள உயிரோட புகுத்தினான். மில்லுக்கு கிடந்த 132 பேரை ஓலைகளைப் போட்டு அங்கு கிடந்த மசலை ஊத்தி எரிச்சி கருக்கிப்போட்டு பொழுதுபட ஆறுமணிக்குத்தான் ஊரைவிட்டு கிளம்பினான். குண்டு வெடிச்ச கிடங்கில சுட்டுச்சுட்டுப் போட்டதில கிடங்கு நிரம்பி விட்டது. இல்லையெண்டால் இன்னும் சுட்டிருப்பான் என மோட்சமலரும், காரிகாதேவியும் மாறிமாறி இந்தக் கொலையின் கொடூரத்தை சொல்லிமுடித்தனர்.

"காயப்பட்டு கிடந்தவர்களை சிகிச்சை செய்யிற வசதியோ வைத்தியசாலையோ இஞ்ச இல்ல மகன்.

நம்மட மகள பொலனறுவை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக, தமிழனெண்டு சொல்லி வைத்தியம் செய்ய மறுத்திட்டான். பிள்ள ஆபத்தான நிலைக்கு வந்திட்டாள். திரும்ப அங்க இருந்து கொழும்புக்கு கொண்டுபோனன். ஆறுமாதத்திற்கு பின்னர்தான் சுகப்பட்டு கூட்டிட்டு வந்தன். நாசமாய் போவானுகள் அண்டைக்கு செய்த கொடுமைகளை சொல்லேலாது மகன். மில்லுக்குள்ள அவங்கள் கருக்கிட்டுப்போன சவங்கள பாக்க ஏலாது, தாயில பால் குடிச்சபடி நாலஞ்சு குழந்தையள் கருக்கிக்கிடந்தார்கள். என்ர பிள்ளை எங்க... என்ரபுருசன் எங்க... எண்டு இனங்கண்டு கொள்ளமுடியாமல் புரட்டிப்பார்த்து அழுதிட்டு நிண்டதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாருட்ட சொல்லுறது" என மோட்சமலரின் அம்மா திருமதி. கணபதிப்பிள்ளை சொல்லிக் கண்கலங்கி நின்றாள்.

அருட்தந்தை யோசப் மேரியினதும், யோசப் பரராஜசிங்க எம்.பியினதும் முயற்சியில் குமார் பொன்னம்பலம், ஏ.எம்.எம்.சகாத்தீபன் ஆகியோர் அடங்கிய விசாரணைக்குழு இப்படுகொலை பற்றி விசாரணை செய்து வெளியுலகுக்கு கொண்டுவர முற்பட்டபோதும் சிங்கள பேரினவாதம் அதை விழுங்கி மறைத்துவிட்டது. கேட்பாரற்று அநாதைகள் போல் அழிக்கப்பட்ட தமிழ் மக்களின் துயரக்கதை மட்டுநகர் மண்ணில் தொடர்ந்தது. மகிழடித்தீவிலும் இறால் பண்ணையிலும், மில் கட்டிடத்தினுள்ளும் முடிந்துபோன தமிழர்வாழ்வு கொக்கட்டிச் சோலைப் படுகொலை என்ற பெயரோடு பத்திரிகைகளில் அவ்வப்போது பெட்டிச் செய்தியாக வந்து மறைந்து போயின.

நள்ளிரவுக்குப் பிறகு இந்த மகிழடித்தீவு படுகொலைப் பற்றிய துயரத்தை படித்ததால், மனதிற்குள் சுமை கூடியது. நீண்டநேரம் உறக்கம் வரவில்லை. எப்படியோ உறங்கிப்போனேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்ப்புகளில் குருதிக்கறை

விடிந்தது.

இரவு எவ்வளவு நேரம் கடந்து தூங்கினாலும், விடியற் காலை 5.30, 6.00 மணிக்கெல்லாம் எழுந்துவிடுவது எனது வழக்கம்.

காலைக் கடன்களை முடித்து தினமும் குறைந்தது 45 நிமிடம் வெளியில் நடை பயிற்சி செல்வேன். சாலையில் நடந்து செல்லும் போது பார்ப்பவர்கள் பலரும், வணக்கம் அய்யா, வணக்கம் அண்ணா, என்று எனக்கு வணக்கம் தெரிவிப்பது, எந்த அளவிற்கு பத்திரிகைகள் என்னை மக்களிடத்தில் அடையாளப் படுத்தி யிருக்கிறது என்பதைக் காட்டியது. அதேபோல் ஒவ்வொரு நாளும் அங்கு வெளியாகின்ற அனைத்துச் செய்தித்தாளும் எனக்கு வந்துவிடும் அனைத்தையும் வாகனத்தில் செல்லும் போதே படித்து விடுவேன்.

அன்று

பிந்துனுவெவ படுகொலை மேன்முறையீட்டு நீதிமன்றம் அளித்த தீர்ப்பைப் பற்றியே அனைத்துச் செய்தித் தாள்களும் தலைப்புச் செய்தி வெளியிட்டது. அதைப் படித்த பிறகுதான் அப்படுகொலைப்பற்றி எனக்குத் தெரிந்தது. மேலதிக செய்திகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் எம்.எக்ஸ்.கருணாரட்ணம் அடிகளார் அவர்களைச் சந்தித்தபோது அது குறித்துக் கேட்டேன். "பிந்தனு வெவவில் சிறீலங்கா அரசால் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ்க் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தார்கள். ஏழு ஆண்டுகளாக இம்முகாம் இயங்கி வந்தது. இக்கிராம மக்களுக்கும் கைதிகளுக்கும் நல்லுறவே நீடித்து வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சூழலில் 2000 ஆண்டு அக்டோபர் 25ஆம் தேதி இருபத்தி நான்கு மணிநேரத்தில் தூண்டிவிடப்பட்ட பகைமை உணர்வு காரணமாக இக்கிராமமக்களோடு சேர்ந்து ஒரு காடையர் கும்பல் இம்முகாமைத் தீயிட்டுக் கொளுத்தியதோடு அங்கிருந்த கைதிகளில் 26பேரை கொடூரமாக கொலைசெய்து 14 பேரை படுகாயங் களுக்குட்படுத்தினர்.

இத்தாக்குதல் நடந்த நேரம் இந்நிலையத்தைச் சுற்றி 60க்கு மேற்பட்ட காவல்துறையினர் இருந்தும் எவரும் இவர்களைப் பாதுகாக்க முன்வரவில்லை. அதன் பின்பும் இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. தொடர்ந்து வந்த தமிழ் மக்களின் வலியுறுத்தல்களின் பின்னரே சிறீலங்கா சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தார். இக்குழு தமது சொந்த விசாரணைகளின் அடிப்படையில் 19 பேரை சிறீலங்கா பொலிசார் உட்பட 14 பேரை குற்றவாளிகள் என அடையாளம் காட்டி 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

இவ்விசாரணை முடிவடைந்து 2003ஆம் ஆண்டு 2 காவல்துறை உறுப்பினர்கள் உள்ளிட்ட 5 பேருக்கு மரணத்தண்டனை நிறை வேற்றி நீதிமன்றம் தீர்ப்பளித்தது. மிகுதிப்பேரை குற்றமற்றவர்கள் என விடுதலை செய்தது. இந்நாடகம் முடிந்தபிறகு அடுத்த கட்டமாக இத்தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு மனுத்தாக்கல் செய்யப்பட்டதால் மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (27.5.2005) இவர்கள் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்ப்பளித்து அனைவரையும் விடுதலை செய்திருக்கிறது.

இதைவிட 1977ஆம் ஆண்டு சன்சொனி ஆணையம் 1996ஆம் ஆண்டு கிரிசாந்தி பாலியல் கொலை வழக்கு, 1996ஆம் ஆண்டு காணாமல்போன ஆயிரக்கணக்கானோர் செம்மணியில் புதைக்கப் பட்ட புதைகுழி விவகாரம் என்பனவற்றையும் கவனத்தில் கொண்டு, இப்படுகொலைகளை நாம் நோக்குகின்றபோது மே 27ஆம் தேதி சிறீலங்கா அரசு மீண்டும் ஒருமுறை எல்லோர் முகத்திலும் விபூதி ஊதி வேப்பிலை அடித்துள்ளது. உலக நாடுகளினதும், பலமனித உரிமை அமைப்புகளுடனுதும் அழுத்தத் தினால் இவ்வழக்கை ஆராய்வதற்கு ஒரு ஆணைக்குழுவை நியமித்தது. அதன் மூலம் 5 பேருக்கு மரணத் தண்டனை விதித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிதேவதையின் கிரீடத்தை தொட்டுவிட்ட நீதித்துறை மேன்முறையீட்டு போர்வையில் அதன் முலாங்களை சுரண்டி விட்டிருக்கிறது.

ஏற்கெனவே இவ்வழக்கு விசாரணையில் ஒரு பகுதியினர் விடுதலை செய்யப்பட்டுவிட்டனர். மிகுதிபேர் தற்போது விடுதலையாகினர். கால இழுத்தடிப்பின் மூலம் இப்படுகொலைகளை சாதாரண நிகழ்வுகளாக்கி சிறீலங்கா மேன் நீதிமன்றம் ஒரு பாகுபாடானத் தீர்ப்பை அளித்துள்ளது. அப்படியானால் இக் கொலைகளின் சூத்திரதாரிகள் யார்? கொலைகாரர்கள் யார்? வேற்று கிரகத்தவர்களா? இதற்கு யார் முடிவு கூறுவது? நீதிமன்றத்துக்கு இனி ஒரு ஆணைக்குழு நியமிக்கப்படுமா?" என்ற கேள்வியோடு கூறிமுடித்தார்.

நீதிமன்றங்கள், குற்றம் சாட்டப்பட்டவர்கள் குற்றம் இழைத்திருக்கிறார்களோ இல்லையோ. நினைத்தால் அனைவருக்கும் மரணத்தண்டனை வழங்குவது, இல்லையென்றால் அது நினைத்தால் எவ்வகையாக குற்றமிழைத்தவர்களாக இருந்தாலும் அவர்களை தண்டனையிலிருந்து விடுவிப்பது என்கின்ற போக்கு எவ்வகையான நீதி என்று தெரியவில்லை. எங்கு சென்றாலும் அத்தீர்ப்புப் பற்றியே மக்களிடம் பேச்சாக இருந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மல்லாவியில் ஓவியக்காட்சி

இங்கும் வழக்கம்போல் நல்லக்கூட்டம். பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் என்று அனைத்து தரப்பும் காட்சியை பார்வையிட்டது.

இங்கே ஒரு இளைஞர் 35 வயது இருக்கும் என் அருகில் வந்து என் கையை பற்றிக் கொண்டு கண் கலங்கினார். "ஒவ்வொரு ஓவியமும் எங்களுக்கு நடந்த அத்தனைக் கொடுமைகளையும் உரக்கப் பேசுகிறது. குறிப்பாக பெண்ணின் சிதைவு என்ற ஓவியம் என் சகோதரிக்கு நடந்த கொடுமையை வெளிப்படுத்துகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்பு என் சகோதரிக்கு நடந்த அந்த கொடூரம் என் நினைவுகளை கிளறி விட்டுவிட்டது. அதனால்தான் என் அழுகையை அடக்க முடியவில்லை. இதுபோல் கொடுமை எண்ணற்ற பெண்களுக்கு நடைபெற்றிருக்கிறது. எங்களுக்கான வரலாறுகளை நீங்கள் பதிவு செய்திருக்கிறீர்கள். எங்கள் தேசம் உங்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கிறது" என்றார் கண் கலங்கியபடியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுபோல் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை என்னுடன் பகிர்ந்து கெண்டார்கள். பதிவேட்டிலும் பதிவு செய்தார்கள்.

■ எழுத்தும் மொழியும் இல்லாமலும் பேசமுடியும். இந்த ஓவியத்திலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடம்.

*- மு.அமலதாசன்*

■ மூன்றுவருட போர் ஓய்வில் கலைந்திருந்த உணர்வுகளை தட்டியெழுப்பி சிலிர்க்க வைத்துவிட்டார் ஓவியர் புகழேந்தி. வர்ணக்கலவையால் அடக்கி ஒடுக்கப்படும் மக்களைக் கிளர்த்தி அடக்குமுறையாளர்களை சிதைக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டு இவ்வோவியங்கள். நிறம் மாறாத உன் உணர்வுகள் எமக்கு விடிவைத் தேடும் வழியில் ஊன்றுகோலாக உள்ளது.

*- க.முருகேசு*

■ தமிழீழ மக்கள் அனைவரும் சிங்களக் காடையர்களின் இனவெறித் தனத்தினால் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதை இவ்வோவியங்கள் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

*- மாணவர்கள், மல்லாவி*

■ புகழேந்தியின் ஓவியங்கள் உண்மைகளை வெறியுடன் சுடுகின்றன. இந்த உயிருள்ள ஓவியங்கள் எங்களைச் சொல்லுவதால் மிகவும் தாக்கமடைகின்றேன். பிரபாகரனை ஒரு புதிய கோணத்தில் இவர் ஓவியத்தில் பார்க்கிறேன். மிக அருமையான ஓவியங்கள்.

*- உதவி அரசாங்க அதிபர், துணுக்காய்*

■ ஓவியங்கள் அத்தனையும் நிகழ்வுகளை நேரில் காணாவிட்டாலும் நடந்த நிகழ்வுகளை நிஜங்களாக்க நாம் அனைவரும் காணும் வகையில் படைக்கப்பட்டுள்ளமை அவரது படைப்பாற்றலின் சிறப்பு.

*- ஆசிரியர்கள், யோகபுரம் மகா வித்யாலயா*

■ ஓவியங்கள் ஈழத்தமிழர்களின் போராட்ட வரலாற்றை மிக எளிமையாக சாதாரண மக்களுக்கும் விளங்கக் கூடிய வகையில் எடுத்துக்காட்டுகிறது.

*- தி.நிரஞ்சன்*

■ இவ்வோவியங்களை தென்இலங்கைப் பக்கங்களில் கண்காட்சிக்கு வைத்து தமிழனின் உணர்வுகளை தெளிவுபடுத்தி சிங்கள மக்களும் பார்வையிடச் செய்ய வேண்டும்.

*- மாணவிகள், மல்லாவி மத்தியக் கல்லூரி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தங்களின் ஓவியத் தொடரை பார்வையிடும் போது அவ்வப்போது இடம்பெற்ற அந்தந்த நிகழ்வுகளும் மனக்கண்ணில் தோன்றி முகக் கண்ணில் நீர் மல்குகிறது. இவ்வாறான ஓவியங்களைப் பார்வையிடும் உள்ளங்களில் உணர்வும் உணர்ச்சியும் தோன்றாமல் இருக்க முடியாது. ஓவியங்கள் உயிரற்றவை அல்ல. உயிருள்ள ஒரு உன்னதப்படைப்பு.

*- சே.மகாலட்சுமி*

■ இனவெறியர்களால் கயவர்களால் எம்மண்ணும் மக்களும் சிதையுண்ட கொடூரக்காட்சிகளே இவ்வோவியங்கள். திலீபனின் இறுதிநாளிலோ அல்லது பன்னிருநாட்களில் ஒரு நாளிலோ நான் பார்க்கத் தவறிவிட்டேன். அதைத் தூரிகைக் கொண்டு தூய்மைப்படுத்தி என் கண்ணில் கண்ணீர் கசிய வைத்துவிட்டாய். 'கண்ணைப் பிடுங்கி எடுக்கும்போது ஆயிரம் குட்டிமணிகள் என் கண்ணிலிருந்து பிறப்பார்கள்' என்ற குட்டிமணியின் வசனத்தை கேட்கவில்லை. ஆனால் உமது தூரிகைஅதை உணரவைத்துவிட்டது.

*- வசந்தகுமாரி, ஆசிரியை*

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத் தீவு காட்சியும் மாட்சியும்

தொடர்ந்து அதற்கடுத்தநாள் முல்லைத்தீவு முள்ளியவளையில் ஓவியக்காட்சி. அனைத்து இடங்களிலும் ஓவியங்களை காட்சிப்படுத்துதலில் எனக்கு உதவியாக நான்கு நபர்கள் இருந்தார்கள். அனைவரும் அழகியல் கலாமன்ற உறுப்பினர்கள், பிரபாகரன், சாகியன், மற்றும் இருவர். பிரபாகரனும், சாகியனும் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் மிகச் சிறப்பாக அப் பணியினை செய்தார்கள். முதல் நாளே எவ்வாறு காட்சிப் பலகைகளை (Display Board) வைப்பது, எவ்வாறு ஓவியங்களை காட்சிப்படுத்துவது என்பதை அவர்களுக்கு கற்றுத் தந்திருந்தேன். மிகவும் சரியாக புரிந்து கொண்டு ஒவ்வொரு இடங்களிலும் நான் இல்லாமலேயே ஓவியங்களை காட்சிக்கு தயார் செய்தார்கள். நான் ஓவியக்காட்சி தொடங்கும் நேரத்திற்கு சென்றால் போதும் என்கின்ற அளவிற்கு அவர்கள் பணி இருந்தது.

அதுபோல் முள்ளியவளையிலும் தயார் நிலையில் வைத்திருந்தார்கள். நுண்கலைக் கல்லூரியில்தான் காட்சி நடைபெற்றது. இங்கும் எங்கும்போல் பெரும் திரளானக் கூட்டம் வந்தது. ஓவியர் இராசன் கூடவே இருந்தார்.

ஓவியக் காட்சியை பார்த்து முடித்துவிட்டு அவ்வோவியங்களைப் பற்றிய கருத்துக்களை பகிர்ந்துகொண்ட முல்லைத் தீவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் முல்லைத்தீவைப் பற்றி விரிவாக விவரித்தார்.

முல்லைத்தீவு....! மாமன்னன் சூரபத்மனின் அற்புதமான மகேந்திரபுரி போன்று மிகமிக அழகாகத் திட்டமிட்டு அமைக்கப்பட்டு இன்று கலை இழந்து ஒளி இழந்து போய் இருக்கின்றது. வடக்கே பொங்கி பிரவகிக்கும் கடல் தெற்கே ஒரு புறமாக அரச திணைக்களக் கட்டிடங்கள், கிழக்கே அழகான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடுகளும், கடைகளும் அமைந்த கடைத்தெரு. விசாலமான விளையாட்டரங்கு திரையரங்குகள்... என்று மிக அற்புதமாக திட்டமிட்டு அழகாக அந்த நகரம் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழீழ சிங்கள தேசப் போரில் முல்லைத்தீவு ஒரு கேந்திர முக்கியத்துவம் பெற்றது மட்டுமின்றி அது ஒரு பூர்வீக வரலாற்றுச் சிறப்பைக் கொண்டது என்ற பெருமையையும் உடையது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் தமிழீழப் பகுதியின் பல்வேறு நிலப்பரப்புகளையும் ஆண்டு வந்த சங்கிலியன் தொடக்கம் குளக்கோட்டன் வரையிலான பல தமிழ் அரசர்கள் எல்லோரும் தோற்கடிக்கப்பட்ட போது 'வன்னி' மட்டும் பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு அடங்க மறுத்தது. தனித்தமிழர் இராச்சியமாக நிமிர்ந்து நின்றது. அன்றுக் கடைசி தமிழ் மன்னனாக வீரத்துடன் வாழ்ந்த பண்டாரவன்னியன் ஆளுமைக்குள் இருந்த தமிழர்கள் தன் மானத்துடனும், வீரத்துடனும் செல்வம் கொழிக்கும் வளத்துடனும் வாழ்ந்தார்கள். ஆனால் யாழ்ப்பாணத்தில் சங்கிலியன் தோற்கடிக்கப் பட்டதும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கொடூரங்களுக்கு அஞ்சிய தமிழர்கள் வன்னிப் பெருநிலப்பரப்புக்கே ஓடிவந்து முல்லைத்தீவு பகுதியில் தஞ்சமடைந்தனர்.

கரிக்காட்டு மூலை என்ற இடத்தில் தன் தளத்தை அமைத்து பிரித்தானிய அரசுக்கு எதிராக இறுதிவரைப் போராடிய பண்டாரவன்னியன், பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிவளைக்கப்பட்டுக் கற்சிலை மடுவரை போராடிய படி பின்வாங்கிச் சென்று இறுதியில் அந்தத் தனித் தமிழ் மறவன் அங்கே வீரச்சாவைத் தழுவிக் கொண்டான்.

இன்றும் கூட அக் கற்சிலை மடுவில் அந்த மாவீரன் பண்டார வன்னியனின் கல்வெட்டு வன்னியின் அடங்கா வீரத்தைக் காட்டிநிற்கிறது.

குறிப்பாக போர்க்காலங்களில் நேர்ந்த அனுபவங்களைக் கூறுங்கள் என்று கேட்டேன்.

முல்லைத்தீவு முகாம் வன்னிப் பெருநிலப்பரப்பிலுள்ள மிகப்பெரியதொரு கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளம். 1990ஆம் ஆண்டு முல்லைத் தீவில் காலம்காலமாக வாழ்ந்து வந்த மக்களை ஒரே இரவில் அகதிகளாக்கி உடுத்திய உடுப்புடன் வெளியேற்றிய, ஆயிரக்கணக்கான இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட இந்த நிலம் முல்லைத் தீவு முகாமாக காட்சியளித்துக் கொண்டிருந்தது.

வடக்கு கிழக்குப் பகுதியில் கடலாலும், தெற்கே நிலப் பரப்பினாலும் சூழப்பட்ட முகாம். 5 மைல் பரப்பிற்குள் தமது தளத்தை அமைத்து அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தனர். அந்த இராணுவ முகாம் அமைக்கப்பட்ட பின்னர் குமுளமுனை, செம்மலை, தண்ணீரூற்று, முள்ளியவளை, அலம்பில் பகுதியில் உள்ள மக்கள் சொல்லொண்ணா துயரத்துக்கும், எறிகணை வீச்சுக்கும் ஆளாகி வந்தனர். இது சர்வதேசத்தின் கண்களுக்குப் படாத தமிழர்களின் பெரிய அவலம். வற்றாப்பழை அம்மன் ஆலயத்திற்கு அருகில் உள்ள மாட்டுப் பட்டியில் அடுத்தடுத்து விழுந்த ஆட்லறி எறிகணைகளால் 40 பசுமாடுகள் உடல் சிதறிக் கொல்லப்பட்டன.

எத்தனையோ காவல் அரண்கள், பாதுகாப்பு வலயங்கள், ஆயிரக்கணக்கான விசேட பயிற்சிபெற்ற இராணுவப் படையணிகள், இங்கிருந்தன. நவீன ரக ஆயுதங்களைக் குவித்து வைத்திருந்ததுடன் இன்னும் ஒரு சில தினங்களுக்குள் வன்னிப் பெருநிலப்பரப்பு முழுவதையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விடுவோம் என்ற பெரியளவிலான ஆயத்தங்களை மேற்கொண் டிருந்த நிலையில் தான் முல்லைத்தீவு இராணுவ முகாம் மீதான புலிகளின் 'ஓயாத அலைகள்' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1996ஆம் ஆண்டு ஜூலை 17ஆம் தேதி இரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துமணியளவில் இருந்து புதுக்குடியிருப்பு பகுதிகளில் தொடங்கிய ஆரவாரமும் இரைச்சலும் தொடர்ந்து காதைப் பிளந்து கொண்டேயிருந்தன. ஒன்றுக்குப்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்த நூற்றுக்கணக்கான வாகனங்கள், புல்டோசர்கள், மோட்டார் சைக்கிள்கள் என்று அந்தப் பிரதேசம் அதிர்ந்து கொண்டிருந்தது. அன்றிரவு எங்கள் ஒருவருக்கும் தூக்கம் வரவில்லை. கடவுளே இவ்வளவு ஆயிரக்கணக்கான 'பொடியள்' போகுதுகள் அதுவும் வெற்றியோடு சுகமாகத் திரும்பவேண்டும் என்று இரவு முழுவதும் ஒவ்வொருவரின் பிரார்த்தனைகளும் இருந்தன. நள்ளிரவு 12.30 மணிபோல் ஊரே அடங்கி இருந்த வேளையில் ஒருசில எறிகணைச் சத்தங்கள் கேட்டன. அதன்பின் பெரிய அளவில் சத்தங்கள் கேட்கவில்லை. மீண்டும் இரவு 2.30 மணி இருக்கும் திரும்ப அமைதியைக் கிழித்துக் கொண்டு வட்டமிட்டுக் கொண்டிருந்த 'புக்காரா' விமானங்களின் இரைச்சல் எல்லோரையும் ஒரு கணம் உலுக்கிவிட்டது. மறுநாள் அதிகாலைவரை சுப்பர் சொனிக் புக்காரா விமானங்கள் இரைந்து கொண்டே இருந்தன.

"நேற்றிரவு முல்லைத் தீவில் காயம்பட்ட போராளிகளை பஸ்ஸில் ஏற்றிக் கொண்டு போகினமாம்..." "இராணுவ முகாம் முக்கால்வாசிப் பகுதியையும் பிடிச்சாச்சாம்..." அன்று காலை ஊர் முழுவதும் இதுதான் பேச்சு. காலை 8.30 மணிபோல் 15க்கு மேற்பட்ட பேருந்துகள் லாரிகள், இழுவை இயந்திரங்களில் வந்த போராளிகள் முல்லைத் தீவில் இருக்கும் ஆயுதங்களையும் சாமான்களையும் அள்ளிறதுக்கு ஆட்கள் தேவை. எங்களோடு வர விரும்புகின்ற ஆட்கள் இதுகளிலே ஏறுங்கள் என்று சொல்லிமுடிக்கு முன்னர் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் தாமாகவே ஓடிவந்து வண்டிகளில் ஏறிக்கொண்டனர். அவர்களில் இளைஞர்கள் மட்டுமல்ல, வயோதிகர்களும், குடா நாட்டிலிருந்து இடம்பெயர்ந்த அகதிகளும், அரச ஊழியர்களும் கூட இருந்தனர்.

"ஐயா நீங்கள் போறது ஆபத்தான இடம். காம்பில் இருந்து தப்பியோடிப் போன ஆமிக்காரங்கள் பற்றைகள் வழியே ஒளிந்து நின்று ரவுண்ட்ஸ் அடிப்பாங்கள்" என்று அந்தப் போராளிகள் கொடுத்த முன்னெச்சரிக்கையையும் கூட பொருட்படுத்தாமல் முண்டியடித்து ஏறிக்கொண்டிருந்தனர். "**தம்பி எங்கட மண்ணை அந்தச் சிங்களவனிடமிருந்து மீட்க நீங்கள் செய்யிற இந்த தியாகத்திற்கு நாங்கள் இதுகூட செய்யாவிட்டால்**" என்று அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்தில் ஏறினர். அந்த மக்களை ஏற்றி நிறைத்துக் கொண்ட பேருந்து வண்டிகள் தகர்க்கப்பட்ட முல்லைத்தீவு இராணுவ முகாம் நோக்கி விரைந்து கொண்டு இருந்தன.

புதுக்குடியிருப்பு- முல்லைத்தீவு பிரதானச் சாலை வழியாக சென்று கொண்டிருந்த அந்த பேருந்துகளும், லாரிகளும் சிவன் கோயிலைத் தாண்டி முள்ளிவாய்க்காலையும், பரந்தன் வெளியி னூடாக கடந்து சென்றது. இடையிடையே வானத்தில் சூப்பர் சொனிக் விமானங்கள், கிபிர் குண்டு வீச்சு விமானங்களின் மிரட்டல் ஓடிக்கொண்டிருந்த வண்டிகளில் இருந்தவர்களைக் கலக்கிக் கொண்டிருந்தது. அம்மக்களின் தொடர் வண்டிகள் அடர்ந்தக் காட்டுப் பகுதியூடாக சென்று வெட்டுவாய்க்கால் பாலத்தின் முன்பு நிறுத்தப்பட்டன.

“பாலத்தாலை இப்ப உங்களுக்கு போக ஏலாது. கடலுக்கை இறங்கிச் சுற்றித்தான் போகவேண்டும்” என்று அவர்களை அழைத்துக் கொண்டு சென்ற போராளி சிரித்துக் கொண்டு கடலி னூடாக நடக்கத் தொடங்கினான். முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகப்பெரும் பழமை வாய்ந்த கடலேறிதான் அது. நந்தி உடையார் என்பவரால் அணைக்கட்டப்பட்டதால் அது நந்திக்கடல் எனப் பெயர் பெற்றதாக ஒரு ஐதீகம். அந்த சிறிய ஏரி ஒரு காலத்தில் செல்வம் கொழிக்கும் விளை கடலாக இருந்தது. கடல் நீரும் நன்னீரும் சங்கமிக்கும் அந்த நந்திக்கடலில் இறால்வளர்ப்பு புகழ் வாய்ந்த ஒரு தொழிலாக இருந்து வந்தது. அந்த பெரிய இன இறால்களை வளர்த்து வருவதற்கேற்ற இயற்கைச் சூழல் இருந்ததால் பெருமளவில் ஏற்றுமதிச் செய்யக்கூடிய இறால் பண்ணையாக அந்த நந்திக்கடல் இருந்தது. 1990ஆம் ஆண்டின் பின்னரான இராணுவ முற்றுகையைத் தொடர்ந்து அந்தப் பிரதேச மக்களின் வாழ்வும் வளமும் அழிக்கப்பட்டுவிட்டது. தமிழீழ மாவட்டங்களில் வளம் செழிக்கும் மாவட்டமாக விளங்குவது முல்லை மாவட்டம் ஒன்றுதான். கடல்வளம், காட்டுவளம், மண்வளம், நீர்வளம் என எல்லாமே ஓரிடத்தில் இருப்பதாலோ என்னவோ இங்கு வாழும் மக்களும் வந்தாரை வரவேற்கும் பண்புள்ள பரந்த உள்ளம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள்.

மரணித்துப்போன அந்த நகரத்தை நோக்கி உயிர்த்துடிப்புள்ள மனிதர்களின் பயணம் அந்த நந்திக்கடல் நீரேரியூடாக ஆரம்ப மாகியது. கோரைப்பற்றைகளும் பனை மரங்களுமாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சியளித்த அந்த வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் பேய் வாழ்ந்த வீடுபோல் இருந்தது. உடைந்தக் கட்டிடங்கள் பற்றைகளால் மூடிப்போய் பாழடைந்துகிடந்தன. தூரத்தில் தெரிந்த இராணுவக் காவலரண்கள் அந்தப் போர்ச்சூழலில் ஒரு பயங்கரமானத் தோற்றத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. அந்த ஆழம் குறைந்த நந்திக்கடலையும் கடந்து கடற்கரைக்கு வந்து சேர்ந்தவர்களுக்கு அங்கு கண்ட காட்சி பென்கர் ஆங்கிலத் திரைப்படம் பார்த்தது போன்று திகிலூட்டுவதாக இருந்தது. அந்தக் கடற்கரை நீளத்திற்கு இரண்டு மூன்று அடிகளுக்கு ஒன்றாக ஆயுதம் தாங்கிய போராளிகள் பெருந்தொகையாக தயார்நிலையில் நின்றனர். கடலில் கடற்புலிகளின் நூற்றுக்கணக்கான அதிவேகப் பீரங்கிப் படகுகள் அணிவகுத்து நின்றன. அங்கிருந்து சுமார் மூன்று மைல் தூரம் வரை கடற்கரை மணலினூடாக நடந்து சென்று முல்லைத்தீவு இராணுவ முகாமின் மையப்பகுதியை அடைந்தனர். அங்கே இராணுவத் தினரின் மிகப்பெரிய தகவல் தொடர்புக் கோபுரம் சரிந்து போய்க் கிடந்தது. சுற்றுப்புறமும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினரின் சடலங்கள் சிதறிக் காணப்பட்டன.

**தமிழ் மக்களை குண்டு வீசிக் கொன்றவர்கள், தமிழர் சொத்துக்களை நிர்மூலமாக்கி அழித்தவர்கள், காலம்காலமாக வாழ்ந்த மக்களை அவர்களின் சொந்த மண்ணிலிருந்து அடித்துத் துரத்தியவர்கள். அந்தப் போர் வெறியர்களின் சடலங்கள் தெருவீதிகளிலும் கட்டிட இடிபாடுகளிலும் காவலரண்களிலும் முட்கம்பிகளிலும் தொங்கிக்கிடந்தன.**

முல்லைத்தீவு இராணுவமுகாமில் இருந்து ஏவப்பட்ட நூற்றுக்கணக்கான ஆட்லறி எறிகணைகள் பசுமாடுகளை மட்டுமா கொன்றொழித்தன? தினமும் குறைந்தது ஒருவர் என்ற கணக்கில் மனித உயிர்களைப் பலிகொண்டு வந்தன. முள்ளியவளை விநாயகர் ஆலயத்தேரில் விழுந்த செல் அந்தத் தேரையும் ஆலயத்தையும் சிதைத்து 15 இலட்சம் ரூபாய்க்கு மேல் நட்டத்தை ஏற்படுத்தியது.

முகாமிற்குள் வெளியே நின்று கொண்டிருந்த டிராக்டர் களிலும், லாரிகளிலும், பெட்டிப்பெட்டியாக ஆயுத தளபாடங் களையும், எறிகணைகளையும், ரவைகளையும் ஏற்றி நிறைத்ததும் அவை ஒவ்வொன்றாக முகாமை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றையத் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது ஓடி சுமார் நூறு மீட்டருக்கு அப்பால் உள்ள ஒரு தென்னை மரத்தில் ஏறி இருந்து தப்பிச் சென்ற இராணுவக் கோப்ரல், பி.பி.சி. நிறுவனத்திற்கு அளித்தப்பேட்டி சண்டையின் அகோரத்தை வெளிக்காட்டியது.

"நாங்கள் அன்றும் வழமைபோல் இராணுவக் காவலரண்களில் உசாராக இருந்தபோது அலை அலையாக ஆண்புலிகளும், பெண் புலிகளும் ஓடிவந்து அதிவேகத்தில் சுட்டுக்கொண்டு நாலாபுரத்தில் இருந்தும் தாக்கினார்கள்.

அந்த நேரத்தில் எங்களால் ஒன்றும் செய்யமுடியாது திணறிவிட்டோம். முடிந்தவரை நாங்களும் எதிர்த்து சுட்டுக் கொண்டிருந்தோம். அவர்களின் துரிதமான அடியின் வேகம் தாங்க முடியாமல் என்னிடம் இருந்த ரவைகள் தீர்ந்ததும் ஓடிப்போய் தென்னை மரத்தில் ஏறி ஒளிந்திருந்தேன். பின்னர் ஒரு ஜீப்பில் ஒரு புலி வந்து தமிழில் ஏதோ கூறியதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பொதுமக்கள் வந்து ஆயுதங்களையும் பொருட்களையும் இறந்த எங்களுடைய இராணுவத்தினரின் உடல்களையும் டிராக்டரில் ஏற்றிக் கொண்டிருந்தனர். புலிகள் மற்றத் தளத்திற்குச் சென்றதும் நான் மரத்தில் இருந்து இறங்கி தப்பிச் சென்றேன்" என்று அந்த 19 வயது சிங்களச் சிப்பாய் கூறியிருக்கின்றான்.

18ஆம் தேதி அதிகாலையிலேயே முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டதும் அங்கே கொல்லப் பட்டும், சிதறி தப்பியோடியபோது சுடப்பட்டும், இறந்த இராணுவத்தினரது சடலங்கள் ஆங்காங்கே சிதறிக் காணப்பட்டன. இறந்த இராணுவத்தினரின் சரியானத் தொகையை மூடி, மறைத்து வந்த அரசு போர் நடந்து 11 நாட்களுக்குப் பிறகு, "முல்லைத்தீவு முகாம் முற்றாக புலிகள் வசமானது உண்மைதான். அங்கு சுமார் 1500 படையினர் இருந்தனர். அவர்கள் எல்லாருமே கொல்லப்பட்டிருக்க வேண்டும்" என்ற உண்மையை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமர் செய்தியாளர் மாநாடு ஒன்றில் வெளியிட்டார்.

"பிணநாற்றம்..." என்று சொல்வார்களே அங்கு ஒரு பிணமல்ல ஆயிரத்துக்கும் மேற்பட்ட சடலங்கள் அழுகி உடல் உப்பி பெருத்த நிலையில் அங்குமிங்குமாக தேடி எடுக்கப்பட்டு பக்குவமாக லாரிகளிலும் டிராக்டர்களிலும் ஏற்றி கிளிநொச்சி சந்திரன் பூங்காவிற்கு கொண்டு சென்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு சமரில் கொல்லப்பட்டு மீட்கப்பட்ட 1208 சடலங்களை மனிதாபிமான முறையில் கையளிக்க முன்வந்த போதும் அவ்வளவு பெருந்தொகையான சடலங்களை பொறுப் பேற்க அரசு மறுத்துவிட்டது. சர்வதேசச் செஞ்சிலுவை சங்கத்திட மிருந்து 55 சடலங்களை மட்டுமே பொறுப்பேற்றுக் கொண்டது. மிகுதிச் சடலங்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு அரச அதிபர்களிடம் கையளிக்கப்பட்டு அவை அரசு செலவில் அடக்கம் செய்யப்பட்டன. போர்வெறி கொண்ட சிங்கள தேசத்திற்காக இனங்களுக் கிடையேயான சௌசன்யம் வளரக்கூடாது என்ற நோக்கில் நித்தி சுபபோகத்தை அனுபவிக்க முனையும் சிங்கள ஆட்சியாளர் களுக்காக தமது இன்னுயிரை அர்ப்பணித்த அந்த ஏழைச் சிங்கள சிப்பாய்களின் உடலைக்கூட அரசுப் பொறுப்பேற்க மறுத்து விட்டது. வெறும் பிணத்திற்காக ஏழைச் சிங்களத் தாய்மார்களின் பிள்ளைகள் தமிழர்களின் தாயக விடுதலைக்கு எதிரானப் போரில் இன்று மடிந்து கொண்டிருக்கிறார்கள். எங்கள் தமிழீழ இளைஞர்கள் ஒரு இலட்சியத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்துக் கொண்டிருக்க சிங்கள இளைஞர்களோ ஆட்சியாளர்களின் அர்த்தமற்ற "**சமாதானத்திற்கான யுத்தம்**" என்றப் போர்வையில் பணத்திற்காகவும், குடியிருப்புக்கான வீட்டுக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் மடிகின்றனர். ஆனால் களத்தில் நின்றும் விலகியிருக்கும் சிங்கள ஆட்சியாளர்களோ லண்டன் நகர விடுதிகளிலும், கொழும்பு ஐந்து நட்சத்திர ஓட்டல்களிலும் உல்லாசமாக பொழுதைப் போக்குகின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில் இந்த யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டால் இப்பொழுது அனுபவித்துக் கொண்டிருக்கின்ற எல்லாச் சுகபோகங்களுமே பறிபோய் விடும் என்ற அச்சத்தில் பிரச்சினைகள் முடியாதிருக்க யுத்தத்தை தொடரவே விரும்புவார்கள்.

இந்த உண்மையை அறிவுபூர்வமாக உணரும் வரை சிங்கள இளைஞர்களின் சடலங்களும் தமிழீழ மண்ணிலே, புதைக்கப் படுவதும் தவிர்க்கமுடியாததாகவே போகும்" என்று கூறிமுடித்தார்.

நேரம் போனதே தெரியாமல் கேட்டுக் கொண்டிருந்தேன். ஓவியக்காட்சியை பார்த்துவிட்டு என்னுடன் கலந்துரையாடு வதற்காக பலர் காத்து நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திலீபன் ஓவியம் எங்களை உருக்குகிறது. திலீபன் உண்ணா நோன்பு இருந்தபோது நான் உடன் இருந்தேன். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நொடியும் அவர் உயிர் எப்படி பிரிந்தது என்பதை நானறிவேன். அவர் உயிர் பிரியும் அந்த கடைசி நொடிப்பொழுதில் எப்படி இருந்தாரோ அதை மிகவும் உயிரோட்டமாக வெளிப்படுத்தி யிருக்கிறீர்கள். நீங்கள் அதை பார்க்காமலேயே எப்படி அவ்வளவு துல்லியமாக வெளிப்படுத்த முடிந்தது" என்று ஒருவர் வியந்து கேட்டார்.

இதே கேள்வியை இதே உணர்வோடு செல்லும் இடங்களில் எல்லாம் பலரும் கேட்கிறார்கள். திலீபன் உண்ணாநோன்பு இருந்தபோது இங்கு என்ன உணர்வோடு, என்ன மனநிலையில் நீங்கள் இருந்தீர்களோ அதே உணர்வோடு நாங்கள் அங்கு இருந்தோம் என்று பதிலளித்தேன். இங்கு இருண்ட பின்பும் பலர் என்னோடு விவாதித்துக் கொண்டிருந்தனர். கருத்துக்களையும் பதிவு செய்தனர்.

இரவு உணவை ஓவியர் இராசன் இல்லத்தில் முடித்துவிட்டு கிளம்பினேன்.

நேரம் நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது.

நாள் முழுவதும் உரையாடிக் கொண்டிருந்ததால் ஏற்பட்ட களைப்பு நீண்டதூரம் பயணம் செய்ததால் ஏற்பட்டக் களைப்பு,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை உறக்கத்திற்கு உந்தித் தள்ளியது. இருந்தாலும். அன்றைய கருத்துப்பதிவுகளை படிக்காமல் உறங்குவது சரியல்ல என்ற நினைப்பு. என்னைப் படிக்கத் தூண்டியது. படிக்கத் தொடங்கினேன்.

■ உங்களின் வரைவுகள் எங்களின் விரைவின் அவசியத்தையும் அவசரத்தையும் வெளிக்காட்டுகிறது.

*-தே.துளசி*

■ தங்களின் ஓவியம் கடந்த கால நினைவுகளை மீட்டும். கடந்துபோன வாழ்க்கைத் தடத்தை மீட்டிப் பார்க்கும். தமிழ் மக்களின் வாழ்வியல் துன்பங்களைத் துல்லியமாக சித்திரிக்கின்றன.

*-சோதிநாதன்*

■ ஓவியங்கள் யாவும் உயிரோட்டமானவை. இளம் சமுதாயத்தை சிந்திக்க வைப்பவை. கடந்த காலத்தில் தமிழினமும் நம் சமூகமும் பட்ட இன்னல்களை தத்ரூபமாக எடுத்துக் காட்டுகின்றன. இவை தமிழினத்தின் வரலாற்றுச் சின்னமாக போற்றப்படவேண்டியவை.

*-திருமதிசெ.ரங்கநாதன்*

■ சித்திரவதை அனுபவித்தேன். மரணவேதனையை இனவெறியர்கள் ஏற்படுத்திய தாயின் முலை அறுப்புகள், பெண்களின் சிதைப்பு, காத்திருப்பு போன்ற படைப்புகள் நெஞ்சை உலுக்கியது. குட்டிமணியின் கண்கள் என்னை மிகமிக பாதித்தது. எமது அறிவையாவது அழித்து எமை அழிக்க நூலக எரிப்பு 'இனவெறித்தீ', திலீபனின் கடைசி நேரமும் தியாக உணர்வும் எல்லாவற்றிற்கும் மேலாக இருளிலிருந்து புறப்படும் ஒளியாக எம்தலைவர். இறுதியாக நம்பிக்கை, தளிர், வெளிச்சம் என்ற ஓவியங்கள்.

*-சு.இராஜன் ,ஓவியர்*

■ ஓவியங்கள் எல்லாம் மிகத் தத்ரூபமாக இருக்கிறது. யாழ் நகரிலிருந்து இடம்பெயர்ந்து வரும்போது நீங்கள் வரைந்தமாதிரியே யாழ் செம்மணி பாலத்தில் அடிவைத்த காட்சியை ஞாபகப் படுத்தியது.

*-ச.பாலசிங்கம்*

■ பல நவீன ஓவியக் கண்காட்சிகளை நாம் பார்த் திருக்கின்றோம். சற்று வித்தியாசமாக தாங்கள் கையாண்ட முடிவு,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணியின் போக்கு என்பன தங்களுடைய ஓவியங்களை மெருகூட்டுகின்றன. அத்துடன் தங்களின் மனித உருவங்களின் கொடுமைப்படுத்துகின்ற ஓவியங்களில் தாங்கள் கையாண்டிருந்த நரம்பின் தோற்றம் சிறப்பாக இருந்தது.

*-ஆ.ஜெயதாசன்*

■ நீங்கள் கையாண்ட நவீனவும் மரபும் சார்ந்த ஓவியங்கள் மிகவும் நன்றாக இருந்தது. அதிலும் சிறப்பாக யாழ் வெளியற்றம், விதைக்கப்பட்டவர்கள், குட்டிமணி கண்கள், நம்பிக்கை போன்ற ஓவியங்கள் மிகவும் ஆழ்ந்த கருத்துக்களை விதைத்திருக்கிறது.

*-கா.நிஷாந்தன்*

■ போரின் வடுக்கள், எச்சங்கள் காலத்தால் அழிக்கப் பட்டாலும் தாயகக் கலைஞனின் உயிர்த்துடிப்புமிக்க ஓவியங்கள் எமது தமிழீழ விடுதலைப்போரில் எமது மக்கள் பட்ட அவலங்கள், துயரங்கள் முதலியவற்றை என்றென்றும் அழியாது உலகுக்கு உணர்த்தும்

*-திருமதி க.பத்மாவதி*

■ ஒவ்வொரு ஓவியங்களும் நாம் அனுபவித்த அனுபவித்துக் கொண்டிருக்கிற அதிஉச்ச கொடுமைகளை எம் கண்முன்னே ஓர் உயிரோட்டமுள்ள பிரதிபலிப்புகளாக உள்ளன.

*-போத்தேஸ்வரி*

■ எம் போராட்ட வரலாற்றிலே மறக்கப்பட வேண்டிய பக்கங்கள் சிலவற்றை எம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறது.

*-வினிதா, புவனேஸ்வரி*

படித்து முடித்தேன். உறங்குவதற்கு நீண்டநேரம் ஆனது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்பார்வையின்றி ஓவியங்களை கண்டார்

புதுக்குடியிருப்பு. இதுவும் முக்கியமான ஒரு இடம். முல்லைத் தீவை இராணுவம் ஆக்கிரமித்திருந்தபோது அம்மக்கள் இம்மண்ணில்தான் புலம் பெயர்ந்து வாழ்ந்தார்கள்.

இங்குள்ள நுண்கலைக் கல்லூரியில்தான் ஓவியக்காட்சி நடைபெற்றது. ஊடகங்கள் தொடர்ந்து ஓவியங்கள் பற்றியும் என்னுடைய நேர்காணல்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்த காரணத்தால், மக்களிடையே ஒருவித எதிர்பார்ப்பையும், ஆவலையும் தூண்டிவிட்டிருந்தது. அதுமட்டுமல்லாமல் இது போன்ற ஓவியக்காட்சி அப்பகுதியில் இதுதான் முதல்முறை அதுவும் ஒரு காரணம். அதோடு கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இங்குதான் இறுதிக்காட்சி. அதனால் கூட்டம் கூடுதலாகவே இருந்தது.

ஒரு பெண்- பார்வையற்ற பெண் இன்னொரு பெண்ணின் துணையோடு ஓவியக்காட்சியைப் பார்வையிட்டுக் கொண்டு வந்தார். உடன் வந்த பெண் ஓவியங்களில் உள்ளக் காட்சியை விவரித்தும் ஓவியங்களுக்கருகில் உள்ள கவிதைகளைப் படித்தும் கூறிக்கொண்டு வந்தார். அந்தப் பார்வையற்றப் பெண் தனக்கு எழுகின்ற அய்யங்களை உடன் வந்தப் பெண்ணிடம் கேட்டு தெளிவுபடுத்திக் கொண்டிருந்தார். அவ்வளவுக் கூட்டத்திலும் நான் இதை கவனித்துக் கொண்டிருந்தேன். என் அருகில் நின்ற நுண்கலைக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு. கண்ணதாசன் "இந்தப் பெண் ஒரு போராளி. ஒரு சண்டையில் இரு கண்களும் பார்வை யிழந்து விட்டது. இவர் ஓவியம் வரைவார். நம் கல்லூரிக்கு அடிக்கடி வருவார்" என்று என்னிடம் கூறினார். நான் வியந்து போனேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பெண் போராளி ஓவியக்காட்சியைப் பார்த்து முடித்து விட்டு, கருத்துப் பதிவேட்டில் தன்தோழியின் உதவியுடன் தன் கருத்தையும் பதிவு செய்துவிட்டு திரும்புகையில் கண்ணதாசன் அப்போராளியிடம் என்னை அறிமுகம் செய்து வைத்தார். என் ஓவியங்களைப் பற்றி நிறைய கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். பிறகு "எல்லோருக்கும் பயிலரங்குகள் நடத்துகின்றீர்கள், என்னைப் போன்ற பார்வையிழந்தவர்களுக்கு பயிலரங்குகள் ஏன் நடத்த வில்லை" என்று அப்பெண் என்னிடம் கேட்டார். நான் ஒரு நிமிடம் உறைந்துபோனேன். என்னபதில் சொல்வது எப்படிச் சொல்வது என்றும் புரியாமல் "அதுமிகவும் சிரமம்" என்றேன். "கையில் லாதவர்கள் ஓவியம் வரையலாம், கால் இல்லாதவர்கள் ஓவியம் வரையலாம், காதுகேட்க இயலாதவர்கள் ஓவியம் வரையலாம், ஏன் என்னைப் போன்ற பார்வையிழந்தவர்கள் ஓவியம் வரைய முடியாதா? எங்களைப்போன்றவர்களைப் பற்றி நீங்கள் சிந்திக்க வில்லையா?" என்று கேட்டார்.

இரண்டு கைகளும் இல்லாதவர்கள் வாய் அல்லது கால்கள் துணையுடன் ஓவியம் வரையலாம், சிக்கலில்லை. காது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்காதவர்களுக்கோ கால் இல்லாதவர்களுக்கோ வரைவதற்கு தடையில்லை, கையும் இருக்கிறது கண்ணும் இருக்கிறது. அனைத்து உறுப்புகளும் சரியாக இயங்குகின்ற நிலையில் இருக்கும் ஒருவருக்கு கண் பார்வை இல்லை என்றாலும், இசைக்கருவிகளை மீட்டலாம், மிருதங்கம் வாசிக்கலாம், பாடலாம், அதில் ஒன்றும் சிக்கல் இருக்காது. ஆனால் உற்று கவனிப்பதற்கு கண்பார்வை முக்கியம். அது இருந்தால்தான் வடிவங்களை அமைக்கமுடியும். எப்படி இந்தப் பெண் வரைகின்றார் என்ற சிந்தனையிலேயே அந்தப் பெண்ணிடம் உரையாடிக் கொண்டிருந்தேன்.

"நான் வரைந்து கொண்டிருக்கிறேன். நாளை நீங்கள் இங்கிருந்தால் கொண்டு வந்து காட்டுவேன். எங்கள் '**அண்ணன்**' அதற்குத் தேவையானப் பொருட்களை வாங்கிக் கொடுத்து எங்களை ஊக்குவிக்கிறார். நீங்களும் அதுபற்றி சிந்தித்து எங்களைப் போன்றவர்களுக்கு உதவவேண்டும். அந்தக்கடமை உங்களுக்கு இருக்கிறது" என்றுக் கூறினார்.

எனக்கு வியப்பாகவே இருந்தது. அதுபற்றிய சிந்தனையிலேயே அன்றைய நாள்முழுவதும் இருந்தேன். அதுபற்றி என் நண்பர் கருணாகரனிடம் பிறகு விவாதித்தபோது "இம்மண்ணில் இப்போராட்டம் நிறைய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது. குறிப்பாக 'விதி'களை மாற்றியிருக்கிறது. இரண்டு கண்களையும் இழந்த ஒரு போராளி அற்புதமான மிருதங்கக் கலைஞனாக ஆகியிருக்கிறான். படத்தொகுப்பு (Editing) கணினியில் செய்வதற்கு விரல்கள் முக்கியம். இரண்டு கைகளையும் மணிக்கட்டுவரையிழந்து பத்து விரல்களும் இல்லாத ஒருவன் அற்புதமான படத் தொகுப்பாளன் ஆகியிருக்கிறான். அதுபோல் கால்களை இழந்தவர்கள் செயற்கைக் கால்களைப் பொருத்திக்கொண்டு அந்த குறையே தெரியாமல் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதுபோல் விரல்களை இழந்தவன் அற்புதமாக கீ போர்டு வாசிக்கிறான். இப்படி நிறைய சொல்லிக் கொண்டே போகலாம் புகழ்" என்றார். இங்கே ஊனத்தை வென்றிருக்கிறார்கள் என்றேன்.

ஓவியக் காட்சி முடிந்து திரும்பியபோது தங்கும் விடுதியில் நண்பர்கள் காத்திருந்தார்கள். "இன்றிலிருந்து மூன்றாவது நாள் வன்னி மண்ணில் ஓவியக்காட்சி முடிவுற்றதற்கு அடையாளமாக மதிப்பீட்டரங்கும், உங்களுக்கு கௌரவிப்பு நிகழ்வும் நடைபெறுகிறது. அன்று மக்களின் வேண்டுகோளுக்கிணங்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சியில் மீண்டும் காட்சிப்படுத்த திட்டமிட்டிருக்கின்றோம். அதற்கான வேலைகளை இன்று தொடங்கிவிட்டோம். நாளை செய்தித்தாளில் செய்தி வந்துவிடும்" என்றார்கள்.

அதன்பிறகு யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான தேதியும் இடங்களும் முடிவு செய்யப்பட்டு அதற்கான வேலைகளை அங்குள்ளவர்கள் தொடங்கிவிட்டார்கள். இங்கு இந்த மதிப்பீட்டரங்கை முடித்துவிட்டு நீங்கள் அங்கு செல்ல வேண்டும் என்றார்கள்.

அவர்கள் என்னிடமிருந்து விடைபெறும்போது நள்ளிரவு நெருங்கிக் கொண்டிருந்தது. அதன் பிறகு குளித்துவிட்டு, புதுக்குடியிருப்பு மக்கள் கருத்துக்களை படிக்கத் துவங்கினேன்.

■ இதுவரை நாம் அனுபவித்த துன்பங்களை ஒருநொடிப் பொழுதில் மீட்டிப் பார்க்கக் கூடிய அளவுக்கு உயிர்ப்புள்ள ஓவியங்கள்.

-நாகேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ இவ்வோவியங்கள் தமிழ் மக்களின் இன்னல்களை தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இனவெறி பிடித்த சிங்கள காடையர்களின் இயல்புகள் இவ்வோவியங்களில் புதைந்து கிடக்கின்றன. இவ்வோவியங்களை சிங்கள இன மக்கள் பார்க்கும் போது தமது இனத்தின் கொடுமைகளை உணர்ந்து மனம் மாறுவார்கள்.

*-நிரோஜினி, மாணவி*

■ யுத்த நிறுத்த காலத்தில் தற்காலிகமாக மறைந்திருந்த எங்கள் கடந்த காலத்தின் இரணங்கள் நிறைந்த நிலைமையை மீண்டும் தட்டிப்பார்க்க முடிந்தது. சிந்தனையில் மூழ்கி என்ற ஓவியம் மனதை மிகவும் தொட்டது. எங்கே மறைந்தது எம் வியர்வையும் வாழ்வும். தமிழர் மனங்களிலே கேள்வியை எழுப்புகிறது.

*-திருமதி ரோஜோ ஆண்டன்*

■ இன்றைய சமுதாயம் கடந்த காலங்களில் கேட்டறிந்ததை விட ஓவியத்தின் மூலம் உணர்ந்து கொள்ளக் கூடியதாகவும் நாம் அறிந்து கொள்ளாத பல சம்பவங்கள் அறிந்துகொள்ளக் கூடிய தாகவும் நுட்பமாகவும் தெளிவாகவும் வரையப்பட்ட ஓவியங்கள்.

*-எஸ்.சிவகாமி*

■ ஓவியம் என்பது என்ன என்று புரியாதிருந்த எம் வினாக்களுக்கு இன்று விடை கிடைத்திருக்கிறது.

*-செ.பிரணவி*

■ இன்றைய சமாதானத்திற்கு கொடுத்த மனிதனின் விலைகள் இவ்வோவியங்களில் காணக்கூடியதாக உள்ளது.

*-பி.நாயகி*

■ திலீபன் அண்ணையின் ஓவியம் உண்ணாவிரதம் இருந்த அந்த மேடையில் இறுதி நாட்களில் என் பார்வையில் பட்ட அந்த மன உணர்வை இந்த ஓவியம் இன்று ஏற்படுத்தியது. எங்கள் போராட்டத்தை அங்கிருந்தபடியே ஆழமாக விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள்.

*-ஜானகி*

■ எமது போராட்ட வரலாற்றில் நாம் அனுபவித்த அல்லது கேள்விப்பட்ட நேரடியாகப் பார்த்த என்று அனைத்தையும் ஒரு சில நிமிடங்களில் மீள்பார்வை செய்து என் கண்முன்னால் ஓடவிட்டது இவ் நவீன ஓவியங்கள்.

*-நா.ரஞ்சனா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடிந்ததும்

இங்கிருக்கின்ற இரண்டு நாட்களும் பயனுள்ள வகையில் கழிக்க வேண்டும் என்று விரும்பினேன்.

காலையிலேயே நண்பர் சுதா, புதிய நபர் ஒருவருடன் என்னைச் சந்திக்க வந்திருந்தார். 'இவர் மன்னார் பகுதியில் வேலை செய்கிறார்' என்று புதியவரை அறிமுகப்படுத்தியதோடு, மன்னாரில் இரண்டு நாட்கள் ஓவியக்காட்சி நடத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் விரும்புகிறார்கள். உங்களைப் பற்றியும் ஓவியக்காட்சிப் பற்றியும் பத்திரிகைகளிலும், வானொலியிலும் படித்துவிட்டு, கேட்டுவிட்டு மிகவும் ஆர்வமாக இருக்கிறார்கள்" என்றார்.

யாழப்பாணத்தில் ஓவியக்காட்சி முடிந்ததும் நான் ஊருக்குத் திரும்பவேண்டும் என்று எனக்கிருக்கின்ற நேர நெருக்கடியைத் தெரிவித்தேன்.

"என்ன செய்வீர்களோ தெரியாது. எப்படியும் இரண்டு நாட்கள் ஒதுக்கவேண்டும். ஏன் என்றால் அது மிகவும் பின்தங்கியப் பகுதி. அம்மக்கள் எம்பகுதியை ஒதுக்கிவிட்டார்கள் என்று கருதக்கூடாது" என்று சுதா கூறினார். எனக்கும் அங்கு எப்படியும் நடத்தியே தீரவேண்டும் என்ற ஆவல் கூடியது.

யாழ்ப்பாணத்தில் நான் தங்கி இருக்கும் நாட்களில் ஒருநாள் குறைத்து ஊர் திரும்பும் போது கொழும்பில் நிற்கவேண்டும் என்று நினைத்த ஒரு நாளை தவிர்த்து அந்த இரண்டு நாட்களையும் மன்னாருக்கு ஒதுக்கினோம்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வனவளப் பெருக்கம்

**வ**ன்னிப் பெரு நிலத்தில் நான் சென்ற பல்வேறு இடங்களில், புதிதாக கன்றுகள் நடப்பட்டு, வனவள பாதுகாப்புப் பிரிவினால், பாதுகாக்கப்பட்டு வருவதை கண்டேன். அதனால் அவ் வன வளப் பாதுகாப்புப் பிரிவின் செயல்பாடுகள் குறித்து மேலும் தெரிந்து கொள்ள வேண்டும் என விரும்பி நண்பர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் அப்பிரிவிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கிருந்த அதன் முக்கிய உறுப்பினர் ஒருவர், "வனம் என்பது வன்னியின் வளம். வன்னியின் பிரதான இயற்கை வளமான காடுகள் வன்னிப் பெருநிலப்பரப்பான பெரும் பகுதியை நிறைத்திருக்கின்றன. வன்னியின் பிரதான வருமானம் தரும் மூலதனமாகவும், அழகும் வனப்பும் தரும் இயற்கையின் கொடையாகவும் அமைந்து, தமிழீழத்திற்கு தனிச் சிறப்பையும் கவர்ச்சியையும் வழங்கி வருவதும் இந்த பசுங்காடுகளே. ஆனால் இவ் இயற்கையின் கொடை மீதான திட்டமிட்ட ஆக்கிரமிப்பு இன்றைக்கு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னமே சிங்களப் பெரும்படையினரால் முடுக்கிவிடப்பட்டது. வடக்கு, கிழக்கை தன்னுடைய பிரதேசம் என்று கூறிவந்தாலும் கூட, சிங்கள அரசு தனது பெரும்பான்மை இனத்தின் நுகர்வுத் தேவைக்காக தனது பிரதேச வனவளத்தை பயன்படுத்தாமல் அந்நிய தேசமெனக் கருதி, தமிழ்மக்கள் வாழும் பிரதேசங்களிலுள்ள வனத்தையே அழித்து தனது நுகர்வுத் தேவையை பூர்த்தி செய்து வந்தது. இது மட்டுமல்லாமல் 70களில் மேற்கொள்ளப்பட்ட மீள் காடாக் கங்களின் போது வன்னிப் பிரதேசத்திற்கு ஒத்துவராத, நிலத்தடி நீரையும் மண் வளத்தையும் அதிகம் உறிஞ்சுவதன் மூலம் சுற்றுச் சூழலை பெரும் வறட்சி நிலைக்கு இட்டுச் செல்லக்கூடிய யூப்கலிப்டஸ் அதாவது சஞ்சீவி இன மரங்களை கபடநோக்கில் பெரும் தொகையில் வன்னியில் நடுகை செய்தது. தமிழர் தாயகப் பிரதேசங்களை ஆக்கிரமித்து ஆளவேண்டும் என்று அவாப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார வர்க்கத்தினர், அவ்வாசை கை கூடாதப் பட்சத்தில் அப்பிரதேசங்களை அழித்துச் சிதைத்துச் சுடுகாடாக்கிவிடும் அசிங்கமான நடவடிக்கைகளில் கைதேர்ந்தவர்களாகவே திகழ்கின்றனர். யுத்தத்தைக் காரணம்காட்டி, தமிழர் குடியிருப்புக் களையும், நகர்ப்புறங்களையும் கண்மூடித்தனமான குண்டு வீச்சுகளால் தரைமட்டமாக்கியதும் தொடர்ந்து அதே நடவடிக் கையில் ஈடுபட்டு வருவதும் வெளிஉலகிற்கு தெரியவராத விடயங்களல்ல.

தமிழீழ மக்கள் தங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கும், சுயதேவைகளைப் பூர்த்தி செய்து சொந்தக்காலில் நிற்பதற்கும் ஆதாரமாக அமைகின்ற இயற்கை வளங்களை இனங்கண்டு அவற்றினை சூறையாடுவதோடு நின்றுவிடாமல், தமக்கு கிட்டாதவை தமிழருக்கு கிடைத்துவிடக் கூடாது என்ற கெட்ட நோக்கத்தோடு செயற்பட்டுவருகின்றது. இந்த வகையில்தான் வன்னியின் பிரதான வளமான இயற்கைக் காடுகள் சிங்கள ஆட்சியாளர்களால் சூறையாடப்பட்டன.

தமிழர் தாயக நிலப்பரப்புகளில் உள்ள வனங்களை அழித்து விட்டு இவ்விடங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் காலத்துக்குக் காலம் நிறுவப்பட்டு வந்தன. மணலாறு மாவட்டத்தில் வெலிஓயா, ஜனகபுர மற்றும் பதவியா போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களை இதற்கு உதாரணமாக கொள்ளலாம்.

இவை தவிர,வன்னிப் பெருநிலப்பரப்பினை ஊடறுத்து காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை கள் காரணமாக வன்னியின் வனவளம் அழிக்கப்பட்டது. இரண்டாம் ஈழப்போரின் ஆரம்ப நாட்களில் மணலாற்றில் மேற்கொள்ளப்பட்ட 'ஏழு சக்திகள்' மற்றும் 'மின்னல்' வன்னியில் மேற்கொள்ளப்பட்ட 'வன்னிவிக்கிரம' போன்ற நடவடிக்கைகளின் போது முதன் முறையாக வன்னிக் காடுகள் பெருமளவில் சரியத் தொடங்கின. தொடர்ந்து மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமான பின்னர் என்றுமில்லாதவாறு மூர்க்கத்தனமான போர் வன்னியில் மையங்கொண்டது. வன்னிப் பெரு நிலத்தை ஊடறுக்கும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட 'எடிபல' மற்றும் 'ஜெயசிக்குறு' ஆகிய நடவடிக்கைகளின் போதே ஈழ வரலாற்றில் முன்னப்போதும் இல்லாதவாறு வன்னியின் வனவளம் அழியத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையெனப் பொழிய பொழிந்த இராணுவத்தின் எரிகணை வீச்சில் சரிந்தன மரங்கள். இராணுவப் பாதுகாப்பு என்ற பெயரில் காப்பரண் களுக்கும், பதுங்கு குழிகளுக்கும் இராணுவ வேலிகளுக்குமென எண்ணற்ற மரங்கள் வெட்டப்பட்டன. மணலாறு, ஒட்டுச் சுட்டான், நெடுங்கேணி, புளியங்குளம், மாங்குளம், மன்னார் என பல்லாயிரம் சதுர கிலோமீட்டர் பரந்தளவில் உள்ளக் காட்டுப் பகுதியைக் கைப்பற்றிய படையினர் இயற்கையின் சமநிலையில் பெருங் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையில் வனவளத்தை அழித்தனர்.

தவிர, நகரங்களில் வாழ்ந்த மக்கள் காட்டுப் பகுதிகளை நோக்கி இடம் பெயர்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டமையாலும், இடப்பெயர்வுகள் அதிகரித்து அவர்களுக்கான வாழ்விடங்களை அமைப்பதற்காக, தமிழீழ மக்கள் விரும்பியோ விரும்பாமலோ மரங்களை வெட்டவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள். இது கூட இயற்கை வன அழிப்புக்கு தமிழீழ மக்களையே கருவியாக பயன்படுத்தி தமிழீழ மண்ணை பாலைவனமாக்கும் சிறீலங்கா இராணுவத்தின் மறைமுகமான நடவடிக்கையின் பரிமாணங்களே. பசுமை போர்வையில்லாத பூமி உயிரினங்கள் வாழ எவ்வகையிலும் உகந்ததல்ல, வனவளத்தை அழிப்பதானது நாட்டின் வளநிலை யையும் காலநிலையையும் பாதிப்பதோடு, மண் வளம் குன்றிப் போகவும் வழிசமைக்கிறது என்பதை நன்கறிந்தபோதும் போர் மூர்க்கமாக நடைபெற்றுக் கொண்டிருந்தமையால் தமிழீழ தாயகத்தின் வனவளம் அத்துமீறி அழிக்கப்படுவதையோ அல்லது சுரண்டப்படுவதையோ தமிழ் மக்களால் தடுத்து நிறுத்த முடியவில்லை" என்று கூறிமுடித்தார்.

எப்போது வனவள பாதுகாப்புக்கான அமைப்பு தொடங்கப் பட்டது என்று கேட்டேன்.

"தொண்ணூறுகளின் பின்னான காலப்பகுதியில் தாயக நிலப்பரப்பில அத்து மீறிய காடழிப்பு மற்றும் சுரண்டல்களை தடுப்பதற்கான நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டன. தமிழ் மக்களுக்கான சுதந்திரமும் சுபிட்சமும் நிறைந்த சுதந்திர தேசமொன்றைச் சமைப்பதற்காக, அர்ப்பணிப்பு களினதும், தியாகங்களினதும் அடித்தளத்தில் நகர்ந்து கொண்டி ருக்கும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தனித்துவமான தலைமை இதுபற்றி சிந்திக்கத் தவறவில்லை" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிகவும் வியப்பாக இருக்கிறது என்றேன்.

"இதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை. ஏனெனில் தமிழீழ விடுதலைப் போரின் உன்னதக் குறிக்கோள் தமிழ் மக்களின் சுபிட்சமான எதிர்காலம் ஒன்றாகவே இருக்கும்போது, தாயகத்தை கட்டியெழுப்பும் தூரநோக்கிலான சிந்தனைகளை கொண்டிருப்பது யதார்த்தமான விடயமாகின்றது" என்றார்.

இருந்தாலும் யுத்த பூமியில் இராணுவ நகர்வுகளை வழிநடத்திக் கொண்டிருக்கின்ற ஒரு மக்கள் தலைவன் தனது மக்களின் எதிர்காலத்தையும் அவர்கள் வாழப்போகின்ற தேசம் பல்துறையிலும் தன்னிறைவுடன் திகழ்வதற்கான தொலைநோக்கு திட்டமிடலையும் ஒரே நேரத்தில் முன்னெடுத்து வருவது வியப்படையவைக்கும் செய்திதான் என்று நான் தெரிவித்தேன்.

தமிழீழ வனவளப் பாதுகாப்புப் பிரிவு, தமிழீழ நிலப்பரப்பில் அத்துமீறிய காடழிப்பை தடுப்பதற்கும் ஏற்கெனவே காடழிக்கப் பட்ட பகுதிகளில் மீள்வனமாக்கல் நடவடிக்கைகளை செவ்வனே மேற்கொண்டு வருகிறது. 1994ஆம் ஆண்டு அப்பிரிவு தொடங்கப் பட்டது முதல், ஈழத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் தமிழீழ வனவளப்பாதுகாப்புப் பிரிவின் மகத்தான பணி ஆரம்பமாகி யிருக்கிறது. அதே ஆண்டு 340 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பில் 1,20,000 தேக்கு, சமண்டலை, மலைவேம்பு ஆகிய நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை நடுகை செய்திருக்கிறது.

1994 தொடக்கம் முதல் இன்றுவரை சுமார் 1,55,200 பல்வகைப்பட்ட மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டுள்ளதுடன் தொடர் பராமரிப்பும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தமிழீழத்தில் பல ஆண்டுகளாக நடைபெற்று வரும் விடுதலைப் போரானது, பல்வேறுபட்ட ஒடுக்குமுறைகளுக்கெதிரான புரட்சிகளை தன்னுள் அடக்கியிருப்பதை பலரும் அறிவார்கள். ஆனால் செல்வந்த நாடுகளில் ஜெனிவா மாநாடு போன்ற பெருமளவில் ஆராயப்படுகின்ற சூழல் மாசடைதலுக்கெதிரான யுத்தத்தையும் பசுமைப் புரட்சியையும் தன்னகத்தே கொண்டிருப்பதை யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம்- ஒரு சூனிய நிலை

இலங்கைத் தீவின் இனச் சிக்கலுக்கான போர்நிறுத்த உடன்பாடு 3 ஆண்டுகள் முடிந்து 4ஆவது ஆண்டில் கால் பதித்துள்ளது. இந்தப் போரற்றப் பயணம் இன்னும் எதுவரைத் தொடரும் என்கின்ற நிச்சயமற்றக் கேள்விகள், மீள அனைவரிடமும் எழுந்திருந்ததை அங்கு காணக்கூடியதாக இருந்தது. அதுவரை நான் சென்ற இடங்களில் சந்தித்தவர்கள் அனைவருமே தற்போதிருக்கும், போருமற்ற, சமாதானமுமற்ற, தீர்வுமற்ற ஒரு சூன்ய சூழ்நிலையை விரும்பவில்லை என்பதை அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் வழி அறிந்து கொள்ள முடிந்தது.

"இதுவரை 70 ஆயிரம் பொதுமக்களை இழந்துள்ளோம், ஆயிரக்கணக்கான மக்கள், கால்களை இழந்து, கைகளை இழந்து கண்களை இழந்து, காது கேட்கும் திறனை இழந்து ஊனமுற்றவர் களாகவும் ஆதரவற்றவர்களாகவும் நிற்கிறார்கள். 18ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளை இழந்துள்ளோம். மதிப்பிடமுடியாத சொத்து, சுகங்களை இழந்துள்ளோம். இலட்சக்கணக்கான மக்கள் சொந்த மண்ணை இழந்து, சொந்த பந்தங்களை இழந்து ஏதிலிகளாக பல்வேறு நாடுகளில் வாழ்ந்து வருகிறார்கள். இவை அத்துனையும் தற்போது இருக்கும் சூன்ய வாழ்வுக்காக இழக்கவில்லை. விடுதலைபெற்ற தமிழீழ தேசத்தில் எங்கள் சந்ததியாவது வாழ வேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு இழப்புகள். விடுதலை பெறாவிட்டால் இவ்வளவு இழப்புகளும் அர்த்தமற்றதாகிவிடும். அதனால் இன்னும் எவ்வளவு இழப்புகள் வந்தாலும் சண்டையை தொடங்கி இறுதித்தீர்வு எட்டவேண்டும். அதற்கு நாங்கள் துணை நிற்போம்" என்று மக்கள் ஒவ்வொருவரும் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

எனக்கு மிகவும் வியப்பாக இருந்தது. மக்கள் தற்போது இருக்கின்ற சூழலைத்தான் விரும்புகிறார்கள் என்று ஊடகங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திச் சொல்லிக் கொண்டு இருக்கின்றன. ஆனால் மக்களுடைய கருத்து அதற்கு எதிராக இருக்கிறதே என்று நண்பர்கள் சிலரிடம் அதுகுறித்து விவாதித்தேன். "இந்த சமாதானக் காலம் என்று சொல்லக்கூடிய இந்தக் காலம் சிங்கள இனவாத அரசையும், புலிகளையும் மேலும் புரிந்து கொள்வதற்கு உதவியிருக்கிறது என்று சொல்லலாம். சிங்களர்கள் போடும் கபட நாடகத்தை மக்கள் தெளிவாக புரிந்து வைத்துள்ளார்கள். அதனால்தான் அவர்கள் ஒரேயடியாக சண்டையிட்டு இறுதித்தீர்வை எட்டவேண்டும் என்று கருதுகின்றார்கள்" என்றார்கள்.

இந்தப் போர் நிறுத்த உடன்பாடு சிங்கள பேரினவாதத்திற்கும், தமிழ்த் தேசிய விடுதலை எழுச்சிக்கும் இடையேயான பெருமுரண் பாட்டில் எத்தகையத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்று மற்றொரு நண்பரிடம் கேட்டேன்.

"இந்த போர்நிறுத்த உடன்பாட்டின் அடிப்படையாகத் திகழ்வது படைவலுச் சமநிலை. சிங்கள தமிழ் தேசங்களிற்கு இடையே நிலவுகின்ற படைவலுச் சமநிலையை ஏற்று, கட்டுப் பாட்டுப் பகுதிகளை வரைவு செய்து, இரு தேசத்தின் தலைவர்களும் இந்தப் போர்நிறுத்த உடன்பாட்டில் கைச்சாத்திட்டனர். இந்த உடன்பாடு தமிழ் மக்களின் இயல்பு வாழ்வு மீள உருவாகுவதற்கான அடிப்படைகளை ஏற்றுக் கொண்டது. படைகள், மக்கள் குடியிருப்பு களிலிருந்து, வெளியேறுவதற்கான அட்டவணைகள், தமிழ்க் கூலிப்படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கான அட்டவணை எனப் பல கட்டங்களை வகுத்து தயாரிக்கப்பட்டது அனைத்துல கினதும் ஆதரவைப் பெற்றதாகவும் விளங்கியது.

இந்த வலுவான உடன்பாட்டின் அடிப்படையில் 6 சுற்றுப் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன. இரு உதவி வழங்கும் மாநாடுகள் கூட்டப்பட்டன. சில சிவில் நிர்வாக, இராணுவ கூட்டு முயற்சிகள் பரிசீலிக்கப்பட்டன. புலிகளினால் இடைக்கால தன்னாட்சி அதிகாரத்திற்கான வரைவு சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் இறுதியில் 2004ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் தமிழ், சிங்கள தேசங்களுக்கு இடையேயான உறவு சிக்கலுற்று முரண்பாடுகள் மலையென எழுந்து நிற்பது வெளிப்படை யானதாகியது. சுனாமி ஏற்படுத்திய பேரழிவு இந்த மிக முரண் பாடான நிலவரத்தில் சற்று பதற்றத் தணிப்பை மேற்கொள்ளும் என நோர்வேயாலும், அனைத்துலக தரப்பினாலும் எதிர்பார்க்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டது. இரு தரப்பினரும் இணைந்து ஒரு பொதுவான கட்டமைப்பின் கீழ் செயற்படுவதற்கான வழிமுறைகளை ஒரு சிக்கல் தவிர்ப்புக்கான வியூகமாக முன்வைத்து நோர்வேமற்றும் சர்வதேச தரப்புகள் மிக முனைப்பான முயற்சிகளை முன னெடுத்தன. எனினும் சிறீலங்காவின் தலைமைப் பொறுப்பில் உள்ள உறைந்துபோன இனவாத நோக்குக் கொண்ட சக்திகளின் விட்டுக் கொடுப்பற்ற போக்கு நிலைமையை மீள பதற்றத்திற்குள்ளாக்கியது.

இந்தப் புறச் சூழலின் ஊடாக ஆழநோக்கின் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ், சிங்கள உறவு எத்தகைய தாக்கத்திற் குள்ளாகியது என்பதை கணித்துக் கொள்ளலாம்.

அடிப்படையில், புலிகளின் பெரும் சமர்க்கள வெற்றிகளின் பின்னரே சிங்கள இனவாத அமைப்பை போர்நிறுத்தம் எனும் உடன்பாட்டிற்குள் சர்வதேச சமூகம் கட்டிப்போட்டது. அந்தப் போர் நிறுத்த உடன்பாட்டை சிங்களத் தரப்பில் ஏற்றுக் கொண்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கரமசிங்க, இதனை தமிழர்களின் விடுதலைப் போர் கொண்டுள்ள வீச்சைக் குறைத்து சிங்களத்திற்கு சார்பான சர்வதேச பொறிமுறை ஒன்றினுள் புலிகளை வீழ்த்தி ஒரு குறிப்பிட்ட காலத்தின் பின்னர் சிங்கள மேலாதிக்க நலன்களைப் பேணும் சிறீலங்காவினுள் தமிழர்களை நிரந்தரமாக கட்டிப்போடும் நோக்கைக் கொண்டிருந்தார். அவரின் இந்த வியூகத்தின் பின்னணியில் அனைத்துலக வல்லாதிக்கங்கள் தத்தமது நலன்கள் அடிப்படையில் நிலைகொள்ள முயன்றன. மறுபுறம், சந்திரிகா தலைமையிலான சிங்களப் பேரினவாத தரப்பு இதே அணுகு முறையினுள் புலிகளை முடக்கி வைத்துக் கொண்டு கடும் போக்கான கையாளுகைகள் மூலம் புலிகளை ஓரங்கட்டி, ஒழித்துக் கட்டலாம் என நம்பியது. எனினும் இந்த சக்திகளின் நுட்பமான வியூகம் சிங்கள அமைப்பினுள் நிலவும் கடுமையான முரண்பாடுகள் மற்றும் பலவீனம், விரிசல் என்பனவற்றால் முழுமையான இலக்கைச் சென்றடையும் வரையில் காத்திருக்கும் பக்குவத்தைக் கொடுக்கவில்லை. புதிய சிங்கள கடும் தேசியவாத (இனவாத) சக்தியான ஜேவிபி இந்த இணக்க முயற்சிகளை தனது அரசியல் செல்வாக்கை விரிவாக்குவதற்கான சந்தர்ப்பமாகப் பாவித்தது. சிங்கள உறுமய, பிக்குகள் அமைப்பு என்பன போன்ற சிறுசிறு இனவாத அமைப்புக்கள் தோற்றம் பெற்று, இந்தப் போர் நிறுத்தக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் இலங்கைத் தீவின் இனச் சிக்கல் தீர்வுக்கான நிகழ்வுகளை மைய இயக்கத்தை நோக்கி நகர்ந்தன.

சிங்கள தரப்பில் மிகமிகச் சிறிதளவான சனநாயக முற்போக்கு சக்திகளே போர் நிறுத்த உடன்பாட்டினை உண்மையான இணக்கத் தீர்வு முயற்சியாக ஏற்றுக் கொண்டன.

இதுவே உண்மையில் போர் நிறுத்தம் சிங்கள அமைப்பில் ஏற்படுத்திய தாக்கமாக வெளிப்படுத்துகின்றது. இதுவே போர் நிறுத்த உடன்பாட்டின் நோக்கிற்கு ஏற்பட்ட பெரும் தோல்வியாகும்.

சிங்கள அமைப்பு இதனை உண்மையான தீர்வுக்கான வாய்ப்பாக பாவிக்க முற்படவில்லை என்கின்ற கேள்வி மிகத் தீவிரமான அரசியல், சமூக, பொருளாதார, இராணுவப் பரிமாணங்கள் ஊடாக, வாசிக்கப்பட வேண்டியது.

சுருக்கமாகச் சொன்னால், தமிழ் மக்களிற்கு எதிரானப் போர் சிங்கள தேசத்தின் இயல்பை உடைத்து, முறித்து மிக பலவீன மானதாக உருவாக்கி வைத்துள்ளது. அவர்களின் இன்றைய அரசியல், சமூக, பொருளாதாரப் பார்வைகள் இந்த இனவாதப் போரின் தளத்திலிருந்து எழுந்தனவாகவே உலாவி வருகின்றன. அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் தேசிய சுதந்திரம், சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி அதிகாரங்கள் என்பனவற்றை எல்லாம் தங்களின் சொத்து சுகங்களை சூறையிடும் விடயங்களாகவே புரிந்து வைத்துள்ளனர். இராணுவமே இந்த பலவீனமான அமைப்பை தூக்கிப் பிடித்து வைத்துள்ளது. அல்லது இந்த அமைப்பின் பிரதான வலுவாக திகழ்கின்றது. 1999 முதல் 2001 வரைப் புலிகள் ஏற்படுத்திய தொடர்ப் போர்க்களத் தோல்விகள் இந்த பிரதான ஆதாரத் தளமான இராணுவத்தை பாதித்தபோது செயலிழந்த நிலையில் சிங்கள தேசம் போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டது. போர் நிறுத்தம் வழங்கிய கால அவகாசம் இந்த இராணுவ ஆதாரத்தை வலுப்பெற வைப்பதற்கான முழு முயற்சிகளும் முடுக்கிவிடப்பட்டது. சில சர்வதேச, பிராந்திய சக்திகளின் நலன்சார் அரசியல், இராசதந்திர, இராணுவ நடவடிக்கைகள் இந்த இராணுவ வலுப்படுத்தலுக்கு உதவின.

இன்று சிங்கள தேசம் தன் இராணுவம் வலுப்பெற்று விட்டதாக ஊகிக்கத் தொடங்குகையில் போர் நிறுத்த உடன் பாட்டினை தமது இறைமைக்கான அச்சுறுத்தலாகவும், புலிகளுக்கான வாய்ப்பாகவும் விவரிக்கத் தொடங்கியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம் நெருக்கடியான பொருளாதார, சமூக மற்றும் பண்பாட்டுச் சூழலில் சிங்கள தேசத்தினால் சாதாரண சனநாயகப் பண்பு களுடனும், பிற தேசிய இனங்கள் பற்றிய புரிதலுடனும் செயற்பட முடியாது என்பது விஞ்ஞான பூர்வமான உண்மையாகும். இதுவே பொதுவாக ஒடுக்குமுறை செய்யும் தேசங்களின் இயல்பான சூழலுமாகும்.

இன்றைய சிங்கள இனவாத அமைப்பு முன்னிலும் மிக ஆழமாக இனவாத அரசியல் மயப்பட்டுள்ளது. சுதந்திரக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் கைக்கொண்ட மிக நாசுக்கான தேசிய இனவாத அரசியலை இன்றைய ஜேவிபி மற்றும் சிங்கள உறுமய போன்ற குழுக்களும், இனவாத சிங்கள ஊடகங்களும் சமூகத்தின் அடிமட்டம் வரை எடுத்துச் சென்று விசாலப்படுத்தி வருகின்றது.

இறுதியான ஆய்வில், சிங்கள இனவாதமானது தமிழர்களின் நீதியான சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை ஏற்றுக் கொள்வதற்கான நிலைக்கு எதிரான திசையிலேயே பயணிக்கின்றது.

தமிழ்த் தேசிய இனமானது இந்தப்போர் நிறுத்த இடைவெளி யூடாக சற்று மனிதாபிமான உதவிகளைப் பெற்றும், சர்வதேச உறவாடல்களுக்கான வாய்ப்புக்களைப் பெற்றும் தன் கோரிக்கை களை வலுப்படுத்தி வருகின்றது. இங்கு தமிழர்களிடம் விட்டுக் கொடுப்பதற்கும், சமரசம் செய்வதற்கும் எதுவும் கிடையாது. எனவே, தமிழர்கள் தமது நிலையில் நின்றவாறு சிங்கள இனவாதம் தனிவு பெற்று அல்லது ஞானம் பெற்று தமது அரசியல் உரிமைகளை அங்கீகரிப்பதற்கான வாய்ப்புக்களை இந்தப் போர் நிறுத்தம் ஊடாக வழங்கினார்கள். மறுபுறம், இந்த வாய்ப்புகள் நிராகரிக்கப்பட்டு மீளவொரு போர் உருவாகுமாயின் அதற்கு முகம் கொடுக்கும் துணிவான படைக்கட்டுமானப் பணிகளையும் செய்து வருகின்றனர்.

இந்த இணக்க முயற்சிகளை முன்னின்று முன்னெடுக்கும் தரப்புக்கான நோர்வே, ஐரோப்பிய சமூகம் மற்றும் அமெரிக்கா போன்றன சிங்கள ஆளும் வர்க்கம் மீதான பொருளாதார அழுத்தம் என்ற தடி, இராணுவ உதவிகள் என்ற பெயரிலான கயிறு என்பன ஊடாகவும், சிறியளவிலான அரசியல் அழுத்தம் ஊடாகவும் சிங்கள அமைப்பைப் பீடித்துள்ள இனவாதப் புற்று நோயை குணப்படுத்த முடியும் என நம்பியிருந்தன. மறுபுறம், தமிழ் மக்களின் விடுதலை எழுச்சியை தணித்து, தவிர்த்து அவர்களின் தேசிய இன அடையாளங்களை நடைமுறையில் சிறுபான்மை வரைமுறைக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு சென்று சிங்கள அமைப்புடனான இடைவெளியைக் குறைக்கும் முயற்சியினையும் நம்பிச் செயற்பட்டன. இவ்வுத்தி காரணமாகவே கடந்த 3ஆண்டுகால இணக்க முயற்சிகளின் போது அரசியல், இராஜதந்திர, பொருளாதார விடயங்களில் தமிழர் தரப்பிற்கான உண்மையான சம வாய்ப்பையும், அந்தஸ்தையும் தரமறுத்தன. இந்த சமிக்கையை சிங்கள இனவாத சக்திகள் சரியாகவே புரிந்து கொண்டன.

சர்வதேச சக்திகளின் இந்தத் தவறான புரிதலும், செயற் பாடுகளும் போர் நிறுத்த உடன்பாடு இன்று அனுபவிக்கும் பின்னடைவுகளுக்கு காரணங்களாகிவிட்டன.

முடிவாக, இந்த போர் நிறுத்தம் நிலவிய மூன்று ஆண்டுகாலப் பகுதியானது சிங்கள- தமிழர் முரண்பாடுகள் பற்றிய விவாதங்களில் சிங்கள இனவாத சக்திகளையும் மையத்துக்கு இழுத்து வந்துள்ளது" என்று மிகவும் விரிவாக எடுத்துக் கூறினார்.

நானும் பல்வேறு செய்திகளை இதனூடாக தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பாக இருந்தது.

ஜோசப் பரராஜசிங்கம் - இலங்கையின் பாராளுமன்ற உறுப்பினர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். நீண்டகால அரசியல் அனுபவமும், பாராளுமன்ற அனுபவமும் நிறைந்தவர். மனித உரிமைகளில் மிகவும் அக்கறை கொண்டவர். வடக்கு, கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் நிறுவன உறுப்பினர்.

நான் தங்கியிருந்த அதே விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தார். அவருடன் அவர் மனைவியும் வந்திருந்தார். அம்மண்ணில் நடைபெற்று வரும் என்னுடைய ஓவியக்காட்சி பற்றி ஊடகங்கள் வழியாக அறிந்து மகிழ்ந்து "எங்களுக்குத்தான் அந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை" என்று என்னிடம் வருந்தினார். "நீங்கள் வருந்தத் தேவையில்லை நாளை இக்காட்சி மீண்டும் கிளிநொச்சியில் மக்களின் விருப்பத்திற்கிணங்க நடைபெற உள்ளது. நீங்கள் காணலாம்" என்றேன். "நாங்கள் நாளைக் காலை ஊருக்கு புறப்பட வேண்டியிருக்கிறது. இருந்தாலும் காலையில் உங்கள் ஓவியங்களை பார்த்த பிறகு செல்கிறோம்" என்றார்கள். கணவன் மனைவி இருவருக்கும் இருக்கும் ஆர்வத்தையும் உணர்ந்து கொண்டேன். என்னோடு மிகவும் நெருக்கமாகவும், அன்போடும் பழகினார்கள். தாய் தந்தையைப் போல என்மீது அன்பைச் செலுத்தினார்கள். ஓரிரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்கள் பழகினாலும், நீண்ட நாட்கள் பழகியது போன்ற உணர்வு எனக்கும் இருந்தது. அவர்களுக்கும் இருப்பதாகச் சொன்னார்கள்.

கணவன் மனைவி இருவரும் எங்கு சென்றாலும் ஒன்றாகவே செல்கின்றார்கள். ஒருவர் மீது ஒருவர் வார்த்தைகளில் விவரிக்க முடியாத- ஒரு அன்பை வைத்திருந்தார்கள்.

அய்யா ஜோசப் எங்கு சென்றாலும் அவர் நிழலாகவே அம்மாவும் பின் தொடர்கிறார். மனம் விட்டு இருவரும் என்னிடம் உரையாடினார்கள். தற்போது இருக்கும் சூழல், அரசியல், தமிழக நிலவரம், என்று பல்வேறு செய்திகள் குறித்து உரையாடினோம். அப்போதுதான் அவர்கள் வெளிநாட்டுப் பயணத்தை முடித்துத் திரும்பியிருந்தார்கள். அங்கு அந்நாட்டு அரசியல் தலைவர்களைச் சந்தித்து ஈழநிலவரம் குறித்துப் பேசியது, அந்நாடுகளில் வாழ்கின்ற தமிழர்களின் நிலை குறித்து என்று பல்வேறு செய்திகளை என்னோடு பகிர்ந்துகொண்டார்.

அவருக்கு அச்சுறுத்தல் இருப்பது குறித்தும், எச்சரிக்கையாக இருக்க அறிவுறுத்தப்பட்டிருப்பது குறித்தும் பேச்சு திரும்பியது.

"எந்த நேரம் என்றில்லாமல் தொலைபேசியில் அழைத்து மிரட்டுகிறார்கள். நாகரீகமற்ற முறையிலும் பேசுகிறார்கள். அதனால் இவரை நான் தொலைபேசியையே எடுக்க விடுவதில்லை. நான்தான் எடுப்பேன். அவர்கள் பேசுவதை கேட்டிருந்து விட்டு, பதில் எதுவும் பேசாமல் வைத்துவிடுவேன். எந்த நேரமும் எதுவும் நடக்கலாம்" என்றும் அம்மா சொன்னார்.

"அப்படி கொன்றால் கொல்லட்டும் மக்களுக்காகத் தானே சாகிறோம். என்னைக் கொல்வதால் அவர்களுக்கு ஒன்றும் கிடைத்துவிடப்போவதில்லை" என்றார் அய்யா ஜோசப்.

"என் மீது குண்டு துளைத்துத்தான் இவர் மீது குண்டு பாயும், இவரை எங்கும் தனியாக விட்டதில்லை. இனியும் விடப் போவதில்லை" என்று உணர்ச்சிவசப்பட்டார் அம்மா. கேட்டுக் கொண்டிருந்த நான் "அப்படியொன்றும் நடக்காதம்மா" என்றேன். "இல்லைதம்பி. அவர்கள் மிகவும் மோசமானவர்கள்" என்றார் அம்மா.

அன்று அம்மா சொன்னது போல அவர்கள் மோசமானவர்கள் மட்டுமல்ல கொடூரமானவர்கள். பிறகு ஆறு மாதம் கழித்து கிறித்துமஸ் அன்று மட்டக்களப்பு தேவாலயத்தில் பிரார்த்தனை செய்து கொண்டிருந்த அய்யா ஜோசப் பரராஜசிங்கம் அவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுப் படுகொலை செய்திருக்கிறார்கள். எப்போதும் போல் அப்போதும் அவர் அருகிலிருந்த அம்மாவும் சுடப்பட்டிருக்கிறார். படுகாயமடைந்திருக்கிறார்..

செய்திகேட்டு துடித்துப்போனேன். அவர்கள் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. உலகம் முழுவதும் ஒலித்த அவர் குரல் அடங்கி இன்று "மா மனிதர்" ஆகிவிட்டார்.

அன்று இரவு அந்த மாமனிதரோடு தான் இரவு உணவு சாப்பிட்டேன். சாப்பிடும்போதும் நிறையப் பேசினோம். இருவரும் என் குடும்பம் பற்றி, குழந்தைகள் பற்றி, மனைவிபற்றி விசாரித்தார்கள். காலையில் ஓவியக்காட்சியில் சந்திப்பதாக கூறி விடை கொடுத்துவிட்டு அறைக்குத் திரும்பினேன். நல்ல இருள் சூழ்ந்திருந்தது. மிகவும் அமைதியாக எவ்வித சத்தமும் இன்றி கோடைக்காற்று உடலுக்கு மிகவும் இதமாக வீசிக்கொண்டிருந்தது. இந்தக் காற்றுக்காகவே மரத்தடிக் கொட்டிலில் அமர்ந்து விடலாம் போலிருந்தது. ஆனால் தொடர்ந்து பயணம் செய்ததால் ஏற்பட்ட களைப்பும், தொடர்ந்து அன்று முழுவதும் உரையாடிக் கொண்டிருந்ததால் ஏற்பட்டக் களைப்பும் உடனே படுக்கையில் படுக்க வேண்டும் என்று உணர்வைத் தூண்டியது. ■

ஜோசப் பரராஜசிங்கம் அவர்கள் மனைவியுடன் கண்காசியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைக்கு விலையாக

அறையில் குளிரூட்டியை இயக்கிவிட்டு, படுக்கையில் சாய்ந்தேன். அதில் கிடந்த 'வில்லுக்குளத்துப் பறவைகள்' நூலை புரட்டி, ஒரு சம்பவத்தைப் படிக்கத் தொடங்கினேன்.

ஊர் ஊராக இருக்காதோ என்ற பயம், சைக்கிளை வேகம் வேகம் எனச் செலுத்த எதிர்ப்பட்ட புன்னகை மனிதர்களின் விசாரிப்புகளால் வெல்லப்பட்டது. பஸ்லிருந்து இறங்கி இரவல் சைக்கிளில் வீடு போனதும் எதிர்கொண்ட அம்மா ஆச்சரியத்தின் விளிம்பில் ஆழ்ந்தார்.

"எப்படியும் நீ வருவ.. எத்தனை பேர் எத்தனை கதைகளைச் சொன்னாலும் கண்கள் கலங்க அம்மா.

சற்றே நிலைகலங்க, சரி.. சரி.. எனக்கு தேத்தண்ணி எங்கே?" என்ற அதிகாரக் கட்டளையாலேயே உணர்வுகளை வெல்ல முடிந்தது. பட்டுக்குஞ்சம் போல மினுமினுப்பும், பளபளப்பும் கொண்டிருந்த சின்னத்தம்பிக்கு, வானத்தில் செல்லுகின்ற ஏதோவோர் விமானம் அண்ணனைச் சுமந்து வரும் என்ற நம்பிக்கை உறுதியான சந்தோஷம். தூரநின்றான். பின் நெருங்கி, இவ்வளவு நாளும் வீட்டாரின் உரையாடல்களில் ஒரு குழப்பமான உருவாய் இருந்த அண்ணனை நோக்கிப் பின் கட்டிக் கொண்டான்.

எனக்கு அழலாம் போலிருந்தது. இத்தனை நெகிழ்வை இவ்வரிய சொத்தை எங்களிலொருவன் என்ற ரீதியில் மீண்டும் ஆதரவாக உயரும் கரங்களை, அள்ளியணைப்பதையே பாரம் பரியமாய்க் கொண்டிருக்கும் இவர்களை எப்படி நான்கு வருடங்கள் சந்திக்காதிருக்க என்னால் முடிந்தது?

இது என் பகைவனுக்குக் கூட நேரக்கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா இந்த நான்கு வருடத்தினுள்ளே தனக்கு நேர்ந்தவற்றை மேற்கண்ட முத்தாய்ப்புடன் ஆரம்பித்தார். "நீ காட்டின வழியிலை தம்பியவை இரண்டும் புலியெண்டு போயிட்டுது. அவன் வள்ளல் அப்பள வியாபாரி. உனக்கடுத்த சனியன் சென்ட்ரியாம். நான் எவ்வளவு அழுதிருப்பன்... எவ்வளவு இந்தியன் ஆமி ஷெல்லடி தொடங்கிவிட்டான். அவன் என்ன சிலோன் ஆமி மாதிரியே... மழை பொழிஞ்ச மாதிரி.. என்ரை ஐயோ! குமரன் கடைசித் தம்பியையும் கூட்டிக் கொண்டு மல்லாகத்துக்கு கொண்டு போட்டான். கொப்பரும் அங்கைதானே.. எனக்கு என்ன செய்யிற தெண்டே தெரியல்லை. சிலோன் ஆமி வீடுகளைத் தரைமட்ட மாக்கி அழிவு பண்ணினாலும்... அப்பா அவங்கள் பரவாயில்லை ஷெல்பட்டு என்னோடை படிச்ச செல்லம்மாவின் கடைசிப் பிள்ளை ஏழு வயது தான்ரா ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோக ஒரு வழியுமில்லை... என்ன மந்திரமோ மாயமோ மூண்டு இடத்திலை கொஞ்சம் கொஞ்சமா வெடிச்சது. இண்டைக்கும் தாய் செல்லத்துக்கு விசர் மாதிரிதான். பெத்த பிள்ளை இரத்தம் பெருக்கிச் சாகிறதை... ஐயோ... நல்ல காலம் என்னை அதுக்குள்ளை தாசன் வந்து கூட்டிக்கொண்டு போட்டான்"

எனக்குப் பெரிய நிம்மதி உண்டானது. ஐந்து ஆண் பிள்ளை களிருந்தும் துணைக்கு யாருமில்லாதது அம்மா தவித்த நேரத்தில அந்த அவலமும் நேர்ந்திருப்பின்... அம்மாவுக்காக நீண்ட வராந்தா வெளிகளில், தலை நிலம் நோக்க நடந்து, வார்ட் எண்களை வெறித்து, கட்டில்களை ஆராய்ந்து நெருங்கினாலும் அம்மா...எனது அம்மாவின் புன்னகைக்கு என்ன நிச்சயம்... கண்ணிலோ மழலை யொன்று குருதி சொட்ட கொஞ்சம் கொஞ்சமாய்ச் செயலிழப்பது நிறைந்து பயமுறுத்தியது.

தாசண்ணையை இப்ப எங்கை வைச்சிருக்கிறாங்கள்? எனக்கு அண்ணாரைப் பார்க்க வேண்டும் போலிருந்தது.

நீங்கள் என் அண்ணரைப் பார்த்திருப்பார்கள் என்னைப் போலவேதான் உருவன். அசல் தோட்டக்காரன் என்பது முகத்தில், உடம்பில், செயல்களில் பொறிக்கப்பட்டிருக்கும். என்னைவிட இரண்டு வயது பெரியவன். அப்பாவின் சொந்தத் தமையனின் கடைசி மகன். பள்ளிக் கூடம் சென்று வருவதைவிட சந்தைக்குப் போய்வருவது இலாபகரமானது என்பது அவனது தத்துவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிழாக் காலங்களில் அவனது சேமிப்பு வெளிவரும், நான் ஒரு காசாளர் போலப் பின்வருவேன். ஒன்றுக்கு நாலு எனும் ஒருவகைச் சூதாட்டம் ஆடி அண்ணன், பெரும்பாலும் கைக்காசில் கால் பங்கை இழப்பார், வெற்றியோ தோல்வியோ கையிலிருக்கும் மிகுதிப் பணத்தை அண்ணர் செலவழிக்கையில் ஊரிலுள்ள ஊதாரிகளெல்லாம் தோல்வியை ஏற்றுக் கொள்வர்.

அப்படியான என் அண்ணரைச் சந்திக்க நான் கியூவரிசையில் காத்திருந்தேன். கூட எனது பாதுகாப்பிற்காக நடுத்தர வயதைத் தாண்டிவிட்ட என் தந்தையார். எழுத்து மூலமான விண்ணப்பம் தாண்டி எனது முகம் மீது கொண்ட காதலால் அமைதிப்படை அதிகாரி நேரடி விசாரணையைத் தொடங்கினான். அப்பாவின் அரச சேவகமும் எனது சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டையும் காப்பாற்றியது. அண்ணரைப் பார்ப்பதற்குள் ஆயிரம் தடைகள். ஒரு கொட்டகையில் இறுதியில் உட்காரவைக்கப்பட்டு 'ஐந்து நிமிடங்கள்தான்' என்பதை கொச்சைத் தமிழில் நானும் தமிழறிவேன் என்று வெற்றிப் புன்னகை இழைய ஒரு 'அமைதி காப்பவர்' அறிவுறுத்தினார்.

"தம்பியை எப்படியாவது வெளியில கொண்டாந்திடு"

தாசனின் அண்ணர் பிரான்சிலிருந்து ரெலிபோனில் அடிக்கடி உச்சரித்த வாசகங்கள் அண்ணரைப் பார்க்கப்பார்க்க அந்நினைவே முட்டி மோதியது. சம்பாஷணையில் நான் சலித்துப்போனேன். தனது அடையாள அட்டையைக் கூட அண்ணர் தொலைத்துவிட்டார். அதுபற்றிய பெரிய கவலையில்லாது "வெளிநாட்டுக்குப் போன என்னாலை ஏலாது. அடுத்துமுறை என்ரை அம்மாவோட வா, முடிஞ்சா வடைசுட்டு எடுத்துவரச் சொல்லு. போன முறையைவிடக் கொஞ்சம் அதிகமாய் அப்பத்தான் எல்லாருக்கும் கொடுத்துச் சாப்பிடலாம்.

சற்று இடைவெளிக்குப் பின், நீ முயற்சித்துப் பார்.. வெளியிலை வந்தும்... இந்த அடி வேண்டின பிறகு... வெளிநாட்டுக்கு..."

திரும்பிக் கொட்டகை நோக்கி நடந்தான். கைவிடப்பட்ட முன்னாள் அரச மருத்துவமனைக் கட்டடமே இவர்களின் சிறை முகாமாக மாறியிருந்தது. சீமெந்துத் தொழிற்சாலையின் புகையாலும், கடற்கரையோரமாக செயற்கைத் துறைமுகம் நிர்மாணிக்கப் படுவதாலும் புகை சூழ்ந்த செம்மண் முகங்கிளறும் வனமாகி, 'அசுத்தப்பகுதி' என்ற கிரீடத்தைச் சுற்றுவட்டாரம் சூடியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கிழமை ஆனது. உறவினர், நண்பர்களென்று உறவுகளை மீண்டும் புனரமைக்கும் காலம். அண்ணருடைய விடுதலையும், மீண்டும் இந்தியா திரும்புகையில் அவரையும் உடனழைத்துச் செல்ல வேண்டுமென்பதுவும் ஓயாத அலைச்சலுக்குத் தூண்டுகோலாகின. ஒரு வழியாக ஆங்கிலத்தில் தட்டெழுத்துச் செய்யப்பட்ட அண்ணரின் நிலவரம், அவரில்லாது குடும்ப ஜீவனப்பாட்டை உறுதி செய்யும் விவசாயம் கைவிடப்பட்டிருப்பது, தாயார் நோய் வாய்ப்பட்டிருப்பது, அவரை விடுதலை செய்யும் பட்சத்தில் எமது குடும்பமே எத்தனை கிலோகிராம் நன்றிக்கடன் உடையவராய் மாறுகின்றது போன்ற விபரங்களை உள்ளடக்கி, கிழே பிரசைகள் ஒப்பமிட்டிருந்தார்கள். கூனிக்குறுகி விடுதலை வேண்டும் இக் கடிதத்தில் ஒப்பமிட்ட இன்னொருவரான என் பெரிய தந்தையார் கூடவர இராணுவ மேலதிகாரியுடனான சந்திப்பு நிகழ்ந்தது. முகத்தில் மாபெரிய கடமைக் கனல் சூழ்ந்திருக்க தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருந்த அவர் சற்று நேரத்தின் பின்னால் எம்மை உட்காரவைத்துப் பேச ஆரம்பித்தார். அவர் ஒரு வட இந்தியராக இருக்கலாமென்பதைத் தோற்றம் உறுதி செய்தது. கூடவே இருந்த மலபார் ரெஜிமெண்ட் அதிகாரி, அவரின் பேச்சின் சாராம்சத்தைத் தமிழிலும் நீட்டி முழங்கினார். இவ்வாறான வெத்து வேட்டுக்கள் நிறையப் பெற்ற அவரின் பேச்சின் சாராம்சமென்னவோ கொஞ்சம்தான். "புலிகளின் தொல்லை மிகவும் மோசமாயுள்ளது. ஆனாலும் இவரை விடுதலை செய்துவிடலாம். முதற்படியாக ஏதாவதொரு ஆயுதத்தை ஒப்படைக்க வேண்டும். விடுதலைக்கு விலையாக தானாகவே தேசப் பிரஷ்டத்தை கைதி மேற்கொள்ள வேண்டும்."

வெளியில் வந்தபோது பெரியப்பா நிறையவே சோர்ந்து போயிருந்தார். கொஞ்சம் சதைப்பற்றான தொந்தி விழுந்த உடலமைப்பு, தலையில் வழுக்கை விழுந்திருப்பினும் வெண் முடிகள் எண்ணக்கூடக் கிடைக்காது. இவரது இளமையின் ரகசியம் 'தேசிய பானம்' என வீட்டார் சொல்லிக் கொள்வர். ஓய்வுபெற்ற விமானப்படை சிற்றூழியர் அவர். விமானப்படை தந்த மிடுக்கில் அந்நாளில் செய்த சண்டித்தனத்தின் சான்றாக, அரைக்காற்சட்டைப் போலீசாரிடமிருந்து பிடுங்கியெடுத்த சிறு குண்டாந்தடி அவரது வாசஸ்தலத்தின் அலங்காரச் சின்னங்களில் முதன்மையானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வகைப்பட்ட எனது பெரிய தந்தையார் இன்றைய நாளில் புயலிலடிபட்ட பஞ்சாகியிருந்தார். இவரது ஈடாட்டத்தின் மையமானது, வயோதிகத்தைவிடவும் இயக்கம் சார் சண்டியர் முன் இவர்களது வீரம் தோற்றோடியதே ஆகும். இவரது உலகறிவு இவரை ஒதுங்குவதே மரியாதையெனப் போதித்தது போலும்! முன்பெல்லாம் இலங்கையின் நாடாளுமன்ற நாற்காலிகளிலும் புரட்சிப் பூக்கள், பூத்துக் குலுங்குமெனப் பறையறிவித்த இடதோ வலதோ, ஏதோவொரு கொம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர ஆதரவாளரா யிருந்தவர். முதலில் ஈழப்போராட்டம் என வருகையில், பழைய பாரம்பரியம் காக்க செஞ்சூரியனுக்காய் வக்காலத்து வாங்கி அலுத்ததாலோ அல்லது புத்திரபாசம் உச்சம் பெற்றதாலோ செயல்வீரர்களை வாரியணைத்துக்கொண்டார்.

வீட்டு வாசலை நாம் நெருங்கிய போது, எமதூர்ப் பிரமுகர்களி லொருவரான மகாதேவன் மாஸ்ரர் என்னாச்சு? என்றபடி வரவேற்க சால்வைத் துண்டால் முகத்தைத் துடைத்தபடி பெரியப்பர் சலிப்புடன் செருமிக் கொண்டார்.

"அப்பவே இந்த விடுபேயன்களுக்குச் சொன்னனான். இந்தியாவை இவை ஏமாத்தலாமெண்டு நினைப்பது... தந்திரோ பாயமும் மண்ணாங்கட்டியும்.. அவன் ஆயுதம் கொடுத்தால் வாங்கின உங்கடை மதி எங்கே? புலிகளாவது இடைக்கிடை இந்தியா பற்றி ஏதோ சொன்னாங்கள்.. ஹூம்..."

நான் தலைகுனிந்து நிலம் நோக்கத் தொடங்கினேன். மாஸ்ரர் ஒரு அந்த நாளைய இந்தியப் பட்டதாரியாகையால் இந்தியாவின் பெருமை அவரின் பெருமையென ஆகிவெகுகாலம். மேலும் இன்றைய சூழலில் அவரது வாதத்தின் நியாயம்...

தலை நிமிர்ந்ததோர் வாழ்வு சமைத்திட
நிமிர்ந்த தலை மட்டும் கொண்டுலவினோர்
குனிந்திடல்... குனிந்திடல் மேலும்
குன்றுதல்... கடனே...

மகாதேவரானவர் சுருட்டிற்கு உயிர்கொடுக்க பெரியப்பா ஆரம்பித்தார். 'என்ரை குரங்குக்கு எத்தனை நாள் சொல்லியிருப்பன் ஓடடா இனிமேலாவது... எங்காவது தொலையெண்ணக் கேட்டானே... அம்மா! அண்டைக்கவங்கள் அடிச்ச அடி...'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக அண்ணர் கைதானது, அமைதிப்படையினரின் புலிவேட்டை இவை குறித்து ஒருவிவரணச் சித்திரத்தை உருவாக்கினார் பெரியப்பா. பெரும்பாலும் அவரது தொனி முடியுமோ.. முடியாதோ... சண்டையிடல் ஒன்றே தீர்வென்பதை உட்கிடையாக்கியது. ஆனால் மகாதேவருக்கோ அவரது அறிவு, மலையைச் சாய்க்க முயல்வதைப் போன்றதொரு செயலே இந்தியாவை எதிர்ப்பது என வக்காலத்து வாங்க வைத்தது. மற்றோரின் துரோகத்தையும் எள்ளி நகையாடிய பின் அரசியல் தீர்வுக்காய் அங்கலாய்த்தார். இன்னமும் கொஞ்சம் கூடுதல் உரிமைகள் வேண்டும், அதிகாரம் யாவும் அநியாயத்தை எதிர்த்து உயிர் தந்தவர்க்கே எனப் பிரலாபித்தார். பெரியப்பா, திலீபன் அணுஅணுவாய் உயிர்விட ஆக்கிரமிப்பாளர் அநுட்டித்த அலட்சியத்தை நினைவுகூர்ந்தார். எல்லோருமாக இரட்சிப் பாளரென வரவேற்ற பயல்கள், ஆரம்பத்தில் எல்லாம் இராணுவம் தான் என்ற உருவெடுத்து, இல்லையில்லை தாம் கொஞ்சம் மாபெரிய சாத்தான்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் மேற்கொண்ட நரவேட்டையின் வடுக்களை நினைத்துக் கோபமும் பதற்றமும் கொண்டு, இனியும் பேச்சுவார்த்தை.. விடும் மாஸ்ரர் உந்தக் கதையை என முற்றுப்புள்ளியிட்டார்.

இவ்வாறான இருவேறு கருத்துக்களின் ஆதிக்கம் எங்கு மிருந்தது. என் பழைய நண்பனும் பல்கலைக்கழக மாணவனுமான ரவியும் இதனை அடிக்கடி சொல்லிக் கொண்டான். அவனோடு பேசுகையில், எல்லாம் நிகழ்ந்து முடிந்தாலும் என்னதான் மாற்றம் நிகழ்ந்துவிட்டது? என்று சலித்துக் கொண்டதற்கு நிதானமாக அவன் சொன்னான். "எதிரியைப் பற்றி இப்போது சனங்கள் அறிய ஆவலோடுள்ளனர். வாசிப்பு என்பது வெறும் பொழுதுபோக்காக இப்போதில்லை" என்றான்.

உண்மைதான்! மிகக்குறுகிய காலங்களிலேயே அந்நியர் அதற்கும் மேலாக ஆக்கிரமிப்பாளன் எனத் தன்னைத்தானே எதிரி தோலுரித்துக் கொண்டான். நண்பனும் நானும் பனைமரங்கள் அணிவகுத்த அச்சாலை விளிம்பிலுள்ள கோவிலின் தேர்முட்டி மறைவிலிருந்து கீழிறங்கினோம். இன்னமும் ஏழு நாட்களில் பயணம் என்பதை நான் நினைவுகூர, அவன் தனது பல்கலைக்கழகம் திறக்கும் வரைக்கும் படிப்பதற்காக ஏதாவது புத்தகங்கள் வாங்கி யனுப்பிவிடு.. அது என்று திறக்குமோ? யார் யாரெல்லாம் அதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூடுவரோ? எனப் பண்ணிசைத்து தான் செல்லும் வழி குறித்து எச்சரித்து விடை தந்தான்.

வயல்வெளியில் காற்று ஊஞ்சலிட புல்லுக் கடகமும் கலப்பைகளும் தலையிலும் தோளிலுமாக மாடுகளை வழிநடத்தி வருபவர்கள் பாடல் இசைக்க, இன்னுமொரு மாலை எனதூரில் முடிவடையும் நேரம். வயல்வெளியைத் தாண்டுகையில் சிறு பெண்ணொருத்தி, ஆமிக்காரன் செக்கிங் என எச்சரித்தாள். எங்க? என நகர்ந்தபடி பதில் சொன்னாள். முன்பெல்லாம் இலங்கை இராணுவத்தை ஏமாற்ற நாம் நடமாடிய ஒழுங்கைகளினூடாக வீடு திரும்ப எத்தனித்தேன் அம்மா கண்ணுள் வந்தார்.

தம்பி, முன்னைமாதிரி ஒழுங்கைகளை நம்பாதை, கூர்க்காக்காரன் நாயோட நாயாய்ப் பத்தை வழிய படுத்துக் கிடக்கிறான்.

வருவது வரட்டுமென நேராகவே வந்து செக்போஸ்ட் தாண்டி பெரிய ரோட்டில ஏறியபோது கைதட்டல் அதட்டும் கூச்சல் கேட்டது. திரும்பி அழைத்தவரிடமே போனேன். அமைதிகாப்போர் வரிசைக் கிராமத்தை வலியுறுத்த, முகம் மறைக்கப்பட்ட தலையாட்டிகள் ஏற இறங்க எல்லோரையும் அளந்து பார்த்து, அதிருப்தியை வெளிப்படுத்தினர். ஒரு பெரியவர், வயல்வேலையை முடித்து வருபவர் போலும்! அடையாள அட்டை கேட்கப்பட்டது. அடையாள அட்டையை எடுத்துக் கொடுத்தார். அடுத்ததாக அவர் கேட்ட கேள்வி படையினரின் பெயரை 'அறியாமை காப்பவர்கள்' என மாற்றப் போதுமானது. வேறொன்றுமல்ல 12 எண்கள் கொண்ட அடையாள அட்டையின் இலக்கங்களைச் சொல்லுமாறு பணிக்கப் பட்டார். வேலைக் களைப்போடு திரும்பிய மனிதனுக்கு எப்படி இருக்கும்? சரமாரியாகத் திட்டல் மழை பொழிந்தார். அமைதியின் காவலருக்கோ ஆவேசம் வந்துவிட்டது. "Translate this"என்று ஒரு இளைஞனுக்கு கட்டளையிட்டார். அவ்விளைஞன் "I don't know English" என்றான். அப்போ நீ பேசியது...? அதுதான் ஆங்கிலம் படுகொச்சையான ஆங்கிலப் பதப்பிரயோகத்துடன், இளைஞனின் வயிற்றில் சப்பாத்துக் காலால் மிகக் கடுமையாக அமைதி நிலைநிறுத்தப்பட்டது. காந்தியின் சீடரின் அரசல்லவோ! முதியோர் வதை வேண்டாம் எனத் தீர்மானித்துள்ளனர் போலும்! நினைக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குச் சிரிப்பு வந்தது. இந்தக் கூத்தை தூர இருந்து அவதானித்த அமைதிப்படைத் தலைவர் நெருங்கி வந்து எல்லோர் முகத்தையும் ஆராயத் தொடங்கினார்.

எனது முறை வருமுன்னாலே அத்தர்மதேவன் சிலருக்கு விடுதலை வழங்கினார். சிலரை ஓரமாகச் சென்று உட்காரும்படி கட்டளையிட்டார். என்னை ஏற இறங்கக் கண்களால் அளவிட்டார். ஆங்கிலத்தில் நீ யொரு புலியைப் போல் உடையணிந்திருக்கிறாய் என முணுமுணுத்தார். உள்ளே வரும்படி கட்டளையிட்டுவிட்டு முன் நடக்க, பலியாடாகத் தொடர்ந்தேன். சக மண்ணின் மைந்தர்கள் அநுதாபமாக என்னை ஏறிடவும் நெஞ்சு முழுவதும் அச்சம் வியாபிக்க, கால்கள் ஏனோதானோவென அசைந்தன. நான் தயாராக வைத்திருந்த எனது தேசிய மற்றும் சென்னைக் கல்லூரியின் அடையாள அட்டைகளை நீட்டினேன். வாங்கி ஆராய்ந்தவர் தேசிய அட்டையைத் தூக்கிப் பிடித்து 'இது போலி' என உறுமினார். பின் இரண்டையுமே அருகில் நின்ற ஜீப்பொன்றின் போனட்டில் போட்டுவிட்டு சாவதானமாகத் தேநீரைச் சுவைக்க ஆரம்பித்தார்.

சிறிய இடைவெளியின் பின்னால் நானும் ஆங்கிலத்தில் 'நான் இந்தியாவில் தமிழ்நாட்டில் கல்வி பயிலுமொரு மாணவன்' எனக் கூறினேன்.

'என்ன படிக்கின்றாய்?' கேள்வி தெறித்தது.

'இளநிலை வர்த்தகப் பட்டப்படிப்பு'

'உனது பாடத்திட்டத்தைச் சொல்?'

நான் துணுக்குற 'நான் எனது வர்த்தக முதுநிலைப் பட்டப்படிப்பை பம்பாய்ப் பல்கலைக்கழகத்தில் முடித்தவன் ஆகையால் நீ சொல்' என்றார்.

சொல்லி நான் முடிக்க அவன் ஒரு சிறு இராஜநடை போட்டான். திரும்பி மீண்டும் நான் நீ படிப்பதனை ஏற்றுக் கொள்கிறேன். உனது பட்டப்படிக்கு முன்னால் புலியின் ஆயுதப் பயிற்சி பெற்றுக் கொண்டதனை ஏன் மறைக்கின்றாய்?

நான் திகைத்துப்போனேன். ஒருவாறாக நான் 10ஆவது வரை அருகிலுள்ள மகா வித்தியாலயத்தில் ஒப்பேற்றியதை பின் 1983 இறுதியிலேயே இந்தியா சென்று உயர்நிலைப்பள்ளிப் படிப்பை முடித்ததை அவனுக்கு விளக்கினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கின்றேன். உனது ஊரிலே புலி நடமாட்டம் எப்படி?

நான் துணுக்குற்று ஊருக்கு வந்து இரண்டு கிழமைகளே ஆனமையால் நானறியேன் ஏதும் பராபரமே எனத் தாள் பணிந்தேன்.

ஆகா! அவ்வாறாயின் நீ புலி

என்னை மீறி எனது கால் கைகள் படபடக்க ஆரம்பித்தன. படிப்பறிவும் சரளமான உளவறிவும் வாய்க்கப்பெற்ற இந்த அதிகாரி மறுபுறத்தில் ஒரு தரங்கெட்ட மூன்றாந்தர அணுகுமுறைகளையும் கையாளக்கூடிய இராணுவத்தினனே என்பதை உணர்ந்து கொண்டேன். மீண்டும் நீ புலியேதான்.. உனதூரிலே இன்னமும் புலிகளுண்டு.. நீ மனம் வைத்தால் மார்க்கமுண்டு

நான் பணிவாக இல்லை 'ஐயா நான் ஒரு இலங்கை அரச சேவகரின் பிள்ளை, கல்வியொன்றுதான் எனது நோக்கம்' என வலியுறுத்த அவன் தடாலெனச் சிநேகபூர்வமானான்.

'சரி என்னோடு வந்து ஒரு கம்பெனி கொடு...'

'இல்லை ஐயா, எனது குடும்பத்தினர் மத நம்பிக்கை மிகுந்தோர்'

'அவ்வாறாயின் நீ புலி... புலிதான் மதுபானம் அருந்தாது' என அமைதிப் படைத் தளபதி கத்தினார்.

இவ்வாறாக நாடகம் நீண்டது. இறுதியில் 'தொலைபயலே... இந்தியா செல்ல முன்வந்து உனது கல்லூரி அடையாள அட்டையைப் பெற்றுக்கொள், நான் கொஞ்சம் சென்னையைத் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டும்'

நான் வீடு திரும்புகையில் உடைகள் யாவும் வேர்வையில் நனைந்திருந்தன. வீட்டுக்குப்போய் அம்மாவிடம் மெல்ல விசயத்தைச் சொன்னேன்.

"நல்லகாலம் கடவுள் காப்பற்றியது. நாளைக்கே கொழும்புக்குப் போயிடு"

சொன்ன அம்மாவை முறைத்தேன். அம்மா குரல்கள் தளதளக்க "நாலுவருசத்துக்குப் பிறகு வந்து நீ அடிவாங்க.. நீ எந்த முகாமிலை யெண்டு நாங்கள் தேடியலைய..." அம்மா இப்போது அழவே தொடங்கிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கலாமெனச் சரிந்தேன், பட்டகாயமொன்றின் ரணம் கிளறப்பட மேலும் மேலும் யாரோ கிண்டுவதைப் போலத் தலை வலித்தது. சிறைக் கொட்டடியில் அண்ணார் சொன்னது நினைவில் உறுத்தியது. இந்த அடி வாங்கிய பின் இனியென்ன வெளிநாடு ஏதோவொரு திரைப்படத்தின் இறுதிக் காட்சியில் வருவதுபோல பச்சைநிற வண்டிகள் படையெடுத்து வீட்டைச் சூழ்ந்ததாகப் பிரமை தோன்றியது. அம்மாவின் நிம்மதிக்காகவேனும் நாளை கொழும்பு போவதே உசிதமென்று தோன்றியது. தொலைவில் சில வேட்டொலிகள் கேட்டது.

கிழக்குப் பக்கமாகத்தான் கேட்குது நாளைக்கு அந்த இடம் அவ்வளவுதான்.

எழுந்து யன்னல் பக்கம் போய் அம்மா பார்த்தார். அமைதி காக்கும் சிறு கும்பலொன்று ஒழுங்கையில் அலங்கமலங்க விழித்தபடி நடைபோட்டுக் கொண்டிருந்தது.

படித்துமுடித்தேன். மிகவும் வேதனையாக இருந்தது. இந்திய அமைதிப்படையின் அட்டூழியங்களை இதன் வழியாகவும் அறிந்து கொள்ள முடிந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுக் கூட்டம் பாலகுமாரன் உரை

**ம**றுநாள்

மீண்டும் கிளிநொச்சியில் காட்சி தொடங்கியது. அய்யா ஜோசப் பரராஜசிங்கம் அவர்களும், அவர் துணைவியாரும் வந்திருந்து காட்சியை பார்வையிட்டு கருத்துக்களைப் பதிவு செய்துவிட்டுச் சென்றார்கள். கிளிநொச்சியில் முன்பு நடந்தபோது பார்த்தவர்கள் கூட மீண்டும் பார்வையிட்டார்கள். அப்பொழுது பார்க்க இயலாதவர்களுக்கு பெரும் வாய்ப்பாக அமைந்ததாக தெரிவித்தார்கள். அன்றும் பெருமளவில் கூட்டம் வந்தது.

மாலை 4.00மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு மிகவும் எழுச்சிபூர்வமாக நடைபெற்றது. வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.குருகுலராஜா நிகழ்வுக்கு தலைமை தாங்கினார். நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம், க.வே.பாலகுமாரன், நிலாந்தன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். அடுத்த நாள் 'ஈழநாதம்' பத்திரிகையில் "தமிழகத்திலிருந்து தமிழீழத்திற்கு வருகை தந்துள்ள புகழ்மிக்க ஓவியர் புகழேந்தி அவர்களுக்கு கிளி நொச்சியில் நேற்று கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது. ஓவியக் கலைபற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் வெளிப்படுத்தி அனைவரையும் விழிப்படையச் செய்ததுடன், தமிழீழத்தில் ஓவியக்கலை புத்துயிர் பெற உழைத்துவரும் ஓவியர் புகழேந்தி அவர்களை கிளிநொச்சி நுண்கலைக் கல்லூரி கௌரவித்துள்ளது. கௌரவ நினைவுப் பரிசினை கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் அணிவித்தார்" என்று செய்தி வெளியிட்டிருந்தது.

'தினக்குரல்' பத்திரிகை அண்ணன் பாலகுமாரன் அவர் களுடைய உரையை வெளியிட்டது. அந்த உரை:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கௌரவப்பதக்கத்தை அணிவிக்கும் அரசதிபர் தி.இராஜநாயகம்

## தமிழக தமிழீழ மக்களுக்கிடையே மனரீதியான உறவில் மாற்றமில்லை

தமிழக மக்களும், தமிழீழ மக்களும் தற்போது அரசியல் சூழ்நிலைகளினால் பிரிந்து வாழ்கின்ற நிலை உள்ளது. இருப்பினும் மனரீதியான உறவு நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அந்நிலை பலப்பட்டே வருகிறது.

ஈழத்தமிழ் மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் உறவுப் பாலமாக ஓவியர் புகழேந்தி விளங்கி வருகிறார். ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் மக்கள் பரந்தளவில் ரசிக்கக் கூடிய இரசனை மிகுந்தவையாக உள்ளன.

எமது விடுதலைப் போராட்டத்தின் அர்ப்பணிப்புகளையும் தியாகங்களையும் வெளிப்படுத்துபவையாக இவ்வோவியங்கள் விளங்குகின்றன.

தமிழக மக்கள் மத்தியில் எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மைத் தன்மையை புகழேந்தியின் ஓவியங்கள் தெளிவுபடுத்தி இருக்கின்றன. அத்துடன், சர்வதேசத்திலும் விடுதலைப் போராட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தின் யதார்த்த நிலையை இவரது ஓவியங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இவரது ஓவியங்களிலே வல்வைப் படுகொலை, செம்மணிப் படுகொலை, திலீபன் உண்ணாநோன்பு என்பன போன்ற பல ஓவியங்கள் யதார்த்தமாக பல செய்திகளை வெளிப்படுத்தி நிற்கின்றன.

தமிழகத்திலிருந்து தனது ஓவியங்களுடன் எமது மண்ணுக்கு வந்த கலைப்போராளி புகழேந்தியை எமது மண்ணும், மக்களும் அன்புடன் அரவணைத்துக் கொள்கின்றனர். தமிழக மக்களும், தமிழீழ மக்களும் இரத்த உறவுகள். அதனை எந்த சக்தியாலும் பிரித்துவிடமுடியாது.

தென்னாசியாவில் மக்கள் அமைதியாக இருக்க வேண்டு மென்பது இந்தியாவின் நோக்கம். அதில் எமக்கு பிரச்சினையில்லை. வீணாக இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை. நாங்கள் இயல்பாக இருக்கிறோம் என்பதை புகழேந்தி இங்கு நின்ற நாட்களில் புரிந்திருப்பார்.

எங்களுக்கு ஆதரவாகச் செயல்படவேண்டிய இந்தியா எங்களைப் புறக்கணித்து வருகிறது. இந்நிலையில் தமிழ் நாட்டி லிருந்து எமது மண்ணிற்கு ஓவியங்களுடன் வருகை தந்து, எமது உணர்வுகளைப் புரிந்து கொள்கின்ற ஒரு மனிதராக ஓவியர் புகழேந்தி விளங்குகிறார். அவருக்கு இந்த மண்ணில் இப்பாராட்டு நிகழ்வு நடத்துவது மிகப் பொருத்தமாக உள்ளது".

நிகழ்வு முடிந்ததும் ஓவியக் காட்சியை முடித்து, ஓவியங்களை யாழ்ப்பாணம் கொண்டு செல்வதற்கான தயாரிப்புகளைச் செய்து முடித்துவிட்டு, அறைக்கு வந்தேன். ஓவியக் காட்சியில் பார்வை யாளர்கள் எழுதியக் கருத்துக்களை படித்தேன்.

■ எமக்குள் உறைந்துபோய் கிடக்கும் உட்கிடக்கைகளை வார்த்தையால் வடிக்கமுடியாத வேதனைகளை, போராட்டத்தால் எம்மக்களின் அனைத்து துயரங்களையும் அனுபவிக்காத தாங்களால் எவ்வாறு இப்படி சில ஓவியங்களுக்குள் அடக்கினீர்கள்.

*-ந.ரவீந்திரன்*

■ எமது தமிழினம் அடிமைப்பட்டு அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு எவ்வாறு தமது உயிர்களை கொடுத்தார்களோ, அன்னியன் எவ்வாறு சிதைத்தானோ அவற்றையெல்லாம் அவ்வாறே உயிரோட்டமாகவும் உணர்வுபூர்வமாகவும் பார்க்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மனங்களில் இன்னும் ஆழமாக பதியவைக்கும் உங்கள் ஓவியங்கள்.

-தமிழினி

■ ஓவியங்கள் அனைத்தும் உலகிலுள்ள அனைத்துத் தமிழ் மக்களினதும் உள்ளக் குமுறல்களையும் வெளிப்படுத்த முடியாதிருந்த உணர்ச்சிகளையும் உங்கள் ஒருவரின் ஓவியங்கள் மூலம் அனைத்துலகிற்கும் எடுத்துக்காட்டி தமிழ் மக்களின் உள்ளக் குமுறலை வெளிக்கொணர்ந்துள்ளீர்கள்.

-மாணவர், படைய அறிவியல் கல்லூரி

■ எங்கள் ஆழ்மனதில் புதைந்து கிடக்கின்ற மன உணர்வுகளை ஒரு கணம் கிளறிவிட்டு உங்கள் கைவரிசை சாதனை புரிந்துவிட்டது என்பதே என் ஒட்டுமொத்த மதிப்பீடு.

எமது தேசத்தின், இனத்தின் வரலாற்றில் நடந்த துன்பியல்களை, வீரத்தை, வரலாற்றை, உறுதியை, அர்ப் பணிப்பை அனைத்தையுமே ஓவியமாக்கி பல்பரிமாண உணர்வு வெளிப்பாடாகக் கொண்டு வந்து ஒரு மாபெரும் சாதனையைச் செய்துள்ளீர்கள். ஓவியங்களைப் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் நூல்கள் ஊடாகவும், கவிதைகள், கதைகள், புகைப் படங்கள், ஒளி நாடாக்கள் என்று பலதரப்பட்ட பக்கங்களால் கொண்டு வர முயலுகின்ற முயற்சிகளை ஓவியங்கள் என்ற ஒரே வடிவத்திற்கால் கொண்டு வந்து இன்று ஓவியங்கள் மீதான வியப்பை, ஆற்றலை என் மனதிலே பதித்து விட்டீர்கள்.

உண்மையிலேயே ஓவியக் கலையின் வீச்சை அதன் உயர்திறனை இன்று என் மனந்தனிலே ஆழப்பதித்த நாளாக இன்றைய நாள் மாற்றிவிட்டது.

உங்கள் ஓவியக் கலைத் தகமை வருமானம் தேடும் முயற்சியை நாடாது, உங்கள் துன்பப்படுகின்ற சகோதர உறவுகளிற்காக முழுமையாக அர்ப்பணித்த உங்கள் வெளிப் பாட்டை, படைப்பை எமது தேசமும் எமது மக்களும் எமது தலைவரும் என்றும் மனதில் ஆழப்பதித்துப் பூசிப்பார்கள் என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை எனக்கு ஏற்படுத்தியுள்ளது.

புகழேந்தி அண்ணன் எங்கள் சகோதரன், எமது போராட்ட உணர்வாளன் என்று கேள்விப்பட்டுள்ளேன். ஆனால் போராட்ட உணர்வுகளை அள்ளிவீசி ஒளியூட்டும் ஒளிவிளக்காக ஒரு மாபெரும் படைப்பாளி என்பதை உங்கள் ஓவியங்களைப் பார்த்தபின் என் மனங்களில் ஆழப்பதித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் உயர்பணி தொடர எங்கள் அனைவரது ஆசிகளையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பதோடு எங்கள் ஆதரவும் பங்களிப்பும் என்றும் இருக்கும் என உறுதி கூறுகின்றேன்.

*-சுப.தமிழ்ச் செல்வன்*

■ ஓவியப்பேராசிரியர் புகழேந்தி அவர்கள் ஓவியங்களில் தமிழீழப் போராட்டத்தின் வரலாறே பதிந்து கிடக்கிறது.


*-ஜோசப் பரராஜசிங்கம், பாராளுமன்ற உறுப்பினர்*

■ ஓவியங்கள் எம் மண்ணின் உண்மை உணர்வுகளை உயிராக வடித்துள்ளது.தங்களின் ஓவியத்தைப் பார்க்கும்போது கடந்த காலங்களில் நேரில் பார்த்த நினைவுகள் மனத்தில் வந்து மறைந்தாலும் எங்களின் மனங்கள் மீண்டும் மீண்டும் எங்கள் தேசத்தின் விடுதலை உணர்வை எழ வைக்கிறது.

*-தங்கன்*

■ கோடோ/ முள்ளோ/ கீறி/ குருதியோ/ வலியோ/ பின் அதுவே ஓவியமாய்.

*-ஏ.சி.தாசீசியஸ், லண்டன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தை உறைய வைத்த யாழ்ப்பாணம்

**யா**ழ்ப்பாணம் புறப்படத் தயாரானேன். ஓவியங்களும் காட்சிப்படுத்தும் பலகைகளும் லாரியில் ஏற்கெனவே சென்று விட்டன. யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இரண்டு நாட்களும், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய இடங்களில் ஒவ்வொரு நாளும் நடத்துவதாகத் திட்டமிட்டிருந்தார்கள். ஆனால் மருத்துவப் பேராசிரியர் மறைந்து, அவரது உடல் யாழ் பல்கலைக் கழகத்தில் மாணவர்கள், ஆசிரியர்கள் இறுதி மரியாதை செலுத்த வசதியாக அங்கு வைக்கப்பட்டிருந்ததால், இரண்டு நாளில் ஒரு நாள் ரத்தானது. அதனால் ஒருநாள் தாமதமாகவே யாழ்ப்பாணம் சென்றேன். செல்கின்ற வழியில் முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் இளம் இராணுவ வீரன் ஒருவன் என்னுடைய கைப்பையை திறந்து சோதனையிட்டான். உடைகள் இருந்தன. நூல்கள் இருந்தன. நான் வரைவதற்கு பயன்படுத்தும் பேனாக்கள் இருந்தன. அது வழக்கமாக பயன்படுத்தும் பேனாக்கள் போல் இருக்காது. அவன் அதை எடுத்து "'என்ன இது?" என்று அரை குறைத் தமிழில் கேட்டான். 'pen' என்று ஆங்கிலத்தில் சொன்னேன். நம்பாமல் திறந்து பார்த்தான். அதன் வடிவத்தைப் பார்த்து "என்ன இப்படி இருக்கு" என்று அதே அரைகுறைத் தமிழில் நக்கலாகக் கேட்டான். அந்த நிமிடங்களில் அவன் நடந்து கொண்ட விதம் எனக்குக் கோபத்தை வரவழைத்தது. "அதைப் புரிந்து கொள்வதற்கு அறிவு வேண்டும். அது உன்னிடம் இல்லை" என்று தமிழில் சொன்னேன். நான் என்ன சொன்னேன் என்பதும் அவனுக்கு விளங்கவில்லை. 'என்ன என்ன' என்றான். Do you know English? என்று கேட்டேன். No என்றான். உனக்கு ஆங்கிலமும் தெரியாது, தமிழும் புரியாது, எனக்கு சிங்களம் தெரியாது என்ன செய்வது என்று சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கெனவே, இதே முகமாலை சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் தமிழர்களை கேவலமாக நடத்தும் விதம் குறித்து என்னிடம் பலர் பகிர்ந்து கொண்டிருந்திருக்கிறார்கள். தற்போது அதை நான் கண்கூடாகக் கண்டேன். தமிழர்களுடையத் தன் மானத்தை இழிவுப்படுத்துவதாகத்தான் இதுபோன்ற செயல்கள் இருக்கின்றன. பரிசோதனை செய்வதையோ, அல்லது அவர் களுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வதையோ நாம் தவறாக நினைக்கவில்லை. ஆனால் அவர்கள் நடந்துகொள்கின்ற விதம் மிகவும் கேவலமாகவும், அநாகரீகமாகவும் இருக்கிறது.

இந்த இடத்தில் நான், இன்னொன்றையும் குறிப்பிட வேண்டும். நாட்டுக்கு நான் திரும்பிக் கொண்டிருந்தபோது ஓமந்தைச் சோதனைச் சாவடியில் என்னுடைய வாகனத்திற்கு முன்பு ஒரு வாகனம் நின்று கொண்டிருந்தது. வெள்ளைக்காரர்கள் இரண்டு மூன்றுபேர் அந்த வாகனத்திலிருந்து அவர்களுடைய பெட்டிகளை இறக்கி பெட்டிகளை சோதனையிடும் இடத்திற்கு எடுத்துச் சென்றார்கள். பெட்டிகளை இறக்கிய பிறகு வாகனத்தை மட்டும் சோதனையிடும் இராணுவ வீரன் அவ்வாகனத்தினுள் இருந்த வேறுசில கைப்பைகளையும் எடுத்துக்கொண்டுபோய் சோதனை யிட வேண்டும் என்று வலியுறுத்தியிருப்பான் என்று தெரிகிறது. கடுகடுத்த முகத்துடன் சென்ற அந்த வெள்ளைக்காரன் வாகனத்தில் இருந்த சிறிய பைகளைக் கொண்டுவந்து எதை வேண்டும் என்றாலும் சோதனை செய்து கொள்ளுங்கள் என்பதுபோல் பரிசோதனை மேசையில் எறிந்தான். அதில் ஒரு பாலிதின் பையில் இருந்த செருப்புகளும் அடங்கும். என் பெட்டியை பெயரளவிற்குத்தான் சோதனையிட்டார்கள். அதைக்கூட கவனிக்காமல் அருகில் நடந்து கொண்டிருந்ததை கவனித்துக் கொண்டிருந்தேன். என் அருகில் நின்ற என் வாகன ஓட்டுநர் "அண்ணே கோபத்தில் செருப்பைக் கூட கொண்டு வந்து எறிகிறான் இந்த வெள்ளைக்காரன். ஏதோ நடக்கப்போகிறது" என்றார். 'ஒன்றும் நடக்காது, அப்பாவித் தமிழர்களிடம் மட்டும்தான் சிங்கள இராணுவம் அதன் வேலையைக் காட்டும். வெள்ளைக்காரர்களிடம் ஒரு பருப்பும் வேகாது' என்றேன்.

யாழ்ப்பாணம்.

என் பயணத்தில் இது இரண்டாவது முறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுடைய 45 நாள் பயணத்தில் முதல் 5 நாட்களிலேயே என் மனைவி, குழந்தைகளோடு சென்றிருந்தேன்.

முதல்முறை சென்றபோதே எனக்கு ஒருவிதமான எதிர்பார்ப்பு இருந்தது. எதிர்பார்ப்புக்கு இரண்டு காரணம் இருந்தது. ஒன்று, நான் அய்ரோப்பா சென்றிருந்தபோது பாரிஸ் நகரத்தின் லா சப்பல் என்ற இடத்தைப் பற்றி நண்பர்கள் குறிப்பிடும் போது இது குட்டி யாழ்ப்பாணம் என்றார்கள்.

அப்போது நான் யாழ்ப்பாணம் சென்றதில்லை இதைப் பார்க்கும் போது என்னால் உணரமுடிகிறது என்றேன்.

அந்தளவிற்கு கடைகளில் உள்ள விளம்பரப் பெயர்ப் பலகைகள் அனைத்தும் தமிழில். கடைகளில் ஒலிக்கும் பாடல்கள் தமிழில். தெருக்களில் பேசப்படும் மொழி தமிழ். என்று எங்கும் தமிழ். எதிலும் தமிழ். இங்கேயே இப்படி என்றால் யாழ்ப் பாணத்தில் எப்படி இருக்கும் என நினைத்தேன். மற்றொன்று.

தமிழ் மக்களின் பண்பாட்டுக் குறியீடாக '**யாழ்ப்பாணம்**' இருக்கிறது. அதனால் கூடுதலான ஒரு ஆவல் இருந்தது.

யாழ்ப்பாணத்தில் நுழைந்துவிட்டோம் என்பதற்கு அடை யாளமாக நான் கண்டது இராணுவத்தினரின் அணிவகுப்பு. குறைந்தது பத்து இராணுவத்தினர் கையில் துப்பாக்கியோடு சாலைகளில் அணிவகுக்கிறார்கள். அதேபோல் முக்கியமான ஒவ்வொரு சாலை சந்திப்புகளிலும் இராணுவம் காப்பரண்களை அமைத்து எந்தநேரமும் தயார் நிலையில் இராணுவத்தினர் நின்று கொண்டிருக்கிறார்கள். சாலைகளில் நடந்து சென்று ரோந்து பணியில் ஈடுபடும் இராணுவத்தினர் தவிர்த்து, இராணுவ வாகனங் களில் பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ரோந்து பணிகளில் ஈடுபடுகிறார்கள். அதுவே ஒரு வகையான பதற்றத் தோற்றத்தை ஏற்படுத்தியது. இது குறித்து யாழ்ப்பாண நண்பர் "இராணுவத்தினர் இந்த யாழ்ப்பாண மண்ணை ஆக்கிரமித்து நின்று கொண்டிருப்ப தால் எங்கள் மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்பட்டு திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருப்பது போன்ற உணர்வோடு இருக்கிறார்கள். இந்த மூன்றாண்டு கால போர் நிறுத்தக் காலத்தில் தற்போதுதான் பதற்றம் மிகவும் அதிகரித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மூன்று இராணுவத்தினராக ரோந்து பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்கள். தற்போது பத்துக்குக்கு மேற்பட்டவர்களாக அதிகரித்து அப்பணியில் ஈடுபடுகிறார்கள். அவ்வளவு பயம் அவர்களுக்கு இருக்கிறது" என்றார்.

யாழ்ப்பாணத்தில், ஒரு ஏக்கர் அல்லது இரண்டு ஏக்கர் பரப்பில் தென்னை மரங்கள் அல்லது மாமரம், பலாமரம் போன்ற மரங்கள் சூழ்ந்த சோலைகளுக்கு மையத்தில் மிகப்பெரிய வீடுகளாக இருக்கிறது. பெரும்பாலும் வீடுகள் ஒரேமாதிரியான தோற்றத்தைக் கொண்டிருக்கின்றன.

## மாவீரர் துயிலும் இல்லம்

முதன்முதலில் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் சென்றோம். பார்த்த உடனேயே என்னை மிகவும் உலுக்கிவிட்டது. நான் ஏற்கெனவே கிளிநொச்சி, விசுவமடு, முள்ளிவலை போன்ற மாவீரர் துயிலும் இல்லங்களைப் பார்வையிட்டு இருந்தாலும் இங்கே என் உடல் குலுங்கிவிட்டது. எல்லா துயிலும் இல்லங் களிலும் ஒரே மாதிரியான முகப்பையும் வடிவத்தையும் கொண்டி ருந்தாலும். அனைத்து இடங்களிலும் இன்னும் பணிகள் நடை பெற்று வருகின்றன. ஆனால் இங்கு அனைத்துப் பணிகளும் முடிந்து மிகவும் அழகாக பராமரிக்கப்பட்டு பசுமையான புல் தரையிலிருந்து




மாவீரர் துயிலும் இல்லம்- கோப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிக்கப்பட்டு காட்சித் தருவதால் முதலில் என் உடல் குலுங்கியது. அதையடுத்து அமைதியானேன். நெஞ்சு கனத்தது. கண்களில் நீர் நிறைந்தது. அம்மனச் சுமையிலிருந்து விடுபடுவதற்கு நீண்ட நேரம் பிடித்தது.

இதே மாவீரர் துயிலும் இல்லத்தை, இலங்கை இராணுவம் 1995இல் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவுடன், இயந்திரக் கலப்பையால் உழுது எல்லா சமாதிகளையும், நடு கற்களையும் அடித்து நொறுக்கி ஒரே குவியலாக குவித்து விட்டது. பிறகு போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு பின்னர்தான் மீண்டும் இம்மாவீரர் துயிலும் இல்லம் கட்டியெழுப்பப் பட்டிருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்டதோடு மட்டுமல்லாமல் துயிலும் இல்ல வளாகத்திலேயே சிங்கள இராணுவத்தால் இடித்து நொறுக்கப்பட்ட அந்த இடிபாடுகள் சிலவற்றை எடுத்து கண்ணாடிப் பேழைக்குள் வைத்து,

1995ஆம் ஆண்டு யாழ்ப்பாண
இடப்பெயர்வுக்குப் பின்னர்
சிறீலங்காப் படையினர்
இங்கே உறங்கிய
எம்மாவீரர் செல்வங்களின்
கல்லறைகளை
சிதைத்து அழித்தனர்.
அந்தக் கல்லறைச் சிதைவுகள்
இங்கே
சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.
சில நொடிப்பொழுதுகள்
சிரம் தாழ்த்துவோம்.

என்று நூல்போன்ற வடிவக் கல்வெட்டில் தமிழில் ஒரு புறமும், ஆங்கிலத்தில் ஒரு புறமும் பொறித்து வைத்துள்ளனர். எனக்கு இதைப் பார்த்ததும், படித்ததும் கோபம் வந்தது.

சண்டையில் கொல்லப்படுகின்ற இராணுவத்தினரின் உடல்களை மிகவும் நாகரிகமான முறையில் ஒப்படைக்கும் அந்தத் தலைவன் எங்கே. கல்லறைகளில் உறங்கிக் கொண்டிருந்த அந்த ஆத்மாக்களை சிதைத்த இந்த மிருகங்கள் எங்கே. சிங்கள இராணுவத்தினர் எவ்வளவு வக்கிர மனம் படைத்தவர்கள் என்பதற்கு இதுவே காட்சி.

துயிலும் இல்லப் பொறுப்பாளர், "2002இல் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பிறகு இந்த துயிலும் இல்லம் எங்கே இருந்தது என்று அடையாளம் தெரியாத அளவிற்கு புதர்மண்டிக் கிடந்தது. ஒரு மரத்தைச் சுட்டிக்காட்டி - அந்த மரத்தை வைத்துத்தான் அடையாளம் கண்டோம். அவ்வளவு மோசமாக இருந்தது. மக்கள்தான் இதை மீண்டும் கட்டியெழுப்பியிருக்கிறார்கள்" என்றார்.

என் மனைவி சாந்தியும் குழந்தைகள் சித்திரனும் இலக்கியனும் ஒவ்வொரு கல்லறையாகச் சென்று பார்த்து வந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



துயிலும் இல்லத்தில் கண்ணாடிப் பேழைக்குள் இடிபாடுகள்

மாவீரர் துயிலும் இல்லத்தில் சமாதி ஒருபுறமும், நடுகற்கள் ஒரு புறமுமாக வைத்திருக்கிறார்கள்.

சமாதி என்பது உடல்கள் விதைக்கப்பட்டது. நடுகற்கள் என்பது உடல்கள் கிடைக்காதவர்களுக்கு நடுவது. இரண்டிலுமே அவர்களுடைய இயற்பெயர், இயக்கப் பெயர், பிறந்ததேதி, பிறந்த ஊர். எந்தச் சமரில் எந்த தேதியில் மாவீரர் ஆனார்கள் என்பது உட்பட அனைத்து விபரங்களும் கல்வெட்டில் பதியப்பட்டுள்ளன.

வெளிநாட்டுப் பார்வையாளர்கள் உட்பட ஆயிரக்கணக் கானவர்கள் தினமும் இந்த மாவீரர் துயிலும் இல்லங்களை பார்வையிட்டுச் செல்கிறார்கள்.

புலிகளின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களை கடக்கின்ற வாகனங்கள் அது எந்த வாகனமாக இருந்தாலும் எவ்வளவு வேகத்தில் வந்தாலும் 20 கிலோ மீட்டர் வேகத்திற்கு குறைந்து மிகவும் மெதுவாகவும், வானத்தில் ஒலிக்கும் பாடல்களை நிறுத்தி பேசுவதையும் தவிர்த்து மிகவும் அமைதியாக அந்த இடத்தைக் கடக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரியாதையை அந்த மக்கள் அம்மாவீரர்களுக்கு வழங்குகிறார்கள். உலகத்தில் பலநாடுகளுக்கு நான் சென்றிருக்கின்றேன். எங்கும் இதுபோல் நான் காணவும் இல்லை. கேள்விப்படவும் இல்லை.

### அறிவுக் கருவூலம் எரியுண்ட இடத்தில்

அடுத்து நான் செல்லவேண்டிய இடம் யாழ் நூலகம்.

ஒரு இனத்தை அழிக்க வேண்டும் என்றால் அந்த இனத்தின் கலாச்சார மற்றும் பண்பாட்டுக் கூறுகளை அழிப்பதென்பது பேரினவாதிகளும் இனச் சுத்திகரிப்பாளர்களும் காலம்காலமாக கடைபிடித்துவரும் ஒரு நடவடிக்கையாகும்.

இந்த அடிப்படையில்தான் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலுக்கென வந்திருந்த அமைச்சர்களாக காமினி திச நாயக்கா மற்றும் சிறில் மத்தியு முதலானவர்கள் தலைமையிலான சிங்கள காடையர்களால் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகமான யாழ்ப்பாண நூலகம் 1981 மே மாதம் 31ஆம் தேதி தீக்கிரை யாக்கப்பட்டது.

தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்டதும், சுமார் ஒருலட்சத்திற்கும் அதிகமான பண்டைய நூல்களையும், ஏட்டுச் சுவடிகளையும் கொண்ட அழகிய அரிய கலைக்கருவூலமாகத் திகழ்ந்தது. இந்த நூலக எரிப்பு என்பது பின்னால் நடந்த பல இனஅழிப்பு மற்றும் இனப்படுகொலைச் சம்பவங்களோடு



எரியுண்ட யாழ் நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பிடும் போது சிறிய சம்பவமாக மாறிவிட்டாலும் உலக சமூகத்திற்கு, பௌத்த சிங்கள பேரினவாதத்தின் கோரமுகத்தை அடையாளப்படுத்தும் சாட்சியாக எரியுண்டு போன நூலகக் கட்டிடம் இருந்தது.

இந்த நூலகக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டது என்பதை நான் செய்தித் தாள் வழியாக அறிந்தபோதே எனக்கு மிகவும் கோபமாக வந்தது. நான் ஈழத்தில் இறங்கியவுடன் அங்கிருந்த முக்கியமானவர் களிடம் "யாழ் நூலகக் கட்டிடத்தை புதுப்பிக்க நாம் அனுமதித் திருக்கக் கூடாது. அதை அப்படியே பாதுகாத்து நம் வருங்கால சந்ததிக்கு விட்டுச் சென்றிருக்க வேண்டும். பக்கம் பக்கமாக வரலாறுகளை எழுதிவைத்து செல்வதைவிட அதுமிகச் சிறந்த வரலாற்றுப் பெட்டகமாக இருந்திருக்கும்" என்றேன்.

"என்ன செய்வது யாழ்ப்பாணம் இராணுவம் கையில் இருக்கின்ற நிலையில் புனரமைத்துவிட்டார்கள். எங்களால் ஒன்றும் செய்ய இயலவில்லை" என்றார். எனது கவிஞர் நண்பர்.

ஒரு இனம் தனது கடந்த கால வரலாற்றை எதிர்காலச் சந்ததிக்கு எடுத்துச் சொல்லவில்லை என்றால் அந்த இனம் அழிந்து போகும். இது வரலாறு.

யாழ் நூலக கட்டிடத்திற்கு அருகில் எங்கள் வாகனம் நின்றது. காயம்பட்ட புண் ஆறாமல் அந்த புண்ணின் மேற்பகுதி மட்டும் மூடப்பட்டு மறைக்கப்பட்டால் உள்ளே சீழ் பிடித்திருக்கிறது என்று பொருள். அதுபோல் அந்தக் கட்டிடத்தின் உட்காயங்கள் மறைக்கப் பட்டு, வெள்ளையடிக்கப்பட்டு காட்சி தந்தது. எனக்கு அந்த நூலகத்திற்குள் செல்ல மனம் ஒப்பவில்லை. என் மனைவி சாந்திக்குத்தான் மிகவும் விருப்பம். அந்த நூலகத்திற்குள் செல்ல வேண்டும் என்று ஆவலோடு இருந்ததால் குழந்தைகளை அழைத்துக் கொண்டு உள்ளே சென்றார். நான் நண்பர்களோடு வெளியில் நின்று வேதனையோடு அந்தக் கட்டிடத்தின் சுற்றுப் புறங்களைப் பார்த்தேன். எனது மனதுக்குள் இந்த நூலகம் எரியுண்டபோது இங்கிருந்த நூல்கள் மட்டும் எரியுண்டு போகவில்லை. அந்த நூல்களோடு உறவாடிய இலட்சக்கணக்கான தமிழ் மக்களின் ஆன்மாவும் அவர்களது கலாச்சாரத் தளமும் எரியுண்டு போனது. இந்த இலட்சக்கணக்கனா மக்களின் ஆன்மாவுக்கு, கலாச்சாரத் தளத்துக்கு ஏற்பட்ட பாதிப்பை- இழப்பை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் தனித்தனியே அழைத்துவந்து பட்டியலிட்டுக் காண்பிக்க முடியாது. ஆனால் எரிந்த நெருப்பில் எரியாமல் எஞ்சியிருந்த நூலகக் கட்டிடம் இந்தப் பாதிப்பின் நேரடிச் சாட்சியாக இருந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

நான் அய்ரோப்பிய நாடுகளுக்கு பயணம் செய்தபோது இன அழிப்பு அல்லது ஆக்கிரமிப்புப்போர் ஒன்றில் மக்களுக்கும் அவர்களது பண்பாட்டுக் கலாச்சாரத் தளங்களுக்கும் ஏற்பட்டப் பாதிப்பை அழிவை நினைவூட்டுவதற்காகவே இன்றும் மேற்குலக நாடுகளில் மக்களோடு நெருக்கமான உறவைக் கொண்ட கட்டிடங்களை நினைவுச் சின்னங்களாக பாதுகாத்து வருவதைப் பார்வையிட்டேன்.

பிரான்சில் ஹிட்லரின் ஆக்கிரமிப்பின் போது அழிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான மக்கள் தொடர்பாடல் கட்டிடங்கள் இன்றும் நினைவுச் சின்னங்களாக பராமரிக்கப்பட்டு வருகின்றன.

தங்களது அழகான நகரங்களில் -கிராமங்களில் இடிந்துபோன எரிந்துபோன ஒரு கட்டிடம் இருப்பதையிட்டு பிரான்ஸ் மக்கள் பெருமையடைகின்றார்களே தவிர கவலைப்படுவதில்லை என்று பாரிஸ் நகரத்தில் நண்பர் ஒருவர் சொன்னது நினைவுக்கு வந்தது.




புதுப்பிக்கப்பட்ட யாழ் நூலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் நூலக விடயத்தில் சந்திரிகா அரசு அவசரஅவசரமாக சில துரோகத் தமிழர்களின் துணையோடு இந்த நூலகத்தை மறுபடியும் பூசிமெழுகிக் கட்டி எழுப்பித் திறந்து வைத்து தமிழர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி அரசால் இழைக்கப்பட்ட அநீதிக்கு பரிகாரம் செய்துவிட்டதாக பரப்புரை செய்தது.

"தமிழர் தாயகம் எங்கும் எத்தனைப் பாடசாலைகள் எத்தனை நூலகங்கள், எவ்வளவு மக்கள் குடியிருப்புகள் எத்தனை மாவீரர் துயிலும் இல்லங்கள், எல்லாம் அதே சந்திரா ஆட்சியில் அவரது படைகளால் அழிக்கப்பட்டன. எத்தனை ஆயிரம் தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். எத்தனை ஆயிரம் குழந்தைகளின் வாழ்வு சிதைக்கப்பட்டது தெரியுமா" என்று என்னுடன் வந்த நண்பர் கூறினார்.

அதற்குள் நான் வந்திருக்கும் செய்தி அறிந்து நூலகத்தில் பணிபுரியும் சிலர் என்னை வந்து சந்தித்து, நூலகத்தை சுற்றிக் காண்பித்தார்கள். அவர்களோடும் சிறிது நேரம் உரையாடினேன். என் மனைவி சாந்தி "நூல்களே இல்லை எல்லாம் காலியாக இருக்கிறது" என்றார் வேதனையோடு. தமிழகத்தில் வெளியாகும் அனைத்து வார, மாத இதழ்கள் அந்நூலகத்தில் இருக்கின்றன. நேரம் குறைவாக இருந்ததால் விரைவாகவே வெளியில் வந்துவிட்டோம்.

வெளியில் வரும்போது விடுதலைப் பெற்ற தமிழீழத்தில் எரிந்து போன யாழ் நூலகத்தைப் போல பன்மடங்கு உயர்ந்ததாக இன்னொரு நூலகத்தை கட்டிஎழுப்பி விடுவார்கள் என்ற நம்பிக்கை யோடு வந்தேன்.


அதற்கு அருகிலேயே 'ஈழத்துக்காந்தி' என்று அழைக்கப்பட்ட தந்தை செல்வா அவர்களுடைய நினைவிடம் இருக்கிறது. தந்தை செல்வாவின் முழுஉருவச் சிலை எவ்விதப் பராமரிப்பும் இன்றி கேட்பாரற்று நின்று கொண்டிருக்கிறது.

## உலகத் தமிழாராய்ச்சி மாநாடு - தமிழர் படுகொலை

வேகமாக சென்று கொண்டிருந்த வாகனத்தை நிறுத்தி "அண்ணே இதுதான் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் சுட்டுக் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவுச் சின்னம். இறங்கிப் பார்த்து விட்டு வாருங்கள்" என்றார் நண்பர்.

நான் மிகவும் பார்க்க வேண்டும் என்று விரும்பிய இடங்களில் இதுவும் ஒன்று. ஆனால் இவ்வளவு விரைவில் வருவோம் என்று எதிர்பார்க்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகத் தமிழாராய்ச்சி மாநாடு- தமிழர் படுகொலை நினைவாலயம்

வானத்தை விட்டு இறங்கி நினைவுத் தூண்கள் இருக்கும் இடத்தை நோக்கி என் கால்கள் நகர்ந்தன. என் சிந்தனைகள் 1974 ஆண்டை நோக்கி நகர்ந்தன...

பரந்துபட்ட உலகில் வாழும் தமிழ் மக்களுக்கு தம் வாழ்க்கையில் என்றுமே மறக்கமுடியாத ஒரு நாள் 10.1.1974. தமிழ் மக்களின் மனங்களில் நீங்காத நெருப்பாக எரியும் நினைவாக இருப்பதோடு இன்றைய தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சிக்கு ஓர் உந்து சக்தியாக அமைந்த நாள். 1974 தை 10 ஆம் நாள் அனைத்துலக நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வு சிறீலங்கா ஆட்சியாளராலும் அதன் காவல் துறையினராலும் நன்கு திட்டமிட்டுக் குழப்பப்பட்டபோது அப்பாவிப் பொதுமக்கள் ஒன்பதுபேர் கொல்லப்பட்டமை தமிழ் மக்களின் மனங்களிலிருந்து நீக்க முடியாததொரு நிகழ்வாகவே இருக்கின்றது.

உலகத் தமிழாராய்ச்சி மன்றமானது 1960களின் நடுப்பகுதியில் அருட்தந்தை தனிநாயகம் அடிகளின் பெருமுயற்சியால் ஆரம்பிக்கப்பட்டு, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு முதலாவதாக 1966ஆம் ஆண்டு மலேசிய அரசாங்கத்தின் ஆதரவுடன் அதன் தலைநகரான கோலாலம்பூரில் நடத்தப்பட்டது. அதன் பிறகு இரண்டாவது மாநாடு 1968இல் தமிழக அரசாங்கத்தின் ஆதரவுடன் சென்னையில் நடத்தப்பட்டது. மூன்றாவது மாநாடு 1971ஆம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்சின் தலைநகர் பாரிசில் பல்வேறு தமிழ் அமைப்புகளினதும், அந்நாட்டு அரசாங்கத்தின் ஆதரவோடும் நடத்தப்பட்டது.

மூன்றாவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு பாரிசில் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது நான்காவது மாநாடு இலங்கையில் அதுவும் தமிழ்மக்கள் பரந்தளவில் வாழ்ந்து வரும் யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படவேண்டும் என்ற தீர்மானம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றத்தினரால் எடுக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகளையும், பொறுப்பையும் அதன் இலங்கைக் கிளையிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கைக்கான கிளை தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை இங்குச் செயற்படுத்த முனைந்தபோது யாழ்ப் பாணத்தில் அன்றைய யாழ் நகர மேயரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளருமாக இருந்த அல்பிரட் துரையப்பா என்பவரூடாக பல எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் எதிர் நோக்க வேண்டியிருந்தது. அதோடு, அப்போது பிரதமராக இருந்த சிறீமாவோ பண்டாரநாயக்காவே அம்மாநாட்டை ஆரம்பித்து வைக்க வேண்டும் என தமிழாராய்ச்சி மாநாட்டின் இலங்கைக்கான கிளைக்குள் இருந்த அரசு சார்புள்ள சிலர் அழுத்தமாகக் குரல் கொடுத்தனர். அதோடு இம்மாநாட்டை சிறீலங்கா தலைநகரான கொழும்பிலேயே நடத்தவேண்டும் என்றும் தீர்மானித்தனர்.

இவர்கள் இப்படித் தீர்மானிப்பதற்கு அன்றுபல காரணங்கள் இருந்தன. திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா தமிழ் மக்கள் மீது இன,மொழி அடிப்படையில் பாகுபாடுகள் காட்டிவந்ததோடு, பல்கலைக்கழக அனுமதிக்குத் தரப்படுத்தல் போன்ற விடயங்களை மேற்கொண்டதும் வேறுபல அரசியல் சிக்கல்களை முன்னிட்டும், அவர் யாழ்ப்பாணம் வருவதில் பல சிக்கல்கள் இருந்தன. இதனால் தான் ஒரு சாரார் சிறீமாவோ பண்டார நாயக்காவிற்காக கொழும் பிலேயே நடத்த வேண்டுமென முடிவெடுத்த போது அதற்க எதிராக எழுந்த தமிழ் இளைஞர்கள் பலர் ‘பாரிஸ் மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படியே அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடானது யாழ்ப்பாணத்திலேயே நடத்தப்படவேண்டும்’ என ஒருமித்த குரல் கொடுத்தனர். இறுதியாக “03.01.1974 தொடக்கம் தொடர்ந்து ஏழுநாட்களுக்கு அனைத்துல தமிழாராய்ச்சி மாநாடு திட்டமிட்ட படி யாழ்ப்பாணத்திலேயே நடைபெறும்” என மாநாட்டுப் பணியகத்தின் செயலாளர் ஓர் அறிவித்தல் கொடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநாட்டுக்கு வருகை தரவிருக்கும் கல்விமான்கள், அறிஞர்கள், அயல்நாட்டு மக்களை வரவேற்பதற்குத் தயாரானார்கள். வீதிகள் தோறும் வாழைகள் நட்டு, தோரணங்கள் கட்டி மகிழ்ந்தனர். சப்பரங்கள், சிகரங்கள் என சந்திக்குச் சந்தி அலங்கரித்தார்கள். மின் கம்பங்களில் கட்டப்பட்ட ஒலி பெருக்கிகளில் இருந்து நாதஸ்வர மேள தாள வாத்தியங்களும், தமிழ் மணக்கும் நல்லிசைப் பாடல்களும் ஒலித்துக் கொண்டிருந்தன. ஒட்டுமொத்தத்தில் தமிழ் மக்கள் தங்கள் தாய்மொழி வாழ்வதற்காகத் தமது உழைப்பின் பெரும்பொழுதை மாநாட்டுக்காக செலவழித்திருந்தார்கள். நாட்கள் நகரநகர நகரமே களைக் கட்டத் தொடங்கியது. அயல் கிராமங்களிலிருந்து அலையலையாக மக்கள் வந்து குவிந்து கொண்டிருந்தார்கள். அனைவரது முகங்களிலும் மகிழ்வின் பூரிப்பு பொலிந்திருக்க தமிழாராய்ச்சி மாநாடு நடந்து கொண்டிருந்தது.

இதேவேளை, மாநாட்டின் இறுதி நாள் தமிழ் மக்களின் பண்பாட்டை வலியுறுத்தும் வகையில் பல கிராமங்களிலிருந்து அலங்கார ஊர்திப் பவனிகள் யாழ் நகரை நோக்கி வந்து கொண்டிருந்தன. இவ்வாறான ஓர் அணி பருத்தித்துறை வீதியூடாக யாழ்நகர் நோக்கி வந்து கொண்டிருந்தபோது, முத்திரைச் சந்தியில் வைத்து சிறீலங்கா காவல்துறையினரால் காரணமின்றி வழிமறிக்கப்பட்டு மேற்கொண்டு செல்லவிடாது தடுக்கப்பட்டது. ஊர்வலத்தில் நடு வீதியில் சில மணித்தியாலங்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்த, அதற்குப் பணிந்துபோன சிங்களக் காவல்துறையினர் மேற்கொண்டு செல்வதற்கு அனுமதி தந்தனர். தங்களைப் பெரும்பான்மை இனமெனக் கருதிக் கொண்டிருந்தவர்களால் ஒரு சிறுபான்மையினத்திற்கு முன்னால் தாம் தலை குனிந்து போனதைத் தாங்கிக் கொள்ள முடியாமலிருந்தது. அதோடு, திட்டமிட்டப்படி மாநாட்டைக் கொழும்பில் நடத்த முடியாதுபோன மனக் கொந்தளிப்பும், தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்பதற்கான தோற்றப்பாடும் சிங்கள காவல்துறையினரின் இதயங்களில் இனவாத வன்ம வெறியைத் தோற்றுவித்துவிட்டது. நடைபெறும் அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டை அல்லோலகல்லோலப் படுத்துவதற்கென வழியை வகுத்தபின், அடுத்த நிகழ்வுக்கு ஆயத்தமாகி நின்றார்கள், சிறீலங்கா காவல்துறையினர். இந்நிலையில் ஜனவரி 10ஆம் நாளில் ஊரே திரண்டு வந்து யாழ் நகரில் வீதிக்கு வீதி, சந்திக்கு சந்தி குழுமியிருந்து விழாவை ரசித்துக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது நேரம் இரவு எட்டுமணி. போக்குவரத்துக்குப் பொறுப்பான சிங்களக் காவல் துறை அதிகாரி ஒருவர் காங்கேசன் துறை வீதி யாழ் காவல் நிலையத்திற்கு செல்வதற்கு, தனது மோட்டார் வாகனத்தில் வந்து கொண்டிருந்தார். வீதிகளில் மக்கள் நிறைந்திருந்ததனால் அவரால் மேற்கொண்டு செல்ல முடிய வில்லை. மக்களுக்கும் வழியை விட்டுக் கொடுப்பதற்கு போதுமான இடைவெளி இருக்கவில்லை. திரும்பி வேறு பாதையில் செல்வதற்கு அவருடைய 'காக்கி உடுப்பின் கௌரவம்' இடங்கொடுக்கவில்லை. அவருள் எழுந்த ஆத்திரமும், காக்கிச் சட்டையின் அதிகாரமும் மக்களை நோக்கி வசைமாரி பொழிய வைத்தன. பதிலுக்கு மக்களும் எதிர்த்துப் பேசத் தொடங்கவே நிலைமை கட்டுமீறிச் செல்வதை உணர்ந்த அவர். ஒருவாறாக தனது மோட்டார் வண்டியை மக்களிடையில் வலிந்து செலுத்தியவாறு காவல் நிலையம் போய்ச்சேர்ந்தார். ஆனால் அடுத்து நிகழப்போகும் கொடிய விபரீதத்தை அறியாத நிலையில் ஆனந்த மனோநிலையில் அமர்ந்திருந்தார்கள் தமிழ்மக்கள். வேக்காளத்தோடும் வெஞ்சினத் தோடும் காவல்நிலையம் சென்றடைந்த அந்த சிங்கள காவல்துறை அதிகாரி, தனக்கு நேர்ந்த அவமானத்தை அங்கு நின்ற ஏனைய காவல் துறையினருக்கு எடுத்துரைத்தார். மறுவினாடி, பெருந்தொகை யிலான சிங்கள காவல்துறையினர் யாழ் காவல்துறை அதிபர் சந்திரசேகர தலைமையில் கண்ணீர்ப்புகைக் குண்டுகளோடும், துப்பாக்கிகளோடும், யாராவது எதிர்த்து தாக்கினால் சமாளிப்ப தற்கான உலோகத் தடுப்புகளோடும் கூச்சலிட்டபடி ஆவேசத்துடன் மக்களினுள் புகுந்தனர். கண்ணீர் புகைகள் எங்கும் வெடிக்கத் தொடங்கின. மக்கள் கூட்டம் சிதறியோடத் தொடங்கியது. பெற்றோரைத் தவறவிட்டக் குழந்தைகளின் கதறல் எங்கும் எதிரொலித்தன. வீதிகளில் நிறுவப்பட்ட சிகரங்கள் தீப்பிடித்து எரிந்தன. சப்பரங்கள் யாவும் மண்ணில் சரிந்து வீழ்ந்தன.

இவ்வேளையில் சில சிங்கள காவல்துறையினர் மின்சாரக் கம்பங்களில் உள்ள கம்பிகளை குறிபார்த்துச் சுட்டனர். இப்படிச் சுட்டதில் மின்கம்பி ஒன்று அறுந்து வீழ்ந்ததில் அதன்மீது எதிர் பாராதவிதமாக தங்கள் கால்களை வைத்த ஒன்பது அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழந்தார்கள். திட்டமிட்டபடியே சிங்களக் காவல் துறையினரால் அனைத்துல நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு அன்றைய தினத்தில் குழப்பியடிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சம்பவத்தில் உயிர் நீத்த ஒன்பது தமிழ்மக்களின் நினைவாக முற்றவெளியில் ஓர் தூபி நிறுவப்பட்ட போதும் பின்னர் அது சிங்களக் காவல்துறையினரால் அடித்து நொறுக்கப்பட்டது. மீண்டும் அதே இடத்தில் சிறிய அளவிலான ஒன்பது தூண்கள் நிறுவப்பட்டன. அந்த நினைவுச் சின்னங்களுக்கு முன்னால் நின்று என் அகவணக்கத்தைச் செலுத்திவிட்டுத் திரும்பினேன்.

■

ஈழத்துக் காந்தி தந்தை செல்வா நினைவிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி புதைவெளி

அடுத்து செம்மணி கிராமத்துக்குச் செல்லவேண்டும் என்று விரும்பினேன். எங்கள் வாகனம் செம்மணி நோக்கிப் பறந்தது. கிருசாந்தி என்ற பள்ளி மாணவி பாடசாலை சென்றவர் வீடு திரும்பவில்லை. அவரைத் தேடிச் சென்றவர்களும் வரவில்லை என்பதால் கிருசாந்தி உறவினர்கள் காவல்துறையினரிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள். இதற்கிடையில் கிருசாந்தியை இராணுவத்தினர் அவர்களுடைய முகாம் அருகில் வைத்து விசாரித்துக் கொண்டிருந்ததைப் பார்த்ததாக ஒருவர் கூறியிருக்கிறார். அவர் பார்த்த நேரத்திற்குப் பிறகு கிருசாந்தியை யாரும் பார்த்ததாகக் கூறவில்லை. கிருசாந்தி பயன்படுத்திய மிதிவண்டியை இராணுவத்தினர் நீண்டநாட்களுக்கு பிறகு பயன் படுத்தியிருக்கிறார்கள். நீதிமன்ற விசாரணையில் இராணுவத்தினர் கிருசாந்தியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி படுகொலை செய்து புதைத்துவிட்டோம். அப்பெண்ணைத் தேடி வந்தவர்களையும் படுகொலை செய்து புதைத்துவிட்டோம். இன்னும் பலரையும் இவ்வாறு படுகொலை செய்து புதைத்து இருக்கிறோம் என்று புதைத்த இடங்களையும் காண்பித்திருக்கிறார்கள்.

“யாழ்குடா நாட்டை சிங்கள இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் அங்குப் பல மனித புதைகுழிகள் தோன்றின. சிறீலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டோர் இந்த மனிதப் புதைகுழிகளில் முகவரி அற்றுக் கிடக்கின்றனர்.

யாழ் குடா நாட்டை ஆக்கிரமித்த சிறீலங்கா அரசும் அதன் படைகளும் இங்கு சிவில் நிர்வாகமும் சகஜவாழ்க்கையும் நிலவுவதாக உலகிற்குப் பிரச்சாரம் செய்து வந்த வேளையில், இங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளும் இதன் மூலம் தோன்றிய சில மனிதப் புதைகுழிகள் தொடர்பான விடயங்களும் எவ்வாறோ அம்பலத்துக்கு வந்துவிட்டன.

செம்மணிப் பகுதியில் பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டு புதை குழியில் புதைக்கப்பட்டு பாரிய ஒரு இனப் படுகொலையினை சிறீலங்கா இராணுவம் ஏற்கெனவே நிறைவேற்றி இருந்தது. இந்த விடயம் கிருசாந்தி என்ற பாடசாலை மாணவி பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு செம்மணியில் புதைக்கப்பட்ட பின்னரே அம்பலத்துக்கு வந்தது.

செம்மணிப் புதைகுழி தொடர்பான விடயங்கள் வெளி வந்ததும், இது தொடர்பான பரவலான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் நீதிமன்ற விசாரணைகளும் இடம்பெற்றன. நீண்ட நாட்களாக இழுபறி நிலையில் நடைபெற்ற நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகளான இராணுவத்தினர் உரிய முறையில் தண்டிக்கப் படாமலே இப்புதைகுழி விவகாரம் ஓய்ந்துபோனது" என்று நண்பர் முடிப்பதற்கும் வாகனம் நிற்பதற்கும் சரியாக இருந்தது.

மிகப் பரந்த வெளியில் வாகனம் நின்றது. "இதுதான் அண்ணே செம்மணி வெளி, இங்குதான் நூற்றுக்கணக்கான எலும்புக் கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டன" என்று மற்றொரு நண்பர் அந்த வெளியைச் சுட்டிக்காட்டிக் கூறினார். நாங்கள் நின்றதற்கு அருகிலேயே இராணுவத்தினர் அரண் இருந்தது. செம்மணி என்ற கிராமம் (ஊர்) எங்கிருக்கிறது என்று கேட்டேன். ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள மரங்கள் அடர்ந்த பகுதியைக் காண்பித்து அதுதான் செம்மணி மக்கள் வசிக்கும் இடம் என்றார்கள்.

அந்த செம்மணி வெளியை மீண்டும் மீண்டும் நின்ற இடத்தி லிருந்தே சுற்றிச் சுற்றிப் பார்த்தேன். ஏற்கெனவே இந்நிகழ்வைப் பற்றி நான் ஓவியம் செய்திருக்கிறேன். அதனால் 'செம்மணி படுகொலை' பற்றிய ஒரு புரிதல் இருந்தது.

இந்தச் செம்மணி வெளியைப் பார்க்கும்போது இவ்வெளியில் உறங்கும் உண்மைகள் எத்தனை எத்தனையோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

800க்கும் மேற்பட்ட உயிர்கள் துடித்த துடிப்பு, கடைசி நிமிடத்தில் அவர்கள் எழுப்பியிருக்கக் கூடிய அவலக் குரல்கள்... எப்படி மறக்கமுடியும்? என்றேன்.

"எத்தனைக் குழந்தைகள் இன்னும் அப்பா வருவாரா? அம்மா வருவாரா? என்று ஏங்கிக் கொண்டிருக்கின்றன தெரியுமா? எத்தனைத் தாய்மார்கள் பாசத்திற்குரிய தங்கள் பிள்ளைகள் வருவார்களா? என்று தவித்துக் கொண்டிருக்கிறார்கள் தெரியுமா? எத்தனைப் பெண்கள் தங்கள் அன்புக்குரிய கணவன்மாருக்கு என்ன நடந்தது என்று தெரியாமல் வாழ்வைத் தொலைத்துவிட்டு நிற்கிறார்கள் தெரியுமா?" என்றார் நண்பர்.

"இங்கு மட்டும்தான் இதுபோன்ற புதைகுழிகள் என்று கருதிவிடாதீர்கள். தென்மராட்சி மிருசுவில் பகுதியில் மனிதப் புதைகுழிகள் இருக்கின்றன. சடலங்கள் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து சடலங்கள் தோண்டி எடுக்கப்படும்போது அங்கு மேலும் பெண்கள் அணியும் உள்ளாடை, சேலை, என்பனவும் கண்டெடுக்கப் பட்டுள்ளன. தோண்டப்படாத மனிதப் புதைகுழிகள் இன்னும் நிறைய இருக்கின்றன" என்று மேலும் சொன்னார்.

மிகவும் வேதனை நிறைந்த மனநிலையோடு அவ்வெளியை விட்டு நகர்ந்தோம்.

அன்றைய இரவு உணவுக்கு யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் திரு.சிதம்பரநாதன் அழைத்திருந்தார். நாடகத்துறையில் மிக முக்கியமான பங்களிப்பை செலுத்தி வருகிறார். பொங்கு தமிழ் நிகழ்ச்சியின் மூளை அவர். அவர் மனைவி திருமதி பத்மாவதி தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர், அவரும் ஒரு அரங்கச் செயற்பாட்டாளர். சமூகச் செயற்பாட்டாளர். நான் என் மனைவி குழந்தைகளுடன் அவர் இல்லத்திற்குச் சென்று இரவு உணவை உண்டோம். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொங்கு தமிழ் நிகழ்ச்சியை நான் 2002 கனடாவுக்கு சென்றிருந்தபோது வீடியோவில் பார்த்தேன். மிகவும் எழுச்சியாக இருந்தது. மக்களிடத்தில் எழுச்சியை ஏற்படுத்தும் ஒரு கலைவடிவமாக அந்நிகழ்ச்சி அமைந்திருக்கிறது என்பதை மற்றவர்களிடம் தெரிவித்ததை அவரிடமும் தெரிவித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் அவர்கள் இல்லத்திற்கும் சென்றேன். நான் கிளிநொச்சியில் நிற்கும்போதே என்னைச் சந்தித்து யாழ் பல்கலைக்கழகத்தில் ஓவியக்காட்சி நடத்துவது குறித்துத் திட்டமிட வந்திருந்தார். நான் வேறொரு இடத்தில் இருந்த காரணத்தால் அன்று சந்திக்க இயலாமல் திரும்பிவிட்டார். இன்று அவருடன் பல்கலைக்கழகம் குறித்து, கலைத்துறை குறித்து பல்வேறு செய்திகளை பகிர்ந்து கொண்டோம். பல்கலைக்கழகத்தில் ஓவியக்காட்சி நடத்துவது குறித்து திட்டமிடலை முடித்துக் கொண்டு தங்கும் விடுதிக்குத் திரும்பினோம்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இடம்பிடித்த வல்வெட்டித்துறை

**வ**ல்வெட்டித்துறை

மிகவும் புகழ்பெற்ற ஒரு பெயர்.

தமிழீழ விடுதலைப புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் பிறந்த ஊர். முதலில் அவர் இல்லத்திற்குச் சென்றோம். குண்டுகள் போட்டு அந்த வீடு சிதைக்கப்பட்டு கிடந்தது.அந்தக் கோலத்தைப் பார்த்து என் குழந்தைகள் "ஏன் இப்படி இடிந்து கிடக்கிறது" என்று கேட்டார்கள்.

"இது பிரபாகரன் மாமா பிறந்த வீடு. அதனால் குண்டுபோட்டு இடித்திருக்கிறார்கள்" என்று சொன்னேன்.

"யார் இடித்தது" அவர்களின் அடுத்தக் கேள்வி.




தகர்க்கப்பட்ட பிரபாகரன் இல்லம்-முகப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிங்கள இராணுவம் இடித்தது, மிச்சமிருந்ததை இந்திய இராணுவமும் இடித்தது" என்றேன்.

நான்கு பக்க சுவர்கள் மட்டும்தான் இருக்கிறது. மேற்கூரை குண்டு தாக்குதலில் முற்றிலும் சேதமடைந்து கிடக்கிறது. உள்ளே சென்று பின்புறம் சென்று ஒவ்வொரு இடத்தையும் பார்வை யிட்டோம். நிறைய மக்கள் பல்வேறு இடங்களிலிருந்து வந்து பார்த்துவிட்டுச் செல்கிறார்கள்.

வருகின்றவர்கள் பலரும் இடிந்த சுவரில் அவர்கள் விரும்பிய வாசகங்களை எழுதிவைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். தமிழ், ஆங்கிலம், சிங்களம் என்று பல்வேறு மொழிகளிலும் கரிக்கோடு களினால் பதிந்துள்ளார்கள்.



பிரபாகரன் இல்லம்
கூரை இடிந்து கிடக்கும் காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு விளையாடிக் கொண்டிருந்த (10 வயதிருக்கும்) சிறுவனை அழைத்து "இது யார் வீடு?" என்று கேட்டேன்.

"எங்கள் தலைவர் வீடு" என்று பட்டென்று பதில் சொன்னான்.

என் மனைவி சாந்தியிடம் "விரைவில் இது வரலாற்றுச் சின்னமாக ஆயிரக்கணக்கானவர்கள் வந்து பார்த்துச் செல்லும் இடமாக இருக்கும் பார்" என்று கூறினேன்.

## புலேந்திரன், குமரப்பா நினைவு சதுக்கம்

அடுத்து புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிரெண்டு மாவீரர்களின் நினைவுச் சதுக்கத்தைப் பார்வையிட அவ்விடத்திற்குச் சென்றோம்.

அதற்கு அருகில் ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவர் அருகில் சென்று நான் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்து அவரிடம் பேச்சுக் கொடுத்தேன். மிகவும் முகமலர்ச்சி யோடு வணக்கம் தெரிவித்து, இந்திய அமைதிப்படை இவ் வல்வெட்டித்துறையில்நடத்திய படுகொலைகளைப் பற்றி விவரிக்கத் தொடங்கினார். திடீரென்று தன் சட்டையைக் கழற்றிய அவர், மார்பில் இருந்த தழும்பைக் காண்பித்து "இதோ பாருங்கள் இந்தியப்படை சுட்டதில் ஏற்பட்ட தழும்பு. வலது புற மார்பில் பாய்ந்த குண்டு இடது புற மார்பு வரை கிழித்துக்கொண்டு வெளியேறியதால் உயிர் தப்பினேன். குண்டடிப்பட்டு தப்பியவன் நான் ஒருவன்தான்" என்றார்.

நான் என்னுடைய 'உறங்கா நிறங்கள்' ஓவியத்தை எடுத்து நான் செய்த வல்வைப்படுகொலை ஓவியத்தைக் காண்பித்தேன். உடனே அவர் "இப்படித்தான் முழங்காலில் நிற்கவைத்து கைகளை பின்னால்கட்டி, மார்பிலே சுட்டார்கள்" என்றார் ஓவியத்தைப் பார்த்து.

நான் இந்த ஓவியத்தைச் செய்தபோது யார் பாதிக்கப்பட்டாரோ அவரிடமே இந்த ஓவியத்தைக் காண்பிக்க நேரிடும் என்று கிஞ்சித்தும் நினைக்கவில்லை. "எங்களுக்கு நிகழ்ந்த கொடுமையை அப்படியே வரைந்திருக்கிறீர்கள்" என்று பாராட்டினார். பிறகுதான் நண்பர் என்னைப் பற்றியும் கண்காட்சி நடக்க இருப்பது பற்றியும் அவரிடமும் அங்கிருந்த வேறு சிலரிடமும் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புலேந்திரன், குமரப்பா உட்பட பன்னிரெண்டு மாவீரர்களின் நினைவுச் சதுக்கம்

"அண்ணே, வேறு எந்த ஓவியருக்கோ, படைப்பாளிக்கோ இல்லாதப் பெருமை உங்களுக்கு இருக்கிறது. பாதிக்கப்பட்ட ஒருவரே உங்கள் ஓவியத்தைப் பார்த்து பாராட்டுவது என்பது வேறு எந்த விருதையும் விட உயர்ந்தது" என்றார்.

அருகில் இருந்த புலேந்திரன், குமரப்பா உட்படப் பன்னிரெண்டு மாவீரர்களின் நினைவுச் சதுக்கத்திற்குச் சென்று எங்களின் வணக்கத்தைத் செலுத்தினோம். "வீரத் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்படப் பன்னிரெண்டு மாவீரர்களை இழந்தபோது எங்கள் தமிழீழத் தேசமே இரத்தக் கண்ணீர் வடித்தது. என்றுமில்லாதவாறு பேரிழப்பைச் சந்தித்தது. இவர்களது இழப்பால் தமிழீழத் தேசமே சோகத்தில் மூழ்கியது."

"இந்திய- இலங்கை அரசுகளின் கூட்டுச் சதிக்கு இந்த இளம் புலிவீரர்கள் மரணமானார்கள். ஆனால் அவர்களது மரணம் சாதர்ரண சோக நிகழ்வு அல்ல. தமிழீழத் தேசிய இனத்தின் சுதந்திர எழுச்சியைத் தூண்டிவிட்ட ஒரு வரலாற்று நிகழ்வாகவே அமைந்தது" என்று அவர்களுடைய மரணத்தைப் பற்றியும் அதனால் விளைந்த விளைவுகள் பற்றியும் என்னிடம் கூறிக்கொண்டு வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிட்டு நினைவிடம்

அதே நினைவுச் சதுக்க வளாகத்திற்குள்ளேயே தளபதி கிட்டுவின் நினைவுச் சதுக்கமும் இருக்கிறது. கிட்டுவைப் பற்றி நான் முன்பே நன்கு அறிந்தவன். அதற்குக் காரணம் அவர் ஒரு சிறந்த ஓவியராகவும் இருந்தது. முறையாக பயிலாவிட்டாலும், சுய சிந்தனை ஓவியராக, நவீன பாணியில் ஓவியங்களைச் செய்து கொண்டிருந்தார். நான் பிரான்ஸ் நாட்டிற்குச் சென்றிருந்தபோது பாரிஸ் நகரத்தில் அவருடைய ஓவியங்களை நண்பர்கள் என்னிடம் காட்டினார்கள். அவருடைய வெளியீட்டுத் திறன் என்னை வியப்பில் ஆழ்த்தியது. “ஒரு போராளியை தளபதியை மட்டும் இழக்க வில்லை. நல்ல மனிதரையும் ஓவியரையும் இழந்து விட்டோம்” என்று நண்பர்களிடம் பாரிஸ் நகரத்திலே அப்போது சொன்னது இப்போது நினைவுக்கு வந்தது.

மேற்குலக நாடுகள் சிலவற்றின் முன்முனைப்புடன் தமிழீழ மக்களின் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த ஆலோசனைகளுடன் சர்வதேசக் கடல்வழியூடாக தமிழீழம் நோக்கி வந்து கொண்டிருந்த தளபதி கிட்டுவையும் ஏனைய போராளி களையும் இந்தியாவின் நாசகாரக் கப்பல்கள் 1993 சனவரி 13 ஆம் நாள் சர்வதேச க் கடற்பரப்பில் வைத்து வழிமறித்து இந்தியக் கரை நோக்கிக் கப்பலைச் செலுத்தும்படி நிர்பந்தித்தன. கேணல் கிட்டு தமிழீழம் நோக்கி வங்கக்கடல் வழியாகப் பயணம் செய்கிறார் என்ற செய்தியும், மேற்குலக சமாதான முயற்சியின் தூதுவனாக அவர் பயணம் செய்கிறார் என்றும் இந்திய அரசுக்கு ஏற்கெனவே தெரியும். ஆனால் அக்கப்பலை வழிமறிக்கும்படி அன்றைய இந்திய அரசு கட்டளையிட்டது.

சனவரி 15ஆம் நாள் இந்தச் செய்தி உலகமெங்கும் பரவிவிட்டது கிட்டுவை உயிருடன் பிடிக்கவேண்டும் அல்லது அவரை அழிக்க வேண்டும், மேற்குலகின் சமாதான முயற்சியைக் குழப்ப வேண்டும் என அன்றைய இந்திய அரசாங்கம் முடிவெடுத்தது. சர்வதேசக் கடற்பரப்பிலிருந்து இரண்டு நாள் கடற்பயணத்தின் பின் கேணல் கிட்டுவும் தோழர்களும் பயணம் செய்தக் கப்பல் சென்னைத் துறைமுகத்திற்கு நேரே இந்தியக் கடல் எல்லை வரை கொண்டு வந்து, சரணடையும் படியும், மறுத்தால் கப்பல் மூழ்கடிக்கப்படும் எனவும் இந்தியக் கடற்படை எச்சரித்தது. சரணடைந்தால் தம் மீது பொய்வழக்குகள் சுமத்தப்பட்டு தமது இயக்கம் மீதும் போராட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீதும் களங்கம் சுமத்த அன்றைய இந்திய அரசு முயற்சிக்கும் என்பதை உணர்ந்து கொண்ட கேணல் கிட்டு கப்பற் சிப்பந்திகள் அனைவரையும் கப்பலைவிட்டு இறங்கிய பின் கப்பலை வெடி வைத்துத் தகர்த்து தன் தோழர்களுடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றில் ஒரு சாதனை வீரராகியவர் தளபதி கேணல் கிட்டு, போராட்டத்தின் ஒவ்வொரு துறையிலும் அவர் போட்ட விதைகளே இன்று விருச்சமாக வளர்ந்து போராட்டச் சோலையை நிறைத்து நிழல் தருகின்றன. போராட்ட வரலாற்றில் அவர் ஓர் அத்தியாயம்'' என்று நண்பர் கூறினார்.

இன்றைய உலகில் தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்கமுடியாத பெரு வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு மிக இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார். அந்த நிலை இன்னும் விரிவடைந்து மக்கள்-புலிகள் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்து விட்டது. சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும் பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக்குத் தனமான செயலை நியாயப்படுத்திவிடும் வேளைகளில் கூட உலகெங்கும் பரந்து நிற்கும் தமிழ் மக்கள் அந்த



கிட்டு நினைவிடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருக்கடிக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் எழுச்சிகொள்கிறார்கள் என்றால் அது கிட்டுவால் அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வும் அடிப்படைக் காரணமா கின்றன என்பதை என்னுடைய அமெரிக்க, அய்ரோப்பிய பயணத்தின் போதே உணர்ந்து கொண்டேன்.

"கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு" என்று கேணல் கிட்டுவைப் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் கூறியது.

உலகின் சரித்திரம் காலத்திற்குக் காலம் உருவாகும் சாதனை யாளர்களின் சரித்திரமாகவே அமைந்திருக்கின்றது. அவ்வாறே ஒரு நாட்டின் வரலாறாக இருந்தாலென்ன, ஓர் இனத்தின் வரலாறாக இருந்தாலென்ன, ஒரு போராட்டத்தின் வரலாறாக இருந்தாலென்ன, அதில் சாதனையாளர்கள் சரித்திரத்தில் இடம் பெறுபவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த வகையில் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், தமிழீழத்தின் வரலாற்றில் ஏன் தமிழினத்தின் வரலாற்றிலேயே இடம்பெறக் கூடிய அளவிற்கு சாதனைகள் பல புரிந்தவர் கேணல் கிட்டு என்று நினைத்தபடியே அந்தச் சதுக்கத்தில் ஏறிநின்று அம்மாவீரனுக்கு என்னுடைய அகவணக்கத்தைச் செலுத்திவிட்டு திரும்பினேன்.

## வல்வைப் படுகொலை

வாகனத்தில் ஏறியவுடன் நண்பர்களிடம் "இந்தியப் படைகள் இங்கே வல்வையிலே மக்களை படுகொலை செய்த இடங்களை எனக்குக் காட்டுங்கள்" என்று சொன்னேன்.

ஜாலியன் வாலாபாக் படுகொலைகள், மைலாய் படு கொலைகள் என்ற உலகின் சரித்திர புகழ்பெற்ற வரலாற்றுப் படு கொலைகள் வரிசையில் வல்வெட்டித்துறைப் படுகொலைகளும் இடம் பெற்றுவிட்டது.

இந்தியப்படை இலங்கையில் செய்த அட்டூழியங்களை நான் அந்த நாட்களிலேயே அறிந்திருந்தேன். அதுவும் வல்வைப் படுகொலைகள் பற்றி மிக நன்றாகவே அறிந்திருந்தேன். அதனால்தான் அதைப்பற்றி ஓவியங்கள் செய்யவும் முடிந்தது. ஏற்கெனவே 'வியட்நாமில் ஒரு மைலாய், இந்தியாவில் ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலியன் வாலாபாக், இலங்கையில் ஒரு வல்வை' என்று இதுபற்றிக் கூறி மூன்றையுமே ஓவியங்களாக வெளிப்படுத்தியிருக்கிறேன்.

பிரித்தானியாவுக்கு ஜாலியன் வாலாபாக் படுகொலை...

அமெரிக்காவுக்கு மைலாய் படுகொலை...

இந்தியாவிற்கு வல்வைப் படுகொலை...

வியட்நாமின் அழகிய, அமைதியான ஒரு சிறிய கிராமம்தான் மைலாய். வியட்நாமை ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அமெரிக்க இராணுவம், திடீரென ஒரு நாள் அக்கிராமத்தினுள் புகுந்து ஏதுமறியாத நூற்றுக்கும் அதிகமான கிராமவாசிகளைச் சுட்டுக் கொன்றது.

இந்த மைலாய் துயரம் என்று அழைக்கப்படுகிற மைலாயப் படுகொலைக்குத் தலைமை தாங்கியவன் தளபதி காலி என்ற அமெரிக்கன்.

இந்தச் சம்பவத்தினால் வியட்நாமிய மக்கள் அடைந்த அதிர்ச்சியையும் ஆத்திரத்தையும் விட அன்று அமெரிக்க மக்கள் தான் கூடுதலாகக் கொதித்தெழுந்தனர்.

அமெரிக்கப் பத்திரிகைகள், அமெரிக்க அரசாங்கத்தின் இந்தக் கோரக் கொலையைக் கண்டித்து ஆசிரியத் தலையங்கங்கள் எழுதத் தொடங்கின.

அமெரிக்க செனட்டில், எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனக் குரல்களை எழுப்பினார்கள்.

இந்தப் படுகொலை தொடர்பான விசாரணை மேற்கொள்ளப் பட வேண்டும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற குரல், அமெரிக்க அரசாங்கத்தைத் தட்டி எழுப்பியது.

அதன் விளைவு:

தளபதி காலி, இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுத் தண்டனை வழங்கப்பட்டான்.

வியட்நாமுடன் எவ்வித சொந்த பந்தமோ, கலாச்சார உறவுகளோ, மதரீதியான தொடர்புகளோ, எதுவுமே அற்ற அமெரிக்க மக்களின் அந்த செயல் உலகில் மனித நேயம் இறந்துவிட வில்லை என்பதை எடுத்துக்காட்டியது.

இந்திய சுதந்திரப்போர் அகிம்சைப் போராட்டமாக உக்கிர மடைந்த காலகட்டத்தில் இந்தியாவின் அமிர்தசரசில் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜாலியன் வாலாபாக்கில் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். 14.4.1919இல் நடைபெற்ற, இன்றும் பிரித்தானிய சாம்ராஜ்யத்திற்கு மாறாத ஒரு வடுவாக இப் படுகொலையானது இருந்து வருகின்றது.

இப்படுகொலை, பிரித்தானிய தளபதி ஜெனரல் டையர் என்பவன் தலைமையில் நடத்தப்பட்ட ஒரு பழிவாங்கல் நடவடிக் கையே. இச் சம்பவம் நடைபெறுவதற்கு மூன்று நாட்கள் முன்னர் மக்கள் மூன்று பிரித்தானியர்களைக் கொலை செய்ததுடன் ஒரு பிரித்தானியப் பெண்மணியை நையப் புடைத்தும் அனுப்பினர். அங்கிருந்த பிரித்தானியரின் நிர்வாகத்திற்குட்பட்ட அஞ்சல் நிலையம், வங்கிகள் ஆகியவற்றை உடைத்து நிர்மூலமாக்கியதைத் தொடர்ந்து வெகுண்டெழுந்த பிரித்தானிய இராணுவத்தினர், ஜெனரல் டையர் என்பவனின் தலைமையில் அமிர்தசரஸ் கிராமத் தினுள் புகுந்தனர். அங்கு ஜாலியன் வாலாபாக்கில் பிரித்தானி யாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த இந்தியர்கள் மீது சரமாரியாக, கண்மூடித்தனமாகச் சுட்டதில், நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் துடி துடித்துச் செத்தனர்.

ஆயிரத்து இருநூற்றுக்கும் அதிகமான மக்கள் படுகாய மடைந்தனர். அவர்களுக்கு ஜெனரல் டையரோ, அல்லது அவனது இராணுவமோ மருத்துவச் சிகிச்சை முதலுதவி அளிக்காவிட்டாலும் உதவி செய்ய வந்தவர்களைத் தடுக்கவில்லை.

இருந்தபோதிலும் ஜெனரல் டையருக்கு பிரித்தானிய அரசு விருது வழங்கி கௌரவித்தது.

ஆனால் வல்வெட்டித்துறையில் இந்தியாவுக்கு எதிராகவோ, இந்திய இராணுவத்திற்கு எதிராகவோ எவ்விதமான ஆர்ப்பாட் டங்களிலும் ஈடுபடாது தாமுண்டு தம் வீடு உண்டு என்று இருந்த அப்பாவி மக்கள் மீது இந்திய இராணுவம் தாக்குதலை மேற் கொண்டு பிரித்தானியாவையும், அமெரிக்காவையும் மிஞ்சி சாதனை படைத்துவிட்டது. ஓடிக்கொண்டிருந்த வாகனத்தில் இருந்த என் மனத்திரையில் இவை எல்லாம் ஓடிக்கொண்டிருந்தன. அந்த இரத்தக் கறைபடிந்த இடங்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்று என் உள்ளுணர்வு வலியுறுத்தியது. 1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 2,3,4ஆம் தேதிகளில் 63 உயிர்களைக் கொன்றும், பல அப்பாவிப் பெண்களைக் கற்பழித்தும் 123 வீடுகளை முற்றாகவே எரித்து நாசமாக்கியும், ஐம்பதுக்கும் மேற்பட்ட போக்குவரத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்களையும், பன்னிரெண்டு மீன்பிடி இயந்திரப் படகுகளையும், 176 மீன் பிடிவலைகளையும் எரித்து நர்த்தனம் புரிந்த இந்திய இராணுவத்தினர், தொடர்ந்து மூன்று நாட்கள் ஊரடங்குச் சட்டத்தை அமல்படுத்தி அந்த ஏழில் நிறைந்த நகரத்தையே சுடுகாடாக்கிவிட்டனர்.

படுகொலைச் சம்பவங்கள் நடைபெற்ற சில இடங்களை காண்பித்துக் கொண்டே வந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு இடத்தையும் காண்பிக்க காண்பிக்க எனக்கு வல்வைப் படு கொலைப் பற்றிய புகைப்படங்கள் மற்றும் நேரில் பார்த்தவர்கள், உயிர் தப்பியவர்களின் வாக்கு மூலங்களோடு 89இல் சென்னையில் வெளிவந்த அந்த சிறு வெளியீட்டில் படித்தவைகள் மீண்டும் நினைவுக்கு வந்தன.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி முற்பகல் 11.30 மணி...

கடைகள் சந்தைகள் வழமைபோல் செயல்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் கலகலப்பாக வருவதும், போவதுமாக இருந்தனர்; வியாபாரமும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

அங்கே சாதாரணமாகவே தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகள் ஆயுதங்களுடன் நடமாடித்திரிவது ஒரு புறமும், இந்திய இராணுவத்தினர் தமது வழமையான ரோந்து நடவடிக் கைகளை மேற்கொள்வது இன்னொரு புறமுமாக இருக்கும்.

வடமராட்சியின் பல இடங்களிலும் தாக்குதல்கள் இடம் பெற்ற நேரங்களில் எல்லாம், இங்கு ஒரு அமைதியான சூழ்நிலை சில மாதங்களாக நிலவி வந்தது.

இதனால் பருத்தித்துறை, மயிலிட்டி, நெல்லியடி போன்ற இடங்களில் இருந்தும் கூட இந்திய இராணுவத்தினரால் பாதிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட மக்கள் இங்கு தஞ்சமடைந் திருந்தனர்.

திடீரென வல்வெட்டித்துறைச் சந்திப் பகுதியில் ஏற்பட்ட துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் அந்த ஊரையே ஒரு கணம் கதிகலங்கவைத்தது. அந்த ஒரு கணத்தில் நாலா புறங்களில் இருந்தும் துப்பாக்கிக் குண்டுகள் வானத்தை கிழித்துக் கொண்டு சென்றன.

அதைத் தொடர்ந்து கடைத்தெருக்களில் நின்ற மக்களும் வீடுகளில் இருந்தவர்களும் பயத்தினால் பாதுகாப்பான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்குப் புகலிடம் தேடி ஓடினார்கள். துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்டுச் சில நிமிடங்களில் ஊரே வெறிச்சோடியது. மருந்துக்குக்கூட மனிதர்களைக் காணமுடியவில்லை. சுமார் 20 நிமிடங்கள் வரை துப்பாக்கி வேட்டுக்களின் சத்தங்களும், பாரிய செல்குண்டுகளின் முழக்கங்களும் காதுகளைப் பிளந்து கொண்டிருந்தன. அதைத் தொடர்ந்து சொற்ப நேரம் மயான அமைதி நிலவியது. அந்தத் தற்காலிக அமைதி நீண்டநேரம் நீடிக்கவில்லை. ஒரு சில நிமிடங்களுக்குள் இராணுவ வாகனங்களின் இரைச்சல் களும், இராணுவத்தினரின் நடமாட்டங்களும் அதிகரிக்கத் தொடங்கின. சுமார் 12.15 மணியளவில் பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் அந்த ஊரைச் சுற்றி வளைத்தனர். ஆம்! .... வல்வை மாநகர் அந்த ஒரு சில நிமிடங்களுக்குள் கருமேகங்களால் சூழப்பட்ட வானம் போன்று பச்சைப் பசேலென்று இராணுவ மயமாக்கப்பட்டது. என்ன செய்வதென்றே தெரியாது திகைத்த மக்கள் இடம்பெயர்ந்து ஓடவும் முடியாது வீடுகளுக்குள்ளேயே நிம்மதியாக இருக்கவும் முடியாத நிலையில் தவித்துக் கொண்டிருந்தனர்.

தமது வாழப்போகும் பிள்ளைகளை இழந்து விடுவோமோ என்று ஏங்கிக் கொண்டிருக்கும் தாய்மாரும், உயிருக்குயிரான கணவன் மாரை இழந்து விதவைகளாக்கப்பட்டு விடுவோமோ என்று பதறிக் கொண்டிருக்கும் மனைவிமாரும் வேண்டும் பிரார்த்தனைகள் ஒவ்வொரு வீடுகளிலும் ஒலிக்கத் தொடங்கின.

சந்தியில் உள்ள வல்வை சன சமூக சேவா நிலையக் கட்டிடம் ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் குவிக்கப் பட்டனர். சந்தியில் உள்ள கடைகளில், மரத்தள பாடங்களுக்குக் கீழ் படுத்திருந்தவர்களையும், மினி வீடியோ சினிமாத் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்த சுமார் 30 இளைஞர்களையும் கீழே இறக்கிக் கொண்டு வந்து சந்தியில் நடுத்தெருவில் உச்சி வெயிலில் இருக்க வைத்தார்கள். அங்கு நின்ற ஒரு சீக்கிய ஜவான் திடீரெனத் தானியங்கி ரைபிளின் விசையைத் தட்டிவிட்டான். 'திலீபன் கூல் பார்' கடையில் இருந்த 36 வயதான அண்மையில் தான் திருமணம் செய்த இ. இராசரத்தினம் அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமடைந்தார். அவருக்கு அருகில் இருந்த கோ.கருணானந்த ராஜா என்பவர் சூட்டுக் காயத்துடன் கீழே விழுந்தார். அவரது வலது பக்க மார்பிலும், கையிலும் இருந்து குருதி ஆறாகப் பெருக்கெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓடிக்கொண்டிருந்தது. அந்தப் பயங்கரமான அனுபவத்தை நேரில் பார்த்துக் கொண்டிருந்த மற்றவர்களின் இதயம் படபடவென்று துடித்துக் கொண்டிருந்தது. அடுத்து என்ன நடக்குமோ என்ற ஏக்கம் அவர்களை உயிரோடு வாட்டிக் கொண்டிருந்தது.

"நீங்கள் எல்லாரும் எல்ரிரிஈ... உங்கள் எல்லாரையும் சுட்டுத் தள்ளப்போகிறேன்."

அருகில் வந்து நின்ற சீக்கியச் சிப்பாய் தனக்குத் தெரிந்த அரைகுறை ஆங்கிலத்தில் கத்திக் கொண்டிருந்தான். பின்னர் எதையோ நினைத்துக் கொண்டவன் போல் அங்கிருந்து விலகிச் சென்றான். தூரத்தே சந்தியில் இருந்து தெற்குப் புறமாக உள்ள சடையாண்டி கோயில் பக்கத்தில் இருந்து நான்கு, ஐந்து சிப்பாய்கள் பெண்கள், சிறுவர்கள், மாணவர்கள் உட்பட 20 பேர் வரையிலான பொதுமக்களை அடித்து அடித்துக் கூட்டிக் கொண்டு வந்தார்கள். அவர்களுடைய உடலில் இருந்து இரத்தம் பீறிட்டுக் கொண் டிருந்தது. கலைச்சோலை புத்தக நிலைய உரிமையாளரின் மகன் மதிவாணனின் கையில் இருந்து இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. அவர்கள் கீழே விழுந்து எழுகின்ற ஒவ்வொரு தடவையும் அடித்துக் கொண்டே இருந்தார்கள். சில நிமிடங்களில் உடுப்பிட்டிப் பக்கத்தில் இருந்து ஒரு ஜீப் வண்டி வந்து சடையாண்டி கோயிலின் முன்னால் நின்றதும், அதில் இருந்து ஆறு சிப்பாய்கள் குதித்து தங்களிடமிருந்த தானியங்கித் துப்பாக்கிகளினால் நாலாபுறமும் சரமாரியாகச் சுடத் தொடங்கினார்கள். அந்த நேரம் பார்த்து சந்தியில் நின்று ஏற்கனவே சுடப்போவதாக எச்சரித்த சிப்பாய்க்கு என்ன வந்ததோ திடீரென அங்கிருந்த பொதுமக்களை நோக்கி வரிசையாகச் சரமாரியாகச் சுட்டான். அந்தக் கணத்தாக்கம் அங்கிருந்த இராணுவ ஜவான்களையே ஒரு கணம் நிலை குலையவைத்தது. வல்வெட்டித் துறை இந்திய இராணுவ முகாம் இரண்டாவது பொறுப்பதிகாரியான கப்டன் ஹர்பன்சிங்கும் அங்கு நின்றான். அவனைத் தட்டிக் கேட்க வேண்டும் என்று அவன் கூட நினைத்துப் பார்க்கவில்லை. அந்த ஒரு வினாடிக்குள் எல்லாமே நடந்துமுடிந்து விட்டது. அந்தத் துப்பாக்கித் தாக்குதலில் அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 வயதான கந்தையா சிவபாக்கியம் என்ற சலவைத் தொழில் செய்யும் பெண்ணும், 60 வயதான தங்கராஜா என்ற வயோதியரும் துடிதுடித்து மரணமடைந்து விழுந்தார்கள். அங்கிருந்த முப்பதுக்கும் மேற்பட்ட வர்கள் பலத்த காயத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் கீழே சரிந்து விழுந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நிகழ்வுகளை நேரில் பார்த்து அனுபவித்து திகில் அடைந்த 43 வயதான திருமதி பத்மா என்ற பெண் தன்னுடைய அனுபவத்தைக் கூறுகையில்,

"இந்திய இராணுவத்தினர் சிவன் கோயில் வீதியில் உள்ள வீடுகளைக் கொளுத்திக் கொண்டு வருகின்றார்கள் என்பதைக் கண்டதும், நானும் எனது பிள்ளைகளும் தப்பிஓட வழியில்லாது தவித்த நேரத்தில் குசினிப் (சமயலறை) புகைப்போக்கியினுள் போய் ஒளிந்திருந்தோம். அதனைத் தொடர்ந்து உள்ளே வந்த சில இந்திய இராணுவத்தினர் எனது வீட்டுக் கதவுகளை உடைத்துத் திறந்து நடு அறைக்குள் எனது சகல உடைமைகளையும், ஆவணங்கள், ரெலிவிஷன், வானொலி போன்றவற்றையும் ஒன்றாகப் போட்டு ஏதோ ஒரு வெள்ளை நிறத்தூளை தூவி மண்ணெண்ணையை ஊற்றி நெருப்பு வைத்தார்கள். அந்த அறையில் மூண்டெழுந்த தீச்சு வாலையின் சூடு, குசினிக்குள் (சமையலறைக்குள்) ஒளிந்திருந்த எங்களைச் சுட்டெரிப்பது போல் இருந்தது. அந்த மண்டபத்தில் எழுந்த புகைமண்டலம் நாங்கள் இருந்த இடத்தினுள் பரவிக் கொண்டிருந்ததால் சுவாசிக்க முடியாமல் சிரமப்பட்டோம். மூச்சுத் திணறி இருமல் வந்து கொண்டிருந்தது. பொங்கி எழுந்த இருமலை எவ்வளவோ அடக்க முயற்சித்தும் முடியவில்லை... அதற்கு மேலும் அங்கிருந்தால் தீச்சுவாலை, நாங்கள் இருந்த குசினி (சமையலறை)யினுள்ளும் பரவிவிடும் என்று பயந்து கையை உயர்த்தியபடியே நாங்கள் அப்பாவிகள் என்று கூறிக்கொண்டு வெளியே வந்தோம். எங்களைக் கண்டதும் ஒரு இராணுவச் சிப்பாய் வெறிகொண்டவன்போல் எனக்கு அருகில் வந்து என் உடல்மீது மண்ணெண்ணையை ஊற்றினான். ஐயோ, என்னை எரிக்க வேண்டாம் என்று அழுது கும்பிட்டேன். அவன் எதையும் பொருட்படுத்தாதவனாய் தன்னிடம் உள்ள தீக்குச்சியைப் பற்ற வைத்தபடி, என்னருகில் நெருங்கி வந்தான்... என் உடலில் அவனது கையில் உள்ள தீச்சுவாலை பட்டால், எனது உடல் நிச்சயம் தீப்பிழம்பாகிவிடும். எனக்கு மயக்கம் வரும்போல் இருந்தது. அந்த நேரம், அவனுக்கு அருகில் நின்ற வேறு ஒரு சிப்பாய் அவனது கையைத் தட்டிவிட்டதால் நான் மயிரிழையில் உயிர் தப்பினேன். காட்டுமிராண்டித்தனமான கூட்டத்திலும் ஒன்று இரண்டு மனிதாபிமானம்மிக்க உள்ளங்களும் இருப்பதை உணர்ந்து கடவுளுக்கு நன்றி சொன்னேன். அதனைத் தொடர்ந்து அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேறியதும் நாங்கள் அங்கிருந்து தப்பிச் சிவன் கோயிலை அடைந்தோம். எங்களுடைய வீட்டிற்கு ஒரு வீடு தள்ளி இருந்த முத்துலிங்கம் என்பவரின் வீட்டிற்குச் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்த அவருடைய மகளைச் சுட்டுவிட்டு அவர்களுடைய வீட்டையும் கொளுத்திவிட்டுச் சென்றார்கள். நல்ல வேளையாக அந்தப் பெண் படுகாயத்துடன் தப்பிவிட்டதாகப் பின்னர் அறிந்தேன்... இந்த ஆபத்தான நிலையில் இந்திய இராணுவம் எங்களுடைய ஊரில் இருக்கும்வரை நாங்கள் நிம்மதியாகவோ, சுதந்திரமாகவோ இருக்க முடியாது..."

அந்தக் கோரச்சம்பவம் நடந்து முடிந்து பத்து நாட்கள் ஆகியும் அந்தப் பெண்ணிடம் பதற்றமும், அச்சமும் நீங்கவில்லை என்பதை அவர்களுடைய பேயறைந்த முகம் காட்டிக் கொண்டிருந்தது.

அந்த வீட்டினுள் ஆண்கள், பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் என்று சுமார் 40 பேர் வரையில் தஞ்சம் அடைந் திருந்தார்கள். அந்த வீட்டின் கூரை சீமெந்தினால் (காங்கிரீட்டினால்) போடப்பட்டிருந்ததால், இராணுவத்தினர் தொடர்ச்சியாக அடித்துக் கொண்டிருக்கும் செல் தாக்குதலில் இருந்து தப்புவதற்காக அந்த வீட்டிற்குள் ஓடிவந்து புகுந்த அயலவர்கள் முப்பத்தி ஏழு பேரும், அந்த வீட்டுக்காரரான இளைப்பாறிய நில அளவை சுப்பிறின்டன் வெங்கடாசலம் சுப்பிரமணியம், அவரது மனைவி இராஜேஸ்வரி, மகன் ரகீதன் மார்க்கண்டன் ஆகியோரும் இருந்தார்கள்.

கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த இராணுவத் தினரைக் கண்டதும், அங்கிருந்த எல்லோருமே கைகளை உயர்த்திய படி எழுந்து நின்றார்கள். 60 வயதான சுப்பிரமணியம், சரளமாக ஆங்கிலம் பேசக்கூடியவர், தனது கைகளை உயர்த்தியபடியே ஆங்கிலத்தில்,

"நான் ரிட்டையர்டு (ஓய்வுபெற்ற) சேவையர் சுப்பிறின்டன்ட்.. இங்கே இருப்பவர்கள்.." சொல்லி முடிப்பதற்குள் அவருக்கு எதிரே துப்பாக்கியை நீட்டியபடி வந்த இந்திய சீக்கிய ஜவான் அவருடைய நெற்றிக்கு குறிவைத்து தனது துப்பாக்கியைவைத்து விசையைத் தட்டிவிட்டான்.

ஐயோ!... அம்மா!.. என்ற சத்தத்துடன் நெற்றியில் இருந்து ரத்தம் பீறிட்ட நிலையில் கீழே விழுந்தார். அந்த மரண ஓலம் ஓய்வதற்கு முன் வேறு ஒரு ஜவான், தன்னிடம் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கியினால் அங்கிருந்தவர்களை நோக்கிச் சரமாரியாகச் சுட்டுக் கொண்டிருந்தான். இந்த அதிரடித் தாக்குதலில், ஒரு சிலர் உருண்டு விழுந்து தப்பிச் சமையல் அறைக்குள்ளும், மலக் கூடத்தினுள்ளும் ஓடிச்சென்று ஒளிந்தார்கள். அந்தக் கோரமான தாக்குதலில் ஒன்பது அப்பாவிகள் அந்த இடத்திலேயே துடிதுடித்து விழுந்தார்கள். பலர் படுகாயத்துடன் கீழே படுத்திருந்தார்கள். ஒன்றரை வயதுடைய அழகான குழந்தை சசி இரத்த வெள்ளத்தில் இறந்துபோய் இருந்தது. இதில் அந்தக் குழந்தையின் தந்தையான 29 வயதுடைய கணேசலிங்கம், 76 வயது வயோதியரான இளையபெருமாள், அவரது மகள் அமிர்தம் உமாதேவி, பழக்கடை புஸ்பாராணி, அவரது மகன் இராசகுரு ஜவனராஜ் (அவன் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படிக்கும் 11 வயது நிரம்பியவன்), 40 வயதான ஈஸ்வரமூர்த்தி ராஜலட்சுமி, ஆதி அருணாசலம் சுந்தரேஸ்வரன், (இவரும் சிதம்பரக் கல்லூரியில் ஏழாம் வகுப்பில் படிப்பவர்) இவர்களுக்கு மத்தியில் காயம் பட்டவர்களும் காயமேதும் அடையாதவர்களும் இறந்தவர்கள் போல் படுத்திருந்தனர். ஆரம்பத்தில் சூடுபட்டு விழுந்த சுப்பிரமணியம் தண்ணீர்.... தண்ணீர் என்று முனகிக் கொண்டிருந்தார். அவர் மீது இன்னுமொரு தடவை சுடுவதற்கு ஒரு ஜவான் எத்தனித்தபோது,

"அவன் இரத்தம் ஓடியே செத்துவிடுவான் தேவையில்லை..." என்று இன்னுமொருவன் கூறியதும் அந்த இடத்தை விட்டு வெற்றிக்களிப்பில் வெளியேறினார்கள்.

இந்தச் சடலங்களின் மத்தியில் காயமடைந்தவர்களும் மற்றவர்களும் மூன்று நாட்கள் வரை அப்படியே பதுங்கி யிருந்தார்கள்.

1989ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை இருந்தது.

இந்தக் கொடூர சம்பவங்கள் நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் வேறு சில சிப்பாய்கள் வல்வெட்டித்துறைச் சந்தியில் இருந்து அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள புட்டாணிப் பிள்ளையார் கோயிலின் முன்பாக உள்ள மகேந்திர ராஜா என்பவரின் வீட்டிற்குள் நுழைந்து மகேந்திர ராஜாவின் தலைமயிரைப் பிடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழுத்து, கோயில் வாசலை நோக்கிக் கொண்டு வந்தான். அவருக்கு 49 வயதாகின்றது. மூன்று பிள்ளைகளின் தந்தை.

"நீ எல்ரீரீஈ..." அந்த ஜவான் வாய்கிழியக் கத்தினான். இன்னுமொரு ஜவான் அவரது 42 வயதான தம்பி வேலும் மயிலும் என்பவரை இழுத்துவந்து அவர்களது வீட்டு வெளிவாசல் கதவுடன் நிறுத்திவைத்து, துப்பாக்கியை மிக அருகில் பிடித்துச் சுட்டதும் வேலும் மயிலும் துடிதுடித்துக் கீழே விழுந்தார். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத வீட்டுக்காரர்கள் அலறித் துடித்தார்கள்.

அவரது மனைவி மகாலட்சுமியின் கண்முன்னாலேயே அந்த அப்பாவிக் கணவன் கொஞ்சம் கொஞ்சமாகத் தன் உயிரை விட்டுக் கொண்டிருந்தார்.

அந்தச் சம்பவத்தைக் கண்டு சிறிதும் இரங்காது மரம் மாதிரி நின்ற மற்றைய சிப்பாய், அவரது அண்ணன் மகேந்திர ராஜாவை சுவருடன் வைத்துச் சுடுவதற்குத் துப்பாக்கியைக் குறிவைத்ததும், அவரது தாய் ஓடிவந்து கட்டிப்பிடித்து அழுதுகொண்டே இராணுவச் சிப்பாய்களை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள். அவரது மனைவி சுசிலாதேவி ஓடிவந்து குறுக்கே நின்று அழுது கும்பிட்டு மன்றாடிக் கொண்டிருந்தாள். அந்த வயதான தாயின் ஓலம் அவர்கள் கல் மனதைக் கரையவைக்கவில்லை. அங்கு நின்ற சிப்பாய் ஒருவன் அந்த வயதான தாயின் முதுகில் சுட்டதும், இரத்தம் பீறிட்ட நிலையில் துடிதுடித்துக் கீழேவிழ மற்றவன் மகேந்திர ராஜாவின் நெஞ்சிற்குக் குறிவைத்துச் சுட்டதும் அப்படியே சுவருடன் சரிந்து விழுந்து உயிரைவிட்டார். அவரைக் கட்டிப்பிடித்து அழுது கொண்டிருந்த சுசிலாவின் கால்களில் துப்பாக்கியினால் சுட்டதில் அவளுடைய காலில் பல இடங்களில் துப்பாக்கிச் சன்னங்கள் துளைத்துச் சென்றன. அந்தப் பதினைந்து நிமிட நேர எல்லைக்குள் இரு கொலைகளையும் நடத்தி முடித்தவர்கள் அட்டகாசமாகச் சிரித்துக் கொண்டே அந்த இடத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தார்கள். காயம்பட்டு, இரத்தம் பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருந்த நிலையில் அந்த வயதான தாயும், சுசிலா தேவியும் வேதனையில் முனங்கிக் கொண்டிருந்தனர். மகேந்திர ராஜாவின் தங்கையை மணமுடித்த மைத்துனர் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளைப் பாடசாலை ஆசிரியரான சுப்பிரமணியம் சக்திவடிவேல், அந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடும்போது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இராணுவத்தினர் வருகின்றார்கள் என்பதை அறிந்ததும், நானும், மனைவியும் பிள்ளையார் கோயிலுக்குள் சென்று ஒரு மூலையில் ஒளிந்திருந்தோம். அப்பொழுது எனது இரு மைத்துனர்களையும் வருமாறுகேட்டபொழுது நாங்கள் வயதான ஆட்கள் தானே எங்களை ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று சொல்லி அவர்கள் வீட்டிலேயே இருந்தார்கள். சே... இறந்தவர்களைப் பார்த்து அழுது எங்களுடைய வேதனைகளைத் தீர்க்கவோ, சமயக் கிரிகைகளைச் செய்து தகனம் செய்யவோ, காயம்பட்ட என்னுடைய மாமியையும் சகோதரியையும் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லவோ முடியாத நிலையில் இறந்த உடல்களின் நாற்றத்தின் மத்தியில் மூன்று நாட்கள் வரை அப்படியே இருந்தோம்" என்று வேதனையுடன் கண்ணீர் மத்தியில் கூறினார்.

அந்த வீடு மிகப்பெரிய கல்வீடு. அருகே நெடிதுயர்ந்த வேப்பமரமும், அதற்குச் சற்றுத்தள்ளி ஒரு கார் ஷெட்டும் உள்ளது. தொடர்ச்சியாகக் கேட்டுக் கொண்டிருந்த துப்பாக்கி வேட்டுகள், மோட்டார் செல் குண்டுகளின் சத்தங்களினால் பீதியடைந்த அந்தத் தெருவைச் சேர்ந்தவர்கள் சுமார் நூற்றிஐம்பதுபேர்வரை அந்த வீட்டிற்குள் வந்து தஞ்சமடைந்திருந்தார்கள். அவர்களில் பத்துப்பேர் மட்டுமே ஆண்கள், அதிலும் இருவர் வயதானவர்கள். ஏனையவர்கள் எல்லோரும் பெண்களும் குழந்தைகளுமாகவே இருந்தனர்.

தெருவில் ஒழுங்கையில் உள்ள வீடுகளை உடைத்தும், எரித்தும், கொள்ளையிட்டும் வந்து கொண்டிருந்த இராணுவத்தினர் அந்தவீட்டின் கதவையும் உடைத்துத் தள்ளித் திறந்தவுடன் வாசலில் நின்றபடியே, ஒருவன் வீட்டை நோக்கி செல்வ்லோடிங் றைபிளினால் சரமாரியாகச் சுட்டான். அந்த வீட்டின் யன்னல் கண்ணாடிகள் உடைத்து தூள் தூளாக நொறுங்கியது. யன்னலினூடாகச் சென்ற துப்பாக்கிக் குண்டுகள், வீட்டின் முன் கூடத்தில் இருந்த மேசை நாற்காலிகள், ஷோகேஸ் ஆகியவற்றைப் பதம் பார்த்தது. அதை அடுத்து அறையில் அச்சத்தினால் பதுங்கி இருந்தவர்கள் எல்லோரும் வெளியே வந்து நின்றார்கள். உள்ளே சுமார் 30 இராணுவத்தினர் வரை றைபிள்களை நீட்டியபடி வந்தார்கள். அங்கு நின்றவர்களில் ஆண்களை வேறாகவும் பெண்களை வேறாகவும் பிரித்து, இரண்டு முதியவர்களையும் பின்னர் பெண்களுடன் போய் நிற்கும்படி பணித்தார்கள். மிகுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டு ஆண்களையும் அங்குள் கார்ஷெட்டுக்கு முன்னால் (அது இப்பொழுது மாட்டுத் தொழுவமாக பயன்படுத்தப்படுகிறது) முழங்காலில் குந்தி இருக்கவைத்துவிட்டு ஒருவன் சுடுவதற்கு ஆயத்தமாக நின்றான். சிறிது தூரம் தள்ளி அழுது கூக்குரல் இட்டுக் கொண்டிருந்த அவர்களது தாய்மார்களையும் மனைவிமார்களையும் சகோதரிகளையும் பிள்ளைகளையும் கிட்ட நெருங்க விடாது அங்கு நின்ற ஏனைய ஜவான்கள் துப்பாக்கியினால் மிரட்டிக் கொண்டே இருந்தார்கள். அந்த ஆண்கள் எட்டுபேரும் பலிபீடத்தில் நிறுத்தப் பட்ட ஆட்டுக்கடாக்கள் போன்று விழிகள் பிதுங்கப் பேயறைந் தவர்கள் போல் நின்றார்கள். அந்தக் கார் செட்டின் முன்னால் முழங்காலில் நிற்கவைத்த ஒரு நிமிடத்திற்குள் மற்றைய ஜவான், அந்த எட்டுப்பேரையும் நோக்கித் துப்பாக்கியினால் வரிசையாகச் சரமாரியாகச் சுடத் தொடங்கினான்.

அந்தச் சீக்கியச் சிப்பாயின் கண்கள், வெறியினால் சிவந்து போயிருந்தன.

ஆம்!... அவர்களது மனைவிமார், தாய்மார், சகோதரிகள், பிள்ளைகள் முன்னிலையிலேயே அந்தப் பாதகன் அவர்களைச் சுட்டு வீழ்த்தினான்.

இந்தச் சம்பவத்தை நேரில்பார்த்து மயிரிழையில் தப்பிய 68 வயதான இளைப்பாறிய தபால் அதிபரான ஏ.ஆர். சிவகுரு என்பவர், "அந்தப் பயங்கரமான சூழலில் ஆண்களை வேறாக முட்டுக்காலில் நிற்கவைத்துச் சுட்டபோது நான்குபேர் அந்த இடத் திலேயே கொல்லப்பட்டனர். அதில் தனது கணவன் இறந்ததற்காக அங்கு சற்று தூரத்தில் தடுத்து வைக்கப்பட்ட ஒரு பெண் வீறிட்டுத் தலையிலும் நெஞ்சிலும் அடித்து அழுது கொண்டிருந்தபொழுது அங்கு நின்ற ஒரு சீக்கிய ஜவான் "கத்தாதே, கத்தினால் உன்னையும் கொன்று விடுவோம்" என்று அவளை மிரட்டி அடக்கினான். "இங்கே தமிழனாகப் பிறந்தவர்களுக்கு இறந்தவர்களுக்காக ஒரு துளி கண்ணீர் விட்டு அழக்கூடவா உரிமையில்லை...?" என்று விரக்தியுடன் கூறிக் கொண்டார். இந்திய இராணுவத்தினரின் இந்த நடவடிக்கையினால் அவர் மனம் குழம்பிப் போயிருந்தார்.

வைத்தியசாலைக்கு வருகைதந்து காயம்பட்டவர்களையும் ஊனப்பட்டவர்களையும் பார்வையிட்ட யாக்கரை முகாம் டெபுடி கமாண்டர் கேணல் அவுஜுலா அங்கு வைத்தியசாலையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னால் குழுமி நின்று இந்தியப் படையினரின் நடவடிக்கை களுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் முன்னிலையில்,

"எனது இராணுவத்தினர் நடந்து கொண்ட முறைக்காக நான் வெட்கப்படுகிறேன். இது எனது இந்திய நாட்டையே அவமானப் படுத்துவதாக உள்ளது. இதுபோன்ற சம்பவங்கள் இனி எதிர்காலத்தில் நடைபெறாது என்பதை உங்களுக்கு உறுதிப் படுத்துகிறேன்... அப்படி இனிமேலும் நடக்குமானால் நான் உங்கள் முன்னிலையில் வந்து நிற்கிறேன்... என்னைக் கல்லால் எறிந்து கொல்லுங்கள்..." என்று உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கண்ணீரின் மத்தியில் அந்தச் சீக்கிய கேணல் கூறியதும் எல்லோரும் தங்கள் துயரத்தையும் மறந்து ஆறுதலடைந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

வைத்தியசாலையின் கடந்த கால தாக்குதல் நிகழ்வுகள், அன்றும் அங்கு தஞ்சம் புகுந்திருந்தவர்களின் மனதில் ஏதோ ஒரு அச்சத்தையும் நடுக்கத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அங்கு வந்த இராணுவத்தினர் வைத்தியசாலையைச் சுற்றி வரக் காவல்போட்டு எவரையும் வெளியே செல்லவிடாது தடுத்துக் கொண்டிருந்தனர்.

குழந்தைகள் பசியால் வீறிட்டு அலறிக் கொண்டிருந்தன.

அங்கே இருந்தவர்களின் உதடுகள், தாகத்தினால் ஒட்டி உலர்ந்து போயிருந்தன.

... அங்கு கொண்டு வரப்பட்ட அப்பாவிப் பொதுமக்களை ஒவ்வொருவராகப் பிடித்துத் தனது பூட்ஸ் காலினால் உதைத்தும், கன்னத்தில் அடித்தும் ஒரு அறைக்குள் அனுப்பிக் கொண்டிருந்தான். அந்த அறையின் வாசலில், குண்டர்கள் போல், ஆறு ஏழு சீக்கியர்கள் உருளைக் கம்புகளினால், அடித்தும் குத்தியும் ஒவ்வொருவராக அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

அந்த அறை முழுவதும் ஐயோ!... அம்மா! என்ற அவலக் குரல்கள், அந்தப் பிரதேசத்தையே அதிரவைத்துக் கொண்டிருந்தன.

அதற்கு அடுத்த சுவரை அடுத்துள்ள கூடாரத்தின் கீழ் இருந்த கேணல் சர்மா எதுவுமே தெரியாதவர்போல் யாருடனோ டெலிபோனில் பேசிக்கொண்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு இராணுவமுகாமில் நடைபெறுகின்ற ஒவ்வொரு விஷயமும் அந்த முகாம் பொறுப்பதிகாரிக்கு தெரிந்திருக்க வேண்டும் அல்லது அவரது உதவி இராணுவ அதிகாரிகள் அவரது கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும்.

இவை இரண்டுமே இல்லாவிட்டால் அவர்களை ஒரு கட்டுக்கோப்பான இராணுவம் என்று எப்படி அழைக்க முடியும்?

கேணல் சர்மா தனக்கு எதுவுமே தெரியாது என்று சொல்வது மிகவும் வேடிக்கை!

உலகின் 4ஆவது பெரிய இராணுவம் இப்படியா செயல் படுகிறது?

அங்கிருந்த 34 அப்பாவிகளையும், அந்த அறையினுள் தள்ளிவிட்டு, தமது வழமையான சித்திரவதைப் பரிசோதனைகளை நடத்திக் கொண்டிருந்தனர்.

அவர்களுடைய நவீன இஸ்ரேல் மொசாட் படையினரையும் மிஞ்சும் சில சித்திரவதைகள் நம்பமுடியாமல் கூட இருக்கலாம். ஆனால் அதில் இருந்து தப்பிவந்தவர்கள் கூறும் கண்ணீர்க் காவியங்களோ ஏராளம்.

ஆண் உறுப்பில் மின்சாரத்தைச் செலுத்துவது!...

ஆள் அளவு குழிதோண்டி அதனுள் நிற்கவைத்து கழுத்து வரை மண்ணால் மூடிவிட்டு இரண்டு, மூன்று நாட்கள் வரை நீர் கூட இல்லாது விடுவது!...

தலை கீழாகத் தொங்கவிட்டு, காய்ந்த மிளகாய்ப் புகை பிடிப்பது!...

கைகளையும், கால்களையும் நைலோன் கயிற்றினால் கட்டி விட்டு வாயினுள்ளும், மூக்கினுள்ளும் தொடர்ச்சியாகத் தண்ணீரை விடுவது!

நான்கு, ஐந்து பேரை ஒன்றாகப் பிணைத்து அவர்களது கண்களைக் கட்டிவிட்டு ஓடவிடுவது, ஓடி விழுந்தால் அடி போடுவது!...

ஆகஸ்ட் திங்கள் 3ஆம் நாள்...

அன்று,

அதிகாலையிலேயே பொழுது விடிந்து விட்டது போன்ற உணர்வில் மக்கள் பயத்தின் மத்தியில் விடிவை நோக்கி விழித்துக் கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை ஏழுமணியில் இருந்தே ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் வல்வெட்டித்துறை நகரை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர்.

அன்றும் நகரின் நாலாபுறத்தில் இருந்தும், இராணுவத்தினர் ஒவ்வொரு வீடாகச் சோதனையிடத் தொடங்கினர்.

பொலிகண்டியில் இருந்து மானாங்கானை என்ற இடத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர் சாலையின் ஊடாக வந்த இராணுவத்தினரில் ஆறுபேர், சோமசுந்தரம் இராஜேஸ்வரியின் வீட்டிற்குள் நுழைந்தார்கள்.

"எல்ரிரிஈ இருக்கா?" அவர்கள் வடக்கு கிழக்கில் எந்த வீட்டினுள் போனாலும் கேட்கின்ற வழமையான கேள்விதான் இது.

அந்த வீட்டினுள் நுழைந்ததும் அவர்களில் ஒருவன் வாசலில் நின்ற 60 வயதுடைய இராஜேஸ்வரிக்கும் அவரது மகள் தனலட்சுமிக்கும் கன்னத்தில் மாறி மாறி அடித்தார்கள்.

இன்னுமொரு சிப்பாய்,

எங்கே தம்பி? என்று கேட்டுக்கொண்டே பின்புறம் உள்ள சமையல் அறைக்குள் போனான். அங்கே, பயத்தினால் நடுங்கிக் கொண்டிருந்த 19 வயது மாணவர்களான அருட்பிரகாசம் சுவர்ணதாஸ், குமாரவேல் செல்வானந்தவேல் என்பவர்களைக் கண்டதும் அவர்களின் தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டு வெளியே வந்தான். சுவர்ணதாஸ் வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயத்திலும், செல்வானந்தவேல் வல்வெட்டித்துறை சிதம்பரக் கல்லூரியிலும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

செல்வானந்தவேலின் வீடு, தீருவில் தெருவில் இருக்கின்றது. முதல் நாள் பிரச்சினையினால், பயந்துபோய் இங்குவந்து தங்கி இருந்தான்.

சம்பவம் நடந்த இடத்தில் இருந்து ஒன்றரைக் கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இந்த இடத்திற்கு இராணுவம் வருமென்று அவன் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

சுவர்ணதாஸ், வெற்றிலைக்கேணியில் இருந்து தனது பாட்டி வீட்டிற்கு வந்து இருந்தவன்.

அந்த இரு மாணவர்களையும், வெளியே இழுத்து, அவர்கள் இருவரதும் கைகளை நைலோன் கயிற்றினால் கட்டி தெருவழியே இழுத்துக் கொண்டு போனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களின் பின்னால் தள்ளாடும் வயதில் சுவர்ணதாசின் பாட்டி இராஜேஸ்வரி அம்மாள் அழுதுகொண்டு பின்தொடர, துப்பாக்கியின் கைப்பிடியினால் ஓங்கி, அவருடைய தோள் பட்டையில் அடித்தான். அந்த அடியின் வேதனையை கிழவியினால் தாங்க முடியவிலலை.. அதற்கு மேல் அவளால் ஒரு அடிகூட நகரமுடியவில்லை அப்படியே தரையில் விழுந்து விட்டாள்.

அந்த இளம் மாணவர்களின் அலறல் அந்தச் சாலையெங்கும் எதிரொலித்தது.

தமிழ் ஈழத்தில் தமிழ்க் குழந்தைகளாகப் பிறந்ததற்காகப் இப்படியா தண்டனை அனுபவிக்க வேண்டும்?

அவர்களை அப்படியே கட்டி இழுத்துக் கொண்டு சென்று, கடற்கரையோரமாக உள்ள ஊரணி அரசினர் வைத்தியசாலைக்குச் சற்று எதிர்ப்புறமாக உள்ள தீர்த்தக் கடற்கரைக்கு முன்னால் படுக்க வைத்து கத்தியினால் நெஞ்சிலும் தலையிலும் குத்திக் காயத்தை ஏற்படுத்தினார்கள்.

உடலில் இருந்து குருதி பெருக்கெடுத்து ஓடிக்கொண்டிருகின்ற நிலையிலும் அந்த இரு சிறுவர்களும் "எங்களை ஒன்றும் செய்யாதீர்கள்! நாங்கள் உண்மையிலேயே அப்பாவிகள்.. படித்துக் கொண்டிருக்கிறோம்."

ஈனஸ்வரத்தில் அழுது புலம்பிக் கொண்டிருக்கும் பொழுதே, ஒரு சிப்பாய் அவர்களுக்கு மிக அருகில் நெருங்கி அவர்களைக் குறிவைத்துத் துப்பாக்கியின் விசையைத் தட்டி விட்டான்.

அவ்வளவுதான்!

ஐயோ!... அம்மா! என்று வானமே அதிரும் வண்ணம் ஒலித்த குரலைத் தொடர்ந்து அந்த இரு சிறுவர்களும் இரத்த வெள்ளத்தில் மிதந்தனர்.

ஒரு மரண வீட்டில் துக்கம் கொண்டாடுவதற்காக இருந்த ஆண்கள் அனைவரையும் வயது வேறுபாடின்றி வெளியே இழுத்து வந்து வரிசையாக நிற்கவைத்தார்கள்.

"நீங்கள் எல்லாரும் எல்ரீரீஈ உங்கள் எல்லாரையும் சுடவேணும்.." அங்கு நின்ற சிப்பாய் வெறிபிடித்தவன் போல் கத்தினான். அங்கே சாவு வீட்டில் இருந்த பெண்கள் எல்லோரும் வெளியே ஓடிவந்து மூர்க்கத்தனமாக நின்று கொண்டிருந்த சிப்பாய்களின் காலில் விழுந்து அழுதார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கல்லை இளக வைக்கலாம். இந்தக் கயவர்களை இளக வைக்க முடியுமா?

அந்த இராணுவத்தினர், தாங்கள் கைது செய்தவர்களை இழுத்துக் கொண்டு ஜங்ஷனை நோக்கி நடந்தார்கள். அவர்களின் பின்னால் அழுது கூக்குரலிட்டுக் கொண்டே ஓடி வந்த பெண்களைச் சப்பாத்துக் காலினாலும், ரைபிள் பிடியினாலும் ஓங்கி அடித்தார்கள். அந்தச் சிப்பாய்களிலும் ஒருவன் தனது கையில் உள்ள ரைபிளினால் குறிவைத்துக் கொண்டு நின்றதும் அந்தப் பெண்களின் வேகம் தடைப்பட்டது.

அவர்களுடன் சுமார் முப்பது பொதுமக்கள் வரை, கூட்டிச் செல்லப்பட்டனர்.

வல்வெட்டித்துறை ஜங்ஷனை அடைந்ததும், அவர்களை நடுச் சந்தியில் உள்ள தார்ரோட்டில் இருக்க வைத்தார்கள்.

முதல் நாள் சுடப்பட்டவர்களின் சடலங்கள் ஊதிப்பொருமல் அடைந்துபோய் இருந்தன.

சில நிமிடங்களில் ஒரு சிப்பாய், அவர்களுக்கு அருகில் வந்து அங்கிருந்தவர்களின் சிலருடைய மயிரைப் பிடித்துத் தூக்கி இழுத்துக் கொண்டு போய்ச் சந்தியின் எதிர்ப்புறமாக உள்ள எரிந்த கடை ஒன்றின் முன்னால் நிற்க வைத்தான்.

அங்கிருந்தவர்களின் முகங்கள் பேயறைந்ததுபோல் இருந்தன; கண்கள் இமைக்க மறுத்தன.. என்ன நடக்குமோ என்ற ஏக்கம் எல்லோரையும் கதிகலங்க வைத்துக் கொண்டிருந்தது.

எதுவுமே நடந்துவிடக்கூடாது என்று நினைத்துப் பார்ப்பதற்கு முன்னரே அங்கு நின்ற ஜவான் ஒருவன், அந்த ஆறுபேரையும் படபடவென்று சுட்டுத் தள்ளிவிட்டுத் தன் கையில் வைத்திருந்த செல்வ் லோடிங் ரைபிளை திருப்பிக் கொண்டு அப்பால் சென்று கொண்டிருந்தான்.

அவர்கள் அந்த ஒரு கணத்திலேயே விழுந்து கால்களைத் தரையுடன் அடித்துத் துடித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆண்டவன் கூட சிலவேளைகளில் பாராமுகமாக இருந்து விடுகின்றானோ என்னவோ, அந்தச் சொற்ப நேரத்திற்குள் அவர்கள் பட்ட அவஸ்தையை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆம்... அவர்களுடைய மரண அவஸ்தையைத் தொடர்ந்து அந்த ஆறு மனிதர்களின் உயிரும் சிறிது சிறிதாகப் போய்க் கொண்டிருந்தது.

இவர்கள் அந்த இடத்திலேயே, அவர்களுடைய உறவினர்கள் பார்த்துக் கொண்டிருக்கத் துடிதுடித்து இறந்தார்கள்.

இப்படியே அன்று முழுவதும் எங்கும் ஒரே துப்பாக்கி வேட்டுக்களும், செல் தாக்குதல்களுமாகவே இருந்தன...

எரிக்கப்படாத வீடுகள் மேலும் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தன.

ஆகஸ்ட் திங்கள் 4ஆம் திகதி... மூன்றாவது நாள்!

இரண்டு நாட்களிலும் சுற்றிவளைத்துச் செய்து முடிந்த அக்கிரமங்களால் இந்திய இராணுவத்தினர் திருப்தியடைந்து போயிருப்பார்கள் என்று நினைத்துத் தூக்கத்தில் இருந்தும் எழுந்த அந்த நகரத்தின் மக்களுக்கு அன்றும் அதிகாலையில் இருந்தே நாய்கள் குரைப்பதைக் கேட்டதும் வயிற்றைக் கலக்கிக் கொண்டு வந்தது!

அன்றும் ஆயிரக்கணக்கில் இராணுவத்தினர் குவிக்கப் பட்டனர்.

பூட்டிக் கிடந்த வீடுகள் உடைத்துக் கொள்ளையடிக்கப்ப ட்டன.

எரிக்கப்படாத சில வீடுகள் அன்றும் எரிக்கப்பட்டன! இது பற்றிக் கந்தசாமித்துரை என்பவர்,

"இரண்டு நாட்கள் ஆடிய ஆட்டத்தினால் இராணுவத்தினரின் ஆத்திரம் அடங்கியிருக்கும் என்று நினைத்திருக்கும் பொழுது 4.8.89 காங்கேசன் துறை வீதியில் உள்ள எனது வீட்டிற்குள் நுழைந்த சீக்கியப்படையினர், என்னையும் மனைவி பிள்ளைகளையும் வெளியே வருமாறு கூறி, வீட்டில் உள்ள அத்தனை பொருட் களையும் ஒரு அறையில் கொண்டு வந்து குவித்து எண்ணெய் ஊற்றி எங்கள் கண் முன்னாலேயே எரித்தார்கள். இந்திய இராணுவத்தினர் இவ்வளவு மூர்க்கத்தனமாக நடந்து கொள்வார்கள் என்று நாங்கள் நினைக்கவில்லை"

என்று குறிப்பிடும்பொழுது, போரில் விடுதலைப் புலிகளை நேருக்கு நேர் சந்திக்க முடியாத இராணுவத்தினரின் மனோ வலிமையை உணரக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலைகள், எரிப்புகள், கொள்ளைகள்.... இவற்றைவிடச் சில தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் கற்பழிப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன.

உடுப்பிட்டி, வீரபத்திரர் கோயில் வீதியில் காவலுக்கு நின்ற சீக்கியச் சிப்பாய்கள், அங்கு உள்ள சில வீடுகளுக்குள் சோதனை என்ற பெயரில் நுழைந்து இளம் பெண்களை மட்டுமல்ல, தலைநரைத்துச் சிறிது முதுமை தட்டிய பெண்களையும் கூட அவர்கள் ஆடைகளை உரிந்து, நிர்வாணமாக்கி மானபங்கப்படுத்தித் தங்கள் காமவெறியை அடக்கிய கோரச் சம்பவங்கள் கூடப் பல இடங்களில் நடைபெற்றன.

ஒருமுறை திரு.ஜே.என்.தீக்சிற் இலங்கைக்கான தூதுவராக இருந்தபொழுது, யாழ்ப்பாணம் அன்னையர் முன்னணியைச் சேர்ந்த பெண்கள், குழுவொன்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் அவரைச் சந்தித்தபொழுது இடம் பெற்ற சுவையான சம்பாசணை இந்த இடத்தில் நினைவு கூரப்பட வேண்டும்.

தூதுக்குழுவில் சென்ற ஒரு பெண், யாழ் நகரில் இந்திய இராணுவத்தினரால் கற்பழிக்கப்பட்ட முப்பது இளம் பெண்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரமாண வாக்கு மூலங்களைத் தூதுவர் திக்சிற் அவர்களிடம் கொடுத்து,

"மேன்மைக்குரிய தூதுவர் அவர்களே!... இப்படியான செயல்களை உங்கள் படைவீரர்கள் தொடர்ந்தும் செய்யாது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.. அவர் களுடைய இந்த நடவடிக்கைகள் பாரம்பரியமிக்க பாரதத்திற்குத் தான் களங்கத்தை ஏற்படுத்தும்..."

அந்தப் பெண் தீக்சிற்றிடம் தனது மன உணர்வுகளை வெளிப் படுத்தி அவர் என்ன சொல்லப்போகின்றார் என்பதைக் கேட்கும் பாவனையில் நின்றார்.

"என்ன சொல்கிறீர்? எங்களுடைய ஜவான்கள் ஒரு போதும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இவ்வாறான செயல்களில் ஈடுபட மாட்டார்கள்."

அவருடைய தன்மானம் அவரைச் சுட்டெரித்திருக்க வேண்டும். "தனது ஜவான்கள் தனிமையில் இருந்தால்கூட இவ்வாறான பாவச் செயல்களைச் செய்யமாட்டார்கள்" என்று அடித்துப்பேசினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... அப்படியென்றால் உங்களுடைய இந்திய ஜவான்களுக்கு ஆண் உறுப்புக்கூட இல்லாமல் போய்விட்டதோ?" சிரிக்காது முகத்தில் எந்தவிதமான மாறுதலும் இன்றி அந்தப் பெண் சொன்னதும் தூதுவர் முகத்தில் ஈயாடவில்லை. இந்தியப் படையினர் நடத்திய காமவெறியாட்டங்கள் பற்றி ஆதாரங்களுடன் கொடுத்த புகார்களை அலட்சியம் செய்த தீட்சித்தின் மீது ஆத்திரமுற்ற அந்த பெண்மணி அவ்வாறு கேட்டாள்.

இப்பொழுது மீண்டும் வல்வெட்டித்துறையில் அது போன்ற சம்பவத்தினால் பதினைந்துக்கும் அதிகமான பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வெறித்தனத்தால் பாதிக்கப்பட்டு நிலைகுலைந்து போன ஒரு பெண்ணின் சோகக் கதையைக்கேட்கும் பொழுது நெஞ்சே வெடித்துவிடும் போல் இருக்கின்றது.

36 வயதான, உடுப்பிட்டி, வீரபத்திரர் கோயிலடியைச் சேர்ந்த இந்திரா என்ற பெண் அன்று தனது வீட்டில் ஆறு வயது மகனுடன் தனித்தே இருந்தாள். அந்தச் சம்பவம் பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"எனது கணவர் யாழ்ப்பாணத்தில் வேலைக்குப்போனவர் ஊரடங்குச் சட்டத்தினால் வீட்டிற்குத் திரும்பவில்லை. நானும் எனது மகனும் வீட்டில் இருந்தபொழுது இந்திய அமைதிப் படையைச் சேர்ந்த நான்கு சீக்கியர்கள் எனது வீட்டிற்குள் வந்து வீட்டைச் சோதனையிடப் போவதாகக் கூறினார்கள். நான் உடனே, வீட்டை விட்டு வெளியே வந்து, முற்றத்தில் நின்றேன். அப்பொழுது ஒரு சிப்பாய் எனது முதுகில் துப்பாக்கியினால் தள்ளிப்பிடித்தபடி அறைக்குள் போகுமாறு கூறித் தள்ளினான். எனது ஆறு வயது மகன் பயத்தினால் வெளியே ஓடிப்போய் அழுது கொண்டு நிற்க, மற்றைய சிப்பாய் அவனைப் பிடித்து இழுத்துவந்து ஒரு மூலையில் உட்காரவைத்தான். இரண்டு சீக்கியர்கள் என்னைப் பிடித்து அறைக்குள் இழுத்தார்கள். ஒருவன் நான் சத்தமிடாதபடி என் வாயை அமுக்கிப் பிடித்தான். மற்றவன் எனது ஆடைகளைக் கழற்றி மானபங்கப்படுத்தினான். எல்லாம் முடிந்து போகும்பொழுது அந்த வெறிபிடித்த சிப்பாய், என் அருகில் வந்து இதுபற்றி எவரிடமாவது முறையிட்டால் உங்கள் எல்லோரையும் குடும்பத்துடனேயே சுட்டுத்தள்ளி விடுவேன் என்று சொல்லிவிட்டு வெளியேறினான்."

கண்ணீரின் மத்தியில் கூறிக்கொண்டிருந்த அந்தப் பெண் குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் மற்றைய பெண்கள் மாதிரி தற்கொலை செய்யவோ, மூடி மறைக்கவோ போவதில்லை. அந்த வெறிநாய்கள் இங்கே அமைதிப் படை என்ற பெயரில் வந்து செய்கிற அட்டூழியங்களை நாளை உலகுக்கு அம்பலப்படுத்தத்தான் போகிறேன்"

கண்ணீரின் மத்தியிலும் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு சொன்னாள், அந்தத் தமிழச்சி!

அப்போது இவற்றைப் படித்தபோதும் அழுதேன். இப்போது இந்த இடங்களைப் பார்க்கும்போதும் மனதுக்குள் அழுதேன். இடங்கள் மாறியிருக்கலாம். காயங்கள் ஆறியிருக்கலாம். ஆனால் அந்த மக்கள் மனதில் ஏற்பட்ட தழும்புகள் மாறவில்லை.

"கணவனின் உடலை மனைவியும், தந்தையின் உடலை மகளும், மகனின் உடலை தாயும் தகனம் செய்த அந்தக் கொடூரமான நெஞ்சை உருக்கும் நிகழ்வுகள் உலகின் எந்தப் பெண்களுக்குமே ஏற்படக் கூடாது. சில மனிதர்களின் உடல்கள் உறவினர்கள் எவரும் இல்லாமலேயே வீதிகளிலும் சந்துகளிலும் எரிக்கப்பட்டன. நாய்களைப் புதைப்பதுபோல..." என்று ஒரு முதியவர் சொன்னது நிகழ்வின் முழு பரிமாணத்தை உணர்ந்து கொள்ள முடிந்தது. பதினாறு ஆண்டுகள் கடந்த பிறகும்.

அக்காலக்கட்டத்தில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் இப்படுகொலை குறித்து எழுதியவற்றையும் இந்த இடத்தில் நினைத்துப் பார்க்கிறேன்.

"ராஜீவ் காந்தியின் இராணுவ சாகசத்தால், இலங்கை இந்தியாவின் வியட்நாமாக மாறும் என்று நான் 1987 ஆகஸ்ட் ஆரம்பத்தில் சொன்னேன். அப்போது இந்திய வியட்நாமிலும் ஒரு மைலாய் இருக்குமென்று நான் எதிர்பார்க்கவில்லை. இராணுவத்தினர் எங்கும் ஒரே மாதிரியானவர்கள்தான் என்று நான் அறிந்திருந்தேன், மீண்டும் மீண்டும் இதை வலியுறுத்தியிருக்கிறேன். அவர்களது பயிற்சியும் கடுமையான வாழ்முறையும், போர் அவர்களிடம் தூண்டிவிட்ட மிருகத்தனத்துடன் இணைந்து சிக்கலான சமயங்களில் அவர்களை மனிதாபிமானமற்று நடக்கச் செய்கின்றன. இதனால்தான் ஆரம்பகால இந்திய இராணுவ நடவடிக்கைகளின் போது கிளம்பிய கற்பழிப்பு, கொலை கதைகளை இந்திய அரசின் பிரச்சாரகர்கள் மறுத்தபோதும் நமது இந்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ வீரர்கள் சாரணச் சிறுவர்கள்போல் போர்க்களங்களில் தினமும் நற்காரியங்கள்- குறிப்பாக திக்கற்ற அபலைகளுக்கு - செய்து கொண்டிருக்கின்றனர் என்ற வாதங்களையும் கேள்விக் குள்ளாக்கினேன்.

இன்று வல்வெட்டித்துறையில் இந்திய இராணுவம் தனது மைலாயை நிகழ்த்தியிருக்கிறது. இந்திய இராணுவம் வல்வெட்டித் துறையில் காட்டிய காட்டுமிராண்டித்தனத்தைப் பற்றி லண்டனி லிருந்து வெளியாகும் 'டெய்லி டெலிகிராஃப்' தனது தலை யங்கத்தில் விமர்சிக்கிறது; "இந்த நாசவேலை மைலாயை விடக் கொடுமையானது. அங்கே அமெரிக்கப்படைகள் நிதானமிழந்து வெறியாட்டம் ஆடினர். ஸ்ரீலங்காவின் கிராமத்தில் இந்தியப் படையினர் திட்டமிட்டுச் செயல்பட்டிருக்கின்றனர். ஆட்களை படுக்கவைத்து முதுகில் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்."

வேற்றுமை அதுமட்டுமல்ல. மைலாய் அமெரிக்கப் பத்திரிகை யாளர்களாலேயே உலகின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. மைலாய் பொதுமக்களுக்கெதிரான அமெரிக்க ராணுவத்தினரின் அடாவடிச் செயலை அமெரிக்க மக்கள் குறிப்பாக பத்திரிகையாளர்,




இந்திய அமைதிப்படையினரால் வல்வையில் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்கள் நினைவுத் தூபி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர், இளைஞர்கள் - ஒன்று திரண்டு எதிர்த்தனர். வல்வெட்டித் துறையில் இந்தக் கோர சம்பவம் நடந்து பதின்மூன்று நாட்களுக்குப் பின் அங்கு சென்ற பைனான்ஷியல் டைம்ஸ் (லண்டன்) பத்திரிகையின் டெல்லி நிருபர் டேவிட் ஹவுஸ்கோ இச்சம்பவத்தை அறிந்தார். இதைப்பற்றிய அவரது செய்தி ஆகஸ்ட் 17 அன்று அவரது பத்திரிகையில் வெளியானது. அதற்கு முன்பே ஆகஸ்ட் பதின்மூன்றாம் தேதி லண்டன் டெலிகிராப் பத்திரிகை டெல்லி யிலிருந்தபடி தனது நிருபரின் ஜெரமி கவ்ரான் தொகுத்தனுப்பிய செய்தியை வெளியிட்டது. இந்தியப் பத்திரிகையாளர்களின் ஒரு சிறு பகுதியினரே அதுவும் செப்டம்பர் மூன்றாம் தேதிக்குப்பிறகு இந்தியன் எக்ஸ்பிரஸ் ரீட்டா செபாஸ்டியன் கொடுத்த செய்தியைத் தொடர்ந்தனர்.

உண்மை என்ன வென்றால் வல்வெட்டித்துறை சம்பவம் இந்திய அரசால் திட்டமிட்டு மறைக்கப்பட்டது. இந்தியப் பத்திரிகை யாளர்களின் பெரும்பகுதியினர் இதில் கூட்டுச் சேர்ந்து கொண்டு புளகாங்கிதம் அடைந்தனர். இந்தியாவில் இராணுவம் புனிதமாகக் கருதப்பட்டு வருகிறது. ஆனால் அடாவடித்தனங்களில் ஈடுபடும் போதும் இப்புனிதத் தன்மை மேலும் கெடுகிறது. வடகிழக்கு மாகாணங்களில் இராணுவ உடையில் நம்மவர்கள் நடத்தும் கற்பழிப்புகளையும், கொள்ளைகளையும் பற்றி- யாரேனும் வாய்திறப்பதுண்டா? ஒயினம் என்ற இடத்தில் நடந்த கேவலத்தைப் பற்றிக் கேள்விப்பட்டவர்கள் கூட இந்தியாவில் இல்லை. ராணுவ உடையணிந்த கயவர்களும் வக்கிரம் பிடித்தவர்களும் நடத்திய மிருகத்தனமான செயல் அது."

இந்த இடத்தில் இன்னொன்றையும் நினைத்துப் பார்க்கிறேன். இப்படுகொலை குறித்து ஒரு மாதம் கழித்து செய்திக்கட்டுரை வெளியிட்ட இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை "இந்தியப் படைகளால் எரிக்கப்பட்ட வீடுகளில் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்ற இந்தியாவின் தலைச் சிறந்த தலைவர்களின் படங்கள் கூட எரித்து நொறுக்கப்பட்டுள்ளன." என்று குறிப் பிட்டுள்ளது. (செப்டம்பர்,3.1989) அவர்களுடைய கண்களுக்கு மனிதர்களே மனிதர்களாகத் தெரியாதபோது படங்களா தலைவர் களாகத் தெரியப்போகிறார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திலீபன் பட்டினித் தவமிருந்த மண்

நேரம் எங்களை விரட்டிக் கொண்டிருந்தது. நாங்களும் ஓடிக் கொண்டே இருக்கிறோம். அடுத்த இடத்தை நோக்கி...

நல்லூர் கந்தசாமிக்கோயில் மிகவும் புகழ்பெற்ற ஒன்று. திலீபன் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியதற்கு முன்பு எவ்வளவு தூரம் வெளியுலகிற்கு தெரிந்திருந்தது என்று எனக்குத் தெரிய வில்லை. ஆனால் திலீபன் உண்ணாவிரதப் போராட்டத் திற்குப் பிறகு அந்தக் கோயிலின் பெயரை அறியாதவர்கள் இருக்க முடியாது.

சிங்கள இராணுவம் தமிழ் மக்கள் மீது தாக்குதல் தொடுக்கும் போது அந்த மக்கள் அடைக்கலம் தேடும் இடமாக அக்கோயில்



நல்லூர் கந்தசாமி கோயில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்திருக்கிறது என்பதை செய்தித்தாள்கள் வழியாக அறிந்திருக் கிறேன். விமானக் குண்டுவீச்சின்போது அக்கோயில் சேத மடைந்தும் இருக்கின்றன என்று அறிந்திருந்தேன்.

எங்கள் வாகனம் கோயிலுக்கு அருகில் நின்றது. எங்கே திலீபன் உண்ணாவிரதம் இருந்த இடம் என்று நண்பர்களிடம் கேட்டேன். அந்த இடத்தைக் காட்டினார்கள். நேராக அந்த இடத்திற்குச் சென்றேன். அந்த இடத்தில் நிற்கும்போது என் உடல் சிலிர்த்தது. பன்னிரெண்டு நாட்கள் சொட்டுத் தண்ணீர் கூட அருந்தாமல் திலீபன் உறுதியோடு போராடிய இடமல்லவா? திலீபன் தன்னைத்தானே சிலுவையில் அறைந்து கொண்ட இடமல்லவா?

அந்த இடத்தில் நின்று சுற்றி உள்ள மணற்பரப்பை பார்க்கிறேன். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரிதவித்துப் பார்த்து நிற்க தன் உடலையும் உயிரையும் துடிக்கத் துடிக்க தற்கொடை யாக்கிய இடமல்லவா? என் கண்கள் பணிக்க என் அகவணக்கத்தைச் செலுத்தினேன். என் மனைவி, குழந்தைகளையும் அகவணக்கம் செலுத்துச் சொன்னேன்.

“சிங்கள அரசுக்கு எதிராக உண்ணாவிரதப் போராட்டங்களை அகிம்சைப் போராட்டங்களை நடத்தி எமது உரிமைகளை வென்றெடுப்போம் என்று யாராவது கருத்து வெளியிட்டால் அது நகைப்புக்கு இடமாகும் என்பதில் சந்தேகமில்லை.

அதனை வரலாறு சுட்டி நிற்கின்றது. அதனை எங்கள் மக்களும் பட்டறிவினால் உணர்ந்துள்ளார்கள். சிறீலங்கா அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்படும் அகிம்சைப் போராட்டம் வெற்றி பெறாது என்பதை அகிம்சைத் தத்துவத்தில் நம்பிக்கைக் கொண்டுள்ள எம்மவர்களும் ஒப்புக் கொள்வார்கள்.


ஆனால் அகிம்சைப் போராட்ட விடயத்தில் இந்தியா மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையோ வித்தியாசமானது.

அகிம்சைப் போராட்டங்களை சாத்வீகப் போராட்டங்களை- உண்ணாவிரதப் போராட்டங்களை இந்தியா மதிக்கும். ஏனென்றால் இந்தியாவின் அடிப்படைத் தத்துவம்- ஆன்மீகத் தத்துவம்- உயர்வானதத்தத்துவம்- யாவுமே அகிம்சைக் கோட்பாடுதான். ஆகவே சிங்கள இனவெறி அரசுகள் எமது அகிம்சைப் போராட் டங்களை அலட்சியம் செய்து வன்முறையால் அடக்கியது போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா செய்யாது. அது எமது அகிம்சைப் போராட்டங்களைச் செவிமடுக்கும், போராட்ட நியாயங்களுக்குத் தலைவணங்கும் என்று எமது தமிழினம் சத்தியமாகவே நம்பியது. அந்த நம்பிக்கையில் தனது எதிர்காலத்தைப் பணயம் வைக்கவும் எமது தமிழினம் தயாராக நின்றிருந்த வேளை அந்த 1987.

அந்த வேளையில் தான் எமது இனத்தின் விடுதலைக்கான பாதை, எந்த திசை நோக்கி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதற்காக தனியொருவனாக ஒரு புலிவீரன் புறப்பட்டான். அதற்காக அவன் அன்று ஏந்திய ஆயுதம் இந்தியாவின் அதே அகிம்சை ஆயுதம்.



திலீபன் உண்ணாநோன்பிருந்து
உயிர் நீத்த இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகிம்சை என்னும் கோட்பாட்டின் அடிப்படையில் அல்லது அகிம்சை என்னும் தத்துவத்தின் அடிப்படையில் இந்தியா தனது அரசியல் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது என்ற பிரம்மையை அல்லது மாயையை இந்திய ஆட்சிப் பீடங்கள் தோற்றுவித்திருக்கின்றன. அகிம்சை என்ற உயர்வான கொள்கைகளும், நீதிகளும் உண்மையாகவே பேணப்படுகின்றன என்று இந்திய மக்கள் மட்டுமல்ல, தமிழீழ மக்கள் மனமார நம்பினார்கள். அகிம்சைக் கோட்பாட்டின் மூலம் நீதியை நிலை நாட்டலாம் என்று நம்பியிருந்த காலம் அது.

மகாத்மா காந்தியின் அகிம்சைத் தத்துவத்தை தனது அடிப்படை அரசியல் கொள்கையாக வரித்திருப்பதாக, இந்தியா மேலோட்டமாக முழங்கிவந்தாலும், உண்மையில் இந்தியா தனது அகிம்சைத் தத்துவத்திற்கு எதிராகத்தான் செயற்பட்டு வந்திருக்கிறது, வருகின்றது என்பதை தனது உடலால் உயிரால் வலியுறுத்திக் காட்டி நிரூபித்தவன் தியாகச் செம்மல் திலீபன்" என்றார் என்னுடன் வந்த சமூகவியல் பேராசிரியர்.

"தமிழீழ இடைக்கால நிர்வாகம் விடுதலைப்புலிகளிடம் கையளிக்கப்பட வேண்டும், தமிழீழப் பிரதேசத்தில் சிறீலங்கா அரசு பொலிஸ் நிலையங்களை அமைத்தல் நிறுத்தப்பட வேண்டும், புனர்வாழ்வு என்ற போர்வையில் மேற்கொள்ளப்படுகின்ற சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும், சிறையில் வாடுகின்ற தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டும், ஊர்க்காவல் படையினரிடம் உள்ள ஆயுதங்கள் பறிக்கப் படுவதுடன் தமிழ்க் கிராமங்கள் பாடசாலைகள் ஆகியவற்றில் உள்ள இராணுவ முகாம்கள் மூடப்படவேண்டும்" என்ற ஐந்துக் கோரிக்கைகளை முன்வைத்து 1987 செப்டம்பர் 15ஆம் நாள் உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கிய திலீபன் பல்லாயிரக் கணக்கான மக்கள் கலங்கி நிற்க,

"திலீபன் அழைப்பது சாவையா- இந்த
சின்ன வயதில் இது தேவையா
திலீபனின் உயிரை அளிப்பாரா- அவன்
செத்தபின் மாற்றார் பிழைப்பாரா"

என உணர்ச்சிக் கவிஞர் அண்ணன் காசி ஆனந்தன் அவர்கள் குமுற...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணிலிருந்து பார்ப்பேன்
விடுதலையை என்ற மகன்
கண்ணெதிரே இந்தக் கட்டிலிலே
முடிகின்றான்
பத்தோடு ஒன்றா- இவன் பாடையிலே
போவதற்கு
சொத்தல்லோ- எங்கள் சுகமல்லோ
தாலாட்டுப் பாட்டில் தமிழ் தந்த
தாய்க்குலமே
போராட்டவீரன் போய் முடியப்
போகின்றான்- போய்
முடியப் போகின்றான்...
போய் முடியப் போகின்றான்..."

என்று புதுவை இரத்தினதுரை அவர்கள் கதறி பாட.. 27.9.1987 அன்று, அண்ணன் காசி ஆனந்தன் என் ஓவியத்திற்கு எழுதியதைப் போல "பசித்தது அவனே உணவானான்."

அந்த இடத்தை விட்டு நகரும்போது திலீபன் பற்றிய ஒரு கட்டுரையில் அவன் சொன்ன செய்தியாக படித்தது என் நினைவுக்கு வந்தது.

"இந்த இனம்- இந்தத் தமிழினம் அடங்காது! அது போராடும்! ஆயுதம் இல்லாவிட்டாலும் அது போராடும்; புல்லையும் எடுத்து அதுபோராடும்; அடக்கு முறைக்கு அது வளைந்து கொடுக்காது; பேரம் பேசாது; விட்டுக் கொடுக்காது; ஆயுதம் இல்லா விட்டாலும், உணவு இல்லாவிட்டாலும் இந்த இனம் தலை வணங்காது. அது தொடர்ந்து போராடும். தன்னுடைய விடுதலைக் காக- நியாயத்திற்காக- நீதிக்காக- அது எந்த சக்தியையும் எதிர்த்துப் போராடும்"

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வந்தாறுமூலைப் படுகொலை

**யா**ழ்ப்பாணத்திற்கு என்னுடைய முதல் பயணம் என் மனைவி குழந்தைகளுக்கு அனைத்து இடங்களையும் காண்பிப்பது நானும் பார்வையிடுவது என்பது மட்டுமே நோக்கமாக இருந்தது.

ஆனால் என்னுடைய இரண்டாவதுப் பயணம் கண்காட்சி நடத்துவது, மக்களைச் சந்திப்பது, மாணவர்களைச் சந்திப்பது, கவிஞர்கள், கலைஞர்களைச் சந்திப்பது, பத்திரிகையாளர்களைச் சந்திப்பது என்று பெரிய நிகழ்ச்சி நிரலைக் கொண்டிருந்தது.

யாழ்ப்பாணத்தில், யாழ் பல்கலைக்கழகம், வடமராட்சி, தென்மராட்சி ஆகிய மூன்று இடங்களில் காட்சிக்கு ஏற்பாடாகி இருந்தது. யாழ்ப்பல்கலைக்கழகத்தில் (Art and Design) கலையும் வடிவமைப்பும் படிக்கின்ற மாணவர்களின் துணையோடு, பல்கலைக்கழகத்தில் காட்சித் தொடங்குவதற்கு முதல்நாள் இரவே ஓவியங்களை காட்சிப்படுத்தி மறுநாள் காலையில் தொடங்கு வதற்கு வசதியாக செய்து முடித்தேன்.

அம்மாணவர்களுக்கும் அது ஒரு புது அனுபவமாக இருந்த தாகத் தெரிவித்தனர். நாளைக் காலை 8.30க்கு சந்திப்போம். என்று அவர்களிடமிருந்து விடைபெற்றேன். “தாயக நேரமா, இலங்கை நேரமா” என்று அவர்கள் கேட்டார்கள். இந்தியாவிற்கும் இலங்கைக்கும் அரைமணிநேர வேறுபாடு அதாவது இந்தியாவில் 9.00 மணி என்றால் இலங்கையில் 9.30 மணி. அரை மணிநேரம் கூடுதலாக வைத்திருக்கிறார்கள்.


ஆனால் புலிகளின் ஆளுகைக்குட்பட்ட தமிழீழத்தில் நம் இந்திய நேரத்தையே கடைபிடிக்கிறார்கள். இலங்கை நேரத்தை கடைபிடிப்பதில்லை. புலிகளின் பகுதியில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால் யாழ்ப்பாணம் போன்று இராணுவம் உள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில்தான் எந்த நேரம் என்பதில் குழப்பம் இருக்கின்றது. தமிழீழ நேரத்தைத்தான் தாயக நேரம் என்கிறார்கள்.

“இதுவும் எங்கள் தாயகம்தான். தற்போது இராணுவம் ஆக்கிரமித்து இருக்கிறது அவ்வளவுதான். தாயக நேரப்படியே சந்திப்போம்” என்று மற்றொரு மாணவர் கூறினார். அவருடைய சிந்தனையும், அவருடைய வெளிப்பாடும் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. ஒரு மாத காலத்திற்கு மேலான தொடர்ந்த ஓய்வற்ற பயணத்தினாலும், பணியினாலும் சோர்வோ, களைப்போ ஏற்படா விட்டாலும் அன்று குறைந்தபட்ச உறக்கம் தேவைப்பட்டது. படுத்தேன். உறக்கம் என் கண்களை தழுவவில்லை. ‘மௌனப் புதைக்குழிக்குள்’ நூலை எடுத்தேன். படிக்கத் தொடங்கினேன்.

கேப்டன் மில்லர் சிலையருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வந்தாறுமூலைப் படுகொலை

1990ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் 5ஆம் நாள் வந்தாறுமூலைப் பல்கலைக்கழகத்தில் மிகப்பயங்கரமான படுகொலையொன்று நடந்து முடிந்தது. அறிவியல் சமூகத்தை உருவாக்கும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் ஓடிச்சென்ற தமிழ் மக்களை அங்கேயே வைத்து கைது செய்கின்ற சிங்கள இராணுவத்தினரைத் தட்டிக்கேட்க அன்று யாரும் முற்படவில்லை.

வாழைச் சேனைப் படை முகாமிலிருந்து புறப்பட்ட இராணுவக் கொலைவெறியனிடமிருந்து தப்பிவிடுவதற்காக சுங்காங்கேணி, கறுவாக்கேணி, வந்தாறுமூலை கிராமத்து மக்கள் பல்கலைக்கழக வளாகத்துக்குள் தஞ்சம் புகுந்தனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆயிரக்கணக்கில் ஓடிவந்த மக்களுக்கு அடைக்கலம் கொடுத்து, இராணுவத்தினர் உள்ளே வராது பாதுகாக்கும் நோக்குடன் வெள்ளைக் கொடிகளைப் பறக்க விட்டனர். அவர்களின் முயற்சி அவர்களின் கண்முன்னேயே பயனற்றுப்போனது. அன்றைய நாளில் மக்களைப் பாதுகாக்க முயன்று தோற்றுப்போன விரிவரையாளர், வர்ண குணசிங்கம் (புவியியற்துறை) அவர்களைச் சந்தித்தேன். பதினொரு ஆண்டுகள் மறைந்து போனாலும் மனதில் ஆறாத வடுவாய் பதிந்துவிட்ட அந்தக் கொடிய நினைவுகளை அவர் அப்படியே எடுத்துக் கூறினார்.

"கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு ஓடிவந்த தமிழ்மக்களை அங்கேயே தங்கவைத்து அகதி முகாமாக்கினதில் நானுமொருவன். என்னோடு டொக்டர் வடிவேல் மோகனும் இந்த முயற்சியில் கடுமையாய் உழைத்தவர்.

ஆமி வாழைச்சேனையிலேயே வெட்டத்துவங்கிவிட்டான் காம்பிலயிருந்து வெளிக்கிடேக்கயே வெட்டுறவேலையில இறங்கினான். சுங்கான்கேணி, கறுவாக்கேணி, கொண்டையங் கேணி என ஒவ்வொரு கிராமமாய் புகுந்து கையில் அகப்படுகிற எல்லாரையும் பிடிச்சு சுட்டும், வெட்டியும் கொடுமைப்படுத்தியும் வந்து கொண்டிருந்ததால் மக்களெல்லாம் ஓடி பல்கலைக் கழகத்துக்கு வந்தாங்க. இந்தக் கிராமங்களில் 48 பேருக்குக்கிட்ட பிடிச்சுக் கொண்டு போய் வாழைச்சேனை மெயின்றோட்டுக்கு கொண்டுபோனான். மெயின்றோட்டில் ஒரு சாராய பார் இருந்தது. அதுக்குப் பக்கத்தில் செல்வநாயகமெண்டு ஒரு பதுளை ஆளுக்கு சொந்தமான ஒரு தோட்டமிருந்தது. அந்த தோட்டத்துக்குள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிச்சாக்களை கொண்டுபோனான். புல்டோசரால் மண்ணைக் கிண்டிப்போட்டு இந்த நாப்பத்தெட்டுபேரையும் சுட்டுப்போட்டு மூடினான். கிண்டிப்பார்த்தால் நிறைய உண்மைகள் வெளிவரும். வெட்டிக்கொண்டு வாறபொழுதே புல்டோசரும் பின்னர் வந்தது. எங்கெங்கெல்லாம் கிண்டி மூடினானென்பதை எங்களால காணமுடியல்ல. தப்பி ஓடி வந்த மக்கள பல்கலைக்கழகத்திற்குள் இருத்தினம்.

அதுக்குள்ள ஆமி வரமாட்டானென்பது எங்கட நம்பிக்கை. நான் பல்கலைக்கழக விடுதி பொறுப்பாய் நிண்டன். நிறைய விரிவுரையாளர்களும் பிள்ளைகளும் வீட்டிற்கு வெளியே நிண்டாங்கள். எங்களோட வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களிலிருந்து வந்த மாணவர்கள் மட்டும் நிண்டு மக்களுக்கு உதவினார்கள். எங்களோடு நிண்டு நல்லாய் செயற்பட்ட பிரபாகரன் எண்ட ஒரு மாணவனை ஆமி வெட்டிப்போட்டான். வவுனியாவைச் சேர்ந்த மாணவனாயிருக்கோணும். நாங்கள் பல்கலைக்கழகத்தைவிட்டு வெளியேறினால் அதை அடிச் சுடைப்பான் அல்லது பாம்போடுவானெண்ட பயத்தில அங்கேயே மக்களையெல்லாம் இருத்திட்டு இருந்தோம். சனமெல்லாம் பயத்தில கத்திக் குளறினாங்கள். பல்கலைக்கழகத்துக்கு வர மாட்டான் பயப்படாதெங்கோ என ஆறுதல் சொன்னம். ஒரு கிழமைக்குள்ள ஐம்பத்தியாறாயிரம் மக்கள் அகதியாய் இதுக்குள்ள வந்தாங்கள். இருந்த எல்லாக் கட்டிடத்திலும் மக்கள் நிரம்பி வழிந்தார்கள்.

வாழைச்சேனையில் வெளிக்கிட்ட ஆமி வந்தாறுமூலைக்கு வர ஏழு நாள் பிடிச்சுது. அதுவரையும் மெதுமெதுவாய் ஒவ்வொரு கிராமத்துக்குள்ளேயும் நகர்ந்து அம்பிட்ட ஆக்களை சுட்டும், வெட்டியும் புதைச்சிக்கொண்டே வந்தான். இண்டைக்கு வரப் போறான் நாளைக்கு வரப்போறனென பல்கலைக்கழகத்துக்க இருந்த மக்களெல்லாரும் பயந்து நடுங்கினார்கள். வாழைச் சேனையில என்ன நடந்து கொண்டிருக்குது என்பதை அறிஞ்சு கொண்டிருந்தம். அதனால் பயம்பிடிச்சிட்டுது. பல்கலைக்கழக கேற்றினைச் சாத்திவிட்டு வெளியே பிரதான வீதியில் நாங்கள் நிண்டம். வந்தால் றோட்டலதான் வருவான் கதைச்சு உள்ள போகவிடாமல் தடுப்பம் என்ற துணிவில இப்படி நிக்கேக்க பாத்தால் ஆமி வாறான். றோட்டலாதானா வாறானெண்டு பாத்திட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்துள்ள திரும்பிப் பாத்தம். நிறைய ஆமி நிக்கிறான். அவன் மேலால இரண்டு பக்கத்தால வந்து உள்ள போனான். ஹெலிகாப்டர் சுத்திட்டுயிருக்குது. எங்கட ஸ்ராபெல்லாம் றோட்டில நிண்டம். றோட்டால வந்த ஆமில சில பெரியவங்கள் வந்து எங்களோட கதைச்சாங்கள். ஏற்கெனவே சிங்களத்தில ஆங்கிலத்திலலெல்லாம் அகதி முகாமுக்குள்ள பிரவேசிக்க வேண்டாமென எழுதியிருந்தோம்.

எங்கத்தேயாக்கள் இஞ்ச இருக்கிறாங்களெண்டு பெரியவன் கேட்டான். வாழைச் சேனையிலிருந்து ஆறுமுகத்தான் குடியிருப்பு வரையுமான மக்கள் இருக்கிறார்களென சொன்னம். இது நடந்து கொண்டிருக்க ரெண்டு பஸ் வந்து நிண்டுது. எல்லாரையும் லைனில வந்து நிக்கச் சொன்னாங்கள். என்னோட வாழைச்சேனையிலருந்து வந்த தங்கமணிச் செட்டியாரெண்டெவரும் நிண்டவர். அவர் நல்லமனிசர். ஆமியோட முகாரி எண்டும், கலீல் எண்டும் ரெண்டு மூஸ்லீம்களும் நிண்டாங்கள். இவங்களுக்கு எங்கள் ரெண்டு பேரையும் நல்லாத் தெரியும். செட்டியாரிட்ட அடிக்கடிவந்து வாகனமெல்லாம் வாங்கி ஓடுறவங்கள். அவங்கள கையெடுத்துக் கும்பிட்டார் செட்டியார். லைனா வந்த மக்களில இளம் பொடியங்களைத் தெரிஞ்செடுத்து 138 பேரை பஸ்சில் ஏத்தினான். ரெண்டு பஸ்சில் ஏத்தினான். ரெண்டு பஸ்சும் வெளிக்கிட்டுது எங்க போகுதெண்டு தெரியாது வாழைச்சேனைப் பக்கமாய் போகுது தாய் தகப்பனெல்லாம் கத்திக்குளறினாங்கள். என்ன செய்யிறதெண்டு புரியல்ல. டொக்டர் ஜயசிங்கம், பேராசிரியர் மனோ சபாரெட்ணம் என எல்லாரும் சேர்ந்து பிடிச்சுக்கொண்டு போனாக்களின் பெயர் விபரங்களை எடுத்தம். எடுத்தாலும் எங்கபோறது, ஆரைக்கேக்கிற தெண்டு தெரியல்ல. எந்தக்காம்பில கேட்டாலும் தாங்கள் கொண்டுவரல்ல எண்டு சொன்னாங்கள்.

இதுநடந்து நாலு நாளில நான் வெளிக்கிட்டுகடற்கரையில நடந்து வாழைச்சேனைக்கு நம்மட வீட்ட போனன். அங்க போனால் வீட்டைச் சுத்திவளைச்சு என்னைப் பிடிச்சுப்போட்டாங்கள். பிடிக்கேக்க இரவு எட்டு மணியிருக்கும். பிடிச்சுக்கொண்டு நாவலடிக்காம்புக்கு கொண்டுபோனாங்கள். அந்தகாம்புக்கு போனல் பிறகுதான் தெரியும் அந்த காம்ப் கேப்டன் ரத்தனமல்ல எண்ட அதிகாரி என்னோட படிச்சவனெண்டு. நான் அவனமதிக் கேல்ல அவன் என்ன மதிச்சிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் போகேக்க ஏற்கெனவே எங்கட ஊரில பிடிச்சுக்கொண்டு வந்த பதின்மூன்று பேர் அங்க கட்டிப்போடப்பட்டிருந்தார்கள். மூண்டாம் நாள் எல்லாரையும் அடிச்சுக் கொண்டிட்டாங்கள். அடிச்சுக் கொண்டதைப்பார்க்க தலையெல்லாம் சுத்தீட்டுது. அடிச்சுக் கொல்ல முதல் காம்ப்பொறுப்பதிகாரி வந்தான் சுவரோத்தில ஒரு கயித்திலேயே தொடர்ச்சியாய் எல்லாரின்ர கைகளையும் கால்களையும் கட்டிப்போட்டிருந்தார்கள். பொறுப் பதிகாரி வந்து கதிரையைப் போடிட்டு இருந்து கொண்டு எல்லாரின்ர கைக்கட்டையும் அவிட்டு விடச் சொன்னான். சிகரெட் ஒன்றை மூட்டி எல்லாரையும் மாறி மாறி பத்தும்படி குடுத்தான். நீங்களெல்லாம் கொட்டியாதான் என கொச்சத்தமிழில் கேட்டான்.

சிகரட் பத்திமுடிய எல்லாற்ற கைகளையும் திரும்பக் கட்டச் சொன்னான். கட்டீட்டு எல்லாரையும் செக்பண்ணிப் பார்க்கச் சொன்னான். கொஞ்ச நேரத்தில ஒரு ஆமி தமிழாக்களைக் கிண்டல் செய்து பாடியபாட்டை ரெப்றெக்கோடரில பெரிய சத்தமாய்ப் போட்டான். எல்லா ஆமிக்காரரும் நல்ல வெறியில நிண்டாங்கள். பைலா ஆடிக்கொண்டிருக்க இன்னும் கொஞ்ச ஆமி அலவாங்கு, கோடாரி, பொல்லுகளோட வந்தாங்கள். கட்டிப் போட்டிருந் தவர்களை தாறுமாறாய் அடிக்கத் துவங்கினாங்கள். மரணஓலம் பெரிசாய் எழுந்து தலைசிதறியும் தலைகால் வெட்டுப்பட்டும் கால்கள் கொத்துப்பட்டும் துடிச்சுத்துடிச்சு செத்தார்கள்.

கொஞ்ச நேரத்தில் எல்லாரிட சத்தமும் நிண்டு போச்சு பக்கத்தில கிரவல் வெட்டின கிடங்கொண்டிருந்தது. அதுக்க எல்லாரையும் இழுத்துக் கொண்டு போய் போட்டார்கள். என்னையும் என்னோட இருந்த இன்னொருவரையும் ஒரு அறையைக்காட்டி அதுக்குள்ள போய் படுக்கச் சொன்னாங்கள். போய்ப்படுத்தம் எப்படி நித்திரைவரும் மெதுவாய் கண்முழிச்சுப் பாத்தன் அந்தக் கிடங்கில ரயருகள் தடிதண்டுகளைப் போட்டுக் கொளுத்தினாங்கள். விடியும்வரை கண்ணை இறுக்கி மூடிக் கொண்டு கிடந்தன்.

விடிஞ்சாப்பிறகு எழும்பி மெதுவாய் வெளியில வந்து பாத்தன் சுவரெல்லாம் ரத்தம் சீறி அடிச்சிருந்தது. கிடங்கில எரியாமல் அரைகுறையாய் சவங்கள் கிடக்கிறது தெரியுது. ஆமி ஒருவன் என்னைக் கண்டிட்டு ஏய் அங்கால போகாத என சொன்னான். எனக்கு சிங்களம் தெரிந்திருந்ததால அவர்கள் பேசிக்கொண்டதெல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்கியது. பேசாமல் றூமுக்குள்ள போய்ட்டன். அண்டு மாலை விறகு ஏத்திக் கொண்டு வந்து திரும்பவும் கிடங்கில் போட்டுக் கொளுத்தினாங்கள். யூனிவேசிற்றீக்க பிடிச்சிட்டு வந்தாக்களையும் அப்படித்தான் போட்டுக் கொளுத்தியிருப்பாங்கள். காம்பை அண்டி நிறைய கிடங்குகள் கிடக்குது. அக்கிடங்குகளை கிளறினால் முழு உண்மையும் தெரியவரும்.

எங்கட பல்கலைக்கழக வேந்தர் சந்தானந்தம் கடும் முயற்சி எடுத்ததால ஒன்பது நாளைக்குப் பின்னர் என்னை விட்டார்கள். அந்த ஒன்பதுநாளும் நிறைய புதிர்களை அறிஞ்சன். முஸ்லீம் ஆக்கள் ரைக்ரரில வருவாங்கள். ஆமிக் காம்புக்கு வந்ததும் தலையில கிடக்கிற தொப்பியெல்லாம் கழட்டி வச்சிட்டு ஆமியோட ஏறிப்போய் தமிழர்களின்ர சூடெல்லாத்தையும் அடிச்சுக் கொண்டு வருவாங்கள். காம்புக்கு வந்ததும் தொப்பியை மாட்டிட்டு நெல்லு மூட்டைகளை லோட் பண்ணிட்டு கிளம்புவாங்க. ஒன்பது நாளும் ரெண்டு மூண்டு ரைக்ரலில வந்து இப்படியாய் தமிழாக்களின்ர சூடெல்லாம் அடிச்சிட்டுப் போனாங்கள். முஸ்லீம் ஆக்கள் ஆமியோட சேர்ந்து செய்த கொடுமை மிகப்பெரிய கொடுமை.

நாவலடி ஏரியா முழுவதும் நிறைய கிரவல்க் கிடங்கு. பல்கலைக்கழகத்திலிருந்து கொண்டு வந்தவர்களை இந்தக் கிடங்கிலதான் போட்டு கொளுத்தியிருப்பாங்கள். ஏனெண்டால் கொஞ்சப்பேரை கொளுத்தினதை கண்ணுக்கு முன்னாலேயே கண்டனான். ஆனால் எங்கட சனங்களை தங்கட பிள்ளையள் உயிரோட இருப்பாங்களென இப்பவும் நம்பிறாங்க. ஆனால் ஆமியோ தாங்கள் பிடிக்கேல்ல கொண்டு போகல்ல என சொல்லுறாங்கள். ஆனால் கேக்கிற சிலருக்கு மரணப்பதிவு அத்தாட்சிப் பத்திரமும் கொடுக்கிறாங்கள். இதிலயிருந்து விளங்குவது அவன் எல்லாரையும் கொண்டிட்டானெண்டு. ஆனால் இது தொடர்பாய் எந்த மனித உரிமைகள் அமைப்பும் அக்கறையெடுக்கேல்ல இப்பவும் ஆமியோட சேர்ந்து வந்த கலீலும், முகாரியும் இருக்கிறாங்கள். மனித உரிமையமைப்புகள் இவர்களைப் பிடித்து விசாரணை செய்தால் எங்க புதைச்சவங்கள் எங்க எரிச்சவங்களெண்டு உண்மைகளை எடுக்க முடியும்.

என்னை விட்டாப் பிறகு நானும் டொக்டர் வடிவேல் மோகனும் மோட்டார் சைக்கிள்ள கொண்டையன் கேணிப்பக்கமாய் போனம். அங்க என்ன நடந்தெண்டதறிய வேண்டுமென

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினச்சிட்டுப் போனம். அங்க இருந்த தோட்டத்தில புல்போசரால கிண்டி மூடியிருந்த மண் கும்பத்துக்குப் பக்கத்தில பொம்பிளைப் பிள்ளையின்ர கிழிஞ்சுபோன பாவாடைகள், பிறசியர்கள், மேற்சட்டைகள், குழந்தைப் பிள்ளைகள் கொஞ்சப்பேரது சட்டைகளெல்லாம் கிடந்தது. அதைக்கொண்டுதான் பெண்களுக்கு என்ன கொடுமை நடந்திருக்குது என்ற உண்மையை அறிய முடிஞ்சது.

அந்தப் புதைகுழிய இப்பவும் கிண்டிப்பார்க்க முடியும். யார் கிண்டிப்பார்க்க முன்னிக்கப் போறாங்கள். நாப்பத்தி யெட்டுப் பேரை இந்தத் தோட்டத்துக்க புதைத்ததாய் அறியிறம்.

கறுவாக்கேணி, சத்துருக்கொண்டான், ஐயங்கேணி, கொண்டயாங்கேணி, சித்தாண்டி, வந்தாறுமூலையென நடந்த படுகொலையெல்லாம் ஒருகிழமையாய் தொடர்ச்சியாய் நடந்தது. இதைப் பாத்தவங்கள் இப்பவும் சொல்லப்பயப்படுகிறார்கள். ஏனெண்டால் தங்களை ஆமி பிடிச்சிட்டுப்போய் கொண்டிடுவாங்களெண்ட பயம். என்னைக்கூட விடேக்க காம்ப் பொறுப்பதிகாரி சொல்லிவிட்டவன். இஞ்ச நடந்ததொண்டையும் வெளியிலபோய் சொல்லக்கூடாது சொன்னால் உனக்கும் இந்தக்கதிதான் நடக்குமெண்டு, நான்வந்து ஒருமாதம் ஒருத்தரோடையும் ஒண்டும் பேசல்ல.

எங்க வீட்டுப் பக்கத்து வீட்டுப்பொடியன் ஒரு மேசன். அவனை என்னமாதிரிக் கொண்டவங்களெண்டால் லெப்.கிலாட் என்டவன் காம்பொறுப்பாயிருந்தவன். இப்பவும் இருக்கிறான். இப்ப கப்டனாயிருக்கிறான். இந்த மேட்டர் எல்லாத்துக்கும் அவன்தான் காரணம். சரியாய் இரவு 8.15 மணி இருக்கும் ஒரு பள்ளி வாசல் கட்டிடத்துக்குப் பக்கத்திலதான் அந்தக் காம்ப் இருந்தது. பள்ளிவாசல் சுவரோடு போட்டுத்தான் அடிச்சவன். அடிச்சுக் கொல்லேக்க அந்த மேசன் பொடியன் சாகல்ல மண்வெட்டிப் பிடியைக் கழட்டி அவன்ர தொண்டைக்குழியில வச்சு அமத்தினாங்கள். ஒரு சாதியாய் கத்தினான். கொஞ்சத்தில சத்தம் நிண்டிட்டுது. அந்தப் பொடியன்ர பெயர் ஜெயவீரன்.

ஒட்டமாவடிப் பாலத்தில் வச்சு கனபேரை வெட்டி வாவியில போட்டவங்கள். ஓட்டமாவடி முஸ்லீம்களும் சேந்துதான் வெட்டினாங்கள். ஆமி தெரியாதெண்டு சொன்னாலும் ஓட்டமாவடி முஸ்லீம்களை பிடிச்சுவிசாரித்தால் எத்தினைபேரை எங்கெங்கு வெட்டினவங்கள். கொளுத்தினவங்களெண்டு கண்டுபிடிக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியும். ஆனால் யாரும் முன்வரல்ல. ஆமி பிடிக்கல்லயெண்டு சொல்லுறான். வெட்டிக் கொளுத்திக் கொண்டதை கண்டதைச் சொன்னாலும் எங்கட மக்கள் நம்பிறாங்களில்ல. கண்டதைச் சொல்ல வேண்டாமென ஆமி வெருட்டிறான்.

இப்படியாய் எங்கட மக்களின்ர துயரக்கதை மறைக்கப்பட்டுப் போச்சுது. என பல்கலைக்கழக முதல்நிலை விரிவுரையாளர் வர்ணகுலசிங்கன் தன் மனத்துயரைக் கொட்டித்தீர்த்தார்.

யாழ் மண்ணில் நடந்த படுகொலைகளை மக்கள் துணிந்து வெளிக்கொண்டு வந்தார்கள். இதற்குக் காரணம் அங்குள்ள தமிழ் மக்களுக்கு இராணுவ அச்சுறுத்தல் மட்டுமே இருந்தது. ஆனால் மட்டக்களப்பு மக்களுக்கு இராணுவ அச்சுறுத்தல், சிங்கள காடையரின் பயமுறுத்தல், முஸ்லீம்களின் அச்சுறுத்தல், தேசத் துரோகிகளாய் நிற்கும் பல்வேறு அமைப்புகளின் பயமுறுத்தல் என பலபக்க அச்சங்களிருப்பதனால் பல்லாயிரக்கணக்கில் கொலை செய்யப்பட்ட தமிழர்களின் குரல் வெளிவராமலே அடங்கி அமுங்கிப்போய்விட்டது.

வந்தாறுமூலைப் படுகொலையில் தனது மகனையும் தம்பியையும், மருமகனையும் பறிகொடுத்த தம்பியப்பா பொன்னம்மா என்ற மூதாட்டியின் துயரக்கதை மனதை வருத்தியது. மகன், மருமகன், தம்பி எல்லாருமே பிள்ளைகுட்டிக்காரர், என்ர தம்பி நடராசாவைக் பிடிச்சிட்டுப்போகேக்க சனங்கள் ஓடிவந்து சொன்னாங்கள். மகனைக் கொண்டுபோய் வெட்டீட்டாங்கள். அந்தக் கவலையிலயிருந்து மீளல்ல, ஒரு கிழமைக்குள்ளேயிருந்து மருமகனையும் பிடிச்சிட்டுப்போட்டாங்கள். மருமகனையாவது காப்பாற்றுவமெண்டு ரெண்டுநாள் கழிச்சு தேடிப்போனான். போகாதேங்கம்மா உங்கட மருமகனை வெட்டி ரயர்போட்டுக் கொளுத்தீட்டாங்கள். என இதைக் கண்டவர்கள் சொன்னார்கள். அறுபத்தஞ்சு வயதான என்ர மாமாவைக் கூட கொண்டுபோய் வெட்டீட்டாங்கள். என்ர மகனைக் கொண்டுபோனபோது ஓடிப்போய் அவங்கட கால்ல விழுந்து கெஞ்சினன். என்ர மகன் மூண்டு பிள்ளைக்காரன்யா அவன விட்டிடுங்க என கும்பிட்டுக் கேட்டன். காலால உதைஞ்சு விட்டான் தூரத்தே போய் விழுந்தன். இடுப்புக்க நொந்துபோச்சுது. எல்லாரையும் விடுவிக்கலாமெண்ட நம்பிக்கையில கொழும்பில எல்லாப் பெரியவங்களையும் சந்திச்சம். கடைசியா வெள்ளைக்காரிட்ட போய் சொன்னம் எல்லாருமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிரிச்சிட்டாங்கள். ஓட்டமாவடிப் பாலத்தில சிங்கள ஆமியோட முஸ்லீம்களும் சேந்துதான் பிடிச்சாக்களை வெட்டி வாவியில போட்டாங்கள் பாடுபாவியள் நல்ல இருக்கமாட்டாங்கள் என விக்கிவிக்கி அழுதவாறு சொல்லிமுடித்தார்.

கற்றறிந்தவர்களின் கல்விக் கூடமாயிருந்த கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நடந்த படுகொலையே வெளியுலகத்துக்கு வெளிவரவில்லை. வெளிக்கொண்டு வரப்படவில்லையென்றால் ஏனைய கிராமங்களில் கொல்லப்பட்ட தமிழர்களின் துயரம் எவ்வாறு வெளிவரமுடியும். என்றோ ஒருநாள் மட்டுநகர் மண்ணில் மனிதப் புதைகுழிகள் தோண்டப்படும். அப்போது மாபெரும் உண்மைகள் வெளிவரும். ஆனால் இழந்துபோன உயிர்களை கொண்டு வரமுடியுமா?.. போன உயிர்கள் போய்விட்டாலும் சிங்கள அரசு தமிழர்களுக்கு இழைத்த கொடுமைகளின் பக்கம் வெளிவருமென்பது உண்மை.

தூக்கம் வரவில்லையே என்று படிக்கத் தொடங்கினேன். படித்து முடித்ததும் துக்கம் தொண்டையை அடைத்தது ஒருநாள் உண்மை வெளிவரும் ஆனால் உயிர்கள்...

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் பல்கலைக்கழகத்தில் ஓவியக் காட்சி

ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள், பேராசிரியர்கள் பொதுமக்கள் சூழ்ந்து நிற்க தமிழீழத் தேசியக்கொடி விண்ணோக்கி ஏற,

ஏறுதுபார் கொடிஏறுது பார்- தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தக் கொடி
எட்டுத்திக்கிலும் மானத்தை சேர்த்தக் கொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி- புலி
காட்டிய பாதையில் சென்றகொடி,

என்று கொடிப்பாட்டு காற்றில் கலந்து கொண்டிருக்க மிக எழுச்சியோடு தொடக்கவிழா நடைபெற்றது. போரினால் உயிரிழந்த பொதுமக்களுக்கும், மாவீரர்களுக்கும் அகவணக்கம் செலுத்தி பொதுச்சுடர், ஈகைச்சுடர் ஏற்றிய பிறகு யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ் நாடாவை வெட்டித் திறந்துவைத்தார். மிகப்பெரிய அரங்கமாக இருந்தாலும் மாணவர்கள் நின்று நிதானமாக பார்க்கமுடியாத அளவிற்கு கூட்டம். கூட்டத்தைக் கட்டுப்படுத்தி, வழிநடத்த வேண்டியிருந்தது.

வன்னியில் நடைபெற்ற பொழுது, தொடர்ந்து செய்தித் தாள்களில் ஓவியங்களோடு கட்டுரையும் செய்திகளும் வெளி வந்திருந்ததால் அவர்களுக்கு மிகப்பெரிய எதிர்பார்ப்பு இருந்தது.

நானும் அதைவிட எதிர்பார்ப்போடு இருந்தேன்.

யாழ்ப்பாணம் என்றாலே "மேலாண்மை"யின் குறியீடு என்றும், யாழ்ப்பாணத்திலிருந்து வரும் படைப்புக்கள் "உயர்ந்தது" என்ற மனப்பான்மை அங்குள்ள கலை இலக்கிய படைப்பாளர் களிடம் இருக்கிறது என்பதை நான் தமிழகத்தில் இருக்கும் போதே சிறிதளவு அறிந்திருந்தேன். ஈழத்திற்குச் சென்ற பிறகும் கலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இலக்கிய நண்பர்கள் மேலும் தெரிவித்தார்கள். தமிழகத்தில் இதைத்தான் "பார்ப்பன" மனப்பான்மை என்று குறிப்பிடுவோம் என்றேன்.

"ஒரு சிலரிடம் அல்லது குழுவிடம் இருக்கின்ற மனப் பான்மையை வைத்து ஒரு பொது மதிப்பீடாகக் கருதக்கூடாது மக்களின் கருத்து எதுவோ அதுதான் நமக்கு முக்கியம்" என்று நான் தெளிவாகத் தெரிவித்தேன்.

யாழ்ப்பாணத்தில் இருப்பவர்கள் அதிகம் படித்திருக்கிறார்கள், அதற்கான புறச்சூழல் இருக்கிறது. அதனால் தமிழீழத்தின் பிறப் பகுதியில் இருப்பவர்களை விட இவர்களுக்கு வாய்ப்புகள் அதிகம் கிடைக்கிறது என்பதுதான் அந்த மனப்பான்மைக்கு காரணம் என்பதையும் உணர்ந்து கொண்டேன்.

ஆனால் இந்தப் போராட்டம் அந்த "மனப்பான்மை"யையும் உடைத்திருக்கிறது. இன்னும் பலவற்றை உடைத்திருப்பதைப் போல.

நான் எதிர்பார்த்ததை விட கூடுதலான வரவேற்பு கலை இலக்கியப் படைப்பாளிகள், பேராசிரியர்கள், மாணவ- மாணவிகள் என்று அனைத்துத் தரப்பினரிடமும் இருந்தது. மிகவும் பொறுமை யாக நின்று நிதானித்து ஓவியங்களோடு உரையாடினார்கள். யாழ் வெளியேற்றம், செம்மணி, திலீபன்...என்று ஒவ்வொரு ஓவியமும்



யாழ் பல்கலைக்கழக துணைவேந்தரும், பேராசிரியர்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களுடைய உள்ளத்து உணர்வுகளை கிளறிவிட்டது. ஓவியங்களைப் பார்த்துவிட்டு ஒவ்வொருவரும் நீண்டவரிசையில் நின்று தங்களுடையக் கருத்துக்களைப் பதிவு செய்தார்கள். அதோடு மட்டுமல்லாமல் என்னிடமும் வந்து கருத்துக்களைப் பகிர்ந்துக் கொண்டார்கள், அதற்காக காத்து நின்றார்கள். கூட்டம் கூட்டமாக கூடிநின்று என்னோடு விவாதித்தார்கள்.

'இதுபோன்ற ஓவியக்கண்காட்சிகளை பார்ப்பது இதுதான் முதல்முறை." என்றும் 'தமிழகத்தில் இருந்து கொண்டு எவ்வாறு உங்களால் எங்கள் வாழ்க்கையை உணர்ந்து கொள்ள முடிந்தது என்றும் கேட்டார்கள்.

பேராசிரியர்கள் சிலர் மிகவும் உணர்ச்சிவசப்பட்ட நிலையில் இருந்தனர். யாழ் வெளியேற்றம் அனைத்து வயதினரையும் உலுக்கிவிட்டது. தமிழீழ மக்களின் சமூக, கலாச்சார, பொருளாதார மையமாகவும், தளராதக் கோட்டையாகவும், பொங்கிப் பிரவாகிக்கும் விடுதலைத் தீயின் பிறப்பிடமாகவும், இருந்த யாழ்ப்பாணத்தில் மண்ணும் மக்களும் எனப் பிணைந்து போயிருந்த உறவின் தொப்புள் கொடியறுத்து, ஐந்தரை இலட்சம் மக்களும் குடிபெயர்ந்து சொல்லொண்ணாத் துன்பத்தை அனுபவித்தவர்களாயிற்றே. 2000 பிப்ரவரியில் சென்னையில் 'உறங்கா நிறங்கள்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றபோது 'யாழ்வெளியேற்றம்' ஓவியத்தை பார்த்தும், 'சிறகொன்று முளைத்து விதையொன்று அலையும் முளைக்க ஒருபிடி மண் தேடி' என்ற இன்குலாப்பின் வரிகளையும் படித்து விட்டு ஒருவர் ஓ வென்று அழுதார்.

யாழ்ப்பாணத்தில் கேட்கவா வேண்டும்.


ஒரு பேராசிரியர் "எப்படி இவ்வளவு ஆழமாக உள்வாங்கி யிருக்கிறீர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள் கூட இப்படி செய்யவில்லையே" என்றார். பல இடங்களில் சொன்ன அதே பதிலைத்தான் அவருக்கும் சொன்னேன்.

அவர் கண்களில் நீர் நிறைந்திருந்தது. மாணவர்களும், மாணவிகளும் எங்களைச் சுற்றி நின்று கொண்டிருந்தார்கள்.

"நல்லைக் கந்தன் முற்றத்திலிருந்து, செம்மணி வெளி நிறைந்து... நாவற்குழிப் பாலம் நிரம்பி இறுக்கி, முட்டி மோதியது மனிதத் தலைகள். ஒரு காலடி எடுத்துவைத்து, மறுகாலடி எடுத்து வைக்க குறைந்தது 30 நிமிடங்கள் பிடித்தது. இது மிகையல்ல. நிஜம். ஏனெனில் அம் மக்கள் வெள்ளத்தில் நானும் ஒருவன். மழை பெய்துகொண்டிருந்தது. "ஆட்லறி" எறிகணைகள் மக்களை கடந்து சென்று அருகில் விழுந்து வெடித்துக் கொண்டிருக்க, மேலே எதிரியின் "புக்காரா" குண்டு வீச்சு விமானம் வட்டமடித்து, எந்த நேரத்திலும் குண்டுகளை வீசக்கூடியதாக பறந்து கொண்டிருந்தது. வயோதிகர்கள் சிலர் அந்த இடத்திலேயே விழுந்து இறந்து கிடக்க பிரசவங்களும் அவ்விடத்திலேயே நிகழ்ந்தேறின. பிறந்த குழந்தையும் உப்பு நீரில் குளித்து, மழை நீரைக் குடித்து, பாலம் கடந்தது, தமிழ் மானம் உயர்ந்தது. இது எனது அனுபவத்தினூடான மனப்பதிவின் சிலத்துளிகள் மட்டுமே. இன்னும் எத்தனையோ சொல்லொண்ணாத் துன்பங்களை அனுபவித்து தமது, சொத்து சுகங்களை கைவிட்டு உடுத்திய உடுப்புடன் கையில் எடுத்தப் பொருட்களுடன் எதிரியின் எண்ணத்துக்கு வேட்டுவைத்து, தம் மண்ணை விட்டு வெளியேறி விடுதலைக்கு உரம் சேர்த்தனர் எம்மக்கள். எங்கள் தேசியத் தலைவர் கூட அந்த வரலாற்று இடப்பெயர்வு குறித்து கூறும்போது "இது எம்மக்கள் அளித்த ஒரு உயர்ந்தபட்ச பங்களிப்பு. அது எங்கள் வரலாற்றில் பதியப் பட்டுள்ளது. ஒட்டுமொத்தமாக ஐந்து இலட்சம் மக்களும் செய்த ஒரு பெரிய பங்களிப்பு" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மக்களை விடுதலை செய்யப்போகிறோம். அவர்களுக்கு விமோசனமளிக்கப்போகிறோம். அவர்கள் விடுதலைப் புலிகளின் பிடிக்குள் இருந்து துன்பப்படுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதே எமது பணி எனக் கூறிக்கொண்டு 40,000 படைகளைக் களத்தில் இறக்கி பன்மடங்காக ஆயுதப் பலத்தைப் பெருக்கிக் கொண்டு "சூரியக் கதிர்" படை நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியது. இருந்தும் என்ன பயன்? சிறீலங்கா அரசின் 2000 ஆண்டுகால வரலாற்றில் முதன்முதலாக ஜன சஞ்சாரமற்ற சுடுகாடுபோல் காட்சியளித்த வெறும் நிலப்பரப்பை மட்டுமே பிடிக்க முடிந்தது. "நாம் சுதந்திரத்துக்காக போராடுகின்ற மக்கள் சோத்துக்காக வாழ்பவர் களல்ல என சிறீலங்கா அரசுக்கு பறைசாற்றிய எம்மக்கள் புலிகளை ஆதரித்து அவர்கள் பின்னே சென்றனர். முகத்தில் கரிபூசிக் கொண்டது சிங்கள அரசு. தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக சிங்கள அரசை வெறுக்கின்றார்கள், விடுதலைப் புலிகளையே தமது தலைமையாக ஏற்றுக் கொண்டு செயல்படுகின்றார்கள் என்பதையும் முழு உலகத்திற்குமே தெரியப்படுத்தியது இந்த மாபெரும் வரலாற்று இடப்பெயர்வு" என்று அந்த இடப் பெயர்வில் தனக்கேற்பட்ட அனுபவத்தை பகிர்ந்து கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படை நடவடிக்கையானது சிங்கள அரசியல் தந்திரோபாயத்துக்கும், நோக்கத்திற்கும் கிடைத்த மிகப்பெரிய தோல்வி என்பதை உலக நாடுகளே சுட்டிக்காட்டியிருந்தன. தம்மிடம் இருந்த மிகப்பெரிய பலமான ஆட்பலத்தை வைத்துக் கொண்டு ஆயுத பலத்தின் உதவியுடன் விடுதலைப் புலிகளை வலிந்து சண்டைக் கிழுத்து அவர்களைப் பலவீனப்படுத்தி விடுவதென்று சமரை ஆரம்பித்த சிங்களப் படைத் தலைமை சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை, யாழ்ப்பாணத்தை விட்டு புலிகள் தந்திரோபாயமாகப் பின்வாங்கி விடுவார்கள் என்று.

யாழ் குடாவை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்த பின்னர் தனது மாவீரர் நாள் உரையில் எங்கள் தேசியத் தலைவர் "பெரும் படையைத் திரட்டி நிலத்தைக் கைப்பற்றுவது கடினமான காரியமல்ல. ஆனால் கைப்பற்றிய நிலத்தில் காலூன்றி நிற்பதுதான் கடினமான காரியம். உலகெங்கும் ஆக்கிரமிப்பாளர்கள் எதிர் கொண்ட வரலாற்று உண்மையிது. இந்த வரலாற்றுப் பாடத்தை சிறீலங்கா இராணுவம் படித்துக் கொள்வதற்கு வெகுகாலம் செல்லாது" என்று குறிப்பிட்டார். அது அவருடைய நுட்பமான திட்டமிடலுக்கும், தீர்க்க தரிசனத்திற்கும் ஒரு எடுத்துக்காட்டு என்று அந்தப் பேராசிரியர் மேலும் கூறினார்.

"நிலங்களை இழப்பதும் பின் அவற்றை மீட்பதும் உலக விடுதலைப் போராட்டங்கள் அனைத்துமே சந்தித்த சந்திக்கின்ற ஒரு பொதுவான நிகழ்வுதான். 1943இல் "மா வோ சேதுங்"கின் "சென்சேனைப்" படைகள் "யேனான்" எனும் பகுதியை விட்டுப் பின்வாங்கிப் பின் அதை மீட்டெடுத்த வரலாற்று வெற்றி, 1974இல் எரித்திரிய விடுதலை இயக்கம் "அஸ்மாறா" எனும் தனது தலைநகரை இழந்து, சில ஆண்டுகள் கழித்து மீண்டும் மீட்ட வரலாறு, வியட்நாம் விடுதலைப்போரில் நடைபெற்ற நில ஆக்கிரமிப்பு, நில மீட்புச் சம்பவங்கள் போன்று இன்னும் எத்தனையோ சம்பவங்கள் இதற்கு உதாரணங்களாகச் சொல்லலாம் என்று நான் குறிப்பிட்டேன்.

தமிழ் மக்களின் நீண்ட விடுதலைப் பயணமானது பல தடைகளைத் தாண்டி இன்று வெற்றிபெற்று முன்னேறி வந்து நிற்கிற இவ்வேளையில் ஒன்றைமட்டும் அழுத்தமாய்ச் சொல்ல விரும்புகிறோம். "ஈழத் தமிழனுக்கு இனிமேலும் குடிப்பெயர்வு என்பதே இல்லை, எல்லாமே குடிபுகும்" விழாக்கள்தான் என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நம்பிக்கை அனைத்து ஈழத்தமிழனுக்கும் உள்ளது என்பதை நான் சென்ற இடங்களில் எல்லாம் காணக்கூடியதாக இருந்தது.

எங்களுடைய உரையாடல்களை கேட்டுக் கொண்டிருந்த பேராசிரியர்களும் மாணவர்களும், இடையிடையே அவர் களுடையக் கருத்தையும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். மாணவ-மாணவிகள் கூட்டம் காட்சியை தொடர்ந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தது. இடையிடையே என்னோடு புகைப்படங்கள் எடுத்துக்கொள்வதும், கையொப்பம் (Autograph) பெற்றுக் கொள்வதும் ஒரு பக்கம் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

எங்கள் உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு பெண் பேராசிரியர் **"மக்கள் மட்டும் இடம் பெயரவில்லை, நகரங்கள், கல்விக்கூடங்கள், அரச காரியாலயங்கள், கூட்டுறவு அமைப்புகள், பல்கலைக்கழகம் என மக்களுடன் இணைந்து மக்களின் வாழ்வோடு இணைந்த அம்சங்களும் வெளியேறின"** என்று கூறிவிட்டு உங்கள் ஓவியத்தில் மிக அற்புதமாக அது வெளிப் பட்டிருக்கிறது.



மாணவ, மாணவிகளோடு கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் பல்கலைக்கழகத்தில் கலையும் வடிவமைப்பும் (Art and Design) படிக்கின்ற மாணவர்கள் ஓவியம் குறித்த பல்வேறு வினாக்களை எழுப்பி தெளிவுபெற்றார்கள். மறுநாள் மதியம் அத்துறைக்குச் சென்று அம்மாணவர்கள் மத்தியில் உரையாற்ற வேண்டும். அது அவர்களுக்கு ஊக்கத்தைத் தரும் என்று கலைத்துறை பீடாதிபதி (Dean) பேராசிரியர் சிவச்சந்திரன் அவர்கள் என்னிடம் கேட்டுக் கொண்டார். வடமராச்சியில் ஓவியக் காட்சி இருக்கிறது. நேரம் ஒதுக்கி வந்துவிடுகிறேன் என்று உறுதி கொடுத்தேன்.

அதேபோல் கல்வியியல் கல்லூரியில் (College of Education) பயில்கின்ற மாணவர்கள் பளையில் காட்சி நடைபெற்று கொண்டு இருக்கும்போதே அங்கு வந்து என்னைச் சந்தித்து அவர்கள் கல்லூரியில் உரை நிகழ்த்த வேண்டும் என்றும் பயிலரங்கு நடத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பல்கலைக்கழகத்திற்கு கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் வருகை தந்து ஓவியக்காட்சியை பார்வையிட்டு, அவர்கள் கல்லூரிக்கு வருவதற்கான நேரம் கேட்டார்கள். இரண்டு நாட்கள் இரவு 7 மணியிலிருந்து 10 மணி வரை ஒதுக்கினேன்.

பல்கலைக்கழகத்தில் இரவு ஓவியக் காட்சிமுடியும் நேரத்தில் சர்வதேசத் தமிழீழ மாணவர் ஒன்றியப் பொறுப்பாளர் திரு. கண்ணன், "ஓவியங்கள் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. பார்த்த அனைவருக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. 5000க்கும் மேற்பட்டவர்கள் இன்று பார்வையிட்டிருக்கிறார்கள்" என்று கூறினார்.

ஒரே நாளில் 5000 என்பது மிகப்பெரிய வெற்றி.


காலையிலிருந்து இரவு வரை எண்ணற்ற பேராசிரியர்கள், மாணவ- மாணவிகள் என்று பலதரப்பினரிடமும் கலந்துரையாடி யிருக்கிறேன். உண்மையிலேயே இது ஈழத்தைப் பொறுத்தவரை வேறுபட்ட அனுபவமாகத்தான் இருந்தது. இங்கு பலரும் ஒரு கருத்தை வலியுறுத்திக் கூறினார்கள். "இவ்வோவியங்களை சிங்களவர்கள் மத்தியில் காட்சிப்படுத்த வேண்டும். அப்போதுதான் தமிழர்களுக்கு எவ்வளவு கொடுமைகள் அவர்கள் இழைத் திருக்கிறார்கள் என்பதை உணருவார்கள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கும் ஏற்புடையதாகவே இருந்தது. அதற்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று நண்பர்களிடம் சொன்னேன்.

அறைக்குச் சென்று குளித்துவிட்டு இரவு உணவு அருந்தும் நேரம் தினக்குரல் பத்திரிகையின் ஆசிரியர் திரு.ரகுராம் வந்தார். "இங்கு ஏற்கெனவே ஓரிரு கண்காட்சிகள் நடத்தியிருக்கிறார்கள். நாங்களும் பத்திரிகையில் எவ்வளவு செய்தி வெளியிட்டுப் பார்த்தோம். வெற்றிபெறவில்லை. உங்கள் ஓவியங்களுக்கு மக்களிடம் இருக்கின்ற வரவேற்பு பிரமிக்க வைக்கிறது. இன்றைக்கு நான் கண்கூடாகப் பார்த்தேன். உங்கள் வருகை ஈழத்தில் கலைத்துறையில் மாற்றத்திற்கு வித்திடும்" என்றார். இவர் சென்னை லயோலா கல்லூரியில் காட்சிவழி தகவல்துறையில் (Visual Communication) பட்டம் பெற்றவர். சென்னையிலிருக்கும் போதே என்னைப்பற்றி அறிந்து வைத்திருந்திருக்கிறார். ஆனால் அவரைப்பற்றி அங்கு சென்ற பிறகுதான் நான் அறிந்து கொள்ள நேர்ந்தது.

அவர் என்னிடமிருந்து விடைபெறும் போதே நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்தது. படுக்கையில் படுத்துக் கொண்டே அன்று எழுதப்பட்ட கருத்துப் பதிவேட்டை எடுத்தேன். வேறு எங்கும் இவ்வளவு பதிவுகள் இல்லை என்றளவிற்கு கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு செய்திருந்தார்கள். படித்து முடித்துவிட்டுத்தான் உறங்கினேன்.

■ ஈழத் தமிழரின் காலத்தின் கோலத்தை உயிரூட்டும் ஓவியம்

*சு.மோகன்தாஸ், துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்*

■ எங்கள் விடுதலையின் ஆத்மாவை- விடுதலைக்கான அதன் வலியை தூரிகையால் வல்லமையாய் கவிதை யாக்கிய கலைஞனே, வாழிய நின் கலைவாழ்வு.

*பேரா.என்.சண்முகலிங்கன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்*

■ எமது கண்முன்னால் நிகழ்ந்தவற்றை ஓவியப்பதிவுகளாக்கி எங்கள் உள்ளத்து உணர்வுகளை வெளிக்கொணர்ந்துள்ளார்.

*-சி.நிமலன்*

■ தமிழீழ விடுதலைப் போராட்டம் அதில் தமிழர்களின் கண்ணீரும் செந்நீரும் தொடர்பாக ஆழமாக நெருக்கமான உருக்கமான பார்வை கண்டு மெய்சிலிர்த்தேன்.

தமிழக மக்கள் என்றும் எம் விடுதலைக்கு கரம்கொடுத்து உலகிலே தமிழர் நேசம் என்ற ஒன்று தலைநிமிர எமக்கு உறுதுணையாக நிற்பார்கள் என்று மிகப்பெரிய தைரியத்தை ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் எமக்குள் விதைத்துள்ளது.

*-சு.செகந்தினி, கலைப்பீடமாணவி*

■ தமிழர்கள் இதுவரை காலமும் இனவெறி அடக்குமுறையின் கோரப் பற்களுக்குள் சிக்குண்டு அல்லல்பட்டு சிதையுண்டவற்றை ஒரு அறைக்குள் சில மணிநேரத்தில் பார்த்துக் கொள்ளக் கூடியதான ஒரு அற்புதப்படைப்பாகும்.

*-மாணவிகள், மானிடவியல்துறை,யாழ் பல்கலைக்கழகம்*

■ உடன்பிறவா சகோதரனின் துன்பம் கண்டு துடித்துப் பதைத்திட்ட உணர்வின் வெளிப்பாடு.

*-சி.ரகுராம், ஆசிரியர், தினக்குரல்*

■ ஓவியர் புகழேந்தி அவர்களின் ஓவியங்கள் அனைத்துமே எம் மண்ணில் நடக்கும் கொடுமைகளை உணர்வோடு வெளிப்படுத்துவன. அதிலே காத்திருப்பு, விதைக்கப்பட்டவர்கள் இவை இரண்டும் என் மனதோடு ஆழக் கலந்துள்ளன.

*- சு.கவிதா, கலைப்பீடம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ புகழேந்தியின் ஓவியங்கள் தமிழினம் சின்னா பின்ன மாக்கப்பட்ட வரலாற்றை எடுத்துக் காட்டுகின்றது. அவர் வரைந் துள்ள பெண்ணின் சிதைவு என்ற ஓவியம் இதுவரை வந்த ஓவியர் களாலும் இனிவரும் ஓவியர்களாலும் வரைந்து விடமுடியாத ஒப்பற்ற ஒரு கலைப்படைப்பு. ஒரு கலைஞனை அது எவ்வாறு பாதித்துள்ளது என்பதற்கு இவ் ஓவியங்கள் ஒரு நிதர்சனம்.

*-பார்வதி, தமிழ் மாணவி*

■ உள்ளத்தின் எரிமலைகள் ஓவியங்களாய்.. இது காலத்தின் கண்ணாடி. எங்கள் உணர்வுகளின் பிரதிபலிப்பு.


*-இ.சந்திரிக்கா, அல்லைப்பிட்டி*

■ ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் ஈழத்தின் நிலைப்பாட்டை துல்லியமாய் எடுத்தியம்புகிறது. இவரது வர்ணப்பாவனையும் குறியீட்டுத் தன்மையும் சிறப்பானவை.

*-சே.வி.ஜெஸ்மின்*

■ வார்த்தைகளால் வடிக்கமுடியாது ஈழத்தமிழரின் சோக நிகழ்வுகளை ஓவியர் புகழேந்தி எம் மனக்கண்முன் கொண்டு வந்து அவற்றை ஒரு கணம் மீட்டிச் சென்றுள்ளார்.

*-ம.தமிழினி*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தமிழீழத்தில் போராட்டத்துடன் வாழ்ந்த ஈழத்து ஓவியர்கள் பதிவு செய்ததைவிட, தமிழகத்திலிருந்து தான் அறிந்தவற்றை மிகவும் உணர்ச்சி பூர்வமாக யதார்த்தத்திற்கு அப்பால் சென்று தனது ஓவியங்களில் பதிவு செய்துள்ளார்.

*-ஓவியர் ரமணி*

■ அனுபவிக்காத அவலங்களை இருபது மைல்களுக்கு அப்பால் இருந்து உணர்ச்சி பூர்வமாக வெளிப்படுத்தியிருக்கிறார்

*-த.பாலமுருகன், கலைப்பீடம்*

■ படைப்புக்கள் காலத்தின் பதிவும் என்னும் வகையில் எல்லா படைப்புக்களும் காலத்தை பதிவு செய்ய வேண்டும். இவ் வகையிலே எமது உணர்வுகளுடன் கலந்துவிட்ட ஓர் கலைஞனின் ஆன்மாவினை இவ்ஓவியப் படைப்புகள் மூலம் பார்க்கமுடிகின்றது.

*-த.அருள்குமரன், யாழ் பல்கலைக்கழகம்*

■ ஒரு நல்ல விஷயங்களைப் பார்த்தேன். இவை கோர்வையாக அதாவது ஒரு நூலாக உருப்பெற்றால் தமிழீழத்தின் வடுக்களை உலகம் அறிய வாய்ப்புக்கள் ஏற்படும் அல்லவா? இக் கண்காட்சிகள் அபூர்வமானவை. பாதுகாக்கப்பட வேண்டியவை. இப்படி தமிழீழத்தின் ஒவ்வொரு விஷயங்களும் வெளிவரவேண்டும். இதை பார்த்ததை யிட்டு கலங்கினாலும் சந்தோசப்படுகிறேன்.

*-எ.லக்ஷ்மன், கலைப்பிரிவு*

■ ஓவியத்திற்கு அழகின் கண்ணோடு நான் பார்க்கவில்லை. உங்களின் ஒவ்வொரு ஓவியங்களும் ஒவ்வொரு தமிழ் மகனும் கடந்து வந்த காலங்களில் சுமந்து வந்த துன்பங்களையும் துயரங் களையும் எடுத்து இயம்புகின்றன. இந்த ஓவியங்களின் மூலம் தமிழனின் இன்னல்களையும் துன்ப துயரங்களையும் ஏனையோரும் அறிந்து கொள்ளவும் உங்களின் தமிழ்மண் பற்றையும் எடுத்து விளக்குகின்றன.

*-கிருபா, கலைப்பிரிவு*

■ உங்களது ஓவியக் கண்காட்சி வரவேற்கத்தக்கது. இதுவே இந்தியப் படைப்பாளி ஒருவர் எமது தமிழர்கள் அடக்கப்படும் வரலாற்றை சித்தரிக்கும் முதல் ஓவியமாக இருக்கிறது. உங்களது புலமை வெளிப்படுகிறது என்பது தவிர மறுபுறம் தமிழர்கள் இனவாதிகளால் அடக்கி மேலாதிக்கம் செலுத்துவதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியுலகுக்கு எடுத்துக்கூறும் சிறந்த ஊடகமாக உங்கள் ஓவியக் கண்கள் இருக்கின்றன என்பது வரவேற்கத்தக்கது. உங்கள் வரலாற்றுக் கண்களுக்கு வரவேற்பளித்து உதவுவோம்.

*-அ.சிவமலர், யாழ் பல்கலைக் கழகம்*

■ தமிழன் என்ற வகையில் அனைத்து மக்கட்கும் ஓர் தமிழ் இன உணர்வு உங்கள் ஓவியம் மூலமாக கிடைத்தது. இது தமிழருக்கு மட்டுமல்லாமல் சிங்கள மக்களுக்கும் போய் சேரவேண்டும்.

*-ஜெகதுர்கா*

■ தமிழ்நாட்டிலிருந்தே தாயகக் கனவுகளைச் சுமந்த நீங்கள் நம்நாட்டில் இருந்திருந்தால் சுடச்சுட ஓவியங்களால் எதிரிக்கு நல்ல சூடு கொடுத்திருப்பீர்கள்

*-ப.லதீஸ்வரி, யாழ் பல்கலைக்கழகம்*

■ மனித வாழ்க்கையின் தத்துரூபமான காட்சிகளை மீண்டும் மீட்டுப் பார்க்க கூடியதாக இக் கண்காட்சி இருந்தது.

*-விஜிதா*

■ ஓவியங்கள் வரலாற்றின் ஆதாரங்கள் தமிழனின் வரலாறு போராட்டங்களின் வெளிப்பாடு. நடந்து வந்த பாதையின் கால் தடங்களை திரும்பிப் பார்க்க வைக்கின்ற - ஒரு உன்னதமான படைப்பினை ஓவியர் புகழேந்தியின் தூரிகை எமக்கு ஒருவரமாய் வழங்கியுள்ளது.

*-எஸ்.பி.சதன்*

■ ஒடுக்கப்பட்ட தமிழ் இனத்தின் அல்லல் மிக தெளிவாக எடுத்து உரைக்கப் பட்டமை. இதன் வெளிப்பாடு கொக்கும் ஒரு நாள் துப்பாக்கி ஏந்தும். இவை ஓவியம் அல்ல உண்மை.

*-மா.சுசீந்திரன்*

■ மானுடம் மனிதனால் மரிக்கப்படுவதை காட்டும் ஒரு கண்காட்சி.

*-2ஆம் வருடம், சமூகவியல்துறை*

■ இலக்கியம் என்பது அறிவு என்பதை விட உணர்ச்சி என்பதை அற்புதமாய் விளக்கும் ஓவியங்கள்.

*-தி. ரமணன், என்.ஷர்மிளா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ எமது தாயக வேட்கையை குழிதோண்டிப் புதைக்க முயலும் இந்திய தேசத்திலிருந்து மேலும் ஒரு மறத்தமிழன்.

*-டி.அனுஷா*

■ நீண்ட நாட்களுக்குப் பின் ஒரு திருப்தியான உணவை உட்கொண்டதன் பிரமிப்பு. உங்கள் ஓவியங்கள். எமது ஈழ போராட்ட வரலாற்றுக் கதைகளை சொற்ப நேரத்திற்குள் காட்சியாக வடித்துத் தந்திருக்கிறீர்கள். ஓவியத்துடன் கவிதைகள்- அவற்றை உடனடியாக புரிந்து கொள்ள வழி வகுத்தன. ஆனால் கவிதை-கற்பனையின் முட்டுக்கட்டையாக இருந்துவிட்டதோ? எனும் எண்ணமும் எழுகிறது.

*-எஸ். செல்வரஞ்சனி, வவுனியா*

■ எங்கள் கவலை உங்கள் கைக் கலையில் கண்டு வியந்தேன்.

*-க.ஜீவகன், விவசாயபீடம்*

■ புகழேந்தியின் ஓவியம் எமது சமுதாயம் அடைந்த அவலத்தை உயிரோட்டமாக எடுத்துக் காட்டுகிறது. இந்த ஓவியங்கள் எவ்வளவு காலம் சென்றாலும் சிங்களவர் எமக்கு கொடுத்த வேதனைகளை ஞாபகப்படுத்திக் கொண்டு இருக்கும். புதைக்கப்பட்டது அல்ல. காவியம் விதைக்கப்பட்டது என்பதை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

*-த.சுமித்ரா, நாவலடி*

■ கலைஞன் எல்லா எல்லைப் பாடுகளுக்குமப்பால் மானுடத்தின் இன்னல் தீர்க்கத் தன் கலையாற்றலை ஆயுதமாக்குவான் என்பதற்கு நிதர்சனம் புகழேந்தியின் ஓவியங்கள்.

*-ஐ.சாந்தன்*

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சியில் ஓவியக்காட்சி

கரவெட்டி அரசடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையில் ஓவியக் காட்சி நடைபெற்றது. இங்கும் தொடக்க நிகழ்வின் போதே ஏராளமாகக் கூட்டம். பள்ளி மாணவ- மாணவிகளும், பொது மக்களும் திரண்டிருந்தனர். முதல் நாள் பல்கலைக்கழகத்தில் பார்க்கத் தவறியவர்கள் பலரும் இங்கு பார்வையிட வந்திருந் தார்கள்.

இங்கும் பலர் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை கண்ணீருடன் என்னோடு பகிர்ந்து கொண்டார்கள்.

வயதான ஒரு மூதாட்டி,

"கிணற்றடி வேலியில் இரண்டு கிடுகு கழன்று விழுந்து விட்டால் குளிக்க மறுத்த இளம்பெண், நீராட தெருக்கரை வாய்க் காலுக்குத் தள்ளப்பட்டாள். ஒரு தனிமனிதனின் பழக்க வழக்கத்தி லிருந்து வாழ்நிலைவரை அத்தனைக்கும் ஊரே கண்காணிப் பாளனாக, நீதிபதியாக, வழிகாட்டியாக திகழும் ஒரு அற்புதமான உறவு வலிகாம மண்ணில் நிலவியது. ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பம், தனது உறவுகள், தனது ஊர், தனது தேசம் என தனது என்ற வட்டத்துக்குள்ளேயே ஒரு பொதுஉறவு இந்த மண்ணில் நிலவியது.

ஆனால் நாங்கள் இடம்பெயர்ந்து வாழ்ந்தபோது, தனித்தனி மரங்களாய், அகதி முகாம்களில், உறவினர் வீடுகளில் ஓலைக் கொட்டில்களில் உறவுகளைப் பேண முடியாத எதிர்கால வாழ்வைப் பற்றி ஒரு திட்டவட்டமான இலக்கை வகுக்க முடியாத ஒரு வாழ்வுக்கு நாங்கள் தள்ளப்பட்டோம்" என்று அந்த இடப் பெயர்வினால் விளைந்த விளைவுகளைப் பற்றிக் கூறினார்.

ஒரு பாடசாலைஆசிரியர், மார்க்சிய சிந்தனையாளர் ஒரு எழுத்தாளர் அவர் "யாழ்ப்பாண மண், சிறீலங்கா படையினரால் இந்தியப் படையினரால் பலமுறை ஆக்கிரமிக்கப்பட்டது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்கப்பட்டது, சிதைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் நாங்கள் புதுப் பொலிவுடன் எழுந்தோம். இது வரலாறு" என்று கூறினார்.

உண்மைதான் இதே நம்பிக்கையும் உறுதியும் இங்கு நான் சந்தித்த ஒவ்வொருவரிடமும் வயது வேறுபாடு இல்லாமல் பால்வேறுபாடு இல்லாமல் அனைவரிடமும் கண்டு வியந்தேன்.

"நாங்கள் ஏற்கெனவே சுதந்திரக் காற்றை சுவாசித்தவர்கள், விடுதலைப் பிரதேசங்களில் எமது சொந்த நிர்வாக கட்டமைப்பில் வாழ்ந்தவர்கள், இன்னுமொரு அடிமைவாழ்வின் அலங் கோலங்களை அனுபவிக்கத் தயாரற்றவர்கள் என்ற இறுமாப்பை மட்டும் நெஞ்சில் சுமந்தவர்களாக, பரம்பரை பரம்பரையாகத் தேடிய செல்வங்களையும் சுகங்களையும் உதறி எரிந்துவிட்டு இன்னுமொரு வாழ்வுக்கு முகம் கொடுக்கவென நெடும்பயணம் மேற்கொண்டவர்கள் எங்கள் வலிகாம மக்கள்" என்றார் மற்றொருவர்.

இந்த இடத்தில் இன்னொன்று நினைவுக்கு வருகிறது. யாழ் பல்கலைக்கழக கலை பீடாதிபதி பேராசிரியர் சிவச்சந்திரன் அவர்களுடைய இல்லத்திற்குச் சென்றிருந்தேன். அவருடைய வீடு மிகப் பெரியதாக மாளிகைபோன்று இருந்தது. நான் இரவு நேரத்தில் சென்றிருந்தேன். மின்சாரமும் அப்போது தடைபட்டிருந்தது. அந்த இருண்ட சூழலில் அவரோடு அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது, "இந்த வீடு, சொத்து, சுகம் அனைத்தையும் விட்டு விட்டுத்தான் மக்களோடு மக்களாக இடம் பெயர்ந்தேன்" என்றார். அவர் சொல்லும்போது எனக்கு வியப்பாக இருந்தது. ஆனால் மக்கள் பலரை சந்தித்து அவர்களோடு உரையாடிய பிறகு "சொத்து சுகங்களுக்காக அடிமை வாழ்வு வாழ அந்த மக்கள் என்றுமே தயாரில்லை" என்பதை உணரந்து கொண்டேன்.

தமிழீழத்தில் இன்னும் சில பகுதிகள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் இருக்கின்றன. அது தொடர்பாக, அங்குவந்த சிலரிடம் உரையாடிக் கொண்டிருந்தபோது, 60 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவர், "நாங்கள் ஒரு தேசிய இனம் எமக்கென்று ஒரு மொழி, ஒரு பிரதேசம், ஒரு பொருளாதாரம், ஒரு கலாச்சாரம் எல்லாமே உண்டு. ஆளும் இனங்களோ, அல்லது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்து அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடும் எந்த ஒரு குழுவோ தேசிய இனங்களின் தனித்துவத்தை குலைப்பதில் என்றுமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ தனிக்கவனம் செலுத்தி வந்துள்ளன.

எமது பிரதேசத்தின் பிறபகுதிகள் இன்னும் எதிரியின் ஆக்கிரமிப்புக் கரங்களால் கவியப்பட்டிருக்கின்ற போதும், தமிழீழ மக்களும் தமிழீழ மக்களின் முன்னணிப் படையான விடுதலைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலிகளும் வார்த்தைகளில் வடிக்கமுடியாத தியாகங்களாலும், வீரத்தாலும் எதிரியை விரட்டியடித்து எமது தமிழீழ மண் முழுவதும் சுதந்திரக் காற்றை உலவவிடுவார்கள். அது மிக விரைவில் நடைபெறும்" என்று நம்பிக்கையோடும் உறுதியோடும் கூறினார்.

நான் யாழ்ப்பாணத்திற்கு சென்று அங்குள்ள விவசாய நிலங்களை பார்வையிட்ட உடனேயே சில அய்யப்பாடுகள், விவசாயத்தை ஒட்டி எழுந்தன. அதாவது யாழ்ப்பாணத்தில் நான் பார்த்த நிலப்பரப்புக்கும், சூழலுக்கும் வன்னியில் நான் பார்த்த நிலத்தின் தன்மைகளுக்கும், சூழலுக்கும் வேறுபாடு இருப்பதை உணர்ந்தேன். யாழ் மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து வன்னிப் பெரு நிலத்திற்குச் சென்ற பொழுது குறிப்பாக விவசாயிகள் என்ன மாதிரியான விளைவுகளை எதிர்கொண்டார்கள் என்பதை அறிய இங்கு காட்சியை பார்வையிட வந்திருந்த, விவசாயத்தை தொழிலாகக் கொண்டவர்கள் சிலரிடம் கேட்டேன். "ஒரு குறுகிய பரப்பளவில் கூடிய பலன் தரும் வலிகாம மண் விவசாயம் செய்யச் செய்ய வளமேறி பொன்னாக மாறும் செம்மண் பூமி. இடப்படும் பசலையைக் கீழிறங்க விடாத சுண்ணாம்புக்கல் படிவம் அந்த மண்ணுக்கும் கீழே இருக்கிறது. இம்மண்ணில் மிளகாயும், வெண்டியும், கத்தரிக்காயும், புகையிலையும், வாழையும் பொன்னையும் பொருளையும் அள்ளி அள்ளித் தந்தன. யாழ்ப்பாண விவசாயியின் கடும் உழைப்புடன் கைகோர்த்து நின்று என்றும் இளமையுடன் திகழ்கிறது.

ஆனால் வன்னியிலோ பரந்த வயல்வெளிகள், ஏக்கர் கணக்கான புன்செய்நிலங்கள், பசலையின் பலனை பயிருக்கு முழுமையாகப் பெற்றுக் கொடுக்க முடியாத மண். நிறைவோடு அருவிகளாய் என்றும் நீரோடும் வாய்க்கால்கள், காடும் காடு சார்ந்த சூழலும் என வித்தியாசமான ஒரு சூழ்நிலை.

நகரும் நகர் சார்ந்த தொழில்களும் பல்கிப்பெருகிய வலிகாம மண்ணை விட்டு வந்த மக்களுக்கு கிராமங்களும் கிராமங்களின் தேவைகளை ஒட்டி உருவான சிறு நகரங்களும் வித்தியாசமான தோற்றத்தை மட்டுமின்றி, புதிய சூழ்நிலையை தோற்றுவித்தது. நிரந்தரத் தொழில்களால் தமக்கென ஒரு அந்தஸ்தை உருவாக்கியிருந்த வலிகாமச் சமூகம், உதிரித் தொழில்களை நாடவும் அன்றாடங்காய்ச்சிகளாக மாறும் நிலைக்குத் தள்ளப்பட்டது" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியக்காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுதே, இடையில் ஏற்கெனவே திட்டமிட்டபடி, மதியம் யாழ் பல்கலைக் கழகத்தின் இராமனாதன் அகாடமி Art and Design என்ற சொல்லக்கூடிய துறைக்கு அம்மாணவர்கள் மத்தியில் உரையாற்றச் சென்றேன். நான்கு ஆண்டு பாடத்திட்டத்தை உடைய அத்துறையில் தகுதிப்பெற்ற ஆசிரியர்கள் இல்லாததால் அம்மாணவர்கள் எதுவும் தெரிந்து கொள்ள முடியாத நிலையில் இருப்பதை அத்துறைக்குச் செல்லுவதற்கு முன்பே உணர்ந்து கொண்டேன். மேலும், முறையான, சரியான, பாடத்திட்டத்தை வகுக்காமல் மேலோட்ட மான, மாணவர்களுக்கு எவ்வித பயனும் பலனும் அளிக்காத வகையில் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டிருப்பதை அத் துறைக்குச் சென்று அத்துறையின் ஒருங்கிணைப்பாளரிடம் பேசிய பொழுது தெரிந்து கொண்டேன். முன்னூறு மாணவ- மாணவி களுக்கு மேல் அந்த அரங்கத்தில் கூடியிருந்தார்கள். நான் எவ்வாறு இந்தத் துறையில் காலடி எடுத்து வைத்தேன். என்னுடைய படைப்பு- அதன் நோக்கம்- ஓவியக் காட்சி, உலக அளவிலான என்னுடைய பயணம் என்று அனைத்தையும் தொட்டு ஒன்றரை மணிநேரம் உரையாற்றினேன். மிகவும் அமைதியாக அந்த உரையைக் கேட்டார்கள்.

உரை முடிந்ததும் ஓவியர் இரமணி "மாணவர்களுக்கு தன்னம்பிக்கையும் உற்சாகமும் அளிக்கும் உரை உங்கள் உரை. மிக்க மகிழ்ச்சி" என்றார்.




யாழ் பல்கலைக்கழக கலை மற்றும் வடிவமைப்புத் துறை மாணவர்களிடம் உரையாற்றுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த ஒருங்கிணைப்பாளர் "இந்தப் பாடத்திட்டத்தை மாணவர்களுக்கு பயனுள்ள வகையில் மாற்றித் தரவேண்டும்" என்றார்.

அங்கு இளங்கலை பட்டம் (BFA) பெற்ற மாணவர்கள் தமிழக கல்லூரிகளில் முதுகலை (MFA) பயில விரும்புகிறார்கள். ஆனால் அதற்கு அவர்களுக்குரிய பாடத்திட்டம் தடையாக இருக்கிறது என்று உணர வைத்தேன்.

உலகத்தில் எந்த பல்கலைக்கழகத்திலும் முதுகலை படிப்பை தொடருகின்ற வகையில் அவர்களுடைய பாடத்திட்டத்தை வகுக்கவில்லை. அவர்களுடைய பாடத்திட்டம் ஒரு கதம்பமாக, எந்த ஒன்றையும் குறிப்பிட்டு நோக்குவதாக இல்லாமல் எல்லாவற்றையும் தொட்டுச் செல்கிறது.

உயர் கல்வியைப் பொறுத்தவரை ஒரு மாணவனுடைய கவனம் ஒரு புள்ளியைநோக்கி நகர்ந்து குவியவேண்டுமே தவிர, அகண்ட தன்மை இருப்பதாக இருக்கக் கூடாது.

இங்கு எல்லாப் பல்கலைக்கழகத்திலும் கல்லூரியிலும் உள்ளதைப் போல அங்கு அந்தப் பல்கலைக்கழகத்திலும் "உள் அரசியல்" அந்தப் பல்கலைக்கழகத்தின் நற்பெயருக்கும் அந்த மாணவர்களுடைய எதிர்காலத்திற்கும் வேட்டு வைக்கிறது.

என்னுடைய உரைமுடிந்து, அந்த மாணவ- மாணவிகளிடம் நின்று நிதானித்து பேசமுடியாத அளவிற்கு நேரம் என்னை விரட்டிக் கொண்டிருந்தது. "அடுத்து ஓவியக்காட்சிக்கு சென்று அதை முடிக்க வேண்டும். என்னைச் சந்திக்க விரும்புகின்றவர்களை சற்றுக் காத்திருக்கச் சொல்லுங்கள் விரைந்து வந்து விடுகிறேன்" என்று சொல்லிவிட்டுத்தான் வந்தேன். அதனால் வாகனத்தில் விரைந்தேன். என்னோடு வாகனத்தில் சில மாணவர்களும் வந்தார்கள். "உங்களுடைய உரைமிகவும் சிறப்பாக இருந்தது. எங்களுக்கும் மிகபயனுள்ள வகையிலும் அமைந்திருந்தது. இன்னும் சிறிது காலம் நீங்கள் எங்களோடு இருந்தால் மிகவும் மகிழ்ச்சி அடைவோம்" என்று கூறினார்கள்.


கிட்டத்தட்ட 40 நிமிட பயணத்திற்குப் பிறகு வடமராட்சியை அடைந்தோம். நான் நினைத்ததைப் போலவே ஓவியக்காட்சிக் கூடத்தில் பலர் என்னைச் சந்திக்க காத்திருந்தார்கள். அவர்களோடு சிறிது நேரம் உரையாடிவிட்டு, ஓவியங்களை தென்மராட்சிக்கு அனுப்பி வைத்துவிட்டு, யாழ்ப்பாணம் திரும்பி, முதல்நாள் திட்டமிட்டபடி இரவு கல்வியியல் கல்லூரிக்கு (College of Education) சென்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியியல் கல்லூரியில் ஓவியம் நடனம், நாடகம், இசை போன்ற துறைகளில் மூன்றாண்டு படிப்பிற்கான பட்டம் தருகிறார்கள். இக்கல்லூரியில் பட்டம் பெற்றவர்கள்தான் பள்ளி களில், ஓவிய ஆசிரியர்களாகவும், நடன ஆசிரியர்களாகவும், இசை ஆசிரியர்களாகவும் நியமிக்கப்படுகின்றார்கள். இங்கும் ஓவியத் துறைக்கு முறையான ஆசிரியர்கள் இல்லாதது பெரும் குறையாகவே இருக்கிறது. குறைந்தபட்ச திறனைக் கூட பெறாமல் பட்டம் பெற்று பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமனம் பெறுகின் றார்கள். பின் எப்படி இந்த ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்க முடியும். மிகவும் வேதனையாக இருந்தது. இயன்ற அளவு இவர் களுக்கு உதவவேண்டும என்று நினைத்தேன்.

அனைத்துத் துறை மாணவ- மாணவியர்க்கும் 45 நிமிட உரை நிகழ்த்திவிட்டு ஓவியத்துறை மாணவ- மாணவிகளுக்கு தனியாக ஒரு உரை நிகழ்த்தினேன். உரைக்குப் பின் கலந்துரையாடலும் இடம்பெற்றது. ஓவியம் குறித்து, ஓவிய அடிப்படைகள் குறித்து, அதன் கோட்பாடுகள் குறித்து, வரைபொருட்கள் குறித்து, என் ஓவியங்கள் குறித்து ... உரையாடல் நீண்டது. ஒரு மாணவர் "சமூக சூழல் குறித்து மட்டும்தான் ஒரு ஓவியன் ஓவியம் தீட்டவேண்டுமா" என்று கேட்டார்.

"யாழ்ப்பாணத்தில் எந்த நேரமும் இராணுவம் துப்பாக்கியோடு உங்களை சுற்றி வந்து கொண்டிருக்கிறதே, யாழ்ப்பாணத்தை கிட்டத்தட்ட ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலைபோல வைத்திருக் கிறதே இச்சூழலில் வேறு எதைப்பற்றிச் சிந்திப்பீர்கள் சொல்லுங்கள்" என்றேன்.



தேசியக் கல்வியியல் கல்லூரியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்கால கனவுகளோடு பள்ளியில் படித்துக் கொண்டிருந்த கிருசாந்தி போன்ற எண்ணற்ற பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கி செம்மணி போன்று பல்வேறு இடங்களையே புதைகுழி ஆக்கினார்களே அந்தப் புதைகுழி மேல் நின்று கொண்டு எதைப்பற்றிச் சிந்திப்பீர்கள்" என்றேன்.

அவர்கள் உணர்ந்து கொண்டார்கள். ஒரு படைப்பு எந்தச் சூழலில் வெளிப்படுகிறது என்பதை உணர்ந்து கொண்டார்கள். அவர்களோடு கலந்துரையாடுவது எனக்கும் விருப்பமாகத்தான் இருந்தது. ஆனால் நேரம் நள்ளிரவை நெருங்குவதற்கு ஒருமணி நேரம் இருந்தது. மறுநாள் இரவு சிறிய அளவிலான ஒரு பயிலரங்கை நடத்துகிறேன் என்று கூறிவிட்டு விடைபெற்றேன்.

அறைக்கு வந்து குளித்துவிட்டு வடமராட்சியில் எழுதப்பட்ட கருத்துக்களை படித்தேன்.

■ ஓவியங்கள் எம்மை நிலைகுலைய வைத்துவிட்டன. இங்கு நடந்த அவலங்களில் சிலவற்றைக் கண்கூடாகக் கண்டவர்கள் நாம். பலவற்றை தகவல்கள் மூலமே அறிந்திருந்தோம். ஆனால் புகழேந்தியின் ஓவியத்தைக் கண்ணுற்றவுடன் அவை நிதர்சனமாக எம்முன் நிழலாடுகின்றன. தூரிகை ஒன்றுக்கு இவ்வளவு வலிமையா?

*-ஆர்.இராஜேந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ புகழேந்தியின் ஓவியங்கள் தார்மீக உணர்வோடு கடல்கடந்த துயரங்களை படம்பிடித்துக் காட்டுகிறது. தஞ்சை மண்ணின் கலைத்துவமும் அதனூடாக எழும் மார்க்சியப் பார்வையும் வீச்சு மிக்கவை.

*-ச.செல்வானந்தன்*

■ இவ்வோவியங்கள் ஓவியங்களாக எங்கள் கண்களுக்குப் புலப்படவில்லை. நாம் அனுபவித்த அந்த சோக நிகழ்வுகளை நேரே அனுபவிக்கிறது போன்ற ஒரு பிரம்மை.

*-எஸ்.கோகுல்*

■ நான் பிறந்து வளர்ந்து நேரில் கண்ட கேட்ட அனுபவித்த பல விடயங்களின் ஒரு மீள் நினைவு இன்று.

*-டி.ரேவதி*

■ நல்ல படைப்பு எது? கற்பனையா? எதார்த்தமா? கேட்டவை ஓவியங்களாய். நேரில் உணரப்பட்டதைவிட இங்கே கேள்விப் பட்டதை படைப்புகளாய். நல்ல தரமாய்.

*-கே.கிருஷாந்தி*

■ இவ்வோவியங்கள் ஓவியங்கள் அல்ல. எமது விடுதலைப் போராட்டத்தின் காலச்சுவடுகள். எங்கள் வாழ்க்கையின் பதிவுகள்.

*-ஜி.கேசவன்*

■ எமது மக்களின் யுத்தகால வேதனைகளை அனுபவித்தவரோ என்று எண்ணத் தூண்டும் அளவிற்கு ஓவியத்தில் வெளிப்பாடு தெரிகிறது.

*-ஏ.செ.*

■ தூரிகை வீச்சால் உயிரின் மூச்சை அதன் வெப்பத்தை உணரவைத்த, மீட்டுப் பார்க்க வைத்த ஓவியங்கள். இல்லை... உணர்வுகள்... மறக்கமுடியாத பதிவுகள்...

*-க.முருகன்தாஸ்*

■ புயலின் நிறங்கள் ஓவியக்காட்சி தமிழன் கடந்து வந்த கரடுமுரடான பாதையை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டு கின்றது. எங்களின் விடிவிற்காக அயராது போராடும் போராளி களோடு ஓவியர் புகழேந்தியும் ஓவியத்தின் மூலம் போராடுகின்றார்.

*-கி.நவமணிதேவி*

■ ஈழத் தமிழன் படும் அவலங்களை உலகிற்குச் சொல்ல உங்கள் தூரிகை கொண்டு வந்திருக்கிறீர்கள். தமிழகத்திற்கும் தமிழீழத் திற்குமான தொப்புள் கொடி உறவு புகழேந்தி போன்றவர்களால் இன்னமும் அறுபடாமல் இருக்கிறது.

*-இந்திரகுமார்*

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியில் ஓவியக்காட்சி

தென்மராட்சியிலும் காலையில் ஓவியக்காட்சி தொடங்கப் பட்டது முதல் பலதரப்பட்ட மக்களும் வந்து கொண்டிருந்தார்கள். தமிழகத்திலே பிறந்து வளர்ந்து தற்போது தென்மராட்சியில் ஒரு தேவாலயத்தில் பணிபுரிந்து கொண்டிருக்கும் ஒரு பாதிரியார், தமிழக மக்களிடமிருந்து தமிழீழ மக்கள் தங்களுக்கு ஆதரவாக குரல் எழுப்பவில்லையே என்று ஆதங்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு உங்களுடைய வருகையும், உங்கள் ஓவியமும் ஆறுதல் அளிக்கிறது என்று நினைக்கிறார்கள். தமிழகத்தில் பிறந்ததால் எனக்கும் பெருமையளிக்கிறது என்று நெகிழ்ந்து சொன்னார்.

இடப்பெயர்வின் போது நீங்கள் இங்கிருந்தீர்களா? என்று கேட்டேன். இல்லை. நான் அப்போது இம்மண்ணிற்கு வரவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் வந்தேன். என் நண்பர் அந்த துன்பத்தை அனுபவித்தவர். வந்திருக்கிறார் என்று அவரை அழைத்து வந்து அறிமுகப்படுத்தினார்.

அவர் "உங்கள் ஓவியங்கள் எங்கள் உள்ளத்தில் உறங்கிக் கொண்டிருந்த உணர்வுகளை எல்லாம் கிளறிவிட்டுக் கொண்டிருக் கிறது" என்று கண்களில் நீர்மல்கக் கூறினார். அவரே தொடர்ந்து "எல்லாச் சொத்துக்களையும் உடைய ஒருவர் அத்தனைச் சொத்துக் களையும் ஒரு நாளில் இழந்து ஏதிலியாகி அலைவதென்றால் அது எத்தகையக் கொடுமை தெரியுமா? வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளிலிருந்து தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பலாலிக் கடலேரியைக் கடந்து வன்னிப் பெருநிலப் பகுதியை நோக்கி நடந்தபடி இருந்தார்கள். கடலேரியின் மறுகரையிலே குண்டு கக்கும் விமானங்கள். அதை எதிர்த்துத் தாக்கும் புலிகள். குண்டு நம் தலையில் விழுமோ என்ற பயத்துடன் உயிரைக் கையில் பிடித்தபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பயணிக்கின்ற அந்த மக்களைக் காணும் போதுதான் இடப் பெயர்வின் அவலம் தெரியும்" என்று சொன்னபோது கூட அவர் முகத்தில் வேதனை தெரிந்தது.

"நாற்பது வயது மதிக்கத்தக்க ஒருவர், ஆயிரக்கணக்கான மக்களில் ஒருவனாக நானும் அடிமேல் அடிவைத்து நகர்ந்து கொண் டிருந்தேன். எனக்கு முன்னால் ஒரு கர்ப்பிணிப்பெண் தலையில் சுமையோடு, இடுப்பில் இன்னொரு குழந்தையை தூக்கிக் கொண்டு சென்று கொண்டிருந்தாள். அவள் கணவன் சைக்கிளில் சுமைகளை வைத்துதள்ளிக் கொண்டு சென்றான். நன்றாக மழை வேறு தூறிக்கொண்டு இருந்தது. விமானங்கள் குண்டுகளை போட்டுக் கொண்டிருந்தன. திடீரென அப்பெண்ணுக்கு பிரசவ வலி எடுத்து தரையில் படுத்து கதறுகிறாள். அவளை நின்று கவனிப்பதற்கு மற்றவர்களுக்கும் அவகாசம் இருக்கவில்லை. இராணுவம் குண்டுப்போட்டுக் கொண்டிருக்கிறான். அந்தப் பெண்ணுக்கு இருபுறமும் சைக்கிளை நிறுத்தி போர்வையை போட்டு மூடி மறைப்பு ஏற்படுத்திய சில நிமிடங்களுக்குள் குழந்தை பிறந்தது. பிறந்த உடனேயே அந்தக் குழந்தையை தூக்கிக் கொண்டு அந்தத்தாய் நடக்கத் தொடங்கினாள். பாருங்கள். இதுபோன்றக் கொடுமை உலகத்தில் வேறுயாருக்கும் வரக்கூடாது" என்று தனக்கேற்பட்ட அனுபவத்தைக் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த இடப்பெயர்வின்போது நூற்றுக்கணக்கான குழந்தைகள், சேற்றிலும் மழையிலும் குண்டு மழைக்கு மத்தியிலும் பிறந்ததாக அறிந்தேன்.

இந்த இடப்பெயர்வு குறித்து, யாழ் மண்ணில் அம்மக்களோடு உரையாடிக் கொண்டிருந்தபொழுது அண்ணன் க.வே.பாலகுமாரன் அவர்கள் அந்நேரத்தில் எழுதியக் கட்டுரையில் படித்தது நினைவுக்கு வந்தது.

.... புலிகளின் போரிடும் ஆற்றலும், மக்களின் போராட்ட உணர்வும் ஒன்றிணையும் போதே அதன் சமன்பாடாக விடுதலை வெல்லப்படும் என்பதே இயங்கியல் விதி. இவற்றில் ஒன்று குறைவடைந்தாலும் விடுதலைப்போர் அதன் இலக்கை அடையாது போகும் அபாயமிருப்பதை எம்மக்களுக்கு பாலத்தீனிய மக்களின் போராட்ட வரலாறு மிகத்தெளிவாக உணர்த்தி நிற்கிறது. ஏனெனில் எத்தகைய இடர்கள் வந்தபோதும் போராடும் உணர்வை எப்போதும் தம்மோடு தக்கவைத்துக் கொள்பவர்கள். இடம்பெயர்ந்தாலும் போராடும் உணர்வை மனம் பெயரவிடாத மக்கள் எனக் கூறப்படுபவர்கள் பாலத்தீனியர். 1948ஆம் ஆண்டு தொட்டே தமது மண்ணிலிருந்து விரட்டப்பட்டு இடைவிடாத, தொடர்ந்த இடப் பெயர்வுகளைச் சந்தித்தவர்கள். இன்று அவர்கள் பலவாறாக சிதறி அகதிகளாக அரபு நாடுகளிலும் இன்னும் பலர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளிலும் வாழ்கின்றனர். ஆனாலும் இன்றுவரை யூதர்க்கு எதிரான தமது வெறுப்புணர்வையோ தமது விடுதலை உணர்வையோ அம்மக்கள் இழக்கவில்லை. ஆயுதம் இல்லாத நிலையிலும் கையிலகப்பட்ட கல்லை எடுத்து இஸ்ரேலிய இராணுவத்தின் மீது எறிந்து போராடும் 10 வயது பாலத்தீனிய சிறுவர் கதை உலகறிந்தது. ஆனால் இவற்றால் என்ன பயன்? விடுதலை உணர்விருந்தும் விடுதலை அவர்களுக்கு சித்திக்கவில்லை. விடுதலைத் தாய் அவர்களை அரவணைக்கவில்லை. இது ஏன்? பாலத்தீனிய மக்களது போராடும் உணர்வை வழிப்படுத்தி செம்மையான வலுவான விடுதலைப போராட்ட அமைப்பாக மாற்ற வேண்டிய பணியை செய்ய அங்கு தகுந்த அரசியல் இராணுவத் தலைமை உருவாகாமையே காரணமாகும். அதனாலேதான் இன்று அம்மக்கள் மீது அரைவேக்காட்டு அரைகுறைத் திட்டமொன்றை திணிக்க இஸ்ரேலாலும் அமெரிக்காவாலும் முடிந்தது.

ஆனால் எமதுகதையோ இதற்கு முற்றிலும் வேறானது. இவ்வேறுபாட்டைப் பூரணமாகப் புரிந்து இப்போதுள்ள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிடத்தை இடைவெளியை நிரப்ப எம்மக்கள் முன்வரும் போதே புதிய வரலாறு இம்மண்ணில் எழுதப்படும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால் நாற்பதாயிரம் புதைகுழிகள் தோண்டும் பொறுப்பை எம் மக்களும் பங்கிட வேண்டும். இதையுணர்வதற்கு ஒரு முறை பாலத்தீனிய மக்கள் அடுக்கடுக்காக சந்தித்த அவலங்களை, அகதியாக பிறந்து வாழ்ந்து இறக்கும் துயர வரலாற்றைப் புரட்டிப் பார்த்தல் அவசியமாகின்றது. அதன் மூலமே தக்கதொரு பாடத்தை நாம் படிக்க முடியும். 1948ஆம் ஆண்டு இஸ்ரேல் உருவாக்கப்பட்ட போதே பாலத்தீனிய மண்ணிலிருந்த சரி அரைவாசிப்பேர், அதாவது ஏழரை இலட்சம்பேர் அகதிகளாக ஓடத் தொடங்கினர். 1967ஆம் ஆண்டுப் போரில் இஸ்ரேல் மேற்கு யோர்தான் கரை, காசாப்பகுதி போன்றவற்றை ஆக்கிரமித்த போது மற்ற ஓட்டம் தொடங்கியது. உடனடியாகவே 5 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாயினர். 1967க்குப் பின்னர் ஒட்டு மொத்தமாகக் கணக்குப் பார்த்தபோது 15 இலட்சம் பேர் தமது மண்ணிலிருந்து வெளியேறிவிட்டமையும் 12 இலட்சம் பேர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் அடிமைகளாக வாழ நேரிட்டமையும் புலப்பட்டது. இன்றோ ஏறத்தாழ 40 இலட்சம் பேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இவ்வாறாக அகதிகளாக பல்வேறு நிலைகளில் பல நாடுகளில் வாழ்கின்றனர். அதேவேளை 20 இலட்சம்பேர் இஸ்ரேலிய இராணுவப் பிடியில் சிக்கிய பகுதிகளில் வாழ்கின்றனர். இவ்வாறாக முழு இனமே சிதைவடைந்த நிலையில். இவர்களிடம் என்ன போராடும் உணர்வு இருக்க முடியும் என்று எவரும் கேட்கலாம். பாலத்தீனிய விடுதலைக்காக புறப்பட்ட பல இயக்கங்கள் தமக்குள்ளேயும் வெளியேயும் முரண்பட்டு போராட்டத்தை பாதிவழியில் நிறுத்திய பின்னரும் பாலத்தீனிய மக்கள் தமது விடுதலையுணர்வினை வெளிப்படுத்திய வண்ணமேயிருந்தனர். 1987ஆம் ஆண்டு ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் இஸ்ரேலிய எதிர்ப்பு கொழுந்து விட்டெரியத் தொடங்கிற்று. போராடும் தலைமை இல்லாத நிலையிலும் மக்கள் வீதிக்கு தாமாகவே இறங்கி போராடத் தொடங்கினர். “இன்ரி பாதா” அல்லது “மக்கள் எழுச்சி” என அழைக்கப்படும் இக்கிளர்ச்சி உலகமெங்கும் அவர்கள் பால் அனுதாபத்தைத் தேடித்தந்தது. ஆனால் விடுதலையை இன்னமும் தேடித்தரவில்லை. இருந்தபோதும் 1967க்குப் பிறகு இஸ்ரேலியர் இவர்களது வெளியுலகத் தொடர்புகளைத் துண்டித்து தனிமைப் படுத்தியபோதும் திட்டமிட்ட இராணுவமயப் படுத்தப்பட்ட யூத குடியேற்றங்களை இம் மக்களுக்கிடையில் ஏற்படுத்திய போதும் இஸ்ரேல் எதிர்பார்த்தது போல் பாலத்தீனிய மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடிக்க முடியவில்லை. 1987ஆம் ஆண்டிலிருந்து அடக்குமுறை தாளாத மக்கள் இயல்பாகவே கிளர்ச்சி யொன்றைத் தொடங்கினர். கையில் அகப்படும் கற்கள், இரும்புத் துண்டங்கள், பெட்ரோல் குண்டுகள், நாட்டுப்புறத் தயாரிப்புக் கைக்குண்டுகள் இவர்களது பிரதான ஆயுதங்களாயின. மக்கள் குழுமி கல்லால் அடித்தே பல இஸ்ரேலிய இராணுவத்தினரைக் கொன்றனர். துரோகிகளை, உளவாளிகளை பகிரங்கமாகச் சந்திகளில் கட்டி வைத்து தாமே தாக்கிக் கொன்றனர். முழுமையாக 5 ஆண்டுகளுக்கு மேலாக இக்கிளர்ச்சியை அவர்கள் மேற்கொண்டனர். இப்போது எம்மக்களுக்கு நிலைமைகள் தெளிவாகியிருக்கும் பாலத்தீன மக்களின் விடுதலையுணர்வினை, எந்த நெருக்கடியின் போதும் தன்மான, இனமான உணர்வினைக் கைவிடாத இயல்பினை நாம் மனம் கொள்ளல் வேண்டும். அதே வேளை வரலாறு பிரசவித்த, வரலாறு பல சோதனைகள் வைத்து தேர்ந்தெடுத்த அற்புதமான தலைமை தமிழினத்திற்கு வாய்த்திருக்கிற வாய்ப்பையும் எண்ணிப் பார்க்க வேண்டும். எது இருந்தும் அது இல்லாமையால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலத்தீனியர் படும் துயரையும் கருத்திற் கொள்ள வேண்டும். எனவே வரலாறு வெற்றிடமாக விட்டிருக்கும் சமன்பாட்டில் தம்மை பொருத்த வேண்டும்" என்று 1996 பிப்ரவரியில் எழுதப்பட்ட கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

நிச்சயமாக அந்த சமன்பாட்டில் மக்கள் தம்மை பொருத்தி யிருக்கிறார்கள். இன்று யாழ்ப்பாணத்தில் மக்கள் எழுச்சியைக் கண்டு இராணுவம் பயந்து நடுங்கி நிற்கிறது. மக்கள் தங்களை "மக்கள் படை" யில் இணைத்துக் கொண்டு ஆயுதம் தரித்துப் போராடியிருக் கிறார்கள் என்பதை அம்மக்களோடு உரையாடியதிலிருந்து அறிந்து கொண்டேன்.

யாழ்ப்பாணத்தில் ஓவியக்காட்சி நிறைவுபெறுவதற்கு அடை யாளமாக நிறைவு நிகழ்ச்சி- மதிப்பீட்டரங்கு - கவுரவிப்பு அரங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று யாழ்ப்பாண பல்கலைக் கழக கேட்போர் கூட்டத்தில் மாலை 5 மணிக்கு ஏற்பாடாகியிருந்தது. அக்கூட்டத்தில் கலந்து கொள்வ தற்காக பல்கலைக்கழகம் நோக்கிப் புறப்பட்டேன். குறிப்பிட்ட நேரத்தில் கூட்டம் தொடங்கியது. தமிழீழ மாணவர் பேரவையின் தலைவர் எம்.குகன் தலைமை ஏற்றார். ஓவிய மதிப்பீட்டுரையினை யாழ் பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் சிதம்பரநாதன் நிகழ்த்தினார். கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ் மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கலை விழி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேரா. சண்முகலிங்கன் பேசும்போது "எதைப்பற்றியும் கருத்துக் கூற தயங்கும் நம் மாணவர்கள் இந்த அரங்கில் நடைபெற்ற ஓவியக் காட்சியை பார்த்துவிட்டு நீண்டவரிசையில் நின்று ஒவ்வொருவரும் கருத்துக்களை பதிவு செய்தார்கள். நானும் அந்த வரிசையில் காத்து நின்று பதிவு செய்தேன். அந்த அளவிற்கு புகழேந்தியின் ஓவியங்கள் ஒவ்வொருவரையும் பாதித்திருக்கிறது" என்று குறிப்பிட்டார்.

கலை பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் அவர்கள் பேசும்போது "ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் எங்கள் மண்ணுக்கும் எங்கள்



தேசியக் கல்வியியல் கல்லூரியில் பயிலரங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தேசியக் கல்வியியல் கல்லூரியில் பயிலரங்கு

மக்களுக்கும் பயன்படுவதுபோல் அவர் எங்கள் நுண்கலைத் துறை வளர்ச்சிக்கும் உதவவேண்டும்" என்றார். கலைவிழி பேசும்போது "எங்கள் தேசத்தின் சார்பிலும் மக்கள் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்" என்றார். நான் உரையாற்றும்போது "ஒரே உறவுகளுக்குள், நீங்கள் நன்றி சொல்வதோ அதை நான் ஏற்றுக் கொள்வதோ முறையல்ல. அது என்னுடையக் கடமை. அதனால் எனக்கு இனிமேல் நன்றி சொல்லாதீர்கள்" என்று முதலிலேயே மறுத்தேன். கிளிநொச்சியில் பேசியது போலவே என்னுடையப் பேச்சு அமைந்திருந்தது.

நிகழ்ச்சிமுடிந்து முதல்நாள் திட்டமிட்டபடி கல்வியியல் கல்லூரிக்குச் சென்று இரவு 11 மணி வரை பயிலரங்கு நடத்தினேன். ஓவிய அடிப்படைகள் பற்றியும் ஒரு பொருளை எப்படிப் பார்த்து வரைவது என்பதைப் பற்றியும் அந்த பயிலரங்கு அமைந்தது. அந்த மாணவ- மாணவிகளுக்கு நல்ல ஒரு அனுபவமாக இருந்ததாகவும் சொன்னார்கள். அங்கிருந்து அறைக்குச் சென்று குளித்து இரவு உணவை முடித்துவிட்டு அன்று தென்மராட்சியில் எழுதப்பட்டக் கருத்துக்களை படித்தேன்.

■ மனிதம் எல்லைகள் கடந்தது என்பதற்கு இவ்வோவியங்கள் சான்று. துன்புறும் எங்களுக்கு தோளணைக்கும் ஆறுதல்.

-அருள்திரு.ம.வி.இ.இரவிச்சந்திரன்

■ ஓவியர் புகழேந்தியின் ஓவியங்கள் தமிழீழ வரலாற்றை சாற்றும் காவியங்கள். பிராமணரின் ஆதிக்கம் நிறைந்த தமிழகத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான ஒரு தன்மானத் தமிழர் தமிழினத்திற்காக தலைநிமிர்ந்து வந்து தமிழுணர்வை வெளிப்படுத்தி ஈழப்போராளிகளில் ஒருவராய் தன்னை தியாகம் செய்து நிற்கிறார் புகழேந்தி.

*-கோ.தெய்வேந்திரன்*

■ கிழக்கு வானில் தெரியும் தமிழீழக் கீற்று உன் ஓவியங்களாய் தமிழீழத்தை ஒளியேற்றும். சொல் உன் உடன்பிறப்புகளுக்கு ஈழத் தமிழினம் இருக்கும்வரை தமிழ் அழியாது.

*-ந.பிரசாந்தன்*

■ இலங்கைத் தமிழனுக்காய் போராட அந்நாட்டில் இருந்து போராளி ஒருவர் தோன்றி அந்நாட்டிலிருந்தே வெறியர்களை எதிர்த்து தனது வேட்கையை அழியாத, அசையாத, அசைக்க முடியாத சிகரமாக்கியுள்ளார்.

*-ஆர்.கண்ணன்*

■ ஓவிய வாசனையே அற்ற என்னை அதிரவைத்த ஓவியம்.

*-கோ.அர்த்தநாரி*

■ தமிழ் மக்களாகிய எமது துன்பங்களை, அனுபவித்த கொடுமைகளை, சித்திரவதைகளை, பதுங்குகுழி வாழ்வை, தியாகி திலீபனின் தியாகப் போராட்டத்தை மிகவும்தெளிவாக தமது ஓவியம் மூலம் புலப்படுத்தியிருக்கிறார்.

*-கி.ரஞ்சனா*

■ அவலத்தின் அடையாளங்கள், நம்பிக்கையின் ஒளிக்கீற்றுகள் துளிர்விடும் உணர்வலைகள் பிரதிபலிக்கும் என்றும் அழியா ஓவியங்கள்.

*-ஊழியர், நகரசபை, சாகவச்சேரி*

■ புகழேந்தியின் ஓவியங்கள் ஒவ்வொன்றும் என் உணர்வுகளைத் தொட்டு நிற்கின்றன. எமது இனம் நாடு என்பவற்றிற்கு இழைத்த கொடுமைகள் உயிரோவியமாக. இவற்றைப் பார்க்கும் ஒவ்வொருவரும் எமது நாட்டின் விடுதலையை எட்டிப் பிடிக்கும் மனப் பக்குவத்தை அடைவார்கள்.

*-சிவ.ராஜதுரை*

■ தமிழீழ மக்கள் பட்ட துயரங்களை சிறீலங்கா அரசாங்கம் ஒரு பொருட்டாக எடுக்காமல் மறைத்து வரும்போது புகழேந்தியின் ஓவியங்கள் அவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன.

*-கா.சோ.நவரத்தினம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ கடந்தகால, நிகழ்கால, எதிர்கால நிகழ்வுகளை ஓவியர் புகழேந்தி மிகவும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

-தவமலர்

■ தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இருளில் நிகழ்ந்த நிகழ்வுகள் சில தத்ரூபமாக வெளிச்சத்திற்கு இவரினால் கொண்டுவரப்பட்டுள்ளது.

-கே.கார்த்திகா

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுப்பிட்டி

கருத்துக்களை படித்து முடித்ததும், உடல் நல்ல சோர்வாக இருந்தாலும் மனம் ஏதாவது ஒன்றை படித்துவிட்டு தூங்கலாம் என்றது. அதனால் 'வில்லுக்குளத்துப் பறவை' நூலை எடுத்து படிக்கத் தொடங்கினேன்.

யாழ் மாவட்டத்தில் சிறுப்பிட்டி என்னும் கிராமம். யாழ் குடா நாட்டின் மிகப்பெரிய இராணுவமுகாமான பலாலி முகாமிற்கு அண்மையில் உள்ளது. சிறீலங்கா இராணுவத்தினரின் வெளியேற்றம் போராளிகளின் இரத்தத்தால் கட்டுப்படுத்தப்பட்டு, முகாம்களெல்லாம் இராணுவத்தினருக்கு சிறைக்கூடமாக மாறியிருந்தன. முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல் மட்டும் இக்கிராமத்துடன் தொடர்புடையதாகவிருந்தது.

சண்டையின் போது இராணுவக்காலடிகள் படாத இக் கிராமத்தில் சமாதானம் என்ற பெயரால் வந்தவர்களின் வாகனங் களும் பட்டாளங்களும் பரவத் தொடங்கிய காலம். அன்றொருநாள் அதிகாலை, ஒலிபெருக்கி அங்குள்ளவர்களைத் துயிலெழுப்பியது. விடுதலைப் பாடல்களையும் வீரமரணம் எய்திய போராளிகளின் அஞ்சலியாம் சோக கீதத்தையும் இசைக்கும் ஒலிபெருக்கியாக அது இருக்கவில்லை. அபாய அறிவிப்பு அது. அண்மையில் உள்ள ஸ்ரீ சோமாஸ்கந்தா கல்லூரியில் ஆண்கள் அனைவரும் வந்து சேரவேண்டுமென்ற கடுமையான உத்தரவைப் பிறப்பித்தது. எல்லைச் சண்டைகளில் நடமாடும் யுத்த டாங்கிகள் சிறுப்பிட்டியின் கொல்லைகளில் காணப்பட்டன.

இந்த யுத்த டாங்கிகள் தமது சங்கிலிகளின் கோரப் பற்களினால் கொக்குவில், யாழ் நகரம் போன்ற இடங்களில் எமது மக்களின் உடல்களைத் துவம்சம் செய்து, இப்போது தனது கைவரிசையைக் காட்டத் தமது கிராமத்திற்கே வந்துவிட்டன என்பதை நினைக்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கிராமத்தவர்களுக்குக் கலக்கம் உண்டாயிற்று. உயிரைப்பற்றி அச்சப்படாத கன்னியர், தம் கற்பைப் பற்றி கவலைப்பட்டனர். 'நேசக் கரங்கள்' என நினைத்தவை 'மோசக் கரங்களாகி' கதறக்கதற எமது சகோதரிகளைக் கசக்கிப் பிழிந்ததை அறிந்திருந்தமையால் ஒவ்வொரு வினாடியும் அவர்கள் அச்சம் அதிகரித்துக் கொண்டே யிருந்தது. தமது சகோதரிகளை, மனைவியை விட்டுச் செல்ல முடியாத ஆண்கள், இனி சாவென்ன முழுமென்ன நடப்பது நடக்கட்டும் என்று வீட்டிலேயே தங்கினர். வேலிகளுக்குள்ளால் நிலைமை பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்டன.

மீண்டும் ஓர் அறிவிப்பு!

பாடசாலைக்கு வராத ஆண்களெல்லாம் விடுதலைப் புலிகளாகக் கணிக்கப்படுவர்.

அதைத் தொடர்ந்து வேட்டுக்கள். வேட்டொலி கேட்ட பெண்களெல்லாம் அழுது குழறி எல்லா ஆண்களையும் பாட சாலைக்கு அனுப்பினர். உள்ளத்தை வீட்டில் இருத்தி, உடல்கள் நகர்ந்தன.

பெண்கள் யாவரும் கலங்கி நிற்கின்றனர். முற்றிப் பழுத்தவர் ஒருவர் தனது மூன்றாவது காலின் உதவியுடன் (ஊன்றுகோல்) தள்ளாடித் தள்ளாடி முற்றத்தைநோக்கி வருகிறார். ஒரு கையில் மீன்வெட்டும் பெரிய கத்தி. கலங்கி நிற்கும் பிள்ளைகள், பேரப் பிள்ளைகள், அயலவர்களை அழைக்கின்றார்.

நீங்கள் பயப்படாமல் நில்லங்கோடி வீட்டுக்குள் அவர்கள் எதையாவது தேடட்டும். இந்தக் கள்ளப்படை கொண்டு போறதைக் கொண்டு போகட்டும். வேறு ஏதாவது சோதிக்க வந்தால் இந்தக் கத்திக்குப் பதில் சொல்லட்டும்.

இந்தக் கிழவனாரின் வார்த்தைகளைக் கேட்ட பெண்கள் சிறுநம்பிக்கை பெற்றவர்களாக அவரின் அருகே வந்து நிற்கின்றனர். இதேவேளை அடுத்த வீட்டில் ஒரு பாட்டியும் பேத்தியும், கிழவரோடு சேர்ந்து சில பெண்கள் நிற்பதைக் கண்ட பேத்தி, அவருடன் போய் நிற்போம் எனப் பாட்டியை அழைக்கிறாள். கூட்டமாக நிற்பது பாதுகாப்பாக இருக்கும் என அவள் கருதினாள். நீ போய் அங்கே நில்லம்மா. நான் கிழவிதானே? என்னை என்ன செய்துவிட முடியும் என்று கேட்டாள், அந்த 70 வயதுப் பாட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை 10,15 பேர் கொண்ட குழுக்களாக வீடு வீடாகத் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்கின்றனர் பாரதப் படையினர். கிழவனாரும் பெண்களும் நிற்கும் இடத்தையும் நெருங்குகின்றனர். நடக்கவிருக்கும் விபரீதங்களை எண்ணி பெண்கள் குழு ஓலமிட ஆரம்பிக்கிறது. கிழவர் அவர்களை அடக்கி அமைதியாக்குகிறார்.

பாம் வைத்திருக்கிறீர்களா? என்று கேட்டபடியே பெண்கள் மீது தமது அங்க சேஷ்டைகளை ஆரம்பிக்கின்றனர் இந்திய இராணுவத்தினர்! கிழவனாரின் கடுமையான வார்த்தைகளை எருமை மாட்டில் மழை பெய்வதுபோல எடுத்துக் கொள்கின்றனர்.

பெண்களை வீட்டிற்குள் வரும்படி இராணுவத்தினர் உத்தர விடுகின்றனர். வீட்டைச் சோதனை இடுவதானால் சோதனை யிடுங்கள். எதை வேண்டுமானாலும் எடுத்துச் செல்லுங்கள். எங்களை மட்டும் ஒன்றும் செய்துவிடாதீர்கள் என அழுது புலம்பினர். இதற்கெல்லாம் மசியக் கூடியவர்களா அவர்கள்? அவர்கள்தான் உலகின் நான்காவது பெரிய இராணுவமாயிற்றே! பெண்களை தலைமுடியை பற்றி வீட்டுக்குள் இழுக்கின்றனர். பொறுமையின் எல்லையையே கடந்தாயிற்று. கிழவனார் அவர்களைத் திட்டியபடியே நடுநடுங்கியபடியே கத்தியை ஓங்கினார். ஆனால் எதிர்நின்ற சிப்பாயின் கால் வலிமைக்குத் தாக்குப் பிடிக்காமல் சுருண்டு விழுகிறார். பெண்களின் அலறல் வானைப் பிளக்கிறது. சத்தம் கேட்ட உயர் அதிகாரி அங்கே விரைகிறார்.

என்ன நடந்தது ஏன் இப்படிக் கத்துகிறீர்கள்? பாதிக்கப் பட்டவர் மீதே பாய்ந்து விழுந்தார். பாரத இராணுவ உயர் அதிகாரி.

நீதிபதி ஸ்தானத்தில் ஒருவர் கிடைத்துவிட்டார் என்ற நம்பிக்கை ஒளியில் நடந்ததை விவரிக்கின்றனர் பெண்கள். இராணுவத்தினரை நோக்குகின்றார் அதிகாரி.

"நாங்கள் கோழி பிடிக்க முயன்றோம். கோழிக்கு எறியும்போது இவர்கள் மீது பட்டுவிடுமே என்று உள்ளே போகச் சொன்னோம்" என்று சிரித்தபடியே மழுப்புகின்றனர் சிப்பாய்கள்.

நடந்தவற்றையும் நடக்க இருப்பவற்றையும் புரிந்து கொண்ட அதிகாரி ஒன்றும் புரியாததுபோல் பாவனை செய்தார். போகச் சொன்னால் போவதுதானே என்று பெண்கள் மீது பாய்ந்து விழுந்துவிட்டு அங்கிருந்து நகருகிறார். அவரும் சிப்பாய் என்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருந்த இப்படியான செயல்கள் மூலம் பதவியுயர்வு பெற்றவர்போலும்! ஏன் நான் இடைஞ்சலாக இருப்பான் என எண்ணித்தான் அங்கிருந்து சென்றிருப்பார்.

இராணுவத்தின் தேடுதல்கள் முடிவடைந்ததும் பாட்டி நோக்கி விரைகிறாள் பேத்தி. வீட்டில் தனியே இருந்த பாட்டி அலங்கோல மான நிலையில் மயங்கிக் கிடக்கிறாள். பெருமை மிக்கதாம் பாரதப் படையின் தேவைக்கு பாட்டிகூடத் தப்பவில்லை. புரிகிறது பேத்திக்கு. பாட்டியின் முகத்திற்கு தண்ணீர் தெளித்து மயக்கம் தெளிவிக்கின்றனர். மெதுவாகத் தூக்கி உட்கார வைக்கின்றனர். ஆதரவாக விசாரிக்கின்றனர். தன்னிடம் கேட்ட கேள்விகளுக்கு தான் பதில் சொல்லச் சொல்ல சொக்கில் கிள்ளியும் மற்றும்பல சேட்டைகளையும் அவர்கள் புரியவே தான் மயங்கிவிட்டதாகவும் பின் என்ன நடந்தது என்று தெரியாது என்றும் பாட்டி சொல்கிறாள்.

இதேவேளை பாடசாலைக்குச் சென்ற ஆண்கள் திரும்பி வருகின்றனர். தங்கள் கணவன்மார்கள், தங்கள் பிள்ளைகள் திரும்பி வருகிறார்களா என ஏக்கத்துடன் ஒவ்வொரு பெண்ணும் நோக்குகின்றாள். எதிர்பார்ப்பவர்களைக் காணாதவர்கள் தேம்பு கின்றனர். சிலர் எட்டப்பர்களாலும் பாரதப் படையாலும் தாக்கப்பட்டு விடுவிக்கப்பட்டிருக்கின்றனர். வேறு சிலர் மின் அதிர்ச்சிக்கு ஆளாகிக் கொண்டிருக்கின்றனர். சிலர் கைப்பெரு விரலில் கட்டித் தொங்கவிடப்பட்டுத் தாக்கப்பட்டதாகவும் ஒரு சிலரே முகமூடி அணிந்த அந்த மர்ம மனிதர்களின் கடாட்சத்தினால் அசம்பாவிதமின்றி வெளியே வந்ததாகவும் கூறுகின்றனர். அவர்களுக்கு சிகிச்சையளிக்க பெண்கள் தயாராகின்றனர்.

பாரதப்படை இன்னும் எத்தனை நாளைக்கோ எல்லார் வாயும் இதையே முணுமுணுக்கிறது. ஏனெனில் இதுவொரு தொடர் கதைதான் என்பது அவர்களுக்கு நன்றாகவே தெரியும். தூரத்தில் எங்கிருந்தோ பாரதப் படையின் பெருமைகள் பற்றி முன்னாள் முற்போக்காளர் ஜெயகாந்தனின் குரல் ஒலிக்கிறது!

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாத மன்னார்

**ம**றுநாள்

அதிகாலையிலேயே ஒரு தொலைக்காட்சி நேர்காணலுக்காக தயாரானேன். ஒரு பேராசிரியரின் இல்லத்தை ஒளிப்பதிவுக் கூடமாக தற்காலிகமாக மாற்றியிருந்தார்கள். ஒளிப்பதிவு இரண்டு மணி நேரத்திற்கு மேல் நீடித்தது. அதன் பிறகு கிளிநொச்சி சென்று அங்கிருந்து மன்னார் செல்ல வேண்டும் என்பதை கவனத்தில் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படத் தயாராகிக் கொண்டிருந்த வேளையில் தமிழ் நெட் இணைய தளத்திற்கு ஒரு நேர்காணல் வேண்டும் என்று வந்து நின்றார்கள். அவர்களையும் தவிர்க்க இயலவில்லை. வழக்கமான கேள்விகளிலிருந்து சற்று மாறுபட்டு இருந்தது. நேர்காணல் ஆங்கிலத்தில் வரும் என்பதால் கவனமாகவே பதில் சொன்னேன்.

மதிய உணவை முடித்து யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சிக்கு விரைந்தேன். அங்கு மன்னார் செல்வதற்கு நண்பர்கள் வாகனத்தோடு காத்திருந்தார்கள்.

மாலை.

சூரியன் மறைந்தும் மறையாமலும் இருந்தது. வானம் செம்மஞ்சள் நிறத்தில் பார்ப்பதற்கு மிகவும் அழகாக காட்சி தந்தது. காற்று மிகவும் வேகமாக வீசிக்கொண்டிருந்தது. மனம் எவ்வளவு உற்சாகமாக இருந்தாலும் உடல் மிகவும் சோர்வடைந்து இருந்தது.

தொடர்ந்து பயணம், தொடர்ந்து உரையாடல், தொடர்ந்து பணி என்று தொடர்வதால் ஏற்பட்டக் களைப்பு.

மறுநாள் மன்னாரில் ஓவியக்காட்சி தொடங்கவேண்டும். ஓவியங்களும் காட்சிப் பலகைகளும் எங்களுக்கு முன்பே லாரியில் சென்று கொண்டிருந்தன. ஒரு தேநீரை மட்டும் குடித்துவிட்டு மன்னார் ஆண்டான்குளம் நோக்கி புறப்பட்டோம். முன்பே நண்பர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதா சொல்லியிருந்தார். பகலில் புறப்பட்டுச் சென்றால் நீங்கள் அற்புதமானக் காட்சிகளைக் காணலாம். காட்டுப்பாதை பார்ப்பதற்கு நன்றாக இருக்கும். அதுபோல் பகலிலேயே செல்வது போல் திட்ட மிடுவோம். நீங்கள் மதியம் இங்கிருப்பது போல் யாழ்ப் பாணத்திலிருந்து வந்து விடுங்கள் என்றார். நானும் அப்படித்தான் திட்டமிட்டிருந்தேன். ஆனால் யாழ்ப்பாணம் என்நேரத்தை கூடுதலாக உள்ளிழுத்துக் கொண்டது.

சிறிது தூரம்தான் என்னால் வெளியில் அக்காட்சிகளை காணமுடிந்தது. நன்றாக இருள் கவியத் தொடங்கியது. வாகனத்தில் அற்புதமான விடுதலை எழுச்சிப் பாடல்கள் ஒலித்துக் கொண் டிருந்தன. நண்பர்கள் உரையாடிக் கொண்டே வந்தனர். ஆனாலும் உடல் சோர்வு என்னை உறக்கத்தில் ஆழ்த்தின. என் இருக்கையை சற்று பின்னால் சரித்து, உடலை தளர்த்தி படுத்தேன்.

## ஆண்டான்குளத்தில்

நண்பர்கள் எழுப்புவதை உணர்ந்து எழுந்தேன். ஒரே இருள் சூழ்ந்திருந்தது. கண்ணுக்கு எட்டிய தூரம்வரை வெளிச்சமே இல்லை. நேரம் 9.00 மணியைக் கடந்து கொண்டிருந்தது. நன்றாக உறங்கியிருக்கிறேன் என்பதை உணர்ந்தேன். கிளிநொச்சியிலிருந்து மூன்று மணிநேரம் பயணித்திருக்கிறோம். நல்ல தூரம்தான். ஆண்டான் குளத்தில் நண்பர்கள் எங்களுக்காகக் காத்திருந்தார்கள். “இது ஆண்டான் குளம் மகா வித்தியாலயா. இங்குதான் நாளை ஓவியக்காட்சி” என்று நண்பர்கள் சொன்னார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் தங்குவதற்கு ஒரு வீட்டில் ஒழுங்கு செய்திருக்கிறோம். அங்கேயே உணவருந்திக் கொள்ளலாம்" என்ற காத்திருந்த நண்பர்களோடு வாகனத்தில் புறப்பட்டோம்.

வாகனத்தின் வெளிச்சத்தில்தான் தெரிந்து கொண்டேன் வயல்வெளிகளைக் கடந்து செல்கிறோம் என்று. மேடுபள்ளம் நிறைந்த சாலை என்று சொல்வதா, அல்லது மேடுபள்ளமே சாலையாக இருக்கிறது என்று சொல்வதா என்ற அளவிற்கு மண் சாலை.

குலுங்கி குலுங்கிச் சென்ற எங்கள் வாகனம் மரங்கள் அடர்ந்த ஒரு தோப்பில் நுழைந்தது. அங்கே பெட்ரோமாக்ஸ் விளக்கு உயரமான மேசையில் வைக்கப்பட்டு, அதைச் சுற்றி நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. ஒரு பெரியவர் அந்த இருளிலும் சிவப்பாகத் தெரிந்தார். இருகைகளையும் கூப்பி எங்களை வரவேற்றார். நண்பர்கள் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். ஒரு பெரியம்மாவும் எங்களை வரவேற்றார். அந்த அய்யா என்னருகில் வந்து அமர்ந்து கொண்டு நீண்டநாட்களாக இங்கே நிற்கிறீர்களே உங்களுக்கு எங்கட உணவு ஒத்துக்கொள்கிறதா? உடம்புக்கு ஏதுமில்லையே? என்று வாஞ்சையோடு ஒரு தந்தை மகன் மீது செலுத்தும் அக்கறையாக விசாரித்தார்.

நான் நெகிழ்ந்து போனேன்.

"உங்களுடைய நேர்காணலை வானொலியில் கேட்டோம். எங்களைப்போலவே கதைக்கறீர்கள். உங்களிடம் நிறைய கதைக்க வேண்டும் போல் இருக்கிறது உணவை முடித்துவிட்டு கதைப்போம் வாருங்கள்" என்றார் அந்த அய்யா.

உடைமாற்றி, முகம் மட்டும் கழுவிக்கொண்டு உணவருந்த தயாரானோம்.

"புட்டுத்தான். உங்களுக்கு பிடிக்கும்தானே" என்றார் அந்த பெரியம்மா. "கவலைப்படாதீர்கள் உங்கள் உணவு எனக்கு இருபது ஆண்களுக்குமுன்பே பழகிப்போனது. என்ன இவ்வளவு நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டதில்லை. இப்போது அதற்கும் பழகிவிட்டது" என்று எனக்கு கொடுத்த தட்டை கையில் வாங்கிக் கொண்டு அமர்ந்தேன். புட்டு, இடியாப்பம். அதற்கு சொதி, இறைச்சி என்பது அம்மண்ணின் அற்புத உணவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேங்காய்ப்பூ போட்டு அவித்த குழாய்ப் புட்டு அந்த சொதியோடு சாப்பிடுவதற்கு மிகவும் ருசியாக இருந்தது. நாட்டுக் கோழிகறி காரம் கொஞ்சம் கூடுதலாக இருந்தாலும். கூடுதலாக என்னைச் சாப்பிடத் தூண்டியது. உணவை எப்பொழுதும் கட்டுப் பாட்டில் வைத்திருக்கும் நான் அன்று கட்டுப்பாட்டைத் தளர்த்தினேன். சாப்பிட்டு முடிந்ததும் வாழைப்பழம் தந்தார்கள். "இது நம் வீட்டுத் தோட்டத்தில் காய்த்து பழுத்தது சாப்பிடுங்கள்" என்றார் அய்யா.

எனக்கு சர்க்கரை உள்ளதால் நான் வாழைப்பழத்தைத் தொடுவதே இல்லை. ஆனால் அந்த மண்ணில் விளைகின்ற வாழைப்பழம் எப்படி இவ்வளவு அழகாக இருக்கிறது என்று தெரியவில்லை. அதைப் பார்த்ததும் சாப்பிடத் தூண்டும். அதை எடுத்துச் சாப்பிட்டால் அதன் ருசி இன்னும் சாப்பிடத் தூண்டும். இதிலும் என் கட்டுப்பாடு சில நேரங்களில் தளர்ந்தது.

அய்யாக் கொடுத்த அந்த வாழைப்பழம் மிகவும் ருசியாக இருந்தது. உணவு முடிந்த உடன் எல்லோரும் அவரவர் இடங்களில் படுக்கச் சென்றார்கள். எனக்கான இடத்தை காட்டினார்கள். தனியறையில் மரக்கட்டிலில் மெத்தைப் போட்டு கொசுவலைக் கட்டி, தலைமாட்டில் டார்ச் விளக்கையும் வைத்திருந்தார்கள்.

வீட்டைச் சுற்றிலும் செடிகள் அதிகமாக இருந்ததால் கொசுவும் அதிகமாக இருந்தது. அய்யா கேட்டார் "நாம் சிறிது நேரம் கதைத்துக் கொண்டிருக்கலாமா?" "எவ்வளவு நேரம் வேண்டுமோ அவ்வளவு நேரம் கதைக்கலாமய்யா" என்றேன்.

வெளியில் வந்தோம்.

தென்னை மரங்கள், வாழைமரங்கள் இன்னும் பல்வேறு செடிகள் இருந்ததால் நன்றாக கோடைக்காற்று வீசிக் கொண்டிருந்தது. பெட்ரோமாக்ஸ் விளக்கு வெளிச்சத்தில் அமர்ந்து இருவரும் எங்களுடைய குடும்ப விவரங்களை பரிமாறிக் கொண்டோம்.

அவருக்கு இரண்டு மகன்கள். ஒருவர் பள்ளிப்படிப்போடு நிறுத்திவிட்டு விவசாயத்தைக் கவனித்துக் கொள்கிறார். மற்றொருவர் ஏ.எல். படித்துக் கொண்டிருக்கிறார். நாங்கள் பல ஆண்டுகளாகச் சொல்லவொண்ணா துன்பத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். முதலில் சிறீலங்கா இராணுவத்திடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திரவதையை அனுபவித்தோம். எங்கள் குடும்பத்தில் அதாவது எங்கள் பங்காளிகள் 14 பேர். நானும் மற்றொருவரும் மட்டும்தான் உயிரோடு தப்பித்தோம். சிறீலங்கா இராணுவம் எங்கள் எல்லோரையும் ஒருமுறை அழைத்துச் சென்று சித்திரவதை செய்து அடைத்து வைத்தான். ஒருநாள் நெருப்புக் கிடங்கை தாண்டி தப்பித்துக் கொள்ளுங்கள் என்றார்கள். நெருப்புக் கிடங்கு என்றால் பத்து அடி ஆழமும், எட்டு அல்லது ஒன்பது அடி அகலமும் கொண்ட குழியில் நெருப்பு தகதகவென்று கனன்று கொண்டிருக்கும். அதைத் தாண்டிடச் சொல்லி அடித்துத் துவைப்பான். ஏற்கெனவே அடிவாங்கி நொந்து போயிருப்பவர்கள் எப்படித் தாண்டமுடியும். அப்படியே ஒரு சிலர் தாண்டினாலும் உயிரோடு விடுவான் என்பதற்கு உத்திரவாதம் இல்லை. தாண்டமுடியாதவர்கள் கனன்று கொண்டிருக்கின்ற நெருப்பிலே விழுந்து வெந்து சாக வேண்டியது தான். இப்படி என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பலர் வெந்து செத்திருக்கிறார்கள். நான் தப்பித்ததே அதிசயம்தான்" என்றார். இதைக் கேட்ட எனக்கு உடல் நடுங்கியது. "என்ன அய்யா சொல்றீங்க உண்மையாகவா நம்பமுடிய வில்லையே" என்றேன். "நான் இப்போது சொன்னது குறைவு. இதுபோல் நிறைய இருக்கிறது. இந்த நெருப்பு கிடங்கு சித்திரவதைக்கு மன்னார் முகாம்தான் பெயர் பெற்றது. மன்னார் இராணுவ முகாமுக்கு ஒருவரைக் கொண்டு செல்கிறார்கள் என்றால் உயிரோடு திரும்பினால் அதிசயம்தான்" என்றார்.

அடுத்து இந்திய அமைதிப்படை. அவர்கள் அதற்குமேல். எங்களைக் காப்பாற்றுவார்கள் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் எங்களைக் கொன்றார்கள். எங்கள் பெண்களை மானபங்கப் படுத்தினார்கள். ஆண்கள் எல்லோரையும் ஓரிடத்திலே கூடச் செய்து விட்டு வீட்டிலிருக்கும் பெண்களை சின்னாபின்னப் படுத்தி விடுவார்கள். அதுவும் அழகானப் பெண்கள் என்றால் கேட்கவே வேண்டாம். ஒருமுறை என்மனைவின் அக்காமகள் மிகவும் அழகாக இருப்பாள். அந்தப் பெண்ணின் தாய், என்மனைவி மற்றும் இன்னும் சில பெண்கள் வயலிலிருந்து வீட்டுக்குத் திரும்பியிருந்திருக் கிறார்கள். அந்நேரம் பார்த்து ஐந்தாறு டர்பன் கட்டிய சீக்கியச் சிப்பாய்கள் அந்தப் பக்கம் வருவதைக்கண்டு அந்தப் பெண்ணின் அழகை மறைப்பதற்கு அவசர அவசரமாக சேற்றை அள்ளி அவள் முகத்திலும் உடம்பிலும் பூசி ஒரு மாதிரி கோரப்படுத்தி மறைத்து அழைத்து வந்திருக்கிறார்கள். அப்படியும் அந்தச் சீக்கிய சிப்பாய்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை மறித்து, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து இழுத்து கொண்டு செல்ல முயன்றிருக்கிறான். கூட இருந்த அவள் தாய், என் மனைவி உட்பட எல்லா பெண்களும் கையெடுத்து கும்பிட்டு கதறி கூப்பாடுப் போட்டு காப்பாற்றி வந்திருக்கிறார்கள். சேற்றை பூசி அவள் அழகை மறைக்காமல் இருந்திருந்தால் நிச்சயம் அவளை அவர்கள் நாசப்படுத்தியிருப்பார்கள். இந்த ஊரில் அப்படி எத்தனையோ பெண்கள் இருக்கிறார்கள்" என்றார் வேதனையோடு. எனக்கு மிகவும் வேதனையாக இருந்தது. "உங்கள் குடும்பத்திலேயே இவ்வளவு நடந்திருக்கிறதே" என்றேன்.

என் மூத்தமகன் அமைதிப்படையால் பிடித்துச் செல்லப்பட்டு அடைத்து வைக்கப்பட்டான். என் குடும்பத்தில் மட்டுமல்ல ஒவ்வொரு குடும்பத்திலும் நடந்திருக்கிறது என்றார்.

ஏனோ உங்களைப் பார்த்ததும் எனக்கு ஆறுதலாக இருந்தது. உங்களிடம் இதுபற்றி கதைக்கவேண்டும் என்று நினைத்தேன் என்றார்.

அவருடைய வயதிற்கு அவருடைய அனுபவத்திற்கு சிறு குழந்தைபோல் என்னிடம் கூறிக்கொண்டிருந்ததை நினைத்து அமைதியாகவே இருந்தேன். ஏதாவது பேசினால் உணர்ச்சி வசப்பட்டு அழுதுவிடுவேனோ என்று கருதி அமைதியாக இருந்தேன்.

அவரே தொடர்ந்தார். "இதுபோல் இன்னும் நிறைய கதைகள் இருக்கிறது. அதையெல்லாம் உங்களிடம் சொல்ல வேண்டும் என்றால் ஒருவாரம் போதாது. நீங்கள் போய் நித்திரை கொள்ளுங்கள்" என்று கூறி வெளிச்சத்தை கையில் எடுத்து எனக்கு வழிகாட்டினார். நேரம் நள்ளிரவை கடந்துவிட்டிருந்தது. அதிகாலையிலேயே எழுந்திருக்க வேண்டும். ஓவியங்களை காட்சிக்கு தயார் செய்ய வேண்டும் என்று நினைத்துக் கொண்டு படுத்தேன். அய்யா சொன்ன நிகழ்வுகள் என் கண்முன்னே நிழலாடின. எப்போது தூங்கினேன் என்று தெரியவில்லை.

## அதிகாலைப் பொழுதில்

பறவைகள் பறக்கும் சத்தமும், அவைகள் எழுப்பும் சத்தமும் பொழுது புலர்ந்துவிட்டது என்பதை உணர்த்தின. காலை நேரக் குளிர்ந்தகாற்று சன்னல் வழியாக அறைக்குள் வீசியது. விடிந்தும் விடியாததுமான அந்த அதிகாலைப் பொழுதில் அந்தப் பறவைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தமும் அந்தக் குளிர்ந்தக் காற்றும் என் கிராமத்து நினைவுகளை நினைவூட்டியது. படுக்கையிலிருந்து எழும்ப மனம் வரவில்லை. உடல் அசதி ஒருபுறம். அந்த சூழலினால் ஏற்படும் சுகம் மறுபுறம். உடலுக்கும், மனதுக்கும் இதமாக இருந்தது. ஆனால் அதை அனுபவிக்க நேரம் இல்லை. எழுந்தேன். வெளியில் வந்தேன்.

மா மரமும் கொய்யா மரமும், ஒருபுறம், வாழை மரங்கள் ஒருபுறம், இன்னும் தென்னை மரங்கள், செடிகள் என்று சோலை போல காட்சியளித்தது. வீட்டைச் சுற்றிலும் வயல்வெளிகள் முழுக்க முழுக்க தஞ்சை மாவட்ட கிராமங்களை நினைவுப் படுத்தியது.

ஓவியக்காட்சி நடைபெறும் இடமான ஆண்டான் குளம் மகா வித்யாலயா பள்ளிக்குச் சென்று ஓவியங்களைக் காட்சிக்கு தயார் படுத்தி வைத்துவிட்டு திரும்பவும் அந்த இல்லத்திற்கு வந்து, கிணற்றில் நீர் இறைத்து, திறந்தவெளியில் நின்று குளித்து முடித்து, காலைச் சிற்றுண்டியையும் முடித்துவிட்டு ஓவியக்காட்சித் தொடக்க நிகழ்வுக்கு கிளம்பிக் கொண்டிருந்தபொழுது. அய்யா பழ.நெடுமாறன் அவர்களுடைய நேர்காணல் பண்பலை வரிசை வானொலியில் ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது. தொலைபேசி வழியாக நேரடியாக ஒலிபரப்பப்பட்ட அந்த நேர்காணல் ஈழத்தில் மிகப்பெரிய வரவேற்பைப் பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டான் குளம் என்பது ஒரு கிராமம்தான். அதைச் சுற்றிலும் கிராமபகுதிகள்தான். ஒவ்வொரு கிராமத்திற்கும் நீண்ட தூர இடைவெளி. இருந்தும் ஓவியக்காட்சிக்கு நல்லக் கூட்டம். அந்தப் பகுதியையும் அந்த மக்களையும் பார்த்தபிறகு அங்கு ஓவியக்காட்சி நடத்தாமலோ, அந்த மக்களைச் சந்திக்காமலோ திரும்பியிருந்தால் உண்மையிலேயே என்னுடைய பயணம் முழுமை பெற்றிருக்காது. அங்கு இந்த ஓவியங்கள் உள்வாங்கப்பட்டதுதான் மிகப்பெரிய வெற்றி.

இந்திய அமைதிப்படையோடு ஏற்பட்ட சண்டையில் கொல்லப் பட்ட முதல் பெண் போராளி மாலதியின் இல்லத்திற்குச் சென்று அவருடைய தந்தை மற்றும் சகோதர சகோதரிகளை சந்தித்தேன். மாலதி யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட பிறகும் மாலதியின் தம்பியை இந்திய இராணுவம் பிடித்துச் சென்று மாலதி எங்கே என்று கேட்டுச் சித்திரவதை செய்திருக்கிறார்கள்.

ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு வகையான சித்திரவதை. இங்கு, மரத்தில் ஆட்களை கை, கால்களோடு சேர்த்து கட்டிப் போட்டுவிட்டு காலுக்கடியில் சர்க்கரையை கொட்டிவிடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்க்கரைக்கு வரும் எறும்புக்கு மனிதர்களும் விருந்தாவார்கள். இது மிகவும் கொடூரமான சித்திரவதை.

இங்கு அந்த மக்கள் சொன்ன மற்றொரு செய்தி என்னை வியப்பில் ஆழ்த்தியது.

"முன்பு புலிகள் இயக்கத்தில் இருந்த ஒருவன் அவனுடைய நடவடிக்கைகள் சரியில்லாததால் இயக்கத்திலிருந்து விலக்கப் பட்டவன், இராணுவத்திற்கு கைக்கூலியாக இருந்து மக்களைத் துன்புறுத்தி கொலை செய்து வந்தான். இராணுவத்தினரோடு சேர்ந்து அவன் செய்த கொடுமைகள் கொஞ்ச நஞ்சமல்ல. வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை. பலரை சுட்டு கொன்றிருக்கிறான். அவனை மிகவும் தந்திரமாக பிடித்து பொது இடத்தில் கட்டிவைத்து மக்களே அடித்துக் கொன்றார்கள். அது இன்னும் சிலருக்கும் பாடமாக இருந்தது" என்று கூறினார்கள்.

மாலை காட்சி முடிந்ததும் மறுநாள் ஓவியக்காட்சி நடைபெற இருந்த பெரிய பண்டிவிரிச்சான் என்ற இடத்திற்கு புறப்பட ஆயத்தம் ஆனோம். ஆண்டான்குளத்திலிருந்துபுறப்படும் போதே இரவு ஏழுமணிக்கு மேல் ஆகிவிட்டது. இரண்டு மணிநேரத்திற்கு மேல் பயணப்பட வேண்டும் என்றார்கள்.

நல்ல இருள் சூழ்ந்துவிட்டிருந்தது. அடர்ந்த காடுகள் நடுவே மணற்பாதையில் எங்கள் வாகனம் சென்று கொண்டிருந்தது. எங்கள் வாகனத்திற்கு முன்னால் ஒரு கிலோ மீட்டர் தூர இடைவெளியில் காட்சிப் பலகைகளை ஏற்றிச் சென்ற லாரி சென்று கொண்டிருந்தது. பெரிய பெரிய பாம்புகள், காட்டு நரிகள் என்று பல்வேறு விலங்குகள் சாலையைக் கடந்து சென்றன. ஓரிடத்தில் சிறுத்தை வேகமாக கடந்து சென்றது. "நிறைய சிறுத்தைகள் வாழும் இடம் இது. இப்பாதை மிகவும் ஆபத்தானப் பாதை. இரவு நேரப்பயணம் மிகவும் ஆபத்தானது" என்று ஓட்டுநர் குறிப்பிட்டார். பகல் நேரத்தில் வந்திருந்தால் மிகவும் நன்றாக இருந்திருக்கும். வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

அடர்ந்த காட்டுப் பாதையில் இருளைக் கிழித்துக் கொண்டு சென்ற வாகனத்திலிருந்து பார்த்தபோது தூரத்தில் மின் விளக்குகள் எரிவதைக் கண்டு நாம் செல்ல வேண்டிய இடம் நெருங்கி விட்டோமோ என்று கேட்டேன். "சிறிது தூரம்தான் இருக்கிறது. ஆனால் மின் விளக்குகள் எரியும் இடம் மடு தேவாலயம். அதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்துதான் பெரிய பண்டிவிரிச்சான் செல்லவேண்டும்" என்றார்கள் நண்பர்கள். "பரவாயில்லையே இங்கு மின் இணைப்பு தந்திருக் கிறார்களே" என்றேன். "மடு தேவாலயத்திற்கு மட்டும் தான் மின் இணைப்பு தந்திருக்கிறார்கள். வேறு எங்கும் இணைப்புத் தரவில்லை" என்றார்கள்.

மடு தேவாலயம் மிகவும் புகழ்பெற்ற தேவாலயம். ஏற்கெனவே நான் அதைப்பற்றிப் படித்திருக்கிறேன். இராணுவம் அத் தேவாலயம் மீது கூட தாக்குதல் நடத்தியிருக்கிறது என்பதையும் படித்திருக்கிறேன். நாளை தேவாலயத்தைப்பார்வையிட வேண்டும் என்று நான் சொன்னபோது அந்த தேவாலயத்தை கடந்து சென்றோம்.

அடுத்த 5 நிமிடத்திற்குள் எங்கள் வாகனம் இருள் பிரதேசத்தில் நுழைந்து அடுத்த சில நிமிடங்களில் ஒரு கட்டிடத்திற்கருகில் நின்றது. அது பள்ளிக்கூடமாக இருக்க வேண்டும் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். உடனே எங்கள் ஓட்டுநர் டார்ச் விளக்கை எடுத்து இயங்கச் செய்து, அந்த வெளிச்சத்தின் துணையோடு உள்ளே அழைத்துச் சென்றார். நேரம் பத்துமணியை நெருங்கிக்



மாணவிகளுடன் கலந்துரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தது. நண்பர்கள் சிலர் நாங்கள் வந்திருப்பதை அறிந்து மோட்டார் சைக்கிளில் வந்து சேர்ந்தனர். திரும்பவும் வாகனத்தில் ஏறி அருகில் இருந்த வீட்டிற்குச் சென்றோம். வெளியில் நான்கைந்து கதிரைகள். நடுவில் ஒரு உயரமான மேசையில் பெட்ரோமாக்ஸ் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அந்த இல்லத்தில் இருந்தவர்கள் எங்களை அன்போடு வரவேற்றார்கள். இடியாப்பம் சொதி, வறுத்த நண்டு, இறைச்சி என்று மிகவும் அற்புதமாக இரவு உணவை ஏற்பாடு செய்திருந்தார்கள். மிகவும் அன்போடு உபசரித்தார்கள். உணவை முடித்துக் கொண்டு இன்னொரு வீட்டில் தங்குவதற்கு ஒழுங்கு செய்திருந்தார்கள். என்னை மட்டும் வீட்டில் அறையில் படுக்கச் சொல்லிவிட்டு மற்ற நண்பர்கள் அனைவரும் அறைக்கு வெளியில் வராண்டாவில் படுத்துக் கொண்டார்கள். சிம்னி விளக்கு எரிந்து கொண்டிருந்தது. படுத்ததும் உறக்கம் வராது என்பது எனக்குத் தெரியும். சிம்னி விளக்கில் படித்துபல ஆண்டுகள் கழிந்திருந்தாலும் இங்கு வேறு வழியில்லை. சிம்னி விளக்கை அருகில் எடுத்து வைத்து ஆண்டான் குளத்தில் எழுதப்பட்ட மக்கள் கருத்துக்களை படித்தேன்.

■ ஓவியத்தைப் பற்றிய அறிவு எனக்குக் குறைவாக இருந்தாலும் புகழேந்தியின் ஓவியங்கள் யாவும் எனக்குப் புரிகின்றன. காரணம் அந்த பிரச்சினைகளுக்குள்ளே வாழ்ந்தவன் என்பதால்.

*-மா.தேவேந்திரன்*

■ தமிழக மண்ணிலிருந்து எமது தமிழீழ மண்ணின் விடுதலைக்காக இங்கு வந்து தனது ஓவியத்தினால் எம் மக்கள் கடந்த போராட்டகாலத்தில் அனுபவித்த இன்னல்களை வெளிப்படுத்தி சுதந்திர தாகத்தை மென்மேலும் அதிகரிக்கச் செய்திருக்கிறார் ஓவியர் புகழேந்தி.

*-தொ.யேசுதாசன்*

■ பழைய நினைவுகள் மீட்கப்பட்டன. ஓவியத்தைப் பார்த்ததும் எம் வாழ்வினை வெளிச்சம்போட்டு காட்டின. மனதில் குமுறல் ஏற்பட்டது. எனது குடும்பத்தின் ஈடு செய்யமுடியாத இழப்பை உணர்ந்தேன். பெண்ணின் சிதைவு சித்திரவதை ஓவியத்தைக் கண்டதும் வாய்விட்டு அழவேண்டும் போல் தோன்றியது. எனது தங்கையை நினைத்தேன். இதேபோன்று எத்தனை பெண்களின் வாழ்வு பலியானது.

*-எஸ்.எஸ்.பெர்ணான்டோ*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ எம்மண்ணையும் மக்களையும் நீங்கள் நேசிக்கும் வெளிப்பாடு உங்கள் ஓவியங்களிலிருந்து வெளிப்படுகிறது. எதிர் நோக்கி என்ற ஓவியம் என்னை மிகமிக கவர்ந்தது.

*-எஸ்.சுமதி*


■ கோடுகள் வர்ணங்களின் புனைப்பில் ஓவியர் புகழேந்தி அவர்களின் உண்மை நிறைந்த உணர்வு ரீதியான படைப்பிலே பல அர்த்தங்கள் புதைந்து கிடக்கின்றன.

*-இந்திரகலா*

■ இன்றைக்கு இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக எம்மண்ணின் மக்கள் கருவறை முதல் கல்லறை வரை சுமந்த ஆயிரம் ஆயிரம் வெளிப்பாடாகவும் நாளைய உலகில், மடிந்த எம் உறவுகள் மீண்டும் உயிர்ப்பார்கள் என்ற நம்பிக்கையையும் இவ்வோவியம் வெளிப்படுத்துகிறது.

*-எஸ்.தர்மா*

■ கடந்தகால விடுதலைப்போராட்ட சித்திரவதைகளை உண்மையான விடயங்களை உணர்வுபூர்வமாக வெளிப்



உரையாடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துகின்றது. ஓவியம் என்றால் அழகு மட்டும் அல்ல உண்மைச் சம்பவங்களை மனதின் உணர்வுகளை பூரணமாக பிரதிபலிக்க வேண்டும். இது அதிகமாக இந்த ஓவியத்தில் புலப்படுகின்றது.

*-எஸ்.ஆனந்தி*

■ தமிழகத்திலிருந்து ஒரு ஒளிக்கீற்று எங்கள் தமிழீழ வாசல்வரை முதல் முறையாக வந்துள்ளது. ஒரு புகழேந்தியுடன் சேர்ந்து ஓராயிரம் புகழேந்திகள் உருவானால் தமிழீழத்தின் கதவுகள் மிக விரைவில் திறக்கப்பட்டு விடும்.

*-ந.தயாரஞ்சன்*

■ உங்கள் ஓவியங்கள் எங்கள் இன்னல்களை எடுத்து இயம்புகின்றன. ஓவியத்தில் உள்ளவற்றை நேரில் கண்டவர்கள் எம்மக்கள். இவ்வோவியம் கொடுமைகள் புரிகின்ற குழுவுக்கும் இக்கொடுமைகள் புரியாத சமூகத்திற்கும் காட்சிப்படுத்தல் வேண்டும்.

*-சு.ஜரிகரன்*

■ கடல்கடந்து வந்த உங்கள் கலைக் கரமது கண்ணுள்ளவர் களெல்லாம்! காண்பவற்றை விடுத்து 'கண்காணாப் பண்டமான' எமது உரிமைகளைக் கண்டுணர்ந்து காட்சிப்பட வைத்திருக்கிறது. என்றோ எமை வந்தடையும் எம் உரிமைத் தருநிழல்தனிலே உமக்கும் ஒரு கொட்டகைக்கு வழி சமைப்போம். மறவோம். எம்மண் தாகம் உன் நெஞ்சில் எவ்வாறு ஊறியதோ- என் சகபோர்ப் பங்காளியே.

*-கரண்*

## பெரிய பண்டிவிருச்சான்

பெரிய பண்டிவிருச்சானில் பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள மிகவும் எழுச்சியோடு, ஓவியக்காட்சி தொடங்கியது. பள்ளி மாணவ- மாணவிகள் ஒவ்வொருவரிடமும் கலந்துரையாடினேன். எட்டாம் வகுப்பு பயிலும் மாணவி 'குட்டிமணிகண்கள்' ஓவியத்தைப் பார்த்து சந்தேகம் கேட்டார். "குட்டிமணி தங்கதுரை யார் தெரியுமா?" என்று கேட்டேன். தெரியவில்லை என்றார். நண்பர்களை அழைத்தேன். "குட்டிமணியை அந்த மாணவிக்கு தெரியாமலிருப்பதற்கு அந்த மாணவி மட்டும் காரணம் அல்ல.நாமும் காரணம். வரலாற்றை இளம் தலைமுறைக்கு சரியாக நாம் புகட்ட வேண்டும்" என்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநாளும் ஓவியக்காட்சியில் இருக்கமுடியாத ஒரு சூழல், எனக்கு வருத்தமாகவும் இருந்தது. இருந்தாலும் தவிர்க்க முடியவில்லை. மாலையில் கிளிநொச்சியில் ஒரு பரத நாட்டிய அரங்கேற்றம். அதில் கலந்து கொள்வதாக மன்னாரில் காட்சி திட்டமிடுவதற்கு முன்பே ஒத்துக் கொண்டேன். அதனால் மதியமே பெரிய பண்டிவிரிச்சானிலிருந்து விடைபெற்று கிளிநொச்சி புறப்பட்டோம். என்னுடன் சுதாவும் மாணவர் அமைப்பின் நளனும் வந்தார்கள். வழியில் மடு தேவாலயம் சென்றோம். அத் தேவால யத்தில் சிங்கள இராணுவத்தால் நிகழ்த்தப்பட்ட படுகொலைகள் பற்றி சுதா,

“புனித மடு தேவாலயத்தில் 20.11.99 அன்று இரவு திட்டமிட்ட வகையில் சிறீலங்கா இராணுவத்தால் கோரப் படுகொலைகள் நடத்தி முடிக்கப்பட்டன. இச்சம்பவத்தில் ஸ்தலத்திலேயே 37 பேர் கொல்லப்பட்டனர். பின்னர் அது 44 ஆக அதிகரித்தது. 60பேர் வரையானோர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். இச் சம்பவ மானது உலகெங்கிலுமுள்ள மடுமாதாவினது பக்தர்களுக்கும் மற்றும் பலருக்கும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவிகளுடன் உரையாடல்

சந்திரிகா தலைமையிலான சிங்களப் பேரினவாத அரசாங்கத்தின் ஆட்சிக்காலம் ஆரம்பமான காலத்தில் இருந்து இற்றை வரைக்கும் தமிழர் தாயகம் எங்கும் 1800க்கும் அதிகமான வழிபாட்டுத் தலங்கள் குண்டு வீசி அழிக்கப்பட்டுள்ளன. தேவாலயங்கள் கோயில்கள் என்பன பெரும் படுகொலைகளை நடாத்தும் சிறீலங்கா அரசபடைகளின் கொலைக்களங்களாக மாற்றப்பட்டன. யாழ் யாகப்பர் ஆலயத்தில் நவாலி புனித பேதுறுவானவர் ஆலயத்திலும் நடந்த பெரும் படுகொலைகள் வரிசையில் மடுத்திருப்பதியில் நடந்த கோரமும் இணைந்து கொண்டது.

சிறீலங்கா இராணுவம் தமிழீழத்திலுள்ள இந்து, கிறித்துவ ஆலயங்களை அழிப்பதும், மாசு படுத்துவதும், கோவில் தேவாலயங்களை இடித்துத் தள்ளுவதும் வழமையான ஒன்றே. வழிபாட்டுத் தலங்களைப் படைத் தங்ககங்களாகப் பாவிப்பதும், விக்கிரகங்கள், சொரூபங்கள் அகற்றுவதும் யாவரும் அறிந்ததே. இவையாவும் இனவாத அடக்குமுறையின் ஒரு வடிவமே.

கடந்த 22.3.1999 அன்று ரணகோச-02 நடவடிக்கை மூலம் இராணுவம் மடுத்திருப்பதியைக் கைப்பற்ற முயற்சிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மேற்கொண்ட சமயம். மடுத்திருப்பதி வளாகத்திற்குள் இராணுவம் நுழைவதைத் தடுக்குமாறு ஜனாதிபதியிடம் மன்னார் ஆயரினால் தொடர்ச்சியாக கோரிக்கை விடப்பட்டது. ஆனால் அது செவி மடுக்கப்படாததோடு அங்கு தங்கியிருந்த மக்களும் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர்.

அதன் பிற்பாடு மடுப்பிரதேசம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மட்டுமல்ல. இராணுவத்தின் பிரசன்னமான பகுதியாகவும் இருந்தது. மடுத்திருப்பதியின் புனிதத்தைப் பேண சிறீலங்கா அரசு தயாராக இருக்கவில்லை. இங்கு கவனிக்க வேண்டியது என்னவெனில் இது இராணுவ நலன் கருதி நிராகரிக்கப் பட்ட ஒன்றல்ல. ஏனெனில் மடுத்திருப்பதிப் பிரதேசம் அன்றைய நிலையில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாக இருக்கவில்லை. எல்லாவற்றையும்விட இப்பிரதேசத்தை புனித வலயமாக மதித்த விடுதலைப்புலிகள் அமைதி வலயமாகப் பேணி படை நடவடிக்கை எதனையும் மேற்கொள்வதில்லை. மடுப் பிரதேசத்தை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் கொண்டு வந்தமையும், யுத்தமின்றிப் பெறப்பட்ட அப்பிரதேசத்தைப் பெரும் இராணுவ வெற்றியாகக் காட்ட முற்பட்டமையும் பௌத்த பேரினவாதத்தின் வெளிப்பாடுகளே ஆகும். அத்தோடு ஜனாதிபதி சந்திரிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


குமாரதுங்கா மடுத்திருப்பதியை பின்னணியாகக் கொண்ட தனது நிழற் படத்தை தேர்தலில் பயன்படுத்தியமையும் பௌத்த பேரினவாத வெறித்தனத்தின் கண்ணியமற்ற செயலின் குறிகாட்டி என்றே கொள்ளலாம்.

17.11.1999 திகதி மன்னார் பெரு நிலப்பரப்பில் வீசிய புலிவீரரின் ஓயாத அலைகள்-3இன் அனல்பட்டு மடுவைவிட்டுப் பின்வாங்கிய இராணுவம் கொலை வெறியோடு 20க்கு மேற்பட்ட கவச வாகனங்களோடு 20.11.1999 அன்று காலை 10.00 மணிக்கு மடுத்திருப்பதிக்குத் திரும்பியது. மடுத்திருப்பதியைச் சூழ வசித்த மக்கள் அனைவரையும் தேவாலயத்திற்குள் இரவு தங்க வேண்டும் எனக் கட்டளை போட்டது. ஆண்டாண்டு காலமாக தொடர் சிங்களப் பயங்கரவாதத்தின் கோர வீச்சினை தாங்க முடியாமல் அன்னையின் மடியில் தஞ்சமடைந்திருந்த மக்கட் கூட்டம் கலக்கத்துடன் ஆலயத்தில் முடங்கியது. தமிழீழத்தின் பல பாகங்களிலும் காலங் காலமாக சொத்து சுகநலன்களோடு உற்றார் உறவுகளோடு வாழ்ந்த மக்களை நிர்க்கதியாக்கியது சிங்களப் பேரினவாதம். இனிவரும் இன்னல்களிலிருந்து மடுமாதா காப்பாற்றுவார் என்ற ஒரே நம்பிக்கையில் உயிரை மட்டும் கையில் வைத்திருந்த மக்களை வேட்டையாட நேரம் குறித்தனர் சிங்கள வெறியர். 20.11.1999 அன்று




மடு தேவாலயத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



44 உயிர்கள் படுகொலை செய்யப்பட்ட இடம்

முன்னிரவு 11.00 மணிக்கு இராணுவத்தின் யுத்த தாங்கிகளில் இருந்த பீரங்கிகளின் சுடுவாய்கள் அப்பாவிகள் படுத்திருந்த தேவாலய முன்னரங்க மண்டபத்தின் மீது இலக்கு வைத்து நிறுத்தப்பட்டு குண்டுமாரி பொழிந்தன. ஏதுமறியா ஏதிலிகளின் அவலக்குரல் பரலோகத்தை எட்டுமாற்போல ஆலயத்துள் எழுந்தது.

இராணுவம் படுகொலை நோக்கைத் திட்டமிட்ட வகையில் மடுத்திருப்பதிக்குள் அத்துமீறி நுழைந்து புரிந்துவிட்டுச் சென்றது. படுகொலைக்கான காரணிகள் பல இருந்துள்ளன. சிங்கள பௌத்த வணக்க ஸ்தலங்களைத் தவிர இலங்கைத் தீவில் வேறு வணக்க ஸ்தலங்களுக்கு அவற்றின் புனிதத் தன்மைக்கு மதிப்பளித்தல் கூடாது என்ற சிங்களப் பேரினவாதத்தின் குறுகிய எண்ணமே மடுத்திருத்தலத்தின் மீது தாக்குதல் நடத்தத் தூண்டியது. இதைவிட இலங்கைத் தீவில் தமிழரை அழிப்பதையே நோக்கமாகக் கொண்ட சிங்கள அரசும், அரச படைகளும் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அப்பாவித் தமிழர்களை ஈனத் தனமான முறையில் கொன்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு மடுத்திருப்பதியும் திறந்த களமாய் இருந்துள்ளது. மாதாவின் கருவறையில் ஒதுங்கிய தமிழர் வேட்டைப் பொருளா யினர். ஏனெனில் மடுத்திருப்பதியின் புனிதத்தை மதிக்கும் புலிகள் அப்பகுதிக்கு வந்து தம் மீது தாக்குதல் நடத்தப் போவதில்லை என்பதை சிங்களப்படை நன்குணர்ந்திருந்தது. இந்நிலையிலே நிராயுத பாணிகளாக ஏதுமறியாதவர்களாக மடுத்திருப்பதியின் உள்ளே தஞ்சமடைந்த மக்கள் மீது வாளேந்திய சிங்கங்கள் மரண விளையாட்டில் ஈடுபட்டன. தனது சரீரமாகிய அப்பத்தையும் இரத்தமாகிய பானத்தையும் யாருடைய மீட்பின் தீர்வாக இறைமகன் பங்கிட்டாரோ அவர்களின் சரீரமும் இரத்தமும் அழிந்து புனித முற்றத்தில் பழி படிந்தது. 13 சிறுவர்கள் உட்பட 44 பொதுமக்களின் குருதியில் மாதாவின் திருமுடி சூடிய ஒளிவட்டம் உருகி வழிந்து இருள்மண்டியது. 400 வருடகாலப் பாரம்பரியம் மிக்க் மடுத் திருப்பதியில் இரத்தச் சகதியை தோற்றுவித்து மகிழ்ந்தனர். இரு குழந்தைகளின் தாயான சந்திரிகாவின் சிப்பாய்கள். மடுத் திருப்பதியில் ஒரே தடவையில் தன் நான்கு பிஞ்சுகளைப் பறி கொடுத்தும் கதறிய தாயின் கூக்குரலும் அடங்கும்" என்றார்.



நான்கு பிஞ்சுகளை பறிகொடுத்து கதறும் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மடு தேவாலயத்தில் சிங்கள இராணுவத்தின் குண்டு வீச்சுக்கு தனது உறவுகளை இழந்து தவிக்கும் பிஞ்சுகள்

அவர் சொல்லிக்கொண்டிருக்கும் போதே 44 பேர்கள் கொல்லப்பட்ட இடம் உட்பட ஒவ்வொரு இடத்தையும் காட்டிக் கொண்டே வந்தார். மிகவும் வேதனையாக இருந்தது. அப்போது இதழ்களில் வெளிவந்த நிழற்படங்களின் காட்சி என் நினைவுக்கு வந்தது. வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருந்த உடல்கள், கொல்லப்பட்ட குழந்தைகளின் தாய் மற்றும் உறவுகளின் கதறல் காட்சிகள் என் நினைவுகளில் நிழலாடியது. படுகொலை நடந்து ஐந்து ஆண்டுகள் கடந்திருந்தாலும் தன் வேதனையை அம் மடுதேவாலயம் வெளிப்படுத்திக் கொண்டிருந்தது.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழர்களின் அவலங்களை உலகுக்கு வெளிக்காட்டிய ஓவியர்

## - வீரகேசரி -

கிளிநொச்சி நோக்கி எங்கள் வாகனம் மிகவும் விரைந்து சென்று கொண்டிருந்தது. இரவு நான் கடந்து வந்த அடர்ந்த காடுபோல் இல்லாவிட்டாலும் மரங்கள் நிறைந்த செம்மண் பூமி. நீண்ட நேரம் உரையாடிக் கொண்டே வந்தோம். நான் தங்கும் விடுதியை மாலை 4.30 மணியளவில் வந்தடைந்தோம்.

நான் பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்ச்சிக்கு கிளம்ப தயாரானேன். அப்போதுதான் விடுதி மேலாளர் வீரகேசரி பத்திரிகையில் அன்று வெளிவந்திருந்த கட்டுரையை கொண்டு வந்து தந்தார்.

ஈழத் தமிழர்களின் அவலங்களை உலகுக்கு வெளிக்காட்டிய ஓவியர் என்று தலைப்பிட்டும், ஈழத் தமிழரையும் தமிழகத் தமிழரையும் தூரிகையால் இணைக்கும் ஓவியர் புகழேந்தி என்று துணைத் தலைப்பிட்டும் அந்தக் கட்டுரையை வெளியிட்டிருந்தனர். அக்கட்டுரை:

ஓவியர் புகழேந்தி தமிழ்நாட்டிலிருந்து தமிழீழம் வந்து ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்ட வீரப் படிமங்களையும், துன்பச் சுமைகளையும் தமது கை வண்ணத்தால் ஓவியமாக வடித்து வன்னிப் பிரதேசத்தில் ஓவியக் கண்காட்சி ஒன்றை நடத்தியிருக்கிறார்.

இது இந்திய, ஈழத் தமிழ் மக்கள் தொடர்பான பாசப் பிணைப்பினதும், அன்புறவினதும் வெளிப்பாடு ஆகும்.

தடா, பொடா சட்டங்களுக்கு அஞ்சாமல் நீதியான நேர்மை யான தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தாற்பரியத்தை சரியாக புரிந்து கொண்ட இந்தியாவின் ஓவியக் கலைஞர் புகழேந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவரின் ஓவியங்கள் தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு வலுச் சேர்ப்பதாகவும் உரமூட்டுவதாகவும் அமைந்துள்ளது.

ஈழத் தமிழர்களின் அவலங்களையும் வீர வரலாறுகளையும் ஓவியப்போராளி என வர்ணிக்கப்படும் புகழேந்தி சர்வதேச அரங்கிற்கு தனது தூரிகை மூலம் எடுத்துச் சென்றுள்ளார். அதற்காக உலகின் சில நாடுகளில் ஓவியக் கண்காட்சிகளையும் நடத்தி ஈழத்தமிழ் மக்களின் இதயங்களில் நீங்காத இடத்தைப் பிடித் துள்ளார்.

ஏனெனில் தமிழ் மக்கள் வடித்த கண்ணீரையும் சிங்கள இனவெறியர்களின் குண்டுகளினால் வீழ்த்தப்பட்ட தமிழர்களின் உடலையும் இந்த மண்ணில் வெடித்த புரட்சிப் போராட்டத்தையும் அவர் ஓவியமாகத் தருகின்றார்.

'புயலின் நிறங்கள்' என்னும் தமிழீழ விடுதலையைக் குறித்த புகழேந்தியின் ஓவியங்கள் வீச்சானவை. அதில் அவரின் விடுதலை போராட்டம் தொடர்பான உணர்தலை அறிய முடியும்.

ஈழத் தமிழர் தொடர்பான இந்திய மகனின் ஓவியத்தில் விடுதலைக்கு விசையூட்டும் வகையில் ஈழத் தமிழரின் சித்திரங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் விடுதலையின் வேகத்தையும் புரட்சியின் எழுச்சியையும் காணக்கூடியதாக உள்ளது. கண்ணீரிலும், குருதியிலும் இனவெறியரின் கொலைக்கூட்டத்திலும், நெருப் பிலும், சாம்பலிலும், சிங்களத்தின் பொருளாதாரத் தடையிலும் தனது கருத்துக்களை ஓவியர் புகழேந்தி வடித்தெடுத்துள்ளார். ஓவியத் துறையில் ஜாம்பவானாக விளங்கும் புகழேந்தியின் ஓவியங்கள் தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்துடன் பின்னிப் பிணைந்தது.

புகழேந்தியின் தூரிகை ஈழத் தமிழரையும், தமிழகத் தமிழரையும் கடல்கடந்து வந்து ஒன்றாய் இணைப்பை ஏற்படுத்தி யிருக்கின்றது.

புலியின் உறுமலையும் போரின் வெற்றியையும் ஓவியமாக்கி யுள்ளார். "தமிழீழ விடுதலைப்போராளிகளின் உற்ற தோழனாய் விளங்குபவன் தமிழ்நாட்டின் ஓவியப் போராளி புகழேந்தி" என இவரை காசியானந்தன் வர்ணித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நிறங்களின் வரலாறுகளையும், அதன் தாற்பரியங்களையும் தாக்கங்களையும் நன்கு தெரிந்தவர். வரையும் கோடுகளின் நெளிவு சுழிவுகளை தெரிந்தவர்.

ஓவிய மரபுகளும், அதன் நுட்பங்களும் நுணுக்கங்களும் நன்கு கற்று வைத்திருக்கின்றார். புகழேந்தியின் ஓவியங்களுக்கு உயிர் இருக்கின்றது. வீச்சு இருக்கின்றது. ஆனால் அழகைப் பற்றி அவர் அக்கறை அதிகம் கொள்ளவில்லை. ஏனெனில் அவருடைய படைப்புகள் அதிகம் கண்ணீரும், குருதியும், கொலையும், பசியும், பட்டினியும், நெருப்பும் கொண்டவையாகவுள்ளன.

'புயலின் நிறங்கள்' தொடர்பாக உங்கள் உணர்வலை என்ன? என்று அவரை நான் கேட்டேன் அதற்கு அவர் இவ்வாறு பதில் கூறினார்.

உலக வரலாற்றில் மனித இன விடுதலைக்கான போராட்டங்கள் பல நடைபெற்றிருக்கின்றன. இனத்தின் பேராலும், நிறத்தின் பேராலும் நடைபெற்ற ஒடுக்கு முறைகளை எதிர்த்து துயரங்களையும் அடக்கு முறைகளையும் சந்தித்து அப் போராட்டங்கள் வெற்றி பெற்றிருக்கின்றன. அதேபோல் இரத்தம் தோய்ந்த தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் மக்கள் பல்வேறு இன்னல்களையும் துயரங்களையும் அடக்கு முறைகளையும் சந்தித்து இருக்கின்றார்கள்.

சொந்த மண்ணைத் துறந்து சொந்த மக்களை இழந்து பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து ஏதிலிகளாக வாழும் நிலை. இவைகள் எல்லாம் என்னுள் ஏற்படுத்திய அழுத்தம். அந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட வீச்சுக்களை நிறங்களில் ஓவியங்களாக வெளிப்படுத்தியிருக்கிறேன்.

இதுவே "புயலின் நிறங்கள்" என்னும் படைப்பின் வெளிப்பாடு ஆகும் என்றார்.

தமிழகக் கலைஞர்கள் ஈழத் தமிழர்களுடன் இனிவரும் காலத்தில் இரண்டறக் கலந்திட புகழேந்தி எடுத்து வைத்த முதலடியும் அத்திவாரமும் எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் ஏனைய கலைஞர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், படைப் பாளிகளும் ஈழத்தமிழர் இல்லிடம் வந்து உறவுப்பாலத்தை ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஓவியர் புகழேந்தி எல்லோருக்கும் ஒரு வழிகாட்டியாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரங்கேற்ற நிகழ்வு

சரியாக மாலை 6.00 மணிக்கு பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகள் தொடங்கின. மிக முக்கியமானவர்கள் எல்லாம் அந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தார்கள். நிகழ்ச்சியின் இறுதியாக நான் சிறப்புரை நிகழ்த்தினேன்.

"உறங்கிக் கொண்டிருக்கின்ற தமிழினத்தை தட்டி எழுப்புகின்ற போர் முரசாக கலைப் படைப்புகள் இருக்க வேண்டும். உறங்கிக் கொண்டிருக்கின்ற தமிழினத்துக்கு தாலாட்டுப் பாடி மேலும் உறக்கத்தில் ஆழ்த்தக் கூடாது" என்பதை என் சிறப்புரையில் வலியுறுத்தினேன். பரதத்தில் இன்னும் பல்வேறு பரிமாணங்களை அடையக்கூடிய வாய்ப்பு அந்த கலைஞரிடம் இருந்தது. அவர் ஒரு நடனப் போராளியாக மிளிர வேண்டும் என்பதே என் விருப்பம் என்பதைத் தெரிவித்தேன். அதற்கான அத்துணைத் தகுதியும் அவரிடம் இருந்தன.

நான் பேசும்போது "இந்த மண்ணிலிருந்து ஆயிரக்கணக்கான கண்ணீர் கதைகளையும், நினைவுகளையும் என் நெஞ்சில் சுமந்து செல்கின்றேன். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இந்த மண்ணின் வரலாற்றில் என் நினைவுகளையும் பதிந்து செல்கின்றேன்" என்று குறிப்பிட்டேன்.

என்னைப் பொறுத்தவரை அது ஒரு வரலாற்று நிகழ்வுதான். என் நெஞ்சில் நினைவிருக்கும் வரை மறக்க முடியாத ஒரு வரலாற்று நிகழ்வு.

அன்று மாலைஅரங்கினுள் நுழைகின்றபோது அன்புச் சகோதரி தமிழினி "என்ன அண்ணே புயலை விட வேகமாக பயணிக்கிறீர்கள். ஒவ்வொரு நாளும் ஓரிடத்தில் இருக்கிறீர்கள். பத்திரிகைகளில் தான் உங்களைப்பார்க்க முடிகிறது" என்றுக் குறிப்பிட்ட என் தமிழீழப் பயணத்தின் இறுதிக் கட்டத்திலும் தொடர் ஓவியக்காட்சியின் இறுதி நாளிலும் அந்நிகழ்வு முத்தாய்ப்பாக அமைந்தது.

நிகழ்ச்சி முடிந்து தங்கும் விடுதிக்கு வந்து சேரும் பொழுது நள்ளிரவைக் கடந்திருந்தது.

காட்சி முடிந்து வந்த ஓவியங்களும், கருத்துப் பதிவேடுகளும் என் அறையில் காத்திருந்தன.

அவசர அவசரமாக பதிவேட்டை எடுத்துப் படித்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ தமிழினத்தின் ஆழ்மன உளைச்சலை அணுஅணுவாய் உணர்ந்து வடித்த ஓவியங்கள். எல்லையில்லா திறனை வெளிப் படுத்துகின்றது. பல நூல் கற்றும் விளங்காததை ஓவியங்கள் வெளிப் படுத்துகின்றன.


*-ஆர்.ஜெரால்டு*

■ அன்று நடந்தவைகளை இன்றும் எமது சின்னஞ் சிறுசுகளின் நினைவில் நிலை நிறுத்துகின்றார் ஓவியர் புகழேந்தி.

*-பி.ஜீவனாதன்*

■ விடுதலைப்போரில் தமிழினம் ஏந்திய ஆயுதம் பல ஆனால் 'உணர்வு போரிட' தொப்புள்கொடி உறவு போல என்னும் தமிழகத் திலிருந்து வருகை தந்த ஓவியர் புகழேந்தியின் தூரிகை எமது தமிழீழ விடுதலைக்கு பலஆயிரம் மைல் பாய்ந்து தாக்கும் ஏவுகணை. இவ் வோவியங்கள் பலதரப்பட்ட மனிதர்களின் உணர்வை உலுப்பிய ஒப்பற்ற போர் ஓவியம்.

*-செ.பாண்டியன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மவுனமான இந்த ஓவியங்கள் மானிட மவுனத்தைக் கலைக்கின்றது. மனக்கண்ணில் தோன்றிய எண்ணங்களே இவ்வாறு உருபெற்றதென்றால் புகழேந்தி களத்தில் நின்றிருந்தால் மைக் கசியும் தூரிகைகளாக எங்கும் சிதறிக் கிடந்த மனித தசைத் துண்டங்களால் உயிருள்ள ஓவியங்களைத் தீட்டியிருப்பார் அல்லவா!

*-ஆ.செபமாலை தல்மெய்டா*

■ இன்று நடந்த கண்காட்சி தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அடிச்சுவடுகளாக அமைந்தது. பயணம் தொடரும் உதறுவதற்கு இன்னும் ஓரிரு கனவுகள், விழவிழ எழுவோம், வீழும் அருவி ஆறாய் விரியும்- இது மாணவர்களாகிய எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் அமைந்தது.

*-வி.செசரீனா*

■ உங்கள் உதிரத்தால் வடித்த சித்திரமா இது தூரிகை என்றால் துப்புரவாய் நம்ப முடியவில்லை. நீ தமிழகத்தில் பிறந்திருக்கக் கூடாது. தலைவன் அருகில் தமிழீழத்தில் பிறந்திருக்க வேண்டும்.

*-க.மகேந்திரன்*

■ மனக்கண்ணால் கூட நினைத்துப் பார்க்க முடியாத நிஜமாய் நடந்தேறிய கொடுமைகளை வர்ணங்களில் வரலாறு ஆக்கியிருக்கின்றீர்கள். தூரிகையால் போராட்டமே நடத்தி உண்மைகளை உலகுக்குச் சொல்ல முனைந்த பாங்கை வாழ்த்துகிறேன்.

*-சி.இளங்கோ*

■ இந்த ஓவியன் கற்பனை உலகிற்கு சென்று வரைந்த ஓவியங்கள் அல்ல.தமது இனத்தின் இரத்த உறவுகளின் வாழ்நிலையைக் கேட்டும் அறிந்தும் படித்த ஒரு வரலாற்றை மீண்டும் ஞாபகப்படுத்தும் ஒரு வரலாற்று ஆவணம். உரிமைகள் எவ்வாறு அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அழிக்கப்பட்டு மீண்டும் எவ்வாறு அந்த அடக்குமுறைக்கு எதிராக கிளர்ந்தெழுந்தார்கள் என்பதையும் அவ்வாறு புரட்சிகரமான சிந்தையில் உதிர்த்த தமிழீழத் தேசியத் தலைவரின் விடுதலை வேட்கையையும் அதற்கு ஊடாக அவரின் அர்ப்பணிப்பு, தியாகத்தையும் வெளிப்படுத்தியிருப்பது ஒரு ஓவியனுக்கு இருக்கவேண்டிய ஒரு உச்சமான சுதந்திர தாகத்தின் வெளிப்பாட்டை ஓவியர் புகழேந்தி அவர்கள் வெளிப்படுத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிருக்கின்றார். எனவே இவ்வோவியக் கண்காட்சி ஒரு காட்சிப் படுத்தும் கூடம் அல்ல. இதன் மூலம்

- ஒரு இனத்தின் வரலாற்று அடக்குமுறையையும் அதன் புரட்சிகர சிந்தனைப் போக்கையும்
- ஒரு கண்காட்சியின் ஒழுங்குபடுத்தலின் முக்கியத் துவத்தையும்
- ஒரு கண்காட்சியை ஒருவர் எவ்வாறு பார்க்க வேண்டும், ரசிக்க வேண்டும் என்பதையும்
- ஓவியத்தின் புதிய பார்வையையும் இளையதலைமுறையின் ஓவியம் பற்றிய கருத்துருவாக்கத்தையும்

ஒரு படிப்பினையாக மக்கள் கற்றுக்கொண்டுள்ளார்கள் என்பதையும் தமிழர் தாயகத்தின் உரிமைக்கான போராட்டத்தின் தொடக்கம் எந்த மக்கள் கூட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த மக்களிடத்தில் நேரடியாக இந்த ஓவியக் கண்காட்சி சென்றுள்ளது என்பதை உணரலாம். எனவே ஓவியர் புகழேந்தியின் ஓவியம் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் வலுசேர்க்கும் வரலாற்றுப் பொக்கிசம்.

*-எஸ்.இனியவன்*

முடிந்ததும். இந்த மண்ணிலிருந்து நாம் சுமந்து செல்கின்ற பெரிய சொத்து இந்த கருத்துப் பதிவேடுகள் என்று நினைத்தேன். இந்தக் கருத்துக்களை விட ஓர் உயர்ந்த அங்கீகாரம் ஒரு படைப் பாளனுக்கு வேறு என்னவாக இருக்க முடியும்?

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலை- பொதுக்கட்டமைப்பு

அம்மண்ணில் நான் நின்ற நாட்களில் மக்களாலும் அனைத்து ஊடகங்களாலும் விவாதிக்கப்பட்டு வந்த ஒன்று பொதுக் கட்டமைப்பு.

ஆழிப்பேரலைக்குப் பின்னான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்புக்கான (P-Toms) புரிந்துள்ள உடன்பாடு சிறீலங்கா அரசுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே பல்வேறு எதிர்ப்புகளுக்கு மத்தியில் கைச்சாத்திடப்பட்டது. நீண்ட கால தாமதத்திற்கும். இழுபறி நிறைந்த திரைமறைவுப் பேச்சுகளுக்கும் பகிரங்க தேசியவாத பிரகடனங்களுக்கும் மத்தியில் இந்த மனிதாபிமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு கைச் சாத்திடப்பட்டது.

அனைத்துலக சமூகத்தின் தீவிர ஆதரவையும், புலிகளின் சம்மதத்தையும் பெற்ற இந்த உடன்பாடானது சிங்கள தேசிய வாத அமைப்பினுள் குழப்பத்தையும், அதன் தலைமையினுள் இழுபறிச் சூழலையும் ஏற்படுத்தியுள்ளது. வெறும் மனிதாபிமான நிர்வாகக் கட்டமைப்புடன் தொடர்புபட்ட இந்த விடயத்திற்கு ஏன் இத்தனை எதிர்ப்பு? நண்பர்களிடம் கேட்டேன். இத்தகைய தேசியவாத எதிர்ப்புக்கள் தமிழீழ மக்களுக்கு பரிச்சயமாயினும் இலங்கைத் தீவின் சூழல் பற்றிய ஆழமான பார்வையில்லாத பெரும் பான்மையான அனைத்துலகத் தரப்பிற்கு இது வியப்பையும், விரக்தியையும் கொடுத்திருக்கும். நீண்டகாலப் போர் அழிவு களையும், பொருண்மியச் சுமையையும், சுமக்கும் சிங்கள சிறீலங்கா வெறும் மனிதாபிமானக் கட்டமைப்புக்குக் கூட எதிர்ப்பினைத் தெரிவிப்பது பரிச்சயமற்றவர்களுக்கு அதிர்ச்சியூட்டுவது இயல் பானதே. எனினும் சிங்கள தேசிய வாதத்தின் அகப்புற இயல்பு பற்றிய பார்வை கொண்டவர்களுக்கு சிங்கள தேசியவாதத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கூக்குரலை புரிந்து கொள்ளமுடியும். இந்தக் கூக்குரலுக்குப் பின்னால் உள்ள வியூக நோக்கினையும் புரிந்துகொள்ள முடியும்.

இலங்கைத் தீவின் இனச் சிக்கலினை சிறுபான்மை தமிழ் சமூகத்தின் ஏற்றுக்கொள்ள முடியாதவொரு நிர்பந்தமாகவே சிங்கள தேசியவாதம் புரிந்து வைத்துள்ளது. பௌத்த சிங்கள தேசியவாத சிந்தனைகளும், வரலாறு பற்றிய தப்பிதமானக் கருத்துக்களும் நிறைந்த இந்த உட்கிடக்கையை முன்னாள் சனாதிபதி வீரதுங்காவின் 'ஆலமரத்தில் படர்ந்துள்ள கொடி' என்ற உவமையும் சந்திரிகா தென்னாப்பிரிக்காவில் தெரிவித்த தமிழரின் வருகை பற்றிய கொச்சைப்படுத்தப்பட்ட விபரிப்புக்களும் வெளிப்படுத்தின. இடது சாரிகளாகவும், வலது சாரிகளாகவும், தாராளவாதிகளாகவும் பிரிந்து நின்றாலும் சிங்கள தேசியவாதிகள் வடக்கு, கிழக்கை தாயகமாகக் கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் (சிறுபான்மை என்கின்ற சொற்பதம் முற்றிலும் தவறானது) தேசியத்தையும், உரிமைகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, இந்தச் சிந்தனைகளை சிங்கள தேசியவாதம் ஒட்டுமொத்தமாக நிராகரிக்கின்றது. போர் நிறுத்த உடன்பாட்டில் கையொப்பமிட்டு தன்னை உயர்வான சிங்களத் தலைவனாக வெளிக்காட்டிட முற்பட்ட ரணில் விக்கிரமசிங்க கண்டியில் வைத்து வெளியிட்ட அறிவிப்பில், 'தமிழர் தாயகம்' என்கின்ற கோட்பாட்டை பகிரங்கமாக நிராகரித்தமையை எவரும் மறந்திருக்க முடியாது. வடக்குக் கிழக்கு பிராந்தியத்தின் தற்காலிக இணைப்பை பிரிப்பதற்கான பிரேரணைகளை சந்திரிகா காலத்திற்கு காலம் பரிசீலித்து வந்துள்ளார். அவர்களின் சிந்தனைப் புலத்தினுள் ஒரு மாகாணசபை தீர்வே அதிகபட்சமான உரிமைகளைக் கொண்டதாகும். அதற்கு மேல் சிந்திக்கும் அரசியல் விசாலம் அந்த சிங்கள தேசிய வாதத்தினுள் முளைவிடாமைக்கு பலவித சமூக, பொருளாதார பண்பாட்டுக் காரணிகள் உண்டு.

இத்தகைய பின்புலத்தினுள் தமிழர்களின் ஆயுதம் தரித்த எதிர்ப்பியக்கத்தின் வளர்ச்சி தாக்கம் செலுத்தியது. போர்நிறுத்த உடன்பாடு பேச்சுவார்த்தைகள் மற்றும் சர்வதேச தரப்புகளுக்கும் தமிழர் தலைவர்களுக்கு மிடையேயான தொடர்பாடல்கள் என்பன சிங்கள தேசியவாதத்தின் இறைமை பற்றிய சிந்தனைகளை மிகுதியாக வேதனைப்படுத்தின. ஆயினும் வளர்ச்சிகண்ட ஆயுத எதிர்ப்பியக்கம் காரணமாக விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழல் சிங்கள தேசிய வாதிகளுக்கு ஏற்பட்டது. இந்த சமரசம் தமிழ் தேசியத்தினை மதித்து உரிமைகளைப் பகிரும் எண்ணத்தின் அடிப்படையில் தோற்றம் பெறவில்லை. மாறாக ஒருவித வியூக வகுப்பின் வெளிப்பாடாக (Strategic concern) தோன்றியது.

தமிழர்களின் ஆயுத எதிர்ப்பியக்கத்தினை வெற்றி கொள்வதற்கான புதிய வியூகங்களை சிங்கள தேசியவாதம் தேடியது. இந்த தேடல்களுக்காக பெரும் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்கள் மற்றும் சிந்தனைகளுடன் தனது சிந்தனைகளை பொருத்திப் பார்க்க முற்பட்டது. அமெரிக்கா, சீனா போன்ற முரண்படும் அனைத்துல தரப்புகளுடன் தனித்தனிக் காரணங்களைக் கூறித் தன்னை இணைத்துப் பார்க்க முற்பட்டது. பயங்கரவாதம் போன்ற சர்வதேசப் பொதுக்காரணிகளின் பின்னால் போய் பதுங்கிக் கொள்ள முயன்றது. புலிகளையும் தமிழர்களையும் பிரித்துப் பார்ப்பது போன்று பாவனை பண்ணியது. தமிழர் தரப்புக்கு மாற்றீடான புதிய தலைமையைக் கொழும்பில் வைத்து உருவாக்குமொரு ஒன்றிணைந்த சதி முயற்சிகளில் ஈடுபட்டது. தமிழர் தரப்புடனான நேரிடையான போரை நிறுத்திக் கொண்டு நீண்டகால நோக்கும் சிந்தனையும் கொண்ட சர்வதேசப் பாதுகாப்பு வலையை (International Safety net) உருவாக்கிட ரனில் விக்கிரமசிங்க- மிலிந்த முறகொட முன்னிறுத்திய விபரிப்புகளை உற்றுப் பார்ப்பது முக்கியமானது. அதே போன்று புலிகளுக்கு எதிரான சந்திரிகா அரசு நடாத்தும் நிழல்போரும் அவதானிப்புக்குரியது.

மறுபுறம் இந்தப் புதியவியூக வகுப்புக்கள் ஏற்படுத்தும் தவிர்க்க முடியாத இடைவெளிகள் ஊடாக தமிழர்களின் தேசிய விடுதலைப் போர் சர்வதேச அங்கீகாரத்தை எட்டிவிடக் கூடாது என்பதில் சிங்களத் தேசியவாதம் தீவிரம் காட்டியது. தாயகக் கோட்பாட்டை ரணில் முற்கூட்டியே நிராகரித்தமையும், இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான சந்திரிகாவின் போர்க்கொடியும் இத்தகைய வகைப்பட்டது. இந்த வியூகத்தின் நோக்கினை தெளிவாகப் புரிந்து கொண்ட தலைமை தமிழர்களிடமிருந்தது. தமிழீழத் தேசியத் தலைவர் தெளிவாகவே காய்களை நகர்த்தினார். ஒருபுறம், போரில் பெற்ற வெற்றிகளை விட்டுக் கொடுக்காத எல்லைக் கோட்டைப் போட்டுக் கொண்டு சிங்கள தேசிய வாதத்துடன் இராஜதந்திர ரீதியில் மோதினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2003ஆம் ஆண்டு வாசிங்டனில் நடந்த இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திற்கு புலிகள் அழைக்கப்படவில்லை. இது அனைத்துத் தரப்பும் ஏற்றுக் கொண்ட சமநிலை நிலைப் பாடுகளுக்கு முரணானது. அதுவரை மென்மையாக நகர்ந்த பிரபாகரன் தீர்க்கமான முடிவினை எடுத்தார். நேரடியாக பேச்சு வார்த்தை இடைநிறுத்தப்பட்டது. டோக்கியோவில் இடம்பெற்ற உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகள் பங்கேற்கவில்லை. இதனால் அதன் சமச் சீரில்லாத பிரகடனங்களுக்கும் புலிகள் பொறுப்பாளிகள் அல்ல என்பதை பிரபாகரன் கோடிட்டுக் காட்டினார். இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபு புலிகளினால் 2003 கடைசிப்பகுதியில் முன்வைக்கப்பட்டது. இதுவொரு முக்கியமானதொரு வரலாற்று ஆவணமாக வெளிவந்தது.

இந்த ஆவணம் தமிழர்களின் தேசிய சுயநிர்ணய கோட்பாடு, தேசிய இறைமை மற்றும் தமிழ் மக்கள் போரினால் இழந்து பெற்ற வெற்றிகளின் தளத்தில் நின்று எழுதப்பட்டது என்பதை முதற் பார்வையில் அனைவரும் புரிந்து கொண்டனர். ஆனால் இதன் பின்னால் பிரபாகரன் நகர்த்திய காய் மிக நுட்பமானது. சிங்களம் புதிதாக வகுத்துச் செயற்பட்ட வியூகத்திற்கு வைக்கப்பட்ட பொறியாக அது விளங்கியது. தமிழர்களின் அடிப்படையான கோட்பாடுகளை அங்கீகரிக்காது சர்வதேச வலைவிரிப்புக்குள் தமிழர்களை வீழ்த்த முனைந்த சிங்களத்தின் தலைமைகளுக்கு புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான வரைவு சவாலாக விளங்கியது. இதனால் சிங்களத்தின் நவீன வியூகத்திற்கு தலைமையேற்ற ரணில் விக்கிரமசிங்க அரங்கிலிருந்து அப்புறப்படுத்தப்பட சந்திரிகா விடயத்தைக் கையிலெடுத்தார். கடும் தேசியவாதம் போக்கும்- தனக்கான நிகழ்ச்சித் திட்டமும் கொண்ட ஜேவிபியும் சந்திரிகாவுடன் இணைந்து தலைமைக்கு வந்தது. புலிகள் தொடர்ந்தும் இராஜதந்திர நெருக்குதலைக் கொடுத்தனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை வரைவின் அடிப்படையில் பேச வருமாறு நெருக்குவாரம் செய்தனர். இது ஒரு அரசியல் இராஜதந்திரப் போராக வலுவுடன் புலிகளால் முன்னெடுக்கப் பட்டது. புலிகளின் சர்வதேசப் பயணங்களின் பின்னால் உள்ள அரசியல் இதுவென்பதை பலதரப்பும் ஊகித்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபுறம், தமக்கான நிகழ்ச்சித் திட்டத்தில் இலங்கைத் தீவின் இன முரண்பாட்டினை கையாளும் சர்வதேச சக்திகளுக்குப் புலிகள் ஏற்படுத்தும் அழுத்தம் போராக வெடிக்குமோ என்கின்ற பயம் ஏற்பட்டது. சிங்கள தேசியவாதத்தின் பலவீனமான புள்ளிகளில் புலிகளின் அடிவிழுவதைக் கணித்துக் கொண்ட உலக சமூகம் ஒருவித இடைவெளியைத் தேடியது. தமிழர்களின் நெருக்குவாரம் தமது வியூகத்தின் மீது விழுவதை கணித்துக் கொண்ட சிறீலங்கா, இராணுவ நடவடிக்கைகளினை முடுக்கிவிட்டது. இடைக்கால நிர்வாக அமைப்புக்கான வரைவு வெளிவந்த சில மாத காலத்தில் நிழல்யுத்தம் புலிகளுக்கு எதிராக தொடுக்கப்பட்டது. ஆழ ஊடுருவித் தாக்கும் படைகள் மீள செயற்படத் தொடங்கின. ஒரு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான யுத்தம் ஆரம்பிக்கப்பட்டது. புலிகளின் பகிரங்கமான பதிலடியை எதிர்பார்த்து சிறீலங்கா பொறி வைத்தது. புலிகள் இந்த ஆட்டத்திலும் பங்கேற்றனர். சர்வதேச நிகழ்ச்சித் திட்டத்துடன் நேரிடையாக முரண்படும் போரினை தவிர்த்தனர் அல்லது பின் போட்டனர். நிழல் போரினை எதிர் கொண்டனர். இந்தச் சூழலில் 2004ஆம் ஆண்டு மாவீரர் நாளில் தமிழீழ தேசியத் தலைவர் நிகழ்த்திய கோட்பாட்டு விளக்க வுரையில் தமிழர்களின் அரசியல் சூன்ய நிலையை கோடிட்டுக் காட்டப்பட்டது. ஒரு போரின் விளிம்புக்குள் இலங்கைத் தீவு இருப்பதை வெளிச்சம் போட்டார். இந்த அறிவிப்பும், விபரிப்பும் சர்வதேச சமூகத்தின் முன்வைக்கப்பட்ட அரசியல் இராஜதந்திர வினாவாகவே அமைந்தது.

ஆழிப்பேரலை இந்த வினாவுக்கான தொரு தப்பிக்கும் வாயிலை சர்வதேச தரப்புக்கு திறந்து வைத்தது. மக்களின் மனிதாபிமானத் தேவைகளுக்கு உதவிட வேண்டிய அதே வேளையில் தமது முரண்பாட்டு தீர்வு முயற்சிகளுக்கானதொரு வாய்ப்பாகவும் இதனை சர்வதேச தரப்புப் பாவித்தது. சிறீலங்கா விற்கும், தமிழீழத்திற்குமானதொரு உறவு பரிமாற்றத் தளத்தை ஆழிப்பேரலை நிவாரண முயற்சிகள் ஊடாக அனைத்துல சமூகம் முன்னிறுத்தியது. இது இணக்க முயற்சிகளை மீள ஆரம்பிக்க உதவும் என நம்பியது. புலிகள் இந்த விடயத்தில் மற்றுமொரு காய் நகர்த்தலை செய்தனர். சர்வதேச சமூகத்தின் நோக்கினைப் புரிந்து கொண்டாலும், தமது அடிப்படை நிலையில் நின்றவாறு இந்த முயற்சிக்கு முழுமையாகவே ஆதரவை வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுக்கட்டமைப்பினை வரைவு செய்த நோர்வே தரப்பினர் தமது அனுபவங்கள் மற்றும் தமிழ்த் தலைமையின் நிலைப்பாட்டின் உறுதியைக் கணக்கில் எடுத்து சிங்கள அரசமைப்புக்குள் அடங்காத கட்டமைப்பை முன்வைத்தனர். வடக்குக் கிழக்குக்கான பிராந்திய நிர்வாகம், சர்வதேச நிறுவனம் ஊடான நிதிக்கையாள்கை என்ப வற்றினை சர்வதேச தரப்பு முன்வைத்தது. சிங்கள வியூகத்துக்கு இது அச்சுறுத்தலாக இருந்தது. ஆயினும், சிறீலங்கா தலைமையினால் இதனை நிராகரிக்க முடியவில்லை. ஆரம்பத்தில் சிங்கள வெளி விவகாரத்துறை சில பரப்புரை முயற்சிகளை எடுத்தது. எனினும் உலக சமூகத்தின் பிடி வலுவாக இருந்தது. இதனால் மற்றுமொரு விட்டுக் கொடுப்புக்கு சந்திரிகா தலைமையிலான சக்திகள் உடன்பட்டன. மற்றுமொரு சர்வதேச சக்திகளின் தயவுநாடும் சக்தியான ரணில் தரப்பினர் இந்த நிலைப்பாட்டுடன் முரண் படவில்லை. எனினும் அடிப்படையில் சிங்கள தேசியவாதத்திற்கு இந்தக் கட்டமைப்பு ஏற்புடையதல்ல. பிரதமர் மகிந்த ராஜபக்சவின் மௌனமான எதிர்ப்பும், ரணில் தரப்பு முன்வைக்கும் ஆதரவு போன்ற எதிர்ப்பும் இவற்றிற்கு வெளிப்படையான சான்றாகும். இந்தப் பொதுக்கட்டமைப்பின் இரண்டாவது தளமான பிராந்திய குழுவுக்குப் புலிகளினால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி தலைமை ஏற்பதை ஐ.தே.க.எதிர்ப்பதாக நாசுக்காகப் பேசும் பேராசிரியர் பீரிஸ் பேரினவாதி போன்று விபரித்தமையை வியப்பானதல்ல.

பொதுக்கட்டமைப்பு பற்றிய தமது எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது ஜே.வி.பியும் சிங்கள தேசியவாத சிந்தனையாளர்களின் ஒரு பகுதியினரும் மொன்றிவீடியோ (Montivideo convention-1993) உடன்படிக்கையின் பிரிவு ஒன்றின் கீழ் சொல்லப்படும் விடயத்தினை எடுகோள்களாக்கினார்கள். இந்த உடன்பாடு புதிய தேசங்களை அங்கீகரிப்பதற்கான நிபந்தனைகளை எடுத்துக்காட்டி அச்சப்பட்டமை சுவராசியமானதாக இருந்தது. பொதுக் கட்டமைப்பின் கீழ் வருவது 2 கி.மீ. கரையோரத்திற்கான நிர்வாகமே, ஆயினும், இது தமிழீழத்தை ஏற்றுக் கொள்வதற்கான முன்னுதாரணமாக அமைந்துவிடும் என்று இவர்கள் கருதுகின்றனர்.

சிறீலங்காவின் அரசமைப்புக்கும், பாராளுமன்றத்திற்கும் பதிலளிக்காத கட்டமைப்பு, திறைசேரிக்குக் கட்டுப்படாத நிதிப்பங்கீடு என்பனவற்றினை ஏற்றுக் கொள்வது சிங்கள தேசியவாதத்தினைப் பொறுத்தவரை ஏதோ ஒன்று உண்மையாகவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கை நழுவிப் போவதைப் போன்றுள்ளது. அது உண்மையாகி விடுமென நம்புவோம்" என்றார்.

இந்த பொதுக்கட்டமைப்பு விடயத்தில் சந்திரிகா உறுதியாக இருந்து புலிகளோடு உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதை எதிர்த்து ஜே.வி.பி. அமைச்சரவையிலிருந்து விலகியது. புத்த பிக்குகள் வீதிக்கு வந்து போராடினார்கள். சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தையும் நடத்தினார்கள். காவல்துறையும், இராணுவமும் அவர்களை பலவந்தமாக அப்புறப்படுத்தின.

தமிழீழப் பயணத்தின் இறுதிநாளில் தமிழ்த் தேசிய எழுச்சிப் பேரவை நண்பர்கள் வந்து, வவுனியாவில் நடைபெறும் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டிற்கு வந்து கலந்து கொண்டு சிறப்புரை ஆற்ற வேண்டும் என்றார்கள். அம் மாநாட்டில் தமிழீழத்தின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 3000 பேராளர்கள் கலந்து கொள்கிறார்கள். இது ஒரு பேராளர்கள் மாநாடு. அனைத்து மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், புத்திஜீவிகள், பேராசிரியர்கள், கலைஞர்கள் உரை நிகழ்த்துகிறார்கள். ஆகையால் தாங்களும் கலந்து கொண்டு உரையாற்றவேண்டும் என்றார்கள்.

நானும் இறுதி நாளில் பல்வேறு பணிகளுக்கிடையில் அம் மாநாட்டிற்குச் சென்றேன். வவுனியா இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பகுதி. வவுனியாவுக்கு, யாழ்ப் பாணத்திலிருந்து வந்திருந்த தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண பிஷப் ஜெபநேசன் அவர்களோடும், கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த பாதிரியார் பேராசிரியர் டேனியல் தியாகராஜா அவர்களோடும் பிஷப்பின் வாகனத்திலேயே சென்றோம். எங்களோடு ஒரு பத்திரிகையாள நண்பரும் வந்திருந்தார். வவுனியாவில் நுழைந்ததும், ஒரு உணவகத்தில் நிறுத்தி தேநீர் அருந்தலாம் என்று இறங்கினோம். அப்போது அந்த பத்திரிகை நண்பர் என்னைச் சுட்டி சொன்னார் "அண்ணனை பாதுகாப்பாக அழைத்துச் செல்ல வேண்டும். இது இராணுவப்பகுதி என்பதால் கூலிப் படைகள் உலவும் இடம்" என்றார்.

நீங்கள் வேறு ஏன் பயமுறுத்துகிறீர்கள்? என்னை யாருக்கு அடையாளம் தெரியப்போகிறது, கவலைப்படாமல் வாருங்கள் என்றேன்.

நான்கு பேரும் உணவகத்தினுள் சென்றோம். அங்கே ஒரு மேசையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த இரு இளைஞர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னைக் காட்டி அவர்களுக்குள் பேசிக்கொண்டார்கள். என்னை அவர்கள் அடையாளம் கண்டுகொண்டார்கள் என்பதை நான் உணர்ந்து கொண்டேன். அவர்களிருவரும் பேசிக் கொண்டது பக்கத்து மேசையிலிருந்தவர்களுக்கு பரவி தொடர்ந்து அந்த உணவகம் முழுவதும் செய்தி பரவிவிட்டது. எல்லோரும் என்னைச் சுட்டி அவர்களுக்குள் பேசிக்கொண்டனர். அந்த பத்திரிகையாள நண்பர் "அண்ணே உங்களை எல்லோரும் அடையாளம் கண்டு கொண்டார்கள் நான் சொன்னது சரியாகி விட்டது" பார்த்தீர்களா என்றார்.

நாங்கள் தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோது அந்த இரு இளைஞர்களும் என்னிடம் வந்து கைகுலுக்கி "உங்களையும் உங்கள் ஓவியங்களையும் பத்திரிகைகளில் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்கிறோம். மிகவும் நன்றாக இருக்கிறது. எங்கள் உணர்வுகளை நீங்கள் உள்வாங்கியிருக்கிறீர்கள். நன்றி. வாழ்த்துகள்" என்றனர்.

மாநாட்டுத் திடலைச் சுற்றி காவல்துறையினர் நின்று கொண்டிருந்தனர். திடலுக்குள் வரவில்லை. காலையில் 10 மணியளவில் எழுச்சியோடு மாநாடு தொடங்கியது. 11.00 மணியிருக்கும் மாநாட்டுத் திடலுக்கு அருகில் குண்டு வெடிக்கும் சப்தம் கேட்டது. அருகில் இருந்த நண்பர் "மாநாட்டை வேண்டும் என்றே குழப்புவதற்கு இராணுவமே இதைச் செய்யும். அல்லது அவர்களின் உதவியோடு அவர்களின் கைக்கூலிகளின் வேலையாகவும் இருக்கும்" என்றார்.

எதுவாக இருந்தாலும் இந்த மாநாடு வெற்றி என்பதன் அடையாளம்தான். தமிழீழத்தில் நடைபெற்ற மாநாடுகளில் குண்டு வெடிக்காத மாநாடு எது. இந்த மாநாட்டில் வெடிக்காமல் இருந்திருந்தால்தான் வியப்பு என்று கூறினேன். அடுத்த ஒரு மணிநேரத்தில் மற்றொரு குண்டு வெடிக்கும் சப்தம் தூரத்தில் கேட்டது.

சரியாக பகல் ஒரு மணிக்கு நான் பேசுவதற்கான நேரத்தை ஒதுக்கியிருந்தார்கள். அப்பொழுது பேசிக்கொண்டிருந்தவரை தவிர்த்து இன்னும் இரண்டுபேர் உரையாற்ற வேண்டும். அதன்பிறகுதான் நான் உரையாற்ற வேண்டும். அதற்கு நான் தயாராகிக் கொண்டிருந்த வேலையில் மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் என்னிடம் வந்து அண்ணே அடுத்து நீங்கள் உரையாற்ற வேண்டும் என்று சொல்வதற்கும் உரையாற்றியவர் முடிப்பதற்கும் சரியாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை. அடுத்து நான் உரையாற்றுவேன் என்றும் மேடையில் அறிவித்து விட்டார்கள். மேடையிலிருந்து பார்க்கும்போதுதான் கூட்டத்தின் எழுச்சி முழுமையாகத் தெரிந்தது. மாநாட்டில் பேராளர்களுக்கு மட்டும் தான் அனுமதி என்பதால் திடலுக்கு வெளியே மக்கள் பெருந்திரளாக நின்று உரையை கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"தமிழீழ விடுதலைக்கு ஆதரவாக தமிழக மக்கள் என்றும் ஆதரவாக இருப்பார்கள் என்று கூறிவிட்டு, சிங்களத் தலைவர் களுக்கும் உலகச் சமூகத்திற்கும் ஒரு வேண்டுகோளை வைத்தேன். சிங்களத் தலைவர்களுக்கு, உங்கள் சிங்கள மக்கள் மீது அந்த மக்களின் எதிர்காலத்தின் மீது உங்களுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் தமிழர்களை நிம்மதியாக வாழவிடுங்கள். இதை நான் தமிழன் என்ற முறையில் கேட்கவில்லை. பூமிப்பந்தில் வாழ்கின்ற மனிதன் என்ற அடிப்படையில் கேட்கிறேன். தமிழர்கள் மீதுள்ள அக்கறையினால் கேட்கவில்லை. சிங்களவர்கள் மீதுள்ள அக்கறையினால் கேட்கிறேன். தமிழர்களை நிம்மதியாக, சுதந்திரமாக அவர்கள் தேசத்தில் வாழவிடுங்கள். இல்லை என்றால் நீங்கள் உங்கள் தேசத்தில் நிம்மதியாக வாழமுடியாது. அதேபோல் உலக சமூகத்திற்கு, இங்கே நடக்கின்ற அத்துணையையும் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள். இங்கே தனியரசு நடைபெற்று வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இனியும் தாமதிக்காமல் தமிழீழத்தை அங்கீகரிக்க வேண்டும். அந்தக் கடமையும் பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. இல்லை என்றால் வரலாறு உங்களை மன்னிக்காது" என்று என்னுடைய 20 நிமிட உரையை முடித்தேன். உடனடியாக வாகனத்தில் ஏற்றி அனுப்பிவைக்கப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியங்கள் வரையாத ஓவியர்

**க.** வே. பாலகுமாரன் எழுதிய கட்டுரை அங்கு ஈழ நாதத்திலும் இங்கு தமிழர் கண்ணோட்டத்திலும் வெளியாகியது.

ஓவியர் புகழேந்தி என்கிற தொடர், விடுதலையை யாசிக்கின்ற எமக்கு, புத்துணர்வின் புதிய வரவாகிவிட்டது. ஒடுக்கப்படுகின்ற மக்களுக்கான பரந்துபட்ட தார்மீக ஆதரவினை அவருடைய ஓவியங்கள்வழி அவர் வழங்குகின்றார் என்பதே இதன் பொருள். விடுதலைப் பயணத்தின் முக்கிய நிலையொன்றுக்குள் நாம் பிரவேசிக்க ஆயத்தமாகும் வேளையே இருபத்தியேழு ஓவியங் களோடு அவர் இங்கு வந்து சேர்ந்தார். அவரது ஓவியக் கண்காட்சி சொன்ன செய்திகள் மிகப்பல. எம் மக்களுக்குப் போராட்ட வரலாற்றை ஓவியமாக அவர் புகட்டினார்; வெற்றி உங்களுக்கே என நம்பிக்கையூட்டினார்; தோழமையின் நரம்புகளைச் சுண்டினார். எனவே ஓவியங்களோடு ஓவியமாகவே அவரும் தெரிந்தார். அவரையும் அவரது ஓவியத்தையும் பிரித்தறிய முடியாதென எனக்குப் பட்டது. போராட்டமே வாழ்வாக வாழும் எமக்கு, ஓவியமே வாழ்வாக வரித்தமை புரிந்தது. நாம் ஆயுதம் தாங்கியும் அவர் ஓவியம் தாங்கியும் போராடுகின்றோம். 20 ஆண்டுகளுக்கு மேலாக இடைவிடாத ஓயாத சலிப்பற்ற உழைப்பின் மூலம் அவர் ஓவிய அரசியல் சமூக இயக்கமாகி விட்டார். ஒத்தக் கருத்துள்ள பல்வேறு தளங்களிலுள்ள அனைவ ரோடும் இணைந்து இயங்கும் ஒரு இயக்கமவர்.

"எனது தூரிகையை இருட்டின் பிரதிநிதியாக நியமித் திருக்கின்றேன்" என்கிற அவரது சொற்கள் சருவதேசப் பரிமாணம் கொண்டவை. இருளில்தான் ஒளியிருக்கின்றது; இருளை யுணர்ந்தால்தான் ஒளியைத் தேடமுடியும். புகழேந்தியின் சிறிய ஆனால் கூர்மையான ஒளி மிகுந்த கண்களிலே வலியின் இருளை நான் கண்டேன். இவ்வலி தமிழ்நாட்டின் தமிழர் நிலைகண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டும் வந்ததல்ல- தமிழ் ஈழத்தமிழர் படும் துயர் நொந்து மட்டும் வந்ததல்ல- இவ்வுலகில் மானுடம்படும் வலியாலும் வந்தது. அதேவேளை இம் முயற்சியால் அவர் பட்டிருக்கக் கூடிய வலியையும் நான் இணைத்துக் கொண்டேன். இதுவொரு மிக ஆரோக்கியமான அற்புதமான தமிழர் பண்பாட்டுக் கலைப் பின்புலத்திற்தோன்றும் ஓவியப் பரிமாணம். தமிழ் அடையாளங் களோடு சருவ தேச அடையாளங்கள் பொருத்தப்பட்டு இரண்டும் ஒரு புள்ளியில் சந்திக்கும் வேளையை அவர் பிறப்பித்துள்ளார்.

கிளிநொச்சி அழகியற் கலாமன்றத்திலே மக்களோடு நின்று அவரது ஓவியங்களை அவதானித்தபோது மனதில் பலதரப்பட்ட உணர்வுகள் தோன்றின. வண்ணங்கள் மேலும் மேலும் அழுத்தம் பெற்று உக்கிரமடைந்தன; அவை தீப்பற்றி எரியும் நிலை யிலிருப்பதுபோல் தோன்றியது; திடீரென ஓவியங்கள் மறைந்தன; அவற்றிலிருந்து ஆட்கள் வெளிக்கிளம்பினர். அவர்கள் எம்மோடு பேசத் தொடங்கினர்; பின்னணியில் வேட்டுச் சத்தங்கள், தாக்குதல்கள். வதைபடும் மனிதத்தின் மீது அது சிந்திய குருதியின் மணமும் கிளம்பியது. பார்வையாளர்கள் மனங்களிலேயே அதிர்ச்சி யலைகள் பரவின; அவர்கள் கலக்கமடைந்தனர். சோகத்தின் புதை சேற்றுக்குள் அவர்கள் வேகமாகப் புதையத் தொடங்கினர். பின்னர் மெதுவாக மேலே யெழுந்தனர். அமைதியடைந்தனர். மிகச் சிலர் உடனடியாக எதிர்வினை காட்டினர். நாம் கடந்துவந்த துயரப் பாதையை ஏன் நினைவுபடுத்தினீர்கள்? நம்பிக்கை தரும் ஓவியங்களை மட்டும் வரைந்திருக்கலாமே என முணுமுணுத்தனர். எல்லாவற்றிற்கும் சிரிப்பையே பதிலாகப் புகழேந்தி தந்தார்.

எனக்கொரு உண்மை அப்போது உறைத்தது. புகழேந்தியின் ஓவியங்கள் மனிதர் முகத்திலே அறைகின்றன. அவை வலியைக் கிளப்புகின்றன. வலி கிளம்பினால் நோவு கண்டால் என்ன செய்ய வேண்டும்? அதனை நீக்கவும் போக்கவும் வழி கண்டறிய வேண்டும். எனவே விடை இலகுவில் கிடைக்கின்றது. இருளைத் தரும் ஓவியங்களே ஒளியைப் பிறப்பிக்கின்றன. எனவே புகழேந்தி மக்கள் ஓவியராக மாற்றம் பெற்றுவிட்டார். வரலாற்றின் இயங்கு விதியினை ஓவியத்தின் வழி அவர் நிரூபிக்கும் வண்ணம் அலாதி யானது. இன்னும் பலரோ எமது வாழ்வினை வாழாது நீங்கள் எவ்வாறு அவற்றினை வரைந்தீர்கள் என வியந்தனர். அவர்களும் பதில் சொல்லப்படாமலே பதிலையுணர்ந்தனர். வாழ்ந்தவராகிய நாம் பட்ட வலியை வாழாத அவரும் பட்டார். அவ்வலியை ஓவியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரையும்பொழுது அவர் வாழ்ந்துபட்டார். இதுவே அவரது ஓவிய வெளிப்பாடு. ஓவிய வெளிப்பாடு மட்டுமன்றி அவரது தோழமையின் வெளிப்பாடு. உலக மொழியாகிய ஓவியம் மூலம் எமது துயரம் வரையப்பட்டதால் அத்துயரம் மானுட விடுதலையின் மகத்தான பங்களிப்பாகவும் அதன்வழி சருவதேச அங்கீகாரத்தையும் புகழேந்தி எமக்குப் பெற்றுத் தந்துள்ளார். இதுவொரு விடுதலைப் போராட்ட தரமுயர்த்துகைச் செயற்பாடு. வெண்மணியோடு செம்மணியும் பகத்சிங்கோடு குட்டிமணியும் சந்திரபோசு, மாவோ, லெனின், சே, பிடலோடு பிரபாகரனும் திலீபனும், சாலியன் வாலாபாக் படுகொலையோடு வல்வைப் படுகொலையும் உறங்கா நிறங்களின் வெளிப்பாடாகும்போது அவை இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றுப் படிமங்களாகி விடுகின்றன. இதுவொரு அறிவுபூர்வமான கலைச் செயற்பாடு; சருவதேச அரசியல் வெளிப்பாடு. இக்கட்டத்திலே எம் மக்கள் ஓவியர் வீர சந்தானத்தினை நினைவிற் கொள்வர். எண்பதுகளில் கரும் தாடியும், ஆழமான கண்களும் தொலை நோக்கிய பார்வையும் கொண்ட அரிய இனிய நண்பர் வீரசந்தானத்தின் தமிழ்த்துயர் பேசிய துயர்களைய எமக்கு உரமூட்டிய அவரது ஓவியங்களை மனதிற்கொள்வர். நிழலாடும் சந்தானத்தின் ஓவிய முகத்தின் தொடர்ச்சியாக இப்போது ஓவியர் புகழேந்தி. எதுவும் வீணாகவில்லை. பகிரப்பட்ட தோழமை, சிந்தப்பட்ட குருதி, இழக்கப்பட்ட உயிர்கள், கொடுக்கப் பட்ட விலை எல்லாமே காலத்தால் அழிக்கப்பட முடியாத நிரந்தரப் படிமங்களாகிவிட்டன. அடுத்த சந்ததிக்குக் கடத்தப்பட ஆயத்தமாகிவிட்டன. எரியும் வண்ணங்கள் முன்னுரையில் எழுதப் பட்டிருப்பது போல் விதைக்கப்பட்ட விதைகள், உச்சரிக்கப்பட்ட சொற்கள் அதுபோல கிழிக்கப்பட்ட கோடுகள் போல எல்லாமே சும்மா இருப்பதில்லை. அவை தொடர்ந்து இயங்குகின்றன. அவை இயங்கி மெல்லவே "ஆமை குன்றேறல் போல" எமது இலக்கினை நோக்கி இடைவிடாது எம்மை நகர்த்துகின்றன.

ஓவியக்கலை பற்றி என்னைப்போலவே பலரும் பெரிதாக அறிந்தவர்களில்லை. ஆனால் அவற்றில் பல பேசும் வாழ்வு எம்முடையது என்பதை மட்டும் அறிந்தவர். ஆயினும் பொது மக்களின் கவனம் ஓவியக் கலையின்பால் அதிகம் ஈர்க்கப் படவில்லை. அது தமக்கானது. தமது விடிவினை வேகப்படுத்தும் ஆற்றல் கொண்டதென்பதை உணரவில்லை. அவர்களுக்கு உணர்த்தப்படவில்லை. ஓவியமென்பது அரிதான நுண்கலையாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னியப்பட்டதாக எட்டாத் தொலைவிலிருப்பதாக அவர்கள் எண்ணிக் கொள்கின்றார்கள். இந்நிலைக்குப் பல காரணங்க ளிருக்கலாம். அரண்மனைகள், மடாலயங்கள், தேவாலயங்களில் தெய்வத்தன்மை சார்ந்ததும் அரசாள்கை சார்ந்ததும் வரையப்பட்ட ஓவியங்கள் பின்னர் அடக்குமுறைகள், சருவாதிகாரங்கள் என்பவற்றிற்கு எதிராகவும் குரலெழுப்பின. இன்று நவீனத்துவமும் புதுமையும் கொண்ட வித்தியாசமான ஓவியங்கள் வரவேற்பினைப் பெறும் நிலையைக் காண்கிறோம். தொழில் நுட்ப வளர்ச்சியின் வெளிப்பாடாகக் கணினியில் வரைகலை வளர்வதையும் காண் கிறோம். அவை நுகர்வுலகின் உயர் இரசனைப் படைப்பாகவும் திரைப்படத்துறை சார்ந்தும் அவற்றின் நீட்சியாக வெளி வருவதையும் பார்க்கின்றோம். ஆனால் இவற்றின் வழி ஓவியம் ஒரு புதுவழியை அடையும் வேளையில் மிகச் சிக்கலான பார்வை யாளனை மிரட்டும் தன்மையால் சிலவேளை புரியாமையால் தாழ்வுணர்ச்சி கொள்ளச் செய்யும் நிலைக்கு ஆழமான தனிமனிதச் சிந்தனையின் வெளிப்பாடாகும்போது மீண்டும் அவை மக்களிடமிருந்து வேகமாக அன்னியமடைகின்றன.

இதுவொரு தேக்கநிலை. இவ்வாறாகப் பல நிலை களிருப்பினும் ஓவியக்கலை தொடர்பான அடிப்படைக் கேள்வி ஒன்றுள்ளது. மிக நீண்ட காலமாகவே எழுப்பப்படும் கேள்வியிது. மக்கள் மொழியறிந்திருந்தபோது முதன் மொழியாகவிருந்த ஓவியம் எவ்வாறு மக்களிடமிருந்து அன்னியப் பட்டது? இதற்கு விடை காணாமல் ஓவியக் கலையின் மேம்பாடு பற்றிப் பேசுவதால் என்ன பயனென்பது சமூக நலன்சார்ந்த புகழேந்தியின் வினா. இங்கேதான் புகழேந்தி கவனிக்கப்பட வேண்டியவராகின்றார். புகழேந்தியின் ஓவியங்கள் தோன்றிய அரசியலையும் அவை பேசும் அரசியலையும் இங்கேதான் முக்கியப்படுத்தப்பட வேண்டியதாகின்றது. மக்களுக்குத் தேவையானதை ஓவியங்கள் பேசாமற் போனதால் அவர்கள் வரலாறு, ஓவியங்களில் பதியப்படாது போனதால் தனிமனித வெளிப்பாடுகளாக ஓவியங்கள் வெளிவருவதால் மக்களுக்கும் ஓவியங்களுக்குமான இடைவெளி நீண்டுவிட்டது. இதுவே புகழேந்தியின் விடை. விடையிலிருந்து அவரது பயணம் ஆரம்பமாகிறது. மிகச் சரியான தருக்கரீதியிலான அடிப்படையிலான விடையிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, இங்கேயொரு புத்தம் புதிய கோட்பாடு பழமையின் வேர்களிலிருந்து கிளம்புகின்றது. வரலாற்று வழிவந்த பகுத்தறிவின் அடிப்படையிலான அறிவியலைத் துணைகொண்ட கோட்பாடிது. பாரதி பாடியதுபோல, பூ மண்டலத்திலே அன்பும் பொறையும் விளங்க, துன்பமும் மிடிமையும் சாவும் நோவும் நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம் இன்புற்று வாழ ஓவியங்கள் பயனாக வேண்டும். விடிவை நோக்கி நகரும் மக்கள்; ஆக்கிரமிப்புகளை, அடக்கு முறைகளை உடைத்தெறிய முனையும் மக்கள் பற்றிய பதிவுகள், அதேவேளை இவர்களுக்குத் தேவைப்படும் மனவுரம், தார்மிக ஆதரவு ஆகிய இரு நிலைகளில் ஓவியங்கள் உதவிடவேண்டும். இதுவே மக்களுக்கும் ஓவியங்களுக்குமான இடைவெளியைக் குறுக்க ஒரேயொரு அற்புத வழி. இங்கேதான் புகழேந்தி வருகின்றார். அவர் தஞ்சையின் தும்பத்திக்கோட்டையில் பிறந்ததால் தமிழ்நாட்டுத் தமிழனாக விருப்பதோ, 1983 யூலை இன அழிப்புக் காலத்தின் பின் ஈழத்தமிழர் ஆதரவு நிலைப்பாடெடுத்து ஓவியங்களை வரைந்தார் என்பதோ இங்கு முக்கியமில்லை. அவரது ஓவியமொழி எதுவென்பதே இங்கு கேள்வி. அந்த வகையில் எல்லா வட்டங்களையும் மீறி உடைத்துக் கொண்டு அவரது ("ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாகவும் தென்னாப்பிரிக்க நிறவெறிக்கெதிராகவும் பாலஸ்தீன விடுதலைக்கு ஆதரவாகவும் இந்தியாவில் நடைபெற்ற சாதிய மத வன்முறைகள் பெண்ணிய ஒடுக்கு முறைகள் அரச பயங்கரவாத அடக்குமுறைகள் எல்லா வற்றிக் கெதிராகவும் "ஒரு கவிதை சிறுகதை இலக்கியம் போன்றவை எப்படிச் சமூக மாற்றத்திற்காகப் பயன்படுத்தப் படுகிறதோ அதேபோல ஓவியமும் அதைச் செய்யமுடியும் என்கிற ஆழமான நம்பிக்கை எனக்குண்டு" - "எனக்குத் தனித்துவம் மனிதன்தான். மனிதன் பக்கம் நின்று அவனது நெருக்கடிகளைப் புரிந்துகொண்டு அதனை ஓவியமாக மொழியாக்கம் செய்கிறேன். சமூக நோக்கில் மானுடச் சிக்கல்களை ஓவியங்களில் அணுகுவது தான் எனது செயற்பாடு") ஓவியங்கள் வெளிவருகின்றன. எனவே அவர் "**ஓவியப் புரட்சியாளனாக**" "**கலாபூர்வமான கலகக் காரனாக**" மாறிவிட்டார்.

இங்கேதான் ஒரு செய்தி பீறிட்டு வெளிக்கிளம்புகின்றது. மனிதர்கள் இலக்குகளை அடைவதற்காக வழிகளைப் பிறப்பிக் கின்றார்கள். அவ்வழியில் செல்ல பல்வேறு கருவிகளைக் கையிலெடுக்கின்றார்கள். பொதுவில் மனிதர் விடுதலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கினை அடைய, புரட்சிகர வன்முறைப் பாதையில் ஆயுதங் களைக் கையிலெடுக்கின்றார்கள். ஏனெனில் அவர்கள் ஆயுதங் களாலும் அது சார்ந்த ஆட்சியாளர் கருத்துக்களாலும் அடக்கப்படு கின்றார்கள். எனவே ஆயுதத்தினை கையிலெடுக்கும் அவர்களுக்குத் தளைகளை அறுத்தல் அடக்குமுறைச் சிந்தனையிலிருந்து விடுபடல் என்பது தொடர்பான கருத்துக் கருவிகளும் அவசியமாகின்றன. எனவே இங்கே அவ்வகையில் ஓவியத்தை ஒரு கருத்தாயுதமாகக் கோட்பாட்டுக் குறியாக புகழேந்தி கொள்கின்றார். வேறு பலரும் ஓவியத்தைக் கருவியாகக் கையிலெடுக்கின்றார்கள். ஆனால் அவர்கள் தமக்காக மட்டும் தம் கருத்து நிலைக்காக மட்டும் தமது வாழ்க்கைக்காக மட்டும் ஓவியங்களை முதன்மைப் படுத்து கின்றார்கள். அல்லது ஓவியத்தை நவீனமயப்படுத்துவதாக எண்ணிக் கொள்கின்றார்கள்.

இங்கேதான் புகழேந்தி பொருந்துகின்றார். அவரது போக்கு மிக வித்தியாசமானது. புரிவதற்கும் அறிவதற்கும் புரட்சிகரமானது. இடைவிடாது தொடரும் மனித அவலத்தின் எல்லையற்ற வலிகளின் நோவுக்கு வழிகாணும் மனித முயற்சியின் தொடரிழையவர். எத்தகைய மேன்மைப் பணியிது? அவரது ஓவியங்கள் 'தமிழ் அடையாளம்' கொண்டவை. அவரது மனிதர்கள் 'சருவதேச அடையாளம்' கொண்டவர்கள். அவரது தமிழ்த் துயரம் பேசும் ஓவியங்கள் சருவ தேசத் துயரமும் பேசுகின்றன. அவரது பெண் வடிவங்கள் மிகவும் தமிழ் அடையாளம் கொண்டவை. காலம் காலமான தமிழ்ப் பெண்ணின் துயரம் கோடுகளின் வழி குருதி வழிகின்றது. இது எமது சமூக அடையாளம். சபிக்கப்பட்ட மக்களின் இருண்ட வாழ்வில் ஒளியைப் பிறப்பிக்க எடுக்கப்படும் அனைத்துப் போராட் டங்களிலும் அவர் இருக்கின்றார். அவரது வளையும் கோடுகளும் அழுத்தமான வண்ணங்களும் சீற்றமடையும் மனிதர்களை இனம் காட்டுகின்றன. திலீபனின் கண்ணில் தெரியும் ஏக்கமும், பிரபாகரன் முகத்தின் துயர்தோய்ந்த சாந்தமும் எரிமலையின் கனன்று சிவக்கும் தீ முகங்களாக எமக்குள் மாற்ற மடைகின்றன. புகழேந்தி என்னும் மானுடவியல் ஆய்வாளனின் வண்ணக் கலவையின் வேதியல் மாற்றமிது.

எம் மண்ணின் நன்றியையும் மதிப்பையும் அவருக்குத் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சியிலேயே புகழேந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெகு உக்கிரமாகவே கூறினார். ஓவியத்தில் புனிதமா- புடலங்காய், கலை நேர்த்தியா கத்தரிக்காய் என்றார். வடிவத்திற்காக மனிதரா? மனிதருக்காக வடிவமா? வண்ணங்களும் கோடுகளும் எனக்குக் கருவிகளே என்றார். இங்கேதான் புகழேந்தி கலகக்காரனாக அடையாளம் காணப்படுகின்றார். புரட்சியாளன் எனப் போற்றப் படுகின்றார். ஏன்? தன் வடிவத் தெரிவை வண்ணக் குழைவை கலைநேர்த்தியை அவர் பல தடவைகளில் எல்லாவற்றையும்விட பெரிய இலக்கிற்காக விட்டுக் கொடுக்கின்றார். உண்மையில் மக்களுக்குச் சேவகம் செய்வதற்காக அவருக்கு வண்ணங்களும் கோடுகளும் சேவகம் செய்கின்றன. இதுவொரு இயங்கியல் பரிமாணம்; கலையின் தருக்கம்; ஓவியத்தின் விழுமியம். இங்கே பெர்னாட்சாவின் கூற்றொன்று தொடர்புறுகின்றது. "வாழ்வின் மிகப் பெரிய உண்மையான ஆனந்தம் எது தெரியுமா? உங்களால் தெரிவுசெய்யப்பட்ட உன்னத இலட்சியத்திற்காக உங்களைப் பயன்படுத்த அனுமதித்தலாகும். சின்னஞ்சிறு கதைகள் பேசி வாழ்வதை விட மாற்றத்திற்கான இயற்கையின் விதியாக இருப்பதே மேல். நான் இறக்குமுன் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டவனாக இருத்தல் வேண்டும். வாழ்க்கை ஒரு சிறிய மெழுகுவத்தியல்ல; எனக்கு அதுவொரு அற்புத ஒளிவிளக்கு. அதனை அடுத்த தலைமுறைக்குப் பாரப்படுத்து முன்னர் என்னால் முடிந்தளவு அதனைப் பிரகாசமாக எரிக்க விரும்புகின்றேன்." எனவே புகழேந்தி அழகியலை கலை நேர்த்தியைத் தூக்கி வீசிவிடுகின்றார். அவ்வாறு வீசுவதன் வழி அவர் ஓவியங்களை இல்லாது செய்துவிடுகின்றார். உண்மையிலேயே பார்வையாளர் ஒருவர் கூறினார். "ஓவியங்களைக் காணவந்தேன். ஆனால் அவற்றை காணவில்லை." இங்கே புகழேந்தி செய்த புரட்சி, ஓவியத்திற்கும் வாழ்க்கைக்குமான இடைவெளியைப் பூச்சியமளவில் சுருக்கி விட்டமைதான். உண்மையில் ஓவியங்கள் வரையாத ஓவியர் அவர். அழகியலிற்கு அவர் அடிமையாகவில்லை. அதனை அவர் அடிமைப் படுத்திவிட்டார்.

ஆனால், புகழேந்தி விரும்பினாலென்ன; விரும்பா விட்டா லென்ன; அவரது உக்கிர ஓவியங்களில் கூட கலை நேர்த்தியை வடிவமைதியைக் காண்கின்றோம். பழமையின் வேர்களில் புதுமையின் தளிர்கள்; நவீன ஓவியத்தில் மிகப் பழமையான மனிதத் துயர்; நவீனத்துவ ஓவியத் தாக்கத்திற்கு அவர் உட்பட்டிருந்தாலும் அதிலிருந்து விடுபட்டு அவர் எடுக்கும் முயற்சி, மக்களுக்குப் புரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்பதற்காகப் பரிசோதனைகளை அரூப வடிவங்களைத் தவிர்த்தாலும் அழகியலைத் தவிர்க்காத பண்பு இவையாவும் அவர் ஓவிய மனதின் வெளிப்பாடு. செவ்வி யொன்றிலே அவர் சொல்கின்றார், "நமது பாரம்பரியத்தின் வடிவங்களை ஓவியத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்கிற ஆசை இருக்கின்றது. அந்த வேலை தொடங்கியும் விட்டது. எதிர்காலத்தில் என்ன வரைய வேண்டும் என்பதையும், நான் வாழுகின்ற சூழலும் காலமும்தான் நிர்ணயிக்க வேண்டும்." புகழேந்தியின் ஓவிய மனிதன் பேசியவை இவை.

எமது விடுதலையின் அரசியலை ஓவியம்வழிப் பேசும் அவருக்கு நாம் செய்யக் கூடியதென்ன? ஆக்கிரமிப்பாளர் கையில் சிக்கி வதைபடும் மனிதத்தை விடுவித்து அன்பாளர் கையில் கொடுத்தலே. இடைவிடாத இப்போராட்டத்தின் இருளகற்றி, உரமூட்டி, வளமூட்டி அவர் தன் ஓவியம்வழி என்றும் எம்மோடு வாழ்வார். இதுவே தமிழீழ நெஞ்சங்களின் உருகிக் கனிந்த தோழமையுணர்வின் வேண்டுகையும் நம்பிக்கையுமாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரியாவிடை

நாற்பத்தைந்து நாட்கள் நகரம், கிராமம் என்று பல்வேறு இடங்களுக்கும் பயணம் செய்திருக்கிறேன். ஆயிரக்கணக்கான மக்களைச் சந்தித்திருக்கிறேன். ஒவ்வொருவரும் அவர்களுடைய உணர்வுகளை என்னோடு பகிர்ந்து கொண்டிருக்கிறார்கள். நானும் அவர்களோடு பகிர்ந்து கொண்டேன். நேரடியாக மட்டுமல்லாமல் பத்திரிகைகள் வாயிலாகவும், வானொலி வாயிலாகவும், தொலைக் காட்சி ஊடாகவும் என் உணர்வுகளை அந்த மக்களோடு பகிர்ந்து கொண்டிருக்கிறேன்.

தமிழீழ மக்கள் மனங்களிலே எம்.ஜி.ஆர். அவர்கள் நீங்காத இடம்பெற்றிருக்கிறார் என்பதை செல்லும் இடங்களிலெல்லாம் நான் காணக் கூடியதாக இருந்தது. பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர், "இலங்கைத் தீவினில் தமிழினம் கேட்பார் எவருமின்றி வேட்டையாடப் பட்டுக் கொண்டிருந்த வேளையில் தமிழீழத் தமிழர்களுக்காக ஓங்கி குரல் கொடுத்தவர் மறைந்த மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள். தமிழக முதல்வராக இருந்து கொண்டு தமிழீழ விடுதலைக்காக குரல் கொடுப்பதோடு நின்றுவிடாமல் விடுதலையை வென்றெடுக்க வல்ல தலைமையாக எங்கள் தேசியத் தலைவரை இனங்கண்டு ஆதரித்தார். தமிழீழ விடுதலைப் புலிகளின் கரங்களைப் பலப்படுத்துவது ஒன்றே தமிழீழத் தமிழர்களுக்கு மீட்சி தரும் என்பதை தீர்க்க தரிசனமாக எண்பதுகளின் ஆரம்பத்திலேயே உணர்ந்து கொண்டு அதற்கென காத்திரமான பங்களிப்பையும் வழங்கினார்.

சிறீலங்காப் பேரினவாத அரசு தமிழீழ மக்கள் மீது குண்டு மாரிப் பொழிந்தும், துப்பாக்கியால் சுட்டும், சிறைப்பிடித்து வதைத்தும் துன்பம் அனுபவிப்பது கண்டு துடித்தார். ஈழத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் படும் அவலங்கள் கண்டுணர்ந்த எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை ஆதரிக்க முன்வந்தார்.

இதன் விளைவாகவே தமிழீழ மக்களுடைய விடுதலையை ஆக்கபூர்வமாக மீட்டெடுக்கக் கூடிய அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளையும் தமிழீழ மக்களிற்கான தீர்க்கதரிசனம் மற்றும் நுண்மதிமிக்க விலைபோகாத தலைமையுமாக எங்கள் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களை கண்டுணர்ந்து மனித நேயத்தோடு எண்ணிலடங்காத உதவிகளைச் செய்தார். தாம் வகித்து வந்த முதல்வர் பதவிக்கு ஆபத்து வந்தாலும் வரட்டுமென தமிழீழ விடுதலைக்கான செயற்கரிய பங்களிப்புகளைச் செய்தார். தமிழீழத்திலிருந்து தாய்த் தமிழகத்திற்கு ஏதிலிகளாக வந்த தமிழர்களுக்கு பல நல்வாய்ப்புத் திட்டங்களை வகுத்தார்.

தனது அரசு, கட்சி, சொந்த செல்வாக்கு அனைத்தையும் பயன்படுத்தி தமிழீழ விடுதலைக்கு உதவிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு தினத்தை ஒவ்வொரு ஆண்டும், எங்கள் தமிழீழ மக்களால் மிகவும் உணர்வுபூர்வமாகவும், நன்றிப் பெருக்கோடும் அனுட்டிக்கப்பட்டு வருகின்றது. தமிழீழத்தின் விடியலுக்காக எதுவித பிரதிபலனும் பாராது பாடுபட்ட அந்த நல்ல உள்ளத்தினை எங்கள் நெஞ்சில் நிறுத்தி வைத்திருக் கிறோம்" என்றார். இதுதான் ஒவ்வொரு தமிழீழத் தமிழர்களின் உணர்வுகள்.

அடுத்து அனைத்து இடங்களிலும் அன்போடு விசாரிக்கப் பட்டவர்கள் இரண்டுபேர் ஒருவர் அய்யா பழ.நெடுமாறன் மற்றொருவர் வைகோ. இந்த தலைவர்கள் மீது மிகுந்த அன்பும் மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள்.

தமிழ்ச் சினிமா மீது மோகமும் இருக்கிறது. கோபமும் இருக்கிறது. குறிப்பாக ஈழத் தமிழர்கள் குறித்து படம் எடுக்கிறேன் என்று கிளம்புகிறவர்கள் சரியான புரிதல் இல்லாமலும், அக்கறை இல்லாமலும், உண்மைத் தன்மை இல்லாமலும் எடுக்கிறார்கள் என்று குறைப்பட்டுக் கொண்டார்கள்.

மக்கள் ஒவ்வொருவரும் 'இந்தியா எங்களைப் பாதுகாக்க வேண்டும் எங்களுக்கு உதவவேண்டும்' என்றே விரும்புகிறார்கள். கசப்பான அனுபவங்களை அவர்கள் பெற்ற பிறகும் அவர்கள் நல்லுறவையே விரும்புகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குக் காரணம் 'தொப்புள் கொடி உறவு தமிழர்கள் 6 கோடிபேர் வாழும் நாடு இந்தியா அங்கிருந்துதானே நாங்கள் எதிர்பார்க்க முடியும்' என்கிறார்கள். அவர்களுடைய எதிர்பார்ப்பு நியாயமானதே.

நான் தமிழகத்திலிருந்து வருவதாகச் சொன்னாலும். அவர்கள் இந்தியாவிலிருந்து வந்திருப்பதாகத்தான் குறிப்பிடுகிறார்கள்.

ஒவ்வொரு வீடுகளிலும் காந்தி, நேதாஜி, நேரு, போன்றவர்களுடைய படங்கள் இருப்பதைப் பார்த்து வியந்து நின்றேன். அந்த அளவிற்கு அம்மக்கள் இந்தியாவோடு உணர்வு பூர்வமாக நெருக்கம் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் நாம்...?

என்னை வழியனுப்ப நண்பர்கள் பலர் வந்திருந்தார்கள். மிகவும் உணர்வுபூர்வமான தருணம் அது. அவர்களிடமிருந்து கண்ணீர் மல்க விடைபெற்றேன்.

வாகனம் புறப்பட்டது.

தமிழீழத்திலிருந்தும் விடைபெற்றேன்.

வாகனத்தில்

"நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை
விலங்கு தெரிக்கும்"

என்ற கவிஞர் காசிஆனந்தன் அவர்களின் பாடல் ஒலித்தது. கொழும்பு வந்து சென்னை வரும்வரை அப்பாடல் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தது.

நம்புங்கள் தமிழீழம்
நாளை பிறக்கும்....

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு-1

## நான் நியாயத்தின் பக்கம் நிற்கிறேன்
### - நேர்காணல்-

ஈழத் தமிழ் மக்களுக்காக இந்தியத் தமிழர்களின் குரல்கள் என்றுமே ஒலிக்கும். தேவையேற்படின் அவர்களின் குரல்கள் மட்டுமல்ல, கரங்களும் உயருமெனக் கூறுகிறார் இந்தியாவின் புகழ் பெற்ற ஓவியக் கலைஞரும், தமிழ்நாடு குடந்தை ஓவியக் கல்லூரியின் பேராசிரியருமான புகழேந்தி.

ஈழத் தமிழ் மக்களுக்கெதிரான அடக்கு முறைகளையும் யுத்தத்தின் மூலம் அவர்கள் அனுபவித்த, அனுபவித்துவரும் அவலங்களையும் ஈழ மக்களின் போராட்ட வரலாறுகளையும் தனது தூரிகை கொண்டு தமிழகத்தில் மட்டுமின்றி இந்தியா முழுவதும் உலகமெங்கும் எடுத்தியம்பியவர் இவர்.

ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்தின் பால் ஈர்ப்புக் கொண்ட இவர், அடக்கி, ஒடுக்கப்படும் மக்களின் உணர்வுகளை வெளிக்கொணரும் வகையிலும், அடக்குமுறையாளர்களுக்கு எதிராகவும் தனது தூரிகையைப் பயன்படுத்தும் ஓர் ஓவியப் பேராசிரியராக மிளிர்கிறார்.

தமிழ்நாடு குடந்தை ஓவியக் கல்லூரியில் பட்டப்படிப்பையும், ஐதராபாத் மத்தியப் பல்கலைக்கழகத்தில் ஓவியத்தில் முதுகலைப் பட்டத்தையும் பெற்ற இவர், தமிழகத்திலேயே ஓவியத்துறையில் முதன் முதலில் முதுகலைப் பட்டம் பெற்றவர் என்ற புகழையும் பெற்றுள்ளார்.

1987ஆம் ஆண்டு கொல்கத்தாவில் இளைஞர்களுக்கான தேசிய விருது, அதே ஆண்டு தமிழ்நாடு மாநில விருது, இந்தியாவின் உலக விமானப் போக்குவரத்துக் குழுமத்து விருது, தருமபுரி மனித மேம்பாட்டு மையம் வழங்கிய சிறந்த ஓவியர் விருது போன்ற பல விருதுகளையும் இவர் பெற்றுள்ளார்.

சென்னை, ஐதராபாத், டெல்லி, லக்னோ, பெங்களூர், மும்பை போன்ற பல இந்திய நகரங்களில் தேசிய அளவிலான கண்காட்சிகளில் இவரது ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

தமிழகம் மற்றும் தென் மாநிலங்களில் முக்கிய நகரங்களில் உறங்கா நிறங்கள், சிதைந்த கூடு, திசைமுகம், புகைமூட்டம் உள்ளிட்ட எழுபதிற்கும் மேற்பட்ட இவரது தனிமனித ஓவியக் கண்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"20ஆம் நூற்றாண்டு ஒரு தூரிகையின் உறங்கா நிறங்கள்" என்ற இவரது கண்காட்சி தமிழகம் மட்டுமல்லாமல் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களிலும் நடத்தப் பெற்று பெரு வெற்றி பெற்றுள்ளது. இவற்றை விட அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், டென்மார்க், அவுஸ்திரேலியா போன்ற பல்வேறு நாடுகளிலும் இவரது கண்காட்சிகள் நடத்தப்பட்டன.

தற்போது இலங்கை வந்துள்ள புகழேந்தி கிளிநொச்சி உட்பட்ட பல்வேறு இடங்களில் தனது 'புயலின் நிறங்கள்' என்ற ஈழப்போர் வரலாற்றுப் பதிவு ஓவியங்களின் கண்காட்சிகளை நடத்தி வருகிறார்.

கடந்த 18,19,20 ஆம் திகதிகளில் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் இவரது ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. அங்கு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த ஓவியக் கலைஞர் பேராசிரியர் புகழேந்தியைச் சந்தித்து அவரது அனுபவங்களைப் பகிர்ந்த' கொண்டோம்.

அதன்போது 'தினக்குரலு'க்கு அவர் வழங்கிய விசேட செவ்வியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறோம்.

■ ***உங்களது வரலாறுகளை அறிந்து கொண்டோம். உங்களுடைய கலையுலக வாழ்வு பற்றிக் கூறுங்கள்?***

கடந்த 23 வருடங்களாகக் கலை வாழ்க்கை மற்றும் பொது வாழ்க்கையில் ஈடுபட்டு வருகின்றேன். கலை வாழ்வு, பொது வாழ்வு இரண்டுமே என்னோடு ஒன்றிணைந்தவை. குறிப்பாக, என்னுடைய ஆரம்பகால ஓவியங்கள் ஈழத்தமிழர்களின் இன்னல்களையும், பிரச்சினைகளையும் ஓவியங்களாக்கி, தமிழகத்தில் மட்டுமல்ல, உலகின் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தி யிருக்கின்றேன். ஈழத் தமிழர்கள் மட்டுமல்லாது பலதரப்பட்ட மக்களது அனுபவங்களையும் எனது ஓவியத்தின் மூலமாக வெளிப்படுத்தி வருகின்றேன்.

■ ***உங்களது ஓவியப்படைப்புக்களை ஈழத்தின் பல்வேறு இடங்களில் நீங்கள் காட்சிப்படுத்தி வருகிறீர்கள். இதற்கான காரணம் என்ன?***

நான் பல்வேறு ஈழப்போர் வரலாற்றுப் பதிவுகளையும் ஓவியமாக வரைந்திருக்கின்றேன். ஈழப்போரில் எந்த மக்கள் பாதிக்கப்பட்டார்களோ, எந்த மண் பாதிக்கப்பட்டதோ- அந்த மண்ணிலே, அந்த மக்கள் மத்தியிலே ஓவியங்களாக வைத்து அவர்களிடத்திலே இந்த ஓவியங்களைக் கொண்டு செல்ல வேண்டும். இந்தப் படைப்பிலே நாம் பேசுகின்ற செய்திகளை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென்பதுதான் எனது நோக்கம். அதற்காகவே இக்கண்காட்சிகளை இப்பகுதிகளிலே நடாத்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**■ தமிழகத்திலே சிறந்த புகழ்பெற்ற பல்வேறு கலைஞர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒரு சிலர் தவிர்ந்த ஏனையோர் தமது படைப்புகளில் ஈழத்தமிழர்களின் இன்னல்களை வெளிப்படுத்துவதில் பாராமுகமாகவே இருந்து வருகிறார்கள். இந்நிலையில் ஈழத்தமிழர்களின் அவலங்களை வரலாறுகளாக வெளிப்படுத்த உங்களைத் தூண்டிய காரணிகள் எவை?**

1983ஆம் ஆண்டு நான் கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் மாணவனாக இணைந்தேன். எனது பள்ளிப் பருவத்திலேயே மொழி உணர்வும், இன உணர்வும் அதிகமாக இருந்தது. ஒரு திராவிடப் பாரம்பரியம் மிக்க பின்னணியில் நான் பிறந்தவன். இன உணர்வும், மொழி உணர்வும் என்னைத் தமிழக மக்களின் பிரச்சினைகளைப் பற்றி அறிந்து கொள்ள உதவியது.

1983ஆம் ஆண்டு நான் கல்லூரியிலே நுழைகின்றபோது, 1983ஆம் ஆண்டு இங்கு நடைபெற்ற இனக் கலவரத்தையும் அதில் தமிழ் மக்கள் கொன்றழிக்கப்பட்டதையும் எதிர்த்து மாணவர்கள் மிகப்பெரியதொரு போராட்டத்தை நடாத்தி, தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தார்கள். ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இங்கே கொலை செய்யப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் தமிழகம் நோக்கி அகதிகளாக வந்த நிலையில் மாணவர் போராட்டம் மிகப்பெரிய எழுச்சியாக உருவெடுத்தது. அப்போது அந்தப் போராட்டத்தில் நானும் பங்குபற்றினேன். ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்களென அந்தப் போராட்டம் பல்வேறு கோணங்களிலும் கிளை விரித்தது.

அப்போது ஓர் ஓவியனாக இந்தப் போராட்டத்திற்கும், மக்களிற்கும் என்ன செய்ய முடியுமென்று நான் சிந்தித்ததன் விளைவுதான் இந்த ஈழ மக்களுடைய உரிமைப் போராட்டத்தை ஓவியமாக வடித்து, அவர்கள் பட்ட இன்னல்களை, அனுபவித்த சித்திரவதைகளை ஓவியமாக வரைந்து மக்கள் மத்தியிலே கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் இந்தப் போராட்டத்திற்கு ஒரு ஆதரவைப் பெற்றுத்தர வேண்டும். அதை உலக மக்கள் மத்தியிலே படைப்பாக்கமாகக் கொண்டு செல்ல வேண்டும். அதன் மூலம் இப்போராட்டம் கூடுதலான கவனத்தைப் பெறும் என்ற அடிப்படையிலேயே அத்தகைய வெளிப்பாடுகளை ஓவியங்களாகத் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகின்றேன். அந்த அடிப்படையில்தான் இன்று உலக அளவில் எது நடந்தாலும் மனிதத்தை ஆதரிக்கின்ற, மனிதத்தைப் பேசுகின்ற குரலாக என்னுடைய ஓவியங்கள் இருந்து வருகின்றன. அடக்குமுறைகள் எந்த ரூபத்தில் இருந்தாலும் அது நிற வெறியாகவோ அல்லது ஜாதி வெறியாகவோ மத ஒடுக்கு முறையாகவோ இருந்தாலும் அத்தகைய ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் குரல் கொடுக்கின்ற அல்லது அவர்களின் உரிமைப் போராட்டத்திற்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்ற ஓர் ஓவியனாக நான் இருக்கின்றேன். அத்தகைய பார்வையை, சிந்தனையை என்னுள் தோற்றுவித்தது ஈழ விடுதலைப் போராட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **தமிழகத்தில் பல கலைஞர்கள் புகழ்மிக்க கலைஞர்கள் இருந்தாலும் ஈழ மக்கள் ஈழவிடுதலைப் போராட்டம் குறித்த ஒரு விழிப்புணர்வு பெரும்பாலும் அவர்களிடம் இல்லாத நிலை காணப்படுகிறது. இது குறித்து, தங்களின் நிலை என்ன?**

முற்றுமுழுதாக அத்தகைய கலைஞர்கள் இல்லையென நாம் ஒதுக்கிவிட முடியாது. ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கின்ற வகையில் தமிழ் நாட்டில் ஓவியர் வீரசந்தானம் மிகப்பெரியளவில் பல ஓவியங்களை வரைந்து காட்சிப்படுத்தி யிருக்கின்றார். அதேபோல் மருது. அவர்போன்று பல ஓவியர்கள் அத்தகைய ஓவியங்களை வரைந்து தமது பங்களிப்புகளை ஆற்றி வருகின்றனர். ஆரம்ப காலகட்டங்களில் பெருமளவில் இல்லாவிட்டாலும் சில ஓவியங்களில் ஈழப்பிரச்சினை குறித்து ஓரிரண்டு ஓவியங்களைச் செய்திருக்கிறார்கள். ஒரு கட்டத்தின் பின்னர் அப்படியான ஓவியங்களை வெளிப்படுத்த முடியாமைக்கு அங்குள்ள அரசியல் சூழ்நிலையையும் காரணமாகச் சொல்லலாம்.

■ **இதன் மூலம் உங்களுக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் எழவில்லையா? அது குறித்து அச்சம் எதுவும் தங்களுக்கு இல்லையா?**

படைப்பு ரீதியாகவும் இயக்க ரீதியாகவும் எமது உணர்வுகளை வெளிப்படுத்துகின்றபோது, எந்தவிதமான அச்சமும் எனக்குக் கிடையாது. ஏனெனில், நான் நியாயத்தின் பக்கம் நின்று குரல் கொடுக்கின்றேன். ஒடுக்கப்படுகின்ற அடக்கப் படுகின்ற மக்கள் பக்கம் நின்றுதான் பேசுகின்றேன். என்றாலும் அதற்கு அச்சுறுத்தல்கள் வரும் என்று எதிர்பார்த்துதான் நான் அதைச் செய்கின்றேன். விளைவுகளை எதிர்பார்க்காமல் எந்தவொரு செயலையும் நான் செய்வதில்லை. எந்தவொரு செயலிற்கும் ஒரு எதிர்வினை உண்டு என்று நான் எதிர்பார்ப்பவன். அப்படிச் சில நேரங்களிலே எனக்கு அச்சுறுத்தல்கள் இருந்ததுண்டு. இருக்கிறது. ஆனால், ஒரு படைப்பாளன் அத்தகைய அச்சுறுத்தல்களைக் கண்டு அஞ்சி ஒடுங்கிவிட முடியாது. உண்மையான படைப்பாளன் துணிவுமிக்கவனாகத்தான் இருக்க வேண்டும். அப்படித்தான் நான் இருக்கின்றேன். ஈழத்தில் நடக்கின்ற பிரச்சினைகளை மட்டுமல்ல, இந்தியாவிலும் உலகமெங்கிலும் நடக்கின்ற அடக்கு முறைகளை எதிர்த்தும் நான் குரல் கொடுக்கின்றேன். வீதிக்கு வந்து போராடுகின்றேன். அடக்குமுறைகள் அரசுகள் அரசு சார்ந்த அமைப்புகள், மதவெறியர்கள், ஜாதி வெறியர்கள் யார் செய்தாலும் அதை எதிர்த்து வீதிக்கு வந்து நான் குரல் கொடுக்கின்றேன்.

இந்த நிலையில் அதற்காக எதிர்வினைகளை நாம் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். எல்லோரும் பயந்து கொண்டு பேசுவதை நிறுத்தி விட்டால் இறுதியில் நியாயத்தை உரத்துச் சொல்வதற்கு யாரும் இல்லாமல் போய்விடுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில உண்மைகளை சிலவேளைகளில் உரத்துச் சொல்லவேண்டி வரும். சிலவேளைகளில் அது தனித்த குரலாகவும் இருக்கக்கூடும். எல்லோரும் இணைந்து ஒரு செயலைச் செய்ய வேண்டுமென நினைத்தால் அந்தச் செயல் காலம் தள்ளிப்போகும். எத்தனை அச்சுறுத்தல்கள் வந்தாலும் அவை மேலும் என்னைச் சிந்திக்கவும் செயற்படவும் தான் தூண்டுகிறது.

■ ***ஈழத்தின் ஏனைய கலைத்துறையுடன் ஒப்பிடுகையில் ஓவியக் கலைத்துறை வீழ்ச்சியடைந்து காணப்படுவதாகக் கருதப்படுகின்றது. இத்துறையில் மாணவர்களும் பெரியளவில் ஆர்வம் காட்டுவதில்லை என்ற குறையும் உள்ளது. இக்குறைகளை நீக்கி இக்கலையை வளர்ப்பது குறித்துத் தங்களது ஆலோசனை என்ன?***

எந்தவொரு கலையும் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் அந்தக் கலையை ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முன்வரவேண்டும். அவர்களுக்குப் பயிற்சி வழங்க ஆசிரியர்களை உருவாக்க வேண்டும். அத்தகைய சிறந்த ஆசிரியர்களை உருவாக்குவது முதற்கடமையாக உள்ளது. அத்தகைய ஆசிரியர்களை உருவாக்கினால் நல்ல மாணவர்களை உருவாக்குகின்ற சூழல் உருவாகும். நல்ல மாணவர்கள் உருவானால் நல்ல ஓவியர்கள் வெளிவர அது துணை புரியும். இந்தியாவில் பல்வேறு அரசு, தனியார் ஓவியக் கல்லூரிகள் இருக்கின்றன. அங்கு ஓவியக்கலை கற்பிக்கப்படுகின்றது. பல்வேறு பல்கலைக்கழகங்கள் அதை அங்கீகரிக்கின்றன. இப்படிப் பல்வேறு நிலைகளில் வளர்கின்ற இக்கலை, தேக்க நிலைகளை எட்டியிருக்கின்றது. அத்தகைய எந்த வளமும் இல்லாத இந்த நாட்டில் அக்கலை வீழ்ச்சி யடைந்திருக்கின்றதென்பது தவிர்க்க முடியாததுதான். அதை மாற்றுவதற்கு ஓவியக் கலையைப் பயிற்றுவிக்கும் பல்வேறு கல்வி நிறுவனங்களை நாம் தோற்றுவிக்க வேண்டும்.

முதற்கட்டமாகப் பயிலரங்குகளைப் பல இடங்களில் பல்வேறு தரப்பினருக்கும் நடாத்தி மாணவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும், திறமைகளை வளர்த்துக் கொள் வதற்கும் ஊக்குவிக்க வேண்டும். அப்படிச் செய்வதன் மூலம், நல்ல சிந்தனையுள்ள திறமையான ஓவியர்களை நாம் இந்த மண்ணிலே உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. குறிப்பாக, ஈழத்தமிழர்களுடனான 25 வருட கால உறவு எனக்குண்டு. இந்த மண்ணிலே நிறைய, நல்ல சிந்தனையுள்ள இளைஞர்கள் இருப்பதை நான் பார்க்கின்றேன். வீரியம் மிக்க திறமை மிக்க இளைஞர்கள் இந்த மண்ணிலே இருக்கின்றார்கள். அவர்களுக்கு நல்ல வழிகாட்டல்களும் தேவை. வழிகாட்டல்களை நாம் செய்தால் அவர்களிடமிருந்து நல்ல பயனை இந்த மண்ணில் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **நீங்கள் ஒரு கலை இலக்கியவாதி என்ற வகையில், இருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட ஈழத்தில் கலை இலக்கியத்துறையையும் கொடிய யுத்தத்தின் பின்னரான தற்போதைய ஈழத்துக் கலை இலக்கியத்துறையையும் எவ்வாறு பிரித்து நோக்குகிறீர்கள்?**

இருபது ஆண்டுகளுக்கு உட்பட்ட ஈழத்துக் கலை இலக்கியம் பற்றித்தான் அதிகம் நான் அறிந்திருக்கிறேன். அதற்குமுன் இருந்த கலை இலக்கிய வளர்ச்சி குறித்து எனக்கு அதிகம் தெரியாது. சிலவற்றை நான் படித்திருக்கின்றேன். சில கலை இலக்கியவாதிகளின் பேட்டிகளைக் கேட்டும் படித்தும் இருக்கின்றேன். ஆனால் கடந்த 25 ஆண்டுகளாக இத்தகைய இலக்கியத்தை, கவிதைகளை, நாவல்களைப் படிக்கின்றேன். அதிகமாக இதை உள்வாங்கியிருக்கின்றேன். ஒரு போராட்டக் கலை இங்கு வளர்ந்திருக்கின்றது. கறுப்பின நாவல்கள், கவிதைகள் எவ்வாறு அவர்களது போராட்டத்திற்கு வலுச் சேர்த்ததோ, பாலஸ்தீன விடுதலைப் போராட்டக்கவிதைகள் எப்படி அந்த மண்ணின் விடுதலையில் பங்கு வகிக்கின்றதோ அதைப் போல ஈழவிடுதலைக் கவிதைகளும், சிறு கதைகளும், எழுத்துகளும் ஈழ விடுதலைப் போராட்டத்தில் பெரும்பங்கு வகித்திருக்கின்றன.

இன்று உலகளவில் மிகவும் போற்றக் கூடிய படைப்புகளை ஈழத்தறிஞர்கள் எழுத்தாளர்கள்தான் படைத்திருக்கின்றார்கள். உலகளவில் இருக்கக் கூடிய போராட்ட இலக்கியங்களோடு ஈழத்து இலக் கியங்களையும் நாம் ஒப்பிட முடியும். உயர்ந்து நிற்கக் கூடிய இலக்கியமாக அவை இருக்கின்றன. அந்த வகையிலே மிகப்பெரிய ஒரு நம்பிக்கையை ஈழத்து இலக்கியம் எனக்குத் தந்திருக்கின்றது. போராட் டத்தில் போராட்டச் சூழலில் தான் நல்ல இலக்கியம் பிறக்க முடியும், அந்த சூழலில்தான் நல்ல கவிஞர்கள் உருவாக முடியும் என நான் நம்புகிறேன். அந்த அடிப்படையில் நல்ல இலக்கியவாதிகளை, நல்ல போராளிக் கவிஞர்களை, கலைஞர்களை இந்த மண் பெற்றிருக்கிறது.

■ **ஈழத்துக் கலைஞர்களையும் தமிழகத்தின் கலைஞர்களையும் நீங்கள் எவ்வாறு ஒப்பு நோக்குகிறீர்கள்?**

இரண்டு பேரையும் அடிப்படையில் நான் தமிழ்க் கலைஞர்களாகவே பார்க்கிறேன். ஆனால் தமிழகத்தில் இருந்து கொண்டு ஈழத்துத் தமிழ்க் கலைஞர்கள் போல் இருக்கின்றவர்களும் உள்ளார்கள். ஈழத்தில் இருந்து கொண்டு கலைஞர்கள் என்று கூறிக்கொண்டு பத்தாம்பசலித்தனத்தைப் போதிக்கின்ற கலைஞர்களும் இருக்கிறார்கள். எந்த மண்ணில் இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல. அவர்கள் எப்படிச் செயற்படுகின்றார்கள் என்பதும் முக்கியம். அந்த அடிப்படையில் எனக்கு ஈழத்துக் கலைஞர்களை எப்படி ஏற்றுக் கொள்ள மனமுண்டோ அப்படிப் புறக்கணிக்கக் கூடிய சிலரும் இருக்கிறார்கள். இதுபோன்ற மிக மோசமான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தியல்புகளை விதைக்கக் கூடிய கலைஞர்களும் இருக்கிறார்கள். இரு தரப்பிலுமே நல்லதும் இருக்கிறது; கெட்டதும் இருக்கிறது. எது தமக்குச் சரியென்று பட்டதோ அதை வெளிப்படுத்துகின்ற கலைஞர்களை எப்போதுமே நான் ஆராதிப்பேன்.

**■ ஈழப் பிரச்சினைகள் குறித்து, படைப்புகளைப் பல தமிழகக் கலைஞர்கள் வெளிப்படுத்தும் போதும் அங்குள்ள மக்களிடம் ஈழப் பிரச்சினை குறித்த போதிய விழிப்புணர்வு இல்லாத நிலை காணப்படுகிறதே?**

இந்தக் கருத்தை நிச்சயமாக நான் ஏற்க முடியாதவனாக இருக்கிறேன். தமிழக மக்கள் என்றுமே ஈழப்பிரச்சினைகளிலே தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் இதனைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். ஈழப் போராட்டம் ஒவ்வொரு முறையும் முன்னெடுக்கப்படுகின்றபோது முன்னேறிச் செல்கின்றபோது அதனைக் கொண்டாடுவதற்கு அவர்கள் எப்போதுமே தயங்கியதில்லை. மிகப் பெரியளவில் அவற்றை உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்து மக்கள் அழிக்கப் படுகின்ற போது அவர்களுக்கு அவலங்கள் நேரும்போது அதற்காக அந்த மக்கள் அழுகின்ற நிலையை நான் பார்க்கின்றேன். ஆனால், சில அரசியல் காரணங்களுக்காக சில அரசியல் கட்சிகள் அந்த மக்களை வழிநடத்தக்கூடிய தலைவர்கள் பின்தங்குகின்ற ஒரு நிலையில்தான், அந்த மக்கள் தன் எழுச்சியாக எழுந்து குரல் கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்களே ஒழிய, வேறு எந்தக் காரணமும் இருப்பதாக நான் கருதவில்லை. தமிழக மக்கள் ஈழமக்களுடைய விடுதலையை என்றைக்குமே ஆதரிக்கின்றவர்களாக இருக்கின்றார்கள். இன்று தமிழகத்திலே சூழல், நிலைமை மாறிவருகின்றது. அரசியல் சூழல்கூட மாறியிருக்கிறது. விழிப்புணர்வு மக்களிடம் இருக்கிறது. அதை வழிநடாத்தக் கூடிய தலைவர்கள் தான் சில நேரங்களிலே தடுத்து விடுகிறார்கள். அதைத்தான் தவறாக நான் கருதுகின்றேன்.

**■ ஈழத்தமிழர்களின் புலப்பெயர்வுகளினால் ஈழ, கலை இலக்கிய உலகில் ஏற்பட்டுள்ள சாதக பாதகங்கள் குறித்து?**

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமிழ்க் கலை இலக்கியங்களை உலகளாவிய ஒன்றாக மாற்றியிருக்கிறார்கள். அது ஈழத் தமிழர்களால் மட்டும்தான் சாத்தியப்பட்டிருக்கிறது. ஈழப்போராட்டம் என்ற ஒன்று இல்லையென்றால் தமிழ்ப் போராட்டம் ஒன்று இல்லையென்றால் தமிழ் இலக்கியம் உலகளாவிய ரீதியில் எட்டியிருக்குமா என்றுகூட நான் நினைப்பதுண்டு. ஈழப் போராட்டம் உலகளாவிய ரீதியல் தமிழ் இலக்கியத்தை எடுத்துச் சென்றுள்ளது. அதற்கு அந்த மக்கள் கொடுத்த விலை அதிகம். இன்று உலகளாவிய நிலைக்கு என்னுடைய ஓவியங்கள் சென்றடைந்திருக்கின்றன என்றால் அதற்கு ஈழப்போராட்டம்தான் முக்கிய காரணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **ஈழத்துக் கலை இலக்கியவாதிகளுக்கு நீங்கள் ஒரு கலைஞர் என்ற வகையிலே என்ன கூற விரும்புகிறீர்கள்?**

ஒரு கலைஞன் ஒரு சமூகப்போராளி என்ற வகையில் ஒரு போராட்ட மண்ணில் இருக்கக் கூடிய கலைஞர்கள் அந்தப் போராட்டத்தை வலுப்படுத்துவதற்கான பணிகளைச் செய்யவேண்டும். அந்தப் போராட்டத்தைக் கூர்மையடையச் செய்வதற்கான ஆக்கங்களை வெளிப்படுத்த வேண்டும். அதுதான் அந்தப் படைப்பாளிகள் இந்த மண்ணிற்கும் மக்களுக்கும் செய்யக்கூடிய ஒன்றாக இருக்கும். அப்படியான படைப்பை இந்த மண்ணின் கலைஞர்களிடமும் படைப்பாளிகளிடமும் இருந்து நிறைய எதிர்பார்க்கின்றேன்.

இறுதியாக, தமிழக மக்கள் என்றும் ஈழத் தமிழர்களின் பக்கம் நிற்கின்றார்கள் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ளுங்கள். என்றைக்கும் அந்த மக்கள் உங்களையோ உங்கள் போராட்டத்தையோ கைவிட மாட்டார்கள். நிச்சயமாக உங்கள் விடுதலைப் போராட்டத்தில் ஒரு நியாயம் இருக்கிறது. அந்த நியாயத்தின் பக்கம் தமிழக மக்கள் நிற்கிறார்கள். அதற்கான குரல்கள் அங்கு எழுந்து கொண்டிருக்கின்றன. குரல்கள் மட்டுமல்ல, தேவைப்படுமானால் கரங்களும் உயரும். இதைத்தான் இந்த மக்களுக்கு உறுதியாக நான் கூற விரும்புகிறேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணைப்பு-2

## நாம் எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விட, நாம் எதைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்...

நாம் எதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதை விட, நாம் எதைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும்... என்கிறார் தமிழகத்தின் பிரபல ஓவியரும் ஈழத்தமிழர் அபிமானிகளில் ஒருவருமாகிய புகழேந்தி.

ஈழத்தமிழர்களின் போராட்டத்தையும், அவலங்களையும் தனது ஓவியப்படைப்புகள் மூலம் ஆழமாகப் பதிவு செய்து வருபவர் புகழேந்தி.

அழுத்தங்கள் நெருக்குதல்களுக்கு அஞ்சாமல் தமிழகத்தில் வாழ்ந்து கொண்டே ஈழத் தமிழர்களுக்காகவும், அவர்களது தலைமைக்காகவும் நியாயத்தின் பக்கம் நின்று தனது ஓவிய மொழியில் ஓங்கிக் குரல் கொடுத்து வருபவர்.

தனது ஓவியப்படைப்புகளோடு ஈழ மண்ணில் காலடி பதித்திருக்கும் புகழேந்தி ஓவியக் கண்காட்சிகளையும் ஓவியப் பயிலரங்குகளையும் இங்கே நடத்தி வருகிறார்.

வன்னியில் தங்கியுள்ள அவரைச் சந்தித்தோம். அவர் எம்மோடு மிகவும் உணர்வு பூர்வமாக உரையாடினார்.

உதயனுக்கு அவர் வழங்கிய சிறப்புச் செவ்வி இது.

■ ***தங்களை ஓவியங்களின் ஊடாகவே அறிந்திருக்கிறோம். அந்த வகையில் தங்களது இளமைக் காலத்தை அறிய விரும்பு கின்றோம்...***

என்னுடைய குழந்தைப் பருவம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள தும்பத்திக் கோட்டை. இந்தக் கிராமத்தில் தான், எனது இளமைக் காலம் கழிந்தது. கிராமத்து வாழ்க்கை என்பது மிகவும் முக்கியமான வாழ்க்கை. வயல்வெளிகள் சார்ந்த விவசாய வாழ்க்கை. என்னுடைய பள்ளிப்பருவமும் அந்தச் சூழலில்தான் கழிந்தது. பள்ளிக் காலங்களில் நிறைய ஓவியங்களை வரைந்திருக்கிறேன். அப்போது, எதை ஓவியம் என நினைத்தேனோ அதையெல்லாம் வரைந்தேன். குறிப்பாக மலர்கள், செடிகள், இயற்கைக் காட்சிகள் இப்படி நிறைய ஓவியங்களை வரைந்திருக்கிறேன். இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் அந்தக் காலத்தில் விளக்குக் கம்பங்கள், சுவர்கள், மணல்பரப்புகள் இவையே எனக்குக் களமாக அமைந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரிக்கோடுகளும் - கரித் துண்டுகள், பச்சை இலைகளும் எனக்கு வரைபொருள்களாக அமைந்தன. இதுதான் எனது அடிப்படை. பள்ளிப்பருவம் எல்லாம் முடிந்த பிறகு கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் மாணவனாக என்னை இணைத்தேன்.

■ ***ஓவியத்தில் யாரை ஆதர்சமாகக் கருதுகிறீர்கள்?***

எனக்கு ஆரம்ப நிலையில் ஓவியத்தில் ஆதர்சமாக யாரும் இல்லை. இன்னும் முக்கியமாகச் சொல்ல வேண்டும் என்றால், அந்தக் காலங்களில் இதழ்களில் வந்த ஓவியங்கள் என்னை மிகவும் தூண்டின. கதைகளுக்கு, கவிதைகளுக்கு ஓவியங்கள் - குறிப்பாகக் கதைகளுக்காக வந்த ஓவியங்களே என்னை மிகவும் ஈர்த்தன. அதைப்பார்த்து நிறைய ஓவியங்கள் வரைந்தேன். பிற்காலத்தில் அதெல்லாம் எனக்கு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. ஆரம்பத்தில் என்னைத் தூண்டியதுதான். அதை நான் மறுக்க வில்லை. பிறகு ஓவியன் என்ற நிலையை நான் எட்டிய பின்பு, மிகவும் சாதாரண நிலையில் அதை நான் பார்க்க வேண்டியதாயிற்று. ஆனந்த விகடன், குமுதம் போன்ற இதழ்களில் வெளிவந்த ஓவியங்கள் ஆரம்ப காலத்தில் எனக்கு மிகவும் தூண்டுதலாக அமைந்தன. பிறகு படைப்பு ரீதியில் நான் சுயமாக ஒரு படைப்பை உருவாக்கிய நிலையில் யாருடைய தாக்கமும் இல்லாமல்தான் என்னுடைய ஆக்கங்கள் உருப்பெற்றன.

குறிப்பாக, ஈழப்போராட்டம் மிக முக்கியமானதொன்றாக இருந்தது. 83இல் ஓவியக் கல்லூரியில் மாணவனாக இணைகின்ற நேரத்தில் பெரியதொரு மாணவர் போராட்டம் அங்கே வெடித்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். லட்சக்கணக்கான தமிழர்கள் தமிழகம் வந்து கொண்டிருந்தார்கள். மரணஓலம் எங்கள் காதுகளில் கேட்டது. இந்த ஓலங்கள் எனது உறக்கத்தைத் தடுத்து நிறுத்தியது. பல இரவுகள் அந்த நிலையிலேயே இருந்தேன். அப்பொழுது அங்கு நடைபெற்ற மாணவர் போராட்டத்தில் என்னையும் ஒருவனாக இணைத்தேன். பிறகு ஓர் ஓவியனாக என்ன செய்யமுடியும் என்று நான் நினைத்தபோதுதான் போராட்டக் காலத்தில் நடைபெற்ற இனப் படுகொலைகளை, தமிழர்கள் சந்தித்த இன்னல்களை துயரங்களை ஓவியமாக வரைய வேண்டுமென்று நான் ஓவியப்படைப்புகளை ஆக்கத் தொடங்கினேன். அப்படித்தான் எனது படைப்பாக்கம் என்பது தொடங்கியது. அதற்கு முன்பு நான் இயற்கைக் காட்சிகளையும், மலர்களையும், செடிகளையும், கொடிகளையும் வரையத் தொடங்கினேன். அதன் பின்புதான் மனிதத்தை - மனித வெளிப்பாடுகளை - மனிதன் படுகின்ற இன்னல்களை - துயரங்களை - வெளிப்படுத்த வேண்டும் என்று என்னைத் தூண்டியது. உலகளவில் எந்த மூலையில் எது நடந்தாலும் உடனடியாகத் துன்பப்படுகின்ற - ஒடுக்கப்படுகின்ற மனிதர்கள் பக்கம் ஆதரவுக் குரலாக எனது ஓவியம் அமைந்தது. அதற்கு ஈழப்போராட்டம்தான் முக்கிய காரணம். அது என்னை, ஒரு போராளி ஓவியனாக மாற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**■ தமிழ்நாட்டில் பலருடைய ஓவியங்களை நாங்கள் பார்த்திருக்கிறோம். தங்களது ஓவியங்கள் மனிதனது அக உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன. இவற்றில் பெரும்பாலும் மனிதர்களையே பயன்படுத்துகிறீர்கள். இது பற்றி...**

என்னுடைய ஓவியங்களில் நான் மனிதனை, மனிதத்தைப் பற்றிப் பேசுகிறேன். பேசுகின்றபொழுது உடல் மொழியாக மனிதன் இருக்கிறான். எனக்கு மொழியாக, பல்வேறு கூறுகளை நான் பயன்படுத்துகிறேன். ஓவியத்தில் கோடுகள் ஒரு மொழி, இடம் ஒரு மொழி, நிறம் ஒரு மொழி. இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு மொழியாக இருக்கிறது. ஒரு குறியீடாக இருக்கிறது. அப்படிப் பயன்படுத்துகின்ற பொழுது நான் பேசுகின்ற உள்ளடக்கம் என்பது மனிதத்தைப் பற்றியது. அதற்கு நான் மனித வடிவங்களையே உகந்ததொரு மொழியாகப் பயன்படுத்துகின்றேன். அதுமட்டுமல்லாமல், உடல்கூறு மொழியாகவும், அது உடல் சார்ந்தும் பேசும். அந்த மொழி என்பது நிறங்களைத் தாண்டி வடிவங்களைத் தாண்டி, கோடுகளைத் தாண்டி உடல் மொழிபேசும். நான் கையாளுகின்ற உருவங்கள்- அதனை உள்வாங்கிக் கொள்வதன் மூலமே என்ன சொல்ல வருகின்றேன் என்பதை ஆழமாக, அழுத்தமாகச் சொல்லுகின்ற ஒரு நிலையை இந்த ஓவியங்கள் உருவாக்குகின்றன. அதற்குத்தான் மனித உருவங்களை நான் பயன்படுத்துகின்றேன். அதுவே ஒரு மொழியாக எனக்கு இருக்கிறது. அப்படித்தான் தொடர்ந்து எனது ஓவியங்கள் இருந்தன.

**■ தங்களது ஓவியங்கள் புரிதல் சிக்கலை ஏற்படுத்துவதில்லை. தமிழகத்தின் பல ஓவியர்களின் ஓவியங்கள் புரிவதில்லை என்ற கருத்து இங்குக் காணப்படுகிறது. இது குறித்து என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இதை இரண்டு வகைகளில் பார்க்கலாம். என்னுடைய ஓவியங்களைப் பற்றிப் பேசுவது ஒரு வகை. பிறருடைய ஓவியங்களைப் பற்றிப் பேசுவது இன்னொரு வகை. இதைப்பற்றிப் பேசும்போது நாம் கவனமாகப் பேசவேண்டும். காரணம் என்னவென்றால் ஓவியங்களில் பல்வேறு வகைகள் உண்டு. பல்வேறு வகையான போக்குகளும் உண்டு. நம்முடைய போக்கு என்பது வேறு. நாம் மக்களுக்காக மக்களுடைய பிரச்சினைகளை மக்களுடைய மொழியில் பேச வேண்டும் என்று கருதுகின்றோம். அதுதான் நமக்கிருக்கும் தனித் தன்மையெனப் பார்க்கின்றோம். ஆனால், இன்னும் பல்வேறு வகை. அதுதான் இன்று அதிகபட்சமான ஒன்றாக இருக்கின்றது. அது அவர்களுடைய அகவுணர்வுகளை வெளிப்படுத்துகின்ற வெளிப்பாடாக ஓவியங்கள் சென்று கொண்டிருக்கின்றன. அது ஓர் ஊடகமாக இருக்கின்றது. உருவங்களும் இருக்கின்றன. அதை ஓவிய மொழியால் சொல்ல வேண்டுமானால் உருவம் சார்ந்த அருவம், உருவத்தோடு அருவம், உருவ அருவம் என்று சொல்லலாம். அல்லது வெறும் அருவம். என்னுடைய ஓவியங்கள் வெறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவம். அதில் உருவமும் உண்டு. அருவமும் உண்டு. உள்ளடக்கம் என்பது மனிதம். அரசியல் இப்படி இருக்கிறதென்றால், வடிவம் என்பது அருவமும், உருவமும் சார்ந்தது. உருவ அருவம் சார்ந்தது. இப்படி உருவத்தோடுதான் எனது ஓவியம் இருக்கிறது. அதுதான் என்னுடைய மொழி. மக்களுக்கு எளிதாகப் புரிகின்றது. மக்களுக்குப் புரிகின்ற மொழியாக இது இருக்கின்றது. அதனால்தான் அதை நாம் கையாளுகின்றோம். ஆனால் பல ஓவியர்களது ஓவிய வெளிப்பாடு அருவம் சார்ந்து வெளிப்படுகின்றது. அது ஒரு போக்கு. அதனைப் பல்வேறு மக்கள் புரிந்து கொள்வதில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அது உண்மைதான். அதில் எனக்கும் மாற்றுக்கருத்து கிடையாது. ஆனால் பல்வேறு போக்குகளில் அவர்களுக்கு மக்கள் பற்றிய புரிதல் இல்லை. அவர்களுக்கு யாருக்காக ஓவியம் வரைகின்றோம் என்ற தெளிவில்லை. அவர்கள் தங்களது உணர்வுகளை வெளிப்படுத்துவதைத்தான் படைப்பாக்கமாகக் கருதுகிறார்கள். அவர்கள் செய்கிறார்கள். அவ்வளவு தான். அது மக்களிடம் செல்லவேண்டும் என்று கருதுகிறவர்களுக்குத்தான் இந்தப் பிரச்சினையே ஒழிய, அதைப் பற்றிக் கருதாதவர்களுக்குப் பிரச்சினையும் இல்லை; கவலையும் இல்லை. ஆனால் நாம் ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். கலை இலக்கியங்களில் எப்பொழுதுமே பல்வேறு போக்குகள் இருக்கின்றன. எந்தப் போக்கை மக்கள் அங்கீகரிப்பார்கள், எந்தப் போக்கை மக்கள் நிராகரிப்பார்கள் என்பது எமக்குத் தெரியும்.

■ **உங்களுடைய எல்லா ஓவியங்களிலும் மனிதனுடைய முகம் இருள் படர்ந்ததாக இருக்கிறது. நீங்கள் எப்படி ஈழப்போராட்டத் தினுடைய அவலங்களை உள்வாங்கி அதைத் தக்கவைத்துக் கொண்டு ஓவியங்களை வரைகிறீர்கள்?**

***(சிறிது நேர மௌனத்திற்குப் பின் கண்கள் கலங்கிப் பதிலளிக்கிறார்)***

83இல் இருந்து பல்வேறு தகவல்கள் செய்திகள், புகைப்படங்கள், வீடியோக் காட்சிகள் அகதிகளாகத் தமிழகம் வந்த மக்களது வாழ்க்கை இதெல்லாம் என்னை மட்டுமல்ல, தமிழகத்தில் உள்ள எல்லா மக்களையும் பாதித்தன. இது ரொம்ப நல்ல உச்சத்தை அடைய வைத்தது. இந்தப் போராட்டம் என்பது எங்களுடைய சகோதரர்கள், சகோதரிகளுடைய விடுதலை சம்பந்தப்பட்டது என்ற உணர்வு எப்பொழுதுமே எமக்குண்டு. இங்கே அடி ஒன்று விழுந்தால் எங்களுக்கு வலிக்கும். அப்படித்தான் நாங்கள் பார்த்தோம். எனக்கும் அந்த உணர்வு அதிகமாக இருந்தது. ஒவ்வொரு நிகழ்வும் இங்கு நடைபெறும் பொழுது அதனை அங்கு நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். அதைப் பற்றியதான ஒரு முடிவை நோக்கி ஓர் ஏக்கம் எங்களுக்கு உண்டு. எங்களது உடல் அங்கிருக்கும் உணர்வுகள் எல்லாம் இங்கிருக்கும். இந்த மண்ணுக்கு நான் வந்ததில்லை. இந்த மக்களுடைய வாழ்க்கையோடு 23 வருடங்களாக நான் ஓர் ஒட்டுறவோடு வாழ்ந்தேன். அதனால் தான் எந்த ஒரு நிகழ்வினையும் 84,85 அந்தக் காலகட்டத்தில் நடந்த நிகழ்வுகள் ,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திகள், விடயங்கள் அதன் பிறகு இந்திய அமைதிப்படை இங்குவந்து புரிந்த அட்டூழியங்கள் அந்த நேரங்களில் திலீபன் உண்ணாவிரதம் இருந்து இறந்தது. இப்படி அதைத் தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகள் பாதிப்புகள் எல்லாவற்றையும் நான் ஆழமாகப் பார்த்துக்கொண்டே இருக்கிறேன். எனக்கு வந்த ஓர் அழுத்தமான நம்பிக்கை என்னவென்றால், நிச்சயமாக இந்தத் தேசம் ஒரு நாள் விடுதலை பெறும் என்கிற நம்பிக்கை. அதற்கு நம்மாலான சிறு பங்களிப்பு; அது நமக்கு இயன்றதொன்று. அது நமக்குக் கிடைத்த ஆயுதமாக இருக்கக் கூடியதாக ஓவியத்தில் அதை வெளிப்படுத்த வேண்டும் என்பதுதான் எனது விருப்பம். தொடர்ந்து நான் இந்தப் போராட்டத்தோடு மக்களோடு ஒன்றிணைந்ததால் எனக்குக் கொஞ்சம்கூட மாறுபட்டோ, துண்டித்துக் கொண்டோ போக முடியவில்லை. அதுதான் இந்தப் போராட்டத்தோடு, மக்களோடு, என்னை இணைத்துக் கொள்ள முடிந்தது. அதனால்தான் என்னுடைய உணர்வுகள் ஒன்றிப்போயின.

■ ***உங்களுடன் உரையாடக் கிடைத்தது மிகப்பெரிய சந்தோசம். எங்களுக்காகத் தமிழகத்தில் இருந்து குரல் கிடைக்கும் போதெல்லாம் நாம் சந்தோசப்படுவோம். ஏனென்றால் நாம் தனித்து விடப்படவில்லை. ஈழப்போராட்டத்தைத் திரைப்படத் தயாரிப்பாளர்கள் வெறுமனே வணிக ரீதியாகவே கருதுகிறார்களே? (தெனாலி- மாபெரும் மனிதத் துயரை நகைச் சுவையாக மலினப்படுத்தியது)***

அதைத்தான் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். எந்த ஊடகங்கள், கலைவடிவங்கள் இந்தப் போராட்டத்தையும், மக்களையும் எந்த வடிவத்தில் கொச்சைப்படுத்துகின்றதென்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும். யாரை நாம் அடையாளம் காண வேண்டும் என்ற ஒரு தெளிவான பார்வை வேண்டும். அதுதான் நம் தமிழரிடம் இல்லையென்ற வருத்தம் எனக்கு உண்டு. ஈழத்தமிழரைச் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையில் தமிழர்களை நான் பிரித்துப் பார்க்கவில்லை. உலகத் தமிழர் பொதுவாக உணர்ந்து கொள்ள வேண்டியது. நாம் எதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை விட, நாம் எதைப் புறக்கணிக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும் என்பதை நாம் போகுமிடமெல்லாம் சொல்வதுண்டு. நாம் ஏமாந்து கொண்டு போகிறோம். நம்மை எளிதாக ஏமாற்றி விடுகிறார்கள். நாம் ஏமாறக் கூடாது. ஏமாறுவதில் இருந்து விழிப்பாக இருப்போமானால் நம்முடைய வாழ்க்கை என்பது நம்முடைய கையில் இருக்கிறது. இல்லையென்றால் நம்முடைய வாழ்க்கை வேறொருவர் கையில் இருக்கும். நீங்கள் குறிப்பிட்ட தெனாலி, கன்னத்தில் முத்தமிட்டால் போன்ற படங்கள் பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் வருவது அல்ல. அவர்களுக்கு அரசியல் தெரியாது. அவர்களுக்கு அது தேவையில்லை. அவர்களுக்கு உள்ள ஊடகத்தை வைத்து அவர்கள் பிழைத்துக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ **தமிழக ஆட்சிப்பீடம் ஈழத்தமிழர்களுக்கு எப்போதுமே சாதகமாக இருப்பதில்லை. இப்படியான நிலையில் தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகள் எப்படியிருக்கின்றன?**

தமிழ்நாட்டில், வெளியில் பேசமுடியா விட்டாலும்கூட, உள்ளுக்குள் அழுகின்ற மக்களது நிலை நிறைய உண்டு. கண்ணீர் மிக வலிமையானது. அது ஒருநாள் வெடிக்கும். இந்த வெளிப்பாட்டில் தான் நான் இருக்கின்றேன்.

■ **தமிழ்நாட்டில் பல கலைஞர்கள் இருக்கும்போது உங்களைப் போன்றவர்களால் மட்டுமே ஈழம் சார்ந்த படைப்புகளை, தடைச்சட்டங்கள் அழுத்தங்கள் மத்தியிலும் வெளிக்கொணர முடிகிறதே?**

என்னைப் பொறுத்தவரையில் ஒரு படைப்பாளனுக்குச் சுதந்திரம் இருக்கிறது என நான் கருதுகிறேன். அந்தச் சுதந்திரத்தைத் தடுப்பதற்கு நான் என்றும் அனுமதிக்க மாட்டேன். இந்த ஓவியங்களை ஈழத்தில் மட்டுமல்ல- தமிழ்நாட்டிலும் வைத்திருக்கின்றேன். தமிழ்நாட்டில் மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. இன்று மட்டுமல்ல. 83இல் இருந்து 2003 வரை வரையப்பட்ட ஓவியங்கள் அனைத்தையுமே காட்சிப் படுத்தியிருக்கின்றேன். அது மட்டுமல்ல; ஒரு படைப்புக்கான அங்கீகாரம் நிச்சயமாக இருக்கிறது. எந்தப் படைப்பையும் யாரும் நிச்சயமாக வெளிப் படுத்துவதைத் தடுக்கமுடியாது. யாருடைய வாயையும் பூட்டுப் போடமுடியாது. குறிப்பிட்ட காலம் வரைக்கும் தடுத்து வைக்கலாம். ஆனால் தடுக்கத் தடுக்க அழுத்தம் அதிகமாகி ஒரு நாள் வெடிக்கும். அதுதான் நடக்கும். தமிழ்நாட்டில் மாநகரங்கள், நகரங்கள், கிராமங்கள் எனப் பல்வேறு இடங்களில் இவை கண்காட்சியாக வைக்கப்பட்டிருக்கிறது. நான் ஈழத்துடன் மட்டும் நின்று விடவில்லை. உலகத்தில் நடைபெறுகின்ற அத்தனை வகையான ஒடுக்கு முறைகளையும் எதிர்க்கவும் நாம் எல்லா விதமான மனித விடுதலையையும் ஆதரிக்கிறோம். உலகத்தில் அடக்கப்படக் கூடிய அத்தனை மக்களும் விடுதலை பெற வேண்டும் என்று நாம் குரல் கொடுக்கின்றோம். நிறவெறி, மத வெறி, மொழித்திணிப்பு இப்படிஎல்லாவற்றையும் எதிர்க் கின்றோம். எதிர்க்கும்போதுதான் கூடுதல் பலம் உருவாகும்.

நமக்கென்று ஓர் அரசியல் உண்டு. அந்த அரசியலில் உள்ள ஆழம், அழுத்தம் இதெல்லாம் பக்கபலமாக இருக்கிறது. பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அவையெல்லாம் எனது ஓவிய செயல்பாடுகளுக்குத் துணை புரிகின்றன.

ஒரு படைப்பை மிக எளிதாக முடக்கிவிட வேண்டும் என நினைத்தால் முடியாது. அதற்கு முடங்குகின்றவன் நான் அல்லன். என்னை முடக்கிவிட முடியும் என்று நான் நம்பவில்லை. இன்றைக்கு ஓவியக் கண்காட்சியை உலகம் முழுவதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்துகிறோம். நான் இலங்கைக்கு வந்து ஓவியக் கண்காட்சி நடத்துவது எல்லோருக்கும் தெரியும். ஆக, ஒரு படைப்பை மக்கள் மத்தியில் வெளிப் படுத்துவதற்கு ஒரு தடையும் இருக்க முடியாது. அதில் வெளிப்படையாக இருக்க வேண்டும். அந்தப் படைப்பில் உண்மை, நேர்மை இருக்கிறது. இந்த உண்மையும் நேர்மையும் என்னை வழிப்படுத்துகிறது.

■ ***தமிழ்நாட்டில் இருக்கும்போதும் ஈழத்துக்கு வந்து இங்குள்ள மக்களோடு கதைக்கும்போதும் உங்களது உணர்வு நிலை எப்படி இருக்கிறது?***

ஒரே உணர்வுதான் இருக்கிறது. எனக்கு இருவேறு உணர்வுகள் கிடையாது. இந்த மண் எனக்குப் புதியதாக இருக்கலாம். இந்த மக்கள் என்றைக்கும் பழையவர்கள். இந்த மக்கள் போராட்டத்தோடு 23 வருட கால உறவு இருக்கிறது. இங்கு வந்ததில் ஊடகங்களில் வெளிவராத சில தகவல்களைப் பெறமுடிந்தது.

■ ***கலைகளில் பல்வேறு வகைகளில் இருந்து மரபு ஓவியத்தில் இருந்து தங்களது ஓவியம் மாற்றமடைந்திருக்கிறது. இந்த ஓவியத்தின் வளர்ச்சி எது சார்ந்து நிகழ்ந்திருக்கிறது?***

பொதுவாக சிறுகதை, கவிதை போன்றவற்றிற்கு ஊடக மொழிவேறு. ஓவியம் ஒரு காட்சி வழியான ஊடகமொழி. இதற்கென்று ஒரு மொழியில்லை. உலகத்தில் உள்ள பொதுமொழியாகத்தான் இதைப் பார்க்கிறோம். பாறை ஓவியங்கள் மூலம் கற்கால மனிதன் தனது வாழ்க்கை முறையைப் பிரதிபலித்தான். தன்னுடைய சகமனிதனிடம் பேசுவதற்கு இதைப் பயன்படுத்தினான். அவனிடம் மீன்பிடித்தல், வேட்டையாடுதல் போன்ற வாழ்வு சார்ந்த ஓவியங்கள் தான் முதலில் இருந்தன. பின்பு அந்தச் சூழ்நிலையில் வாழ்ந்த வாழ்க்கைமுறை, குகை ஓவியங்களில் இருந்தது.

இன்று அஜந்தா, எல்லோரா ஓவியத்தில் எதைப் பார்க்கிறோம் என்றால் வாழ்க்கையைப் பதிவு செய்திருப்பதைத்தான். ஆக, அதன் தொடர்ச்சியாக ஐரோப்பிய ஓவியங்களைப் பார்த்தால் அவர்களது தேவாலயங்களில் கிறிஸ்தவ மதவெளிப்பாடுகளை ஓவியப்படுத்தி யிருப்பதைக் காண்கிறோம். அந்த நிலைதான் நவீன ஓவியத்திலும் தொடர்கின்றது. என்னைப் பொறுத்தவரையில் நான் கையாளுகின்ற ஓவியத்தில் நம்முடைய வாழ்வு, போராட்டம், அரசியல் குறித்த கருத்துக்களைப் பதிவு செய்கிற ஊடகமாகத்தான் இதைப் பார்க்கிறேன்.

■ ***ஐரோப்பிய போர்க்கால ஓவியங்களில் காணப்படுகின்ற உணர்வு வெளிப்பாட்டை உங்களுடைய ஓவியத்திலும் காணமுடிகிறது. இது பற்றி...***

உள்ளதை உள்ளபடியே சொல்லுகின்ற ஒரு நிலை இருந்தது. அதுதான் காட்சியாக வெளிப்படுத்தும் தன்மை. ஆனால் உள்ளத்து உணர்வுகளைச் சொல்லுகின்ற ஓவியங்களாக இந்த நவீன ஓவியங்கள் இருக்கின்றன என நான் கருதுகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**■ ஆரம்ப காலத்தில் மனிதன் கையாண்ட ஓவிய உத்திகள், நவீன காலத்தில் மனிதன் கையாண்ட ஓவிய உத்திகள் பற்றி...**

இரண்டு வகையான வளர்ச்சிகள் இருக்கின்றன. அந்தக் காலங்களில் மனிதன் மூலிகைகளின் துணைகொண்டு நிறங்களைத் தயாரித்தான். அதை வைத்து ஓவியங்களைச் செய்தான். அதேபோல இன்று அறிவியல் வளர்ச்சியின் விளைவாகப் பல்வேறு வகையான நிறங்கள் வந்திருக்கின்றன. எண்ணெய் வர்ணம், நீர் வர்ணம், எண்ணெய் வர்ணத்தையும் நீர் வர்ணத்தையும் கலந்த ஒருநிறம் வந்திருக்கிறது. இது போன்று பல்வேறு வகையான நிறங்கள் வந்திருக்கின்றன. இது மிகப்பெரிய வளர்ச்சி. அறிவியல் பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்றிருக்கிறது. அதில் ஓவியத்துறையும் ஒன்று. பின்பு ஓவியத்தில் வெளிப்படுத்தல் என்ற ஒரு வளர்ச்சி இருக்கிறது. இதை வளர்ச்சி என்றே பார்க்கலாம். உலக அளவில் இதை நாம் பார்த்தோமே யானால் பல்வேறு வகையான நிலைகளில் வெளிப்பாடுகள் வந்து கொண்டிருக்கின்றன. அதில் எமக்கு உடன்பாடும் இருக்கலாம். முரண்பாடும் இருக்கலாம். எப்பொழுதுமே நாம் எல்லாவற்றுடன் முரண்பட்டுவிடவும் முடியாது. உடன்பட்டு விடவும் முடியாது. ஏனென்றால், எமக்கு இன்று இருக்கக் கூடிய கலை இலக்கியங்களை எடுத்துக்கொண்டால் ஓவியங்கள்தான் முன்னுதாரணமாகத் திகழ்கின்றன. இது ஒரு வாயிலாக இருந்திருக்கின்றது. ஒரு பெரிய மாற்றம் என்று சொன்னால் ஓவியத்தில் தான் அது நிகழும். பல்வேறு இயல்கள் இதன் இயக்கங்களாக வந்தன. அதன் காரணம் என்னவென்றால் ஆரம்ப காலத்தில் உள்ளதை உள்ளபடியே வரைவதற்குத் தேவை இருந்தது. பின்பு மாற்றத்தை ஏற்படுத்தியது புகைப்படக் கருவிதான். இது வந்ததனால் உருவ ஓவியங்களை வரைவதற்கான தேவை ஓவியர்களுக்கு இல்லை. அவர்களுக்குப் புதியதொன்றைப் படைப்பதற்கான தேவை ஒன்று ஏற்பட்டது.

அதனால் புதியவற்றைப் படைப்பதற்குத் தங்களை அவர்கள் தயார்ப் படுத்திக் கொண்டார்கள்.

அதனால்தான் இயக்கங்கள் தோன்றின. ஐரோப்பாவில் தான் இந்த மாற்றம் முதலில் நிகழ்ந்தது. அதன் பின்புதான் எழுத்துத்துறையில் மாற்றம் ஏற்பட்டு நவீனம் பின் நவீனத்துவம் என்று பல்வேறு "துவங்"கள் வந்து கொண்டிருக்கின்றன. ஓவியத்தில் உச்சமென்று பல்வேறு வகையைப் பார்த்திருக்கிறேன். இன்ஸ்டாலேசன் (Installation) என்று ஒன்று இருக்கிறது. இது எனக்கு உடன்பாடற்றது. இதெல்லாம் எந்தளவுக்குப் பயன்படும் என்றதொரு கேள்வி எழுகின்றது. சிலவேளை அதைப்பற்றியதான புரிதல் எனக்கு இல்லையென்று சிலர் கருதலாம். நிஜங்களில் ஓர் அந்நியமான உணர்வொன்றை இவை ஏற்படுத்துகின்றன. மக்களுக்கு எந்தவகையிலும் தொடர்பில்லை என்றுதான் நான் கருதுகிறேன். ஜெர்மனி, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் இந்தவகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓவியங்களைப் பார்க்கின்றபோது அந்த நாடுகளிலே கூட அந்த வடிவங்களை உள்வாங்கிக் கொள்வதில் சிக்கல்கள் இருக்கின்றன. அவர்கள் அதை உள்வாங்கிக் கொள்வதில்லை. அங்கிருக்கின்ற மக்கள் சிலபேர் அதைப்பற்றி விவாதிக்கிறார்கள். நவீனம், அதிநவீனம் என்று வந்து கொண்டிருந்த நிலையில், அருவம் சார்ந்து வெளிப்படுத்திய நிலையில் கூட மக்கள் அதை ஓரளவு ஏற்று விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கருத்துப் பரிமாற்றங்கள் கூட நிகழ்ந்திருக்கின்றன. ஆனால் இந்த ஸ்தாபித்தல் தான் இன்று உலகளவில் பெரிய வடிவமாகி பல்வேறு பொருள்களை அடிப்படையாக வைத்துக் கொண்டு ஒரு படைப்பை உருவாக்குகிறார்கள். அதற்கு ஒரு நிரந்தரத்தன்மை இல்லை. அதனைக் காட்சிப்படுத்துவார்கள். காட்சிப்படுத்திவிட்டு, அதனை அழித்துவிட்டுப் போய் விடுவார்கள். அதற்குமேல் அந்தப் படைப்பில் வேறொன்றும் இல்லை. அதில் ஒரு செய்தியை அவர்கள் சொல்கிறார்கள். எனக்கும் அது உணரக்கூடியதாக இருக்கிறது. என்னைப் பொறுத்தவரையில் ஓர் வடிவத்தைப் பல்வேறு இடங்களில் காட்சிப் படுத்துகின்ற வகையில் அதனைக் கையாள்வது பயன்தருவதாகக் கருதுகின்றேன்.

அந்த அடிப்படையில்தான் முரண்பாடுகள் வலுக்கின்றனவே தவிர மற்றபடி அவர்கள் கையாளுகின்ற வடிவத்தில் அல்ல. ஆனால் மக்கள் அதைப் பார்க்கின்றபோது அதனை நான் உணர்ந்தேன். அதைப்பற்றி விவாதிக்கின்ற நிலையில்கூட இல்லை. இந்தியாவிலும் அந்தப்போக்கு வந்திருக்கின்றது. ஸ்தாபித்தல் என்று பல்வேறு இளைஞர்களும் அதைச் செய்து கொண்டிருக்கிறார்கள். வெளிப்பாட்டில் எனக்குச் சில முரண்பாடுகள் உண்டு. காரணம் என்னவென்றால், அதனைக் கையாள்பவருக்கு இன்னும் பல்வேறு தளங்களைச் சென்றடைய வேண்டும் என்னும் சிந்தனை கிடையாது. அந்த அடிப்படையில்தான் எனக்கு முரண்பாடே தவிர வடிவத்தில் அல்ல. ஆனால் அந்த வளர்ச்சியை மாற்றம் என்றுதான் நாம் பார்க்க வேண்டும். அதன் வளர்ச்சியில் நமக்கு ஒரு கேள்வி இருக்கிறது. ஆனால் அதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அது எந்தளவுக்குப் பயன்படும் என்பதில் நமக்கு விமர்சனம் இருக்கிறது. ஆனால் அது அடுத்த கட்ட நகர்வுக்கு இட்டுச் செல்கிறது என்பது உண்மை. நாம் அதனை அங்கீகரிக்க வேண்டும். அதன் பயன்பாடு பற்றி நமக்குக் கருத்து முரண்பாடு இருக்கிறது. இன்று தவறாகக் கூட அது இருக்கலாம். நாளை அது சரியான முறைப்படுத்தப்பட்ட தொன்றாகக் கூட ஆக்கலாம்.

ஆரம்பத்தில், நவீன ஓவியங்களுக்கு எதிர்ப்பு இருந்தது. ஆனால் இன்று அதை நாம் தனதாக்கிக் கொண்டிருக்கிறோம். இன்று அந்தச் சூழல் வந்திருக்கிறது. நான் கையாள்வது நவீனம் சார்ந்து தான். இது மக்களுக்குப் பழக்கப்படவில்லை. அதற்கான பயிற்சி அவர்களிடத்தில் இல்லை. வெளிநாட்டில் வாழ்கின்ற மக்கள்கூட, ஓவியத்தைப் பார்த்துவிட்டு மயக்கம் தருவதாகச் சொல்கிறார்கள். அவர்களும் அதை அந்நியத்தன்மையாகத் தான் பார்க்கிறார்கள். இந்தியா போன்ற நாடுகளில் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசமாகத்தான் இருக்கிறது. அந்த இடத்தில்கூட நவீன ஓவியங்களைக் கொண்டு சென்று மக்களி டத்தில் பரீட்சயப்படுத்தியிருக்கிறோம் என்றால், அது நமது இடைவிடாத முயற்சி. தொடர்ந்து 20 ஆண்டுகளாக இந்தப் படைப்புகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்றிருக்கிறோம். மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் போது அவர்களுக்கும் ஒரு பயிற்சி ஏற்படுகிறது. ஓவியத்தைக் கொண்டு செல்வது ஒன்று. ஓவியத்தின் மூலம் கருத்தை வெளிப்படுத்துவது இன்னொன்று. நாம் கருத்தை முதன்மைப்படுத்தினாலும் ஓவியத்தையும் சேர்த்துக் கொண்டுதான் செல்கிறோம்.

ஓவியத்தைக் கொண்டு சென்றாலும் ஓவியத்தின் மூலம் கருத்தைக் கொண்டு செல்கிறோம். இரண்டையும் நாம் ஒரே நேரத்தில் கொண்டு செல்கின்றோம். மக்களை அதற்குப் பயிற்றுவிக்கிறோம். தமிழ்நாட்டில் 'புகைமூட்டம்' என்ற எனது ஓவியக் கண்காட்சியில் பல்வேறு வகையான கருத்துக்களை உள்ளடக்கிய 27 ஓவியங்கள் வைக்கப்பட்டன. குஜராத் படுகொலை, அமெரிக்கா ஈராக்கில் நிகழ்த்தும்போர், அடக்குமுறைச் சட்டங்கள் (ரௌலட், மிசா, தடா, பொடா) திண்ணியத்திலே தலித்துகளுக்கு எதிராகச் செய்யப்பட்ட கொடுமைகள். இப்படிப் பல கருத்துக்களைக் கொண்ட கண்காட்சி இது. இன்று மக்கள் சினிமாவோடு மட்டும் இருந்துவிடவில்லை. அதையும்தாண்டி அவர்கள் பலவற்றைப் பார்க்க இருக்கிறார்கள். நாம் கொடுப்பதற்குத் தயாராக இல்லை. நல்ல எழுத்தைப் படிக்க நினைக்கிறார்கள். நல்ல ஓவியத்தைப் பார்க்க நினைக்கிறார்கள். நல்ல சினிமாவைப் பார்க்க நினைக்கிறார்கள். ஆனால் கொடுப்பதற்குத்தான் அங்கு ஆள்கள் இல்லை. சினிமாக்காரர்கள் இதுதான் மக்களது ரசனை என்ற கூறிக்கொண்டு தரமற்ற படங்களைப் பொய்சொல்லிக் கொடுக்கிறார்கள். நல்ல சினிமாவைக் கொடுத்தால் பார்க்கமுடியாது என்று யாரும் சொல்லமுடியாது. காதல், ஆட்டோகிராப், அழகி என்று நல்ல படங்கள் உள்ளன. சரியானதொன்றைக் கொடுக்கும்போது மக்கள் சரியாகவே நடந்து கொள்வார்கள். அதுதான் என்னுடைய அனுபவம். நல்ல ஓவியத்தை அவர்களுடையது என்று கருதுவதில் அவர்கள் என்றும் விட்டுக் கொடுப்பதில்லை.

■ **ஓவியக் கற்பித்தல் என்ற பொருள் பற்றி...**

ஓவியத்தைக் கற்பிக்க முடியாது. கவிதை, சிறுகதை எழுதக் கற்பிக்க முடியுமா? ஆனால் இருக்கின்ற ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்கான ஒரு வழிகாட்டியாக நாம் இருக்கலாம். நாம் கோட்பாட்டு இயல்களைக் கற்பிக்கலாம். ஒரு செய்முறை என்ற நிலையில் அதற்குரிய வழியைத்தான் காட்டமுடியும். மாணவன் ஓவியத்தை வரையும்போது அவனது குறைபாடுகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் அந்த மாணவன் தன்னை வளர்த்துக் கொள்ளலாம். அதிகபட்சமான பயிலரங்குகளே ஓவியத்தில் மாணவருடைய வளர்ச்சிக்கு உதவும். ஓவியம் வரைவது மட்டும் வேலையல்ல. ஓவியத்தைப் பற்றிப் பேச வேண்டும்; எழுத வேண்டும். இந்தத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மை ஓவியனிடம் வேண்டும். ஓவியத்தைப் பற்றிய வரலாறுகளைத் தெரிந்து கொள்ள வேண்டும். வரைவதற்கு ஓவியத்தைப் பற்றிய வரலாறும் முக்கியம். அதைப்பற்றியதான அறிவும் முக்கியம்.

■ *சமகாலத்தில் ஓவியத்தின் வெளிப்பாடு எப்படி இருக்கிறது?*

பல்வேறு போக்குகள் உண்டு. கலை கலைக்காகவே என்ற நிலையும் உண்டு. கலை சமூகத்தைப் பற்றிப் பேச வேண்டும் என்ற நிலையும் உண்டு. என்னைப் பொறுத்தவரையில் கலை மக்களுடைய பிரச்சினையைப் பேச வேண்டும் என்று கருதுகின்றவன்.

நான் ஓர் ஓவியனாக, படைப்பாளனாக பிறருடைய ஓவியங்களைப் பார்க்கிறேன். இன்று ஓவியம் பற்றி சமூகத்தில் பல்வேறு பார்வைகள் இருக்கின்றன. ஓர் ஓவியம் எத்தனை ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகி இருக்கின்றது என்றுதான் பார்க்கின்றார்கள். நான் எதைப் பார்க்கிறேன் என்றால், எத்தனை ஆயிரம் மக்கள் பார்த்தார்கள் என்றுதான் ஒரு காட்சியினுடைய வெற்றியைப் பார்க்கிறேன்.

■ *தங்களுக்கு ஈழத்து ஓவியங்களைப் பற்றிய பரிட்சயம் உண்டா?*

எனக்கு ஈழத்து ஓவியங்கள் பற்றி அதிகப் பரிட்சயம் இல்லை. மாற்கு என்ற ஓவியரின் பெயர் அறிமுகம். அவருடைய ஓவியங்கள் சிலவற்றைப் பார்த்திருக்கிறேன். ஈழத்து ஓவியங்களைப் பற்றி அதிகமாகப் பேசுவது இயலாத ஒன்று.

■ *இங்கு பயிலரங்கு நடத்துவது பற்றி...*

பயிலரங்குப் பயிற்சி சம்பந்தப்பட்டதொன்று, ஆற்றல் உள்ள மாணவர்களை வளர்த்து விடுவதற்கான ஓர் உத்தியாக இந்தப் பயிலரங்கை நாம் நடத்துகிறோம். ஆக, இங்குள்ள மாணவர்கள் அதிகப் பயிற்சி இல்லாதவர்களாகக் காணப்படுகிறார்கள். சரியாகப் பயிற்றுவிப்பதற்கான ஆசிரியர்கள் இங்கு இல்லாததும் ஒரு குறையாகக் காணப்படுகின்றது. மாணவர்களுக்கு மட்டுமல்ல. இதை ஆசிரியர்களுக்குமான பயிலரங்காகவே நடத்துகின்றோம். எனக்கு ஓவியத்தை வரைவதில் உள்ள ஆர்வத்தைப் போன்று ஆற்றல் உள்ள மாணவர்களை வளர்த்து விடுவதிலும் மிகுந்த விருப்பம் உண்டு. இப்பொழுது இந்த மண்ணில் பயிலரங்கை நடத்துவதன் மூலம் எதிர்காலத்தில் நல்ல ஓவியர்கள் உருவாகுவார்கள் என்ற நம்பிக்கை உண்டு. அதை நான் இரண்டு நாள்களாகப் பார்க்கின்றேன். ஆனால் படிக்கின்றவர்கள் எல்லோரும் ஓவியர்களாக உருவாகிவிட முடியாது. ஆனால் ஒரு சிலர் நல்ல ஓவியர்களாக வருவார்கள். மற்றவர்கள் பெற்றுக்கொண்டதை வைத்து நல்லதொரு வாழ்க்கையை உருவாக்கலாம். அதுதான் இந்தப் பயிலரங்கு செய்யும் என்று நம்புகின்றேன். ஆற்றலுள்ளவர்கள் தென்படுகிறார்கள். தொடர்ந்து நாம் நல்ல பயிற்சிகளை வழங்குவதன் மூலம் அவர்களை நல்ல ஓவியர்களாக உருவாக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ ***யாழ்ப்பாணத்தில் கண்காட்சி, பயிலரங்கு நடத்துவதற்கு உரிய வாய்ப்புகள் உண்டா?***

அதற்குரிய வேலைகள் தொடர்ந்து நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ் பல்கலைக்கழகம் மற்றும் வெளி இடங்களில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்கின்றோம். பயிலரங்கு பற்றி இன்னும் எப்படி என்று தெரியவில்லை.

■ ***ஓவியத்தின் மூலமாகச் சொல்லமுடியாது என எதையாவது கருதியதுண்டா?***

ஓவியத்தின் மூலம் சொல்லமுடியாது என எதையுமே கருதியதில்லை. எல்லாவற்றையும் சொல்ல முடியும் என நினைக்கிறேன். ஏனென்றால் ஓவியத்தை அந்தளவுக்குத் தன்வயப்படுத்தியிருக்கிறேன். ஏனென்றால் அதை நான் மக்கள் மயப்படுத்தியிருக்கிறேன். வடிவத்திற்காக நாமல்ல. எமக்கான வடிவத்தை மாற்றியிருக்கிறேன்.

■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





தமிழீழத்தில் தனது ஓவியங்களை
மக்களின் காட்சிக்கு வைத்தும்
அவர்களின் மன உணர்வுகளை
நேரில் தெரிந்து கொண்டும்
குருதியால் சிவந்த
அந்த மண்ணில் பயணம் செய்தும்
அவர் கண்டறிந்த உண்மைகளை
நூலாக வடித்துள்ளார்.
இந்த நூல் வெறும் பயண நூல்
அல்ல. தமிழீழ மக்களின்
உணர்வுகளோடு கலந்து
எழுதப்பட்ட நூலாகும். இன்றைய
தமிழீழத்தின் நடப்புகளை
முழுமையாக அறிந்துகொள்ள இந்த
நூல் உதவும். தமிழீழத்திற்குச்
சென்று உண்மைகளை அறிய
வேண்டும் என்று துடித்துக்
கொண்டிருப்பவர்கள் இந்நூலினை
படிப்பார்களானால் நிச்சயமாக
மனநிறைவு அடைவார்கள்.

பழ.நெடுமாறன்

தோழமை வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org